கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில்

மகா பெருமை பொருந்திய

கொங்கணர்

திருவாய் மலர்ந்தருளி

வாதகாவியம்

மூவாயிரம்.

இஃது

பூநாதி முதலிய பல வைத்திய

கிரந்தகர்த்தாவாகிய

அக்கீம்-பா-முகம்மது அப்துள்சாகிபு

அவர்களால்

அச்சிடப் பட்டது.

சென்னை,

பூநாதி வைத்திய கலாநிதிப்பிரஸ்.

1901.

Registered.

இதன் விலை ரூ. 1-8-0. வி-பி ரூ. 1-13.

விளம்பரம்.

"இந்த கொ[ங்]கணர் வாதகாவியம் மூவாயிரமும்" இ... புத்தகங்களும் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் ...ன்தேவடி அப்புமேஸ்திரிதெரு-12-நெ வீடு, அக்கி... ம்மது அப்துல்லா சாகிபு அவாகளிடத்தில் கைவிலை... ஸூபேயெயில் பேஸ்டு மூலமாகவும் முன்பணம் அனு... ற்றுக்கொள்ளலாம்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில்—"கொ... ணர் வாதகாவியப் மூவாயிரம்" என்னும் இக்கிரந்தம், கஅசு... ஹு (உகூ-வது) ஆக்டின் (உ0-வது) பிரிவில் (சு-வது) விதிப் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசிலும்,

இன்னும் பிராஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரை க்காலிலும் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

நமது இராஜ அவுடதசாலையில் விற்கப்படும்

புத்தகங்களின் ஜாபிதா.

பூராவி வைத்திய தாருட்யவிர்த்திபோதினி' முத... ஷை இரண்டாம்பாகம், ஷை திறவுகோல், பிரமேஹ போதினி, சர்பேந்திர மேஹ நிவாரணபோதினி, அக... கர் திராவகம் என்னுாது, தேரையர் இயற்றிய இராஜ மகுடம் மூலம் ஷை மூலமும் உரையும் முதற்பாகம், ...ண்டாம்பாகம், சிரோரோகநிவாரணபோதினி, நயனரோ... ரணபோதினி, இரசவாத சிந்தாமணி, பிளேக் சிகிச்சா ஆயுர்வேத சிகாமணி யென்னும் வைத்தியசிந்தாமணி, என்னும் சோதிட சிகாமணி. திருவாசகம், அசன்பேசரி, முதலியவைகளாம்.

HAKEEM B. MUHAMMAD ABDULLA SAHIB.
MADRAS

கடவுள்துணை.

கொங்கணநாயனார்
திருவாய்மலர்ந்தருளிய
வாதகாவியம் மூவாயிரம்.
முதற்காண்டம்.

—※—

பாயிரம்.

வையகம்வாழ்கவென்று வாதகாவியமா நூலை
யையனன்றுரைக்கநந்தி யஞ்சலிசெய்துகேட்க
மையுறுகுழலேஞானம் வளர்ந்திடவாழ்வுண்டா(ம்)
கையுளேகோட்டையேந்துங் கணபதிகாப்புத்தா(ன்)

வாதமாங்குணங்கள்மூன்றும் வரிசையாய்ப்பார்க்கவேண்டி
கோதறுகுழலாள்சொன்ன குருவுடன்கணேசனுள்ளத்
தீதறப்பூசைசெய்து சிந்தையிற்செபங்கள்செய்ய
மாதகலாதேநிற்பள் வளர்ந்திடுஞானமன்றே.

போதவேவாதநூலைப் பொலிவுறச்சொல்லும்போது
தீதறமூலமூர்த்தி சீர்பதந்தொழுதுநித்தங்
கோதையாமாயிபாதங் குறிதோன்றிப்பூசைசெய்து
பேதமையகற்றிவாதம் பிழையறச்சொன்னேன்காணே. (௩)

மையலைக்கடந்தோர்ஞான வழிபட்டோர்வண்மையுள்ளோ
ரெய்தருமறமுநீடி யியம்புவர்க்களியுமென்றார்
பொய்கொலைகளவுகாமம் புலையாட்டையுடையபேர்கட்
கையனன்றுரைத்தார்வாத மளித்திடநரகமென்றே. (௪)

வேறு.

தானென்றதொழிலின்முறை கேட்டுக்கேட்டுச்
சமுசயமெலாந்தெளிந்து தானேதானாய்க்
கோனென்றகுருவுனக்கு யாரென்றாக்கால்
கொள்கையெனக்காருமில்லை மனமேயென்பார்

வேனென்றமணிதருக்கு வாதங்கண்டு
வெறும்பானையீப்போல விரைந்துபோகும்
வானென்றஞானமெல்லாம் விழலாய்ப்போகு
மதிகெட்டுப்பிரமைகொண்டு மருளுவாரே. (௫)

கண்டிடனேயெழுந்திருந்தஞ்சலியுஞ்செய்து
கபடகற்றிமனமொன்றாய்க் கருணைநீடி
யொன்றுரைத்தகுருபதத்தை யுணர்ந்தோர்வாழ்வா
ரொன்பதிலுங்கோடிகொண் டோடும்வேதை
ர்துரைத்தமொழிமறந்தேயழிவுசெய்திட்
டவனிவனென்றேதூஷித்தறைந்தானாயின்
புறரவிகோடி நரகில்வீழ்ந்து
காரவழிகாணாமல் மருளுவாரே. (௬)

வேறு.

றுசிவன்சொல்லப் பெரியவழியைக்காணாமற்
மாயைத்தனைச்சுற்றிச் செய்வதெல்லாங்கர்மமென்றார்
றவாம்பிறப்பினிலக்கமென்ன கோடாகோடிபிறந்துழல்வார்
றவாய்நாலேநோக்கிநின்று னிறைந்தபோதந்தானாமே. (௭)

னென்றெழுந்தபனிரண்டிற் சமைந்தவெட்டுமுட்புகுந்து
வானென்றெழுந்தநாலுக்குள் வாழ்ந்தோர்மகத்தாம்பெரியோர்
கள்,வேனென்றான்றியொன்றாக விளங்கப்புக்கியொளிவெளியா
ம்,பானன்றுண்டாள்வழிகாட்டப் பரிந்தேயிருந்துவாழ்வாரே. (

சார்ந்தசரக்கிற்பாஷாணந் தனித்தரூதம்லவணமுதற்
சேர்ந்தசிவத்தோடைவருந்தான் சிறந்தசத்தியொன்பதுடன்
வாய்ந்தமுனிவர்தேவருடன் மகிழ்ந்தவிந்துமிவைகளெலா
மாய்ந்தோர்தேவிமகனாவா ரறியார்நரகிலழிவாரே. (௯)

தாங்கிப்புகைந்ததாதுவெல்லாஞ் சமைத்தேகளங்காய்ச்சமைத்
வாங்கித்திரண்டுகவலோக மணிபோலேமமானதுவை [தபின்பு
காங்கிற்கடியகன்மமெல்லாங் கடலிற்கரைத்தபுளியதுவாம்
பாங்கிலவனைநாணுவாப் பாரிலிறந்துபிறவானே. (௧௦)

தெரியாயாறுதளத்துள்ளே கினைவாய்வாசிகொண்டேகி
மரியாய்மனக்கைதவைத்துவைத்து மருவியேறப்பூரணமாங்
குரியாயிதனைப்பாராமற் கொள்கையழிந்துபெண்ணோடு
பிரிவாயலைந்தவாதிகள்தான் பிறப்பார்கோடிநரகிலென்றே. (௧௧)

எழுந்தேசுழலுமிராட்டினம்போ லிசைத்தகுசவன்வண்டிலைப்
போல், விழுந்தேபிறக்கவேணுமென்றால் வேதாந்தத்தைப்பாரா
கொழுந்தேயோடுஞ்சுரைபோலே கோடாகோடிகன்மமுறு [தே
மழிந்தேயழியமிகநன்றே வறிந்துபாருமறிவோரே. (கஉ)

அறிவுபிறக்குமருளதொன்று மடங்காக்கலனங்கொடுபோகு
மறிவுபிறக்குமனஞ்சயிக்கும்மகத்தாம்போதந்தனிற்சொக்கும்
பிறிவுபிறக்கும்வெகுகோடி பெருத்தவாதசித்தியுமா
செறிவுபிறக்குமாயிபத நிலைக்கப்பூசிகாப்புமுற்றே. (கங)

பாயிரம் முற்றுப்பெற்றது.

(*)

பூஜை விதி.

பராபரத்திலடைந்துநின்றமூலனாயன் பதமிறைஞ்சிமுக்காலுந்தொழுதுபோற்றி, நிராமயத்திலுணர்ந்துநின்றபெரியோர்பாத நீங்காமற்றொழுதிறைஞ்சிநெஞ்சில்வைத்துத், தராதரமாயென்னையீன்றபோகர்பாதஞ் சதாநித்தந்தொழுதிறைஞ்சித் தாசனாகித், துராதுரைச்சிசிவனுடையபதமும்போற்றிச் சொல்லுகிறேனெழுலட்சஞ்சுருக்கித்தானே. (க)

தானென்றதுரைச்சியைத்தான் பூசைபண்ணச் சங்கையுண்டோகரையுண்டோசாங்கமுண்டோ,வானென்றவைவருந்தான் பூசைபண்ண மாட்டாமற்பீடமெனவணங்கினார்கள், வேனென்றும் பூசைபண்ணவென்றாற்கூடா விட்டகுறையாற்றொடர்ந்தாள் வேதாந்தத்தி, பானமென்றால்வெகுபிரியமென்றாய்க்கப்பா பரிவாகப்பூசைபண்ணிப்பாருபாரே. (உ)

பாரப்பாசாமத்திற்பதியுந்தானும் பலகூட்டங்கூடாதே பண்பாய்மக்காள், நேரப்பாயில்லத்தைச்சுத்திபண்ணி நீடிசைகளெட்டுமெங்கேபந்தம்பண்ணிக், காரப்பாகலசமுதற்பூசைபண்ணிக் கடந்தபின்புசங்கத்தைப்பூசைபண்ணிச், சீரப்பாவிதியோடேபுஷ்பத்தோடுஞ் சிறந்ததெல்லாவிதினோடேசெய்திடாயே. (ங)

செய்திடவேகுருவொன்றுயாதாரமொன்றுஸ்ரீயொன்றுபோகமொன்றுபெலிதானென்றே, வெய்தஞ்சுபாத்திரமும் பரப்பிவைத்திட் டிதற்குள்ளேபானுமதிரெண்டும்பூசி, கைதவன்னிக

தசுழறுமிராட்டினம்போ லிசைத்தகுசவன்வண்டிவைப்
ல, விழுந்தேபிறக்கவேணுமென்றால் வேதாந்தத்தைப்பாரா
முந்தேயோடுஞ்சுரைபோலே கோடாகோடிகன்மமுறு [தே
றிந்தேயழிபமிகநன்றே வறிந்துபாருமறிவோரே. (௧௨)

அறிவுபிறக்குமருளதொன்று மடங்காக்கவனங்கொடுபோகு
மறிவுபிறக்குமனஞ்சலிக்கும்மகத்தாம்போ தந்தனிற்சொக்கும்
பிறிவுபிறக்கும்வெகுகோடி பெருத்தவாதசித்தியுமா
நெறிவுபிறக்குமாயிபத நிலைக்கப்பூசிகாப்புமுற்றே. (௧௩)

பாயிரம் முற்றுப்பெற்றது.

—(※)—

பூஜை விதி.

—※—

பராபரத்திலடைந்துநின்றமூலனுபன் பதமிறைஞ்சிமுக்கா லுந்தொழுதுபோற்றி, நிராமயத்திலுணர்ந்துநின்றபெரியோர்பா த நீங்காமற்றொழுதிறைஞ்சிநெஞ்சில்வைத்துத், தராதரமாயெனை யீன்றபோகர்பாதஞ் சதாநித்தந்தொழுதிறைஞ்சித் தாசனுகித், துராதுரைச்சிசிவனுடையபதமும்போற்றிச் சொல்லுகிறேனேழு லட்சஞ்சுருக்கித்தானே. (௧)

தானென்றதுரைச்சியைத்தான் பூசைபண்ணச் சங்கையுண் டோகரையுண்டோசாங்கமுண்டோ,வானென்றவைவருந்தான் பூ சைபண்ண மாட்டாமற்பீடமெனவணங்கினுர்கள், வேனென்றும் பூசைபண்ணவென்னுற்கூடா விட்டகுறையாற்றொடர்ந்தாள் வே தாந்தத்தி, பானமென்றால்வெகுபிரியமென்றாய்க்கப்பா பரிவா கப்பூசைபண்ணிப்பாருபாரே. (௨)

பாரப்பாசாமத்திற்பதியுந்தானும் பலகூட்டங்கூடாதே பண் பாய்மக்காள், நேரப்பாயில்லறத்தைச்சுத்திபண்ணி நீடிசைகளை ட்டுமெங்கேபந்தம்பண்ணிக், காரப்பாகலசமுதற்பூசைபண்ணிக் க டந்தபின்புசங்கத்தைப்பூசைபண்ணிச், சீரப்பாவிதியோடேபுஷ் ப்பத்தோடுஞ் சிறந்ததெல்லாமிதிநேடேசெய்திடாயே. (௩)

செய்திடவேகுருவொன்றுயாதாரமொன்றுஸ்ரீயொன்றுபோ கமொன்றுபெலிதானொன்றே, வெய்தஞ்சபாத்திரமும் பரப்பி வைத்திட் டிதற்குள்ளேபானுமதிரெண்டும்பூசி, கைதவன்னிக

ளையதிலேபூசைபண்ணு கைமுறையாய்முத்திரையைக்கா
ட்டு, பைதயின்புமுறையோடேயகூதைதயைப்போட்டுப்
முட்னியாசவிதிபகிர்ந்துசெய்யே.

உரைத்திடவேபூசைக்குச்சக்கரத்தைக்கேளு வுற்றவிந்து
ரிகோணமுசாவியாறு, நிறைத்திடவேவளையமொன்று மிதழ்தா
னெட்டு நேராகமூன்றுவரைவாசனுனு, மரத்தியென்றசிறுபிள்
ளையிருந்தவீடு வரைந்திடுவாய்சொர்னமென்றபலகைமேலே, மு
ரத்தியிதுவில்லாட்டாலின்பம்பண்ணு மூட்டாட்டால்பறபத்தின்
முயன்றுகீறே. (௬)

கீறியதோர்விந்துவிலேமாயாபீசங் கிழைநின்றமூன்றுக்கு
ள்மூன்றேபீசம், மாறியதோர்ஆறிதனிலாறேபீசம் வரையாக
வெட்டிதழிலெட்டேபீசங், கூறியதோர்வீதிகளிற் கோடாசத்தி
கொள்கையின்ல்வாசலிலேகுறிப்பைக்கேளா, யாறியதோர்கண
பதியுங்கந்தனோடு மகோரமுகன்வடுகனுல்வாசல்தானே. (எ)

தானென்றவாமுனையநாலுக்குள்ளே சதகோடிநவகோடிசத்
தியுண்டு, வானென்றபராபரையாம்விந்துக்குள்ளே மாயிநின்றவ
டிவென்ன வழுத்தப்போறேன், தேனென்றமொழியாட்கு வய
தோவெட்டு சிறந்தபிறைரவியிரண்டுகோதிற்றோடு, கோனென்ற
ரவிகோடி மேலிற்காந்தி கொள்கையிநால் வேதநாற் கரங்கள்
தானே. (அ)

தானென்றபுஸ்தகந்தான் கரமதொன்று சாங்கமுத்துத்தா
வடந்தான்கரமதொன்று, கானென்றகஞ்சமதுகரமதொன்று கர
த்தடியர்பயந்தீர்த்த கரமதொன்று, வேனென்றவடியார்தன்நெஞ்
சினுள்ளே விளங்கியதாய்விந்துவிலேவிரைந்துநின்றாள், பானென்
றபாத்திரத்திற்பூரித்தப்பா பலசாபங்களையோட்டிப்பரிந்துபோ
ற்றே. (௯)

போற்றிவலக்கரந்தனிலேபுட்பம்வாங்கி பொலிவாகயிடக்
கரத்தேசுத்திவாங்கி, தாக்கியதோரெண்டெழுத்தைமூலத்தோ
டுந் தவறுமலேழுமாபரணமப்பா, வாக்கியந்தான்மனதொன்றாய
றசித்தேற வரிசைசொல்வேன்வல்லோர்க்குமடிமையாகப், பாக்
கியந்தான்செய்தவரேசெய்வதல்லால்ப் பராபரையைப் பூசிக்கப்
பருவங்கேளே. (௰)

பருவமுடனண்டமெல்லாஞ்சிலம்பிலூட்டும் பராபரையை யென்றுசொல்லும்பலகையாக, நிருபமுடனைவரையுநிறுத்திமே லே நின்றுரைத்தபூரணமேயென்றுசொல்வா, யருவமுடனுருவ முண்டாயிரண்டாய்த்தாண்டி யகண்டத்திலகண்டமென்ற வாத் தாளென்று, சொரூபமுடனிட்களமேதுரியாதீதச் சொல்லடங் காப்பூரணமேயென்றுசொல்லே. (௧௧)

சொல்லற்றுமவுனமற்றுரூபமற்றுத் தோற்றுவதும் தோற் றாதுமிரண்டுமற்றே, யல்லற்றுப்பகலற்றுயகண்டமற்று வதுக டந்தநிராகாரத்துரியமற்று, சொல்லற்றுத்தொனியற்றுச்செகமு மற்றுத் துதிக்கின்றகிரிகையற்றுத்தேகமற்று, நில்லற்றுநினைவற் றுநிறைந்தேயெங்கு நிராகரத்திற்றாயாவாயென்றுபோற்றே. ()

போற்றவிடமற்றுநின்றபொருளேயென்று புகழானசேதன மாயசேதனமாய்நின்று, மாற்றியிடச்சத்திபஞ்சத்தியமதாகி மன வாக்குக்கெட்டாததாயேயென்றே, யாற்றயிடநித்தசுத்தபுத்தமு த்த வதுகடந்தநிற்குணத்திலம்மாவென்று, கோற்றடுக்கானோடு நின்றாயென்றுசொல்லிக் கொழுந்துவிட்டப்புருவமையத் தீயை யெண்ணே. (௧௩)

தீயாகி மதியாகி ரவியுமாகி சிறந்துநின்ற வாசியுமாயெட்டு மாகித், தாயாகித்தந்தையுமாய்த்தாரமாகிச் சகவிருக்ஷமுறவின மும்சனமுமாகிப், காயாகிப்பூவாகிப்பிஞ்சுமாகிக் கனியுமுன்னே தின்றளித்தகாலனாகி, வாயாகிக்கையாகிமனதுமாகி வாக்கடங் காவொளியெனவேவழுத்திடாயே. (௧௪)

வழுத்தியம்மாநீபிறிந்தாற்புவனமேது வாவேதுகாவேது மாயமேது, சுழுத்தியென்றநித்திரையுஞ்ஞானமேது சொல்லேது பொருளேதுசுகந்தானேது, களித்துநின்றவானந்தவெள்ளமேது கரையேது சவுசஷ்டிகர்மமேது, ஒளித்துநின்றா ரீசனம்மாஉள் ளுக்குள்ளே ஓ°காகோஉத்தமியேயென்றுபோற்றே. (௧௫)

உத்தமியைக்கண்டுடனேயோகமாச்சே யோகோகோயவள் காணஞானமாச்சு, சத்தடியார்வாசலிலேபவதாரமாகிச் சதகோடி யண்டரண்டந்தாண்டியோடி, மத்தமியேயுனைவிட்டாலீசனேது வ ருகிறதும்போகிறதுமிரண்டுமேது, பற்றுமையப்புருவநடுப் பரை யேயென்றுப் பராபரமாய்நின்றவளைப்பணிந்துபோற்றே. (௧௬)

போற்றிடுவாய்விந்துவிலையாயிபாதம் புகழாகவர்ச்சித்துப் புட்பந்தூவி, கோற்றிடுவாய்மனமொன்றிப்பரத்தினுள்ளே கொள்கிபுன்னி நினைத்ததெல்லாங்கூடுங்கூடும், மாற்றிடுவாய் வாசனையைமாயமெல்லாம் வருகுமப்போமெய்ஞ்ஞானமனமுஞ்செம்மை, காற்றிடுவாயுன்மனையைநிஷ்டைக்குள்ளே கைகடந்தஞானமதைக்கடந்துகேளே. (௧௭)

கடந்தபின்பு திரிகோணத் துள்ளேகேளு கடுமிரதிபிரிதிவிபவம்பாழோடு, தொடர்ந்துபார் முத்திரையால் வணங்கிநீயுஞ் சூட்சுமமா யிவ்விரண்டாம் பூசைதாண்டி, யிடர்ந்துபார் லட்சுமியுங்காந்திகீர்த்தி யியல்பானஜகசோதிதுஷ்டிபுஷ்டி, அடர்ந்தேகயாபரணசத்தியர்ச்சித்தப்பா வடிக்காகரகசியமுத்திரையைக்காட்டே. (௧௮)

காட்டியிந்த மூன்றுகும்பூசைதாண்டி கடுகனங்காகுசுமாவனங்கமேகா, யாட்டியணங்காமதனையணங்காநந்தி யணங்கரேகாதியொடுயளங்கவேதி, நீட்டியணங்காமலியவணங்காசத்தி நிறையானயனைவரையுநிறையப்பூசி, பூட்டிமச்சமுத்திரையைப் புகழக்காட்டிப் புகழ்ந்துனலாபரணம்புகழ்ந்துதாண்டே. (௧௯)

தாண்டியதோர் முதல்வரையிலனிமாவோடு தயங்காதமகிமாவும்லகுமாக்கேளு, வாண்டியதோர் கிரிமாவுமமவித்து மாதிவஸ்துமிகுதேவிபிரார்த்தியோடே, நீண்டிநிண்டப்பிரகாமிபுத்திசத்தி நிலைத்தசர்வகாமிசத்திநேரெட்டஞ்சு, வேண்டிநின்றுகோமுகமுத்திரையைக்காட்டி விரைந்திரைஞ்சியஞ்சினுள்ளே வேண்டுவேண்டே. (௨0)

வேண்டுரெண்டாவரைவீதியெண்வராகும் விரைந்துமபிராமிமயேஸ்வரியுமாகும், வாண்டியதோர்கௌமாரிநாராயணியும் வராகியிந்திராணியொடு சாமுண்டியாகும், பூண்டியதோர் பூரணையுமெண்வரோடு புகழங்குசமுத்திரையைப்புகழ்ந்துகாட்டி, ஆண்டினதோராறுமாபரணம்போற்றி அடுத்துநின்றமூன்றுவரை அடைவுகேளே. (௨௧)

கேளப்பாசக்கரத்தின் புறத்திவீதி கெடியானசாதுசத்தி கிரியாதேவி, நீளப்பா துர்க்கையொடுமாயாதேவி நிலையானபத்திரையாஞ்சுவாகாதேவி, யாளப்பாயருந்ததியுஞ்சுமாலியோடு வையமூன்றுஞ்சத்திகளையடைவாய்ப்பூசி, வேளப்பாகபிலைமுகம்விரைந்துகாட்டி விரைந்திறைஞ்சியற்சியேழாபரணமுற்றே. (௨௨)

முற்றானவசுதாங்கன் குருகுசண்டன்மூர்க்கமுள்ளகுரோதனுன்மத்தனோடு, கற்றானகயிலமுள்ளன்பீஷணனுங்கேளு கைகடந்தசங்காரனெட்டுப்பேர்க்குங், கொற்றாகப்பூசைபண்ணு மதுவைவைத்துக் கொள்கியுன்னிச்சுமுத்திரையைக்காட்டி, பற்றானவிந்திரனோடெட்டும்பூசிப் பரிவாகனால்வாசற்பூசைகேளே.

கேளப்பாதெக்ஷணத்தில்வல்லபையுங்காண கெடியானவுத்திரத்தில்துர்க்கையைநீபூசி, தாளப்பா பச்சிமத்தில் கந்தன்வீரன் தனித்தகீழ்வாசலிலேவடுகன்யோகி, நீளப்பாயீசான்யமநின்றநிர்வாணி நிலைத்தங்கேபூசித்துநின்றபின்பு, ஆளப்பாவென்றுசொல்லியாமனாயபூசை யானபின்பு முறைசொல்வே னறிந்துகேளே. (௨௪)

அறிந்துணர்ந்தபாத்திரம்பலகாரமன்ன மாத்தாளைப்பூசித்துமடிக்காய்காட்டி, நெறிந்துநின்றகுருவான பாத்திரத்தைவாங்கிநேராகக்குருவுக்கேநீட்டிக்காட்டி, மறிந்துணர்ந்ததூலமொடுசூக்ஷமானமருவிநின்றகாரணமாமூன்றதோதி, பிறிந்துணர்ந்தேயாகமத்தைப்பூசைபண்ணிப் பின்புமுடன்சத்தியுடன்பரிவுகேளே.

பரிவாகசத்தியைநீயலங்கரித்துப்பாணிதனிற்கடங்கொடுத்துப்பூசைபண்ணி, யறிவாகஅவள்கையின் கடத்தைவாங்கி யாத்தாளேயெனயினமுமஞ்சல்பண்ணி, மறிவானபோகமென்றபாத்திரத்தையீந்து வைததொருசேஷத்தைப் பானம்பண்ணி, நெறிவாகமூலத்தே மனதையூன்றி நீட்டிமதுபூரித்து நிலைத்துப்பாரே. (௨௬)

பாரப்பாவானந்தமானபின்பு பலதீபதூபமெல்லாம்பணிகள்மாறி, யேறப்பாபெலிகொடுத்துத்திக்கிற்போட்டே யெழுந்தருளச்சக்கரத்தையிருதயத்தினுள்ளே, யாரப்பாவன்னமுடன்பானம்பண்ணி யசையாமற்சமாதிகொண்டுமூலத்தூன்றிக், காரப்பாவெளிதாக மூலங்காணுங் கன்னியெட்டும் லகிரியிலே காட்டுவாளே. (௨௭)

காட்டுகையில்நந்தியுள்ளேக்காண்பார்காண்பார் கருதிப்பார்சிகாரமென்றஞானத்தீதான், நீட்டுகையில்வல்லபையுங்கணேசன்காண்பார் நினைவாகக்காண்பதப்பாநீதான்கேளே, யூட்டுகையில்வகாரத்தையுள்ளேபூரி யோகோகோசிகாரமதுகோடிபானு, ஓட்டுகையிலொருவழியாயோடிற்றானு வுத்தமனேயற்புதயாமுத்திதானே, (௨௮)

முத்தியெங்கே யென்பதென்று மெண்ணவேண்டா மூலத்தில்முத்திமுத்திமுக்காற்சொன்னேன், சத்தியெங்கேயென்பதென்றுமெண்ணவேண்டாஞ் சகலருக்குங்குண்டலியே சத்திசத்தி, பத்தியெங்கேயென்பதென்றுயெண்ணவேண்டாம் பராபரத்தில் நிலைத்ததுவேபத்திபத்தி, யுத்தியெங்கேயிதற்கெனவு மெண்ணவேண்டா மோகோகோவாசனையையொழித்திடாயே. (௨௯)

ஒழித்திடவே மனதிற்கு மாயைபோச்சு வொன்றுமில்லைக் கண்மயக்குமெங்கேபாரு, அளித்திடவே நினைவாற்பாரெல்லாம் பொய்பொ யாத்தாள்தானாடுகிறயந்திரசாலங், களித்திடவேமுதுவையுண்டுசுழியிலோடி கையாறுதலங்களெல்லாங் காணுங்காணும், நெளித்திடவேயிடைபின்னும் ரெண்டும்போக்கில் நிமிஷத்துள்நாலுக்குள்நேரலாமே. (௩0)

நேராதபாவிக்குவாதமேது நிலையாதமனதுக்குஞானமேது பாராதமோடருக்குயோகமேது பராபரையையறியார்க்குப்பலந்தானேது, காராதசிஷனுக்குக்குருதானேது கைகாட்டாத்தொழில்முறைக்குக்கரைதானேது, தீராதகர்மிக்குஅறிவங்கேது செகசாலமாடுதற்குலவணங்கேளே. (௩௧)

பூஜைவிதி முற்றுப்பெற்றது.

உப்புக்கட்டு உருகா வுப்பு.

கேளப்பாபடிகியுடன் வெடியுப்போடு கெடியான கல்லுப்புங்காரத்தோடு, தாளப்பாசாரமொடுபண்ணைகண்டர் தனியேழுமேழுபலந்தானே தூக்கி, நீளப்பாவமுரிவிட்டே யரைத்துக்கொண்டு நெடியதொருபாறையுப்பும்பலமீரேழு, கோளப்பாக்குளம்பினுள்ளேதோய்த்துவாட்டுக், கொள்கியதைத்தணலுக்கு ளடர்ந்துவாட்டே. (௩௨)

வாட்டுகையிலடுக்கடுக்காய்முதிரவாட்டு மருவியந்தவுப்பினதுகோபம்போகும், நீட்டுகையிற்படிகத்தின்பொரியைப்போட்டு நினைவாகவறுத்திடுவாய்சாமமப்பா, கேட்டுகையிலிதைவாங்கிப்பின்புகேளுக் கெடியாகக்கட்டுதற்குவழிசொல்வேன்யான், மூட்டுகையி லமுரிவிட்டுமுப்பையாட்டி மூதண்டனுருவிச் சாம்பற்போடே. (௩௩)

பேரடந்தவுப்போடேசவுட்டுவில்லைப் பொலிவாகவுப்பிற்கு
க்காலகாலப்பா, நீடந்தக்கலையத்திற்பாதிவைத்து நினைவாகவடு
க்கடுக்கா யுப்பைவைத்தே, யோடந்த மேலிட்டுச் சீலைசெய்தே
யொத்தாப்போலெரித்துமேயுடைத்துவாங்கி;யாடந்தமறுகாலிப்
படியேவைத்தே யதட்டியொருபுடம்போடக்கட்டும்பாரே. (௩௩)

பாரப்பாவாட்டொன்றுவுறுப்பதொன்றுப் பரிவாகவெரிப்
பொன்று புடந்தானென்று, நேரப்பா வெகுபதனமாகச்செய்வா
ய் நிலைக்கமட்டுங்கைமுறையாய்நினைவாய்ப்பண்ணு, வாரப்பாவெ
திருனக்குவாதமாட வாகாகாசகலசித்துமடங்குமுப்பில், யேரப்
பா வுப்பென்பாரிதுவேசத்தி பிலத்தபின்பு சிவனுச்சுப்பேசொ
ண்ணுதே. (௩௪)

பேசாதவுப்பினதுபெருமைகேளு பெருங்குருவாஞ்சுண்ண
முமாம்பெருத்தநீராங், காசாதசெந்தூரங்களங்கமாகுங் கைவிட்
டமெழுகாகுங்கட்டுமெல்லாம், வாசாமகோசரமாமிதிலேவித்தை
வாதியென்றபேரறிவார்மற்றோர்காணார், கூசாமலொன்றிற்குத்
தொட்டுக்காட்டக் கோடானகோடிதொழிலுப்பிலாச்சே. (௩௫)

ஆச்சென்றவுப்பைவிட்டால்வாதம்போச்சே யாகாகாவாச்ச
ரியமம்மாள்நாதம், போச்சென்றேயண்டமெல்லாந்துடைத்தாள்
சொன்னாள் பொய்மெய்யோவென்றவன்வாய்போடுமண்ணை, நீச்
சன்றோவுன்னைவிட்டால்வாதவேலை நிலைப்பதன்றோவுப்பறிந்தால்
நிமிஷத்துள்ளே; மூச்சன்றோசிவனுக்குமுயிருமாச்சு முயன்று
பார்வாதத்துக்குயிர்தானுப்பே. (௩௬)

உப்பாவதேதென்றாலுருவாமுப்பு வுத்தமனேமற்றதெல்லா
ஞ்சாரமில்லைச், செப்பென்றாற்செப்பாதேசீஷனுக்கு ஜெகஜாலத்
துறைமார்க்கமனந்தமுண்டு, கப்பென்றவஞ்சுகொப்பில்மனந்தா
ன்சென்று கையடங்காமாயம்போலிதுவுமாமே, யொப்பென்றாலி
தற்கொப்புமென்னசொல்வே னுத்தமிதானெப்புப்பையுணர்ந்து
பாரே. (௩௭)

உப்புக் குரு.

பாரப்பாகட்டினதோ ருப்பைவாங்கிப் பருவமுட னெட்டி
லொன்றுவீரம்பூரம், நேரப்பாவெண்கருவாலரைத்துப்பூசி நேரா
னசட்டியிலேயிதனைவைத்துச், சேரப்பாவாகைக்காய்சுட்டசாம்
பற் றிறமாகவிதிலிட்டுத் தீமூட்டு, வேரப்பா கற்றாழைவேரா
ற்கிண்டு விடிகாலைமாலைரெண்டுசாமந்தானே. (௩௮)

தானென்ற தினமொன்றுசாமம்ரெண்டு சங்கைசொல்வேன் பதினெருநாள்கப்பாதாட்டு, வானென்றவெளுப்பொவ்வாசங்க மொவ்வா மகத்தானகுருவாகுமைந்தாகேளு, கானென்றுமலேவானேன் தழைகாய்தேடி கைவிட்டகுருவிதுதான் காட்டுமுன்னே, வேனென்றேயதட்டியெல்லாம்வேதையோடும் விடுபட்டமதயானையுப்புதானே. (௩௯)

[illegible] 30 [illegible] 40 [illegible] 5.7.45

உப்புச் சுண்ணம்.

உப்பையினிச்சுண்ணமாய்ச்செப்பக்கேளு முருவானவுப்பது தான்பலந்தான்ரெண்டு, கப்பையினியெட்டிலொன்று வழலேச்சுண்ணங் காணிதற்குச்சமனாகும்வீரம்பூர, மப்பையெனுவெண்கருவாலரைத்துப்பூசி யமளிபெறவூதிடவேமணிபோலாச்சு, குப்பையென்னமற்றதெல்லாமிதுவேவித்துக் கோடிசுண்ணமிதினாலாங் குறிப்பாய்ப்பாரே. (௪0)

குறிப்பானசுண்ணத்தின்முறைமையெல்லாங் கொட்டினேன் பிற்காண்டம்நடுக்காண்டத்துள், மறிப்பானவாதிமகனுப்பைக் காண்பான் மாடறியானிவித்தையாயினுதம், நெறிப்பான சீஷனுக்குமுப்பைச்சொல்லு நேர்திருட்டுச்சீஷனுக்குச்சொல்லவேண்டாம், கறிப்பாகந்தப்பிடிலோருசிபோமாப்போற் கைமுறையைத்தப்பிவிட்டாலுப்புபோச்சே. (௪௧)

உப்புச் செந்தூரம்.

பேரச்சென்றுமெண்ணேதயின்னஞ்சொல்வேன் புகழாகச் செந்தூரவழியைக்கேளு, காச்சென்றசூதமொன்று நாகமூன்று கைமுறையாயுருக்கியதில்வீரந்தூவி, பாச்சென்றபனியில்வைக்க திருதியாகும் பருவமுடனிதைவாங்கியுப்பைத்தோய்த்து, வாச்சென்று தணல்காட்டிப்பறியைச்சுற்றி வாங்கமட்டும்நேர்மையாய்வாட்டுவாட்டே. (௪௨)

வாட்டிடவேயுட்புகுந்துபறிதானப்பா வளமாகச்சிவந்தோமுப்புமப்பா, வூட்டிடவே சிவக்காட்டாற் பின்னும்வாட்ட வுறவாகச் செவந்தபின்பு வேதைகேளு, நீட்டிடவே பரிசமுதற்றாமவேதை நிலமாற்றுப் பதினறு நினைவாய்ப்பாரு, காட்டிடவேசரக்கெல்லாங்கொல்லுங்கொல்லுங் கரைசொல்லவென்னாலுங்கடைப்படாதே. (௪௩)

544

உப்புக் களங்கம்.

கடைப்படாக்களங்கமொன்றுசொல்லக்கேளு கைவிட்டருத்திரந்தான்காண்பதற்கு, மிடைப்படாவுப்புநின்றேயுருகுங்காலமிடைக்கிடையே நாகமிடவிசைந்தேயாடும், படைப்படாதந்தெடைக்குச்சூதம்போடு பறிபோடுவவ்வெடையிற்பாதியப்பா; தடைப்படாநின்றுடுமதிலேவீரந் தாக்கிடுவாய்த்தங்கத்தினடைதான்காணே. (சச)

காணப்பாவொன்றாய்நின்றுடும்போது காட்டந்தவுப்பெடைக்குக்கெந்திகெந்தி; தோணப்பா வெடுத்துடனேகளங்கமாகுஞ்சொல்லுதற்குநாவேதுதூரவோடும், வீணப்பாமற்றதெல்லாமுப்பைவிட்டால் விளம்பரிதாமென்றுசிவன் தாய்க்குச்சொன்னார், ஆணப்பாபெண்ணாகும்பெண்ணாணாகு மடங்காதகவனமுதலெடுக்குந்தானே. (சரு)

தானென்றவுப்பையல்லோலோகவாதி தனித்தனியேகட்டறிவேனென்பாரைய்யோ,கோனென்றகுருவறியார்நூலைக்காணார் கூடுமதன் விதங்காணாராட்டுங்காணார், தேனென்றமலர்த்தாளைப்பூசைசெய்யார் செகச்சாலவார்த்தைசொல்வார் திருட்டுவாதி, யூனென்ற வுடம்பெடுத்தாற் பொய்சொல்லாம லுத்தமனேபூரணத்திலிருக்கநன்றே, (சசு)

நன்றெனவேயான்சொன்ன நூலைப்பார்த்து நலமுற்றோர் நம்போலேநன்றாய்வாழ்வார், அன்றெனவேசொன்னதெல்லாமறந்தானாகி லறியாமல் வாதத்திலழிவான் சொன்னேன், வின்றெனவேயிதைத்தவிர்ந்தேயுள்ளேநோக்க வேதாந்தரூபமெனவிளங்குவார்கள்; கன்றெனவே யான்சொன்னேன் பிழைபோக்கய்யா கருத்தூன்றிப்பார்த்துரைத்துக்கருதிடாயே. (சஎ)

உப்பு மெழுகு.

கருதிடவேகல்லுப்புச்சுண்ணமெட்டு காட்டுரெண்டுசாரமதிற்கணக்குப்பார்த்துச், சருதிடவேவீரமதிலஞ்சுபோடு தயங்காதேபூரமதிலொன்றுபோடு, விருதிடவேயிதைமெழுகாயரைப்பாயானால் விளங்கியிதிற்பூரமெடைதங்கங்கூட்டப்,பொருதிடவேயிதற்கொப்பாம் லோகமேது போட்டிடவே கல்லோடு மேமமாமே. (சஅ)

ஏமமெங்கே பிறந்ததென்று லுப்பிற்குள்ளே யெடுத்துரைத்தாரெண்ணையாண்ட மூலநாயன், காமமெங்கேபிறந்ததென்றுலென்னைப்பெற்றக் கருணைநிதிபோகருமேகாட்டினார்காண், வாமமெங்கேபிறந்ததென்றுல்வஸ்துக்குள்ளே மருவிநின்றதென்றுசொன்னார்மயேசனப்பா, தாமமெங்கே பிறந்ததென்றுற் றுயுமீசன் சகலருக்குமுப்பைவிட்டால் ருசியும்போச்சே. (சகூ)

உப்பு ஜெயநீர்.

உரிசைபெறவுறங்கிநிற்குவாதிகாளே யுப்பாலேயப்பாச்சுவப்புப்பாச்சு, வரிசைபெறவாதமெங்கேயுப்புக்குள்ளே மகத்தானகுளிகையெங்கேயுப்புக்குள்ளே, பிரிசமென்றதம்பனமோகனத்தோடெட்டும் பேரானசத்துமுதற் றாமவேதை, கரிசலென்றவித்தையெல்லாமுப்புக்குள்ளேகாண்கிறதோர்குருபதத்தைக் கலந்துபோற்றே. (ருo)

போற்றியுப்பின்செயநீரைச்சொல்லக்கேளு பொற்கொடிக்கியீசனன்றுபுகழ்ந்தவாறு, மாற்றறியபேரின்பஞானவீடு வாய்திறந்துசொல்லாதேமவுனமாகு, மேற்றறிய வுப்பானசுண்ணம் பத்து மிதற்குநேர்சாரமிட்டேயிழைத்தேயாட்டுத், தோற்றறிய நீராகுமிதிலேவீரஞ் சொற்பமாயோரெடைதான்போடுபோடே.

போட்டுடனேசிவப்பாகுஞ்செயநீரப்பா புகழாகவிந்தநீரெல்லாங்கட்டுங், காட்டுடனேதங்கத்தைமென்றுவாங்குங் கைகாட்டநவலோகம்பொன்னுமாகுந், தோட்டுடனே கற்பூரந்துவைத்துவாட்டிச் சுகமாகவூதுகுகைசுண்ணமாகு, மாட்டுடனேயிப்படிதான்பூரமேன்மை யறிந்தவனேமுழுவாதியறியார்மாடே. (ருஉ)

வங்கச் சுண்ணம்.

அறியாதசெயநீரில்தோய்த்துவாட்ட வறுபத்துநாலுமப்பாமெழுகேயாகும், பிறியாதவேதையிதிற்கோடாகோடி பேசுதற்குவாயில்லையுப்பைவிட்டால், மறியாதசீஷனுக்குக்காட்டவேண்டாம் வாதமெல்லாமுப்பாலேவளர்ந்ததப்பா, நெறியாகப்பூசைபண்ணிமூலம்பாரு நேரானவுப்பினதுவீரங்கேளே. (ருங)

கேளப்பா கற்பூரச் சுண்ணமொன்று கெடியானவீரமொன்றுரெண்டுங்கூட்டத், தேளப்பா சரக்கான செந்துக்கெல்லாஞ் சிகப்பென்றுல்வெகுசிகப்புஅருணன்போல, வாளப்பாவிதையெ

டுத்துவங்கத்தூட்டி மருவியொருபுடம்போடமலரும்பூப்போல், கோளப்பாரசத்துக்கேகாலன்காலன் கூப்பிட்டாலேனென்கும் வாதந்தானே. (டுச)

துரிசுச் சுண்ணம்.

தானென்றவங்கத்தின்சுண்ணமொன்று தயங்காதவீரமொன்றுரெண்டுங்கூட்டி, வானென்றதங்கத்திற்பூசியூத மலருமேபூப்போலேமைந்தாகேளு, கோவென்றதங்கத்தின்சுண்ணமொன்று குழிப்பானவீரமொன்றுகூட்டியாட்டிக், காவென்றசூதமரைபூரங்கால்தான் கைமுறையாய்வெள்ளியுரங்காலுங்கூட்டே. (டுடு)

கூட்டிதிலேகுருவண்டுமென்பத்தொன்று குழிப்பானபுழுகதிலேயரைதான்போட்டு, மாட்டியெல்லாங் குக்கிடத்தின்பிச்சாலாட்டு வகையானவொருபலமாந்துரிசிக்கப்பி, நீட்டியங்கேரவிபடவேபோடுபோடு நிலேயெழுதினத்துள்ளேநீறிப்போகு, மாட்டியங்கே யாடுதற்கு யிதுவேஆசா னண்டமுதலறுபத்து நாலும் நீறே. (டுசா)

அண்டச் சுண்ணம்

நீறுவதேதென்றால்சொல்லக்கேளு நிறையான யண்டமொன்றுபோட்டு—தொன்று, கூறுதவீரமிட்டுக்கூட்டிப்போடு குப்பென்றுபற்றியண்டங்கூகைநீறுந், தாறுகவின்னீரில்வீரமாட்டுச் சரக்கெல்லாம்போட்டிடவேதவளநீறும், வேறுகநவலோகம்படவே நீறும் வேதைசொல்லமுடியாதுவிரைந்துகேளே. (டுஎ)

விரைந்துசொன்னநீறெல்லாங் குருவேயாச்சு வேறுனசரக்கையிந்தநீறுற்கட்டு, கரைந்துநின்று கண்விட்டுக் கரியிலாடுங் காட்டுமுன்னேநவலோகங்கனகமாகு, மரைந்துநின்றமாற்றதுவுமறுபத்தாறு யாடலாமண்டமொன்றுகோடிகாலங், துரந்துநின்றகுருவெடுத்துப்பச்சைகூட்டிச் சுகமாகப்புடம்போடத்தொந்தமாமே. (டுஅ)

தொந்தமென்றால்நூறுமட்டுந்தொந்தமேறுஞ் சொல்லறியேனிதுமேலேசூக்ஷமேற்ற, பந்தமென்றாலிதுபந்தம்வாதத்திற்குப் பயல்முதலாய்க்கிழவன்மட்டும்பார்க்கலாகு, மந்தமென்றாலிதுவந்தமென்றுசொல்ல வசனுமுடியாது வடியேன்காணேன், சந்தமென்றதித்தனேயுமுப்பாலப்பா தனியுப்புக்குயிரேதுபூரந்தானே. (டுகூ)

சூதக்கட்டு.

தானென்றகுருவாகுமுப்பாற்கேளு சண்ணுகிறேன்சூதத்தைத்தலைதூக்காமல், காமனென்றவுப்பொன்றுசூதம்நான்கு காட்டியப்பாமுலைப்பாலைக்கலந்தேயாட்டி, யூனென்றுமுருட்டியதையுண்டைபண்ணி யுணர்வானகாரத்தைதம்மேலேபூசி, வானென்றேயாறவைத்துப்புடத்தைப்போடு வாங்கியிதைக்குகைக்குள்ளேவைத்தேயூதே. (௬௦)

ஊதையிலேமணிபோலாமிடைபோகாது வெட்டிவெட்டித்தொங்கிக்கவொருநூறேறும், பாதையிலேவெகுகோடிவேதையாகும் பாரப்பா வெள்ளியிட்டால் வெள்ளியாகும், போதையிலேபொன்னிட்டாற்பொன்னுமாகும் பொற்கொடிக்குமீசனன்றுபுகழ்ந்தவாறு, மாதையிலேயிதுலகுவாய்முன்னேபார்த்து மற்றதெல்லாம்பின்புபார் மைந்தாநீயே. (௬௧)

உப்பின் பெருமை.

மைந்தனேயுப்புடையபெருமைசொல்ல வாக்குண்டோமனமுண்டோவாதவேலை, மைந்தனேயுப்பைவிட்டால்வாதம்போச்சு வாய்வாதத்திருடருடன்வாய்பேசாதே, மைந்தனே யுப்பதுவுஞ் சத்தியாச்சு மருவியிதைக்கட்டினபின்சிவனுமாச்சு, மைந்தனே வெகுகடினங் கட்டுதற்கு வாய்திறந்து வுப்பென்ற வார்த்தைபோடே. (௬௨)

போடப்பாவேழுவகைப்பால்தானுண்டு போக்கோடேதனித்தனியேவுப்பில்விட்டு, ஆடப்பாவாதமென்றகம்பத்தேறி யதற்கடிக்கமுளைவேண்டாங்கயிறுவேண்டாம், நீடப்பாவுப்பானவுருக்குக்கம்பம் நிலைத்துதப்பாசராசரங்களெங்குந்தானாய்க், கூடப்பாவுப்பைவிட்ட வாதியானாற் கூப்பிட்டுக் கைப்பிடித்துப் போடுசொட்டே. (௬௩)

போடுகிறவகைசொல்வேன்கேளுகேளுப் புகழானதில்லைப்பால்ப்படிதானென்று,நாடுகிறவராகனென்றுதுரிசிச்சுண்ணம் நலம்பெறவேயதிற்போட்டுநன்றாய்க்கிண்டி, யோடுகிறசூதமதுபலந்தான்பத்து வுத்தமனேயதில்விட்டுமூட்டுதியைப், போடுகிறதுக்ஷணமேவட்டுப்போலாம் புகைபாமலுறைந்துகட்டுமிதுதான்காணே. (௬௪)

எருக்கி னுபயோகம்.

காணப்பாவிந்தரசங்காயசித்தி கைகடந்துவெகுதூரங்காட்டவோடும், பூணப்பாவிதையுண்டாற்சட்டைபோகும் புகழான கொம்பாலேவெள்ளியாகு, மாளப்பாவினைதத்தயிலமெல்லாங்கட்டு மதினுடையவேற்சூதஞ்சாம்பலாகுந், தோணப்பாவிதற்கெல்லாமுப்பைத்தூவு சொல்முறையைமறவாதேசூட்டுசூட்டே. ()

லிங்கமெழுகு.

சூட்டியதோ ரெருக்கம்பால் படியொன்றுக்குள் சுகமாகக்காசிடைதான் துரிசிச்சுண்ண, மூட்டியதோர்க் கடிகையிலே முறிந்துநீரா முத்தமனே யின்னீரைவேறேவாங்கிக், கூட்டியதோர்சாதிலிங்கம்பலந்தான்பத்துக் கூடவிடுவெடியுப்புப்பலந்தானஞ்சு, மாட்டியிதைப்பொடியாக்கியதிலேபோட்டு வடுப்பேற்றியெரிக்கையிலேமெழுகுமாமே. (௬௬)

ஆமிந்தமெழுகுதன்னை நவலோகத்தி லாயிரத்துக்கொன்றிடவேபத்துமாற்றும், போமிந்தமெழுகுதொட்டாற்சரக்குகட்டும் யோக்குமெத்தச்சொல்லறியேன்புத்தியோர்க்கு, வோமிந்தக்கள்ளிப்பாலிப்படியேயாகு முத்தமனேசவ்வீரமிப்படியேபண்ணு, வேமிந்தச்சரக்கெல்லாம்வெவ்வேறாக வேதையுமோ வெகுதூரம்விசிறும்பாரே. (௬௭)

சவ்வீர மெழுகு.

விசிறுகிறேனிலைக்கள்ளிப்பாலைவாங்கிவென்குழலில்வார்த்ததனிலிங்கம்போடு, கசறுகிறகாசிடைதான்லிங்கம்ரெண்டு கைமுறையாய்ப்பொடித்திட்டுக்கவசமூடிப், பசறுகிறநெல்லிட்டுப்பாங்காய்வேகுப் பச்சைநிறம்போலாகும்லிங்கமொன்று, மசறுகிறமாண்பர்களே லிங்கத்திற்கு மாட்டியுப்புக் குருபூசி வாட்டுவாட்டே. (௬௮)

வாட்டியிந்தலிங்கமெடைவீரம்போட்டு வாகான சவுக்காரச்சுண்ணம்பாதி, மூட்டியதிற்பூரமிட்டுப்புழுகுபோடு முயன்றரைத்துப்பூசியிதின்மேலேவாட்டி, நீட்டியதைக்கவசமிட்டுப்புடத்தைப்போடு நிலைத்துநின்றகுருவாகும்லிங்கராச, நாட்டியதில் வாகமொன்றேகவனமொன்றே வாகாகாநிருநடனமாடுந்தானே. ()

சூத்குரு.

திருநட்டமாடுதற்குமொன்றுகேளு சிறக்கவொருசேரிரசங் கல்வத்திட்டுத், தருநட்டமானதொருவுப்புச்சுண்ணந் தன்னிலிடுப லமரைதான்தாய்தானென்று, கருதிட்டமாங்காயின்பாலேவார்த்து க்கைமுறைபாய்ப்பதினெருநாட்கலந்தேயாட்டு வொருதிட்டமா கவொன்றாய்வழித்துவாங்கி யோகோகோஅயச்சிமிளிலொடுக்கி டாயே. (எ0)

ஒடுக்கியதைக்கவசமிட்டுப்புடத்திற்போடு வுத்தமனேசூத மதுகுருவுமாகு, மடுக்கியிதையேழுதினங்குன்றியுண்ணில் மகத் தானசித்தியுமாஞ் சட்டைபோகுந், தடுக்கியிந்தக் குருபட்டா லெல்லாஞ்சாகுஞ் சதகோடிநவகோடிவேதையோடு, மிடுக்கிவிட் டவுப்போமொடுமெப்பா வென்னசொல்வே னென்றாலும்முடியா வாறே. (எக)

சூத நாகம்.

வாறுகேள்கப்பட்டிப்பால்தானப்பா வாகாகப்படியொன்று வாங்கிக்கொண்டு, தாறுகேள்சூதமஞ்சநாகம்ரெண்டு தனித்த தொருதங்கமொன்றுசேரக்கூட்டி, வேறுகேள்பொடிபண்ணிப்பா லிற்போட்டு விரைந்ததிலேசவ்வீரம்ரெண்டுபோட்டுக், கூறுகே ள்பலம்பத்துமொன்றாய்க்கொட்டிக் கொள்கிடுநீகல்லுப்புச்சுண் ணமொன்றே. (எஉ)

ஒன்றேடேபதினென்றும்பலமதெல்லா முத்தமனேயரைத் தருட்டிபுலர்த்திப்பின்பு, கன்றேடேயயச்சிமிளிலடைத்துப்பி ன்புக் கவசமிட்டுக்கடும்புடமாய்க்காட்டிப்போடு, தன்றேடேகு ருவாகுனைமப்பா தடவினதேகலந்தோடேந்தங்கமாகும், வன்றே டே யிசைந்தமலர்க்குழலாட்கீசன் வாய்திறந்து சொன்னகுரு மட்டிலாதே. (எந)

சூதக்கட்டு (வேறு.)

மட்டில்லாச்சூதமதுபலந்தான்பத்து வார்த்துமயப்பாத்தி ரத்தில் வரிசையாகக், குட்டில்லாக் குண்டலியாம் பாலேயப்பா கொட்டுவொருசேரையிதில்க்குமுறிப்போகும், கட்டில்லாதேன் வேண்டாமுப்புச்சுண்ணங் காட்டியொருபலமதிலேகலந்துகிண் டில், வட்டில்லாவட்டுப்போற்சூதங்கட்டும் வளமாகயெரித்திட வேமணியுமாமே. (எச)

மணியானசூதத்திற்சாறணையைக்காட்ட மதியளவுங்கவன முன்னிவாங்கும்வாங்கும், பிணியானதொன்றுமில்லைவாயில்வைக்கப் பேரானகாயமுமேமோபெலத்தசித்தி, தணியாதவேதையிதிற்கோடிக்கோடுஞ் சச்சுதானந்தவெளிதானுங்காணும், களியானபுரியட்டம்நாலையுண்ணும் கதிர்முனைக்கோகாற்றுமில்லைக்களங்கம்போச்சே. (எடு)

களங்கற்றுநின்றவெளி காணுங்காணுங் கைகடந்தபூரணமோகாணுங்காணு, முளங்கற்றநிர்மலமோகாணுங்காணு மோகோகோநிர்க்குணமோகாணுங்காணும், விளங்கற்றநிராதாரங்காணுங்காணும் வேதாந்தமுடிவடங்கக்காணுங்காணு, மொளங்கற்றுமெங்குமொன்றாய்நின்றசோதி யொளியென்னக் காணுமிந்தக்குளிகைதானே. (எசு)

தானென்றவாணவத்தைப்போக்கும்போக்குஞ் சங்கற்பமானதெல்லாந்தவமேபாகும், வேனென்றபிறவியெல்லாம் வெந்துநீறுமெடுபடாவாசனையும்விரைந்துபோகு, மூனென்றவிந்துவெல்லாமுறைக்குங்கற்போ லுறுதியுடலாகவென்றுமுணர்ந்துவாழ்வார், வானென்றமனஞ்சேரும்வாசிகாணு மகத்தானகுளிகையதுவளப்பந்தானே. (எஎ)

முதற்குரு இன்னதென்பது.

வளப்பமெல்லாமுப்பாலேமைந்தாகேளு வரிசைசொல்வேனுப்புடையமார்க்கமெல்லாந், தளப்பமென்றுமெண்ணுதேயுற்றுக்கேளு தனித்தமுதற்குருலவணம்வழலையப்பா, வளப்பமென்றபாறையுப்புரெண்டாம்பூநீ மிதின்பிறகுவெடியுப்பா மறிந்துகொள்ளு, இளப்பமல்லவமுரியுப்பாமிதைவிட்டாக்கா லிசைந்தமற்றலவணமெல்லாமிழுக்குந்தானே. (எஅ)

இழுக்கானவுப்பையெல்லாம்வலுவேயாக்கு மெடுத்திடப்பா முந்திமுந்திவழலைச்சுண்ணம், மழுக்கானசரக்கையெல்லாஞ்சலவையாக்கு மடங்காதபுகையடக்கிச்சத்துபண்ணும், பழுக்காதசரக்கையெல்லாம்பழுக்கப்பண்ணும் படுமுன்னேதாதுவெல்லாம்படுதீபற்றுங், கொழுக்காதேயிதைக்கண்டுகெர்ச்சிக்காதே கொள்ளாதேகர்மநோய்குடிலமாமே. (எகூ)

குடிலமாமகாரமென்றமூன்றுக்கேதான் குறிப்பாகவறிந்துகொள்ளுவழலைராஜன், குடிலமப்பாபாறையுப்புச் சூதத்திற்குக்

குமுறிட்டே வெகட்டியது மணிபோலாடும். குடிலமப்பா வெடியுப்புசரக்குக்கெல்லாங் கூறரிதுயிதின்பெருமைக் கூறினேன்யான், குடிலமப்பாலவணமென்ற கூற்றதெல்லாங் குறிப்பறிந்துகொள்ளுதற்குக்கூறினேனே. (அ0)

கூறினேனுப்பினதுபெருமையெல்லாங் குவிந்தடியேன்பார்த்ததின்பின்னறிந்தமட்டு, மாறினேனென்னுலேமுடியாதென்றுமறிந்துணர்ந்தபெரியோரேயறிந்துபாருந்; தேறினேனுப்பைமுதற்றிருட்டேயாடிச் செகசாலங்கடந்தபின்புசித்திகூடி, மாறினேன்குளிகையிட்டு வீதியோடி மகத்தானபெரியோரை வணங்கினேனே. (அக)

பூநீறு மெழுகு.

வணங்குதற்குமின்னமொருவிந்தைகேளு வாய்திறந்துசொல்லாதே சுளுவாய்ச்சொல்வே, ணிணங்குதற்குப் பூனீறுப்பூத்தாப்போலே யெடுத்ததனைப்படியிரண்டாயளந்துகொண்டு, பிணங்குதற்கமுரிபடியாறுவாறு பேரானகற்சுண்ணம் படிதானொன்று, தணங்குதற்குக்கரைத்துவைத்ததிலேகேளு சாத்திடுவாய்ப்படிநாலுவமுரிதானே. (அஉ)

அமுரிவிட்டபின்புமொருபடிதானுப்பு வப்பனேபொடித்ததிலேகலக்கிப்போடு, கமுரிவிட்டுமூடிவைத்தேயஞ்சாநாளிற் கலங்காமலிறுத்ததனைத்தாழிக்குள்ளே, திமுரவிட்டுக் கடைந்துடனேநுரைமேற்கட்டுஞ் சிறக்கவொருயகப்பைகொண்டுசேர்த்துப்போடு, நிமிரவிட்டுக்கரத்தாலேயெடுத்தாயானால் நிச்சயமாயறிந்துகொள்நீறுங்கைய்யே. (அ௩)

கைவெந்தாப்போலப்பா சரக்குஞ்சாகுங் காட்டவொருகுருவேனுங்காணமாட்டான், பைவந்தநுரையெல்லாம்வாங்கிவாங்கிப் பருவமுடன்பீங்கானுக்குள்ளேபோடு, மெய்வந்தநுரைபோகத்தண்ணீர் நிற்கும் வெறுந்தண்ணீரதையகலவீசிப்போடு, வயவந்தநுரைக்குள்ளேபோடுதற்கு மறைகிறேன்மருந்துவகையறைகிறேனே. (அ௪)

வகையான சாரமதுபலந்தான்பத்து மாட்டுகையில்நெட்டேறிமண்ணடேவகும், பகையானவெண்காரம்பலந்தான்ரெண்டு பருவமுடன்வெடியுப்புபலமிதான்று, தகையானவீரமொடுபூரம்

ரெண்டுந் தனித்தனியேபலமொன்றுமதனிற்போடு, துகையானபலங்களுபத்துமஞ்சுஞ் சூட்டியெல்லாங்கலக்கியயசட்டிவாரே. (அரு)

வார்த்திதனை யடுப்பேற்றி யெரிநற்பாக வற்றியெல்லாங் குழம்பாகவருதல்கண்டு, கோர்த்திதனிற் சிங்கமென்ற துரிசிபொன்று கொட்டப்பா விராகன்ரெண்டாங் கொடியசுண்ணம், போர்த்திதனைவழித்துமொருபீங்கானூட்டிப் பொற்கொடிக்கு முன்வைத்துப் பூசைபண்ணி, ஆர்த்திதனை ரவியில்வைக்க மெழுகையாகு மம்மம்மாவண்டமெல்லாமாடுந்தானே. (அசு)

ஆட்டுகிறமெழுகிலொருகாசுதூக்கி யப்பனேவீரமிருகாசிலப்பு, நீட்டுகிறசிலைசுற்றிவிளக்கில்வாட்டு நிலைத்ததிலைசரிகைவெள்ளிபோலேநிற்கும், பூட்டுகிறவீரமல்லப்பரிசவேதைப் புகழாகவெகுதூரம்போகும்போகு, மூட்டுகிறபிலங்களுவீரத்திற்கு முத்தமனைபறித்தகட்டைச்சுற்றிவாட்டே. (அஎ)

சுற்றதிலேதங்கத்தைச்சுழித்துவாங்குஞ் சூட்சமிதுதுறைக்கெல்லாந்தாய்தான்சொன்னேன், மற்றதிலே சிறுதிடத்தில்தங்கஞ்சொல்வேன் மருவியிதைமறவாதேவாட்டித்தங்கப், வித்தையிலேதங்கமில்லாவித்தையுண்டோ வேதாந்தமில்லாதஞானமுண்டோ, பத்தையிலே மவுனமில்லா பத்துமுண்டோ பருவமுடனிதையறிந்துபாருபாரே. (அஅ)

அறிந்திந்தமெழுகாலே யறுபத்தாறு மப்படியேவாட்டிணல்மணிபோல்நிற்கும், பிறிந்துநின்றவுபரசங்கள்நூறுஞ்சத்தாம்பேரானவண்டமெல்லாமெழுகாய்ப்போகும், கறிந்திந்தமைனவித்தைக்கெதுதானெப்புக் கறையடங்காவேதையுமாங்காயசித்தி, மறிந்தபிலமேதிதற்குயிரோவென்றால் மகத்தானசவுக்காரமெழுகுதானே. (அகூ)

மெழுகானசவுக்காரத்துடனேவீரம் விரவியப்பாநவலோகத்தூட்டிப்போட, சுளுகானசுண்ணமுமாங்குருவுமாகுந் தொடுமுன்னேசூதத்தைத்துடிக்கக்கொல்லு, மழுகாதே வயதுமெத்தப்போகுதென்றே யறிந்துண்ணவிச்சூதங்காயசித்தி, விழுகாதே பெண்மாய்கைப்பையிற்குள்ளே வேதாந்தநூலைநித்தம்விரைந்துபாரே. (கூ0)

பாரப்பாசவுக்காரவித்தையாதி பராபரைக்குப் பரனன்றுப கர்ந்தவாறு, நேரப்பாசவுக்காரமுப்பேகண்டாய் நினைவாகக்குரு செய்வானிலைத்தவாதி, போரப்பா வெள்ளிபொன்னின்மலையைப் பண்ணும் புகழாகவீசனன்றுபூசும்நீறு, ஆரப்பாவிதையறிவார்சி த்தர்காண்பா ராகாகாவாதமிதிலடங்கிப்போச்சே. (௯௧)

அப்பிரகச் சுண்ணம்.

அடங்காதஅப்பிரகச்சுண்ணம்பண்ண அறைகிறேனடவாக வப்பாகேளு, மடங்காதேயொன்றுலுமாத்தாள்நாதம் வாதிபென் றுலிதையறிவார்மற்றோர்காணார், முடங்காதேயிதையிடித்துக்கா டிக்குள்ளே மூட்டியிதில்நெல்போட்டுரெட்டுக்குள்ளே, துடங் காதேதேப்த்துவரக்கிழேவிழுந் சுத்தநவநீதமிது துறையைக் கேளே. (௯௨)

கேளப்பாவாழைபதுகிழங்குச்சாறு கெடியானவாடுதீன்றுப் பாளைச்சாறும், நீளப்பாவார்த்தரைத்துவில்லைகட்டி நிலையாகயுல ர்த்தியதையூதிப்போடு, தாளப்பாமணியுடனேமணத்தக்காளித் தனிச்சாறுமிரண்டாலேயரைத்தேயூது, வேளப்பாவிதிறுலேவிள ங்கமாளும் விரவியினியூதுதற்குமினிசொல்வேனே. (௯௩)

மேலானவெருக்கம்பால் படிதானென்று விட்டதிலேபத்த ண்டவெள்ளைநீரைக், கோலாலேசுத்திவைத்துமிதிலேவாரு குலா விநன்று யரைக்கும்போதின்னங்கேளு, மாலானதேவியிதில்நா விற்கொன்று மாட்டியரைத்தெடுத்துலர்த்தியூதிப்போடு, சேலா னவப்பிரேகம்வெளுக்குஞ்சற்றேறத் திரும்பியந்தப்பாலினு லரை த்துக்கட்டே. (௯௪)

கட்டியதோர்வில்லைதனையூதிப்பின்புக் கடுகியஞ்சுதரமரைத் தேயூதிப்பாலி, லொட்டியதுகறுப்பாகவிருந்துதானுலுத்தமனே கற்சுண்ணங்கீழ்மேலிட்டுக், கொட்டியதில்நீர்வார்த்துநீற்றுநீற் றுக் குன்றுமலன்பத்தோர்தடவைசெய்யப், பிட்டியதுபோல்வெ ளுப்பாயிருக்கும்பாரு பேராகப்பின்புசெய்யும்பிரிவுகாணே. ()

காணப்பாவிவ்வெடைக்குமெட்டிலொன்றுக் கடுகியிதிற்சவு க்காரச்சுண்ணம்போட்டு, பூணப்பாசுண்ணநீர் விட்டேயாட்டிப்பு கழாகவூதிடவேவெளுப்பாஞ்சுண்ணம், வீணப்பாமற்றதெல்லாமி தற்குமீடோ வெள்ளிமுதல்பொன்னுகும்லோகசித்தித், தோண

ப்பாவிவ்வெடைக்குச் சாரம்போட்டுச் சுசுமாகமுலைப்பாலிற் சுழ
ற்றியாட்டே. (கசு)

ஆட்டுகையிற்சவ்வீரங்கூடப்போட்டே யதிலிங்கவெள்ளையுட
ன்பூரங்காரம், நீட்டுகையிலின்னுலிற்பூசிவாட்டு நிமிஷத்தில்நாலு
மங்கைவிரைத்துப்போகும், கூட்டுகையிலின்னுலும்வராகன்நாலு
கொள்கியிதிலெருக்கம்பால்குத்தியாட்டிப், பூட்டுகையில்வங்கம
துபலந்தான்ரெண்டிற் புகழாகப்பூசியிதையுரைப்போடே. (கஎ)

உலர்ந்ததன்மேலப்பிரேகச்சுண்ணம்பூசவுத்தமனேசிலைசுற்
றிப்புடத்தைப்போட, வலர்ந்ததுவும்வங்கமப்பாசுண்ணமாகு மா
காகாவிதைக்காட்டச்சூதஞ்சாகு, மலர்ந்துதப்பாவாதமென்றமல
ராங்கஞ்சம் வாய்திறக்கப்போகாதுவழியோமெத்தக், கலந்துத
ப்பாசூதமென்றயானைகட்டக் கடுநெகிழ்தங் கடுநெகிழ்தங்கண்
டிடாயே. (கஅ)

கண்டுநீசூதத்திற்வங்கச்சுண்ணங் காட்டுமுன்னேதயிராகு
ங்கல்லுமாகு, மொன்றுநீகாரமிட்டுவுருக்கவாடி ,மோகோகோ
வாச்சரியமென்றுய்சொன்னுள், பண்டிடவேயிதில்ரெண்டு வித்
தைசொல்வேன் பறக்கும்ரசகுளிகைசொல்வேன் பரிசஞ்சொ
ல்வேன், அண்டிடவேபூரணத்தில்வழியுஞ்சொல்வேன். ஆயிதன்
நாதவித்தையதிகந்தானே. (கக)

ரசிதச் சுண்ணம்.

அதிகமென்றுமீசனன்றுசொன்னுர்சொன்னு ராயியிதைக்
கேட்டெனக்குமருளிச்செய்தாள், பதிகமென்றவிச்சூதம்மொன்
றுக்குள்ளே பாச்சப்பாமூன்றுவெள்ளிப்பண்பாய்வாங்கி, மதிக
மென்றபுழுகோடுவீரம்பூசி மகத்தானசுண்ணமென்றகுண்கயில்
வைத்து, விதிகமென்றபுடம்போட வெள்ளிச்சுண்ணம் வேதை
யெங்கேவங்கத்தில்நூற்றுக்கொன்றே. (க00)

ஒன்றுனவெள்ளியப்பாமாற்றைக்கேளு வோகோகோபதி
னுறுபதினெட்டாகுந், தன்றுனநவலோகம்பற்றுப்பற்றுந் தப்பா
துவெள்ளியதுசார்ந்துபாரு, கன்றுனசூதத்தைவெள்ளியென்றுற்
கண்டோர்கள்சிரிப்பார்கள்கடந்துசொல்வேன், வன்றுனர்விழுந்
தும்பொன்னுகாட்டால் வாயேதுகையேதுவரிசைகேளே. (க0க)

தங்கச் சுண்ணம்.

வரிசையுடனிச்சூதம்வராகனென்று மருவிநின்றமுறுநகையிலேமூன்றுதங்கம், பரிசையுடன்கொடுத்தொன்றாய்வாங்கிக்கொண்டு பருவமுடன்சவ்வீரம்பூரஞ்சூதம், அரிசையுடன்புழுகோடு நாலும்பூசி யமர்த்தியஞ்சுசுண்ணமென்றகுகையில்வைத்துக், கரிசையுடன்புடம்போடுதங்கச்சுண்ணங் கைகடந்தமாற்றுருகுங்கனிவாய்ப்பாரே. (௧௦௨)

சுனிவான குருவோடுவீரங்கூட்டிக் கலந்தப்புத்துருசியின்மேல்கண்டவெள்ளை, பினிவானதுருசிவெள்ளைவீரத்திற்கு வெட்டிலொன்றுபூசியதைவாட்டுவாட்டு, முனிவானவீரமதுவயிரம்போலாம் மூட்டுநவலோகமுன்னூறுக்கொன்று, பணியானபழிக்குருவைச்சூதத்தூட்ட படுமுன்னேரசயானைபட்டவாறே. (௧௦௩)

பட்டுநின்றமதயானையுருகும்போது பற்றுக்குமஞ்சிலேதங்கம்போட்டு, கட்டுநின்றவப்பிரேகச்சத்துமூன்று கலந்தொன்றாயுருகையிலேகாட்டுகெந்தி, மட்டுநன்றாயிவ்வெடைக்குமூன்றுகெந்தி வாகாகாவயக்குப்பிக்குள்ளேயிட்டு, விட்டுநன்றாய்வாலுகையிற்றினந்தான்மூன்று விடாமலெரிசெந்தூரம்விளங்குந்தானே. ()

விளங்குகின்ற செந்தூரம்பணந்தானென்று விடாமலுண்ணுமண்டலத்தில் மேனிபொன்னு, மளங்குகின்ற சூதத்திற்சாறணையைத்தீரு வாகாகாகெஜரசத்திலாடலாகும், பிளங்குகின்ற செந்தூரம்நூற்றுக்கொண்டு பேதித்துநவலோகம்பெருத்தபொன்னும், வளங்குகின்றமுறையிதுதானுயினுதம் வளமானபரிசனத்தைமகிழ்ந்துகேளே. (௧௦௫)

கேளப்பாகவுரியதுபலந்தானஞ்சு கெடியானபாண்டத்தில்போடுநீயும், வேளப்பாவமுரியொருபடிதான்வாரு விளங்கியதோர்பழச்சாறு மதிலேபாதி, தாளப்பா வெடியுப்பு கல்லுப்போடு தனிச்சீனமொன்றுமுப்பலமேபோடு, வாளப்பாவிதைக்கலக்கிக்கொதிக்கவைத்தே யதனேடுபிரட்டிமெள்ளவறுத்துவாங்கே. ()

வாங்கியிந்தப்பலகையெல்லாந்துடைத்துப்போட்டு வளமானவெடியுப்புச்சீனமுப்புத், தாங்கிமெள்ளஅரைத்துமிதைப்பூசிப்பூசி தனித்ததொருகரியோட்டில்வாட்டுவாட்டு, வோங்கியிந்தப்பலகையுள்ளேநாகங்காணு முத்தமனேயிதைப்பற்றி வுனைப்போமெத்தத் தேங்கியிந்தப்பலகையொன்றுசூதமொன்று சேர்ந்தபழிக்குருவரைதான்சேருசேரே. (௧௦௭)

சேரப்பாவிதிலரைதான் துருசிச்சுண்ணஞ் சிறப்பானசவ்வீர மரைதான்போடு, வாரப்பாமுலைப்பாலாலாட்டியாட்டி மருவியொருசிலையிலேபூசுபூசே, யேரப்பாதிரிதிரித்துநெய்யிற்றோய்த்தே யிதமாகத்திக்கொளுத்தியவிக்கதூபம், பேரப்பாகவலோகமெல்லாம்பொன்னும் பொற்கொடியாள்வேதையதுபுகழைக்கேளே. ()

புகழானதிரியில்நின்ற பிஷ்டிவாங்கிப் பூசிடநீபரிசனத்திற் பொன்னுமாகு, மகழாகவப்பிரேகச்சுண்ணவித்தை யாடவென்றுலந்தமெங்கேயாதியெங்கே, திகழாகச்சூளைமக்கள்காண்மாட்டார் செய்முறைபுந்தவராமற்செய்யமாட்டார், மகழானமச்சினியாமாலின்தேவி மாய்கையுடன்கூடினதும்வலிவுமாச்சே. (கoகூ)

குருவண்டு ஜெனன வகை.

ஆச்சப்பாசெந்துவகை யாண்மைசொல்வே னறிவார்சிவயோகியல்லார்காணார், வாச்சப்பாவாறுபுள்ளிவண்டுமொன்று மருவியதோர்கொளுஞ்சியடிநின்றவண்டு, காச்சப்பாகுருவண்டுகுழியின்வண்டு கடியதோர்நீருக்குள்சுழலும்வண்டு, வேச்சப்பாயெரிவண்டுகழுதைவண்டு மிவையெல்லாங் குருமுறைக்கெடுத்தவாறே. (ககo)

வாறுகேள்வண்டுக்குளரிசியுண்டு மற்றதிலேயினங்கூட்டியரைப்பதுண்டு, கூறுகேளிதின்வேகந்துருசிநீறுங் கொள்ளையிட்டகுருவிதுதானற்பொன்விடு, தாறுகேளிதின்பெருமை தாயுங்காணாள் சாற்றரிதாமென்னமேலசற்றேசொன்னேன். பேறுகேள்வண்டினதுவரிசிபட்டால் பேரண்டம்நீறியதுபிளக்கும்பாரே (கக௧)

பிளக்கிறதோரரிசியதின்வேகமப்பா பிரிவானசரக்கெல்லாம்பெரியநீறு, மளக்கிறதோரளவேதுவண்டின்வித்தை யரனறிவாரவர்சொல்லவாத்தாள்கண்டாள், துளக்கிறதோர்வஸ்த்துவிதிற்கூடிற்றானாற் சொல்லேதுபேச்சேதுதுறைதானேது, முளிக்கிறதோர்திசைனுதமுட்டிற்றுண்டி முதண்டவெளிகடக்க மணிமுத்தாமே. (ககஉ)

வேறு.

முத்திருக்குஞ்செவிக்குருவைமுலைப்பால்வார்த்தரைத்து முழுங்குருகைபிடித்ததில்முக்கழஞ்சுரசம்வார்த்துப், பத்திருக்கப்பூநாகம் பரிந்தரைத்துப்பூசிப் பசுநாணலைநெய்யதனைக் கரண்டிக்கு

னில்வார்த்து, வத்தயிலேகுளிகையுமாம்வசியமுமேயாகும் வாயி லிடத்தம்பனையாம்வளர்மார்க்கவிதி, யெத்தயிலேகொண்டெழூப் புமேழுசபைகாணு மெளிதாகவுண்பதற்குமேயிடைந்துபோமே.

வேறு.

இடைந்துநின்ற குளிகையின்சாரணையைத்தீர்த்தா லேழு லகம்நிமிஷத்தி லெடுத்துமாடு, மடைந்துநின்றபராபரத்தையிது தானென்று மடிக்கோமேடயாரையுமேகையிற்காட்டும், பெடைந் துநின்றசபையெட்டில்நாலைச்சேர்க்கும் பேசரியவுன்மனையைத் தாண்டிக்காட்டுங், குடைந்துநின்ற ஞானவெண்ணெ யெடுத்துக் காட்டுங் குருவனுக்குஞ்ஞானவழிகூட்டுந்தானே. (கக௪)

இரசம் இன்னின்னவற்றால் கட்டுமென்பது.

கூட்டியதோரட்டையதுமுதுவிற்கேளு குழிப்பாகமூன்றுவ ரைபொன்போற்காணு, மாட்டியதோர்சூதம்விட்டால்கட்டுங்கட் டு மப்பனைபால்கண்டுக்குள்ளேகட்டும், மூட்டியதோர்கடல்நுரை யாந்தியிற்கட்டு மூதண்டவலம்புரியாஞ்சங்கிற்கட்டும், பாட்டிய தோர்வெண்சாரைக் குள்ளேகட்டும் பருவமுடன் பூனைகங்கட்டுந் தானே. (கக௫)

கட்டுமேப்பாவிந்தவகைமாங்கிஷத்திலெல்லாங் காணவின்ன மெத்தவுண்டு கண்டு சொல்ல, கொட்டுமேப்பா தீத்தேள்போற் காரசாரம் குமிளிவிட்டுச்சூதமங்கேகுமுறிச்சாகும்,வெட்டுமேப்பா தாதுவென்றதளத்தையெல்லா மிதிக்கவென்றவாளதுதானுப்பே யுப்பு, வெட்டுமேப்பாவிதைவிட்டால்பெலமுங்காணே னுற்றவுப்பு க்கடுங்காரசாரந்தானே. (கக௬)

சாரமிட்டாற்சாரமில்லைவாதத்திற்கு சங்கற்பலவணமிட்டா ற்கட்டுமில்லை, காரமிட்டாற்காரமில்லையுருக்குக்கப்பா கைமுறை யாய்த்துருசிவிட்டாற்குருவுமில்லை, வீரமிட்டால்வீரமில்லைவெந்து நீற வேதைக்கோதங்கம்விட்டால்வேதையில்லை, யாரமிட்டச்சூ தம்விட்டால்வர்ணமில்லையாச்சரியங்கெந்திவிட்டால்சிகப்பும்போ ச்சே. (ககஎ)

கவுரிச்சத்து.

போச்சென்றுமெண்ணுதேகவுரியாலே புகழான தூபமொடு ப்புகழைச்சொல்வேன், காச்சென்றமுன்சுத்திகவுரிதானுங் கை

முறையாய்ப்பலமொன்றுதூக்கிவைத்தே,யோச்சென்றகாரமரை சாரச்சுண்ண மொர்க்கவொருபலம்போட்டேயூட்டுவெண்ணெய், மாச்சென்றசவ்வீரங்கால்தான்போடு வாகானவெண்கண்டரரைக் கால்போடே. (கக௮)

போட்டெல்லாமரைத்தெடுத்து மெழுகுபோலப் புகழாகப் பீங்கானில்வைத்துக்கொண்டே,யூட்டப்பாமுன்கவுரிநாலுக்கொன்று முத்தமனேயுருக்கிடவேசத்துமாகு, மாட்டப்பாவாதமென்றசக்கரத்தைக்கையி லானுக்குமுன்கையிற்கங்கணத்தைச்சுற்று, நீட்டப்பாவிவ்வெடைக்குச்செயசூதத்தை நிலைக்கவிந்தச்சூதமெடைபறியைக்கூட்டே. (கக௯)

பறியெடைக்குக்கெந்தகத்தின் சத்தைப்போடு பாங்கான தாரசத்தும்நிமிளைசத்தும், பிறிதனக்குவகைக்கெடையுமதுவேயாகும் பேரானபச்சைரசம்நாலுங்கூட்டி,பொறிதனக்குமொன்றுகக்காரமிட்டாட்டிப் புகழாக வுருக்கிடவே மணிபோல்நிற்கு, மெறிதனக்கு மிதிஞமேலகுருவைச்சொல்வே னெட்டெட்டுமிதற்குள்ளேயெழும்பும்பாரே. (கஉ0)

எழும்புகிறகுருவாவ தேதிஞமேல யெணியாண்டதுருசிவெள்ளையாசாஞலே, தழும்புவதென்கொடிபடர்ந்தாற் கொழுக்கொம்பற்றுந் தனிக்கொம்புதுரிசியப்பாசகலத்திற்கு, முளம்புகிறமுன்மளிதான்விராகன்பத்து மூட்டதின்மேல்மருந்துசொல்வேன்முயன்றுகேளு, விளம்புகிறதுரிசிவெள்ளைவீரம்பூரம் விளங்கியதோர்குருவண்டுபுழுகுங்கூட்டே. (கஉக)

கூட்டுகிறவகையொன்று விராகனென்று கொடிதானசவுக்காரச்சுண்ணம்ரெண்டு, மூட்டுகிறமுலைப்பாலாலரைத்துப்பூசு முதுநெறிந்தவெய்யிலிலேபோடுபோடு, கோட்டுகிறதினமேழிலுள்ளேபுக்குங் கொள்ளவைந்துசுண்ணமென்றக்குகையில்வைத்து, நீட்டுகிறபுடமொன்றுநீதான்போடு நிலைத்தமணிசுண்ணும்பாய்நீறும்பாரே, (கஉஉ)

ஆறுமுகக் குரு.

நீறுனவாறுமுகக்குருவாலப்பா நிலைத்தூடலோகமுண்டோ கல்மண்ணுண்டோ, கூறுனமாவுண்டோமரமுமுண்டோ கூறரிதாமென்னுலே குறுக்காய்ச் சொல்வேன், வாறுன துருசியொன்று துத்தமொன்று மகத்தானசூதமொன்று வீரமொன்று, தாறு

னபூரமொன்று மஞ்சுங்கூட்டித் தன்னிலேகாலிந்தக் குருவைப் போடே. (கஉஙு)

போட்டரைத்துமூலப்பாலிற்சீலக்கப்பிப் புகழாகத்திரித்திரித்துநெய்யிற்றோய்த்து, கூட்டதனில்விளக்கிட்டேயவித்ததூபங் கொழுந்துவிட்டுமெட்டுமுன்மேலெட்டைத்தானுங், காட்டதனிற்கருப்பாதுங்காய்ந்தப்பொன்னுங் கைமுறையேகல்லெனும்புங்கனகமாகு, மூட்டதனில்மாத்துக்குள்தூபம்பட்டால் மூதண்டபொன்னுமாம்முழித்துப்பாரே. (கஉச)

முழித்திருக்கிற் கண்ணிலிந்தத்தூபம்பட்டால் மூளைமுதற்கரைந்தோடிமுன்னேசாவான், களித்திருக்கவெண்ணுமல்தூரப்போபோ கடியபுகைநவலோகங்காற்றிற்பொன்னும், தெளித்திருக்கமுனையோடே மண்ணும்பொன்னுஞ் சேர்ந்தபுகைமலைகளெல்லாம்பொன்னுமாகு, மொளித்திருக்கவேணுமென்றுலொளிக்கொட்டாது முத்தமனேமலையேறியூட்டிப்பாரே. (கஉரு)

பாரப்பாவிக்குருவைச்சவாதிலூட்டிப் பாணியிலேவைத்திதனைப்பண்பாய்ப்பூசி, சேரப்பாவிதைத்தொட்டுச்சரக்கைத்தொட்டுச் சிறந்திடவேசகலமெல்லாஞ்செணத்தில்வேதை, யாரப்பாயிதினுடையவளவைக்காண்பா ரண்டபகிரண்டமெல்லாமாட்டமாடுங், தேரப்பவாதத்துக்காணியாகுஞ் செப்பரிதுயாறுமுகத்திறத்தைத்தானே. (கஉசு)

அஞ்சு சுண்ணக்குகை.

திறமாகவஞ்சுவகைக்குகையைக்கேளு செப்புகிறேன்கடலின்நுரைப் பலமொன்றேதான், மறவாகக்கருவாலே யரைத்துயூதி மாண்டபின்புகல்லுப்புப் பலந்தான்கூட்டே, யுறவாகவிதைக்கூட்டியூதுவூது யுறைத்தபின்புவெடியுப்பைக்கூட்டியூது, நிறைவாகச்சீனமொடுநெல்லருடன் நிறைந்தவைந்துபலமைந்துநீட்டியூதே. (கஉஎ)

ஊதவஞ்சுஞ்சுண்ணம்பாமுத்துப்பாரு முத்தமனே யிதுகுகைதான்பஞ்சபூதம், வாதமஞ்சியிதைக்கண்டால்வாயைப்பொத்தும் வாதிக்குமிதைவிட்டாற்சுண்ணம்பில்லை,போதவஞ்சுகுகைக்குள்ளேளருதம்நீறும் பொன்னீறும்வெள்ளிமுதற்போக்குநீறும்,நாதமஞ்சுமுபரசங்களெல்லாம்நீறும் நாதவிந்துமுதல்நீறும்காட்டிக்காணே. (கஉஅ)

காணப்பாசாரமுதற்றருசிநீறுங் கைகடந்தயுப்போகோரம்நீறும், பூணப்பாவிதைவிட்டாற்சுண்ணும்பில்லைப் புகழாகமுந்தியிந்தக்குகையைப்பண்ணு, வீணப்பாசுகோதேசுண்ணும்பாகா வெறுவீணர்வார்த்தையிலே விரைந்திடாதே, தோணப்பாதெரிந்தமட்டுஞ்சொன்னேன்சொன்னேன் சொற்குற்றமென்னூலிற்கூட்டிலேனே. (கஉகூ)

கூட்டிலேனபத்தமொன்றுமென்னூற்குள்ளே சொன்முறையாய்ப்பார்த்ததெல்லாமெழுதிக்கட்டிக், காட்டிலேயிருந்தசித்தர்மெச்சவேண்டிக் கைமுறையாய்ப் பாடுகிறேன்களங்கற்றப்பா, வேட்டிலேயெழுதினதுமன்றுமன்றே யென்மகனேகல்வெட்டாமொன்றும்பொய்யா, நாட்டிலேயிருந்தசித்தர்வாகியோர்கள் நல்லபதங்காணவென்றுநாட்டினேனே. (க௩0)

ஞானம்.

காணவென்றுலென்னூலைக்கருதிப்பாரு கையறியாமிலேச்சருக்குங்காணுங்காணுந், தோணவென்றாற்றோணுது நாயன்சொன்ன திருமந்திரத்திலேயோதொழிலோமெத்தப், பூணவென்றாற்பூணுதுமற்றநூல்கள் புகழறிந்தபெரியோர்க்குப் போக்குத்தோணு, மூணவென்றால்நிலையாதுசிவன்சொல்லப்பா வுத்தமிதான் விடுவித்துமுரைத்தவாறே. (க௩க)

உரைத்மொழிகேட்டுநித்தமூலத்துள்ளே யொன்றொன்றுப்பார்த்துநித்தமுறைத்துக்கண்டு, நிரைத்தந்தவினத்தோடே வரிசையோடே நிறைநிறையாய்ப்பாடுகிறேன் நினைவாய்ப்பாரு, கரைத்தபுளிக்குளம்பாகுமிந்த நூல்தான் காணுதனூல்களெல்லாமிதுக்குட்சக்கை, நரைத்ததலைகறுப்பாகும்மேனிபொன்னும் நாதாந்தம்வேதாந்தம்நூல்தான்காணே. (க௩உ)

நாலாகவெளியினுள்ளேநின்றசோதி நாட்டியதைப்பார்பாருவாதசித்திக், கோலாகவொன்றொன்றுய்க்கடந்துகூடுங் கொள்கியதோரொன்றுனவரையினுள்ளே, சேலானகண்ணுடையமணித்தாயப்பா சேர்ந்திருந்தகொலுக்காணக் கண்ணுண்டோசொல், மேலானபதமிதுதா னடுக்காய்ச்சென்றால் வேதாந்தமுடிவான வெளியுமாச்சே. (க௩௩)

வெளியென்றுலிரண்டு வெளியல்லக்கேளு வேதாந்தவுன்மனைத்தாய்விளக்காய்நின்று, ளொளியென்றுலொளியுட

ளியுமல்ல வோகோகோவிருவருந்தானென்றேய்நின்ற, களியென்றநிராதாரங் காணுங்காணுங் கண்டேனே மனங்குளிரக் கலந்துபோகும், வளியென்றதீபத்தையற்றுவிழுந்து மாண்டதுபோல்மனஞ்சென்றுமாளுந்தானே. (கஙச)

மாண்டதுவேமுத்திமுத்திமைந்தாகேளு மற்றதெல்லாமுத்தியல்லமருவுமார்க்கம், பூண்டதுவேமனமென்றுப் போக்குமில்லை பூணுட்டால்பேய்க்கூத்தாம்பொல்லாமாய்கை, காண்டதுவேயிதுவெல்லாங் கண்டுசொன்னேன் கண்டபடிவாதநூற்கருவுஞ்சொன்னேன், ஞண்டதுவேயிந்தமுறைக்கேற்குமப்பா வாச்சரியஞ்சண்முகமாங்குருவினுட்டே. (கஙரு)

சார செயநீர்.

ஆட்டுதற்குமூஞ்சல்வைக்கசெயநீர்சொல்வே னப்பனேயிதுவுமுற்றற்கிளிஞ்சில்வாங்கி, மாட்டுதற்குச்சுண்ணும்பைக்கரைத்துநீயும்வாகாகவுவருமண்ணையதில்லேபோட்டு, மூட்டுதற்குக்கிளிஞ்சிலிட்டேபெரிநாற்சாமம் முத்துப்போற்சிப்பியுமாங்கிளிஞ்சிலெல்லா, மூட்டுதற்குமிதையிடித்துவடித்துக்கொண்டு வுத்தமனேயெண்பலந்தான்தூக்கிவையே. (கஙசு)

தூக்கியிந்த வெடைசார மிதிலேபோட்டுத் துவளவரைகெட்டெழும்புமட்டும்நீதான், தேக்கியிதைப்பீங்கானிலெடுத்துவைப்பாய்த் தினமேழுகடந்தபின்புசெய்யக்கேளு, வாக்கியமாம்வெண்காரம்பலந்தானென்றுவாருருக்குக்குங்கயினுள்ளேமாவைப்போட்டுப், பாக்கியமாஞ்சாரமிதில்நின்றேயாடும் பருவமுடன்குகையுடைத்துப்பண்பாய்வாங்கே. (கஙஎ)

வாங்கியிந்தச்சாரவட்டைவைத்துக்கொண்டு வரிசைசொல்வேனிதன்மேலேமைந்தாகேளு, தாங்கியிந்தச்சாரவட்டுப்பலந்தானுனு தன்னிலொக்கவெடியுப்புப்பலந்தானுனு, வோங்கியிதைப்பொடிபண்ணியோட்டிலிட்டு வுத்தமனேயடுப்பெரிக்கயுருகிநீராம், பாங்கிசைந்தவெண்ணெயிதிற்பலந்தானுனு பருவமுடன்பொடிப்பொடியாய்ப்பண்ணித்தூவே. (கஙஅ)

தூவவேபுகையாமலிறுக்கிக்கொண்டு சோளம்போற்பொரிந்திருக்குமங்கங்கேதான், பாவவேநழுத்தபின்பு வேறேவாங்கிப் பருவமுடன்பலமூன்று பொரிந்தவெள்ளை, காவவேபலமூன்று வெடியுப்பப்பா கலங்காதேசாரவட்டுப்பலமுமூன்று, தாவவே

மூன்றுமொன்றுயரைத்துக்கொண்டு தனியோட்டில்வைத்தெரிக் கத்தளருங்கீரே. (௧௩௯)

நீராகவுருகையிலேபலந்தானென்று நேரானவெள்ளையதிற் புரட்டியாற்றுத், தாரானக்கவசம்போலாற்றியேற்றுச் சத்ததிலே மிஞ்சாமலுண்டைபண்ணு; காரானக்கவசமுடன் பீங்கானிலிட்டு க் காற்றுடாமூலையிலேகுளிரவைத்து, நேரானகவசமெல்லாமிள கும்போது நின்றாறில்வெள்ளையதுமெழுகுமாமே. (௧௪0)

ஆமப்பாமுந்தினதோர்சாரவட்டு மப்பனேபலம்நாலுநிறுத் துக்கொண்டு, தாமப்பாவேளையதுபொரிதாளுலு சார்ந்தபச்சைக வச்சாரம்பலந்தானுலு,வோமப்பாவிவைமூன்றுங்கூட்டியாட்டி யு த்தமனேமெழுகாகுமுணவிலேதான்,சேமப்பாசாரமதுபலந்தான் பத்திற் சிக்கெனவேயப்பியதில்வளமாய்ச்செய்யே. (௧௪௧)

செய்வதுதான் வளையலினுல் சிலையொன்று சிறக்கவொருகு கைக்குள்ளேகிளிஞ்சிநீறு,கைவதுதான்கவசமொடு மதிலேவைத் துக் காணதின்மேற்கிளிஞ்சிலதுசாம்பற்போட்டு, கொய்வதுதான் சில்லிட்டுச்சீலைசெய்து குழிவெட்டிமுப்பதெருக் குள்ளேபோடு, வைவதுதான்சாரமுள்ளேயிருகியப்பா யானையதுதந்தம்போலாகு ங்கட்டே. (௧௪௨)

கட்டென்றுலிதுகட்டுச்சாரமப்பா கசியாதுயொருநாளுங்கடி னமெத்த, வொட்டென்றகவசமுடனெறுக்கிவைத்தே யுத்தம னேயரைத்தரைத்துப்பனியில்வைப்பாய்,தொட்டென்றசெயநீரா மிதற்குப்பேரு சொல்லாதேயொருவருடன்சுறுக்குமெத்த, பட் டென்றவூசலப்பாவிதினுலாச்சுப் பாரப்பாமூலகுருபாடினரே. ()

ஊஞ்சற்சார செயநீரில் நாகசுத்தி.

பாடுகிறேனூஞ்சலையான்விரித்துநன்றுய்ப் பருவமுடன்புட மெரிப்புப்பண்பாய்க்கேளு, மாடுகிறேன்தம்பலச்சார்பழச்சாறு ன்று மடவாகத்தாம்பூலச்சாற்றிற்பத்து, நாடுகிறேன்பழச்சாற் றில்கல்லுப்போடு நலமானவெடியுப்புச்சீனக்காரம், மூடுகிறே ன்சாரமொடுநாலுங்கேளு வுத்தமனே வகைக்குமரைப் பலமு ங்கூட்டே. (௧௪௩)

கூட்டியிதைப்பழச்சாற்றிற் கரைத்துக்கொண்டு கொட்டயி தில்நாகத்தையுருக்கிவீயு, மாட்டியிதிற்பதினென்றுந் தீர்ந்தபின்

பு மகத்தானசுத்தியிதுநாகமப்பா, நீட்டியிந்தநாகமது பலந்தான் ரெண்டு நேராகச்சுத்திசெய்தசூதம்ரெண்டு, வாட்டியிதையொன் ருகவுருக்கிச்சேர்த்து வப்பனேகல்வத்திற்போடுபோடே. (௧௪௫)

கிளிஞ்சிநீர் சார செயநீர்.

போடதிலேமருந்துசொல்வேன்நன்ருய்க்கேளு புகழானகி ளிஞ்சிநீர்பலந்தான்பத்து. நீடயிதிற்சாரமப்பா பலந்தான்பத்து நெகிழ்ந்தரைத்துப்புடம்போட்டேடெடுத்துக்கொண்டு, கூடவிதி ல்நாலுபலங்கல்வத்திலிட்டுக் குமுறவரைநால்சாமங்குவிந்தபின் பு,நேடவிதிற்சவ்வீரம்பலங்காலிட்டுச் சேர்ந்தரைத்துப்பனியில் வைக்கச்செயநீராமே. (௧௪௬)

ஆமப்பாமறுநாள்முன்புடத்திற்சார மதிப்போடுரெண்டுபல மாட்டுமோட்டு, சாமப்பாநாகமதிற்சாயங்காலந் தன்னிலொருகா செடைதான்வீரம்போடு, வோமப்பாமூன்றுநாள்பலமேசாரமோ க்கவிட்டேயாட்டிடுவாய்நாலுசாமம். நாமப்பாவிதையிறுத்துநாக ரசம்வாங்கி நலம்பெறவேசட்டியிட்டுப்பதங்கமேற்றே. (௧௪௭)

ஏற்றியிந்த ரசத்தெடைக்கு நாகஞ்சேர்த்தே யியல்பாகப் பொடிசெய்துவைத்துக்கொண்டு, மாற்றியிந்தச்சூதமெடைவீரம் போட்டு மருவியெல்லாம்வெங்குழலிலிட்டுக்கொண்டு,தோற்றியி திலேழுதுள்ளிமேனிச்சாறுஞ் சுழலவிட்டுவாயடைத்துச்சுற்றிச்சீ லை, ஆற்றியிதைநெல்லிலிட்டுவேகவைத்து யதின்பிறகுவாங்கியி தைக்கல்வத்தாட்டே. (௧௪௮)

ஊஞ்சல்.

ஊட்டியிதின்மேல்வீரம்பலந்தான்தூவி வுத்தமனேகுழகுழ த்துரசம்வேருகும், பூட்டியிதைக்காட்டலகுக்குழலிலிட்டுப் புக ழாகநெல்லோடேபுழுக்கிப்போடு,வாட்டியிந்தரசம்வாங்குமூஞ்ச லுக்கு வப்பனேநாகரசமென்றுபேரு, நீட்டியிதைப்பலமொன் றேயண்டவோட்டில் நிலைக்கவொருசீலைசுற்றுமண்டத்திற்கே. ()

அண்டத்திலிந்தரசம் வார்த்துநீயு மடவாகத்தந்திகொண் டேயுரிபோற்கட்டி, மண்டுற்றசங்கிலியையிதற்குள்மாட்டிமாநட் டுவிட்டமிட்டுஞ்சற்றாக்கித், தண்டுற்றயண்டமொன்று மிப்ப டியேதூக்கித் தனக்குள்ளேகாற்பலந்தான்வீரமிட்டு, பண்டுற்ற ஊஞ்சல்ரெண்டு மொன்ருய்த்தூக்கிப் பருவமுடனிருபதெருபுட த்தைப்போடே. (௧௫௦)

நாகரச வூஞ்சல்.

புடத்துமேலூஞ்சல்நின்றே யாடும்போது புகழானசெயநீரைரெண்டில்வாரு,வடத்திமேல்தீயேறிவற்றவற்ற வப்பனேவார்த்துவரச்செயநீர்தன்னைக்,கடத்துமேபுடமொன்றுதீர்ந்தபின்பு கலந்திந்தப்படிபோடுமிருபத்தொன்று, தடத்துமேல்னுகரசஞ்செயமுமாகுந் தப்பாதுவீரமங்கேமெழுகுமாமே. (௧௫௧)

மெழுகானவெண்ணெய்தனையெடுத்துக்கொண்டு மேல்மூடிசவ்வீரமெழுகுமேலே, கழுகானவெய்யிலிலேபோடுபோடு கைமுறையாய்க்கரியோட்டிற்குள்ளேவாட்டு,சுழுகானசூதமதிலரும்பிக்காணுஞ் சுத்தரசமாகுமட்டுஞ்சுழலவாட்டு, வழுகாதேவாதமெங்கேயென்றேயேங்கி யடங்காதவேதையிதிலாடலாமே. ()

ஆடலாமிந்தரசத்தெடைசேர்தங்கம் மடவாகவுறட்டியதையண்டத்தேற்றிக், கூடலாமுட்டைகளின்நடுவேவைத்துக்கோழியடைகோழியதுமேலேவைத்து, நீடலாமற்றமுட்டைகுஞ்சேயானால் நிலைத்துதையாவேமரசம்நெடியவேகம், வீடெல்லாம்பொன்னுகக்குளிகையொன்று விளங்கியதிற்பச்சைரசம்பத்துவாரே.()

வார்த்தப்பாயரைத்துருக்கில்நின்றேயாடும் வளமானசெயசூதமிதுவேகேளு, கோர்த்தப்பாவிச்சூதமொன்றுவாங்கிக் கொள்ளவினிபத்திடையாம்நாகத்துள்ளே, சேர்த்தப்பாவுருக்கிடவேநாகங்கட்டுஞ் சேர்ந்திடவேயிப்படிதான்பத்துதொந்த, மூத்தப்பாநாகவித்தையதிலேபத்து முருகையிலேபத்தெடைதான்சூதங்கூட்டே. (௧௫௪)

கூட்டியெல்லாமுருக்கையிலேபத்துதங்கம் கொள்கிடுநீவாங்கிநின்றே யாடும்போது, காட்டியொன்றுய்க்கருனகம்பத்தும்போடு கைமுறையாயுருக்கியதைமணிபோல்வாங்கி, நீட்டியொன்றுய்மணிமேலேபூசக்கேளு நிலைத்துநின்றவெடியுப்பைமேலேபூசி, யாட்டியென்றகற்பூரச்சிலையைப்பூசு யதின்மேலேசீலைசுத்திக்குகையில்வையே. (௧௫௫)

வைத்தகுகை யிருபத்தஞ்செருவால்மூடி. வளமாகப்புடம்போட்டுமாயிபாதங், கைத்தவமாய்ப்பூசைபண்ணுகாணும்மூலங் கைமுறைபாய்ச் செந்தூரமாகும்பாரு, வொத்தவெள்ளிவொருநூற்றிலொன்றுபோடுவோகோகோபனிரெண்டுமாற்றுங்காணு

ப், மெய்த்தவமேசெய்துகுன்றிதினந்தானுண்ணு விளங்கியரைமண்டலத்திற்சுத்தியாமே. (கடுசு)

ஆமப்பாவேமரசக்குளிகையாலே யாடலாநவகோடியடவாய்க்கேளு, போமப்பாநவலோகத் துள்ளேபூட்டிப் புகழானமுன்போலே வொவ்வொன்றாகக், காமப்பால்வித்தையென்ன விதுவோதாதோ கலந்தசிவன் வசியமுமாங் கவனமாகும், வாமப்பாலுண்டுள்ளே களித்துமூலம் வழுவாமற்பார்த்தவற்குச் சித்தியாமே. (கடுஎ)

நாகரச வூஞ்சல்.

சித்தியிலேமெத்தவுண்டுசொல்லமாட்டேன் சிறப்பானநாகரசவூஞ்சல்கேளு, பத்தியிந்தநாகரசம்வாங்கிக்கொண்டு படிபாதியிதிற்போடுதங்கரேக்கு, கொத்தியிதையுண்டபின்புவையாகேளு குலவிதுமெழுகாகுமப்பாற்கேளு, வத்தியிந்தரசந்தொடுப்பாயாடலாகு மப்பனேயிதைக்குளிகையாக்கக்கேளே. (கடுஅ)

நாக வங்கச்சுண்ண வெங்காரம்.

கேளப்பாவங்கமைந்துநாகமைந்து கெடியாகவொருபலமுமுருகும்போது, வேளப்பாவெள்ளையதுபலமுங்கால்தான் வெடியுப்போபலமூன்றுவேறேவைத்துத், தாளப்பாவெள்ளையுடன்வெடியுப்போதான் தனித்தனியேமாறியிடு தயிர்போற்பொங்குஞ், சூளப்பாவிதைவாங்கிக்கல்வத்திட்டுத் தூக்கியிதிற்பாதியிடைசாரம்போடே. (கடுகூ)

போட்டரைக்கில்ரெட்டேறும் பாருபாரு புகழாகப் புடம்போட்டுப்பின்கானில்வைப்பாய், கூட்டரைக்கநாகவங்கஞ்செயநீராகுங் கொடியானவீரமொடுபூரஞ்சூதம், மாட்டரைக்கால்வராகனெடைவழலைபோடுவகைநாலுஞ்செயநீரும்புழுகுகூட்டி, நாட்டரைக்கக்கொழும்பாகுமிதனைவாங்கி நலமானவெண்காரப்பலகைக்கேற்றே. (கசுo)

ஏற்றுவதுவெண்காரம் வராகனைந்து யிதமாகப்பூசியப்பாரவியிற்போடே, மாற்றுவதுதினமேழுகாய்ந்தபின்பு மகத்தானகட்டிதுதான்தந்தம்போலாம், போற்றுவதுமிக்காரங்குருவுக்காகும் புகழானசெந்தூரம்போடலாகு, மாற்றுவதுவறுமையென்றநாகத்திற்கு மப்பனேவெண்காரமமுதமாமே. (கசுக)

துருசுச் சுண்ணம்.

அமுதமென்றவெண்காரங்கவசத்தோடே யப்பனேநாலுகாசெடையேதூக்கித், திமிதமென்றநாகரசவீரத்தோடு சேர்ந்தேறக்கிளைழநின்றசுண்ணமூன்று, குமுதமென்றவெண்கருவுமெருக்கம்பாலுங் கூட்டியொன்றாயாட்டையிலேகொள்கைசேளு, வமுதமென்றகுருவண்டுமுப்பத்தொன்று வரம்பூரஞ்சவ்வீரஞ்சூதங்கூட்டிடே. (௧௬௨)

கூட்டுவதுபுழுகோடேபிறிவாய்க்கேளு கொள்கையைந்துமொன்றேகால்வராகன்கூட்டி, யாட்டுவதுமுன்மருந்தோடொக்கச்சேர்த்தே யப்பவினித்துருசினெடைசொல்லக்கேளு, மூட்டுவதுவொருகட்டிவராகனேமுமூச்சுவிட்டுப்போகாதேபூசுபூசு, நாட்டுவதுரவியில்வைப்பாய்தினந்தானஞ்சு நலமாகக்காய்ந்தபின்புநன்றாய்க்கேளே. (௧௬௩)

கேளப்பாவைந்துவகைக்குகைச்சுண்ணந்தான் கெடியாகவராகனைந்துகிளைந்துபோட்டு, தாளப்பாவெண்கருவைவிட்டேயாட்டு தவறாமல்நாலுபுறந்தடவிக்காய்ச்சி, நாளப்பாதினமூன்றுகாய்ந்தபின்பு நற்சுண்ணச்சீலையொன்றுமேலேசுற்று, காளப்பாசுண்ணாம்புகீழ்மேலிட்டுக் கடுகியொருசாமந்தீக்காட்டிடாயே. ()

காட்டையிலேதிருப்பிவைத்துக்காட்டுகோட்டு கைமுறையாய்வெளுப்போடுங்கண்டசுண்ணம், மூட்டையிலேயிவைநாலும்பூரமொன்று மூடவெள்ளைவழலையொன்றுவீரமொன்று, தீட்டையிலேசூதமொன்று யெட்டுங்கூட்டித் திறமாகவெண்கருவா லாட்டுவாட்டு, பூட்டையிலேவில்லையைப்போற்பிடித்துநன்றாய்ப் புகழானகிளிஞ்சினீர்நடுவேவையே. (௧௬௫)

வைத்தெரிப்பாய்சாமமொன்றுநீதானப்பா மகத்தானகுருவிதுதான்வாய்பேசாதே, கைத்தெரித்தார்மன்மதனைச்சிவந்தானன்று கடியதோரஞ்செழுத்தின்கருணையாலே, ஐத்தெரித்தவிக்குருவினுமங்கேளா யாகாகாவஞ்செழுத்தாலகண்டநாதன், பைத்தெரித்தபஞ்சசத்தியென்றுபேராம் பராபரைக்குமீசனன்றுபகர்ந்தவாறே. (௧௬௬)

வாறுகேளிக்குருவில்பூரஞ்சேர்த்து வைத்தெரிக்கநூறுமட்டுந்தொந்தமேறும், வாறுகேளிக்குருவில்வீரமேறு மகத்தானரசமேறும்நூறுதொந்தம், வாறுகேளிக்குருவி லகண்டரேறும்

வாதமென்றவஞ்செழுத்தில்மருவிப்போச்சு, வாறுகேளிக்குருவி
ல்மூலநாயன் வைத்தமுத்திமண்போட்டுமூடினாரே. (௧௬௭)

மூட்டினதோர் மூட்டையெல்லாந் திறந்துவாங்கி முத்துப்
போலொருகயற்றிற்கோர்த்தேன்கோர்த்தேன், ஆடினதோர்யா
ட்டெல்லாமூலநாய னடிதொழுதேயடிமையெனவாடினேன்யான்,
தேடினதோர் தேட்டாமைநாலேநாலு செகமெல்லாம்நிறைந்து
நின்றதெய்வமொன்று, கூடினதோர்கூட்டெல்லாந் துருசினாலே
கோடிகுருவாடலாங்குறிப்பாய்ப்பாரே. (௧௬௮)

பாரப்பாநாலுவிதத்தொந்தமேறும் பருவமுடன்நூறுமட்
டும்பண்பாய்க்கேளே, சேரப்பா வொவ்வொன்றிற் றெழிலோ
கோடி செகச்சாலமிதிலாடித் தேர்ந்தபின்பு, கோரப்பாநாலையு
நீமனதுநூலால்க் குறையாமலாறுதளங்கூட்டியாடும், ஆரப்பா
வுனக்கிடு யிதுவே யார்க்க மறைகிறேன் பறிக்குருவை யறைகி
றேனே. (௧௬௯)

அறைகிறேன்பஞ்சசுத்திக் குருவால்வீர மணைத்தரைத்து
பறிநாலுக்கொன்றேபூசு, அறைகிறேனவியிட்டுக்கலந்தபின்ன
ரப்பனேயண்டத்தோல்கீழ்மேலிட்டு, அறைகிறேன்புடமொன்
றுபோடுநீதான் ஆகாகாபறியெல்லாம்பொருமிநீரும், அறை
கிறேனிக்குருத்தானடவேதை ஆத்தியடிவீற்றிருந்தோனறிவா
ய்த்தானே. (௧௭௦)

அறிவானவிக்குருவில்வீரங்கூட்டி யாதிகுருக்கண்டரையுஞ்
சத்தேபோடு, பிறிவானவாகாசமெழுகிற்பூசிப் பேராகவாட்டியி
னைதயுருக்கவாடு, நெறிவாகவிம்மணித்தானூற்றுக்கோடு நேர்ப்
பாகச்சூதமிட்டாற்பிடித்துக்கொள்ளு, பொறிவானநாகரசஞ்சூ
தமொன்றாற் போக்கோடேநூறுதொந்தப்புகட்டியேத்தே. ()

வத்தையிலேவெகுகோடிதொழிலோவுண்டு வென்னாலேமு
டியாதுவேதுசொல்வேன், மாத்தையிலேசெந்தூரஞ் செய்தாயா
னல்வழங்கியதோராயிரத்துக்கொன்றேயோடுஞ், சேத்தையிலே
களங்கமொடுகுருவைப்பண்ணு திற:மாகமணிபண்ணுசேருந்தங்
க, மாத்தையிலேயிதினாலேதொழிலோமெத்த மறிந்துபார்கைமு
றையைமறிந்துபாரே. (௧௭௨)

முறையாகநாகரசமுருகும்போது மூட்டப்பாசரித்தங்கமிர
ண்டுநேரிற், குறையாதேயிரண்டெடைக்குநிமிளைபோடு குலாவி

யதையுருக்கியொருமணியாய்வாங்கி, யறையாதேகண்டவெள்ளை வீரம்பூர மப்பனேகுருவண்டுபுழுகோடைந்து, நிறையாகமணிக் கோர்க்கத்தூக்கிப்பூசிநேர்மேலேகற்பூரச்சிலையைப்பூசே.(௧௭௩)

பூசியப்பாசிலைசெய்துபுடத்தைப்போடு புகழானநாகரசங்கு ருவுமாகுந், தேசியப்பாவிதின்பேருவாதத்தேசி சிறந்தபர்சைத் தோடுமுன்னேசிலையேபொன்னுங், காசியப்பாசரசோதி யமுனை மூன்றுங் கண்ணிமைக்குள்காணவொருகுளிகையாக்கும், விசி யப்பாகுருவலையையெறிந்தாயானால் வேதையென்றமீனெல்லாம் விளங்குந்தானே. (௧௭௪)

ஊஞ்சல் மகிமை.

விளங்குதற்றூஞ்சலிலே கோடிகோடி விரித்துரைக்கவெ ன்னாலுமுடியாதப்பா, பிளங்குதற்கேயாதியென்றதிருசுபாருபே ரண்டம்போட்டொன்றிற்பிடிநீருகு, முளங்குதற்குப் பதமளவு மேற்றிக்காட்டு மூதண்டக்குளிகையுமாமூட்டிப்பாரு, வவங்குத ற்குயிதுவாதமல்லாயானால் வஸ்துவென்னவிதுக்கீடோவகுத்துப் பாரே. (௧௭௫)

வகுத்திந்தவூஞ்சலிட மகிமைசேளு மகத்தானபூரணமாம் திதக்கொம்பில், பகுத்தானாற்சரிதைமுதல்ஞானமட்டும் பாங்கா னசங்கிலியா லதிலேபூட்டி, மகிழ்ந்ததன்மேற் சதாசிவனைப்பல கையாக மகத்தானநால்வரும்நாற்கால்களாகத், தொகுத்ததன் மேலுன்மனைத்தாயிருந்தேவூஞ்சற் சுத்துகிறாள்செகசாலஞ்சுத்து றாளே. (௧௭௬)

சுத்துகிறதெங்கெயெனிலோமூன்றாம்வீதி சுகமாகயான்பா ர்த்தேன்நீயும்பாரு,பத்துறதுமுந்திமுந்திமூன்றாம்மூலம் பலித்து தென்றாலாறுமனைபகற்போற்காணு, மத்துறதுமுந்திமுந்தி யங் கென்றானுமடியிலேபளிச்சென்னமட்டுமப்பா, எத்துறதுபோ ற்பார்த்தாலேலதுமில்லை யேழைமதிபோகாதேயிறுக்கிப்பாரே. ()

இறுக்கையிலேகுப்பென்றுநந்திகாணி லிசைந்திரண்டுகோ ணத்திற்கணேசன்சத்தி, உறுக்கையிலே கண்டிடுவாய் குட்டி கொண்டு வுற்றுப்பார்சத்தியெட்டுமொன்றாய்க்காணுங், குறுக் கையிலேமட்டியொன்று யாறுங்காணுங் கூர்ந்துபார் நால்வரையு ங்குறிப்பாய்க்காணு, மறுக்கையிலே மனமானால் மைந்தாகாணு மாயம்வந்துமேலிட்டால்மண்ணாப்போமே. (௧௭௮

மண்ணேதுநீரேது தீயுமேது மகத்தானமாருதமும் வானுமேது, கண்ணேதுமூக்கேதுகாதுமேது கலந்துண்ணும்வாயேது பரிசமேது, பண்ணேதுமதன்பேரேயிதுக்கும்பேரு பருவமுடனுன்னிடத்தேபாருபாரு, வொண்ணேதுவென்றுரைத்தால் மனமேயென்று முத்தமனேமாண்டவிடமுஞ்சலமே. (௧௭௬)

ஊஞ்சலிலேயென்தாயாரிருந்தேயாடி யொழிந்துணர்ந்தயென்மனதைக்கயிருய்ப்பூட்டி, யஞ்சலிலேயரனிமுக்கவாத்தாளாடவண்டபகிரண்டமெல்லாமாடவாடப், பஞ்சலிலேபூரணமுங் குலுங்கியாடப் பரமுதலாய்வராட்டியனும்பதறியாடத்; தொஞ்சலிலே சனகாதிசூழ்ந்துமாடச் சுத்தசிவசித்தர்களுந் துதித்தார்காணே.

துதிக்கையிலேநாதவொலிநின்றுவோங்க சுகாதீதப்பூரணத்தேசுமூன்றுசொக்கி, மதிக்கையிலேமனமிறந்த நிராகாரத்தை வாய்திறந்து சொல்லுதற்குநாமமேது, பதிக்கையிலே நிற்குணமோநிரஞ்சனமோகாணேன் பாங்கானகரையில்லாப் பதியோகாணே, னுதிக்கையிலேமூலத்தேநின்றேயறி னேடினேனுற்பனத்தைக்கண்டிலேனே. (௧௮௧)

கண்டிலேன்பூரணத்தின் கரையேயாருங் கைமுறையாய்ச் செனகாதிகாணார்காணு, ரொன்றிலேமூலகுருத் தானுங்காணுரோகோகோசுகர்முதலாய்ச்சித்தர்காணார், விண்டிலேன்நிஷ்களத்தின்கரையைச்சொல்ல வேதாந்தவந்தமுதல் விளம்பக்காணே, னண்டிலேன்மனமோடி யண்டிற்றுறு லவ்விடத்தே லயித்துநின்றேயமுழ்ந்துவாரே. (௧௮௨)

அமுழ்ந்துவதுமெவ்வாறேறுவென்றுகேட்கி லளவுமிஞ்சிமதுவுண்டலகிரிபோலே, அமுழ்ந்துவதுமெவ்வாறேறுவென்றுகேட்கி லப்பனேசோதிமரப் பாலைப்போலே, அமுழ்ந்துவது கோரக்கர்கற்பமிஞ்சி ,லறிவொடுங்கி மயக்கம்போலாகுமாகும், அமுழ்ந்துவதுயிதுமூன்று மப்போவல்ல ஆனந்தப்போதைமெத்த வதிகந்தானே. (௧௮௫)

அதிகமென்றுலெம்மட்டுமென்றுயாரு லாதியில்லையந்தமில்லையளவுமில்லை, பதிகமென்றபூரணமேதெய்வந்தெய்வம் பலதெய்வமொன்றுமில்லைபாருபாரு, உதிகமென்றதாதுவெங்கேமூலத்துள்ளே உத்தேறியந்தமதுபோதம்போதம், விதிகமென்றவிட்டகுறைவந்தாலெய்து வெறும்வாயையலத்துநின்றவீணர்பாரே. ()

வீணர் திருட்டுவாதி.

வீணராயலத்துவதுமேமேதாவென்னில் விட்டகுறைதுடர்ந்தபடிவிளங்கிக்கேளு, பூணராய்ப்பூண்பார்கள்மூலத்துள்ளே பெண்ணுசைபொன்னுசைமண்ணினுசை, ஆணராய்க் காமியத்தைச்சுழன்றுநின்றே யாச்சரியம்வேதாந்தமனைத்தும்பார்ப்பார், காணராய்க்கண்டுவிட்டோம்ஞானமென்பார் கழுதைகள்தான் மெத்தவுண்டுகண்டுகொள்ளே. (கஅடு)

கண்டுகொள்ளுமிப்படியேவாதநூலைக் காப்பறியார்வாதமெல்லாங்கண்டோமென்பார், பெண்டுகொள்ளுமுன்னேதான் பிள்ளையைந்துபெற்றுவிட்டேனென்றுசொன்னவாறுமொக்கு, முண்டுகொள்ளவாயுமில்லைவறுமைமெத்த வுவட்டித்துப் பாற்சோறுமென்பார்போலச், சிண்டுகொள்ளுஞ்சிகண்டிமெத்தவுண்டுவுண்டு திறமாகச்சீஷரைநீதெளிந்துபாரே, (கஅசு)

தெளிந்துநீயவர்குணத்தைப்பார்க்கும்போது செப்புகிறேன்திருடருட திறமையெல்லாம், வளிந்துநீநூற்படிக்கி லொவ்வொன்ருக மவுனம்போற்றிருடியவர்வரைவாரெட்டில், நளிந்துநீசொல்லாதேகருவைப்பா நலம்பெறவேசரக்குமுறை யரைப்பும்பார்ப்பார், ஞெளிந்துநீகருமுறையைமாறிமாறி யுத்தமனேகாட்டாமலூட்டிடாயே, (கஅஎ)

ஊட்டுகையிற் கருபார்ப்பார் செயநீரப்பா ரூதையிலேவரிசைமுறையுணிப்பார்ப்பார், நாட்டுகையிற்குருத்தொழிலைநன்றுய்ப்பார்ப்பார் நலமானசெந்தூரபதத்தைப்பார்ப்பார், நீட்டுகையில்சவலோகம் வாங்கிற்பார்ப்பார் நினைவாகப்புடமுறையையுற்றுப்பார்ப்பார், ஆட்டுகையிற்குளிகையுடசாரணையைப்பார்ப்பாரங்கங்கேகருமறைத்தேயாடுவாடே. (கஅஅ)

ஆடுகையிற்பார்த்ததெல்லாம் வந்துதென்று மகிழ்ந்துகொண்டேனெனச்சொல்லி யப்பாற்செய்வார், நாடுகையிலொன்றேடுமொன்றுதப்பி நலமழிந்துதொழிலொன்றுநன்ருகாது, ஊடுகையில்மறந்தேனேகருத்தப்புண்டோ யூட்டுகிறவரிசையிலேயுன்றினேனே, கூடுகையிற்குறித்தெட்டைப்போட்டிட்டேனே சோர்வைதப்பிப்போச்சென்றுகூறுவாரே (கஅகூ)

கூறுகிறசீஷரைநீ சேர்க்கவேண்டாங் கோடிதனமீந்தாலுங்கும்பிட்டாலு, மாறுகிறபுத்திகண்டால்முகம்பாராதே வாதமு

ண்டோவில்லையென் றுவழியைப்போக்கு, தேறுகிறபுத்தியுள்ள
சீஷனானால் திருட்டுவகைபோட்டுமெள்ளசெய்யமாட்டான், யா
றுகிறகுணம்பாருவணக்கம்பாரு வறிந்தந்தக்குணங்கண்டேயணை
த்திடாயே. (௧௯0)

அணைத்திட்டேனிப்படிநான்பார்த்துபார்த்தே யைந்நூற்றி
னுடைம்பத்தேழுபேரைக், குணத்திட்டங்கண்டபின்புகற்பமீந்
தேன் கொள்கையவனுரைத்தபின்புகுளிகையீந்தேன், துணைத்தி
ட்டந்தப்பாமற்கேமன்விதி சொட்டோடேயாடவிட்டுத் துறை
யுஞ்சொன்னே. னிணைத்திட்டசித்தர்முன்னேபேசிவென்று யென்
பிள்ளையென்னிடத்தேவந்தார்காணே. (௧௯௧)

காண்டபிறப்பு சித்தரானது.

வந்தாரேயைந்நூற்றேடைம்பத்தேழ்பேர் மகத்தானபோ
கருக்குநாங்களுண்டு, தந்தாரேயருளோடுபொருளுமாசான் சவு
சஷ்டிவித்தையுமன்சார்வுசொன்னார், விந்தாரேகருவூரார்சம்பாரெ
ன்றூர் வெடுத்தாடியண்ணருமேமாவெறிந்துபோட்டு, பந்தாங்கு
ளிகையொன்று வைத்துக்கொண்டு பரத்தோடுகூடிநின்று பழகி
னாரே. (௧௯௨)

பழகினதோரன்னருக்குமடியேனுக்கும் பரியாசச்சண்டை
முன்னேபழக்கமுண்டு, தழகினதோரெனையழைத்துப் போகனு
யன் சகலமுறைகைகாட்டித்தந்துயாண்டா, ரிளகினதோர்சேத்
துக்குள்கம்பம்போல விடித்திடித்துச்சோதித்தேனேமூலட்சம்,
புளகினதோர்மூலத்தின்நந்திசொல்லப் போக்கெல்லாம் பார்த்த
லைந்துபொங்கினேனே. (௧௯௩)

பொங்கியுள்ளேகொள்ளாமலிந்தனாலைப் போக்கோடேமூ
ன்றுகண்டம்புகட்டினேனான், தங்கியுள்ளேபொய்களில்லை கவடு
மில்லைத் தவறுவகையொன்றுமில்லைசாதித்தேனான், அங்கியென்
றமூலத்தினுசான்சொன்ன ராத்தாளுமப்படியே யருளிச்செய்தா
ள், கெங்கையென்றதாயாரைச் சடையில்வைத்தோர் கேள்மக
னேயென்றுசொல்லிக்கேட்பித்தாரே. (௧௯௪)

கேட்பித்த குருவாரு சிகாரனுயன் கெடியானதாயாருமகா
ரச்சத்தி, காட்பித்தரெண்டுமொன்றாய்க் கூடிநிற்கில் நந்தியென்
றதருவாச்சுநாமமப்பா, மூட்பித்த ஞானியென்று பேருமாச்சு

முதகவசித்தனென்றுபேருமாச்சு, ஊட்பித்தவிட்டகுறையாலே யாச்சு யுற்றகுருனுதனெய்தயுண்மைதானே. (௧௯௫)

உண்மையுள்ளகுருபதத்திற் றெண்டபென்னு வோடிமுன் னேகேளாதே யொன்றுமாகா, வண்மையுள்ள குணங்கண்டால் தானேசொல்வார் வாய்திறந்துகேட்டதினுல்வருவதில்லை, தண் மையுள்ளகுணமாகியேவற்கேளு சங்கற்பத்துன்மார்க்கச் சட் டைபோக்கு, நண்மையுள்ளபுத்திகொண்டுகோருகாரு ணேக்கறி ந்துவார்த்தைகண்டுபேசிடாயே. (௧௯௬)

பேசிடவேகாலம்வந்துநேர்ந்துதானுற் பேரானமூலத்தைப் பேணிச்சொல்வா, ராசிடவேவங்கென்றுயுள்ளேபூரி யப்பனேசி ங்கென்றுமூலங்கும்பிக், கூசிடவேரேசகந்தான்வெளிகொண்டா லுங் குழுறியுள்ளேரேசித்துக்கூட்டுகூட்டு, வேசிடவேசலித்தாக் காலொன்றுமில்லை வேளைகண்டுமிடைகலையில்விரைந்துகூடே. ()

கூடுவதுமெக்காலமெப்போவென்றுக் கொள்கிறின்றுயலையா தேகூறக்கேளு, நீடுவதுயன்னமரைதண்ணீர்கால்தான் நிலைக்க வுண்ணுவொருபொழுதுநீதானப்பா, ஆடுவதுமிடத்தியங்கிலப்பா லூடேயுற்றுணர்ந்துமனமொன்றுயூணிப்பாரு, தேடுவதுவேறில் லைமூலஞ்சித்தி சிவசத்திரெண்டுமொன்றுய்த்தெளிந்தசித்தே. ()

சித்தசித்துரெண்டுமொன்றுய்ச்சேர்ந்ததல்லச் சிறப்பானமூ லத்திற்செப்பக்கூடா, நித்தசுத்தபுத்தமுத்தநினவுமல்லா நிராகா ரநிற்குணமேகெருப்புமல்ல, அத்தசுத்தநிஷ்க்களத்தி னுதியல்ல னவ்வென்றுமவுனமுத்துமூலம்பார்த்தால், பத்தசுத்தநிராகாரம் படிகம்போல பார்க்கிறதும்பாராதுரெண்டுபோமே. (௧௯௯)

யோகப் பருவம்.

இரண்டாகிநின்றதப்பாவாசிதானு மீந்துடனேயொன்றுகி யதுவும்போச்சுப், பண்டாகப்பழகினதுமிதுவேமார்க்கம் பார்க் கையிலேகற்பமுண்டுபோருபாரு, தண்டானசுழிமுனையாம் ஞான யோகஞ்சார்ந்தவற்குமரசானயோகமாகும், நன்றுனவகாரத்தை யுள்ளேபூரி நலம்பெறவேசிகாரத்தைக்கும்பித்தேதாங்கே, ()

ஒங்கையிலேநினைவாகயோங்கியோங்கி யொருகடிகையிருக டிகைநின்றுதானுல், வாங்கையிலேபளிச்சென்று மூலத்தீதான்

மபங்கிபதிற்புக்கிடிலோ வருஷம்நாலாம், பாங்கையிலேயிதுவு றைத்தாலாறும்பாரு படிப்படியாய் நிஷ்களத்திற்பாங்காய்த்தோ ணுந், தேங்கையிலேகுளிர்ந்தமதிவெள்ளஞ்சிந்துந் தேகமுமோ பொன்னிறம்போற்சிறக்குந்தானே. (௨0௧)

கிறப்பானசிவயோகமென்றுபேரு சிறந்திட்ட குண்டலித் தாயென்றுபேரு, சிறப்பானவாசியென்றுமிதுக்கேபேரு சீரான சுழியோகமென்றும்பேரு, திரப்பானயரசனென்றுமிதுக்கேபே ருசேர்ந்துணர்ந்தசபையென்றுமிதற்கேபேரு, வுறப்பாகவிதை ப்பார்த்தால்ஞானசித்தி யுத்தமனேகாயசித்தியுணர்ந்துபாரே. ()

உணர்வற்றுவுடலற்றுயோகமற்று யோடுவதுயாடுவதுமிர ண்டுமற்று, பணர்வற்றுநினைவற்றுப்பாசமற்றுப் பார்க்கிறதும்பா ராதுமிரண்டுமற்றுச், சுணர்வற்று லெச்சையற்றுக் கூச்சமற்றுச் சொல்வதுவுஞ்சொல்லாதுமிரண்டுமற்று, நிணர்வற்றநிஷ்க்களத் தில்நிலைத்துபோகும் நேராகக்குண்டலியைநிலைத்துப்பாரே. ()

நிலைத்திட்டால்காயசித்தியோகசித்திநேரானவாதசித்திஞா னசித்தி, குலைத்திட்டால்மாயசித்திவந்துகூடுங் குழைஞ்சலைவா ன்பிறவியிலே கூடமாட்டா, னலைந்திட்டப்பேய்மனதுமண்டோ ட்டாதே யதினாலேமென்முறைக்கப்பூசைசொன்னேன், கலைத்தி ட்டமாகநின்றுமாயிபாதங் கைமுறையாய்ப்பூசித்து மதுவையு ண்ணே. (௨0௪)

உண்ணவென்றேனன்மதுவையேதுக்கப்பா வுரைத்துநன்று யுட்புகுதவேணுமென்று, மன்னவென்றுசிலபேர்கள்செல்வாரப் பா மாய்கையிலேபெண்ணோடே மடிந்துமாய்வார், வண்ணவே ண்டாவர்மத்தைக்கெடுத்தாரையோ மாயிபங்கேநில்லாமல்மறை ந்துபோனாள், தண்ணவேண்டாங்கூத்தாலேகெட்டுப்போனசண் டாளர்செய்வதென்னநரகந்தானே. (௨0௫)

தானென்றவெளிப்பூசையாலேயுண்டு சமரசமாய்மூலத்தை ச்சார்ந்தபின்பு, வானென்றிப்போச்சுமனம்பூசைபோச்சு வாச னையும்பூசனையும்மண்ணாய்ப்போச்சு, கானென்றேயிருந்தாலென் னாட்டில்வாழ்ந்தென் கண்கெட்டகுருடன்முன்னிற்பார்போச்சு, ஊனென்றவுடல்போச்சுப்பொன்போலாச்சே யுத்தமனேயிதுபா னதையுன்னிப்பாரே. (௨0௬)

அங்கோலவிதைத் தைலத்தால் லிங்கங்கட்டு.

உன்னியுன்னிப்பார்த்தாலும்படித்தோராலே யுரைத்தாலுமுரைக்கொட்டாதென்றுசொல்லி, மன்னிமன்னிக்காடுசென்றேயிலையைத்தின்று வாயுவங்கேபூரித்துவழியாகாது, இன்னமின்னமொன்றுமினியெண்ணவேண்டா மெனையாண்ட போகர்முதலெல்லாருந்தான், அன்னையன்னையெனக்கேட்க வாத்தாளைத்தானவள்சொன்னவாதமங்கேகோலமாச்சே. (௨௦௭)

வேறு.

அங்கோலவிதைதானப்பா வடவாகப்படிதானென்று, பங்கோலக்குன்றிதானும் பருவமாய்ப்படிதானென்று, தங்கோலவுரலுக்குள்ளே தனிரெண்டுமிடித்துநன்று, யொங்கோலமணியாம்நல்ல வுயர்சாறுநிரம்பவாரே. (௨௦௮)

வார்த்துமேநனைத்த பின்பு வாகுட னரைத்துக்கொண்டு, கோர்த்ததின்மருந்துபோடக் கூறுறேன்கேளுகேளு, நார்த்ததிற்கெந்திரெண்டு நலங்கிய சாரம்ரெண்டு, போர்த்ததிலிங்கமொன்று புகழானகாரமொன்றே. (௨௦௯)

ஒன்றானபலங்களாறு முறவாகவெருக்கம்பாலில், நன்றாகவரைத்துக்கொண்டு நாட்டுமுன்மருந்தோடொக்கத், தன்றாகப்பிசைந்துவொன்றாய்த் தனிக்காசுபோலேவில்லை, யொன்றாகப்பிடித்துநன்றா யுலர்த்திடாயுலர்த்திடாயே. (௨௧௦)

உலர்த்தியவில்லைதன்னை யுறவாகக்கலையத்தூட்டி, மலர்த்தியகலையத்தூரில் வாகாகத்தமரும்போட்டுப், பிலர்த்தியதமருவாய்க்குப் பிறம்பொருகலையம்வைத்தே, யலர்த்தியகுழியில்வைத்திட்டதன்மேமேலசீலைசெய்யே. (௨௧௧)

செய்தபின் புடத்தைப்போடு தேவியைத் தியானம்பண்ணி, நெய்தபினிரணந்தானு நேராகவிறங்கும்பாரு, கய்தபின் தைலத்துள்ளே களஞ்சுதான்துருசிச்சுண்ணம், அய்தபின்போடு நன்றா யப்பமேனகுப்பிவைய்யே. (௨௧௨)

வைத்திட்டதைலந்தானும் வளமாகலிங்கத்துக்குப், பைத்திட்டநாலுதூக்கம் பரிவாகச்சுறுக்குப்போடு, கைத்திட்டமுழுக்கட்டாச்சு காட்டிடுலோகத்துள்ளே, யைத்திட்டபத்துக்கொன்றா யிணைத்திடாய்மாற்றேறுவெட்டே. (௨௧௩)

தேவதாளித் தைலத்தால் லிங்கங்கட்டு.

எட்டியதேவதாளி யிலகுமங்கோலத்தோடு, மட்டியபூவரசு வளமானகுன்றியோடே, பொட்டிவாலுளுவையோடு வுயரைஞ்சுவிரைதானப்பா, பட்டியவகையொன்றென்று படியொன்று கூடக்கூட்டே. (௨௧௪)

கூட்டியபடிகளைந்துங் குமுறவேயிடித்துக்கொண்டு, வூட்டியமேனிச்சாறு வுறவாராயெருக்கம்பாலுங், காட்டியமைம்போனன்றாய்க் கலரவேயரைத்துவைத்துத், தீட்டியமருந்துபோடத் திறஞ்சொல்வேன்திறஞ்சொல்வேனே. (௨௧௫)

திறமானகெந்திநாலு சேர்ந்தமால்தேவியொன்று, வுறமானசாரமூன்று வொடுங்காதயிணங்கன்ரெண்டு, நிறமானகாரம்ரெண்டு நேரானகல்லுப்பொன்று, அறமானவிடைகளெல்லா மப்பனேபலந்தான்தூக்கே. (௨௧௬)

தூக்கியேகள்ளிப்பாலிற் சுகமாகவரைத்துநன்றா, யாக்கியமருந்தோடொக்க வணைத்திதையொன்றாய்ச்சேர்த்துத், தாக்கியேகாசுபோலே சமனாகவில்லைபண்ணிப், போக்கியகலையத்திட்டுப் பூப்புடத்தைலம்வாங்கே. (௨௧௭)

வாங்கியதைலத்துள்ளே மாட்டவேமருந்துகேளு, பாங்கியதுருசிச்சுண்ணம் பரவியசாரச்சுண்ண, மோங்கியகாரச்சுண்ண மொவ்வொன்றுகளஞ்சிமூன்று, தாங்கியேகொட்டிக்கிண்டித் தாய்ப்பதம்பூசிப்பாயே. (௨௧௮)

பூசிக்கவல்லாயானாற் புரட்டியேலிங்கம்வாட்டு, ஆசிக்கமுழுக்கட்டாகு மணைப்பதுநவலோகத்தில், தேசிக்கத்தாதுவெல்லாஞ் செணத்திலேவாட்டக்கட்டும், வேசிக்கவினத்தைக்கண்டு விரவியேவேதைபாரே. (௨௧௯)

இரும்புக் களங்கம்.

பாரிந்தத்தைலம்பட்டாற் பதையாமற்சூதஞ்சாகும், பாரிந்தத்தைலம்பட்டாற் பரிவுடன்வீரஞ்சாகும், பாரிந்தத்தைலம்பட்டாற் பருநாகம்வங்கஞ்சாகும், பாரிந்தத்தைலத்துள்ளே பதையாமலிரும்புசாமே. (௨௨௦)

சாமாவதேதுலோகந் தண்ணிபோலுருகியாடுந், தாமாவதேதுகேளு தங்கம்போற்கனலிட்டாடுங், காமாவதேதீங்கெல்லாங் கபளிக்குநீட்டநீட்டப், போமாவதேதுலோகம் பூட்டிநீயிருபத்தொன்றே. (௨௨௧)

ஒன்றேனும்வீரம்லிங்க முடன்சிலைமாலின்தேவி, தொன்றேனும்ராஜவர்த்தகஞ் சிறந்திடுந்துத்தஞ்சூகப், பன்றேனும்மெழுதானும் பாங்குடன்வராகனேழு, கன்றேனும்பறியேமூன்று காட்டிடாய்காட்டிடாயே. (௨௨௨)

காட்டியவிரும்புதானுங் கடும்பலமூன்றுவைத்து, ஓட்டியேயுருகும்போது வுறப்போடுபறிமைநீயும், நீட்டியேயெழும்பாநிலைத்திடவொவ்வொன்றாகக், கூட்டியேகாரத்தோடு கொடுத்திடவிழுங்கும்பாரே. (௨௨௩)

பாரிந்தயிரும்புதானும் பருகியகளங்கமப்பா, கோரிந்தரவலோகத்திற் கொடுத்திடாயிருபத்தொன்று, தாரிந்தமாற்றுப்பத்து தப்பாதுபாருபாரு, ஆரிந்தவிரும்பின்வேதை யசையாதுவுப்புவொன்றே. (௨௨௪)

குன்றித் தைலம்.

அசையாமலமுரியொன்றே யப்பனேதைலஞ்சொல்வேன், பசையானசாரம்ரெண்டு பருகியசீனம்ரெண்டு, யிசையானயிணங்கன்ரெண்டு யியல்புலமாறுங்கூட்டி, தசையானநாறும்பூவைத் தனிப்பலம்நாலும்போடே. (௨௨௫)

போட்டிதைக்கல்வத்துள்ளே புகழானவமுரிவார்த்தே, யாட்டிதைநாலுசாம மப்பனேரவியில்வைப்பாய், நீட்டிதைவற்றவற்ற நிரைநிரையமுரிவார்த்துச், சாட்டிதைமெழுகுபோன்ற தனிப்பதம்பார்த்துவாங்கே. (௨௨௬)

வேறு.

வாங்கிவைத்து மாட்டவின்னமருந்துகேளு வளமானகுன்றிமணிபடியோநாலு, தாங்கியிடித்திதற்குள்ளே மேனிச்சாறுதூம்பவிடுவூறுதற்குச் சார்ந்தபின்பு, வோங்கியரை தோலோடு மெழுகுபோலே வுழுன்றெடுத்துமுன்மெழுகுங்கூடப்போட்டுத், தேங்கிரெண்டும்பிசைந்துறவாய்வில்லைபண்ணிச் சிதறுமலுலருந்தக்குரவியிற்போடே. (௨௨௭)

போட்டெடுத்துக்கலயத்துளிதனைவைத்துப் புகழ்பெறவே யடித்தூரிற் றமரேபோடு, காட்டெடுத்து வாய்மேலே சில்லுப் போட்டுக் கடுங்குழிக்குள்கலையமொன் றுகவியவைத்து, நீட்டெடுத்தசந்துக்குமண்ணைசெய்து நிலைநிலையாயெருவிட்டுத்தீயைப் போடு. ஆட்டடுக்கப்பற்றிபபின்னுமிமைப்போட்டு வுறவாகவாயி பதமுணிப்பாரே. (௨௨௮)

ஊணியது வெந்துநன்றாயுறுதியாகி வுற்றுப்பார் பதறாதே குளிருமட்டும், பேணியதையெடுத்திடக்கிழ்க்கலையத்துள்ளே பெருகியந்தத்தைதலமதுபெருகிநிற்கும். வாணியிந்தத்தைதலத்தாற் கட்டுமார்க்கம் வகையுரைத்தாள் வகைகளெல்லாம் வளமாய்ச் சொல்வேன், தூணிலிங்கஞ்சுருக்கிடவே கட்டிப்போகுந் துடிப்ப டவும்வெள்ளைசாங்கெவுரிசாமே. (௨௨௯)

சாகுமப்பாமால்தேவிசிலையும்பாரு தனியைந்துங்கட்டிடவே சகலங்கட்டும், வேகுமப்பா பேரண்டந்தீயில்லாமல் வெருவிய தோர்தைலத்தின்விளக்கங்கேளு, ஆகுமப்பா பாஷாணமைந்து தானு மதற்குள்முன்செய்வதுதானறையக்கேளு, போகுமப்பா ஆறலெல்லாம் புழச்சாறாட்டு டரிந்தபின்பு முலைப்பாலைப்புகழ ஆட்டே. (௨௩0)

ஊட்டியபின் வாட்டிடவுற்பனமேகேளா யுயன்றிணங்கனி ருகாரமுறவாமுப்புத், தீட்டியபின்சாரமொடுகெண்டராறுந் திகை யாதேபலமாறுஞ்சேரக்கூட்டி, நீட்டியதைமூன்றுபங்காய்வைத் துக்கொண்டு நெடுங்கம்பிலிங்கமதுபலமேயொன்று. கூட்டியி தைக்கரண்டிக்குள்பங்குவொன்று கொடுத்துமெள்ளப்பிரட்டி யுண்ணக்குமட்டிவாட்டே. (௨௩௧)

வாட்டிடுநீயிப்படிதான்ரெண்டுபங்கும் வயிரம்போலிங்கம துவளமாய்ச்சாகும், நீட்டிடுநீயிம்முறையைப்பின்னுமப்பா நி லைநிலையாய்ச்சுருக்கோடுவாட்டித்தீர்த்துக், கூட்டிடுபின்தைலத் தைச்சுருக்குநீயுங் கொடியகட்டாமம்மம்மாகூறப்போகா, ஆட்டி டுபின்கட்டியதோராச்சரியங்கேளா யம்மம்மாகுன்றியினுச்சரிய ந்தானே. (௨௩௨)

தானென்றே முன்சொன்னதயிலம்போக்கிச் சாதிக்கும்பா ஷாணந்தனக்குமப்பா, கானென்றேசுருக்கோடுகாரஞ்சாரங் கை விட்டுமறக்காதேமறந்தாயானல், வேனென்றேயூறலருவேதை

யோடா வேதைவிட்டாலேகமெல்லாம்விழலாய்ப்போகும், பா னென்றேயுண்டமைத்தாளாத்தாள்சொன்னாள் பார்த்தவர்க்குவா தரசம்பலிக்குங்காணே. (௨௫௩)

காணுநீகட்டியதோர்லிங்கந்தன்னைக் கைமுறையாய்க்காட் டுகிறேன் வேதைபோடப், பூணுநீதங்கததிற்சமனாயூட்டு போ டுங்கால்வெண்காரம்புகட்டிப்போடு, ஆணுநீதங்கமது ரசமேயூட் டி லடித்துடனேநொறுங்குமதுவப்பாபாரு, தாணுநீதங்கமதுகு ருவேயாச்சு சாதிக்கும்வித்தது தான்தயவாய்ப்பாரே. (௨௫௪)

தயவுடனேயிக்குருவைச்செம்புமூன்றிற் றுக்கொன்றுதனிச் செம்புவுடையும்பாரு, தயவுடையதுய்யானிற் பத்துக்கொன்று கூட்டிந்தச்செம்புதன்னைத்துலக்கமாகு, மயவுடையமாற்றேழு மப் பாகாணு மசையாதுவுப்புக்குமடித்துப்போகா, ஒயவுடையவன் னிகெற்ப மோடும்வேதை யுற்றுப்பார் காயசித்தி முறைக்கும் பாரே. (௨௫௫)

உறைத்துண்ணச்சித்தருக்குமண்டலத்தினுள்ளே யொருப ணங்காண் தினமுண்ணும்பெண்ணைப்போக்கி, மறைத்துண்ணும் புளியுப்பைவாசனையைப்போக்கி மகத்தானகற்பமிதுவல்லாலுண் டோ, நிறைத்துண்டாரென்னிலமூலமூர்த்தி நிலவரமாயுண்டுசட் டைநீக்கிப்போட்டா, ரெறைத்தொன்றுவாசியெல்லாமுள்ளேபுக் கி விருந்துண்ணுங்கற்பத்தையெறப்பாரே. (௨௫௬)

ஏறவெங்கேபார்ப்பதுதா னென்னவேண்டா மெளிதாகவா தாரமேறிப்பாரு, தேறவெங்கேகண்டுநீதெளிந்துதானாற் சித்தா குஞ்சிவனெங்குஞ்சிதறிப்போகா, ஊறவெங்கேபூரணத்தி லாணி யேறு யளவற்றநிற்குணத்தையப்பாபாரு, மாறவெங்கேயொன் றுமில்லைமனதுமில்லை மருவிநிற்குமப்புமுப்புவளம்போற்காணே.

காணுமந்தமால்தேவிக்கட்டையப்பா கலருசமன்சவ்வீரங்க ல்வத்திட்டுப், பூணுமந்தநீறேடுபொரிகாரம்போட்டுப் புகழ்பெற வேயரைத்துநன்றாய்ப் பொடியாய்வில்லை, தோணுமந்தப்பணம் போலேகட்டிவைத்துச் சுகமானதங்கத்துக்கிடையேயூட்டா, யா ணுமந்தத்தங்கத்தைச்செம்புரெண்டி லடவாகவொன்றுவிட்டே யாண்மைபாரே. (௨௫௮)

ஆண்மையாஞ்செம்பெடுத்துவெள்ளிபத்தி லடவாகவொன் றீயவப்பாலெட்டு, கேண்மையாய்ச் சொல்வதல்லபார்த்துச்சொ

ன்னேன் கெடியானமால்தேவிவிரும்பினூட்ட, வெண்மையாயுரு
கியேயியம்போலா மெளிதானவியமல்லவேறும்வேதை, தோண்
மைபாய் நாகமிதி லிங்கம்போடு சுகமாகத்திசைமாற்றஞ்சூட்டு
றாறே. (௨௩௯)

றாயிடுவதேதில்லையெண்ணவேண்டா நுகர்ந்தநவலோக
த்தி னுகர்ந்துபாரு, வெறிட்டவே மனோசிலையின் வேதைகேளு
விளங்கியதோர்மதியெட்டுச்செம்புநாலு,தேறிடவேநாகம்ரெண்டு
தங்கம்ரெண்டு சிறந்துநன்றுயுருகும்பபோசிலைதானென்று, கூறி
டவேயிட்டேதுகுமட்டிலூது குறையாதுதிசைமாத்துக் குறிப்பாய்
பாரே. (௨௪0)

குறிப்பான வெள்ளைதனைவங்கத்தாடே குறையாமற்சமன்
போடுகுடிலஞ்சாகும், நெறிப்பானகுடிலத்தைவெள்ளிரெண்டில்
நேரிட்டுப்பொடியாகும்நிலைக்குஞ்சூதம்,மறிப்பாகச்சமனூட்டுமா
ண்டுகட்டு மாண்டகுருவாமட்டுமறைவிற்றீயைப், பொறிப்பாகம
ணல்மறைவிற்போட்டுவாநீ புகழ்பெறவேவெண்கருவாத்போடு
வாயே. (௨௪௧)

போட்டுவாமுப்பதிலேசிதஞ்சூதம் புகழ்பெறவேசெயகுரு
வாய்ப்பூட்டக்கேளு, காட்டுவாய்வங்கத்திலூற்றிக்கொண்டு கை
கண்டரசிதமதுகட்குசீனம், பூட்டிடுவாய்செம்பிலேயுமிரும்பிலே
யும் புகழ்மாற்றுபத்தாகுமன்பதுக்கொன்று, நீட்டுவாய்ரசிதமிது
நிலைக்கனத்தை நீக்குமப்பாவியத்தைநீட்டியூதே. (௨௪௨)

ஊதியபின்கெவுரியிடயுற்பனத்தைக்கேளு யோடுறதோர்
வேதையிடவுறுதிகேளு, ஆதியபின்கெவுரிதன்னைக்கருநாகத்தா
ட்டாயப்பனேசமபாகமீயங்கட்டு,மாதியபின்னீயத்தைத்தங்கத்தி
லூற்றி வளம்பெறவேதங்கம்ரெண்டுக்கொன்றேயப்பா,தாதியபி
ன்தங்கத்திற்சூதஞ்சேரு தடவாகப்புடம்போடுசாகும்பாரே. ()

பாரிந்தச்சூகத்தைநவலோகத்திற் பாய்ச்சிடவேநாலைந்தோ
டாறுமேழு,கோரிந்தமாற்றுகுமன்பதுக்கொன்றேடுங் கொடுத்த
நவலோகமெல்லாங்கறுப்பாய்க்காணும், வாரிந்தக்கெவுரியுடவழ
ங்கியதோர்வழக்க மகத்தானவூரப்பாவளமாய்க்கட்டு, சேரிந்தவ
ஞ்சனத்தின்தொழிலைச்சொன்னேன் செகமறியப்பார்த்துநன்று
ப்செப்பினேனே. (௨௪௪)

செப்பியதோர்முன்சொன்ன தயிலம்ரெண்டில் சேர்ந்திடுங் கெந்தகமுங்காரஞ்சாரம், மொப்பியதோரமுரிகொண்டேயரைப் பாயப்பா முற்பனந்தானொருவருக்குமுரைசெய்யாதே, அப்பிறதோர்விரையோடேயமுரிகூட்டி லாகாகாகல்லுப்போடெல்லாஞ் சாகுங்,கப்பியல்லோமற்றதெல்லாங்கண்டுபாரு கைவிட்டசூஸ்த் திரங்காண் தயிலந்தானே. (௨௪௫)

தானென்றவாதிகள்தான்சமையக்கூட்டிச் சாதிக்குநூலறியார்தற்கஞ்சொல்வார், காளென்றயிருவர்க்கும்வார்த்தைவாதங் கைமுறையுங்காணார்கள்கரையுங்காணார், தேனென்றசெய்பினிலூறல்போக்கார் சேர்ந்தவினலோகத்தின்சேர்வுங்காணார், வானென்றவெள்ளிசெம்புரெண்டுங்கூட்டி மாட்டுவார்களங்கெல்லா மண்ணாய்ப்போமே. (௨௪௬)

போமந்தரவிமதியையீயக்குத்திப் புகழ்பெறவேயூதியதைப்பொன்னேயென்பார், வாமந்தமாற்றிதுக்குமூன்றோநான்கோ வர்னமுண்டோமுறையென்பார்மருள்வாரப்பா, காமந்தவூறியதுகையோனூறுங் களங்கதிகமதினாலேகடிகிச்சூறல், வோமந்தவாதிகளுக்குள்ளபாடா மோகோகோவாச்சரியமுளவினரே. (௨௪௭)

லிங்கக்கட்டு.

உளரூதேலிங்கமொன்றுகட்டக்கேளு வுற்பனமாய்ச்சொல்லுகிறேனுரைத்துப்பாரு, தளரூதேமுன்சுறுக்குவாட்டுந்தீர்த்து சாங்கமறப்பண்ணினபின்சாற்றக்கேளு, அளரூதேகவுசிக்க மருந்துசொல்வே னடுக்கடுக்காயணைத்துவரவரப்புநீயும், நளரூதே கண்டரொடுகூடன்ரெண்டு நாட்டியரைசமபாகம்ரவியிற்போடே.

போடுநீயிணங்கனொடு காரம்ரெண்டு புகழ்பெறவேயரைத்துநன்றாய்ப்போடுவெய்யில், நீடுநீகல்லுப்புச்சீனம்ரெண்டு நிறைசரியாயரைத்தரைத்துநீட்டாய்வெய்யில், யாடுநீசாரமொடுயணடத்தோலு மளவுசரியாயவைத்துயப்பாநீயுங், கோடுநீலிங்கமதுபலமும்ரெண்டு குதற்பாமற்சுறுக்குமுதல்வாட்டுந்தீரே. (௨௪௯)

தீர்ந்தலிங்கக்கட்டியின்மேற்பூசக்கேளு சிறந்திடுநற்கற்பூரஞ்சிறந்தவீரம்,வாந்தநல்லபுழுகோடுவுரமுங்கூட்டி வளமானகுறும்பியோயஞ்சுங்கூட்டி, மாந்தவிடைவராகனென்றுவகைக்குமப்பா வளமாகயரைத்துநன்றாய்லிங்கத்தப்பி,சேர்ந்ததணற்கரியோட்டிற்சிறக்கவாட்டி சிக்கெனவுந்தயிலமுண்ணூந்திறனமபாரே. ()

திறமைபொத்தலிங்கத்தின்மேலேகேளு சேர்ந்துரைத்தநண்டுநெய்யிற்குன்றிவித்தை, அறமையுறமேற்பூசிமேலேகேளு அப்படிநீகெண்டூருடன்கூடன்மேதாண, திறமையுடனதுமேலேயிணங்கன்காரம் நிறைநிறையாய்லிங்கத்தினிடையேதாக்கு, உறமையுடனதுமேலேசினமுப்பை யுற்பனமாய்ப் பூசியிதை யுணரவாட்டே. (௨௫௧)

வாட்டிநன்றாய்க்கரியோட்டில்வளமாய்நீயு மறுகியதின்மேற்சாரமண்டம்போடு, நீட்டிநன்றாய்முறைமுறைக்குநண்டுநெய்யும் நிலைத்துவரக்குன்றியப்பாநினவையுன்னிப், பூட்டிநன்றாய்வாட்டியதைப்புகலக்கேளு பொலிவானசெங்கொட்டையிருபத்தைந்து, காட்டிநன்றாய்வெட்டிவெட்டிக்கரண்டிக்குள்ளிட்டுக் கனல்வைத்துக்கெந்தகங்கால்பலமும்போடே. (௨௫௨)

போடுநீமேஷத்தின்கொழுப்புக்கேளுப் புகழ்மஞ்சட்கருவுமட்டும்போடுபோடு, ஆடுநீதணல்மேலேதைலமாறு லங்கித்தக்கவசமொடுலிங்கம்போடுத், தோடுநீதைலமுண்ணத்திறமாய்நீயுந் திரும்பியதைப்பிரட்டிமெள்ளத்திறமாய்வாட்டுக், கோடுநீமலேதாறுஞ்செய்யுமார்க்கங் கொள்கிறேன்முழுக்கட்டுக்கொள்கிறேனே. (௨௫௩)

செம்பினூறல்போக்க.

கொள்கிறேன்முழுமுறையாய்ச்செம்புசுத்திக் குறையாமல்பார்த்தவற்குப்பொன்னேயாகும், நள்கினெனென்றுமெள்ளநழுவிவிட்டால் நாய்போலேயலைவார்கள்வாதம்பொய்யாந், தெள்கினேன்செம்பினுடவூறல்போக நிலைக்கவொருமுறைசொல்வேன்நினைவாய்க்கேளு, அள்கினனண்டத்தோல்பலமொன்று யதற்கெடையாய்சாரத்தையணைத்துப்பாரே. (௨௫௪)

அணைத்துரெண்டுமானமட்டுமரைப்பாயப்பா யதற்குள்ளேகால்பலந்தான்காரம்போடு, யிணைத்துவொன்றாய்ப்பொடியாக்கிவைத்துக்கொண்டு வெடுபலந்தான் செம்பையொருக் குகையில்வைத்து, பிணைத்துநின்று வுருக்குமப்போப் பொடியைத்தூவப்போனவூறலறும்பிலக்குஞ்செம்பு, கனத்தசெம்பு ஊறலற்றால்கனகமாகுங் கண்கெட்டவாதிகளேகருதிப்பாரே. (௨௫௫)

பாருநீசெம்பினுடவூறலற்றால் பளிச்சென்றுவெளுப்போடும்பருவங்கேளு, தூருநீயண்டத்தோல்சாரங்காரந் தனிமுந்துமெண்டைபோலதயவாய்க்கூட்டிக், கோருநீசவ்வீரம்பலமோகால்

தான் கூட்டிபொக்கப்பொடியாக்கிக்குமுறவைத்துத், தேருநீமுன்செம்பையுருக்கியப்பா திறமாகத்தூவிமெள்ளச்செந்தீயேறே.

ஏறுநீயிரதத்துளிட்டுமிட்டேயெழிலாகநாலுதரமிளைக்கவேண்டாந், தூறுநீபொன்னுக்குவித்தாஞ்செம்புசோங்கமுடனூறலற்றுத்தங்கமாகும், வேறுநீவெறுஞ்செம்பைப்பூட்டினக்கால் விழலாகும்வாதமெல்லாம்விரைந்துபாரு, சோறுநீவேணுமென்றாற்சுத்திபண்ணு சுழன்றலையவேணுமென்றாற்சும்மாபாரே. (௨௫௭)

பாரென்றுமாயிசொல்லப்பார்த்துக்கண்டேன் பண்பானநூல்முறையிற்பாடிப்போட்டேன், யாரென்றேன்பார்த்தவர்க்குவாதசித்தியறியாட்டாலொன்றுமில்லையப்பாகேளு, நேரென்றுசொன்னமுறையென்னூற்றறுப்பில் நினைவுகெட்டகிரங்கணனேயென்றுசொல்லும், வாரென்றவென்னூலைப்பார்த்துக்கெட்டோர் வையகத்திலொருவரில்லைவளமாய்ப்பாரே. (௨௫௮)

வளமானவென்னூலுக்கேதுவொப்பு மற்றொன்றுமொவ்வாதுமகத்தாம்போதந், களமானபூரணமும்நாளுநேராங் கைகாட்டக்குருவேண்டாங்கைப்புண்ணுக்குந், தளமானகண்ணாடிவேணுமோதான் சமுசயம்போலென்னூலைச்சாதித்தோர்க்கு, உளமானநெஞ்சினுள்ளே யுரைத்துப்பாரு ஒருசொல்லுந் தப்பாதுஆணு ஆணை. (௨௫௯)

ஊணியதோர்சுத்தித்தசெம்புரெண்டு உறப்போடுலிங்கமொன்றுமொப்பாயப்பா, பேணியதோர்தங்கமொன்றுநாலுஞ்சேரப் பெருகியதோர்காரமிட்டுப்பெலக்கவூது, வேணியதோர்மதிபத்திலொன்றேயீய விளங்கிடுமேமாற்றெட்டுவிரைந்துபாரு, ஆணியதோர்நாகமொன்றுநாலிற்கூட்ட அப்பனேதசமாற்றுமறிந்துபாரே. (௨௬௦)

அறிந்தளந்தநூலோடேமூலநாயன் அய்யனுடநூலெல்லாமகண்டகாடு, பிறிந்தடியேன்சொன்னநூல் பேதைக்கொங்கை பெரியோர்கள்சொன்னதெல்லாம்பிறவிக்கொங்கை, முறிந்துநின்றுமனமடைந்தால்முதிர்ந்தகொங்கை முயன்றவர்க்குமனமுவந்தமூலக்கொங்கை, மறிந்துறைத்தநயனார்க்குச்சலியக்கொங்கைமாற்கங்கரண்நூலுக்குமனத்திற்பாரே. (௨௬௧)

மனமேநீமயங்காதே செம்புபோலே வளமாகச்சுத்திபண்ணயிரும்பைநீயுங், கனமேனிநாகத்தைவங்கந்தன்னைக்கைமுறையாய்ச்சுத்திபண்ணுகளிம்புபோகுந், தனவிரும்பின்சவுடுபோனாற்

றங்கந்தங்கஞ் சமமானவிரும்போடுதாயாம்நாதம், வனமேனி யலையாதேகாரசார மகத்தானகட்டிதுதான்மனதிற்காணே. ()

காணவைந்துமேலோகத்தி லூறற்போனல் கண்காணவாதியு டவாசலெல்லாம், பூணவைந்தேவாதத்தின்பூதமாச்சுப் புகழான வர்ணமதுரசமேயாச்சு, தோணவங்கேதிரிகுணசயிலமார்க்க சொ ற்காரசாரமதேபூமியாச்சு, ஊணவங்கேசொர்ணமதுவித்தேயாச் சு உற்றுப்பார்வாதத்தினுண்மைகாணே. (உ௬௩)

உண்மையிற்தப்பயிர்தனக்குநீளாக்கட்ட உற்றுப்பார்காமநீ ருறுதியப்பா, வண்மையுடன்பொன்போட்டாற்பொன்னேயாகு மாற்றியதில்வெள்ளியிட்டால்வெள்ளியாகுந், தண்மையுடனின முறையேசாதித்தேறச் சாதித்துயான்கண்டராசவிதி, கண்மையு டன்மறந்துவிட்டால்வாதம்பொய்யாங் கசடரேகருத்திலுன்னிக் கலந்துபாரே. (உ௬௪)

கலந்துபார்சத்தியொக்குங்காரசாரங் கைகண்டவிசாமொக் குங்கனத்தலோக, மலந்துபார்ச்சங்தோஷந்தங்கத்திற்கு மடவா னசாதுசங்கஞ்சூதத்திற்கு, மலந்துபார்பூஷணத்தின் மார்க்கத் தேற மகத்தானகுளிகையதுவழியேகாட்டு, முலந்துபார்மூலத் திலோமென்றேடி லுறுதியாய்வாசிவைத்தேயுரைத்துப்பாரே.()

உறைத்துமனமொன்றாகியுற்றுப்பார்த்தா லொன்றும்பொய் போகாதுவுமையாள்சொன்னாள், வெறைத்துமனம் பொய்மெய் யோவென்றுமெண்ண மெய்யானவார்த்தையெல்லாம் விழலாய்ப் போகு, மறைச்சியென்றசிறுபிள்ளையாயிபாதம் மறவாமற்பூசைப ண்ணுவருங்காண்ஞானம், இறைச்சியென்ன மதுவென்ன வென் றுசொன்ன லெழுபிறப்புங்காய்சென்மமெடுப்பார்தாமே. (உ௬௬)

எடுப்பார்கள்பூசையைத்தான்தூஷித்தோர்கட்கிகத்தாளபெ ருவயிறுமீளைகாணுந், தொடுப்பாகப்பேய்பிடிககும் பித்தங்கொ ள்ளுருஞ் சோறுசோறென்றலைந்துசொக்கிப்போவார், கொடுப்பா ர்களாருமற்றுமதியுங்கெட்டுக் கூடிநின்றகுடும்பமெல்லாங்கொள் ளைபோகும், நெடுப்பார்களவரவர்களென்றுதேவி நிச்சயமாய்ச் சாபமிட்டாள்நிசந்தான்காணே. (உ௬௭)

காணப்பாவுட்சமயம்மாறதுண்டு கடந்தபின்புபுறச்சமயமா றதுண்டு, பூணப்பாபன்னிரண்டுக்கவளேதெய்வம் போக்கறியா ப்புல்லர்களோமெத்தவுண்டு, விணப்பாகுளித்தனென்பார்நீறு

பூசிவெகுசுத்தம்நாங்களென்பார்சைவமாடு, தோணப்பாவிதினு லேயுண்டோவேது தோஷம்வந்துசுற்றுகிறதுறையதாமே. ()

துறையானவாறுசமையத்துள்ளே துரியமென்றுமாயிபத ஞ்சூட்டுவார்கள், மறையானவேதாந்தமாயிபாதம் வரிசையுடன் பூசைபண்ணவருங்காண்ஞானம். நிறையாகநின்றக்கால்முத்திமு த்தி நிலைதப்பிச்செய்திடிலோநிலைபாப்பாவம், உறையாமல்மூலத் தேநின்றுயானு லுத்தமனேமாயமுறுஞானம்போமே, (உசுசு)

போகாமலாயிபதம்பூசைபண்ணிப் பொற்குடத்தில்மதுவை யுண்டுபுளகமாகி, வேகாமல்வேகுதற்குப்புலனைச்சுட்டு விரைந் தேறிவெறும்பாழைமேவுமேவு, சாகாமற்சாகுமப்பாகருவியெல் லாஞ் சங்கற்பவிகற்பமெல்லாந்தானேபோகும், வாகாமலென்ன சடமுத்தைப்பாண்டம் வரிசையுடனிதின்குணத்தைவகுக்கக்கே ளே. (உஎ0)

சடக்குறிப்பு கருவிமகத்துவம்.

கேளப்பாபுழுக்குரம்பையுதிரக்கட்டைக் கெடியானநரம்புமச்சைக்கேள்நீர்ப்பாண்டம், பாளப்பாமலக்குப்பைப் பாவக்கூடு பார்க்கையிலேயொன்பதிடம்பாழாம்பீத்தல், நாளப்பாநிலையுமில்லைநமன்கையாடு நல்வினைக்குந்தீவினைக்கும்நயந்தகாடு, சூளப்பாசஞ்சலமும் நினைவுங்கோடி சொல்லுறுதி யில்லாத சுணங்கத் தோலே. (உஎக)

தோலிலேகட்டியபா லாருக்காதுந் தோலானசுணங்கனுட தோலும்பாலும், காலிலேயொட்டியதோர்நாகம்போலக் கடை கெட்டதேகமதுநம்பவேண்டாம், பாலிலேயொட்டிநின்றமோ ரைப்போலப் பரந்துநின்றுவாடுதப்பாபரிசஞ்சொன்னேன், கோ லிமேலவூதுகின்றகாற்றுப்போலக் கூடிற்றுமனமதிலேகுறிப்பாய் ப்பாரே. (உஎஉ)

பாரப்பாமனதுக்குவடிவுமில்லைப் பரிவானவருவுமில்லையுருவுமில்லை, நேரப்பாசூரியனுங்கிரணம்போலே நிலையானவிளக்கது வுமொளியும்போலே, சேரப்பா மின்னலுடன் காந்தியும்போற் சேர்ந்துநின்றகண்ணொளியின்திறத்தைப்போல, ஆரப்பாவிதை க்காண்பாரறியமாட்டாரறிந்துணர்ந்தாற்போதமதுவாகுந்தானே

தானென்றமனதையுள்ளே மாட்டிக்கொண்டு சண்ணுதப் பாசண்டாளக்கருவிப்பாசங், கானென்றவாங்காரமுரலுமாச்சுக்

கள்ளமென்றவைவருமோருலக்கையாச்சு, ஊமெனன்றபெண்ணு னசயுருவமாக ஓம்கோவ்கோவடிக்குதப்பாவொண்டொட்டாமல்,வா னென்றவெளியிலெங்கெமனந்தான்புக்கும் வாய்கடந்தநீச்சாச்சு மாயக்கூத்தே. (உஎச)

கூத்தொழியப்போறதில்லை வொருநாளுந்தான் கோடான கோடிசென்மமெடுத்தேயாடுஞ், சேத்தொழியப்போறதில்லைமாய ப்பாம்பு செய்வதன்றேவென்றசொல்லித்திரியவேண்டாம், பா ர்த்தொழியவேணுமென்றால்மூலத்தாடிப் பதருமல்லிவேகமென் றவாளால்வெட்டு, காத்தொழியவேறுமுண்டோஜீவத்துக்குக் க ட்டுகட்டுக்கள்ளனேநீகடுகிப்பார்த்தே. (உஎரு)

கடுகியெங்கேபார்ப்பதென்றால்மூலம்பாரு கையறியாமேலே ச்சருக்குங்காணுஞ்சோதி, முடிகியங்கே தளங்காணும் முட்டிப் போகும் மூதண்டமுப்பாழுங்கடந்துபோகுங், குடிகியங்கேதமர் வாசற்குள்ளேபுக்குக் கோடிமதிகோடிரவிகூறொப்பாது, நெடிகி யங்கேபூரணத்தைக்கரையோகாணும் நேர்ந்துடனேகாந்தயம் போல்நேரும்பாரே. (உஎசு)

நேருவதுமெவ்வாறுமென்றுகேட்டால் நிலையான தீபமுண் டநெய்போலநெய்போல், கூருவதுவருணசலம்ரவியுண்டாப்போ ல் கூறஞ்சுவர்ணமுண்டபடிகம்போல, கோருவதுசலத்தடங்குங் குமிளிபோலக் 8கூப்பிட்டசத்தமவன்கேட்டாப்போல, வோடுவெ துமொடுங்குவதுமிதுவேமார்க்க முத்தமனேமனத்தோடேவுன் னுவுன்னே. (உஎஎ)

துருசிக் குரு வண்டினம்.

உன்னவொருகுருமார்க்கம்வண்டிறசொல்வேன் வோகோ கோவாச்சரியம்வொருவர்காணார், பன்னமுள்ள கொழுஞ்சியடி யெருக்கிற்பாரு பலமானகழுதைவண்டுசொறிபோல்மேலே, அ ன்னயதைக்கைப்பிடித்துமுதுவிற்சுண்டு அரிசிபோல்முட்டைவி ழும்அய்யாகேளு, கன்னவிதில்வீரமுடன்பூரம்போட்டுக் கலந்து மிருகாசெடையாந்துருசிக்கப்பே; (உஎஅ)

அப்பயிலேவைகப்பட்டால்கைபோம்வெந்து ஆகாகாமுகர்ந்து விட்டால்மூக்குப்போகும், வெப்பயிலேமேலிவிட்டால் விரிந்து போகும் வெருகடினம்வெருகடினம்விஷமோமெத்தச், செப்பயி லேயெனவேண்டாஞ்செப்பக்கேளு சேர்ந்தவொருகுச்சிகொண்

டுசிறக்கவப்பு, ஒப்பயிலேரவிபடவேவிரிந்துநீறு மோகோகோ கழுதைவண்டினுண்மைதானே. (௨௭௯)

உண்மையென்றகுருவாலேயெல்லாநீறு மோடுறதுங்கோடி மட்டுமுயரும்வேதை, வண்மையென்ற குருவாலே சூதங்கட்டும் வாகானபோட்டொன்றிலண்டம்நீறுந், தண்மையென்ன விதில் வேகந்தங்கம்நீறுஞ் சகலமெல்லாங்குருவாகத்தாயுமாகும்; நுண்மையென்னவெகுநுண்மைநுகர்ந்துபாரு நோக்கெட்டாத்துறையிநிலேநோக்குநோக்கே. (௨௮௦)

நோக்கையிலேநோக்குவந்துகவிழ்ந்தாப்போலே நூறுசங்கமற்புதமாந்துறையுமுண்டு, பார்க்கையிலேபரத்திலொன்று மனத்தைப்போலப் பலகோடிகுளிகையுண்டு சொல்லமாட்டேன், சேக்கையிலேமூலத்தில்வாசிபோலச் செந்தூரவித்தையிதிற் றெகுட்டிடாது, தாக்கையிலேயுன்மனையைக்கண்டாப்போலச் சகலமெல்லாமெழுகாகுஞ்சாதித்தாடே. (௨௮௧)

ஆடலாமிக்குருவாலுப்புக்கட்டுமோச்சரியவிந்தவுப்பு வம்மாள்நாதம், நீட்டுகையிலுப்பினுடவாசங்கண்டால் நிமிஷத்திற்சரக்கெல்லாம்நீட்டிச்சாகுந், தாட்டுகையிலிப்படியேகாரஞ்சாகுஞ் சமுசயமோவொன்றுமில்லைசாரஞ்சாகுங், கூட்டுகையிலிதுரெண்டாலெல்லாஞ்சாகுங் கூறினேன்வாதத்தின்குணந்தான்மூன்றே. ()

மூன்றுகுணங்கண்டாயேயுயிரைக்கேளு முந்தியங்கேபூசையிலேமறந்தேன்சொல்ல, ஆண்டுகொண்ட சவுக்காரச் சுண்ணம்போடு வாண்மையுள்ளவங்கத்தின்சுண்ணம்போடு, பூண்டுகொண்டவண்டினுடமுட்டைபோடு போட்டரைத்துத் தூரிசியின்மேற்பூசுபூசு, மாண்டுகொண்டதுருசிபங்கேநீறிப்போகும் மகத்துவந்தான்சொன்னதொன்றும்வழிதப்பாதே. (௨௮௩)

தப்பாதுபங்குனியாஞ்சித்திரையினுள்ளே தவறுமற்சகலகுருவெல்லாம்பண்ணு; ஒப்பாதுதைமாசிரெண்டுக்குள்ளே வுறவாகச்செயநீரையூட்டிவாங்கு, கொப்பானஅற்பசிகார்த்திகையினுள்ளே கொள்கியதோருருக்கினத்தைக் குமட்டிப்பாரு, செப்பானஆடிதொட்டுஆவணியினுள்ளே சிறப்பானதிராவகத்தைச்சேர்ந்துவாங்கே. (௨௮௪)

சேர்ந்திட்டவைகாசிஆனிரெண்டுந் திறமாகச்சாரணையைத்தீர்த்துவாடு, ஏந்திட்டபுரட்டாசிமார்கழியிரண்டி லிசைந்தேடு

ப்பாய்செந்தூரமியல்பாயப்பா, பாந்திட்டபனிரெண்டுஞ்சரியாய்ச்சொன்னேன்பார்க்கிறதோர்தொழில்முறைதான்பண்பாய்க்கேளு, சாந்திட்டவரிசைதப்பிற்சரக்காகாது சாதகத்தின்முறையிதுவேசார்ந்துபாரே. (உஅரு)

பாரப்பாசவுக்காரம்வங்கம்ரெண்டுபடாதிருந்தாற்துரிசிக்குப்பிராணனில்லை, சேரப்பாகெந்தகமுந்தாளகமும்போனாற் சேர்ந்திட்டசெந்தூரஞ்சேரப்போச்சு, நேரப்பாவெடியுப்புச் சீனம்போனால் நேரானதிராவகத்தின்நிறந்தான்போச்சு, கூரப்பாவமுரியுடகூர்மைபோனாற் கூட்டோடேசெயநீருங்கொள்ளைபோச்சே.

போச்சப்பாவுருக்கினந்தான்காரத்தோடே புகழானவீரமிட்டால்நீறும்போச்சு, ஆச்சப்பாபுடம்விட்டால்சாரணையும்போச்சு யந்தந்தயினந்தப்பில்வர்ணம்போச்சு, நீச்சப்பாதங்கம்விட்டால் வாதவேலை நேரானரசம்போனுமெல்லாம்போச்சு, போச்சப்பாயினியென்னபேணிப்பாரு போட்டானவொளிப்பில்லையென்னால் காணே. (உஅஎ)

காணப்பாசுண்ணம்விட்டால் செயநீர்போச்சு கைமுறையாய்ச்சாரம்விட்டாற் கட்டோபோச்சு, வீணப்பாகற்சுண்ணம்விட்டால்போச்சு வேகாதேவேகுதற்குத்தீரோச்சுத், தோணப்பாகிருவணத்தைவிட்டாயானாற் சுழன்றுள்ளேபுக்குவதுந்தூரப்போச்சு, ஆணப்பாயறிந்தமட்டுமினத்தைச்சொன்னே னறியாதவடியார்க்குமடியான்தானே. (உஅஅ)

சரக்கு விபரம்.

தானென்றதுருசியதுகுருவேயானாற் சாகாமற்சேர்த்திருந்தபசுமைவேணும், மானென்றசாரமதுவுருகும்போது மயிர்போலேபுகைஞ்சோடிமறுகவேணும், வேனென்றவெண்காரமுருகும்போது வெருளாதேபொங்கிநின்றேயாடவேணும்,கானென்றவெடியுப்புக்கட்டேயானால் கல்லுப்போலிறுகுமட்டும்பாருபாரே. ()

இறுகியேவெளுப்போடிக்கல்லுப்போலே யிருக்குமட்டுங்கல்லுப்பையிறுகக்கட்டு, மறுகியது வெடித்ததுவைத்தேய்த்துப்பார்த்தால் மண்போலேயிருந்தாக்காலென்றுந்தப்பா, தறுகிபிதுகட்டல்லவெறிஞ்சுபோடு சார்வாகக் கரியிலிட்டு வுருகும்போது, குறிகியதுகரிக்கொண்டுத்தால் குணமொன்றில்லை கூறினேன்லவணத்தின்கூறைத்தானே. (உகூ0)

கூருன சினமது பொங்கொண்ணுது குமிழிவிட்டுப்பொன் போலேயாடவேணும், வாருனசூடனதேயெரியொண்ணுதுமருவி யமேதார்கற்பூரமுருகொண்ணுது, தாருனதுருசியது யிளகொண் ணுது தனித்ததொருயிந்துப்புத்தாண்டொண்ணுது, ஆருனவாறி திலேபெருகுங்கோடி யறிந்திந்தப்படிசெய்வான்வாதிதானே. ()

வாதியென்றும்வந்தொருத்தனெதிர்த்தானுனல் வரிசையுட னிந்தவகைக்கட்டைக்கேளு, ஆதியென்றுமந்தமென்று மறியே னுனு லாயிரமாங்காலியினுலவனேச்சண்ணு, ஓதிநின்றயோகியென் றுவந்தானுனு லுத்தமனேமூலத்தினுண்மைகேளு, காதியென்று கைமுறையையறியேனென்ருற்கலங்காதேபாதரட்சைக்கொண்டு சண்ணே. (உகூஉ)

சண்ணுவதுதோஷமல்ல புத்தியுண்டாஞ் சார்வாகஞானிவ ந்தேயெதிர்த்தானுனல், உண்ணுவதுமனந்தானேயெங்கேயென் று வுற்றுக்கேளுண்மைசொன்னுற்றெண்டம்பண்ணு, பண்ணுவ துமயக்கமுற்று வறியேனென்ருற் பாஷாண்டிபோவென்றுபரிந் துதள்ளு, கண்ணுவதுகவனிவந்து பெதிர்த்தானுனல் காட்டின தோர்சாரணையைக்கருதிக்கேளே. (உகூஙு)

கேட்கையிலே சாரணையை யறியேனென்ருற் கௌனியல்ல திருடனென்றுகேளுவுணி, வாட்கையிலேவாயுளறிநின்ருனுனல் மாரிலேயறைஞ்சிருத்திவகையைக்கேளு, தீட்கையிலேதிருட்டு ண்டோசித்துண்டோசொல் ¦சேர்ந்தாடவாசியுண்டோசெப்பென் றேகேள், தாட்கையிலேகுருவுண்டோவென்றுகேளு சற்றுதப் பிற்றென்ருக்கால்நன்ருய்க்கட்டே. (உகூச)

கட்டையிலேயடிமையென்றுசரணஞ்செய்தாற் கட்டவிழ்த் துமூலத்திகருத்தைப்போட்டு, விட்டெழுத்துவிடாதெழுத்துரெ ண்டுங்காட்டு மேலாகக்குருபதத்தைவிளங்கிப்போட்டு, தொட் டெழுத்தக்குளிகை யெங்கே யென்றுகேட்டுச் சொல்முறையாய் வேதை யொன்றுசூட்டிநீட்டு, பட்டிடத்தே குளிகையைத்தான் போடச்சொல்லிப் பரிவாகச்சீஷனெனப்பண்ணிக்கொள்ளே. ()

பண்ணியந்தக்குளிகையிடச்சாரணையைக்காட்டுப்பரிவாகக்கா யசித்திபண்ணச்சொல்லு, வொண்ணுவதுமென்னவென்ருல்மன மென்றெண்ணு மோகமது மென்னவென்ருல் மூலமெண்ணு, க ண்ணுவதுஞானமென்ருல்மனம்போய்ச்சென்று கலந்தவிடமுத்தி

யென்றுநருவாய்க்காட்டு, அண்ணுவதுகுளிகையிட்டேயாடும்போது வவ்வாகிகொண்டுள்ளேயாடச்சொல்லே. (௨௯௬)

ஆடுகையிலிப்படியே யாடச்சொல்லு மமர்ந்திருந்தவிடந்தோறுமூலத்தூடி, ஊடுகையிலுட்புகுந்தேபார்த்தேயேறி உன்மனார்ந்தத்தடுக்கவூணச்சொல்லு, நாடுகையிலாறுவர்க்கமென்றுகேட்டால்நலம்பெரியமூலவர்க்கநாமஞ்சொல்லு, கூடுகையில்குருவாருவென்றுகேட்டாற் குழந்தையென்றகொங்கணர்க்கே யடிமையென்றே. (௨௯௭)

அடுமையென்றால்மூன்றுகண்டமுண்டோவென்னிலாகாகாகட்கத்திலிருக்குதெண்ணு, கடுமையென்றால்வாதாட வானீயென்று கண்ணிமைக்குட்பறக்கிறேன்பிடிநீயெண்ணு, கொடுமையென்றகொங்கணர்க்குப்பிள்ளையானாற் கூட்டியுன்னைப்பிடிக்கறியோமென்பார்சித்தர், நெடுமையுள்ளவைந்நூற்று வன்பத்தேழ்வர் நேராகச்செயஸ்தம்பம்நிறுத்தினாரே. (௨௯௮)

ரிஷபயோகி சீஷன் தர்க்கம்.

நிறுத்தினதோர்மக்கள்முன்னே யெதிரோகாணேன் நேரானரிஷபசித்தயோகிசீஷன், மறுத்துநின்றசுரூபசித்து வுண்டோவென்றான் மைந்தரிலேபொருபிள்ளைமகத்தாம்வெட்டை, நிறுத்துநின்றசுரூபத்திற்புக்கிறேன்யான்; நேர்ந்தென்னைப்பிடியென்றுவடித்தானையோ: குதித்துநின்றவடியோடேகூடச்சென்றான் கூடுமுன்னேகோடிசங்கங்கொள்கினேனே. (௨௯௯)

கொள்கினதோரென்மகனும்பிடிகொள்ளாமற் கொப்பளித்த நீர்போலக்குதித்துவிட்டான், தளகினதோர்பூரணத்தில்நின்றான் மைந்தன் சார்வில்லாரிஷபருடமைந்தாவென்றான், அளகினதோர்கோபத்திலவனுந்தாண்ட அதுக்குமுன்னேவற்புதமோகடந்து போனான், உளகினதோர்பூரணத்தைச்சுற்றிச்சுற்றி வுலைந்தலைந்துகாணாமலோங்கினானே. (௩௦௦)

ஓங்கினதோர்சித்தர்முன்னேவந்தான்மைந்தன் ஓகோகோயிம்மட்டோயுங்கள்ஞானம், வாங்கினதோரென்முன்னே யீடோ நீதான் வாயிலையோகுளிகையில்லைமனத்தால்ஞானந், தாங்கினையோயென்னோடேயாடநீதான் தாயானகுருவையெங்கேவரச்சொல்லென்றான், ஆங்கினையவார்த்தைக்குவவனுஞ்சோம்பி வையர் முன்னேபோய்நின்றுவழுதாள்காணே. (௩௦௧)

காணப்பாயேனமுவாய்மூலவர்க்கங் கைகடந்தசொரூபசித்திகுளிகைசித்தி, தோணப்பாரெண்டாலேசுருக்குமேற்றச் சொரூபமென்றேநமக்கல்லால்வேறேயில்லே, பூணப்பாவவனோடேநமக்கேன்வாது போட்டுவிடுகோபத்தைப்போபோபிள்ளாய், வீணப்பாதர்க்கமெல்லாம்ஞானத்திற்கு வெறுவெளிக்காயளவுமுண்டோமிலேச்சாபோவே. (௯0உ)

போவென்றவையர்பதந்தொழுதுசிஷன் பூரணமேவிண்ணப்பம்புகழ்ந்துகேட்கத், தேவென்ற சொரூபமணிச்செய்வதற்குச்சிட்சைசொல்லவேணுமென்று தெண்டஞ்செய்தான், மாவென்ற குளிகையதுமூலர்க்கல்லால் மற்றோர்க்குவாராதுமைந்தாவென்றார், வாவென்றால்வருமதுக்குப்பூரணந்தானப்பா மகத்தானகுளிகையதுமைந்தாகேளே. (௯0௩)

மைந்தனேகுளிகையினல் ஞானசித்தி மகத்தானயோகசித்திவாதசித்தி, மைந்தனேய்றுபத்துநாலுஞ்சித்தி வாக்கடங்காப்பூரணத்தைமருவச்சித்தி, மைந்தனேயிந்தமணிமூலருக்கு மருவியதோர்நந்திசொன்னமார்க்கமார்க்கம், மைந்தனேமூலர்வித்தைநமக்கோவில்லே வாக்கடங்காப்புருவமையவழிதானுமே. (௯0௪)

வழியோடேமேல்நோக்கிப்பதினொன்றேறி மருவியபின்கீழ்நோக்கமகத்தாங்காயங், கழியோடேநிராகாரமாகுந்தேகங் கைப்பிடிக்கவொன்றுமில்லேக்கவியும்போதம், விழியோடேநின்றவெளிசொல்லக்கூடா வெறும்பாழாய்நிற்கிறது நமதுஞானம், பழியோடேபோராடநமக்கேன்வாது பார்த்தவர்கள்சிரிப்பாகள்பதராபோவே. (௯0௫)

போவென்றுசொன்னமொழிபுக்திபுத்திப் புகழாகவினிப்பிடித்து வைத்தானப்பா, வாவென்றழைத்தவனைப் போதத்துள்ளே மருவியதோர்ஞானமுண்டோவென்பானேனீ, சேவென்ற சொல்லுக்குவடிதானுண்டோ சேர்ந்தேறவாவென்றதிறமேயல்லால், கோவென்றகுருவினுடபலமோகாணேன் குளிகையுடகொழுப்போதான்கூறுவீரே: (௯0௬)

ரிஷபயோகியிடம் போனது.

கூறுவதுவென்னவினிக் கண்டாற்சொல்வோங் கோடானகோடியுண்டுமூலவர்க்க,மாறுவதுமெந்தவர்க்கமென்றுகேட்டால்

மகத்தானகொங்கணற்குமைந்தனென்றான், தேறுவதுவைநா ற்றுச்சில்வானத்திற் றேடியெங்கே காண்பம்போஞ் சேர்ந்தாற் சொல்வோம், ஆறுவதுவெகுசாந்தமிரிஷபயோகி அம்மம்மாயாச் சரியமதிகந்தானே. (௩0௭)

தானென்றரிஷபருக்குமடியேனுக்குஞ் சாய்ப்புவரலாகாது வென்றுசொல்லி, வானென்றக்குளிகையிட்டுவடிக்கச்சென்று வந்தனையான்பண்ணயிலேவாரியென்னை, கோனென்றகொங்கணரேமூலர்பேராக் கோடிதவம்பெற்றவரேவந்ததேது, பானென்றமதத்தாலேயெர்தன்பிள்ளைப் படுவாயன்சண்டையிட்டானெனவந்தேனே. (௩0௮)

வந்ததென்ன நீர்வேறோ நாம்தான்வேறோ மைந்தரெல்லாமொன்றன்றிவெவ்வேறுண்டோ, உந்தரென்னயெந்தரென்னரெண்டதுண்டோ யொன்றாகநின்றதல்லோநீருநாமும், அந்தரென்னவெட்டோடேநாலுஞ்சேர்ந்து வடங்கிநின்றபொருள்போலேயெல்லாமொன்று, இந்தரென்னநீரென்றும்நாங்களென்று மேகமன்றிவேறுண்டோயென்னபோவே. (௩0௯)

என்னவென்றுசொன்னமொழிசரிதானையா வெங்களுக்குமுங்களுக்கும்போதும்போதும், பன்னவென்றரசம்பிறிந்தால் வேறாய்ப்போமோ பனிமதியுங்கிரணமதுவேறாய்ப்போமோ, உன்னவென்றால் நாலேணி யுங்கள்ஞான மோடுகிற பெரும்பாதையெங்கள்ஞானந், தன்னவென்றால்நேர்சமனும்ரெண்டுமையா சாதகத்திலதிகமுங்கள்சார்வுதானே. (௩௧0)

சார்வானமனம்பிடித்தேயேறவென்றே சங்கற்பவிகற்பமென்றேதடையோமெத்தக், கார்வானயிருளுக்கு மாசைப்பாம்புக் கடந்துதள்ளியேறுகிறகடினமெத்த, ஊர்வானபுருவமையயோக ஞான முயர்த்திமெத்தவுயர்த்திமெத்தவுண்மைவுண்மை, ஆர்வானஞானசித்திச்செணத்திலாகு மாச்சரியமெங்களுட மணிதான் காணே. (௩௧௧)

மணியைவிட்டால்ஞானமென்றவழிதானையா மாச்சல்மெத்த மாச்சல்மெத்தமருவப்போகா, கணியென்றக் குளிகையிட்டால் மூலங்காணுங் காட்டுமுன்னேபுருவமையங்கடந்துபோகும், பிணியென்ற தொன்றுமில்லை காயசித்திப் பேசுமுன்னே துவாதசமாம்பெருந்தாண்டும், அணியவிட்டுமுன்மனைக்குமேலேதாண்டி யாடலாம்பூரணத்தினந்தந்தானே. (௩௧௨)

அந்தமுண்டோ வாதியுண்டோ வென்றீரானு ளளவில்லாப்
போதத்திற்போதும்போதும், மந்தமென்றமணியோசைக்காதிற்
கேழ்க்கும் வருஷமொன்றிலெக்கமுண்டோவழுத்துமையா, பந்
தமென்றத்தீயொளியைக்காணமாட்டார் பயித்தியந்தான்பிடித்த
வனைநன்றாய்க்கேட்டாய்ச், சந்தமென்றசிலம்பொலியைக்கேட்டி
ர்மூர்த்தி சாதகமாய்மூலரன்றுமிருந்தார்காணே. (௱௧௩)

இருந்தேழுபத்துகந்தானேகிக்கண்டா ரென்னசொல்வேனு
ம்முடையபயிபல்புநன்று, வருந்தேழுலெட்சமும்மையிருக்தாலுந்தா
ன் மனத்தாலேயேறவென்றுலேறக்கூடா, பருந்தேறவெனக்கூ
டாதென்றீரானாற் பார்க்கையிலே மனமோடி யுதிர்ந்துபோகும்,
அருந்தேறத்தவமுடையார்க்கெய்யுஞ்சூத மானுலென்ஞானமெல்
லாமொன்றுதானே. (௱௧௪)

தானென்றபூரணத்திற்புக்கினலென் சத்திகொண்டுமேலே
றித்தாண்டினலென், வானென்றவெட்டவெளி வடிவோகாணோ
மகத்துவந்தா னென்னவெனில் மணியினோசைக், கோனென்றம
ணியாலேகூடிற்றங்கே கொடுஞ்சூதக்குணவேகங்கொள்கப்போ
காப், பானென்றுவுண்டமட்டுஞ் சிவன்தான்சொல்லப் பார்வதி
யுங்கேட்டறிந்தபரிசுதானே. (௱௧௫)

பரிசாலே கேட்டிருப்போம்வந்ததில்லை பரன்முன்னேபல
காரம்பண்ணுவாருந், தரிசாலேசிலம்போசைப்பின்னென்றில்லை
சண்டையில்லைப்பிணக்கில்லைச்சந்தோஷந்தான், உரிசாலேபூரண
த்திலுற்றபேர்க்கு வொன்றுமில்லையுண்ணுமுண்ணுமுண்ணுங்கா
ணுங், துரிசாலேயாடுகுறகுளிகையாலேச் சுறுக்கார்ச்சுமூலவர்க்க
ந்துடியுமாச்சே. (௱௧௬)

துடியாச்சு துருசியென்றகுருவாற்சூதஞ் சூட்டுகிறசாரணை
யைத்துய்த்துநீங்கள், தடியாச்சுத்தாளகத்தாலெங்கள்சூதம் சா
ட்டுகிறசாரணையோசொற்பஞ்சொற்பங், கெடியாச்சுவதினாலேயுங்
கள்வர்க்கங் கேளுமையாகொங்கணரேரெண்டுமொன்று, பிடியா
ச்சுப்பூரணமுங்குளிகைகூடா பேரொன்றுபிறியொன்றுபேணிப்
பாரே. (௱௧௭)

பேணியந்தப்பூரணத்தைப்புக்கவன்றோ பேரானகுளிகையு
டப்பெருமையெல்லாம், ஊணியங்கேபார்ப்பார்கள்மூலம்நெஞ்சு
வுயர்ந்தகண்டம்புருவமையமூக்கனுலும்; ஆணியங்கேதுவாதசத்

தின்சிரசுமேலு மங்கங்கேயெட்டெட்டுமதுமேல்மூன்று, பூணியங்கேகடந்தவிடம்போதம்போதம் போக்கறிந்தோன்சிவஞானி புனிதனாமே. (௩௧௮)

மேருவுக்கு வடக்குமுதல் நாலுதிக்கும்.

ஆமிந்தவழியறிந்தோன் ஞானயோகி அறியாட்டால்ஞானியல்லவசட்டுமோடு, வோமிந்தவழிக்கெல்லாங்கருவேபோதம் உற்றகருகொங்கணரேவுண்மைவுண்மை, நாமிந்தக் கருவாலேயடுத்தோம்போதம் நம்முடையபிள்ளைகளுக்கிதுவேமார்க்கந், தாமிந்தக்காரியத்தைச்சட்டைபண்ணித் தகமையில்லைப்போய்வாருந் தண்மையோரே. ஞான [illegible] (௩௧௯)

தண்மையேஞானவாதாரமாச்சுச் சாந்தமதுயோகத்தின்சார்வுமாச்சு, வண்மையதுவிவேகமென்றவாளுமாச்சு வாய்திறக்காமவுனமன்றோமனதுக்கின்பம், உண்மையதுஞானத்துக்கோடும்விதி யுறைப்பானதிடமல்லோமகத்தாம்வீரம், அண்மையதுபூரணமாய்நின்றமூர்த்தி யடியேனும் போய்வாறேன் அருள்தாரீரே. (௩௨௦)

தாருமென்றுகுளிகையிட்டுநிமிஷத்துள்ளே சச்சுதானந்தவெள்ளந்தன்னைமோந்துப், பேருமென்றக்குகையினுள்ளேவந்துபுக்கிப் பேரானமைந்தர்களேவாரும்வாரும், ஆருமென்றேன்சண்டைகொண்டுவந்தீரானால் யவரவர்க்குச்சீஷர்மெத்தயறிவிப்பேனுன், சேருமென்றசுவனத்தையோடிச்சென்று சேர்ந்துணர்ந்தபெரியோரைத்தெண்டம்புண்ணே. (௩௨௧)

சித்தர் பெருமை சீஷருக்கு வுபதேசம்.

பண்ணாமல்கெருவித்துத்திரிந்தீரானால் பார்த்தவர்கள்சிரிப்பார்களென்னையப்பா, விண்ணாமல்மேருவுக்குமிப்பாலல்லோ விருப்புமுங்களிடவிருதுமப்பா, கண்ணானவடபாகம்போய்வாருங்கள் கருமணிபோலொவ்வொருவர்கலந்தசித்தர், தண்ணானசகத்திரந்தான் வயசு மப்பா சார்ந்தத்திச் சாந்தம்வர தண்மைதானே. (௩௨௨)

தண்மையொத்தபெரியோர்கள்போதமென்றால் ஜலபானம்போற்பண்ணிசஞ்சரிப்பார், வண்மையென்னவவர்களுக்கேயென்றாயானால் வாய்திறக்காமவுனமுற்றமகத்தாஞ்சித்தர், அண்மை

பென்றசொரூபமணிக்குளிகைக்கப்பா வாயிரத்தெண்மாற்றுலே யணைத்துத்தீற்பார், கண்மையென்னவவர்கள்முன்னேபோங்கள் நீங்கள் கவுபீனங்கொண்டுசண்ணிக்கடத்துவாரே. (௫௨௩)

வாரென்றமேருவுக்குகிழக்கேபோங்கள் வயதவற்குமஞ்ஞூறுமாற்றிற்பாதி, நேரென்றதங்கமதுவஞ்ஞூத்தெட்டு நிலையான மாற்றுகும்நீங்கள்பாரும், காரென்றசித்தருக்குப்பூமிக்குள்ளே காலொன்றுந்தட்டாது சேமமாவார், வேரென்றவசபைபெட்டு மவர்கட்கில்லை விரைந்துநின்றுநாலாகவிளங்கினரே. (௫௨௪)

விளங்கினதோர்மேற்றிசையைப்பாரும்பாரும் வெருவின தோர்பனைமரத்திற்காலோயோர்க்குத், தளகினதோர்வயதவற்கு முன்னூற்றஞ்சு சஞ்சாரங்கேசரத்தைத்தறையில்நில்லா, ரளங்கியதோரவரோடேபேசவென்று அந்தரத்தேநின்றுகொண்டுபேச வேண்டும், பளங்கினதோரவர்குளிகைபூரணமேயென்றால் பார்க்கையிலேவந்திறங்கிப்பருவுவாரே. (௫௨௫)

பருவுவார்பூரணத்திலயிப்பார்மீள்வார் பராபரத்திலென்னாளும் பதியாய் வாழ்வா, ருருவுமாம் முருவுமா மவர்கள் தேகம் யாடுறதோர்மாருதத்திலனேகம்வேகம், மருவுமாமவர்களிடஞ் சகலபட்சி மகத்தானகருணையினால்வாவாவென்பார், கருவுமாய்நின்றசித்தர் கடுகப் போங்கள் கன்னத்தி லறைந்துசித்தர் காட்டுவாரே. (௫௨௬)

காட்டுவா ரவ்விடத்திற் போகவென்றால் கைமுறையாய்ப் பூமியைத்தான்தெகிக்கவேணும மூட்டிவாய்ச்சமாதியைத்தான்குகையில்நின்று முன்னான்குவருஷமப்பாபொசிப்பைவிட்டு, நீட்டுவாய்த்தேகமதுபொன்போலாகும் நேர்ந்தவுடன் வண்டதுபோல்நேரேயாடும், ஆட்டுவாயண்டமெல்லாம் முருவியோடு மங்கைங்கேசித்தருண்டுவமர்ந்துபேசே. (௫௨௭)

பேசையிலேவந்தனையாயஞ்சல்பண்ணு பெருமையதுமகத்தெல்லாம்பெரியபாவம், ஆசையிலேயாருமைந்தரென்றாலு லடியேன்தா னுமக்கடிமை யின்னார்பிள்ளை, தேசயிலேநாலுதிக்குமென்பேர்சொன்னால் சேர்ந்தணைந்து மோந்துகொள்வார்பெரியோரப்பா, மாசையிலேழுலர்வித்தைநாலுதிக்கும் மகத்தானநந்திமைந்தர்வல்லோர்தானே. (௫௨௮)

வல்லோர்க்கும்மூலருக்கும்வகுப்போவொன்று மணியொன்றுஞானமொன்றுமார்க்கமொன்று, கல்லோர்க்கும்பூமியுடசாரத்தாலே கடுவெயதுமூசரந்தான்கண்டுகொள்ளு, புல்லோர்க்குமூலமென்றவித்தையெய்தா புகழ்பெரியபெரியோர்க்குமிதுதானெய்தும், பல்லோர்க்குமெய்தவென்றுலெய்வதுண்டோ பருவமுடன்மைந்தர்களேபரிந்துபோற்றே. (கூஉகூ)

போற்றியல்லோநாலுதிக்குமாடிவந்தேன் பூசைகொண்டேனங்கங்கேபுகழும்பெற்றேன், மாற்றியல்லோ வண்டமெல்லாம் புக்கிப்பார்த்தேன் மகத்தானபேரண்டம்புவனந்தாண்டி, ஆற்றியல்லோபதந்தாண்டியப்பாற்சென்று மடங்காதமுப்பழமேயாயிபாதம், ஏற்றியல்லோதொழுதிறைஞ்சியதுமேற்செல்ல வியல்பானதுவாதசத்தினியல்புகேளே. (கூக0)

கேளப்பாவாச்சரியமுன்மனுந்தைக் கெடியானவெனமூன்றுபேருங்கண்டு, நாளப்பா பூரணத்தில் குளிகைகட்டி நண்பாகவோடுகிறேன்வருஷமொன்று, சூளப்பாவெட்டவெளிசுடர்போற்காந்தி சொல்லுதற்குமொன்றுமில்லையதிலேநாதம், ஆளப்பாசிலம்பொலிக்குள்புக்கிச்சென்றேன் வப்புறமு மிப்புறமுமறிந்திலேனே. (கூகக)

அறிந்திலேன்புக்கியுள்ளேயடங்கியானும் வதின்பிறகுகீழ்நோக்கக்குளிகைநோக்கிப்,பிறிந்திலேன்பதத்தளவுவந்தேன்வந்தேன் பேரானபுவனம்விட்டேயண்டம்வந்தேன், பறிந்திலேனைப்போலமக்காள்நீங்கள் பாயாமல்திரிவதென்னபதரேபோங்கள், மறிந்திலேன்சண்டைகொள்ளவாயுமுண்டோ மாடுகளேயாடுவதுவணக்கம்நன்றே. (கூகஉ)

நன்றெனவேயொருகருவைச்சொல்லக்கேளு நாட்டோர்களறியார்கள்வாதத்துக்கு, கன்றெனவேசிராவணந்தான்கலந்துதானுல் கல்லேதுமலேயேதுகாடுமேது, வன்றெனவேதுளைத்தோடிவேதையாகு மகத்துவந்தானிதைவிட்டால்வாதம்போச்சு, ஒன்றெனவேகருவென்பாரிதுவேயுண்மை யுத்தமனே கேள்நன்றுயுரைக்கிறேனே. (கூகங)

சிராவணம்.

உரைக்கிறேன்கோழிமயில்காக்காயோடே யூர்க்குருவிபருந்தோடுகொக்குமாந்தை, தெரைக்கிறேன் செம்போத்தும்புறு

வுந்தாரா சேர்ந்துநின்றகழுகோடுபதினென்றேதான், மறைக்கி றேன்யானையொடுகுதிரைபன்றி மனுஷனொடுபசுவாடுமானுமே ஹை, தரைக்கின்றபுலிகரடிநாயோடொக்கச் சாங்கமுற்றப்பதி னென்றுந்தயவாய்க்கூட்டே. (ருருச)

கூட்டப்பாவுடும்போடுமளுங்குசாரைக் கொடிதானதவளைமீ ன்ஆமையோந்தி, நீட்டப்பாமலைப்பாம்புமுதளையோடு நிலையான கல்லாமைவிலாங்குகூட, ஆட்டப்பாபதினென்றுமாகக்கேளு ய டவாகமுப்பத்துமூன்றுமாச்சு, ஊட்டப்பா தனித்தனியேபிச்சு வாங்கி யுலர்த்தியதையொவ்வொருகாடுசெடைதான்தூக்கே. ()

தூக்கியிதிற்போடுகிறமருந்தைக்கேளு துறையானகுதிரை பன்றிமனுஷன்யானை,வாக்கியந்தக்கிடாவொட்டைகலைமானேழும் வகையாகக்குறும்பியதுவாங்குவாங்கு, தூக்கியங்கோநற்பதும் நால்பலமேயாச்சுச் சாருதற்கு மருந்தின்னஞ்சாற்றுறேன்யான், நோக்கியங்கோநாதவிந்துவமுரியோடே நூன்மெழுகுமுலைப்பா லுந்தேனுங்கூட்டே. (ருருசா)

கூட்டப்பாபுழுகோடுமிந்திரகோபங் கூறுனவாய்நீருங்கார ஞ்சாரம், நீட்டப்பாவெடியுப்புகவுரிவீரம் நேரானயதிமதுரம்வெ ண்ணெய்பூரம்,ஊட்டப்பாகுன்றிமணிப்பருப்போடொக்க வுத்தம னேநாகவங்கங்காரீயந்தான், ஆட்டப்பாதுருசிமுதல்நாலுஞ்சுண் ண மளவெல்லாங்காசெடைதானிறுத்துப்போடே. (ருருஎ)

போட்டெல்லாம்வசம்புச்சார்வார்த்தேயாட்டுப் புகழாகக் குளம்பதுபோல்வழித்துக்கொண்டுக், காட்டெல்லாம்நல்லெண் ணெய்படிகால்வார்த்துக் கலந்தெல்லாங்கொதிப்பித்துமெழுகாய் வாங்கி, ஊட்டெல்லாம்பீங்கானில்பதனம்பண்ணு வுத்தமனேரவி யில்வைத்தேயொளித்துக்கொண்டு, ஆட்டெல்லாமிதினாலேயாட வேணும் வாகாகாசிராவணந்தானறிந்துகேளே. (ருருஅ)

கேளப்பாசவுசஷ்டியறுவதாலே கெடியானவீடாச்சேயதன் மேல்நாலு, வாளப்பாவாதமுதல்வபஸ்தம்பந்தான் வரிசையுடன் பொற்கலசம்போலேநிற்கும், ஆளப்பாவிவைநாலும்வீடாய்க்கட் டி யதன்மேலேசிராவணமாங்கலசம்வைத்தால்,வேளப்பாவெரித் தசிவன் சொன்னார்சொன்னார் வேதாந்தத் தாய்கேட்டுவிளம்பி னாளே. (ருருகூ)

விளம்பினதோர்சிராவணத்தைவிட்டாயானால் வேதையில்லை ச்சாரணைக்குவிரைவுமில்லை, உளம்பினதோர்கல்மண்ணும்பொன்

ஞாகாது வோடாதுவெகுதூரம்வுட்கொள்ளாது, தளம்பினதோர் தீபமுதற்றாமமேவதை சூட்டிலொன்றுமாகாதுசொன்னேன்சொ ன்னேன், தளம்பினதோர்கொடிபோலேவாதங்கேட்டுத் தாக்கி யந்தச்சுண்ணமிட பொருத்தந்தானே. (௩சுo)

தானென்றசிராவணமுமிடைந்துபோனால் சாரணைக்கும்பில மில்லைக் கக்கமாட்டார், தானென்ற கல்மரமா மணலினுள்ளே தாக்கிடினும்பழுக்காதுசலிக்கவேண்டாந், தானென்றதீபமுதற் றாமமேவதை சாத்திடிலோவொன்றுமில்லைதவறித்தானால், தா னென்ற முதற்காண்டம்வாதத்திற்கு தரித்திருக்கச்சிரோமணி யாய்ச்சாற்றினேனே. (௩சுக)

சாற்றினேனிப்படிதான்யோகஞானஞ் சங்கற்பமாய்கையுட சாரஞ்சொன்னேன், நேற்றினேன் வாசியுடக் கருவையெல்லா மிடகலையின்பிங்கலையினிதமுஞ்சொன்னேன், நாற்றினேன்சிஷரு டகோபமெல்லா மங்கங்கேயாடுகிறயளவுஞ்சொன்னேன், போ ற்றினேன்மேருவுக்குவடக்கேபோகப் பூமியிலேபன்னிரெண்டு யாண்டென்றேனே. (௩சுஉ)

குண்டலி அமுர்தம்.

ஆண்டிருக்கவெப்படியோவென்றாயானா லாத்தாளாங்குண் டலியைமேலேயேற்றிப், பூண்டிருக்கமதியில்விட்டுஅமுர்தமுண் ணுப் பொன்னிறங்காண்குண்டலிக்குப்புகழ்ந்தமேனி, நீண்டிரு க்கவேற்றுதேயபுரத்தூக்கு நிலைத்துநிற்கநந்திகொண்டுவமுர்த முண்ணுக், தூண்டிருந்தமீன்போலேயுயரவாட்டுத் தூக்காமல் குண்டலியைச்சுழியில்மூடே. (௩உ௩)

மூடுவதுமெப்படியோயென்னவேண்டாம் மூதண்டச்சிகரத் தையுள்ளேகும்பி, ஆடுவதுவேணுமென்றாலுள்ளேரேசி அஷ்ட மாசித்தியிதிலாடலாகும், நீடுவதுபிரமனிடபதியில்நிற்க நேராக குழந்தையைப்போலாவாயப்பாத், தேடுவதுசதாசிவத்தில்சேர் ந்துநிற்கில் தேசுமில்லைக்கற்பூரத்தேகமாமே. (௩சுசு)

ஆமப்பாமாலுடையபதியில்நிற்க வாச்சரியம்பதினாறுவய தேயாகும், போமப்பாருத்திரனில்நின்றாயானால் பளிச்சென்று மின்னலைப்போல்பூணுந்தேகம், போமப்பாவகாரமதற்குள்ளே நிற்க வுருவில்லைக்காற்றுப்போலேலாடலாகும், வேமப்பாவைம்புல னும்வெந்துநீறும் வேதாந்தப்பதத்தில்நிற்கவெளியாய்போமே.()

வெளியானநாலுக்குள் நின்றாயானால் வேருமில்லை தாருமில்லை தேகமில்லை, ஒளியானகுருபதத்தினின்றாயானா லுயர்தலுமாம்பறத்தலுமாமொன்றுமில்லை, தெளியானமூலத்தினின்றாயானாற் சேரவெளிச்சூனியமாய்ச்சேர்ந்துபோகும், வளியானவஷ்டகன்மமாடலாகும் வரைகடந்துஞானத்திற்புகலாய்பாரே. (௩௪௬)

புடமொன்றில்பறியப்பாசுண்ணமாகும் போட்டிட்டாலத் தோடேயெல்லாங்கட்டும், கடமொன்றிற்கண்டரவிகடங்கோடி க்குள் கண்டததுபோற்கலந்துஆடுஆடு, விடமொன்றியுண்டசிவ னென்னாதே வேதாந்தமுடிவானவழலைச்சுண்ணங், திடமொன் றிவழலையைத்தான்பாருமக்காள் செப்பார்கள்பெரியோர்கள்செ ப்பார்தானே. (௮௩௩)

செப்பாதேவல்லோர்களூலுக்குள்ளே தெரியாமற்புதைப் பார்கள்வழலையொன்றாய், ஒப்பாதேயென்னாலைவழலைதன்னை யொருசொல்லுமொதுக்காமல்வெளியாய்ச்சொன்னேன், தப்பா தேகடுங்காரமேத்துஞ்சொன்னேன் தவறாமலரியினிடகடிகை சொன்னேன், வுப்பாமற்புளகித்துக்கெடுக்கவேண்டாம் ஓகோ கோபிள்ளைகளேயொடுங்கியாடே. (௮௩௪)

ஆடுகிறவாதத்துக்கிதுதான்தெப்பம் அதிகாமவேலைக்குமி துதான்தெப்பம், ஓடுகிறகுளிகைக்குமிதுதான்தெப்ப மொடுங் காதசித்திக்குமிதுவேதெப்பம், நாடுகிறபோதத்துக்கிதுவேதெ ப்பம் கலங்காமல்மனதுகட்டயிதுவேதெப்பம், கூடுகிறமூலத்துக் கிதுவேதெப்பம் கொள்ளையிட்டுஞானத்திற்கூடலாமே. (௮௩௫)

கூடலாம்வழலையுடசுண்ணங்கண்டால் கூடாதவழலையுடசு ண்ணம்போனால், ஆடலாம்வழலையுடசுண்ணங்கண்டால் ஆட்டி ல்லைவழலையுடசுண்ணம்போனால், ஊடலாம்பூரணத்தில்வழலையா லே யூட்டில்லைவழலைவிட்டால்யோகத்துள்ளே, நீடலாம்சமாதி யிலேவழலையாலே நேர்ந்ததில்லைவழலையென்றுனெறிதான்போ ச்சே. (௮௩௬)

நெறிபோச்சுகுறிபோச்சுவழலைபோச்சு நேராகப்பறக்கிற தோர்குளிகைபோச்சு, பொறிபோச்சுமதிபோச்சுபுத்திபோச்சு பளகித்துயேறுகிறமனமும்போச்சு, பறிபோச்சுபுளிபோச்சுவுப் புப்போச்சு பலதொழிலாய்ப்பாடியதோர்பாட்டுப்போச்சு, கறி போச்சுகறிக்கிட்டசோறுபோச்சு கைமுறையாய்வழலைவிட்டகச டர்க்கென்னே. (௮௩௭)

கசடரேகல்லுப்புகட்டினலென்ன கைமுறையாயிப்படியே காரமேற்று, கசடரேவெறுவுப்புசுண்ணமானல் கடுவேதையோ டாதுகொஞ்சங்காணும், கசடரேகடுங்காரமேறிற்றானல் கைவி

ட்டசூஸ்திரமாய்வாதமாடும்; கசடரேயுப்பைவிட்டுவாதம்பார்த் தால் கடைப்புழுதிவாயில்வந்துகலக்குந்தானே. (அ௬அ)

கல்லுப்புக்கட்டு.

கலங்காமற்கல்லுப்புக்கட்டுசொல்வேன் கைமுறையாய்வரி சையுடன்கண்டுபண்டும், வலங்காமல்வெடியுப்புபலந்தான்பத்து மருவிடுநீபிணியதனைப்பலந்தான்பத்து, விலங்காமல்சீனமதுபல ந்தான்ரெண்டு வெருவியதோர்சாரமதுவராகன்ரெண்டு, சிலங்கா மல்கல்லுப்புவராகன்மூன்று சேரவொன்றாயிடித்துநன்றாய்த்தீ யைமூட்டே. (அ௬௯)

மூட்டையிலேவெந்துருகிச்சுண்ணமாகும் மூதண்டங்கிழித் தாகுமினங்கள்சுண்ணம், ஆட்டையிலேபனியில்வைக்கச்செயநீ ராகு மப்பனேயிந்நீரிலுப்பைத்தீர்த்து, வூட்டையிலேயேழுகர ம்வெய்யிலிலேபோடு ஓகோகோகல்லுப்புக்குயிரேபோச்சு; பூட் டையிலேயுப்புக்குலேபனத்தைக்கேளு பொற்சடையோனென் றுய்க்குப்புகன்றவாறே. (அ௭0)

வாறானசாரமொருபலந்தான்போடு மருவியதோர்சீனமொ ருபலந்தான்போடு, கூறானவீரமதுவராகன்ரெண்டு கூடயிடுவராக ன்ரெண்டுவெழிலச்சுன்னம், தாறானவெடியுப்புநீரைவார்த்துத் த ணியரைக்கநெட்டேறும்சாரவேகம், வீறானசாரமொடுகோரவ்வீர ம் மெய்யழிந்துவுயிர்கலங்கிவிரைந்துசாமே. (அ௭௧)

சாகிறதும்சாகாதும்காணவென்றால் சமத்ததிகமானமக்கா ள்சாற்றுறேன்யான், வேகிறதுக்கிதையெடுத்துத்தீயில்வைத்தா ல் விளங்கியதோர்காரத்தின்பொங்குமில்லை, ஆகிறதோர்சாரத்தி ன்புகைச்சலில்லை யாச்சரியம்வீரத்துக்கிசைவோயில்லை, போகிற துக்கிதுபோதும்மக்காள்கேளும் புகழாகநெட்டடங்கஆட்டுஆட் டே. (அ௭௨)

ஆட்டியிதையப்புறத்தேவைத்துக்கொண்டு அப்பனேகல் லுப்புபலந்தான்ரெண்டில், மூட்டியிதைபொவ்வொன்றாய்ப்பூசிப் பூசி முசியாமல்ரவிக்குள்ளேயுலரப்போடு, ஆட்டியிதையேழுதின முலர்ந்தபின்பு வுத்தமனேபிரண்டையுப்புமுவரிமண்ணுங், கூட் டியிதையரைத்துநன்றாய்வில்லைபண்ணிக் குறையாமற்கல்லுப்பை யிதற்குள்வையே. (அ௭௩)

வைத்தவுப்புமேலிலொருவில்லைபோட்டு மருவியொருவோட்டிலிட்டேயோடுமூடிக், கைத்தவெருகனமாகஅடுக்கிப்போடுகைமுறையாய்வெந்தபின்புஎடுத்துப்பாரு, மொய்த்தவுப்புகவசமொடுவெளும்புபோமேல முத்துப்போல்தந்தம்போல்கட்டும்கட்டும், நைத்தவுப்பைவாங்கிமக்காள்காரமேற்று நன்றுநன்றுகடுங்காரமேறும்பாரே. (௮௪௪)

பாரப்பாகாரமெல்லாமுப்பிலேலற்றிப் பரிவாகமணிமணியாய்த்தங்கமாகத், தாரப்பாசுண்ணாம்புமுப்புங்கூட்டிச் சாரித்துப்புடம்போட்டுக்குகையாய்ப்பண்ணி, வாரப்பாகுகைநிரம்பவிந்தவுப்பை வளமாகமேல்மூடிச்சீலைசெய்து, ஓரப்பாகரியிலிட்டுவூதுவூது வுத்தமனேகடுஞ்சுண்ணவுப்புமாச்சே. (௮௪௫)

உப்பென்றால்வாய்க்கெளிதோமக்காள்மக்காள் உருப்படவேகட்டரிதுகட்டினாலும், கப்பென்றகாரமதிலேற்றமாட்டார் கைமுறையாயேற்றுதற்குக்கருக்கண்டாலும், செப்பென்றகுகைபண்ணியூதமாட்டார் சேர்ந்திந்தக்குகையறிந்துவூதினாலும், கொப்பென்றவுப்பினுடவர்மங்காணார் கோடானுகோடியென்றாற்கூசுநாவே. (௮௪௬)

கூசாதேயுப்பினுடசுண்ணமொன்று குறையாதேரெண்டெடைதான்சாரம்போடு, ஆசாதேயரைக்கரைக்கச்சலமுமாகும் அப்பனேசலத்தினுள்ளேவிரம்பூர, மோசாதேகூட்டியிதைதவைத்துக்கொண்டு வுத்தமனேவெண்காரச்சீனம்தோய்த்து, வர்சாதேரவியிலிட்டகாரம்சீனம் வயிரம்போல்ரெண்டினமுமாறுந்தானே. ()

மாறுகிறவிருகாரம்முள்ளைப்போலே மாட்டியிதிற்கடுங்காரமேற்றுவேற்று, கோறுகிறசுண்ணாம்புக்குகையிலிட்டுக் குமட்டிநன்றாயூதிடவேகடிதாஞ்சுண்ணம், வாறுகிறவாதமெல்லாங்காரவாழ்வு மகிமைசொல்லமுடியாதுமகத்வமெத்த, ஆறுகிறவென்னையாண்டபோகமூர்த்தி யதிகமிருகாரமெனவுரைந்திட்டாரே. ()

அரைந்திட்டகாரமொன்றுசுண்ணமொன்று அப்பனேசாரமதுரெண்டும்போடு,வுரைந்திட்டுஅரைக்கையிலேசலமாய்ப்போகும் வுத்தமனேயிந்நீரில்வீரங்கூட்டித், திரைந்திட்டசூடனைத்தான்துவைத்துப்போடு சேர்ந்ததொருகற்பூரம்துவைத்துப்போடு, இரைந்திட்டிரண்டுமெப்பா விறைத்துப்போகு மேழுதரம்தோய்த்தெடுத்துரவியிற்போடே. (௮௪௯)

போட்டிரண்டும்வெவ்வேறாய்மக்காள்கேளு புகழானசுண்ணம்புக்குகையிலிட்டு, ஆட்டிரண்டுமூதிடவேசுண்ணமாகு மம்மம்மாகடுஞ்சுண்ணம்கூடன்பூரம், மூட்டிரண்டின்வேதைசொல்ல முடியாதென்றால் முந்திரியினொளிகண்டாற்பறந்தகூடன். கூட்டிரண்டும்சுண்ணம்பாய்நின்றதானாற் கூப்பிட்டாற்கும்பிடுமேவாதந்தானே. (௮௫௦)

தானென்றகூடனுடசுண்ணம்புக்குள்ளே சவ்வீரம்போட்டிழைக்கரத்தமாகும், கோனென்றதுரிசியின்மேலிதனைப்பூசிக் குளாவியமேதாரவியிலிடப்பச்சைசாகும், ஆனென்றகுகையிலிட்டுவூதிப்போட அரகராகடுஞ்சுண்ணம்துரிசியாச்சு, வானென்றியாடலாம்துரிசிதொட்டு வாதியெல்லாங்கடைமயிராமக்காள்தாக்கே.

தாக்கிடவேதுரிசிதன்னைச்சூதங்கட்டும்॥ தனித்தனியேசரக்கெல்லாம்கத்திச்சாகும், போக்கிடவேவேதையிடும்முறையோ சொல்ல பூமியுள்ளபனையெல்லாம்போதாபோதா, வாக்கிடவேசிவகாமிவிரிந்தமார்க்கம் மன்னனசிவனுக்குமப்பக்கமாச்சு, ஆக்கிடவேசோறுகறிவேண்டிலுப்பு அணுகாட்டாற்சப்பென்றததுபோலாச்சே. (௮௫௨)

ஆச்சப்பாவுப்பைவிட்டசுண்ணமெல்லா மாறலுக்குஅப்புறத்தேயெறிந்துபோடு, போச்சப்பாவுப்பைவிட்டால்வாதம்பாழாய்ப் பொன்னுக்குவித்தேதுவுப்புவுப்பு, வாச்சப்பாவுப்புமணிநீரிற்றானல் வாதமென்னவயதென்னவளருங்கோடி, ஏச்சப்பாவுப்புமெள்ளகழுவிற்றானே லேதுமில்லைசூனியமாய்வாதம்போச்சே. ()

வாதமொன்றேபோனதுவுமக்காள்கேளு மருவியதோருப்பைவிட்டால்விந்துநாசம், சேதமொன்றேசீவன்தான்திஷ்டிநாசம் செயலானருசிகளெல்லாம்சேரநாசம், காதமொன்றேநடப்பதற்குக்காலேநாசம் கையோய்ந்துமெய்யோய்ந்துகளைமிக்காகும், ஓதமொன்றேஊற்றிருந்துசடமேநாறும் உப்பைவிட்டாலொன்றுமில்லையொக்கப்பாழே. (௮௫௪)

பாழாச்சுவுப்பைவிட்டாயென்றேமக்காள் பரிவானகற்பத்துக்காகாதுப்பு, ஆழாச்சுவுப்பிட்டசெந்தூரத்தை யுண்ணலாம்வெளியுப்புக்காகாதென்றேன், நாழாச்சுமாங்கிசத்திலுப்பைப்போட நலம்பெறவேவிஷநீரைவடித்துப்போடும், ஆழாச்சுசெயலவணமதினற்காயம் அரகராவயிரம்போலிறுகுந்தானே. (௮௫௫)

இறுக்கிவைக்கும்செயலவணந்தின்றுயானால் எழும்பலாம் கேசரத்தில்மதியின்மட்டும், தறுக்கிவைக்கும்விதியெழுத்தைத்தள்ளிப்போகும் சாகாமல்பண்ணுவிக்கும்சட்டைபோக்கும், முறுக்கிவைக்கும்சடத்தைநன்றாய்வயிரம்போலே மூச்சாடவொட்டாதுமூலத்தேற்றும், மறுக்கிவைக்கும்நித்திரையைவரவொட்டாது முகத்துவந்தான்கட்டினமேதார்லவணத்தாட்டே. (அ௬௬)

ஆட்டானவுப்பைவிட்டோருப்பையுண்டால் அப்பனேவெருவையிற்கக்கிப்போடும், ஊட்டானஅமுரியிலேயிறங்கிப்போகும் உவந்துமுண்டவுப்பாலேநரைமெத்தாகும், கூட்டானபுளியாலே திரைமெத்தாகும் குலாமரையோபுளியுப்பைக்கொண்டுதின்பார், பூட்டானவுப்புமக்காள்வேண்டிற்றானால் புகழ்பெறவேகட்டியுப்பைப்பொசித்திடீரே. (அ௬எ)

பொசிக்கநன்றோவாகாதோவென்றால்மக்காள் புகழானகல்லுப்புகட்டிற்றானால், மசிக்கவிந்தக்கல்லுப்பைச்சூதத்தூட்டுவார் போலேயடிபட்டுவுண்டையாகும், ஒசிக்கவிந்தச்சூதத்தை நவலோகத்தி லூட்டையிலேபொன்னாகும்பொன்முன்னூட்டு, அசிக்கையிலேசிவவிர்துகட்டினாற்போ லரகராசிவனுள்ளேகட்டிப்போமே. (அ௬அ)

கட்டிப்போம்சூதமென்றுவாதமாண்பர் கைமுறையாய்த்தழைகளெல்லாங்கசியக்கொட்டி, யொட்டிப்போம்சூதமதுகல்வத்தோட்டி யோகோகோவெண்ணெயைப்போலாச்சென்பார்கள், தெட்டிப்போம்சூதமதுரவியில்வைத்தால் செணத்தோடியிதுநல்லசுத்தியென்பார், மட்டிப்பெண்குதத்துக்குத்தண்ணீர்வார்த்தமதிகெட்டவாதிகளுக்கடுத்தவாறே. (அ௬௯)

வாறானதுரிசியுடசுண்ணமொன்று மருவியதோர்வீரமதுசமனாய்க்கூட்டி, தாறானபழித்தகட்டின்மேலேபூசித் தணலிலிட்டுவூதையிலேதங்கம்நீறும, கூறானவிதுரெண்டில்தாளகத்தைக்கூட்டிக் குலாவியந்தப்பழிமேலேதடவியூது, வீறானதாளகந்தான்வங்கம்வங்கம் விரைந்துவிதுவிளைந்தவிடம்வெள்ளீநீறே. (அ௯0)

நீறானதங்கத்தில்வேதைமக்காள் நிமிஷத்திலினிச்சாகுமெல்லாஞ்சாகு, மாறானகவர்போலக்கோடிவித்தை யடிக்கடிதான் சொல்லவென்றாலனேகம்பாட்டாம், வீறானபழியாகுஞ்சுண்ணத்

தோடே விரமிட்டுமத்தித்தால்ரெத்தமாகும், தாறுனவிதுரெண் டும்வங்கத்தில்தோய்த்துத் தணலிலேபோட்டிடவேதவளநீறே.

தவளமென்றவங்கத்தில்சுண்ணத்தோடே சாரித்துச்சவ்வீ ரம்தங்கத்தூட்டு, தவளமென்றதங்கமங்கேநீறிப்போகும் சாதக த்தைச்சொல்லறியேன்தங்கப்போக்கில், தவளமென்னநூறுதொ ந்தம்வங்கந்தங்கம் சார்ந்தேறும்நூறென்றேன்கோடிமட்டும், த வளமென்றவங்கத்தைநிமிளைகூட்டத் தப்பாதுபஸ்பம்போல்தவ ளமாமே. (அகூஉ)

பற்பம்போல்நிமிளைநின்றால்மக்காள்மக்காள் படுமுன்னே ரூதம்சாம்தங்கம்சாகும், பற்பம்போல்நிமிளைபட்டால்வங்கம்நீ றும் பாருமக்காள்நிமிளைபட்டால்சாரம்சாகும், பற்பம்போல்சார் பரிதுகண்டர்சுண்ணம் பாட்டனுடமூட்டெடன்னதுரிசியாட்டு, பற் பம்போல்துரிசிநின்றால்சாகூதீசன் பறக்கிறதோர்குளிகைக் காம்சிங்கிக்காமே. (அகூஙா)

ஆமிந்ததுரிசிக்குஒப்பார்சொல்வேன் அகண்டபரிபூரணந் தானப்பாவொப்பு, ஓமிந்தத்துரிசியினுற்குளிகைகட்ட வுத்தம னேசொரூபமுதற்பதினுறுகும், வேமிந்ததுரிசிபட்டாலண்டங் கோடி வேதையிதில்விரிக்கவென்றால்வெள்ளேடில்லை, சாமிந்த துரிசிக்குச்சகலதாதும் தாயானவுன்மனேயாள்தவளத்தாட்டே.()

ஆட்டிதிலேமெத்தவுண்டுபுத்தியோர்க்கு அரகராவென்னு லேசொல்லப்போகா. மூட்டிதிலேவெகுமூட்டாய்மூட்டிமூட்டி மூலதருதொந்தித்தார்முன்னூற்றெட்டு, ஓட்டிதிலேமெத்தவெ ன்றுகீழ்போட்டா ருத்தமனேயெழுபதென்றகோடிகாலம், பா ட்டிதிலேநானென்னபாடப்போறேன் பரிவானசொரூபமிதில்ப ண்ணினுரே. (அகூடு)

பண்ணினதோர்குளிகையிலேசித்தர்மெச்சும் பார்வதியும்ச தாசிவனுமுயர்ந்துமெச்சும், ஒண்ணினதோர்பாட்டருடபேரைவி ற்று வோகோகோகடந்திட்டேன்வாதவேலை, யெண்ணினதோ ரெண்பெற்றபோகநாய னிங்காளில்கொடுத்தாரோயேறிற்றப்பா சண்ணினதோர்சண்ணெல்லாம்துரிசிச்சண்ணு சார்வேதுவுப்பி னுடசார்வுதானே. (அகூகூ)

சார்வில்லாநிலையுண்டோவுலகத்தோர்க்குச் சமயோகமில் லாமற்பிள்ளையாமோ, வூரில்லாக்கீர்த்தியுண்டோபாடுவோர்க்கு

வுப்பில்லாருசியுண்டோகறிகட்கெல்லாம், தேரில்லாக்கோயிலுக்குத்திருநாளுண்டோ சிறுக்கியென்றுபிறக்காட்டால்காமமுண்டோ, ஆரில்லாமாயையெல்லாமுன்னுக்குள்ளே யப்பனேவாதமெல்லாமுப்பிலாச்சே, (௮௬௭)

ஆச்சப்பாவெண்காரச்சுண்ணம்போடே யப்பனேவெண்காரம்சாணைக்கூட்டிக், தேய்ச்சப்பாவரைக்கையிலேசலமாய்ப்போகும் சிறுகவிடுசெவ்வீரமுப்புச்சுண்ணம், மாச்சப்பாசலத்துள்ளே வீரந்தோய்த்து மக்களேவாட்டையிலேயுருகிவீழு, மேச்சப்பா போகிவிடும்தீயில்வாட்ட வென்மக்காள்நெய்வார்த்தவிளக்கில்வாட்டே. (௮௬௮)

வாட்டியங்கேவிழுந்ததெல்லாம்மெழுகாய்நிற்கும் மக்களேயிதனோடேதங்கம்லிங்கம், பூட்டியப்பா பிசைந்துகொண்டுநவலோகத்தில் போடுநீநூற்றொன்றுபொன்னுமாகும், ஆட்டியப்பாகாரத்தின்ஆட்டைச்சொல்ல அரியார்க்குமுடியாது அம்மா அம்மா நீட்டியப்பாகாரத்தைவிரித்துஆட நிலையில்லைதலையில்லைநிலைத்திலேனே. (௮௬௯)

தங்கச்சுன்னம்.

நிலையாதகற்பூரச்சுண்ணத்தோடே நேராகவீரமிட்டால்ரத்தமாகும், தலைபானதங்கத்தில்தோய்த்துவாட்டித் தணிக்கவொருபுடம்போடத்தங்கச்சுண்ணம், குலையானகொடுங்கோடிசரக்குக்கெல்லாம் கூறரிதுகூறரிதுபூரச்சுண்ணம், மலைபானதெனக்கெதிரோவாதியென்பார் மண்ணெதிரோமரமெதிரோமாட்டியாடே.

ஆடுகிறவாதிவந்தால்பூரந்தொட்டு ஆடுமக்காளுங்கள்முன்னேயெதிராரில்லை, ஓடுவதைக்கற்பூரம் வங்கம் நீற்றும் உத்தமனே யுபரசங்களொக்கநீற்றும், நீடுகிறசரக்கெல்லாம்தொடுமுன்னேநீறும் நேர்பானவாதிவந்தால்கற்பூரங்கேளு, ஆடுகிறவேதையிலேயென்னசொல்வேன் ஓகோகோபூரணமேயொக்குமொப்பே, (௮௭௧)

ஒப்பானதங்கமென்றசுண்ணத்துள்ளே யுத்தமனேலிங்கமிடுவீரம்போடு, தப்பாதேகாரமிட்டுக்கூட்டியாட்டு சார்வானசெந்தூரமிதுவேயாச்சு, கொப்பானதங்கமென்றகுருவுக்கெல்லாம் கூட்டுமக்காளிதுமூன்றும்பச்சைபச்சை, அப்பானூலென்னசொல்

வேனித்தைக்காட்டி அதிகமுள்ளபெரியோர்கள்மறைத்திட்டாரே. (௮௭௨)

மறைத்திட்டதேதுக்குளென்றால்மக்காள் மருவியதோர்பச்சையிட்டால்வேதையில்லை, நிறைத்திட்டகயிலாசவாசராகி நேரானவீசனுக்குமுக்கண்மூன்றும், கறைத்திட்டகாளகண்டம்சதுர்ப்புஜங்கள் கையிலேவிளங்குகின்றமழுவும்மானும், உரைத்திட்டாலவன்வாதிமற்றோர்மாடு வோகிறகுருக்கிடையும்மூன்றுந்தானே. (௮௭௩)

மூன்றுக்கும்பேரேது முக்கண்ணனென்பார் மூலரென்பார் மூலமென்பார்மூர்த்தியென்பார், மூன்றுக்கும்பொருளறிந்தாலவனேவாதி முப்பாழுமிதற்கொப்புமுடிவுமொப்பு, மூன்றுக்கும்பொருள்சொல்வார் வல்லோர்மக்காள் மூலத்தேசிவகாமி சத்தேகசொன்னாள், மூன்றுக்குள் ளடங்கிற்றுச் சுண்ணமெல்லாம் மூன்றைவிட்டால்சுண்ணத்தின்மூர்க்கம்போச்சே. (௮௭௪)

மூர்க்கமென்றபடிகத்தைத்தொட்டீரானால் மூவுலகும்விரலாலேசுற்றலாகும், மார்க்கொத்தபடிகத்தின்சுண்ணத்தோடே மாட்டுசமன்சவ்வீரம்சிவப்புமெத்த, வார்க்கமொத்தவங்சத்திலிதனைப்பூசி யப்பனைபுடமேபோடக்கடிதாஞ்சுண்ணம், பார்க்கவிந்தவீரத்தில்வங்கம்போட்டுப் பதறாமல்நிமிளையிலேபூசிவையே. (௮௭௫)

வைத்ததுவேசுண்ணாம்புக்குகையில்வைத்து வாகாகவூதநன்றாய்நிமிளைச்சுண்ணம், கைத்ததுவில்சவ்வீரம் கூட்டிக்கொண்டுகடுகவுப்புசாரத்தின்மேலேமக்காள், பத்திதுவும்சாரத்தைமண்ணில்வைத்துப் பருவமுடன்தீயெரிக்கநீரோவற்றும், ஒத்திதுவும்சாரத்தில்வீரங்கூட்டி யுறவரைத்துவெண்கருவால் வில்லைகட்டே.

கட்டியப்பாசுண்ணாம்புக்குகையில்வைத்துக் கலந்தூதுசாரமதுகடியசுண்ணம், ஒட்டியப்பாசாரத்தில்வீரம்போட்டுவுறவரைத்துவெண்கருவால்துரிசிக்கப்பு, கெட்டியப்பாசுக்கான்போல் துரிசியாகும் கெடியானகுகையிலிட்டு வூதிப்போடு, அட்டியப்பாவொன்றுமில்லைதுரிசிச்சுன்னம்! ஆடுகிறசிவயோக மறிவுந்தானே.

அறியாததுரிசியிலேவீரம்போட்டு அப்பனைபதிமேலேபூசி நன்றாய், மறியாதபுடம்போடுதங்கச்சுண்ணம் மக்களேயிதனோடேபுழுகுகூட்டிப், பிறியாதேதசாண்டத்தில் போட்டுப்போடப்

பிரண்டண்டத்தோட்டோடே மெழுகுமாகும், வெறியாதோவ லோகப்பரிசித்தாட்டவேதையப்பாவாயிரத்தோடெட்டுமோற்றே

மாற்றிதுவோபடிகத்தில்மக்காள்மக்காள்வாகானபடிகமொன்றுசாரம்ரெண்டு, போற்றிதுவேயரைக்கையிலேசலமாய்ப்போகும் போடிதிலேவிரத்தைப் பூரந்தோய்த்து, ஆற்றிதனைக்குகையிலிட்டேயூதிப்போடு ஆச்சரியங்கடுஞ்சுண்ணம்பூரமாச்சு. யேற்றிதனைத்தொந்தித்துத்தங்கத்தாட்ட வென்னசொல்வேன் தாதுமுதல்சரக்குநீறே. (௮௭௯)

நீறுனசரக்கினுடவிந்தைக்கேளு நிலவரமாய்ச்சொல்லுகிறேனொளிப்பில்லாமல், கூறுனநீறேடேசவாதுபோட்டுக் கொள்ளவந்தவினத்தின்மேற்பூசிவட்ட, தாறுனவினந்தோறும் மணிபோலாடும் சமுசயங்களொன்றுமில்லைசதமாங்கோடி, விறுனசுண்ணத்திற்புழுகுகூட்டி வெருவியந்தவனத்தின்மேற்பூசியூதே. (௮௮௦)

ஊதையிலேயிச்சுண்ணமினத்திற்பாய்ந்து வுத்தமனேகடுஞ்சுண்ணமாகுங்கோடி, பாதையிலேயெத்தனைநான்சொல்லப்போறேன் பரிசமுதல்தூபவரைவேதையாகும், போதையிலேசிவகாமிசீனம்சொன்னாள் போக்கிதிலேவிரித்தெடுத்தேன் கோடாகோடி, தாதையிலேதந்தையிலேயானவீசன் தாய்சொன்னவித்தையெல்லாமுனக்கென்றாரே. (௮௮௧)

உனக்கென்றுசொன்னதென்னபூரணமேயையா வும்முடைய அடியார்க்குப்பாததூள்யான், எனக்கென்றசுதந்தரத்தை யிழந்துவிட்டேன் ஏகமாய்நின்றபொருளானேனானேன், தனக்கென்றுசொன்னாக்கால்ரெண்டாய்ப்போச்சு தனையறிந்துவனைக்கூடவொன்றாய்ப்போச்சு, மனக்கண்ணாலுனையறிந்தோன்வாதயோகி மற்றவனைவாதியல்லமனுஷமாடே. (௮௮௨)

மனுஷனைப்பிறந்ததெல்லாம்மனுஷனாமோ மற்றுமுள்ளகார்மெல்லாம்சீனமாமோ, கணிசமாய்ச்சாரமெல்லாம் சாரமாமோ கைமுறையாயுப்பெல்லாம்கல்லுப்பாமோ, அனிசமாயிருமூன்றில் வசியம்வாதம் அப்பனேவயத்தம்பம்மூன்றுமாச்சு, இனிசனைய்அலைவார்கள்மூன்றுகாணார் ஏற்றுமந்தவாதியென்று விகழ்ந்துதள்ளே, (௮௮௩)

தள்ளுதள்ளுசீனத்துக்கெதிரோயில்லை சச்சிதானந்தத்துக்கடுகொன்றில்லை, தள்ளுதள்ளுசீனமென்ன மனோக் மலைக்குவிந்

து சார்வானசீனத்திலாயிரமோமாற்று, தள்ளுதள்ளுசீனத்தில்கல்லுப்புசேர்ந்தால் சாதகமாய்வீரத்தையுள்ளேகொள்ளு, தள்ளுதள்ளுமூன்றுமொன்றாய்க்கூடிற்றானால் தயங்காதகற்பூரமதற்குள்சாமே. (௮௮௪)

அதற்குள்ளேபூரமொன்றாய்க்கூடிற்றானா லாகாகாவீரமதற்கசனமாச்சு, இதற்குள்ளேயிட்டதொருவீரமெல்லா மெழும்பாமலுள்ளடங்கிநீறிப்போகும், எதற்குள்ளேயானாலுமந்தவேக மென்மக்காள்கண்டதுண்டோகாணீர்காணீர், வதற்குள்ளலகிரியைப்போற்கண்டத்தைத்தொட்டு வாதமெல்லாம்சீனத்தினாட்டுத்தானே. (௮௮௫)

ஆடுறதோர்நாலோடேவழலைசேரு அப்பனேயஞ்சஞ்சு மெடைதான்கூட்டு. நீடுறதோரிங்கெடைக்குவீரங்கூட்டிநேரவேவெண்கருவாலரைத்துவூது, ஊடுறதோரிங்கெடைதான் வீரங்கூட்டியூதாதுபத்துமட்டும்தொந்தமேறும், கூடுறதோரிச்சுண்ணப்பேரேதென்றால் கொள்ளுறதோர்போதமென்றகுருவுமாச்சே. ()

ஆச்சிந்தக்குருவாலேதுரிசிரூகம் அறுபத்துநாலோடுவுபரசங்களெல்லாம், வீச்சிந்தப்புழுப்பட்டாலெல்லாம்சுண்ணம் வேருச்சுவாதுபட்டாலுருகியாடும்; ஒச்சிந்தக்குருவாலேளடுத்தவேதையுரையாதேயாயிரத்தோடைந்நூற்றெட்டு, மாச்சிந்தசீனத்தால் மேருவுக்கீசன் மாட்டினதாலாயிரத்தோடெட்டுமாற்றே. ()

மாற்றடியேனைந்நூற்றுக் கதிகம்சொன்னேன் மருவியென்னைப்பெற்றெடுத்தசிவகாமித்தாய், போற்றடியேன்றனைமெச்சியிக்குருவைச்சொன்னாள் போக்கெல்லாம்பார்த்தலைந்து புளகமானேன், வற்றடியேன்மாற்றேறச்செம்புபோலாம் யிருக்கையிலேரசம்போலவிளகுமக்காள், ஊற்றடியேவெட்டவெட்ட வூறிறைற்போலொடுங்காதுவொடுங்காதுபடிகந்தானே. (௮௮௮)

தானென்ற தாதுமுறைபிறப்பைச்சொல்வேன் சமூசயங்களெண்ணுமேதயிடத்தைச்சொல்வேன், ஏனென்றபொதிகைக்குவாயுமூலேயேமூாயிரங்காதமெழும்பிப்போனால், காவென்று குறுக்கிலேமலைதானென்று கடந்துசென்றால்தேவனும்பட்டணத்தின்பேரு; வானென்றவிசாலமது ஆயிரமாங்காதம் மக்களேநான்செல்லை மருவிப்பாரே. (௮௮௯)

பாரிந்தப்பட்டணத்தில்நவலோகங்கள் பருமலைபோல்நிற்கு
நிற்குமக்காள்பாரு. போரிந்தக்கெந்தியொடு தாதுவகையெல்லா
ம் புகழாகமலைமலையாய்நிற்கும்நிற்கும், காரிந்தப்பட்டணத்தைக்
கடந்தாயரானால் சைமுறையாயப்புறத்தேமலைதானென்று, ஓரிந்த
மலைக்குநேர்வடக்குமக்காளேற்றுமூவாயிரமாங்காதமேமோடே. ()

ஓடினாற்பருவதந்தானென்றதுண்டு வுறுதியுமோற்பருவதந்
தானென்றுபேரு, ஆடினால்மேற்கடலிலங்காதம்புக்கி அப்பனே
கீழ்க்கடலிலங்காதம்புக்கி, நீடினாலுயரமதுவாயிரமாங்காதம் நி
லைத்தமலையடிவாரத்திஞ்சுகூபம், நாடினாற்கூபமென்றவிசாலங்கே
ளு நன்றானநாற்காதம்நலந்தான்காணே, (௮௬௧)

காணப்பாஅஞ்சானகூபத்துள்ளே கடியதொருசூதமஞ்சில்
நிறைந்துநிற்கும், பூணப்பாயிச்சூதமெடுத்துவந்தால் புகழானசு
த்தியொன்றும்போடவேண்டாம், தோணப்பாமலைதோறுஞ்சூதமு
ண்டு சொரூபமென்றகுளிகையிட்டாலெல்லாங்காணும், வூணப்பா
யிம்மலையில்பிறந்ததாது வுத்தமனேயுரைக்கிறே னுணர்ந்துகே
ளே. (௮௬௨)

கேளப்பாகறடமொடுகோளகமுஞ்சூதம் கெடியானஅரிதார
ம்கெந்தகமும்வீரம், வாளப்பானவக்கிரந்ததாலம்பமூர்த்தம் ம
ருவியதோர்கிரபந்திதொட்டிக்குதிரைப்பல்லு, நீளப்பாசங்கமொ
டுகபரிதுத்தம் நிலையானபலன்வித்தகங்காந்தம்லிங்கம், ஆளப்பா
சரக்காண்டம்தாளகமுஞ்சிலையும் அப்பனேவுபளமும் சாலாங்கம்
பேரே. (௮௬௩)

பேரானகற்பரியுங்கற்பூரசத்தோடு பெருத்ததொருஅஞ்சன
ந்தானஞ்சுவகைசாதி, வாரானசக்கரமும்தசங்கத்தோடே மரு
வியத்தார்சிலாமதமும்கார்முகியுங்கேளு, காரானமாட்சிக்குமஞ்சு
சாதி கருவானஅப்பிரகப்பாஷாணத்தோடு, நேரானபாஷாணமு
ப்பத்திரண்டு நிலவரமாய்மலைதோறும்பிறந்ததாமே. (௮௬௪)

தாதுவுக்குப்பதிலாகப்பறங்கியப்பா தாய்சொல்லச்சமைத்
துவிட்டாள்சகலதேசம், கோதுவுக்குமிதனோடேயறுபத்துநாலு
கூடிற்றுபறங்கியுடகூட்டத்தோடே, ஏதுவுக்குப்பூமிக்குத் தாது
வோடே யிணையல்லயிணையல்லபறங்கித்தாது, மாதுவுக்குமாதா
னசிவகாமித்தாய் வரிசைசொல்லிப்பழக்குவித்தாள் மக்காள்கே
ளே, (௮௬௫)

கேளப்பாமுப்பத்திரண்டுதாது கெடியானமலைதோறு முண்டுவேண்டு, வாளப்பாமலையெதுவெனென்றுகேட்டால் மருவினான் பார்த்துவந்தமலைப்பேர்சொல்வேன், நீளப்பாகலியாணிகந்தமாதம் நீலைபமகூடமொடுராமகூடம், ஆளப்பாருத்திரகூடம் பூதகூடம் அப்பனைகளனிகண்டமென்றும்பேரே. (௮௯௬)

பேரானலட்சுமியாம்விசாலமொன்று பெருத்தநதியதன்மேலேநாறுவோடும், வாரானபத்தலயமென்றுவொன்று மக்களேசேதுமந்தமென்றுவொன்று, கோரானகொங்கணர்தான்மென்றுவொன்று கொள்ளுமொருகாசிக்குத்தெற்கேகேளு, தாரானவிந்தாரணயமென்றுவொன்று தனித்துநின்றசிந்துவென்ற மலைதானென்றே. (௮௯௭)

மலைகேளுகிரவுஞ்சமென்றுமக்காள் மருவியதோர்சாலக்கிராமமதுவொன்றென்று, மலைகேளுமல்லிகார்ச்சுனந்தானென்று மருவியதோர் மதுவிளையுங்கொல்லமலையொன்று, மலைகேளுகோரக்கர்பன்றிமலையொன்று மக்களேசதுர்முகந்தா னடுக்கவொன்று, மலைகேளுபொதியையிலேஅகத்தியர்தான்வாசமகேந்திராசலமென்றமலைதானென்றே. (௮௯௮)

ஒன்றொன்றுக்குறிப்பிட்ட மலையோசொன்னே னேகோகோகுட்டிமலைகோடாகோடி, ஒன்றொன்றாய் மலைதோறுந் தாதுவுண்டு வுத்தமனேகுகமுண்டுமூலிகைகளுண்டு, ஒன்றொன்றாய்மலைதோறும்நாதாக்களுண்டு வோடுகிறபிள்ளைகளோஓகோகோடி, ஒன்றொன்றாய்ப்பார்த்தலைந்துகண்டுசொன்னே னுரைக்கிறேன்சந்தையத்தையுணர்ந்துகொள்ளே. (௮௯௯)

உணர்ந்துநின்றலவணமொடுகாரசார மொருமூன்றால்வெவ்வேறுவுறவுசேர்த்துக், கணர்ந்துநின்ற சூதனொடுகெந்திகளைக் கூட்டிக் காரசாரக்கரணம்பறங்கிசெய்தான், யிணர்ந்துநின்ற யிருபத்தோடைந்துகூட்ட மென்மக்காளுபரசத்தை யேற்றவென்றால், புணர்ந்துநின்றமண்கல்லுஅஸ்திரோமம்புகழானஜீவன்முதலொருநூறுச்சே. (௯00)

ஆச்சப்பாவுபரசத்தைவிரித்துச்சொல்ல வைந்நூறுபாட்டாகுமனேகம்சொல்ல. ஓச்சப்பாஞானத்திலாயிரத்துச்சொச்ச முத்தமனேயாயிரத்துச்சில்வானவாதம், நீச்சப்பாவென்று சொன்னயேழுலட்சமெல்லாம் நிலையாகச்சோதித்து யிதிலேசொன்னேன்,

பூச்சப்பாசகலநூலைந் நூறில்தங்கம் புகழ்பெரியோர்க்கடுமையிட்டுப்புகட்டினேனே. (௬௦௧)

புகட்டியதோரென்னூலில்வாதம்பொய்யோ புரிசடையோனொளித்திருந்தமூலம்பொய்யோ, பகட்டியதோருலகத்தில்ஞானம்பொய்யோ பராபரையைப்பூசித்தபருவம்பொய்யோ, அகட்டியதோரஷ்டாங்க யோகம்பொய்யோ அப்பனேகல்லுப்புக் கட்டுப்பொய்யோ, சகட்டியதோர்மூலத்திற்சொரூபம்பொய்யோ சாற்றினதோர்சுண்ணம்புபொய்யோபாரே. (௬௦௨)

பாரப்பாமுதற்காண்டமுகமுமாச்சு பரிவானநடுக்காண்டம்மார்புமாச்சு, வேரப்பாபிற்காண்டமுதரந்தொட்டு வுத்தமனேபாதவரையொக்குமொக்கும். ஆரப்பாயம்முறையாய் நின்றதென்று லகண்டசிவனிம்முறையாய்நின்றமார்க்கம், நேரப்பாமுதற்காண்டம்முற்றுஞ்சொன்னே னிலைபானபோகர்பதம்நினைந்துகூடே.

கூடுவதுஎவ்வாறுவேதாந்தமார்க்கம் குறிப்பானமூன்றெழுத்துவுபதேசமுன்னே, நாடுவதுரெழுத்துயிரண்டாந்தீட்சை நலமானஅஞ்செழுத்துமூன்றுந்தீட்சை, யூடுவதுஆறெழுத்து நான்காந்தீட்சை யுத்தமனேயெட்டெழுத்துஅஞ்சாந்தீட்சை, ஆடுவதுபத்தெழுத்துஆறுந்தீட்சையப்பனேபதினைந்தோடேழுமாச்சே

ஆச்சப்பாபதினாறுஎட்டாந்தீட்சை யாச்சரியம்சக்தியுடபிரசாதவித்தை, ஒச்சப்பாஒன்பதுதான்பின்புகேளு யுத்தமனேபரமானபிரசாதவித்தை, வாச்சப்பாபத்தாச்சுதீட்சைமார்க்கம் மருவியதோர்பதினொன்றுமவுனதீட்சை, மூச்சப்பாஆடாதுமெட்டில்சேரும் மூதண்டமனத்தைமெள்ளஅறிவிற்சேரே. (௬௦௫)

வாதகாவியம் மூவாயிரம்
முதற்காண்டம்
முற்றிற்று.

—*—

கடவுள் துணை.

கொங்கண நாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

வாதகாவியம் மூவாயிரம்.

இரண்டாம் காண்டம்.

—(*)—

நடுக்காண்டம்பாடுகிறேன்பூரணமேகாப்பு நலமானசுண்ணம்புக்காடுகோடு, அடுக்கின்றவங்கமொன்றுநாகமொன்று அப்பனேயீயமொன்றுவருகும்போது, தடுக்கின்றசூதமொன்றுமதிலேவிட்டுத் தாளகமாஞ்சுன்னமொன்றுமதிலேதூவி, மடுக்கின்றவுப்பாலேபூரச்சுன்னம் மூட்டியேயாரெடையிட்டுவறுத்திடாயே. (௧)

வறுத்தவதைக்கரண்டியிலேகிண்டித்தூளாய் வாங்கியிதிலிலொன்றுவீரங்கூட்டி, நிறுத்திதனைக் கருவாலேவில்லைகட்டி நேராகவூதப்பாசுண்ணும்பாகும், கறுத்தது தான்கண்டாக்கால்வீரங்கூட்டிக் கைமுறையாய்க்கருவாலேவில்லைகட்டி, மறுத்ததனைச் சுண்ணம்புக்குகையிலிட்டு மாட்டிநன்றாயூதிடவேசுண்ணம்பாமே. (௨)

ஆமிந்தச்சுண்ணத்தைநீற்றிக்கொண்டே பந்தெடைக்குச்சாரமிட்டேயாட்டநீராம், ஆமிந்தநீருக்குள் சூதம்வார்த்தேயுத்தமனேயசைத்தாட்டமெழுகாய்ப்போகும், தாமிந்தச்சூதத்தையைஞ்சுன்னக்குகையில் தாக்கிவைத்துப்புடம்போடச்சுன்னமாகும், வேமிந்தச்சுன்னத்தாலுபரசமுஞ்சாகும் வேகிறதோர்விதமெல்லாம்விளம்புறேனே. (௩)

விளம்புறேன்சுன்னத்திற்புழுகுசீனம் வேதித்தேயுபரசத்திற்சரக்கிற்பூசி, விளம்புறேனூதிடவேயெல்லாஞ்சுன்னம் வெவ்வேறும்நவலோகஞ்சாரகாரம், விளம்புறேன் சுண்ணும்பாங்கோடாகோடி வேதைசொல்லமுடியாதுவேறுந்தூறும், விளம்புறேன்சுன்னத்தில்சவ்வாதுகாரம் மேதித்துப்பதனமாய்விளங்கச்செய்யே.

செய்யப்பாசவாதெடுத்துவுபாகமுஞ்சரக்கும் நேயத்தவுடன்மணிபோலத்திரண்டேயாடும், மெய்யப்பாமெய்யப்பாபார்த்தபடிசொன்னேன் வேறொன்றுமொளிப்பில்லைவெளியாய்ச்சொன்

னேன், பொய்யப்பாவென்றுதேபார்த்துரைத்துச்சொல்லு புக ழானரசச்சுன்னந்தொட்டேபெறக், கையப்பாவெட்டாதுநீணைவெட்டாது காற்றிலிட்டதீப்போலேகலருந்தானே. (௫)

தானென்றசுன்னத்தாற்பூரந்தொட்டுத் தாளகத்தால்வங்கத்தால்நிமிளைதொட்டு, ஊனென்றசாரத்தால்துரிசுதொட்டே யோங்கியதோர்வீரத்தால்பரியைத்தொட்டுக், கானென்றசரக்குமுதல்காரசாரங் கையிலிட்டவுபரசமும்மாளுமக்காள், வானென்றதாயிலாமனோன்மணிக்குமப்பால் மகத்தானவுப்பேதுபொட்டிலையாமூப்பே. (௬)

வெடியுப்புநீர்.

பொட்டிலையுப்பதெட்டு புளியாறுசீனமொன்று
யிட்டமாம்சாரமொன்று மியல்பெறவிடித்ததையத்
தட்டியேவில்லைபோலத் தணலிலேகொளுத்துவீரேல்
சிட்டரேசுழன்றுவெந்து செய்ததுசுண்ணமாமே (௭)
சுன்னத்தைப்பனியில்வைக்கச் சுழன்றதுதுடியாம்பின்னர்
பண்ணுற்றசாரங்கட்டும் பகர்ந்தநற்சீனங்கட்டும்
என்னுற்றதுரிசிகார மியல்படவிறுகிக்கட்டும்
மன்னுற்றருடன்கட்டும் மாநாகங்கட்டும்பாரே. (௮)
பாரும்நீரிந்தநீரிற் பரியுடன்சாரம்ரெண்டு
தாருயிர்காரமொன்று தனியரைவீரங்கூட்டிச்
சேருயிர்பூரங்காலாய்ச் சேர்த்தரையிந்தநீரில்
நீருயராகவார்த்து நெகிழவேகுப்பிவையே. (௯)
வைத்திடுங்குழம்புக்குள்ளே வளம்பெறக்குடவன்காய்ச்சிப்
பைத்திடத்தோய்த்துவாநீ பருவமாய்ப்பதினைந்தாக
மைத்திடச்செம்புவர்ணம் வளம்பெறவுள்ளேபுக்கும்
எய்த்திடத்தகட்டுமேலே லேபனமருந்துகேளே. (௧௦)

சுன்னமுறை.

கேளுநீதுருசுச்சுன்னங் கெடிபடும்வீரச்சுன்னம்
வாளுபர்சூதம்பூரம் வளம்பெறுங்காரமைந்தும்
தாளுயர்கோழிப்பிச்சால் சாரவேயரைத்துவைத்து
யேளுயர்குடவன்மேலே யிதம்படவிசையப்பூசே. (௧௧)
பூசிநீவரட்டிமெள்ளப் புகழுறப்புடத்தில்வைத்து
மாசிலாக்காரங்குத்தி வளம்பெறவுருக்கிப்பார்க்கக்

கோசிலாமாற்றேரேழு குமட்டிமொணிக்கொக்க
வாசிலாவாத்தாள்சொல்ல வறைந்தநூல்மூலக்கட்டே. (கஉ)

கட்டுண்ணுவண்டத்தோலைக் களங்கறச்சவ்வைப்போக்கிப்
பட்டுறச்சுன்னநீரிற் பரிவுடனரைத்துப்பாங்கா
யொட்டுறப்புடங்களுற்று லோங்கியேசுன்னமாகும்
வட்டுறுமண்டநீரில் மாட்டுறமுறைமைகேளே. (கங)

கேளுநீயண்டமுன்னீர் கெடிபடவார்த்தேயொன்றில்
வாளுமிச்சுன்னம்போட்டு வளம்பெறுஞ்சினம்போட்டு
வேளுறுவீரம்போட்டு விளங்கியபூரம்போட்டுத்
தோளுறக்கடைந்துவைக்கச் சுகவண்டசெயநீராமே, (கச)

ஆகின்றநீரிலுப்பை யரைத்துரவியிற்போடப்
பாகொன்றிச்சுன்னமாகும் பகர்ந்தநாற்சுன்னத்தூட்டி.
வாகொன்றியரைத்துப்போட வளம்பெறச்சுன்னமாகும்
தாகொன்றியிணங்களுக்குத் தாக்கிநீயரைத்துப்போடே. (கரு)

போட்டிடுமிணங்கன்றன்னைப் புகட்டிடுசாரன்மேலே
யாட்டிடுசாரந்தன்னை யணைத்திடுகாரன்மேலே
கூட்டிடுகாரந்தன்னைக் குமட்டிடுசூடன்மேலே
நீட்டிடுசூடன்றன்னை நிலையுற்றகண்டர்க்கென்னே. (கசு)

என்னநற்றுருசுச்சுன்ன மெடுத்துநீபூரத்தூட்டு
பன்னநற்பூரச்சுன்னம் பாய்ச்சிடுமால்தேவிக்குத்
தன்னியசுன்னமாகும் தனையிடவீரச்சுன்னம்
மன்னியவீரம்நீறி மகத்தானகுருவுமாமே. (கஎ)

குருவெனும்வீரஞ்சேரு குலாவியசூதத்துள்ளே
மருவியேயரைத்துமுன்போல் வளம்பெறரவியிற்போடத்
திருவெனநின்றசூதந் திசையெலாங்குருவேயாகும்
மருவியசூதந்தொட்டே யணைத்திடுநிமிளைக்கென்றார். (கஅ)

என்றநன்னிமிளைதானு மியல்படவிந்தநீரில்
தன்றிடுநிமிளைநீற்றைச் சாற்றிடுபரியின்மேலே
யஃறியபுடமொன்றாகி யகண்டிடும்விரிந்துசொர்னம்
வன்றியவாதமென்னும் வாருதிகெற்பமாமே. (ககூ)

ஆமதேயிந்தமார்க்க மறுபதுமாகுஞ்சுன்னம்
போமதேயுபரசங்கள் புகட்டியசத்தேயாகும்

காமதுரூதத்தூட்டிக் கடுகியேவிடுவிச்சேர
வோமெனுங்கமனமார்க்க மோடலாமோடலாமே. (௨0)

ஓடலாஞ்செயசூதத்தி லூட்டிச்சாரணையேசெய்யில்
நாடெலாந்திரியலாங்கேள் நமனுக்குமெய்திடார்கேள்
ஆடலாம்வாசியோடு முறவுற்றபூரணத்திற்
கூடலாமாத்தாள்பாதங் குறைவறப்பூசைபண்ணே. (௨௧)

பண்ணிடுமுப்புச்சுன்னம் பதிமுன்னேசூதஞ்சாகும்
தண்ணுயிர்க்காரச்சுன்னஞ் சகலமுஞ்சத்துபண்ணும்
விண்ணுயர்வீரந்தங்கம் வேண்டியகுளிகையாகும்
கண்ணிடுங்கருமால்தேவி காட்டுமுன்னியமாமே. (௨௨)

ஈயமாம்லோகமெல்லா மியல்பெறவின்னுங்கேளு
காயமேசெயிக்கவேண்டிற் கண்டுண்ணுசூதச்சுன்னம்
தோயமாந்துருசுச்சுன்னந் தொடுமுன்னேயெல்லாஞ்சாகும்
பாயவேசுன்னத்தோடு பாய்ச்சுநீசவாதுகூட்டே. (௨௩)

கூட்டவேகுருவினோடு குலாவியசாரங்கேளு
ஆட்டியவண்டம்போலே யடைவாகச்சாரஞ்சீவி
நீட்டவேபலமொன்றாக நிறுத்ததைவைத்துக்கொண்டு
பூட்டவேயபினியஞ்சு பொறிமிளகுஞ்சுங்கூட்டே. (௨௪)

சாரக்கட்டு (வேறு)

கூட்டேரெண்டுபலமொன்றாய்க் குமுறமேனிச்சாற்றரைத்துக்
காட்டேசாரந்தனைமேலே கவசம்போட்டுரவியிலிடு
நீட்டேதினந்தான்பதினொன்று நெறியாய்ரவியிற்காய்ந்தபின்பு
ஆட்டேகழட்டியதைவாங்கி யப்பாற்சுன்னச்சிலையொன்றே. (௨௫)

ஒன்றுஞ்சுன்னச்சிலையின்மே லுறவாயிளக்கியறக்கதனை
நன்றாய்க்கவசம்போற்கட்டி நாட்டிலிளங்கண்சாணியப்பிப்
பன்னும்ரவியிலுலாவிட்டுப் பருகிவக்கமுருகும்போக்
கொன்றேயழுத்தியாறவிட்டுக் கொட்டிக்கிழித்துவாங்கிடுமே. ()

(வேறு) காரக்கட்டு.

வாங்கிநீசாரம்பாரு வளம்பெறுந்தந்தம்போலே
பாங்கியசாரச்சுத்தி பதைப்பறச்கட்டுமாகும்
ஓங்கியகாரங்கட்ட வொன்றியமுறையைக்கேளு
தாங்கியவெண்ணெய்போகச் சாணியாற்கழுவிப்போடே. (௨௭)

கழுவியகாரந்தானும் கடுகவேவபலமொன்ருக
முழுகாயுருவிச்சாற்றில் மூட்டிநீரவியிற்போடு
மழுவெனக்காயக்காய வளம்பெறத்தோய்த்துப்போட்டே
யெழுவியதினமோரேழி லியல்படவெழுக்கும்பாரே. (உஅ)

பாருநீசாரக்கட்டைப் படுமுன்னேயெல்லாம்சாகும்
ஆருமிக்காரசார மறிவில்லாரறிந்திடார்கள்
சேருமித்திறனிாண்டிற் சேருநீர்முறையைக்கேளு
காருமொய்குழற்ருய்சொல்லக் கைகண்டேன்கைகண்டேனே. ()

கண்டதோர்தொழிலின்மார்க்கங் கவருறுமந்தியைப்போல்
கொண்டதோர்சுன்னமார்க்கங் கோடிக்குங்கோடிதாண்டும்
பண்டிதையறிந்தசித்தர் பரயரையிருளினூலே
தண்டிடில்சூதமார்க்கம் சாற்றிடார்சாற்றிடாரே. (௩0)

சூதக்கட்டுச் சுன்னம்.

சாற்றியசூதக்கட்டைத் தனிபெறச்சுன்னமாக்க
வேற்றியவராகனூலு மெடுத்துநீமலைபோற்செய்து
கோற்றிடுவீரச்சுன்னம் கூடிடுதுருசிச்சுன்னம்
மாற்றியேபூசிப்பூசி மனம்பெறரவியிற்போடே. (௩௧)

போட்டபின்குகைதான்செய்யப் புகட்டியசுன்னங்கேளு
காட்டியகடலின்மேலே கலந்திடுநுரையின்சுன்னம்
கூட்டிடுவுப்பிற்பாதி கொட்டுமுன்னண்டநீரை
நீட்டியேயரைத்துக்காய்ந்து நிலைபெறவூதிப்போடே. (௩௨)

போடதுவுப்புச்சுன்னம் பொலிவுறுசீனம்ரெண்டில்
நாடதுமுன்போலூது நலம்பெறச்சுன்னமாகுங்
தேடியசீனச்சுன்னம் சேர்ந்திடுமிணங்கன்ரெண்டில்
ஆடியவணங்கனென்று மணைத்திடுசூடன்ரெண்டே. (௩௩)

ரெண்டெனுஞ்சாரச்சுன்னம் ரெட்டிடுகாரம்ரெண்டில்
கண்டெனுங்காரமொன்றில் கலந்திடுமால்தேவிக்கு
வொண்டியேயெட்டுச்சுன்ன மொருநிறைகுகைபோற்பண்ணி
வண்டணிகுழலேசூத மாத்திரையதற்குள்வையே. (௩௪)

வைத்துநீகுகையைமூடி வளம்பெறப்புடமேசெய்யக்
கைத்தலநெல்லிக்காய்போல் கைகண்டசூதச்சுன்ன
மெய்த்திடாமுனிவர்சித்த ரிவர்களுக்கெய்துமார்க்கம்
மற்றவர்க்கெய்திடாது வாசியோர்க்கெய்துமென்னே, (௩௫)

என்றநற்றங்கம்நாவி லிடுமொன்றுசூதிச்சுன்னம், மன்றவே கொடுத்துமெள்ள மணியதுபோலேவாங்கித், தன்றியதுருசுசுன்னம் சவ்வீரச்சுன்னத்தோடு, பொன்றுறப்பூசிப்பொன்னு வரையிலைகவசங்கட்டே. (௩௬)

கவசித்தவிலையினோடு கலறுகல்லுப்புச்சுன்னம், அவசித்துச்சீலைசெய்தே யமலியாய்ப்புடமேபோடப், புவசித்ததங்கந்தானும் பெலிந்துவெண்சுண்ணமாகும், தவசித்தயோகஞானந் தய்யலர்க்கெய்துமென்னே. (௩௭)

என்றிந்ததங்கச்சுன்ன மெடுத்தைந்துகாசுதூக்கித், தன்றுமூன்சாரக்கட்டி தனிலஞ்சுகாசுதூக்கு, பன்றியக்காரக்கட்டு பாய்ச்சஞ்சுகாசுதூக்கி, மன்றவேயொன்றாய்க்கூட்டிவளப்புடம்போட்டுக்கட்டே. (௩௮)

கட்டியகுருவுக்குள்ளே காட்டியதொழிலைக்கேளு, வொட்டியகுருவைவீரத் தூறப்போடச்சிவப்புமாகும், தட்டியசிவப்பிற்சீனம் சாங்கமாய்ச்சீலையூட்டி, யட்டியவீரன்மேலே யடைவாகக்கவசம்பண்ணே. (௩௯)

பண்ணியகவசமேலே பாய்ச்சுநீயுப்புச்சுன்ன, மெண்ணியதணலிற்போட்டே வியல்பெறவிதமாயூதப், பண்ணியகோடிமாறு பருவத்துச்சுன்னமாகு, முண்ணியநீறும்வீர முறப்போடச்சிவக்கும்பாரே. (௪0)

பாருநீசிவப்பினோடே பாய்ச்சிடுலிங்கந்தன்னை, வாரிதைமெழுகுபோலேமத்தித்துவைத்துக்கொண்டே, யாரிதைநவலோகத்தி லாவதுநூற்றுக்கொன்று, சேரிந்தக்கொடுப்பினாலேதிசையெலாந்தசமாற்றுமே. (௪௧)

இரசிதமார்க்கம்.

ஆகவேரசிதமார்க்க மறையுறேன்பாருபாரு. போகநல்வெள்ளிநாலு புகழ்சூதச்சுன்னமொன்று, மேகமாயுருக்குவண்டையெடுத்ததன்மேலேபூசத், தாகநல்வீரச்சுன்னம் தாளகச்சுன்னம்பூசே. (௪௨)

பூசுமேல்பொன்னுவாரை புகழ்பெறவுப்புச்சுன்ன, மூசுமேற்சீலைசுற்றி யுளவதாய்ப்புடமேபோடே, மாசிலாரசிதந்தானும் வளர்தரக்குருவேயாகும், கோசுநல்ரசிதச்சுன்னங் கொடுமலைவெள்ளியாமே. (௪௩)

ஆமிந்தரசிதச்சுன்ன மவைஞ்சுவராகன் தூக்கிப், போமிந்து
ஞ்சாரமஞ்சு பொலிந்தவெண்காரமஞ்சு, சேமிந்தவளககள்மூன்
றுஞ் சேரவேபொடியதாக்கிக். காமிந்தப்புடத்தைப்போட்டுக் க
ளங்கறவடைத்துக்கொள்ளே. (சச)

கொண்டந்தகுருவினுமேல கூட்டுறேன்ரசிதமார்ச்சகம், தண்டி
யவாசியோரே சதுர்மறை யந்தத்தோரே, விண்டநல்வெளியி
னேரே விபரமாயான்சொன்னாலே, யுண்டெனவுணர்ந்துபார்க்க
வொருகோடிரசிதமாமே. (சரு)

ரசிதமாங்குருவைத்தொட்டு நாட்டுமால்தேவிவெள்ளை, நிசி
தமாஞ்சிங்கிவீரம் நிறையுற்றபாஷாணங்கள், மசிதமாய்ப்பூசிப்பூ
சி வாட்டிடவுருகும்பாரு, அசிதமாமிரும்புசெம்பு மணிவங்கநாத
த்தூட்டே. (சசா)

ஊட்டிடமுறையைக்கேளு வொருநாற்றுக்கொன்றேபோடு
நாட்டிடரசிதமல்ல நலம்பெறுமாற்றுமெத்தப், பூட்டெடைரசித
வேம்பு புகழுற்ச்சொன்னேன்சொன்னேன், காட்டினிற்றழைவே
ர்தேடிங் கசடனேயிதனைப்பாரே. (சஎ)

பாருமுன்சொன்னவந்தப்பரியுடகுருவின்மார்க்கந், தாறுமு
ன்காமம்வாய்நீர் தனித்திடுமுலைப்பால்மூன்றல், ஆருமிக்குருவை
க்கூட்டி யரைத்தரைதக்குழப்பிக்கொண்டு, போருயிர்விரங்கெந்தி
புகழ்லிங்கம்சிலைபூசே, (சஅ)

பூசுநீகெவுரிதொட்டி புகழ்பெறுமாலின்தேவி. பாசுவில்வெ
வ்வேறாக வதையதைப்பூசிவாட்டி, மாசறுநவலோகத்தில் வகை
நூற்றுக்கொன்றேயீயத், தேசுவும்வேதையாகுஞ் சிலைகளுமேம
மாமே, (சகூ)

ஆகவேயின்னங்கேளு அளவற்றதொழிலின்மார்க்கம், வாக
நற்றங்கம்நாலு வளம்பெறுநாகம்நாலு, மேகமாயுருக்கிமெள்ள
விதிலொன்றுசூதச்சுன்னம், போகவேகொடுத்துமெள்ளப் புக
ழுறமணியாய்வாங்கே. (ருO)

வாங்கியமணிக்குமுன்போல் வளம்பெறமருந்துபூசித், தாங்
கியேபுடத்தைப்போடக் தனிநாகக்குருவாம்பாரு, பாங்கிகேளி
தனில்வேதை பரிசத்திமேலம்மாகு, மாங்கியகுருக்கள்பண்ண வ
றையுறேனறிந்துகொள்ளே. (ருக)

அறிந்திடுரோகம்போல வந்தந்தக்குருவின்மார்க்க, மறிந்திடுங்கபரிசத்து வழங்கியவிரும்போடீயம், செறிந்திடுஞ்செம்புகாந்தஞ் செயப்பட்டபாஷாணங்கள், ஒறிந்திடுமுபரசங்க ளூட்டியிப்படிநீபாரே. (ருஉ)

நீபாருபரத்தைதயுன்னி நிலைபறமுன்னைப்பார்க்கும், தாய்பாருவடுக்கக்காண்பான்தற்பரமணிகாண்பேரு, மாபாருபாவம்போகும் வாதமும்வயதுஞ்சித்தி, காப்பாருமுள்ளேயுன்னிக் கரும்பினுசாங்கற்பந்தின்னே. (ருங)

காயகற்பம்.

தின்றிடுற்கற்பந்தானுஞ் செயப்படுமுறையைக்கேளு, மன்றிடுநாதவிந்தால் வளப்பெறவளர்ந்ததேகம், பன்றிடும்வயதுநூறு பருவமாய்வரைக்கின்றோர்க்கே, யென்றிடிவிளங்கைதகால மியல்பதினைந்துபோமே. (ருச)

போகுமேகாமமொக்கப் புணர்ச்சியிற்பத்திரண்டு, வாகுமேவிருத்தகால வயதுபோமிருபதங்கே, தாகுமேநடுவினிற்கும் தனிப்படாற்பத்தெந்து, ஆகுமேராக்காலத்தி லழுந்திடும்பாதிதானே. (ருரு)

பாதியிலென்னபார்ப்பார் பலபலநூல்கள்மெத்த, பாதியிலென்னஞானம் பார்க்கையிலெய்தமாட்டார், பாதியிலென்னயோகம் பலிக்குமோபலியாதப்பா, பாதியிற்காயசித்தி பலித்திடும்பண்பாய்த்தின்னே. (ருசு)

தின்னென்றுதேவிசொல்லச் சிறந்துநானுண்டமார்க்கம், பன்னென்றவல்லோர்கேளும் பகருவேன்பருவமாகக், கன்னென்றகடுக்காய்க்கற்பம் கடிந்துநாளிருபதுண்ணு, வென்னென்றகுமரிகள்ளிக் காயதுமிருபதுண்ணே. (ருஎ)

உண்ணுநீமுன்கையேந்தி யுறுதியாமமுரியாலே, பண்ணுறநாறுதொட்டுப் பரிந்துமண்டலமேயுண்ணு, வெண்ணுதற்கெந்திதன்னை யிபல்பெறச்சுத்தித்துண்ணு, சண்ணுநாள்கடந்தபின்பு சாதிக்கும்முறைமைகேளே. (ருஅ)

முறைமைகேணீறுங்கெந்திமுசிந்திடுங்கெந்திரெண்டு, மறைமையாஞ்சூதமேல மளவுக்குக்கால்கால்கூட்டு, திரமையாயமுரியோடே சேர்த்துண்ணவல்லாயாகில், நிறமையாய்க்காயந்தானும் நிலைத்தொருசட்டைபோமே. (ருகூ)

போகுமேசட்டையாகில் புகழ்சித்திமுறையைக்கேளு, வாகுடனுதவிந்தில் வளர்ந்திட்டதேகம்போச்சு, பாகுடன்ரசமேவிந்து பரிந்தநற்கெந்திராதம், வாகுமேசிரிரண்டுங்கூடி வாசியினுடலதாச்மேச. (௬0)

ஆச்சிதுரெண்டுந்தேகம் வாசியேஞானவீதி, போச்சுதுசாவுபொய்யாய்ப் புத்தியையுரைக்துவுண்ணு, வாச்சுதுகையில்வாசி மனமெட்டுமார்க்கத்தோடி, யேச்சுதேமாயவாழ்க்கை யென்றுநீயேஸுிப்பாரே. (௬௧)

பாருநீமலைகள்தோறும்பலபலகருத்தகற்பம், கோருநீயுண்டுவுண்டு குமட்டிடுசெட்டையெல்லாம், காருநீபத்தியத்தைக் கடும்புளியுப்பும்பெண்ணும், வாருநீசித்தரோடு வசனித்துஞானம்பாரே. (௬௨)

ஞானமும்சித்தியாகும் நற்றெழிலெட்டுமாகும், பானமுமாத்தாள்பானம்ஞ் பரிவுடன்கொண்டுவாநீ, தானமுந்தன்மம்பாவம் சகலமும்பொய்யிற்பொய்காண், வானமுந்திறந்துபோக வாசியிலேறியாடே. (௬௩)

ஆடவேகுளிகைமார்க்க மடைவுடன்செய்யக்கேளீர், தாட்மால்தேவிச்சுன்னம் சாற்றிவங்கமேலே, யூடவேபுடத்திற்போட வுறுதியாய்ச்சுன்னமாகும், கூடவேவங்கச்சுன்னங் சொண்டிடுநிமிளைபாரே. (௬௪)

பாருநீபுடமதொன்றிற் பரிவுடனிமிளைச்சுன்னம், தாருமுன்வங்கச்சுன்னங் தனிப்படுநிமிளைச்சுன்னம், கோருநற்சாரச்சுன்னங் கொடியமால்தேவிச்சுன்னம், ஆருயர்வீரங்கண்டா வதுரெண்டுசுன்னங்கூட்டே. (௬௫)

கூட்டுநீயாறுசுன்னங் குலாவியவெடையொன்றாக, வாட்டுநற்புழுகிரட்டியதனுடைனென்றாயச்சேர்த்து, நீட்டிநல்ரவியில்வைத்து நிலையுறக்காந்திக்காட்டி, யூட்டுநற்றைலமாகு முறவதிற்குதம்வாரே. (௬௬)

வார்த்தைதவிரலால்மெள்ளமத்திக்கவெண்ணெயாகும், கோர்த்ததையுருட்டிமெள்ளக் கொடுந்தங்கத்தகடுசுற்றிச், சேர்த்ததைதணலில்மேலேசெழிக்கவேவாட்டுவாட்டு, பார்த்ததைக்குளிகையாகும் பக்துவந்தனையும்வாட்டே. (௬௭)

வாட்டிப்பின்குளிகைமேலே வளம்பெறவரைத்தேயப்பி,யூட்டியேபுடத்திற்போட யொருபத்தோடஞ்சுதானும், நீட்டியேசெய்தபின்பு நிலையுறக்காரக்குத்தி, யாட்டியேயுருக்கிமெள்ள வதனுடசெயத்தைப்பாரே. (சுஅ)

பாருபூநாகச்சத்தைப் பாய்ச்சியிச்சூதத்துள்ளே, கோருபேடந்தான்போட்டுச் கொட்டிச்சாரணையேசெய்யத், தேருநீயசுரன்போலச் சிறந்துண்ணும்சகலசத்தைக், காருநீகுளிகைதன்னைக் கரத்திலேகட்டிகட்டே. (சுகூ)

கட்டுநீவாசிதன்னைக் கருத்திலேநினைந்துகொண்டு, யொட்டியேதவத்தையுன்னி யோடுநீகுளிகைபோட்டு, மட்டிலாசித்தர்கோடி வாஞ்சித்துவார்த்தைபேசி, யெட்டியசமாதிக்குள்ளே யியல்பெறவிருந்துபாரே. (எ0)

பாருநீயின்னும்வாதம் பரிசினதூபந்தீபம், தாருநீலேபம்நாதந் தனித்தசந்தானத்தோடு, மேருநீசொருபியோடு மியம்புதேர்சினத்தோடெட்டும், வாருதியுப்புசாரம் வழங்கியகாரங்காணே. (எக)

காணவேகுருவின்பின்னே காரணசீஷனாகி, யூணவேமனமும்வாக்கு முண்மைபதாய்ப்பயந்து, பூணவேதொழில்கள்செய்து போற்றிநின்றுசாரத்தைத், தோணவேயாசான்பார்த்துச் சொன்னபின்வாதங்கேளே. (எஉ)

கேட்கையில்வருவதல்ல கெடிபடமுன்னாட்செய்த, வாட்கைபாங்குறையினாலே வந்திடில்வாதஞானந், தாட்கையாந்சீடனாகித் தழுதும்பன்முன்னேசொல்வோன், வேட்கையில்சோம்பன்காமி வெறுமையோற்கெய்தாதென்னே. (எங)

எய்திடில்வாதநூல்களிவர்களுக்கெல்லாம்பொய்யாம், கைதிடங்காயசித்துங் கவனமுங்கடிந்துபொய்யாம், பைதிடமார்க்கத்தோரைப் பரிட்சியாவகலநீக்கு, வைதிடமூலமார்க்க மாயமும்வெளியாய்ப்பாரே. (எச)

வெளியிலேநின்றசோதி விரைந்துவுட்புகுந்துபாரு; களியிலேமூலத்தூன்றிக் கடக்குமவ்வாறும்பாரு, தெளியிலேயெட்டுகாலுஞ் சேர்தலும்விதிதலும்பார், ஒளியிலேவாசியோடு மொன்றியேயுற்றும்பாரே. (எரு)

உற்றுற்றுப்பார்க்கப்பார்க்க வுரையற்றேயுணர்வுமற்றே, யற்றற்றுப்போனவெல்லா மடங்கியதந்தநாளில், சிற்றற்றுத்தெளிவுமொத்துச் சேருநிட்களமாய்க்காணும், பற்றற்றசித்தர்க்காத்தாள் பார்த்திடும்வாதமென்றாள். (எக)

அஷ்டகர்மம் லிங்கக்கட்டு.

என்றுமுன்சொன்னகார சாரத்தின்லவணங்கேளு, வென்றுயர்காரம்வீரம் விளங்கியசாரமுப்புத், தன்றுநல்லவணமார்க்கந் தனிதத்நற்றுருசியாகும், கொன்றவிம்மூன்றின்பேரைக் கொள்ளுமோர்மூன்றுகேளே. (எஎ)

கேளுநீசாரமொன்றுகெடிபடுங்கல்லுப்பொன்று, ஆளுவேன்காரமொன்று அப்பனேமூன்றுமூன்று, தோளுமிம்மூன்றின்மூன்றால் தொழிலொடுமாடலாகும், வாளுமிந்தாரங்கண்டால்வாதிகட்குரைக்கலாமே. (எஅ)

உரைக்கிறேன்பொன்னேயாக வுற்பனமுறையைக்கேளு, தூரைக்குருகாரச்சுன்னம் சுகமுறுதுருசுச்சுன்னம், வரைக்குருவீரம்மூன்றும் விதம்பெறச்சமனாய்த்தூக்கி, நரைக்குறபொடியேசெய்து நண்டினற்கொழுப்பிற்போடே, (எகூ)

போட்டபின்மூன்றுகொக்கப் போடதிற்சுபரிதானும், காட்டமுன்னஞ்சுமொக்கக் கலக்கவேயரைத்துக்கொண்டு, நீட்டவேலிங்கம்ரெண்டில் நிலைபெறப்பூசிமேலே, யூட்டவேதங்கந்தானுமொவ்வொருவரிசைசுற்றே. (அ0)

சுற்றிடுந்தங்கந்தானுஞ் சொருகியுட்புகுதமட்டும், பற்றநீவாட்டுவாட்டு பலம்படவிறுகும்பாரு, ஒற்றியலிங்கந்தானு மோடுகிறவேளைதிழ்கேளு, அற்றியவெள்ளிக்குள்ளே யைம்பதுக்கொன்றுதாக்கே. (அக)

தாக்கிடச்சொர்னமாகும் தனித்ததோர் மாற்றுமெட்டே, யாக்கிடு'மார்க்கம்போலே யறைகிறேனாலுங்கேளு, வாக்கியவழுங்கோடாமை வளமயிலுடும்புநாலும், போக்கியகொழுப்புமுன்போற் புகழ்படத்தொழில்செய்வோமே. (அஉ)

செய்யவேயஞ்சுநாலுஞ் செய்கிறமுறைமைகேளு, பையநல்வீரம்லிங்கம் வழங்கியகெவுரிகெந்தி, மையநல்தொட்டியஞ்சும் பற்பமாய்முன்போல்வாட்டக், கையினற்கனியேபோலக் கனகமாங்கனகமாமே. (அங)

ஆமினிரசிதமார்க்க மறைகிறேன்பாருபாரு, போமினிவெள்ளியோடு பொருந்துமால்தேவிரெண்டு, தாமினிமுன்போல்வாட்டித் தனிவெள்ளிரேக்குசுற்றி, யோமினிச்செம்புநாக முயர்வங்கத்திடவுங்கேளே. (அச)

சேளுநீரெண்டினுக்குங் கெடிபடச்சூதஞ்சேரும், வாளுறவுறவேயாக்கி வளம்பெறக்களங்கம்பண்ணு, தேளுமுன்மூன்றுலோகம் சேரிடுநூற்றுக்கொன்று, ஆளுநல்ரசிதமார்க்க மடங்காதுமலையுமாமே. (அரு)

மலையுள்ளேயிருந்துவாழு மறைந்தநல்ரிஷிகள்சித்தர், கலையுள்ளோர்வாசியோர்கள் கைகண்டயோகத்தோர்கள், நிலையுள்ளமயக்கந்தீர நேர்படவந்தநூலைச், சிலையுள்ளபதுமைபோலே தெளிவுறச்சொன்னேன்பாரே. (அசு)

பாருநீபசுக்கள்சென்று பட்சிக்கும்லத்தைபார்த்துக், கோருநீயெடுத்துவந்து கொட்டஞ்சுதேங்காய்மட்டும், வாருநீயமுரிதானும் வளர்படிபத்தோடஞ்சு, சேருநீகரைத்தேயெல்லாம் செயல்படவடித்துக்காய்ச்சே. (அஎ)

காய்ச்சுநீகுழம்பாய்வாங்கிக் கடுரவிதன்னில்வைத்து, ஓச்சியேபுலர்ந்தபின்ன ருருகவேகலயத்திட்டுத், தாச்சியேகலயத்தூறில் தமர்விட்டுக்கிண்ணிவைத்து, ஆச்சியாய்ப்புடத்தைப்போடவதன்கீழ்தைலமாமே. (அஅ

ஆமிந்தத்தைலந்தன்னி லரைக்கவேமருந்துகேளு, மோமந்தவப்புரெண்டு மூடனுறுங்காரம்ரெண்டு, தாமந்தச்சாரஞ்சூடன் தனியாறிலெடையேகேளு, பாமந்தவகையொன்றொன்றில் பலமதோரரையுங்கூட்டே. (அகூ)

கூட்டதிலுரந்தான்கால்தான் குலாவியவீரமொன்று, நீட்டதில்சூதமொன்று நேர்படும்பூரங்கால்தான், ஊட்டதிற்குருவாம் வண்டு வுயர்ந்தநூற்றைம்பத்தொன்று, தீட்டிபநாதவிந்து சேரைநீயதற்குள்வாரே. (கூ௰)

வார்த்துநீயரைக்குங்காலம் வளம்பெறப்புகையேபோடு, மோர்த்திடுமேலேபட்டா லிடிந்ததுபுண்ணேயாகுஞ், சேர்த்துநீதைலத்தோடுசிறக்கவேகுடிக்கவைத்துப், போர்த்துநீரவியுங்காணப் புகழ்படவைத்துக்கொள்ளே. (கூக)

கொண்டதோர்மருந்துக்குள்ளே கூட்டவேமருந்துகேளு, தண்டியவீரச்சுன்னம் தனிப்படுதுருசுச்சுன்னம், ஒண்டியசூதச்சுன்ன முடன்மாலின்தேவிச்சுன்னம், கண்டியசவுககாரத்தின் கடுகியசுன்னங்கூட்டே. (கூ௨)

கூட்டவேயைந்துசுன்னங் கோலியவெடையைக்கேளு, ஆட்டியவகையொன்றுக்கு அப்பனேகழஞ்சுகூட்டி, நீட்டியமருந்தினோடு நேர்படவுறவதாக்கித், திட்டியேரவியில்வைத்துச் சிக்கெனப்பதனம்பண்ணே. (கூ௩)

பண்ணியதைலத்தின்மேல் பாங்கிபகலயபுஷ்டி, மண்ணியேவாங்கிக்கொண்டு வாரதிலமுரிதானுந், தண்ணிபோர்படிதான் பத்து சாரவேகரைத்துவைத்தே, யண்ணியமூன்றும்நாளி லப்பனேயிறுத்துக்காய்ச்சே. (கூ௪)

காய்ச்சியகுழம்பாய்வந்த கடுகியபதத்தைப்பார்த்து, ஆச்சியாய்முன்னர்வைத்தே யந்தநன்மருந்தைப்போட்டுத், தாச்சியாய்வழித்தேநல்ல தனித்திடும்பிங்கான்வார்த்து, வோச்சியேரவியினுள்ளே யுறுதியாய்வைத்திடாயே. (கூ௫)

வைத்தவிக்குருவின்பேரை வாக்கினால்மனத்தினாலும், எத்தியேயுரைக்கவென்று மெவர்க்குமேகூடாதப்பா, முத்தியவாதத்துள்ளே மூத்ததாமுத்தாநாமம், கைத்தலப்புலிகளேழுங் காட்டுமுன்னேமமாமே. (கூ௬)

ஆமதேயிந்தமுத்தா னடவுடன்பிங்கானிட்டுப், போமதுகிளிஞ்சினீரைப் புகட்டதிலாறுசேரைத், தாமதுகரத்தால்தேய்த்துத் தனிப்படரவியில்வைக்க, வோமெனவுள்ளேசுண்டி யுருவெனக்குருவுமாமே.

குருவெனுமுத்தானுள்ளே கொடிதானதுறையைக்கேளு, அருவியதூபந்தீப மாகவேயெட்டுமாகும், பருகியகுளிகையாகும் பலபலசித்துமாகும், சொருகியவிடயமெல்லாம் சொர்னத்திற்சொர்னமாமே. (கூ௮)

சொர்னமேசெய்யக்கேளு சுகப்படக்குருவினாலே, பன்னவோரெடையைக்கீழே பரப்பிமேல்துருசியொன்று, கன்னயவீரமொன்று கடுமேலேலிங்கமொன்று, மன்னயசூதமொன்று வைத்துமுன்வரிசைவையே. (கூ௯)

வைத்ததில்மூன்றுதுள்ளி வாரதிற்சுக்கிலந்தான், பத்தியப
மூத்தின்சாறு பரிந்துமூத்துளியும்வார்த்து, ஒத்தியகாந்திகாட்டி
யுருட்டிமேற்பரிநால்சுற்றி, மொத்தியகாந்தத்துள்ளே மூயற்சி
யாய்ப்பிரட்டிப்போடே. (க௱)

போட்டுநீயுலர்ந்தபின்பு புகழ்செங்கற்குகைக்குள்வைத்து,
நீட்டியேயதனுல்மூடி நேர்லெகுபுடத்தைப்போடு, ஆட்டுநற்கள
ங்கின்வர்ணு மஞ்சதுநிறமேயாகும்; ஓட்டுநீவெள்ளிதன்னி லோ
ராயிரத்தொன்றுபாய்ச்சே. (க௱க)

பாய்ச்சிடநவலோகங்கள் பழுக்குமிப்படியேயாரு, ஆய்ச்சி
டச்சூதம்ரெண்டி லணையிந்தக்குருவையொன்று, மாய்ச்சிலாச்சுக்
கிலத்தால் வளைத்தரைசூதமாளும், போச்சுதுசூதங்கோடி புனை
ந்தேறும்பாருபாரே. (க௱௨)

பாருநீபாஷாணங்கள் பலபலவெல்லாங்கட்டும், தாருயர்வா
ட்டினுலும் தனித்திடுமரைப்பினுலும்; கோருயர்வேதைகோடி
கொடுக்கவுந்தூரவோடும், ஆருயரென்னைப்பெற்ற வாத்தாளுக்க
றைந்தவாறே. (க0௩)

சாரநீர்.

வாறுகேளினியான்சொல்வேன் வளம்படச்சாரநீரைக். கூறு
நற்சுன்னநீரிற் கொட்டதிற்கிளிஞ்சிறன்னைத், தேறுநற்சவுட்டுவி
ல்லே திறம்படக்கரைத்துக்கொண்டு, மாறுநல்லடுப்பிலேற்றி வ
ளம்படவெரித்துப்பாரே. (க0௪)

எரித்தபின்னிறக்கிமெள்ள வியல்படச்சுரண்டித்தேய்த்து,
வருந்தியசங்குபோல வளம்பெறவெளுப்பாம்பாரு, அருத்தியகி
ளிஞ்சில்தன்னி லதிற்பத்துப்பலமேவாங்கிப், பருத்தநல்லுள்ளே
பூசப் பரிவுடன்மருந்துகேளே. (க0௫)

கேளுநீசெந்தியோடு கெடிபடுமரிதாரந்தான், வாளுநீதுரு
சியோடு வகைக்குக்காற்பலமேகூட்டு. ஆளுபரமுரியாலே யரை
த்ததற்குள்ளேபூசி, வேளுநீயுலர்ந்தபின்பு வெளியிலேபுடத்தை
ப்போடே. (க0௬)

போட்டிடச்சுன்னமாகும் புகழ்சாரம்சமனுய்க்கூட்டு, ஆட்டி
டவரைத்துமெள்ள வழுக்கிடுகுகையினுள்ளே, நீட்டிடப்புடமே
போட்டு நிலைபுறச்சாரங்கட்டும்; கோட்டிடவரைத்துப்பிங்கான்
கொட்டிநீபனியில்வையே. (க0௭)

வைத்திடச்செயநீராகும் வளம்பெற்றசாரநீர்தான், கைத்தி டுஞ்சாரநீரிற் கரைத்திடும்வீரம்பூர, முப்த்திடச்செம்புதன்னை யுருக்கியிந்நீரில்வார்க்கப், பைத்திடுமூறலற்றுப் பளிச்சென்றுவெளுக்கும்பாரே. (க0அ)

பாருநீநாகஞ்சாய்க்கப் பழையாமற்கட்டும்நாகம், வாருநீயிரும்பைநீரில் வாகுடன்கரியிலாடும், தாருநீதுருசிநேராய்க்கச் சளவட்டையூறல்போகும், தூருநீசாய்க்குமார்க்கத் துறைபதினெட்டென்றார்சொல்லே, (க0கூ)

அயக்களங்கு.

சொல்லியகாந்தமொன்று துலங்கியவயமேரெண்டு, மல்லிமுப்பலமுங்கூட்டி வளம்பெறவொன்றாய்ச்சேர்த்தே, யெல்லியபழத்தின்சாற்று விழைத்ததைக்கழுவிப்போட்டே, யொல்லியேயுருக்குமார்க்கத் துறப்போடுமருந்துகேளே. (கக0)

கேளுநீவீரம்லிங்கம் கெடியாமால்தேவிசாரம், வாளுநீவகைக்கிரண்டு வளம்பெறக்காசுதூக்கி, யாளுநீவெண்காரந்தான திலரைப்பலமேபோட, வூணுநற்சாரநீறு முப்புநீருருகவாரே. ()

வார்த்திதையரைத்தேசாமம் வளம்பெறரவியில்வைத்தே, பேர்த்தியமறுநாள்தானு மிப்படியரைத்துவைத்துக், கோர்த்தியமூன்றுநாளும் கொள்கைபாய்த்தீர்ந்தபின்பு, நாற்றிசைமெச்சவுந்த நலம்பெறுமயத்தில்மாட்டே. (ககஉ)

மாட்டவேயின்னுமற்ற மருந்துநான்சொல்லக்கேளு, ஆட்டவேபழிஞ்சில்வித்து மதனேடேவாளம்புங்கு, காட்டுக்குள்ளாமணக்கு கடுகியபீர்க்கம்வித்து, மோட்டுக்குள்முக்காவேளை முயறசியாம்வேருங்கூட்டே. (ககங)

கூட்டிபதாறுதன்னிற் சுலாவியதஞ்சும்வித்து, நீட்டியதொன்றுவேறு நிறையொன்றில்வராகனிரண்டு, ஆட்டியஅமுரியாலே யுறவரைத்தொக்கச்சேரு, ஆட்டியேயயத்தினோடே யரைவியேயுருக்கிடாயே. (ககச)

உருக்கியமுறையைக்கேளு வோருருக்காச்சுதப்பா, மருக்கியிப்படியேநீயும் வைத்தூதுவயத்தையஞ்சும், தருக்கியமணியைவாங்கித் தனிவங்கநாளத்தூதிச், சொருக்கியசாரநீரிற் சுகப்படவார்த்திடாயே. (ககரு)

வார்த்திட்டவிரும்புக்குள்ளே மாற்றுண்டுபொன்னுமுண்டு, வார்த்திடமாட்டாளுகில் மாற்றில்லைபொன்னுமில்லை, வார்த்திட வறிபாதார்க்கு வாதங்கால்வாதமாச்சு, வார்த்திடவறிவோர்வாசி மனைக்குள்ளேவாழ்ந்தபேரே. (கககூ)

பேரொத்தவயமதொன்றிற் பெரும்பறியரையேகூட்டு, நேரொத்தேயுருகும்போது நீட்டதிலொன்றுநாகம், வாரொத்துவாங்கிநிற்கில் மாட்டதிலொன்றுலிங்கம், காரொத்தகுழலாள்சொன்னாள் கைகண்டவித்தைபாரே. (ககஎ)

பாருநீநாகம்பூட்டிற் பசுமையாம்புகையேவந்தால், தாருநீமபங்கவேண்டாம் தனிக்காரம்சாரம்பூசிக், கோருநீகொடுத்தநாகம் கொடுக்கெனவுள்ளேவாங்கும், மாருநீமணியைவாங்கி வளம்படநிறுத்துப்பாரே. (ககஅ)

நிறுத்திட்டமணியைமெள்ள நேர்படநொறுக்கிக்கொண்டு, மறுத்திட்டசெம்புவெள்ளி மாட்டதில்பத்துக்கொன்று, விறுத்திட்டமாற்றஞ்சாநம் விளங்கியவுப்புக்காவி, கறுத்திட்டபுகையினுள்ளே தங்கமுமிறங்கும்பாரே. (ககக)

இறங்கியேகண்டபின்னே யிந்தநற்களங்கிற்பாதி, தறங்கியசெயருநத்தைத் தாக்கியேயொன்றாய்ச்சேரு, வுறங்கியகெந்தியிட்டு வூட்டுவாய்சமபாகந்தான், மறங்கியகுப்பிக்கேற்றி வாலுங்கையெரித்திடாயே. (கஉ0)

எரித்திடவயநாகந்தா னியல்படவருணனுரும், மரித்திடுநவலோகத்தில் மாட்டிடநூற்றுக்கொன்று, கருத்தினிலொன்றாய்க்கொள்ளக் காயமுஞ்சித்தியாகும், குருத்தினிற்குழந்தைப்பெண்தான் கூறினாள்கூறினாளே. (கஉக)

கூறியவாத்தாள்பாதங் குறைவறப்பூசித்தோர்க்கு, வேறினிவினையுமில்லை வெளிக்குளேவெளியுங்காணும், தேறிநீயுண்ணுகற்பம் தினமொருபணமேதானும், மாறினிமயிரும்போக மறுமயிராகும்பாரே. (கஉஉ)

லிங்கக்கட்டு.

பாருநீர்லிங்கக்கட்டு பகருறேன்பண்புள்ளோரே, தாருநீலிங்கந்தானுந் தலப்பலமரையேவாங்கிச், சாருசம்பழத்தின்சாறு சாங்கமுச்சேரையூட்டி, வேருயர்வேனைச்சாறு விரைந்தொருசேரையூட்டே. (கஉங)

ஊட்டுமாதளையின்சாறு மொக்கமுச்சேரைப்பின்னே, நீட்டு நல்லிலிங்கந்தானும் நேர்படவிறுகிநிற்கும், கூட்டுநற்காரம்ரெண்டு குலாவியவுப்பிரண்டு, தாட்டுநற்சாரமொன்று தானஞ்சும்பொடியாய்ப்பண்ணே. (கஉச)

பண்ணவேயஞ்சுதானும் பலமும்ரெண்டரையேகூட்டு, தண்ணவேகரண்டிக்குள்ளே தான்மூன்றுபங்கிலொன்று, திண்ணவே தீயில்வைத்துத் திறமுடன்லிங்கம்போட்டே, புண்ணவேதைலந் தானுமுறுதியாய்ப்பிரட்டிக்கொள்ளே. (கஉரு)

பிரட்டியேமூன்றுபங்கு பிழையறத்தீர்ந்தபின்பு, திரட்டிய துருசுச்சுன்னம் சீர்பெறுகாரச்சுன்னம், அரட்டிபசாரச்சுன்ன மரனின்மால்தேவிச்சுன்னம், தரட்டியசூதங்கட்டும் சமனாகத்தூக்கிக்கொள்ளே. (கஉசா)

தூக்கியேவாய்நீர்விட்டுச் சுழற்றியே யரைத்துக்கொண்டு, தாக்கியேலிங்கத்தின்மேற் றடவியேவாட்டுவாட்டு, ஆக்கியசோறுபோலே யதற்குள்ளேசூதஞ்சாகும், பாக்கியவான்கட்கப்பா பலித்திடும்வாதப்பாங்கே. (கஉஎ)

பாங்குடன்கட்டும்லிங்கம் பாய்ச்சிடுசெம்பில்வெள்ளி, வாங்கியேயுள்ளேபுக்கும் வர்ணமுமெட்டதாகும், தாங்கிமுன்னும்பூநாகஞ் சாற்றிடுமிந்தலிங்கம், தேங்கியதிசைமாற்றாகும் தேகமும்சித்தியாமே. (கஉஅ)

ஆமின்னுஞ்சொல்லக்கேளா யப்பனேகாரசாரந், தாமின்னு முப்புநீரிற் றனிச்சூடன்போட்டேமெள்ள, வாமினிக்குழவிகொண்டு மத்திக்கத்தகடுபோலாங், காமினித்தகட்டைவாங்கிக் கடுகவேவெயிலிற்போடே. (கஉகூ)

போட்டந்தத்தகடுதானும் பொலிவுறக்காய்ந்தபின்பு, மாட்டந்தவுப்புநீரில் வளம்பெறத்துவைத்துப்போடு, காட்டிந்தச்சூதந்தானுங் கனலுக்குமஞ்சாதப்பா, ஆட்டந்தக்கற்பூரத்தை யப்படித்துவைத்துப்போடே. (க௩0)

துவைத்திட்டபூரந்தானுஞ் சுகம்படமுழுக்கட்டாகும், பவைத்திட்டசாரநீறும் பரிவுடனுப்புநீறும், தவைத்திடநன்றாய்ச்சேரத் தயிர்போலத்தயங்கிநிற்கும், புவைத்திடப்பூரம்வீரம் போட்டதிலரைத்துக்கொள்ளே. (க௩க)

அரைத்திட்டகுழம்புதானு மப்பிடுபடிகமேலே, அரைத்திட் டகுழம்புதானு மப்பிடுவுப்புமேலே, அரைத்திட்டகுழம்புதானு மப்பிடுகாரமேலே, அரைத்திட்டகுழம்புதன்னை யப்பிடாய்துரு சுக்கென்னே. (க௱௨)

சாரநீர்.

என்றநற்சாரந்தன்னை யியல்படவுப்புநீரில், தன்றியேதுவை த்துப்போடு சமயத்திலரைத்துப்போடு, கன்றவேசாரங்கட்டி க னமதாயிருக்காதப்பா, மன்றவேகாரசார மற்றொன்றில்யடங்கி டாதே. (க௱௩)

மடங்கினாற்காரசாரம் வாதங்கைவந்ததாகும், மடங்கினாற் காரசாரம் மலைமுதல்மரமும்பொன்னும், மடங்கினாற்காரசார மக த்தானகெவுனம்போகும், மடங்கினாற்காரசார மாசித்திக்காயமா மே. (க௱௪)

சித்தியாம்சாரநீரிற் செந்தூரவாதச்செம்பை, மத்தியபலமே யொன்று வார்த்திடுபில்லைபோல, வத்தியபலமதொன்று மனை னைவில்வீரம்போட்டு, குத்திடுசாரநீருங் கூட்டிடுவுப்புநீரே. ()

நீரதிலிரண்டுங்கூட்டி நேர்காரமெட்டிலொன்று, தாரதிலரை த்துமெள்ளத் தடவியேவில்லைமேலே, சேரதிற்கீழும்மேலும் செ ப்பதினெருஞ்சிவைத்து, ஆரதிற்புடமேபோட வதரதில்வீழும் பாரே. (க௱௬)

பாருநீவில்லைக்கப்பா பாங்குடன்பூசிப்பூசி, தாருநீவில்லையெ ல்லாம் தனியதாகுமட்டும், கோருநீபுடத்தைப்போட்டுக் கூட் டியேகாரங்குத்தி, மாருநீயுருக்கிக்கொண்டு வார்த்திடாய்வில்லை யென்னே. (க௱௭)

வில்லைக்கேயெடையாம்வீரம் விரைந்துமுன் போலேபூசித், தெல்லைக்குப்புடமேபோட்டுச் சேர்ந்ததெல்லாம்வாங்கி, மல்லைக் காமுரிக்குமுன்போல் வாரதைவில்லைபோலே, மல்லைக்குமுக்கா ற்பூசி முத்தரமுருக்கிடாயே. (க௱௮)

உருக்கியேபாராய்செம்பை யொளிதருமூறல்போகும், தரு க்கியேவெண்மையாகும் தறுக்கென்னும்ரசத்தைப்போலே, மரு க்கியேவெள்ளியத்தில் மாட்டுநீயெண்ணெதியும், வருக்கியேயேழு மாற்றுப் வளம்பெறக்காணுங்காணே. (க௱௯)

காணுநீயிந்தச்செம்பிற் களங்கற்றவிரும்பைச்சேரு, பூணு நற்றங்கஞ்சேரு புகழுற்றநிமிளைசேரு, சேணுநல்லிலிங்கத்தோடு சேர்த்தஞ்சும்சமனாய்க்கூட்டி, பூணுறவுருக்கிடப்பா வுறுதியாய்க் களங்கமாமே. (௧௬௦)

ஆமிந்தக்களங்கந்தன்னை யைம்பதுக்கொன்றுபோடத், தாமிந்தநவலோகங்கள் தப்பாதுபததுக்காணும், சேமிந்தக்களங்கு தானுஞ் செய்திடுமுப்புக்கப்பா, போமிந்தவேதைமார்க்கம் பொற்கொடிசொன்னவாறே. (௧௬௧)

வாறின்னுஞ்சொல்லக்கேளு வாழ்கருநாகம்பத்து, மாறின்னுமஞ்சாறுக்கி வளம்பெறத்தகடுதட்டு, கூறின்னுநிமிளையொன்று கூட்டதில்வீரம்பாதி, சேறின்னும்பூரந்தானுஞ் சேர்க்கவேசேர்த்துக்கொள்ளே. (௧௬௨)

சேர்த்ததோர் மருந்துமூன்றுஞ் சிறந்திடும் வாயினீரால், கோர்த்ததையரைத்துக்கொண்டு குமட்டியேதகட்டிற்பூசி, வார்த்ததையோட்டில்வைத்து மறுவோடுநன்றாய்மூடிப், போர்த்ததைப்புடத்திற்போடப் புகழ்தருஞ்சிவப்பாம்பாரே. (௧௬௩)

சிவப்புறுந்தாரையெல்லாஞ் சேர்க்கையாய்வாங்கிவாங்கி, பவப்புறுமருந்துபூசிப் பாங்குடன்புடமேபோடு, புவப்புறமருந்துதானும் போதாட்டால்முன்போற்கூட்டிக், தவப்புறப்புடமேபோட்டுத் தனிபதாய்வாங்கிக்கட்டே. (௧௬௪)

வீரக்கட்டு.

கட்டவேவீரந்தானுங் களங்கறச்சொல்வேன்கேளா, யட்டவேதாரமொன்று மதனிடைவீரம்பாதி, புட்டவேபூரங்கால்தான் போடுநீகுருவண்டொக்கத், தட்டவேரெண்டுநீரால் தாக்கிநீயரைத்துக்கொள்ளே. (௧௬௫)

கொண்டதோர்துருசுதானுங் கொள்ளுநாலெடையின்மேலே, பண்டதோர்மருந்தைப்பூசிப் பாங்குடன்வெயிலிற்போடு, தண்டவேவெளுப்பாம்பாரு தனியொக்கவிரிந்தபின்பு, கண்டதோரெடைக்குநேராய்க் கலந்துமுன்சூடன்கூட்டே. (௧௬௬)

கூட்டுநீரிரண்டுமொக்கக் குலாவியேபொடித்துக்கட்டி, யாட்டியபரவியிற்போடு அப்பனேவுறவுசேரும், நீட்டியவெடைக்கொப்பாக நிலைத்கமுன்சூடன்கூட்டு, ஆட்டியசூடன்றானு மடைவுடன் தருவுமாமே. (௧௬௭)

குருவென்றசூடன்றானுங் கோபமாஞ்சரக்குக்கெல்லாந், தருவென்றவீரந்தானுந் தலைசுற்றியிதற்குள்கட்டு, மருவென்றசூதயானை யமைந்தவிக்குழியில்வீழு, மருவென்றசரக்கியாவு மணுகுமுன்கட்டும்பாரே. (௧௪௮)

கட்டவேவீரந்தானுங் கபளிக்வாலைமாயி, பொட்டியசுதலிதன்னி லுடன்சூலையெட்டும்நீரி, லட்டியவீரந்தோய்த்தே யாச்சுடன்குருவிற்புக்கித், தட்டியேபுரட்டிமெள்ளத் தணலோட்டிவாட்டுவாட்டே. (௧௪௯)

வாட்டியேயேற்றுமார்க்க வகைசேருமறையாய்ந்தோரே, யாட்டியேவீரந்தன்மே லதுநாலுசூடனேற்று, பூட்டியேவாட்டவாட்டப் பொன்மணிபோலேயுள்ளே, கூட்டியேயரைக்கவாடுங் குளிகைபோற்பாருபாரே. (௧௫0)

பாருநீயிந்தவீரம் படுமுன்னேநவலோகங்கள், தாருநீபரிசம்பண்ணத் தறுக்கெனப்பொன்னேயாகு, மாரிதுசொன்னதென்று லகண்டபூரணத்தாய்சொன்னாள், ஏருபரென்தாய்கேட்க வீசனுமுரைத்தவாறே. (௧௫௧)

வாறுகேளிந்தவீரம் வழங்கியவெடைரெண்டொக்கக், கூறுமுன்காரீபத்தின் குலாவியவதரும்நேர்தான், தாறுபர்தங்கமொன்று தனிபரைவாய்நீராலே, வேறுயர்வில்லைபோல விளங்கநீயுலர்த்திடாயே. (௧௫௨

உலர்த்தியேகிளிஞ்சிற்குள்ளே யுறவைத்துச்சீலைசுற்றி, யலர்த்தியேமணலுக்குள்ளே யப்பனேபுடத்தைப்போடு, குலர்த்திசைகளங்காம்பாரு கொடுத்திடும்வேதைகேளு, மலர்த்தியசெம்புவெள்ளி மாட்டுநீநூற்றுக்கொன்றே. (௧௫௩)

ஒன்றெனுங்களங்குதானு மோடிடும்நவலோகத்தில், தன்றவேமாற்றுக்கேளுந் தழையவேபதினைந்தாகும், கன்றவேவீரம்போலக் கடுங்களங்கொன்பதாகும், அன்றரன்சொல்லவாத்தாளடியேனுக்களித்தவாறே. (௧௫௪)

வாறுகேள்முன்னேசொன்ன வளம்பெற்றசெயநீரென்றால், கூறுகேள்காரசாரங் கொடுஞ்சரக்கெல்லாங்கட்டுந், தேறுகேளொன்றோடொன்று சேர்ந்துறவிந்துகூட்டு, ஆறுகேள்சூதந்தங்க மணைத்திடவேதைபாமே. (௧௫௫)

சாரச் செயநீர்.

வேதையுமாகவின்னும் விளம்புறேன்செயநீர்கேளு, ஆதை யுமுப்புப்பத்து மதனெடுபுளியுமேழு, கோதையசினமொன்று கொடியமீதார்காரமொன்று, பாதையமூத்தானுப்பு பகிரதிற்பல மும்ரெண்டே. (கடுசு)

ரெண்டையுமொக்கக்கூட்டி நிமிரவேயிடித்துநையத், தண்டையதணலையிட்டுத் தாக்கிடச்சுன்னமாகும், கண்டையகல்வத் தூட்டிக் கடும்பனிபடவேவைக்கில், அண்டையில்சாய்க்கநீர்தா னப்பனேவருநீபாரே. (கடுஎ)

பாருநீரிந்தநீர்தான் படியதுவொன்றுவாங்கிச், சேருநீரித ற்குள்போடத் திறமாகமருந்துகேளு; ஆருநீமூத்தானென்று 'ம திலரைப்பலமேவீரம், காருநீருதங்காலுங் கலவதிற்பூரங்காலே.

காலுக்குள்பாதிகூட்டு கடியவெள்ளுரத்தைத்தானே, கோலுக்குள்குருவண்டோதான் கொட்டதில்நூற்றுப்பத்து, தாலுக் குள்சிப்பிநீரால் தனியரையெல்லாங்கூட்டிச், சேலுக்குளுலர்த்தி நன்றாய்ச் செயநீரிற்கொட்டிடாயே. (கடுஅ)

கொட்டியேசெயநீர்க்குள்ளே குழப்பியேவைத்துநீயு, மட் டியேவஸ்துவாலே யாத்தாளைப்பூசைபண்ணி, மட்டயவாசியோக ம் வழிகண்டுநோக்கிப்பாரு, கொட்டியாம்வாதந்தானுங் கிடைத் திடும்ஞானந்தானே, (கசு0)

தானதாஞ்சாரநீரைச் சாற்றுறேன்கேளுகேளு, வானதாஞ் சாரமெட்டு வாழ்சிப்பிச்சுன்னமெட்டு, ஏனதாயிழையுநன்றாயிய ல்படவரைத்துக்கொண்டு, கோனதாமூத்தானுப்பைக் கொட்டி ருபலமும்நீயே. (கசுக)

இருபலமொக்கப்போட்டே யியல்படக்குகையில்வைத்துக், கருபலப்புடமேபோட்டுக் கல்வத்திற்போட்டுநீயுந், தருபலப்ப னியில்வைத்துத் தாக்கிநீயரைக்கநீராம், அருபலச்செயநீராகு ம ப்பனேபிங்கான்வாங்கே. (கசுஉ)

வாங்கிநீதெளிவையெல்லாம் வார்த்திடுமேறுபிங்கானில், ஓங் கியநீருக்குள்ளே யுறப்போடமருந்துகேளு, தாங்கியசெயநீர்தா னுந் தனியொருபடியேகூட்டிப், பாங்கியமூத்தானுப்பு பலமது வொன்றுகூட்டே. (கசுரு)

கூட்டுநீவீரந்தன்னைக் கொட்டரைப்பலமதற்குள், நீட்டுநீ சூதங்கால்தான் நிலைத்திடும்பூரங்கால்தான், ஓட்டுநல்லுரமரைக் காலொருநூறுகுருவண்டேட்டித், தீட்டுநற்கிளிஞ்சினீரால் சேர்த் தரைத்துலர்த்திடாயே, (௧௬௪)

உலர்ந்தபின்சாரநீரி லொக்கவேகொட்டிக்கிண்டிக், கலந்த தைப்பதனமாகக் கட்டிநீர்வைப்பீரையா, அலர்ந்திடுஞ்சாரகார மறுபத்துநான்குஞ்சாகும், குலந்தனிற்றுபேரனுக்குக் கொடுத்த நீர்வாலைதானே. (௧௬௫)

வாலையைப்பூசைபண்ணு வளம்பெறவாசிநோக்கு, சோலையின்வண்டின்கூட்டத் தொடர்போலேவாதசித்தி, காலையுமாலைரெண்டுங் கடுகியேயொன்றாய்ப்போகும், வேலையில்வேறுமில்லை வேதையின்றுறையைக்கேளே. (௧௬௬)

கேளுநீசாரமொன்று கெடியுறுகாரமொன்று, வாளுநீமாலின்தேவி வளம்பெறவொன்றுகூட்டித், தோளுயருப்புநீரால் சுகப்படவரைக்கமூன்றும், வேளுயர்தீயில்வைத்து விளங்கியசெயத்தைப்பாரே. (௧௬௭)

செயப்பட்டபின்புதானுஞ் சேர்வங்கத்தகட்டின்மேலே, கயப்பட்டவங்கந்தானுங் கடுகியேநொறுங்கும்பாரா, யயப்பட்டவங்கந்தன்னை யரைத்துநீவெள்ளிமேலே, பயப்பட்டுப்பூசிவாட்டிப் பருவமாய்ப்புடத்திற்போடே. (௧௬௮)

போட்டிடரசிதந்தானும் புகழ்பெற்றகுருவேயாகு, மாட்டியகுருவில்ரெட்டி யப்பனேசூதஞ்சேரு, நீட்டிமுன்தாளகத்தை லேபித்துக்கவசமாக்கி, வாட்டிமேல்வாட்டில்வாட்ட மணிபோலக்கட்டும்பாரே, (௧௬௯)

பாருநீயிந்தச்சூகம் பாய்ச்சொருநூறுவங்கத், தாருயர்வெள்ளியாகு மசையாமலீயம்போட்டால், தேருயர்ரசிதவித்தை தேவிக்கெம்பீசன்சொன்னார், காருயர்நவலோகத்திற் காட்டிடவெள்ளியாமே. (௧௭௦)

ஏமவித்தை.

ஆமிந்தப்போக்கைவிட்டே யறைகிறேனேமவித்தை, காமிந்தக்காரமொன்று கடுகியசாரமொன்று, வாமிந்தக்கெந்தியொன்று வார்த்தரையுப்புநீரே, சேமிந்தத்தீயில்வைத்துச் செயத்தைப்பார்செயத்தைப்பாரே. (௧௭௧)

பாருநீகெந்திகட்டிற் பாய்ச்சுபின்கெந்தியொன்று, தாருநீ யரைத்துப்போடத் தனிரெண்டுமொக்கக்கட்டுஞ், சேருநீநாகஞ் சூதஞ் சேர்த்திதைக்கவசம்பண்ணி, யோருநீமணலுக்குள்ளே யுறுதியாய்ப்புடத்தைப்போடே. (௧௭௨)

போட்டிடிற்சூதநாகம் பொலிவுடனுமூன்றுகட்டும், ஆட்டி டிற்கட்டுமெட்டு மப்பனேபூசிப்போடு, கூட்டியேசூதம்நாகம் குறி யுறச்சேர்த்தபின்பு, மூட்டியேநாலுக்கொன்று முயற்சியாய்த்தங் கஞ்சேரே. (௧௭௩)

சேர்த்திடத்தங்கந்தானுஞ் சிறந்துநற்களங்கேயாகும், கோ ர்த்திடும்நவலோகத்திற் கொடுக்குமுன்னேமமாகும், ஆர்த்திட வீவதென்னி லைம்பதுக்கொன்றேயீந்து, பார்த்திடாயீசனென்தா ய் பராபரைக்கருளும்வாறே. (௧௭௪)

வாறுகேள்நோயில்லாத வளம்பெறும்சடத்தைப்பார்த்துத், தாறுயர்பாண்டத்துள்ளே தனிமலம்விடவுஞ்சொல்லி, வேறுகே ளமுரிவார்த்து விளங்கியேகுழம்புசெய்து, கூறுகேள்காய்ச்சிவற் றக் கொட்டிநீகலயம்பாய்ச்சே. (௧௭௫)

பாய்ச்சியகலயவாய்க்குப் பதையாமல்சில்லுப்போட்டு, ஆச் சியபுடத்தைப்போடி லப்பனேதமர்கீழிட்டு,வோச்சியதமரின்வா யி லொக்கவோர்கலயம்வைத்துக், காய்ச்சிவாய்மூடிமேலே கடு கநிபுடத்தைப்போடே. (௧௭௬)

போட்டிடத்தைலங்கீழே புகல்மேலேசாம்பல்நிற்கும், ஆட் டியசாம்பலொன்றி லமுரிதான்பத்துவாரு, கூட்டியேகரைதது வைத்துக் கொள்ளுநீமூன்றுநாளும், நீட்டியேதெளிவைவாங்கி நேர்படக்காய்ச்சிடாயே. (௧௭௭)

காய்ச்சிடுவார்த்துவார்த்துக் கடுகியகுழம்பில்வாங்கி, யாச்சி டுமிணங்கன்சின மதனோடுவீரம்பூர, மோச்சியசாரத்தோடு முரு கியதுருசுச்சுன்னந், தாச்சியவாறுங்கேளு தனித்தனிகாசுபோ டே. (௧௭௮)

போட்டுநீதைலம்வார்த்துப் புணர்ச்சியாயரைத்துக்கொண் டு, மூட்டுநீகுழம்பினோடே மூதண்டரவியில்வைக்க, வாட்டியபீ ங்கான்கிண்ணி யதற்குள்ளேயிதனைவார்த்துக், கோட்டிநீரவியில் வைக்கக் குழம்பதுமூத்தானுமே. (௧௭௯)

ஆமினதமூத்தாவென்றே யறைந்திட்டநாமங்கேளு, காமிதுவுண்டவுப்பு தனிப்புளிரெண்டுஞ்சென்று, காமிதுநீரிலுப்பாய்க்கடும்பலபிணிகளாச்சு, வேமிதுமூலத்தீயின் விதத்தினாற்பிறந்தவாறே. (௧௮௦)

பிறந்திடுமகிமையாலே பேராச்சுமூத்தாவென்று, அறிந்தினைதயெடுக்கமாட்டா ரப்பனேநிஷித்தமென்பார், பறிந்திடும்வாதந்தானும் பார்த்திதைத்தூஷிக்கிறார்க்கு. முறிந்திடும்நூல்களெல்லா முற்றிலுங்கிடையாதென்னே. (௧௮௧)

உப்புபுளி மார்க்கம்.

கிடையாதபுளியினுப்பைக் கேட்கினும்வல்லோர்சொல்லார், அடையாதபுளியினுப்பி னளவெல்லாஞ்சொல்லக்கேளு, குடையாதசீனமுப்பு கூடினும்மொருகையாகும், படையாததுருசுசீனம் பகரினும்கையொன்றாமே. (௧௮௨)

ஒன்றானவிணங்கனோடு மூட்டுநீபுளியுமொன்று, தன்றானநாதவிந்து தானதாம்புளியுமுப்புங், கன்றானகெந்தியோடு கல்லுப்பேபுளியுமுப்பு, மன்றானரெண்ணைப்பெற்ற மாயிக்குச்சொன்னவாறே. (௧௮௩)

உப்பு ஈசன் = புளி சத்தி.

வாலுகேளுப்பேயீசன் வழங்கியபுளியேசத்தி, கூறுகேள்ரெண்டினாலுங் கொண்டதுவாதமெல்லாம், வாறுகேள்காரசாரம் வழங்கியமார்க்கங்கண்டால், தாறுகேளாறுதாண்டித் தனிவெளிப்பாழுமாமே. (௧௮௪)

ஆமெனவின்னுங்கேளா யறைகிறேனதிந்தமட்டுந், தாமெனவண்டத்துள்ளே தனித்தவெண்கருவேயுப்பு, வாமெனமஞ்சள்மார்க்கம் வழங்கியபுளியேயாச்சு. வோமெனமேலினோடு முயர்ந்திடுநாகமாமே. (௧௮௫)

ஆமதுசூதமுப்பு வப்பனேபுளியாங்கெந்தி, போமதுகிளிஞ்சிலுப்பு புகழ்சதைபுளியுமாகுந், தாமதுசங்கேயுப்பு தனிச்சதைபுளியுமாகும், வாமதுநத்தையுப்பு வளர்சதைபுளியாச்சொல்லே.

புளியுப்புரெண்டினாலே போந்ததில்வண்டமெல்லாம், புளியுப்புரெண்டினாலே போந்ததுவாதமாச்சு, புளியுப்புரெண்டுங்கண்டோர் புகழ்ச்சியோர்வேறேகண்டாய், புளியுப்புரெண்டுங்கூடில் புகலண்டச்சுன்னமாமே. (௧௮௭)

சுன்னத்தின்மார்க்கஞ்சொல்லத் தொலையாததென்றாற்கேளீர், சுன்னத்தைவிட்டகன்றாற் சுகக்காரசாரஞ்சாகா, சுன்னத்தையறியாதார்க்குச் சொல்லில்லைதருவுமில்லை, சுன்னத்தின்பெருமைசொல்லச் சுந்தரர்மயங்கினாரே. (கஅஅ)

மயக்கமேதீர்த்தென்னாத்தாள் வகையாகக்கேட்டபோது, தயக்கதாய்க்காரசாரந் தனித்திடுமார்க்கங்கேளாய், கயக்கமாமுப்பேசாரங் கசங்கியபுளியேகாரம், பயக்கமாய்ரெண்டுங்கூடிற் பதையாமற்சாகும்பாரே. (கஅகூ)

பாருநீசாவுதானும் பரிசிக்கில்செத்தும்சாகா, சாருநீயினத்தைக்கண்டு சரக்கெல்லாந்தாக்கிக்கொல்லு, கோருநீதங்கஞ்சூதங் கூட்டியேகளங்குசெய்யில், வாருநீவாய்நீரல்லால் மற்றொன்றும்வாராதென்னே. (ககூ0)

என்னவேவகாரசார மியலறுப்பத்துநாலு, மென்னமேவயுபரசங்க ளிருனூறுசாரகார, மென்னவேநாதவிந்தா லெடுத்ததுகாரசார, மென்னவேபோகநாத ரியல்புடனருளும்வாறே. (ககூக)

வாறுகேள்புளியுமுப்பாய் வளர்ந்ததுபயித்தார்நாலும், வாறுகேள்புளியுமுப்பாய் வளர்ந்ததுவுபரசங்கள், வாறுகேள்புளியுமுப்பாய் வளர்ந்ததுநாதவிந்து, வாறுகேள்புளியினுப்பின் மார்க்கமுந்தொலையாதென்னே. (ககூஉ)

என்னவேசீனக்கார மெழுபூரஞ்சாரமாகும், பன்னவேகாரத்தோடே பரிசிக்கில்சூடன்சாரம், தன்னயக்கிளிஞ்சிற்சாரம் தனிக்காரந்துரிசியாகும், மன்னியவீரங்காரம் மாட்டண்டம்சாரமாமே. (ககூங)

ஆமதேயிந்தமார்க்க மறிந்துநீயொன்றோடொன்றைத், தாமதுசேர்ப்பாயாகில் தனித்தனிசாகும்பாரு, வாமதுகட்டுத்தேடி மயங்கியமடையர்கேளீர், போமதேயிதற்குள்வேதை பூட்டிநீரறிந்துபாரீர். (ககூச)

பாருமுன்சாரநீரில் பரியுடனாகஞ்சாய்ப்பாய், ஒருமுன்செம்புசாய்ப்பா யுறவுற்றவிரும்புசாய்ப்பாய், தாருமுன்னூறல்போகுங் தனித்தனிகளங்குக்காகும், வாருநீபதினொன்றேதான் வகைவகையினத்துக்கென்னே. (ககூரு)

துருசுவெள்ளை.

என்னவேசாரநீரி லியல்படத்துருசுதோய்த்துப், பன்னவே ரவியிற்போடு பச்சைபோய்வெள்ளையாகும், கன்னவேதுருசுதா னுங் கடுவெள்ளைமயனமட்டும், தன்னவேதுருசுவெள்ளை சமர்த்த ருக்கெய்தும்வாறே. (௧௯௬)

வாறுகேளிந்தவெள்ளை வாங்கிநீபலமேவைத்துத், தேறுநல் வீரந்தானுஞ் சேர்த்துரைபலமேகூட்டிக், கூறுகேள்சாரச்சுன்ன ங் கூட்டரைப்பலமுமொக்க, வாறுகேள்காரச்சுன்ன மதையரைப் பலமும்போடே. (௧௯௭)

போட்டுநீயொன்றாய்க்கூட்டிப் புகழ்படவரைத்துவைத்தே, வாட்டியசரக்குக்கெல்லா மப்பனேசத்தைப்பூசி, நீட்டுநற்சாரநீரி னிலையுறத்தோய்த்துவாட்டப், பூட்டுமேசரக்குஞ்சாகும் போமதி வேதைதானே. (௧௯௮)

வேதையுங்காணவேண்டில் விளங்கியசூதந்தங்கம், பாதை யேகூட்டநன்று பறிபோனால்வாதம்போச்சு, ஏதையோசொன் னேனென்றே யிடும்பரேசூதந்தங்க, மாதையேமறைப்பாயானால் வாதமும்மயக்கும்பாரே. (௧௯௯)

மயக்கறக்குடவன்றன்னை வளம்பெறவுப்புநீரில், தியக்காக க்காய்த்துத்தோய்நீ செயலுடன்பதினொன்றேதான், தயக்கறுந் துருசுச்சுன்னந் தனியுறும்வீரச்சுன்னம், பயக்கறும்பூரஞ்சூதம் பருங்கோழிப்பிச்சுங்கூட்டே. (உ00)

கூட்டியவஞ்சுதானுங் குலாவியவெடையைக்கேளா, யாட்டி யவகைக்கோர்காசா யரைப்பலந்தானேகூட்டி, நீட்டியகுடவன் தானும் நீள்பலம்பத்திற்பூசி, வாட்டியேபுடத்திற்போட மாற்றே றிப்பொன்னுமாமே. (உ0௧)

பொன்னனகுடவனுக்குப் பூட்டுபொன்னுலுக்கொன்று, ம ன்னனகாரங்குத்தி வளம்பெறவுருக்கிவாரு, பன்னனமாற்றே வெட்டு பல்காவியுப்புக்கோடா, தன்னனமாயிசொல்லச் சாதித் துக்கண்டவாறே. (உ0உ)

வாறுகேளுப்புநீரும் வளம்பெறுசாரநீரும், தாறுகேள்சரி யாய்க்கூட்டித் தயக்கிடத்தயிரேயாகும், வேறுகேள்சாரமொன் று விளங்கியகாரம்ரெண்டு, ஆறுகேளுப்புரெண்டு மதிலொன்று கண்டர்போடே. (உ0௩)

போடுநீயாறுந்தூக்கிப் புகழுறப்பலமேயாறு, தேடுநாயுருவியுப்பு சிறந்திடுஞ்சவுட்டுவில்லை, சூடுநீசூடனோடு சொல்கடல்நுரையுங்கூட, வாடுறச்சொன்னவஞ்சு மரையரைப்பலமுங்கூட்டே.

கூட்டியமுன்னீர்தன்னிற் குலாவுமுன்தயிரைவார்த்தே, யாட்டிடவரைக்கக்கட்டு மப்பனேகுழம்புபோல்வை, காட்டியகடலுக்குள்ளே கல்லுப்பையுடைத்துக்கொண்டு. தீட்டியகுழம்பைத்தோய்த்துத் தீக்குள்ளேவாட்டுவாட்டே. (உ0ரு)

வாட்டெடைவாட்டவாட்ட வளம்பெறுமுப்புச்சாகும், மூட்டெடையுருவியுப்பு முழங்கியசூடனோடு, காட்டெடைகடலின்மேலே கவிழ்ந்திடுநுரையாமூன்றும், தீட்டெடையமுரிவிட்டுச் சிக்கெனத்துவைத்துவாட்டே. (உ0சு)

துவைத்திடுங்குழம்புவற்றிச் சுண்டியேசுறுக்குத்தாக்க, வவைத்துமேதீயின்மேலே யமளியாய்த்தட்டுவாட்டு, புவைத்துமேயாற்றியாற்றிப் போட்டுநீவாட்டவாட்டப். பவைத்துமேயுப்புதானும் பரிவுடனடங்கும்பாரே. (உ0எ)

பாரிந்தவுப்புமேலே பாங்குடன்சவுட்டுச்சுன்னம், வாரிந்தவமுரிதானும் வர்சூடனரைத்துக்கட்டிக், காரிந்தமேலேயொன்று கடுஞ்சுன்னச்சீலைசுற்றிப், போரிந்தவுப்புமண்ணைப் புகட்டிநீபுடத்தைப்போடே. (உ0அ)

போட்டபின்கவசம்நீக்கிப் புகழுறவுப்பைவாங்கி, நீட்டிப்பின்னுருக்கிப்பாரு நிலையற்றமணிபோலாடும், ஆட்டப்பின்னுருகாவிட்டா லப்படிவாட்டிப்போடு, கூட்டப்பாவுப்பின்வேதை கோடிக்குக்கோடிதானே. (உ0கூ)

கோடியென்றுரைத்தேன்யானுங் கொண்டிடிற்கோடிகோடியாடியகுளிகைதானு மறுபத்துநாலுஞ்சாகுந், தேடியகெந்தியோடு சேரவுஞ்சத்தேயாகும், தாடியதங்கந்தொட்டுங் சகலமுங்குருவுமாமே. (உக0)

ஆமிந்தயோகமார்க்கமறைந்தவர்மூலமூர்த்தி, வாமிந்தவைந்நூற்றுள்ளே வகைவகையெல்லாமபார்த்துச், கோமிந்துதரித்தமாயா சொல்லியநூலையூன்றிக், காமிந்தக்கபடுமார்க்கங் கடாவினேன்கைகண்டேனே. (உகக)

கண்டதோருப்பைவிட்டாற் கட்டில்லைவாதமில்லை, கண்டதோருப்பைவிட்டாற் கவனமும்சித்தியில்லை, கண்டதோருப்பை

விட்டாற் கடும்ரசசத்துமில்லை, கண்டமேதாருப்பையீசன் கயற்க்
ணாணிக்கருளினாரே. (௨௧௨)

அருளினவுப்பைநீயு மப்பனைதமரைப்போட்டே, யருளின
வலக்கரத்தி லாட்டிநீசெபமேசெய்யத், தெருளினசத்தகோடிதே
வதைசித்தியாகு, மருளினவாதமுன்னே வாய்பொத்திநிற்கும்
பாரே. (௨௧௩)

கெந்தகக்குரு.

பாருநீயுப்புவொன்று பருவியேயுருகும்போது, தாருநீகார
மொன்று தாக்கிநீயுள்ளேவாங்கு, காருநீரெண்டுக்குள்ளே கடுஞ்
சாரமொன்றைப்போடு, கிருநீமூன்றுக்கொக்கக் கெந்தகம்போ
ட்டிடாயே. (௨௧௪)

போட்டிடக்கெந்திதானும் புகையாமலுள்ளேவாங்கும், ஆ
ட்டியகுகைக்குமேலேயப்பனைமண்ணைப்பூசி, நீட்டியேபுடத்தை
ப்போடு நிலைகெந்திக்குருவுமாகும், பூட்டிடச்சூதஞ்சாகும் போ
ர்போராய்ச்சாகும்பாரே. (௨௧௫)

பாரிந்தக்குருவைத்தொட்டுப் பரிசிக்கச் சொர்ணம்நீறும்,
பாரிந்தக்குருவைத்தொட்டுப் பரிசிக்கநாகஞ்சாகும், பாரிந்தக்கு
ருவைத்தொட்டுப் பரிசிக்கவெல்லாஞ்சாகும், பாரிந்தக்குருவை
க்கண்டால் பதையாமற்சூதஞ்சாமே. (௨௧௬)

சாகவேசரக்கின்மார்க்கஞ் சாற்றுறேனினத்தைக்கேளு, வா
கவேயுப்புநின்று வளம்படவுருகும்போது, போகவேவீரம்போ
டு பொலிவுற்றலிங்கம்போடு, வோகவேவெள்ளைபோடு வொன்ப
துங்கட்டும்பாரே. (௨௧௭)

கட்டுமேபாஷாணங்கள் காட்டேடையுப்புநீராய், மட்டுமுன்
னறிந்தேயீயவழுங்கியதிசைமாற்றுகு, மொட்டியவுப்பின்வேதை
யோடாதுகாவிக்கப்பா, பட்டுமேயுருகிலோகம் பளிச்சென்று
பொன்னுமாமே. (௨௧௮)

காரம்.

ஆமிந்தவுப்பைநீயு மரைத்திடுபழச்சாற்றாலே, காமிந்தக்கா
ரத்தின்மேற் காட்டிடுநாலுக்கொன்று, சோமிந்தரவியிற்போடு
சொக்கியேவெளுத்துக்கட்டும், தாமிந்தக்காரந்தன்னைச் சாற்றி
ஞற்சீனர்க்கென்னே. (௨௧௯)

என்னவேசீனந்தன்னை யெடுத்துநீயிணங்கன்மேலே, பன்னவேரெண்டுக்கொன்று பழச்சாற்றால்பூசிபூசித், துன்னவேவாட்டவாட்டச் சொக்கிபேயெனும்புபோலா, மன்னவேயிருக்கும்பாரு மகத்தானகட்டுமாமே. (உஉ0)

கட்டியவுப்பைநீயும் கலந்தரைபழச்சார்விட்டு, ஒட்டியசாரன்மேலே ஊட்டிடுரெண்டுக்கொன்று, தட்டியதணலின்மேலே சாங்கமாய்வாட்டவாட்டக், கெட்டியாயிருகுச்சாரங் கெடிபடத்தந்தமாமே. (உஉக)

ஆமதுயிந்தசார மனைத்திடும்வீரன்பேலே, வாமதுவாட்டவாட்ட மணிபோலேயுருகிநிற்கும், நேமதுயிந்தவீரம் நியமித்துலிங்கத்துக்கு, மேமதுவாட்டிப்பாரு யிசலுடன்வலியுங்காணே.()

காணிந்தலிங்கந்தன்னைக் கபளித்துமால்தேவிக்குத், தானிந்தவாட்டவாட்டத் தாளகமுருகும்பாரு, பூனிந்தத்தாளகத்தைப் பூட்டிடக்கெந்திசாகும், நீயிந்தகெந்தகத்தை நிமிளைக்குக்கட்டிவாட்டே. (உஉ௩)

வாட்டியநிமிளையொன்று வளம்படவீரம்ரெண்டு, ஓட்டியதங்கம்ரெண்டு உருகையிலிதனையீய்ந்து, கூட்டியகுகையோடொக்கக் குளிரவேபாரவிட்டு, தீட்டியமணியைவாங்கிச் சேர்த்திடமருந்துகேளே. (உஉ௪)

கேளுநீயிதுமேற்பூசக் கெடியானசுன்னமார்க்கம்,வாளுநீமூன்றின்தூக்க வகையானபலமஞ்சாக,தேளுயிர்மணியின்பேலே சீராகப்பூசச்சுன்னம், தாளுயர்ஞகவங்கம் தனிக்கண்டார்வீரங்கூட்டே. (உஉரு)

கூட்டுநீயின்னங்கேளு குமுரியசூதம்பூரம், ஆட்டநீசாரத்தோடு அப்பனேயெழுஞ்சுன்னம், மூட்டநீவகையொன்றொன்று முழுங்கக்கால்பலமேகூட்டித்,தீட்டிநீர்வானீர்விட்டுச் சிரக்கநீபூசிப்பாடே. (உஉகூ)

போடுநீரவியில்தானே புகழ்பெரதினமேபத்துக், கூடுநீமருந்துவைக்கக் கொள்கியகுகையைக்கேளு, தேடுநீஉப்புச்சுன்னம் சிறக்கவேகுகையாய்ப்பண்ணி, ஆடுநீசுடல்மேல்நின்ற அச்சுன்னமுள்ளேபூசே. (உஉஎ)

பூசியகுகையினுள்ளே புகட்டுமுன்மணியின்சுன்னம், மாசிய சில்லுப்போட்டு வளம்பெறச்சந்துசெய்து,ஓசியஉலையிலிட்டு ஊது நீஒருஊத்தாக்க, காசியநிமிளைதங்கம் கடுவீரஞ்சுன்னமாமே. ()

ஆமிந்தச்சுன்னந்தானும் அப்பனேநிமிளைச்சுன்னம், ஆமிந்தச்சுன்னந்தானும் அப்பனேதங்கச்சுன்னம், ஆமிந்தச்சுன்னந்தானும் அப்பனேவீரச்சுன்னம், ஆமிந்தச்சுன்னந்தொட்டு மாடலாம் பாடலாமே. (௨௨௯)

பாடலாம்வாசியோடு பராபரப்ரத்தில்கூடி, ஆடலாம்அகண்டந்தாண்டி அளவில்லைகரையுமில்லை, நீடலாமிதற்குமொக்கும் நிலையொத்தநிமிளைச்சுன்னம், காடெல்லாம்பொன்னேயாகுங் கலந்துசவ்வாதுகூட்டே. (௨௩௦)

கூட்டியசவ்வாதைத்தொட்டு குறைவறச்சரக்கில்பூசி, ஆட்டியேவாட்டவாட்ட அறுபதுமணியேயாகும், நீட்டியகுருகத்தூட்ட நிமிஷத்தில்விறைத்துப்போகு, மாட்டியகல்லுமண்ணு மகாமேரின்மரத்ததாமே. (௨௩௧

ஆமிந்தக்குருவுக்கேதான் ஆண்மைதான்வந்ததென்னில், வாமிந்தவீசன்பக்க மாயிக்குமுதனுள்ளதம், காமிந்தநிமிளைதானுங்கட்டியசெயமாங்கெந்தி, சோமிந்தவேதைபோம தூரத்தில்தூரம்பாரே. (௨௩௨

பாரிந்தநிமிளைபட்டால் பலபலச்சிலையும்பொன்னும், பாரிந்தநிமிளைப்பட்டால் பால்முதலாத்தந்தன்னீர், யாரிந்தநிமிளைப்பட்டால் பரமனுந்தியாகியாவான், பாரிந்தநிமிளைச்சுன்னம் படுமுன்னேயெல்லாஞ்சாமே. (௨௩௩)

சாகின்றரசத்தையெல்லாம் தனித்தனியினமேகண்டு, பாகின்றகளங்குபற்பம் பரவியமேழுமார்க்கம், தேய்கின்றசெந்தூரங்கள் செய்துநீமுடித்துக்கொண்டு, வாகின்றலோகங்கண்டு மாட்டிநீவேதைபாரே. (௨௩௪)

பார்க்கவேசெயநீர்மார்க்கம் பராபறையெனக்குச்சொன்னாள், ஆர்க்கவேஅண்டச்சுன்னம் அதில்கடல்நுரையின்சுன்னம், சேர்க்கவேஉப்புச்சுன்னம் சிரந்திடுஞ்சூடன்சுன்னம், கார்க்கவேகாரச்சுன்னம் கடுஞ்சீனச்சுன்னங்கூட்டே. (௨௩௫)

கூட்டுநீயிலங்கன்சுன்னங் குலாவியசாரச்சுன்னம், ஆட்டுநீதுரிசிச்சுன்னம் ஆகியஒன்பதுக்கும், பூட்டுநீஒன்பதுக்கும் புக

ழ்பலமொன்பதேதான், தாட்டுகெல்சாரங்காணும் தனியலம்பதி னெண்ணையே. (உ௯௬)

வைத்ததைதயெல்லாமொக்க வளம்பெறமர்த்தீப்பீராய், கைத்தலநெல்லிக்காய்ப்போல் கைகண்டசெயநீராகும், மெய்த்திடும்பனியில்வைக்க மூதண்டசெயநீராகும், எத்தியகுபேரனுக்கு யீசன்தானளித்தநீரே. (உ௯௭)

நீரென்றுசொல்வதல்ல நீருக்குள்தீயாம்நீறு, காரென்றகுழலாள்தேவி களித்திடுங்காதிற்சொன்னாள், சேரென்றும்பூரத்துள்ளே செயநீரைக்குத்திக்கிண்டி, வாரென்றகுகையிலிட்டு வளம்பெறவூதிப்போடே. (உ௯௮)

ஊதியப்பூரச்சுன்னம் ஒருஅண்டவோட்டில்நீறும், ஊதியப்பூரச்சுன்னம் ஒன்பதும்உரைத்துநீரும், ஊதியப்பூரச்சுன்னம் ஒருப்பொட்டில்சூதம்நீறும், ஊதிபப்பூரச்சுன்ன மொப்பொன்றுமில்லைகாணே. (உ௯௯)

காணிந்தச்சுன்னமொன்று கடிபதோர்வீரமொன்று, தேனிந்தத்தேய்க்கவுன்னிச் சிவப்பதாம்பாருபாரு, ஊனிந்தச்சிவப்புத்தன்னை ஒருபொட்டில்தங்கம்நீறும், வானிந்ததங்கநீற்றை மாட்டிடாய்த்துரிசிக்கென்னே. (உ௱)

துருசுதானுமேலே சூட்டொன்றுதங்கச்சுன்னம், வரிசையாய்ரவியில்போட மகத்தானகுருவேயாகும், பரிசிக்கநவலோகங்கள் படுமுன்னேதங்கமாகும், உரிசையாப்மதுவைக்கொண்ட உத்தமிசொன்னவாரே. (உ௱௧)

சொன்னமாஞ்சுன்னமொன்று துரிசியின்சுன்னமொன்று, பண்ணமாப்பூரச்சுன்னம் பதுந்திடுவீரச்சுன்னம், அன்னயக்காரச்சுன்னம் அப்பனைசமனாய்க்கூட்டித், தன்னயபொடித்தேபொன்றுய்த் தனிசிமிளடைத்துக்கொள்ளே. (உ௱௨)

அடைத்திடுங்குருவின்பேரு அப்பனேஅறையக்கேளு, நடத்திடும்லயகாயத்தில் நளினமாம்ருத்திரனாகும், படைக்கிடும்அண்டமெல்லாம் படுமுன்னேவெந்துநீறும், கடைத்திடும்நவலோகத்தில் காட்டுமுன்சாம்பலாமே. (உ௱௩

சாம்பலாயெண்ணவேண்டாங் தனித்தனிக்குருவாம்பேரு, நாம்பலோநவலோகத்தில் நாட்டிதைதங்கமாகும், வேம்பலோதி

ண்ணத்திண்ண விளங்கியகரும்புபோல, ஏப்பலோவிதுக்குள் வேதை இபம்பவும்லெடுங்காதென்னே. (உசச)

ஒடுங்காதசெயநீர்க்குள்ளே ஊட்டியேசரக்கைவாட்ட, நடுங் காதமயினமாகுந் தனித்தனிவேதைபோடு. மடங்காதசூதந்தன் னில் மாட்டுமுன்மைனமாகும், அடங்காதமாத்தாள்பாதம் அறு பத்தாறுனுஞ்சித்தே. (உசரு)

சித்தெல்லாமாடலாகுந் தேகமும்நிறுத்தலாகும், பத்தெல் லாமறையந்தத்தைப் பகலிரவொன்றாய்ப்போகும், அத்தெல்லாம் வாசியோடே அகண்டத்திலாடலாகும், வித்தெல்லாம்பொன்னே வித்து விட்டவர்கெட்டவாரே. (உசசு)

கெட்டதுசெயநீராலேகெடிபநிந்தங்கஞ்சூதங், கெட்டதுசெ யநீராலே கெடிபடச்சரக்கதெல்லாங், கெட்டதுசெயநீராலேகெவ னித்தப்பிறப்பிறப்பும், கெட்டதுசெயநீர்ப்பட்டுக் கெடியண்டந் தாளதாமே. (உசஎ)

தாள்ப்பட்டசெயநீர்க்குள்ளே சூட்டியவேதைமார்க்கம், ஆ ள்ப்பட்டாலாத்தாள்சொல்வாள் அடியேனுமறியேனையா, வேள் ப்பட்டபாணத்தொக்க விரவியேஉருக்கப்பொன்னும், நாள்ப்பட் டதூபதீபம் நலங்கியபரிசமாமே. (உசஅ)

பரிச்சித்தசெயநீர்பட்டால் பதையாமல்நாகஞ்சாகும், பரிச் சித்தசெயநீர்ப்பட்டு பருகிடயிரும்புமீயம், பரிச்சித்தசெயநீர்ப்ப ட்டால் பளிச்சென்னும்செம்பினூரல், பரிச்சித்தசெயநீர்வங்கம் பதையாமல்கட்டும்பாரே. (உசகூ)

கட்டுமேசெயநீரென்றால் கரையில்லைகடையுமில்லை, ஒட்டு மேயிந்தமார்க்கம் உத்தமசீஷனுக்குத், தெட்டுமேதுரோகமான சிந்தையில்மனிதர்க்கெல்லாம், பட்டுமுன்படாதுமுன்னே பளிச் சென்னும்மாறுமாற்றே. (உருO)

மாற்றுமாம்பொன்னுமாகும் வணங்கியசீவனுக்கு, வேற்று மாங்குதிரையேறு மியல்பெறும்வாசிசிக்கும், தோற்றுமாம்கண் டந்தாண்டி சுழுதியும்கடந்துதோன்றும், காற்றுமாங்கடிந்தஒடு ம் கவனமுமாகும்பாரே. (உருக)

சூத சுத்தி.

ஆகுமேரசத்தைச்சுத்தி யப்பனேசெய்யுமார்க்கம், பாகுமே அரசம்பட்டை பதைப்பறயிடித்தரைத்து, வாகுமேவில்லைபண்

ணி வளப்பெறச்சுட்டச்சாம்பல், தாகுமேபடிரெண்டாக்கி தனிக்குள்ளே அமுரிவாரே. (௨௫௨)

வாருநீயமுரிதானும் வளம்பெறப்படியுமெட்டு, தேருகாயுருவிச்சாம்பல் சேர்த்தொருபடியும்விட்டுக், காருநீமூன்றுநாளில் கவிந்ததோர்தெளிவைவாங்கி, பெருநீயெறித்துக்காச்ச இறுகியே உப்புமாமே. (௨௫௩)

உப்பதுபலமும்நாலு உயர்ந்திடும்சூதமெட்டுக், கப்பதுக்கல்வத்திட்டுக் கலந்துவார்குமரிச்சாறு, செப்பதுஅரைப்பாயப்பா சிறந்துடன்மூன்றுநாள்தான், அப்புயகஞ்சகோஷம் ஆறொன்றும்போகும்பாரே. (௨௫௪)

பாரிந்தச்சூதமொன்றுப் பாச்சொன்பதிலேனுகம், வாரிந்தப்பொடிபோற்பண்ணி வைவேழக்குழலுக்குள்ளே, தாரிந்தயிடையோடொக்கத் தனித்ததோர்விரம்போடு, சேரிந்தமேனிச்சாருஞ்சேர்க்கவேழ்துள்ளிவாறே. (௨௫௫)

வார்த்திதைக்கிண்டிமெள்ள வைத்திடுரவியில்தானே, சேர்த்திதின்வாய்க்குச்சிலே சிக்கெனமண்ணைச்செய்து, நேர்த்தியாய்செல்லுக்குள்ளே நிமிறவைத்தெரிப்பாயாகில், பாத்தியநாகந்தானும் பளிச்செனச்சூதமாமே. (௨௫௬)

ஆகின்றநாகச்சூதம் அப்பனேசெயிக்கக்கேளு, பாகின்றசாரம்ரெட்டி பருங்காரச்சுன்னமொன்று, ஏகின்றயிணங்கன்சுன்னம் யிதுநாலும்ஒன்றுபோட்டு, வாகின்றியமைப்பாயாகில் வளம்பெறசெயநீராமே. (௨௫௭)

நீருக்குள்சூதம்வார்த்து நிலையுறவெரிப்பாயாகில், காருத்தவன்னிமிஞ்சுங் களங்கறும்சூதம்பாரும், சேரொத்தசூதத்தோடே சிறந்திடும்நாகஞ்சேரு, காரொத்தகல்வத்திட்டு கடுகநீபொடியாய்ப்பண்ணே. (௨௫௮)

பொடிக்கிடைசாரங்கூட்டி புணர்ச்சியாயரைக்கும்போது; மடிக்கியவுப்புச்சுன்னம் மாட்டுநீசாரத்தொக்க, யிடிக்கியேயரைப்பாயாகில் யிபலுடன்றுசாமம், தடிக்கியவீரம்போட்டு தனிப்பணிவைத்துப்பாரே. (௨௫௯)

வைத்திடும்நாகம்ரெண்டு வருகுமோசந்தான்பாரு, கைத்திதைமுன்போல்நாகங் கூபளித்துவிடுவிப்பீரா, பெத்திசையென்று கேழ்க்கில் பேழுதிரம்விடுவிச்சேறு, பத்திசைப்பரிசவேதைப் பழுக்கிறருசியைக்கேளே. (௨௬0)

கேளிந்தச்சூதத்திற்கு கெடிறனுக்கொன்றேதங்கம், தோளிந்தவொன்றாய்க்கூட்டிதொலைவானசெயநீர்வார்த்து, வாளிந்தப்பூம்போட்டு மாட்டிநீயெரிப்பாயாகில், வேளந்தத்தங்கமுண்டு விடுபடும்யானைபாரே. (௨௬௧)

யானையாஞ்சூதங்கேளே யடவிலேபரிசவேதை, பூனையாம்சவலோகங்கள் பொட்டினால்த்தங்கமாகும், காணவேதிரிந்துமூன்றுகனவெருந்தழையுஞ்சுட்டு, மானமேபோகவேண்டாம் வகையுடனித்தைப்பாரே. (௨௬௨)

பாரிந்தச்சூதத்துள்ளே பரிதன்னைக்கூட்டிக்கூட்டி, வீரிந்தவிடுவிப்பீராய் வெகுமெத்ததூரமோடும், சேரிந்தச்சூதமார்க்கந் தேவிக்குச்சிவன்தான்சொன்னார், காரிந்தக்குழலாளென்மேல் கடாகூழித்தேயளித்தவாரே. (௨௬௩)

லிங்கக்கட்டு.

வாறுகேளிங்கங்கட்டி வளம்பெறும்வேதைபோடக், கூறுகேளுப்புரெண்டு கொடியதோர்காரம்ரெண்டு, தாறுகேள்சாரமொன்று தனித்திடிந்துருசியொன்று, ஆறுகேள்பலமாறாக யமட்டிநீபொடியாய்ப்பண்ணே. (௨௬௪)

பண்ணியபொடியைமூன்று பங்கதால்வைத்துக்கொண்டு, தன்னியுலிங்கந்தானுந் தனித்தொருபலமேவாங்கி, அன்னியலிங்கத்துக்கு அப்பனேபத்துக்கொன்று, துன்னியதுரிசிசுன்னந் துப்புநீர்குழைத்துப்பூசே. (௨௬௫)

பூசியேவாட்டிக்கொண்டு லகம்படக்கரண்டிக்குள்ளே, ஆசியேமூன்றுபங்கி லப்பனேவொருபங்கிட்டு, நேசியேதீயில்வைத்து நேருடன்வாட்டிவாட்டிக், காச்சியரெண்டுபங்கு களம்கறவாட்டிப்போடே. (௨௬௬)

போட்டபின்லிங்கங்காணீர் புகழ்பெற விறுகிக்கொள்ளும், ஆட்டபின்லிங்கத்துக்கு அதிற்பாதிச்சாரசுன்னம், பூட்டய்யாமேலேநீயும் புகழ்ச்சட்டிதனிலேவைத்து, நீட்டிபசுருக்குப்போட நேர்மையின்பாலைக்கேளே. (௨௬௭)

தேளுநீதுண்டிப்பால்தான் கெடிமூன்றுப்படியேவாங்கி, வாளுநற்காரச்சுன்னம் வளமாய்ப்பலமேபோட்டு, தேளுசெம்பருத்தம்பூவை சிறக்கமுன்னூறுபோட்டு, வேளுயிர்பிழந்துபோடுவெளுத்துப்போம்பூவைப்பாரே. (௨௬௮)

பூவினின்சாரமெல்லாம்புணர்ச்சியாய்ப்பாலையுண்ணும், காவுடன்பாலின்சாரங் கபளிக்கும்லிங்கம்பாரு, தேவுடப்பாலைநீயும் சிறக்கவேசுருக்குப்போடு, ஆவுடன்லிங்கந்தானு மப்பனேமுழுக்கட்டாமே. (௨௬௯)

கட்டியலிங்கமொன்று காட்டொன்றுதங்கத்தூடே, ஒட்டியரெண்டுஞ்சேர்ந்து உருகிடுமிடைபோகாது, அட்டியரெண்டுங்கூட அப்பனேகுருவுமாச்சு, ஒட்டியவேதைபோட உரைக்கிறேன்கண்டுகொள்ளே. (௨௭௰)

கண்டிடுஞ்செம்புநாலுங் சடிடதோர்வெள்ளியெட்டு, ஒன்றியேயுருகிநின்ற வுத்தமஇரும்புவொன்று, அண்டியசெயசாரந்தானப்பனேயதுவுமிட்டு, மண்டியலிங்கந்தங்கம் மாகுருவொன்றுபோடே. (௨௭௧)

போட்டபின்னூதிப்போட்டுபோடதில்சமனுய்த்தங்கம், ஆட்டபின்மாத்துக்கேழ்க்க அப்பனேபத்துக்சாணும்; தீட்டியவேல்போல்கண்ணாள் தேவிதானளித்தாள்பார்த்தேன், ஊட்டியகாயசித்தி உரைக்கிறேனறிந்துகொள்ளே. (௨௭௨)

கொள்ளிந்தக்கல்பத்தானுங் குளாவியேதினமேமருன்றி, தள்ளிந்தப்புளிப்புமுப்பு சார்ந்திடும்பெண்ணு போக்கு. விள்ளிந்தமாய்கையான வீட்டையும்விரைந்துபின்னைத், தெள்ளிந்தமாய்கைநீக்கிச் சிறந்துநீகல்ப்பங்கொள்ளே. (௨௭௩)

கொண்டிடத்தேகந்தானுங் குளாவியசிகப்பேயாகும், மண்டியமயக்கமில்லை மற்றொருபாதையில்லை, யெண்டியநோய்களெல்லா மிதுபடப்பொடியாய்ப்போகும், தண்டியேயுண்டுநித்தப்சாதிக்கில்சித்தனாமே. (௨௭௪)

ஆமென்றதங்கலிங்க மாடுறமார்க்கங்கேளு, வாமென்றசெயனுகத்தில் மாட்டிதைநலுக்கொன்று, தாமென்றவெள்ளிசெம்புதனிப்படவுருகும்போது;நாமென்றநாலுபத்தில் நாட்டிநீவேதைகபாரே. (௨௭[illegible])

பாரிந்தநாகலிங்கம் பருதியளடைக்குச்சூதம், வாரிந்தக்[illegible]ல்வத்தோடே மர்த்திக்கப்பொடியாமுன்னை, தேகிந்தயிடைக்கி[illegible]ட்டி சிறந்திடுங்கெந்திபோட்டு, தாரிந்தத்தங்கங்கூட்ட[illegible] குப்பியெடுத்து[illegible]பாரே. (௨[illegible])

பார்த்திடுமருணன்போலே படிந்தசெந்தூரந்தன்னை, பேத்திடிநவலோகந்தி லிடல்பட நூற்றிற்கொன்று, கோர்த்திடும்வேதையோடுங் குலாவியதிசைமாத்தாகும், ஆற்றிடுநிறந்தைப்பாரு ஆற்றொடார்வாதிதானே. (உஎஎ)

நவலோகச் சுன்னம்

தானுனவிணாயகன்சுன்னஞ் சாத்தரைநாகத்துக்குக், கானுன புடந்தைப்போடு கைகண்டசோரச்சுன்னந், தேனுனசெம்புமேலே சொரசொரச்சாரச்சுன்னம்; வானுனபுடத்தைப்போட வளர்செம்புச்சுன்னமாமே. (உஎஅ)

ஆமிந்தஇரும்புமேலே அப்பிடுவீரச்சுன்னம், தாமிந்தப்புடமேபோடத் தவளம்போல்சுன்னமாகும், காமந்தக்கருமால்தேவிகடுகியசுன்னந்தன்னைச், சேமந்தவங்கம்ரெண்டில் சேர்த்திடச்சுன்னமாமே. (உஎசு)

சுன்னமாம்வங்கச்சுன்னஞ் சூட்டிடவெள்ளிமேலே, சுன்னமாம்ரசிதம்பாரு துலக்குறவெளுப்பேயாகும், சுன்னமாம்சூதச்சுன்னஞ் சூட்டிடப்பரியேசுன்னஞ். சுன்னமாம்நவலோகங்கள் துடிபடக்நருவுமாமே. (உஅ0)

துடிப்படவேழுலோகம் சுயப்பிறப்பாணலோக, மடிப்படநாலுலோகம் வகைகேளுசொல்வேன்யானும், பிடியிட்டசெம்பில்வங்கம் பெருகிவெங்கலமேயாச்சு, அடியிட்டசெம்பிலீய மணைத்திடத்திராவுமாமே. (உஅக)

ஆமிந்தசெம்புக்குள்ளே அணுகிடில்நாகந்தானுங், காமிந்தக்குடவனுகும் கண்டவர்பொன்னேயென்பார், சேமிந்தலோகந்தானுந் செம்பியேயுருக்குமாகும், ஓமிந்தப்பதினொன்றுன உலோகமும்மறிந்திடாயே. (உஅஉ)

அறிந்திந்தலோகந்தன்னை அதுஅதுவெவ்வேரக்கட்டத், தெரிந்திந்தவுரைப்பேனப்பா நினவுற்றுநீதான்பாரு, பரிந்திந்தச்சாரச்சுன்னம் பாங்குடன்லோகச்சுன்னம், பிறிந்திந்தக்காரங்கூட்டிப் பேரண்டமுன்னீர்வாரே. (உஅந)

வார்த்துநீஅரைக்கும்போது வாழ்மூன்றுஞ்சமனுய்கூட்டு, யோர்த்துநல்நாகந்தன்னை யியல்புறத்தகடாய்போடு, போர்த்துந

லைநாகமேமேல் புகழுறப்பரிசம்பண்ணி, தோர்த்துரப்புடங்கள் போடச் சுகமுரச்சாரஞ்சாமே. (உஅச)

சாகுமேசாரமாகி தனியண்டம்பொன்னையாகும், சாகுமே சோரமென்று தவித்தாலுங்கட்டாதப்பா, சாகுமேசாரமார்க்க ஞ் சந்திரமவுலிகண்டாற், சாகுமேசாரங்கட்டச் சாத்திரனென் சாத்திரனனே. (உஅரு)

சாத்தவேவங்கவியங் தனித்தனிக்கட்டக்கேளு, வத்தவே யிணக்கன்சுன்ன மிபல்மாவின்தேவிச்சுன்னம், கோத்தவேகார ங்கூட்டிக் கொட்டிவெண்டமுன்னீர், சேந்தமுன்மருந்துமூன்று ஞ்சேர்சமனகக்கூட்டே. (உஅசா)

கூட்டியமருந்துதன்னைக் குலாவியேயிருவங்கத்தில், ஊட்டி யேபூசிப்பூசி யொவ்வொன்றாய்ப்புடத்தைப்போடு,நீட்டியவங்கம் ரெண்டுஞ் சினத்திலேகட்டுங்கட்டும், ஆட்டியவேதைகாண யட ங்காதுதேய்ப்பாயேளே. (கூஅஎ)

செம்பு ஊறல்போக

கேளுநீசாரச்சுன்னம்கெடிபடுந்துருசிச்சுன்னம், வாளுநீகார த்தோடுவெளம்பெறச்சமனாய்க்கூட்டி, தேளுநீசெம்பின்மேலேசிற க்கவெண்கருவாற்பூசு, ஆளுநீபுடத்தைப்போட யப்பனேயூறல் போமே. (உஅஅ)

போதுமேசெம்பினூறல் பொல்லாதபோகாதப்பா. போகு மேவூறல்போனால் பொன்னாகுங்குருவுமாகும், போகுமேயூறலா னற்புகழ்காயச்சித்தியில்லை, போகுமேயூறலானல்பொன்போலே வெளுக்கும்பாரே. (உஅகூ)

பாருநீவீரச்சுன்னம் பரிவுடனுப்புச்சுன்னங், தாருநீகாரங் கூட்டிச்சமனாகக்கருவிலாட்டி, எருநீயிரும்புமேலேவியல்படப்பூ சிவாட்டிக், காருநீயுருகவப்பா கண்விட்டேயாடும்பாரே. (உகூ0)

ஆடுமேயிரும்புமாறு லண்டமும்பிண்டம்பொன்னும், ஆடு மேயிரும்புமாறு லளவில்லைவேதைகேளு, ஆடுமேயிரும்புமாறு லப்பனைகாயசித்தி, ஆடுமேயிரும்பேதென்னி லப்பிரேகசத்து காணே. (உகூக)

காணிந்தவிரும்புதானுங்கண்விட்டேயுருகுமப்போ, ஆணிந்த த்தங்கந்தானு மப்பனைசமனாப்க்கூட்டு, பேணிந்தரெண்டுங்கூடி

ப் பிறந்ததுக்கெட்டுக்கொன்று, வாணிந்தத்துத்தம்போடு மகத் தானவிங்கம்போடே. (உகூஉ)

போடுநீயிதற்குள்விரம்புசுமூடன்ராஜவற்கம், ஆடுமேதுரிசி போடு அப்பனேமாலின்தேவி, ஊடுநீசூதமொக்க வூட்டுப்பூரக ச்சத்து, தேடுநீயெட்டும்பாதி சிறக்கநீரோர்பாயூட்டே. (உகூங)

வூட்டிடலோகந்தங்க மொவ்வொன்றாய்விழுங்கும்பாரு, ஆ ட்சியகோழிக்கிட்ட வப்பனேதவிடுபோலே, நீட்டியேயிரும்புக் காருஞ் சேர்ப்பதுவெட்டுக்கொன்று, மூட்டியகளங்கவேதை மூப் பதுக்கொன்றுபோடே. (உகூச)

போடுநீவெள்ளிமேலே பொலிவுறமாத்துப்பத்து, தேடுநீ செம்புமேலே சிறந்திடும்பத்துக்கொன்று, யேடுநீருடவன்மேலே விருபதுக்கொன்றுபோடு, ஆடுநீவேதைபாரு மப்பனேயடங்கா தென்னே. (உகூரு)

நாகத்தொழிற் செந்தூரம்.

அடங்காதநாகத்துக்கு மப்பனேதொழிலைக்கேளு, வடங்கா ததங்கமொன்று மாட்டுரெண்டைடையேநாகம், தடங்காதமூன் றுக்கொக்க தாக்கிடுசெயசூதத்தைப், படங்காதவெல்லாம்ரெட் டிப்பரிவுடன்கெந்திகூட்டே. (உகூசா)

கூட்டியேயெல்லாமொக்கக் குலாவியேபொடியாப்பண்ணி ஆட்டியேகுப்பிக்குள்ளே யமரவேயடுப்பிலேற்றி, நீட்டியேதீ யைப்போட்டுச் சிவந்திடும்பதமாம்பாரு, மூட்டியேயிருசாமத்தி ல் மூட்டையுமதுவும்வையே. (உகூஎ)

வைக்கவேமறந்துபோனால் மகத்தானகௌதையப்பா, தக் கவேக்குத்திக்குப்பி தணலிலேபோடுவாள்பார், மைக்கதோர்பசு க்கள்வைத்தால் வாதமும்பலியாதப்பா; கைக்கதோரெட்டிக்கா ய்போல் கபளிக்காள்கபளிக்காளே. (உகூஅ)

கபளித்துக்கொள்ளாளாகில் கண்டதோர்வாதம்பொய்யாம், கபளித்துக்கொள்ளாளாகில் கடியதோர்சித்திபொய்யாம், கப ளித்துக்கொள்ளாளாகில் கடுஞ்சுன்னங்காரம்பொய்யாம், கபளித் துக்கொள்ளாளாகில் கவனமுங்கருத்தும்பொய்யே. (உகூகூ)

பூசை.

பொய்யாச்சேயாத்தாள்பாதம் புகழூறப்பூசிக்காதால், மெய் யாச்சேயவனோக்கிவிரைந்துதீமேனவயுண்டால், கையாச்சவா

சிதானுங் கடந்தநகவனம்பாரு, தையாச்சுவேதைதானுஞ் சத கோடிக்கோரமேபாரே. (௩௱)

ஈயக்கட்டு.

பாருநீயீயக்கட்டில் பாச்சிடுபாதிதங்கம், சேருநீயுருகும் போது செயம்பட்டலிங்கந்தானுந், தாருநீதங்கத்தொக்கத்தனி யிடைலிங்கம்போடு, வாருநீவாங்கிப்பார்க்க வளமுற்றகளங்கமா மே. (௩௱௧)

ஆகின்றகளங்கைக்கேளு அப்பனேவெள்ளிசெம்பில், தாகி ன்றமுப்பத்தொன்று தாக்கிடுமாத்துமெட்டு, வாகின்றயுப்பை மெள்ள வளமாகச்சுட்டுப்போடு, போகின்றதொன்றுமில்லை புறை வரத்தங்கமாமே. (௩௱௨)

ஆமிதுகட்டுவங்கந் தங்குள்ளவேதைகேளு, தாமினிவலிங்க லிங்கந் தானொன்றுதங்கமொன்று, சேமினிசெம்புரெண்டு சிறந் திடும்வெள்ளிரெண்டு, ஓமினியொன்றாய்க்கூட்டி யுருக்கிப்பார்மா த்துமேழு. (௩௱௩)

ஏழென்றுசொல்லியெங்கும் ஏழைகாளிதுக்குள் கேளும், வாளென்றநாகமொன்று வளம்பட்டவங்கமொன்று, தானென்ற தங்கமொன்றுதனிச்செயசூதம்ரெண்டு, நாளென்றுமுருக்கிமெள் ள நலம்பெறமணிபோற்செய்யே. (௩௱௪)

செய்ததோர்மணிக்கிரட்டி சேர்த்திடுகெந்திதன்னை, பை ய்ததோர்மணிக்குப்பாதி பாச்சிடுசிலையைநீயும், கைய்ததோர் ஒன்றாய்க்கூட்டிக் களங்கறப்பொடியாய்ப்பண்ணி, ஐததோர்க் குப்பிக்குள்ளே யடைத்துநீயெரித்திடாயே. (௩௱௫)

எரித்திட்டபதத்தைப்பாரு இயல்புறச்சிலப்பாமப்பா, ம றுத்திபசெந்தூரத்தை மாட்டுநீலோகத்துள்ளே, திருத்தியமாத் துக்கேளுதிசைபெறதிசைமாத்தாகும், அரித்திய்ஹேமவித்தை யப்பாகேள்ரசிதமென்னே. (௩௱௬)

ரசித வித்தை.

என்னதோரசிதமார்க்க மியல்புடனரைவேன்கேளு, தன்ன தோர்வெள்ளியொன்று தனிக்கட்டுவங்கமொன்று, தென்னதோ ர்செயச்சூதத்தைச் சேர்த்திடுமிதற்குள்ரெண்டு, மன்னதோர்பல க்கன்காலு மாவுடன்பொடியாய்ப்பண்ணே. (௩௱௭)

பண்ணியபொடியினோடு பாச்சொன்றப்பிரகசத்து, தன்னி யபலங்களஞ்சுந் தனியொக்கயுருக்கிமெள்ள, தென்னியப்பொடி க்குள்சேர்க்கச்செப்புறேன்மருந்துகேளு, அன்னியபலமாக்கே வியந்திடைவெள்ளிசேரே. (௩௱௮)

சேர்த்திடுமிதுக்குள்காரஞ் சிறக்கவேபலமொன்றாக, ஆர்த் திடுமதுகையக்கீக எப்பனேபலமெட்டாச்சு, வார்த்திடுளருக் கும்பாலு மஞ்சதிர்க்கள்ளிப்பாலும், போர்த்திடுயேடரைத்துக்குப் பிப் புகழுடனடுப்பிலேற்றே. (௩௱௯)

ஏற்றியேயெரிப்பாய்நீயுமியல்பெறவாழுசாமம், மாற்றியே குப்பிவாங்கி மருந்துக்குள்பாலவார்த்து, தேற்றிடுயேயரைத்துமெ ள்ளச் செறுகவேவில்லைபண்ணிச், கோற்றியேகுகைக்குளிட்டுக் கொட்டியேபுடத்தைப்போடே. (௩௱௰)

போட்டிடில்பற்பமாகும் பொலியுற்றக்குருவாமையா, ஆட் டிடில்வங்கங்காஞ்சு யாட்பரிலன்னூற்றொன்று, தேட்டியகாகமீ யம் சிறந்திடும்முன்னூற்றொன்று, ஒட்டியசெம்புலோகம் யொ ருனூற்றுக்கொன்றுபோடே. (௩௱௧௧)

ரசிதச் சுன்னம

போடவேயஞ்சுலோகம் புகழ்பெறவெள்ளியாகும், நீடவே வெள்ளிதானும் நிலைபதினுறுமாத்து, ஊடவேரசிதந்தானும்வொ வ்வொருமலையாம்பாரு, ஆடவேவாசிகண்டோர்க் கருளெல்லாஞ் சித்திபாமே. (௩௱௧௨)

சித்தியாஞ்சுன்னமார்க்கஞ் செப்பவேறுண்மைகேளு, அத் தியவாசிக்கொக்கு மறிந்துபார்க்கடிதாஞ்சுன்ன, மத்தியஅண்ட ச்சுன்னம் வளம்பெறவூதியூதி, யெத்தியபலமதொன்று எடுசுன் னநீரில்வையே. (௩௱௧௩)

வைத்திட்டதெளிவைவாங்கி மாட்டவேமருந்துகேளு, கை த்திட்டநாபிபூரங் கடியதோர்வீரஞ்சாரம், மொய்த்திட்டபடிகி யோடு முயன்றிடுமரமேசுதம், பைத்திட்டபுழுகோடொக்கப்ப றவியகுருவண்டேட்டே. (௩௱௧௪)

கடுஞ்சுன்ன அண்டநீர்.

ஊட்டியமருந்துதானும் ஒன்பதுமிடையேகேளு, ஆட்டியவ கையொன்றொன்று மப்பனேவிராகனென்று, நீட்டிமுன்சுன்னநீ

ரால் நேர்படயரைத்துக்கொண்டு, கூட்டியேகுழம்புபோல கொட்டொருசேரைவையே. (௩கரு)

வைத்திடுஞ்சேரைக்குள்ளே வார்த்திட அண்டங்கேளு, சுத்தியவண்டமூன்னீர் கடுகவொன்பதுநீவாரு, மறுத்தியேயொன்றுய்க்கூட்டி மர்த்திக்கச்செயநீராகும், பத்தியசெயநீர்மார்க்கம் பாரப்பாவறியும்பாரே. (௩கசு)

பாரிந்தசெயநீர்க்குள்ளே பருகியதுருசிதோய்ப்பாய், பாரிந்தசெயநீர்க்குள்ளே பருகியகாரந்தோய்ப்பாய், பாரிந்தசெயநீர்க்குள்ளே படிகியுந்துவைத்துப்போடு, பாரிந்தசெயநீர்க்குள்ளே பண்ணையும்துவைத்துப்போடே. (௩கஎ)

கடுஞ்சுன்ன போக்கு

போடவேநாலுங்கட்டிப்பொருமித்துசுன்னமாகும், நீடவேநாலுந்தான்காண் நிலையுற்றநாலுவேதம், ஊடவேநாலுக்குள்ளே வூற்றியாறினதைக்கேளு, தேடவேபாறின்பேரு செப்புறேன்செப்புறேனே (௩கஅ)

செப்பியதுரிசிச்சுன்னம் சோசமன்சாரத்தப்பு, ஒப்பியச்சீனச்சுன்ன முடன்ரெண்டுவுப்பில்புக்க, கப்பியபண்ணைச்சுன்னங் காட்டிடுபூரன்மேலே, தப்பியகாரச்சுன்னஞ் சவுக்காரமிந்துப்பாடே. (௩கசு)

உப்பிடவாறுங்கட்டு முறந்திட்டரவியிற்போட, ஒப்பிடச்சுன்னமாகும் ஓராறுநாலும்பாரு, செப்பிடத்திசைச்சுன்னத்தில் செயகண்டிதூமவேதைக், கப்பிடரவியிற்சுன்னங் காய்மட்டுங்கரத்துக்கொள்ளே. (௩௨0)

கொள்ளுநல்சாஸ்திரங்கள் கூடிற்றுஆறுமாறுய்த், தெள்ளுநற்பத்தும்பத்து சேர்ந்திடுவீரமொன்று, அள்ளுநற்கனிபோலொக்கு மப்பனைபொடியாய்ப்பண்ணிப், பொள்ளுநற்பதினெட்டான் பூரணப்பொருளைக்கேளே, (௩௨க)

கேளுநீகௌரிதந்தி கெடிபடச்சிலைமால்தேவி, ஆளுநீவீரஞ்சிங்கி யகண்டிடும்வெள்ளைலிங்கம், தோளுநீதொட்டிபுத்து துலங்கியபொன்னினப்பா, வாளுநீகோழிகெந்தி வழங்கியகௌரியாமே. (௩௨௨)

ஆமிதுசிமிளையோடு மடங்குகார்முகியேகூட்டி, போமதுரா சாவர்க்கம் புகழ்பெறக்குகிரைப்பல்லு, சேமதுபெருமைமனுக்கு நேர்படபதினெட்டாச்சு, தாமதுபுராணமார்க்கஞ் சரக்கிதுயறிந்துகொள்ளே. (௩௨௩)

கொண்டதோர்பதினெட்டுக்குங் கூட்டுமுன்பத்துச்சுன்னம், அண்டநீர்தன்னைவார்த்து யறைத்துநீயப்புமப்பா, பண்டதுவெவ்வேறாகப் பருகிடுகாலுங்கொன்று, அண்டவோவியிற்போட்டு யலறவேகாச்சிடாயே. (௩௨௪)

காஞ்சிடுங்காலத்துள்ளே கடுகியேபதினெட்டப்பா, மாஞ்சிடுமடங்கும்பாரு மகுத்துவஞ்சொல்லக்கூடா, ஆஞ்சிடுஞ்சித்தவசி யகண்டத்தைப்பார்த்தோர்க்கெய்லும், பேஞ்சிடுஞ்சோமன் மாரி பிறப்பென்றும்பிறப்பார்பாரே. (௩௨௫)

பாருநீபுராணமாளப் பதினெட்டுமூதச்சுன்னம், பாருநீபதினெட்டாலே பலபலகளங்குமாகும், பாருநீபதினெட்டாலே பாவுசெந்தூரமாகும், பாருநீபதினெட்டோடே பரவியவினத்தைக் கூட்டே. (௩௨௬)

கூட்டியமுறைகள்தப்பில் கொடிதானதுரைகள்பொய்யாம்; கூட்டியமுறைகள்தப்பில்கொடுக்காதுவர்ணம்போகும், கூட்டியேயிடையேமிஞ்சில்கொடுஞ்சரக்கெல்லாந்தூளாம், கூட்டியயரைப்புமிஞ்சில் கொடுஞ்சண்டிப்பாகும்பாமீர. (௩௨௭)

பாருநீகடுஞ்சுன்னத்தை பகருவேன்பரிவாய்நோக்கு, தாருநீசீனச்சுன்னந் தனியண்டநீரைக்குக்கி, கோருநீயுப்புமேலே குமட்டிநறுக்கொண்டுபூசி, ஆறுநீரவியிற்போட்டு மமைத்தியேகுகையில்வையே. (௩௨௮)

வைத்துநீவுலையிலிட்டு வளம்பெறவூதுவூது, கத்தியவுப்புதானுங் கடுஞ்சுன்னமாகுப்பாரு, தத்தியநீரைக்குத்த தவளம்போல்நீறுமப்பா, அத்தியவுப்புச்சுன்ன மருபதுங்கட்டுந்தானே.

காணுநீகாரச்சுன்னங் கட்டொன்றுயிணங்கன்நாலில், பூணுநீயண்டநீரால்ப் பொலிவுறயரைத்துப்பூசி, தோணுறரவியிற் போடுசுகப்பட்டக்குகையிலிட்டு, ஊணுறவூதுவூது வுறுதியாச்சுன்னமாமே. (௩௩௦)

சுன்னமாந்துரிசிச்சுன்னம் சுகப்பட்டசாரம்நாலில், பண்ணமாயண்டநீரில் பரிவுடன்பூசிப்போடு, தன்னமாய்ரவியிற்காய்ந்

து தனியுறச்சென்றபின்பு, மண்ணமாங்குகையிலிட்டு வளம்பெறவூதவூதே. (௩௰௧)

ஊதவேகூடன்சுன்னம் ஒன்றினாற்காரத்தப்பி, பாதவேரவியிற்போடு பட்டுள்ளேயுருகுமட்டும், தீதவேகுகையிலிட்டுச் சிதையாமலூதவூது, ஆதவேகாரச்சுன்னத் தாண்மையையறிந்திலேனே. (௩௰௨)

சீனச் சுன்னம்

அறிந்துநீபூரச்சுன்ன மப்பிடுசீனன்மேலே, பிறிந்துநீரவியிற்போட்டு பெலமெல்லாம்போகுமட்டும், மறிந்துநீகுகையிலிட்டு வளம்பெரவூதவூது, கரிந்துநீசீனச்சுன்னம் கடுஞ்சுள்ளமாகும்பாரே. (௩௰௩)

பாருநீசாரச்சுன்னம் பாச்சினால்துரிசிமேலே, சேருநீரவியிற்போட்டு செந்தூரங்காய்ந்தபின்பு, தாருநீகுகையிலிட்டுத் தாக்கியேயூதவூது, போறுநீசுன்னமாறில் பூட்டிவாயண்டநீரே.

அண்டத்தினீரைவிட்டா லாகாதுசடிதாஞ்சுன்னம், பண்டத்தச்ச:க்குக்கெல்லாம் பரவுசத்துருவைப்பார்த்து, ஒண்டிக்கவூதவூத உயர்ந்தநற்சுன்னமாகும், கண்டுத்தப்படிநான் சொன்னேன் காட்டுநிர்வியும்பாரே. (௩௰௫)

பாருநீயிந்தமார்க்கம் பதைப்புறுங்கடிதாஞ்சுன்னம், சேருநீயிதுக்குள்வேதை சிவன்சொல்லதேவிகேட்டாள், ஆரினியறியப்போரார் அறிந்தவர்சித்தரப்பா, தேருநீதிருநாளாகச் செப்புறேன்வாதங்கேளே. (௩௰௬)

கேளுநீசூதங்கூட்டி கெடிபடவேதைபோட, வாளுநீகறுத்தநாபி வளம்பெறயுரைத்துக்கொண்டு, தேளுநீபுனுகுசட்டஞ் சேர்ந்துறமேலேபூசி, கோளுநீதீயிலாட்டிக் குமுறவேயுளுகை வாங்கே. (௩௰௭)

வாங்கிநீபுனுகுதன்னை வைத்திடுபேறணிக்குள்ளே, தேங்கியகழஞ்சிசூதஞ் சிறக்கவார்ப்பீங்கானுக்குள், ஓங்கியச்சாரச்சுன்ன முயர்ந்தமஞ்சாடியொன்று, பாங்கியிப்புனுகுதானும் பரப்புவோர்பணமேதூக்கே. (௩௰௮)

தூக்கிடுசெந்திபாதி சுகப்பட்டபூரம்பாதி, தாக்கிடுசாரம்பாதி தனித்திடும்காரம்பாதி, பாக்கிடுதுக்கமெல்லாம் பணமறைப

ணமேதூக்கம், ஆக்கிடுவெல்லாங்கூட்டி அடவுடன் மர்த்திப்பரியே. (௫௩௯)

மர்த்திக்கில்சூதந்தானும் வளம்பெறும்வெண்ணெயாகு, மனத்திக்கக்கிளிபோல்கட்டி மற்பிடிசூடன்தீப, மத்தித்தசூடன்கட்டித் மறிப்படவிறுகும்பாரு, கொத்தித்த கரண்டிக்குள்ளே கொட்டினீயெண்ணெகுத்தே. (௫௪௦)

குத்தியேதணலில்வைத்து குழையவேஊதும்போது, பத்தியேயுருகும்பாரு பதங்கண்டுகொட்டிக்கொண்டு, அத்தியேகுகையிலிட்டு அதட்டியேஊதும்போது, பொத்தியேகாரம்போடு பொன்போலேஆடும்பாரே. (௫௪௧)

பாரிந்தச்சூதராசன் பகலிரவொன்றாய்ப்பண்ணும், பாரிந்தச்சூதராசன்பறக்குமேயானைக்கொன்று, பாரிந்தச்சூதராசன்பகிரா தபொருளிலேலறறும், பாரிந்தச்சூதராசன் படுமுன்னேயேமமாமே. (௫௪௨)

ஆமிந்தயீசன்கையி லணைத்திடுமாதிசேஷன், வாமிந்தயீசன்கையி லணைத்திடுமாதிசேஷன், வாமிந்தச்சிங்கிப்பூட்ட மயங்கியவாறுபோலத், காமிந்தச்சித்தனரும் தனிச்சித்தன்சிவனேகண்டாய், யேமிந்தரசத்தில்பூட்ட பெரிசிங்கிமுறையைக்கேளே. (௫௪௩)

கேளுநீதுரிசிசுன்னம் கெடிபடக்களஞ்சிவொன்று, வாளுநீசவாதுஒன்று வளம்பெற்றபுழுகுஒன்று, தோளுநீவொன்றாய்க்கூட்டித்துலக்கவேமத்தித்தப்பா, வேளுநீபீங்கான்கிண்ணிவிரவியே அப்பிவையே. (௫௪௪)

அப்பியேரவியில்வைத்து யதுமேலேகாந்திக்காட்டு, ஒப்பியவுள்ளேசென்று வுருகியேதயிலமாகும், செப்பியத்தயிலத்துள்ளே சேர்த்திடமருந்தைக்கேளு, கப்பியகாரசாரம் கடுஅரிதாரங்கூட்டே. (௫௪௫)

கூட்டிடுகெந்திதொட்டி கொடிதானவீரம்பூரம், ஆட்டிடுநாபிபோடு வப்பனேவுரமுங்கேளு, நீட்டியவொன்பதுந்தான் நிறமொருபணமேதூக்கி, ஊட்டியேதயிலத்துள்ளே உரைத்துநீக்குழப்பிக்கொள்ளே. (௫௪௬)

கொண்டிடுந்தயிலப்பேரு கோடுமேயரிசிங்கிதான்காண், தண்டிடுய்போட்டால்சூதந் தலைச்சுற்றிவெறைத்துப்போகும், ஒன்றி

டுந்தயிலங்குத்தி யுறவாகமர்த்திச்சப்பா, பண்டிடுங்கிளிபோல்கட்டிப் பருஞ்சூடன்தீயில்வாட்டே. (௲௪௭)

வாட்டிப்பின்சூதந்தன்னை வளமானகரண்டிக்குள்ளே, நீட்டிப்பின்னெண்ணெய்குத்தி நிலைக்கவேயுருக்கிவாரு, பூட்டிப்பின்குகைக்குள்காரம் போட்டரையுருக்குமப்பா, ஊட்டிப்பின்னுருக்கச்சூதம் ஒளிவிட்டுஆடும்பாரே. (௲௪௮)

பாரிந்தச்சூதந்தானும் பகைமுன்னே தூரவோடும், சேரிந்தச்சூதம்போலே செகத்திலேகட்டுமில்லை, ஓரிந்தத்தழைவேர்சத்தார் இருக்குவார்சுருக்குசெய்வார், காரிந்தமடையரப்பா கடுஞ்சூதக்கட்டென்பாரே. (௲௪௯)

கட்டென்பார்சுருக்குப்போட்டுக் கண்கெட்டாப்போலேநிற்பார், மட்டென்பார்சூதந்தானும் மயினம்போலாச்சதென்பார், விட்டென்பார்ரோட்டிச்சென்பார் விடுபட்டசூதபானே, தெட்டென்பார்வாதமெல்லாந் தெரிகெட்டுத்திகைத்தவாறே, (௲௫௰)

வாறுகேளாடசிங்கி வகையினிசொல்லக்கேளு, கூறுகேள்புழுதஒன்று கூட்டதில்சவ்வாதொன்று, தேறுநல்விந்துவொன்று சிறுகோழிப்பீசமொன்று, தாறுகேள்பொன்னின்னூதம் தனியஞ்சுசமனாய்க்கூட்டே. (௲௫௧)

கூட்டவேமருந்துகேளு குலாவியசாரச்சுன்னம், ஆட்டவேவீரச்சுன்ன மப்பனேதுரிசிச்சுன்னம், மூட்டவேமூன்றுதானும் முக்கழஞ்செடையேதூக்கு, ஆட்டமுன்னஞ்சுகேளுஅபரெண்டுபத்துத்தூக்கே. (௲௫௨)

தூக்கியேபெய்யடைபேதென்னிற் றுலக்காககழஞ்சிபத்து, தாக்கிபமருந்துபோடச் சரக்குடன்வளையைகேளு, ஆக்கியகாரசாரம் அரிதாரங்கெந்திதொட்டிப், பாக்கியவீரம்பூரம் படுரூபியேழும்போடே. (௲௫௩)

போடுநீநிருவிஷத்தான் புகழ்பெறத்துக்கத்தோடே, ஆடுநீபதினொன்றேதான் அப்புறம்வைத்துக்கொண்டு, தேடுமுன்னஞ்சுமூன்றுந் தெளிவுறவறைத்தேயப்பிக், கோடுநல்ரவியில்வைத்துக் கொடுங்காந்திக்காட்டுகாட்டே. (௲௫௪)

காட்டிடத்தயிலமாகுங் கலந்தொன்றாயுள்ளேகூட்டி, ஓட்டியபதினொன்றேதா னொன்றேகாற்பணமேதூக்க, நீட்டிடத்தயி

லத்துள்ளே நேர்மையாயுரைத்துக்கொண்டு, கூட்டிடவிதன் தன் பெயருங் கொடுலாடசிங்கிகாணே. (௩௫௫)

காணிந்தசிங்கிப்பட்டால் கடுஞ்சூதம் விரைத்துப்போகும், பூணிந்தச்சிங்கிவிட்டுப் புகழுறரசத்தைத்தேய்த்துத். தோணிந்த க்கிழிபோற்கட்டிச் சூடன்றீதன்னில்வாட்டு, வாணிந்தக்கரண்டி க்குள்ளே வார்த்தெண்ணெயுருக்கிப்போடே. (௩௫௬)

போட்டபின்குகையிலிட்டுப் பொரிகாரப்போட்டேயூது, ஆ ட்டபின்ரசந்தான்தீயி லப்பனேயாடும்பொன்போல், மூட்டபின் சூதத்தோடே மூட்டிடுபச்சைசூதம், கூட்டபின்கூட்டக்கூட்டக் கொடிதானசூதஞ்சாமே. (௩௫௭)

சாகுமேசூதந்தானுந் தனியொன்றேபல்லகேளு, ஆகுமே சரக்காய்நின்ற வறுபத்துநாலுஞ்சாகும், போகுமேசாரகாரம் போட்டிலேகட்டிப்போகும், வாகுமேயினத்தைக்கண்டு மாட்டு நீசொர்னமாமே. (௩௫௮)

சொன்னமேயானலப்பா துலங்கியமாற்றுக்கேளு, மன்ன வேயைந்நூற்றெட்டு மாற்றெனவறிந்துபார்த்தேன், என்னமோ சிங்கியென்றே யெளிதாகச்சொல்லவேண்டாந், தன்னமேசிங்கிக் கொக்கத் தைலமுமொவ்வாதென்னே. (௩௫௯)

ஒவ்வாதுமலைகள்தோறு முத்தமமுதகந்தானு, மொவ்வாது மலையில்நிற்கு முயர்ந்தமூலிகையேபாரு, ஒவ்வாதுபரிசவேதி யு யர்ந்திடுங்கிணறுதானு, மொவ்வாதுசிங்கிக்கொக்க வொத்ததைக் கண்டிலேனே. (௩௬௦)

ருத்திர சிங்கி.

கண்டொன்றுசொல்லக்கேளு கடிதானருத்திரசிங்கி, மண் டொன்றுமாமையீசன் வழங்கியவொழுங்குகேளு, கண்டொன் றுமளிதனுலுந் தனித்தனிகொழுப்பைவாங்கி, யொண்டொன்று கோழிப்பீச மொக்கஞ்சுகழஞ்சோரஞ்சே. (௩௬௧)

அஞ்சையுமொன்றாய்க்கூட்டி யனுப்பிவைபிங்கானுக்குள், வ ஞ்சையகாந்திகாட்ட வரும்நெய்தான்வழித்துக்கொண்டு, தஞ் சையபுனுகுமஞ்சு சவாதுமைங்கழஞ்சுபோடு, வொஞ்சையநாதம் விந்து வொவ்வொன்றுகழஞ்சுகூட்டே. (௩௬௨)

கூட்டியவொன்பதுக்குள் கூட்டவேசுன்னங்கேளு, ஆட்டிய
திருசுச்சுன்ன மப்பனேசாரச்சுன்னம், காட்டியகாரச்சுன்னங் க
டுகெபுகிமிளிச்சுன்னம், பூட்டியவீரச்சுன்னம் புகழுஞ்சும்கழுஞ்சி
போடே. (௫௬௩)

போட்டுநீயொன்றாய்ச்சேர்த்துப் புகழுறப்பிங்கானப்பி, யா
ட்டுநீகாந்திகாட்டு அப்பனேதைலமாகும், பூட்டிடத்தைலத்தள்
ளே போக்கொலாஞ்சொல்லக்கேளு, மாட்டியகாரசார மால்தேவி
கெந்திகூட்டே. (௫௬௪)

கூட்டுநீவீரம்பூரம் கொம்நிருவிஷமுநாபி, ஆட்டுநீகெவரிமா
ணி னப்பனேசதையும்வாங்கிப், பூட்டுகஸ்தூரிவினைப் புகழ்கோ
ரோசனையுமொக்க, வேட்டுநீதொகையேதென்னி விசையுடன்ப
தினென்றச்சு. (௫௬௫)

ஆச்சிந்தப்பதினென்றேதானப்பனேரெண்டாமுக்கால், பா
ய்ச்சிந்தப்பணத்தின் தூக்கம் பருகியேயுரைத்துக்கொண்டு, தேய்
ச்சிந்தத்தைலத்தோடே சிறப்புடன்வைத்துக்கொண்டால், தோ
ய்ச்சிந்தருத்ராசிங்கி கொடுஞ்சிங்கிநாமங்கேளே. (௫௬௬)

கேளிந்தசிங்கிபோட்டாற் கெடிசூதக்கெசமுஞ்சாகும்; வா
ளிந்தக்கிழிபோற்கட்டி வாட்டிடுசூடன்தீயில், தாளிந்தக்கரண்
டிக்குள்ளே தனிவெண்ணெய்க்குத்தியூது, வேளிந்தச்சூதந்தானும்
விடுபட்டேயுருகும்பாரே. (௫௬௭)

பாருநீயிந்தச்சூதம் பாய்ச்சியேகுகைக்குள்வைத்து, வாரு
நீகாரப்போட்டு வளம்பெறவூதும்போது, சேருநீயீசானத்தில்
செழிகழிமதுவும்வைத்துக், காருநீபூசைபண்ணக் கண்விட்டேபா
டும்பாரே. (௫௬௮)

ஆடுமச்சூதந்தன்னை இப்பனேசுருபிபண்ணு, ஆடுமச்சூதந்
தன்னை யடங்காதகமலிபண்ணு, ஆடுமச்சூதந்தன்னை யஷ்டமாசி
த்திபண்ணு, ஆடுமச்சூதந்தன்னை யகண்டமாஞ்சொருபம்பண்
ணே. (௫௬௯)

பண்ணுநீகாமதேனு பரியுடன்போகம்பண்ணு, பண்ணுநீச
ந்தானந்தான் பருகுமட்சயமேபண்ணு, பண்ணுநீவிண்ணிலாட்டி
ப் பலசிவவிதயதிபி, பண்ணுநீசாதவேதை பரிசினைபண்ணிப்பா
ரே. (௫௭0)

பாரிங்கப்பனிரெண்டாலே பலபலகுளிகையாகும், பாரிங்கப்பனிரண்டாலே பாத்திடும்போதமுன்னேப், பாரிந்தப்பனிரண்டாலே ப்ராவியவாசிகாணும்; பாரிந்தப்பனிரண்டார்க்கும் பலித்திடும்வாசிபோர்க்கே. (௱௭௧)

வாசியும்பனிரண்டேதான் மணிபதுபனிரண்டேதான், தேசியும்பனிரண்டேதான் செயம்பனிபனிரண்டேதான், நாசியில்விடுபட்டோடும் நாட்டியப்வெளியாய்க்காணுர், மாசியின்மாயையான வாசனைபோகும்பாரே. (௱௭௨)

போகுமேபாக்காரத்தாற் பொருமிபழனேயுக்தீப்த்து, பேருமெபெண்ணைக்கூடிப் புணர்ச்சித்தசுகங்களெல்லாம், பேருமே சாவுபொய்யாப் பொன்பணித்தாயுங்காண்பாள், போகுமேயண்டந்தாண்டிப் புகழுற்றுக்கெவனம்பாரே. (௱௭௩)

பாருநீயிந்தநூலைப் பரிவுடனுணர்ந்தேநீயும், ஆரினியென்னைப்போலே யாத்தானைக்கேட்டுச்சொல்வார்; காருநீயிந்தநூலைக் கட்டியபதனம்பண்ணு, தாருநீபாஷாணங்கள் சகலமுங்கட்டக்கேளே. (௱௭௪)

கேளிந்தருத்ரசிங்கி கெடியானவிரலிற்றெருட்டு, ஆளிந்தப்பாஷாணங்களறுபதும்புரட்டிவாட்டித், தாளிந்தநவலோகங்கள் தனிமணல்செங்கல்கல்லும், வேளிந்தவெள்ளிமாற்று விரைந்தெதாராயிரமும்மே. (௱௭௫)

ஆயிரமாற்றுமட்டு மப்பனையறிந்துபார்த்தேன், பாயிரத்தோடேயிந்நூல் பாடினேனுரையைக்கேளு, சேயிரசிவகாமித்தாய் செப்பியமொழியைப்பார்த்து, வாயிரராகமேழு வானமாயிரமூங்காணே. (௨௭௬)

காணிந்தநூலொடொக்கக் கயிலையிலீசர்நூலும், பூணிந்தவுரைத்துப்பார்க்கப் பொன்னிதேயதிகம்பாரு, வாணிந்தத்தாயேசொல்ல வளமாகச்சோதித்தேன்யான், ஊணிந்தநூலைப்போலவொருநூலுமுரைசொல்லாதே. (௱௭௭)

அஞ்சு சிங்கி.

சொல்லாதேயைந்துசிங்கி சூட்சத்தையருளுவேன்யான், வல்லானையாளசூத மற்றொன்றுற்கட்டாதப்பா, கல்லானையானதெல்லாங் கடுந்தங்கயானையாகும், பொல்லானதேகப்போக்கிப் பொன்தேகமாக்கும்பாரே, (௱௭௮)

பாரிந்தச்சிங்கிபஞ்சும் பரமனுக்கஞ்சுபூதம், பாரிந்தச்சிங்கி
யஞ்சும் பரவியயோனிபஞ்சும், பாரிந்தச்சிங்கியஞ்சும் பகர்ந்திடு
ங்கிலமஞ்சு, பாரிந்தச்சிங்கியஞ்சாற் பரவிற்றிவண்டப்பாரே. ( )

பாரொன்றுநீரொன்று பரவியவன்னியொன்று, காரொன்
றுவாயுவொன்று கடந்தமேல்விண்ணொன்று, சீரொன்றுயஞ்
சுபூதஞ் சிங்கியுமஞ்சுபூதம், வாரொன்றுஞ்சிங்கிபோனால் வாதமு
ம்பொய்யாப்போமே. (௩௮௦)

பொய்யாமோவாதமென்றால் பொருஞ்சூதங்கட்டாப்பாறு
ம், மெய்யாமேவாதந்தானும் விரைந்துநற்சூதங்கட்டில், கையா
மோலவணமென்றாற் கடிகைக்குக்கோடிகாதம், தையாரதீர்த்த
ங்காணுஞ் சச்சிதானந்தப்பரே. (௩௮௧)

பாரிந்தப்பனிரண்டான பரியுடன்குளிகைமார்க்கம், சேரிந்
தச்சுரபிக்கப்பா சேர்க்கலாகிரியைபேற்று, பேரிந்தச்சுருபிரெ
ண்டு மிபல்புடன்பிரித்துச்சொல்வேன், காரிந்தவேமக்கூட்டிற்
கடுமேமசுருபியாமே. (௩௮௨)

சுருபி குளிகை கமலி.

ஆமொன்றில்ரசிதங்கூட்டி லடவாகக்குளிகைபண்ணித், தா
மொன்றில்வங்கத்தூட்டில் தனிவங்கம்வெள்ளியாகும், சேமொ
ன்றிற்சுருபியிட்டாற் சிறக்கமேற்கட்டிகட்டி, வாமொன்றிற்றெ
ரிந்தபின்பு வாங்கிநீபாலிற்போடே. (௩௮௩)

போட்டிடுசுருபிரெண்டின் பொருளெல்லாஞ்சொன்னேனப்
பா, மாட்டிடுகமலிமார்க்கம் வகைசொல்லக்கேளாயையா, நாட்டி
டுவேலைநீரை நலமாகக்குடிக்குப்பாரு, ஆட்டிடுந்தீயையுண்ணு
முழுவாயுவுண்ணும்பாரே. (௩௮௪)

உண்ணுமக்குளிகைவாயி லுதட்டிலேவைத்துக்கொண்டு, ப
ண்ணுநல்மணலுஞ்செககல் பருகிபகல்லிலூது, மெண்ணிடுலோ
கம்போலாம் வெதுப்பிபேபொன்னேயாகும், தண்ணுநல்வேதை
தானுஞ் சாற்றநானறிந்திடேனே. (௩௮௫)

அறிந்திலேன்வாயில்வைக்கி லப்பனேகெவனமோடும், பிறி
ந்திலேனண்டந்தாண்டிப் பேரண்டப்பதமும்போகும், நறிந்து
நன்றுயனார்தான் நாட்டிபேபாட்டிப்பார்த்தார், பறிந்துநல்பானு
ஞ்சென்று பதமெல்லாம்பார்த்திட்டேனே. (௩௮௬)

பார்த்திட்டேன்பதமுமண்டம் பலபலசித்தர்கண்டேன், ஆர்க்கிட்டசித்தர்வென்று ரடிமைநான்மூலர்க்கென்றேன், கோர்த்திட்டசொருபமுண்டோ கொடுமூலசிஷ்யராலுல், கார்த்திட்டசொருபங்காட்டிக் கடந்துநான்வந்திட்டேனே. (௩௮௭)

வந்திட்டே னண்டந்தாண்டி வருகில்பேரண்டத்துள்ளே. பெந்திட்டசித்தர்வென்று செவ்விடமிருப்பதென்றார், கைந்திட்ட மூவர்க்கையா கடைசிநால்தரத்துப்பிள்ளை, சந்திட்டபாச்சுதப்பா தனிமதுவுண்ணென்றாரே. (௩௮௮)

உண்ணத்தான்மதுவைவாங்கி யுகந்ததாய்மணிக்குக்காட்டிப், பண்ணத்தான்வாசியாலே பரிவாகவிழுத்துக்கொண்டு, விண்ணைத்தானோக்கநோக்க வெளிவிட்டுவிளக்கைத்தந்தான், பண்ணைந்தான்சித்தரோடு பாஷித்தேன்பாஷித்தேனே. (௩௮௯)

பாசித்தசித்தருக்குப் பாட்டரேமூலராலுல், நேசித்தவைந்தூறோடே நிரைத்தவாயிரமுமெங்கே, கோசித்தரெண்டுநூலுங் கொட்டினேனேநூற்றுள்ளே, வாசித்தசித்தரேநீர் வகைகேட்பீர்வகைகேட்பீரே. (௩௯0)

வகையென்னபதினேழங்கம் வைத்தேனோவைந்நூற்றுள்ளே தகையென்னப்பத்துமேழுந் தனிரெண்டுமேலேசொன்னேன், பகையென்னசித்தரேகாண் பாஷிக்கவல்லாருண்டோ, மிகையென்னவேதைபோட விடுபடார்விடுபடாரே. (௩௯௧)

விடுபடுமென்றசித்தர் வேதைக்கோவாண்மைசொன்னீர், கடுபடுங்குளிகைதூபங் காட்டுமுன்வேதைதாண்டிக், கெடுபடுஞ்சத்தகொன்று கொடுவெளிபுள்ளேபுக்கிப், படுபடுசொருபம்போட்டுப் பறக்குறேன்பிடித்திடீரே. (௩௯௨)

பிடித்திடப்போமோவப்பா பெய்பயன்சொருபமாலுல், அடித்திடப்போகாதப்பா வாடவுங்கோற்றுப்போனேம், மடித்திடவேழுமேலே மாட்டினரெண்டுஞ்சொல்லு, கடித்திடச்சிங்கியோடு கடுஞ்சுன்னங்கண்டுகொள்ளே. (௩௯௩)

கொள்ளென்றமூலமூர்த்தி கொடுஞ்சுன்னஞ்சொல்லாதென்றே, தள்ளென்றமூன்நூற்றுள்ளே தனிச்சிங்கிச்சுன்னஞ்சொன்னார், விள்ளென்றுவிரித்தியானும் விடுவித்தேனைந்நூறுகத். தெள்ளென்றதமிழால்பாலுஞ் சிக்கறச்சொன்னேன்பாரே. (௩௯௪)

பாரொன்றிரீசர்நூலும் பாங்குடனேந்நூறெருக்க, நேரொன்றிப்பார்த்தகாலம் நிற்குமோநில்லாதோதான், சீரொன்றியென்னூலோடே சிவனூலுந்தோற்றுப்போகும், காரென்னபாட்டர் நூல்மேற் கைகடந்தாடும்பாரே. (௱௯௫)

ஆடுமேபாட்டர்நூல்மேலப்பனையந்தநூலைக், கூடுமென்றுரும்பார்க்கக் கொடுக்கிறநூலேயல்ல; நாடுமென்றிருந்தவண்டனற்குகைக்குள்ளேவைத்துத், தேடுமென் காயைக்காவல் சிறக்கநான்வைத்தேன்கேளே. (௱௯௬)

கேளுநீயணிமாவோடு கெடியெட்டுச்சித்தியாட, யாளுநீயஷ்டமாதி யாமந்தக்குளிகைபாரு, வேளுநீசுருபமான விளங்கியமணியின்வித்தைத், தாளுநீவாயில்போடத் தனிச்சூடன்தீபமாகும். (௱௯௭)

தீபம்போல்நிற்குந்தேகம் சிதையாமல்சத்தியோடும், கோபம்போமுனையும்போகுங் கொடியவர்சனையும்போகுந், தாபம்போமயக்கம்போகுந் தன்னையுமெடுக்கும்போதம், ரூபம்போம் சாயைபோகு நொடிக்குள்ளேசித்திபாரே. (௱௯௮)

சித்தியாம்ஞானசித்தி சிறந்துவாயிந்தன்முன்னே, யித்தியாமறியாதாகில் எளிதில்லைஞானம்வாரா, வெத்தியாப்நோக்கநோக்க வெழுந்தவாசனையாற்கெட்டுப், பத்தியமனமும்விட்டுப் பட்டப்போலாடுங்காணே. (௱௯௯)

காணிந்தக்குளிகைபோட்டாற் கையிலேசிக்குப்போதம், பூணிந்தமூலனார்க்குப் பொருந்தியநந்திசொன்னார், வாணிந்தியெனக்குச்சொல்ல வளமாகப்பார்த்துக்கண்டேன், தாணிந்தப்போகமூர்த்தி தன்பதமறிந்திலேனே. (௨00)

மரிந்திலேன்காமதேனு மாத்திரைமார்க்கங்கேளு, நிறைந்துளநினைந்ததெல்லாம் நீட்டியேமுன்னேவைக்கும், குறைந்தொன்றும்போகாதப்பா குளிகையைவாயில்வைத்தால், அறைந்திந்தநூலிற்சொன்னேனப்பனேகண்டபின்பே. (௨0௧)

போகிகுளிகை.

கண்டபின்போகினிப்பாக் கடுமணிக்குணந்தைக்கேளு, தண்டிபபுஷ்பமாம்பை தனித்திடுவாரமெல்லாம், ஒண்டியகட்டில்மெத்தையுறவாதும்பெண்கள்சூழக், கொண்டிப்பம்போகப்பணைக் கொடுத்திடும்பாருபாரே.. (௨0௨)

சந்தான குளிகை.

பாருநீசந்தானத்தின் பருமணிமார்க்கங்கேளு, வாருநீதுண்டுதுண்டாய் மனிதமயிரவெட்டிப்போட்டுச், சேருநீகுளிகைகாட்டு செணத்திலேபொருந்திப்பேசுங், காருநீகுளிகையாலே கடும் யோகசித்தியாமே. (௪௦௩)

ஆமினிபட்சயத்தி னம்மணிவிபரங்கேளு, தாமினிதனங்கள்கூச்சு தனித்ததானியங்கள்கூச்சு, சேமினியன்னங்கூச்சு சிறந்திடும்பொருள்கள்கூச்சு, யேமினிக்குளிகைவைத்தா லெடுக்கவுந் தொலையாதாமே. (௪௦௪)

தொலைபாதகவனமோடுஞ் சூழ்மணிக்குணத்தைக்கேளு, அலையாதமனதுதானு மகண்டத்தையடுக்கக்காட்டும், நிலையாதசமாதியெல்லாம் நிலைக்கவும்நேர்மைகாட்டும், கலையாதேயுமிழ்நீர்வாங்கிக் காயமுஞ்சித்தியாமே. (௪௦௫)

ஆமினிப்பரசிவத்தி லறிவெலாந்தீபம்போலாம், தாமினிவெளியாய்க்காட்டுந் தனிமணிச்சித்திகேளு, வாமினிசெனங்கள்செத்து மறுசென்மமெடுத்ததெல்லாம், ஓமினியுள்ளேயாறி யுண்மையைக்காட்டுங்காணே. (௪௦௬)

காணுநீநாதவேதை காட்டுறமுறையைக்கேளு, பூணுநீசூதங்கட்டிப் புகட்டிச்சாரணைகள்செய்து, தோணுநீவில்லைபோலே சுகப்படவார்த்துத்தட்ட, வாமினிச்சத்தங்கேட்கி லம்மட்டும்வேதையாமே. (௪௦௭)

வேதைபாட்பரிசந்தன்னில் விளங்கியமணியைக்கேளு, ஆதையாயலோகஞ்செங்கல் அடைவுடன்சுக்கான்மண்ணும், பாதையாய்க்காட்டுமுன்னே பரிச்சென்றுதங்கமாகும், கோதையாய்ப்பனிரண்டான குணங்களுங்கூறினேனே. (௪௦௮)

சாரகார பாஷாண ஈயம்.

கூறினேன்மணியின்மார்க்கங் கொடுமுபரசங்கள்நூறு, ஆறினேன்சாரகார மறுபத்துநாலுதானும், தேறினேனீயமாகச் செகமெச்சவேதைபோடப் பேறுநேராகச்சொல்வேன் பிறக்கிற வியம்பாரே. (௪௦௯)

பாருநீபூரச்சுன்னம் பாங்குடன்வராகன்கால்தான், காருநீநிமிளைதானுங் கந்தியுவராகன்கால்தான், தாருநீசாரந்தானும் த

ணித்திடும்வராகன்கால்தான், ஆறுநீமூன்றுந்தானு மரைப்பண்ட
முன்னீர்காணே. (௪௧0)

காணவேயரைத்துக்கொண்டு கலந்திதிலுமிழ்நீர்விட்டு, ஆ
ணவேவராகனாறு மடைவானசாரக்கட்டிப், பூணவேபூசிப்பூசிப்
புலர்த்தியேவாட்டவாட்டத், தோணவேதாரைதாரை சுகமான
வியமாமே, (௪௧௧)

ஈயம்போலிறுகிக்காணு மிதுதானுமுக்கட்டப்பா, காயம்போ
லிறுகிப்போகும் கனவிலும்சாவும்பொய்யாம், பாயங்கேகூகத்து
ள்ளே படுமுன்னேகூதஞ்சாகும், சாயங்கேகூதந்தங்கம் தனிரெ
ண்டும்கூட்டித்தின்னே. (௪௧௨)

தின்றிடிற்காயந்தானுஞ் சிலைபோலேயிருக்கும்பாரு, மன்றிடு
ந்தேகம்பொன்போல் வழங்கியதசமாற்றாகும். பன்றிடுங்குளிகை
யிட்டாற் பட்டம்போற்பறக்கும்பாரு, தன்றிடுஞ்சாரத்தாலே த
னிவருமியங்கேளே. (௪௧௩)

கேளுநீசாரந்தன்னைக் கெடிபடப்பொடித்துவைக்க, வா
ளுயர்சாரந்தானும் வளம்பெறச்செயநீராகும், கேளுறவங்கச்சுன்
னஞ் சிறந்தரைக்கழஞ்சிபோட்டுக், கோளுறக்குழப்பிவைக்கக்
கொடியதோர்செயநீராமே. (௪௧௪)

செயநீரின்பேரைக்கேளு செகமெல்லாமியமாகும், செயநீரி
ற்பாஷாணங்கள் சேர்ந்திடுமுபரசங்கள், செயநீரிற்காரசாரஞ் சி
லைமுதலியமாக்கும், செயநீரிற்றேய்த்துத்தோய்த்துத்தெளியுற
வாட்டியூதே. (௪௧௫)

ஊதிடப்பாஷாணங்க ளுடந்தையாங்காரசார, மாதிடவுபர
சங்கள் மற்றுள்ளவஸ்துவெல்லாம், பேதிடவினத்தைக்கண்டு பி
ளையுற்றுவேதைபோட, ஆதிடமாற்றுப்பொன்னு மாடமுந்தொ
கைகாணேனே. (௪௧௬)

தொகையென்னவியமான துறைதுறையியமெல்லாம், வகை
யென்னரசத்திலூட்டி மடிபிடிவழக்காய்நிற்கும், பகையென்னவி
னத்தைத்தள்ளிப் பரிவானவினத்தைக்கூட்டித், தகையென்ன
வேதைபோடச் சாஸ்திரகோடியாமே. (௪௧௭)

ஆமினியினங்களான வடைவுற்றகாரசாரம், ஆமினியினங்க
ளான வறுபத்துநாலுதானும், ஆமினியினங்கள்தானு மப்பனையு
பரசங்கள், ஆமினியினங்களான அடைவுற்றசாரஞ்சேரே. ()

காரசாரச் சத்துரு மித்துரு.

வேறு.

சாரமுதல்வெண்காரம்வீரமொடுகெந்தி தலைபாகுமினிப்பூர்ந்தயங்காதசிலையும், பாரமுடனரிதாரங்கபரியுடனிமிலை பார்புகழிங்கெளரியுடன்பண்ணைலிங்கமெல்லாம், சூரமுடன்வாதமென்ற சொன்மொழிக்குக்குருவாந் துலக்கமுறவிரத்தப்போலிருக்குமச்த்துருசு, ஆரமுதேயிவையெல்லா மித்துருவேயாகுமறிந்திதனைப்பெருமையுள்ளேயடக்கியிணங்கிடாயே, (௬௧௬)

வேறு.

இணங்கள்சூடனப்பிரக மிசையாய்ப்படிகிகல்லுப்பு. பிணங்கும்வெள்ளைக்கற்சவுடு பெரியதொட்டியஞ்சனமும், தணங்குஞ்சவுடுமிந்துப்பு தனியசிங்கிகாந்தமுட, னணங்கேநாகம்துருசுவங்க மறிவீர்சத்ருகாரமிதே. (௬௨௦)

காரமிணங்கன்கெந்தகமுங் கடிதாஞ்சிலையுந்தாளகமும், வீரம்லிங்கங்காரீயம் விளங்குங்கற்பூரசிலாசத்தும். பாருங்கெளரிநாகமுடன் பகர்ந்தநிமிளைமனவர்த்தம், சேருஞ்செம்பொடிவையெல்லாஞ் சிறந்தசாரப்படிகிமித்துருவே. (௬௨௧)

சேர்த்துநீகருவைவார்த்துக் கிரமாகவரைத்துவில்லை, போர்த்துநீபுலரவைத்துப் புகழ்பெறவூதிப்போடு, ஆர்த்துநீசுன்னமாகு மதிற்பாதிவீரம்போட்டுக், கோர்த்துநீயரைத்துநன்றாய்க் குறுக்கிடைவில்லைகட்டே. (௩௮௩)

கட்டியவில்லைதன்னைக் கடுகவேதனவில்வைத்தூதி யொட்டிபெயூதிப்போடு வுறுதிதான்வங்கச்சுன்ன, மட்டியாமண்பார்கே

ரூ மாட்டிடுஞ்சூதக்துள்ளே, கொட்டியதயிரதாகுங் குமுரவுமு
ருகுகரணே. (சூஅச)

காணிந்தவங்கச்சுன்னங் கழஞ்சியில்கருவைவார்த்துத், தோ
ணிந்தத்துருசியெட்டில் சுகமாகப்பூசுபூசு, பூணிந்தவூறல்போகு
ம் பொருந்தியேயுருவாய்க்கட்டும், வாணிந்தத்தணலிலூது மகத்
தானசுன்னமாமே. (சூஅரு)

ஆமிந்தச்சுன்னத்தாலே யாடலாஞ்சகலவேதை, யாமிந்தச்
சுன்னத்தாலே யடங்கலுஞ்செயிக்கலாகு, மாமிந்தச்சுன்னத்தா
லே யறுநூறுகுளிகையாகு, மாமிந்தச்சுன்னந்தானு மடங்காதும
ணித்தாயாமே. (சூஅசா)

ஆமிந்தவங்கச்சுன்ன மாடுறவித்தைகேளு, காமிந்தநிமிளை
மேலே காட்டிடாயெடைக்குப்பாதி, போமிந்தரவியிற்போட்டு
ப் புகழ்பெறவூதவூது, வோமிந்தநிமிளைதானு முருவாகச்சுன்ன
மாமே. (சூஅஎ)

சுன்னத்திர்மார்க்கஞ்சொல்லத்தொலையாதென்றுலேயப்பா
பன்னத்திநிமிளைச்சுன்னம் பாய்ச்சிடுசூதத்துள்ளே, கன்னத்தின்
பெண்ணுமாணுங்கபளித்துமுத்தமிட்டே, யொன்னத்திலொன்று
ய்ச்சேர்ந்தே யுருவாகக்கட்டும்பாரே, (சூஅஅ)

பாருநீநிமிளைச்சுன்னம் பழமுன்னையெல்லாஞ்சாரும், சோ
ருநீசவாதினூடே குழப்பியேகாதில்வைத்துத், தாருநீசரக்கைத்
தொட்டுத் தனித்தனிலோகத்தூட்டு, ஆருநீயுரைசெய்யாதே ய
டங்காதபொன்னுமாமே. (சூஅகூ)

பொன்னுமாம்சத்துதானும் புகழாகவிருபத்தைந்து, பன்னு
மாம்நிமிளைதானும் பராபரைநாதமப்பா, தின்னுமாஞ்சூதந்தன்
னைச் செயிக்குமாந்திசைகளெட்டுந், துன்னுமாந்தாதுவோடுஞ் சு
கமாகுஞ்சுகமுமாமே. (சூகூ0)

சுகமானவீயமூன்றில் சூட்டிடுசூதமொன்று, மகமானதரண்
டிக்குள்ளே மருவியேயுருகும்போது, தகமானவிணங்கன்சுன்ன
ந் தாக்கியேசமனுப்போட்டுத், துகமானமாகக்கிண்டித் தூக்கிநீ
யெடுத்துவையே. (சூகூக)

வைத்திட்ட வெடைக்குமுக்கால் வாட்டியேபூரந்தன்னைப்,
பைத்திட்டிகருவாலாட்டிப் பதறுமல்வில்லைபண்ணிக், கைத்திட்

டமாகவூது கதிஞ்சுன்னமாகுமப்பா, தைத்திட்டசுன்னம்பாதி தாக்கிநீவீரஞ்சேரே. (௬௯௨)

சேர்த்திட்டுவில்லைபண்ணிச் சிறக்கவேயுலர்த்தியூது, போர்த்திட்டசுன்னமாகும் போக்கிதில்மெத்தமெத்த, காத்திட்டபுலிதானுட்டைக் கவ்வினவாறுபோலச், சோத்திட்டவுப்புபோலத் துடியாமற்சூதஞ்சாமே. (௬௯௩)

சாமிந்தச்சூதம்போலே தனித்தனிசரக்கதெல்லாம், தாமிந்தவகைகையைக்கண்டு தாமெனக்கருளிச்செய்தாள், ஓமிந்தமூலத்துள்ளே யுதிக்கின்றநந்திசொல்ல, வாமிந்தமூலமூர்த்தி வகையெல்லாம்வழங்கினரே. (௬௯௪)

வழங்கியவியம்போல வரிசையாய்நாகம்வைத்துத், தழங்கியேமுடித்தாயானால் தனிப்புலிநாகச்சுன்னம், முழங்கியசூதத்தூட்டு முயற்சித்துக்சூதஞ்சாகும், அழங்கியபாஷாணங்க ளறுபதுக்கட்டுந்தானே. (௬௯௫)

தானென்றநாகச்சுன்னஞ் சாற்றிடத்தங்கமேலே, வேனென்றதங்கம்மூன்று விளம்பியசுன்னமொன்று, கானென்றகருவாற்பூசிக் கனக்கவேவாட்டியூது, மானென்றதங்கந்தானும் வெந்தது சுன்னமாமே. (௬௯௬)

சுன்னத்தைத்தானுங்காட்டிற் சூதத்துக்கிடுப்புபோகும், என்னத்தைத்தொட்டாலுந்தா னேதிப்போய்வேதையோடும், பன்னத்தசரக்கதெல்லாம் படுமுன்னேசாகுஞ்சாகும், கனனத்தேதவேதைக்கேற்ற கடுஞ்சுன்னந்தங்கப்பாரே. (௬௯௭)

பாருநீவங்கமொன்று பரிவானநாகமொன்று, தாருநீயீயமொன்று தனியொக்கவுருகும்போது, வாருநீசமனுப்ச்சூதம் வளமானகரண்டிக்குள்ளே, கோருநீயிணங்கன்சுன்னங் குமட்டியேமூன்றுபோடே. (௬௯௮)

போட்டுநீகிண்டக்கிண்டப் பொடியாகும்பாருபாரு, காட்டுநீயெடைக்குமுக்கால் கற்பூரச்சுன்னம்போட்டு, மாட்டுநீசாரச்சுன்னம் வளம்பெறவராகன்மூன்று, கூட்டுநீகருவாலாட்டிக்குறையாதேவில்லைபண்ணே. (௬௯௯)

பண்ணியவில்லைதன்னைப் பக்குவமாகவூது, புண்ணியவாளனாற் பொருமாதுசுன்னமாகும், கண்ணியசுன்னந்தன்னிற் கண்

டைபாதிவீர, மொன்னிமேயயரைத்துககட்டி புறவாகலூது லூதே. (௭௱)

ஊதிடமூன்றுக்கேளு வுயர்ந்திடுஞ்சுன்னமாகும், காதிடுகு தத்துள்ளே காட்டுமுன்கொன்றுபோடும், ஓதிடவண்டத்தூட்ட வுருகியேமெழுகதாகும், ஆதிடச்சுன்னம்பட்டா லுபத்துநாலு ஞ்சாமே. (௭௱௧)

சாதிறமுறைமையெல்லாஞ் சாற்றுறேனப்பாகேளு, வேகி றவீட்டிக்குள்ளே விழுந்தவன்பிழைப்பானோசொல், ஆகிறசரக் கொன்றி யுப்பனைகட்டக்கேளு, பாகிறசுன்னத்தோடே பச் சைதான்விரபபோமே. (௭௱௨)

போட்டுநீசுன்னத்தோடே புகழாகவரைத்துக்கொண்டு, நீ ட்டுநீபாஷாணத்தில் நில்லக்கவேபூசிப்பூசி, ஆட்டுநீயினங்கள்தோ று மகற்கதுபச்சைகூட்டி, யூட்டுநீவாட்டிவாட்டி யூதிடச்சுன்ன மாமே. (௭௱௩)

ஊதிடச்சுன்னமாகு மூதாட்டாலுருகிநிற்கும், வாதிடவே ண்டுமென்றால் வாதாடிவேதைபோடு, சூதிடவாதிவர்தாம் சொ ட்டொன்றும்பட்டேயாடு, கோதிடவங்கம்நாகமகூடியவாண்மை தானே. (௭௱௪)

தானென்றமூன்றினாலே தனிக்கனிச்சூதங்கட்டும், தானெ ன்றமூன்றினாலே சகலமும்வேதையாகும், தானென்றமூன்றினா லே தனிக்கட்டாஞ்சுன்னமாகும், தானென்றமூன்றும்விட்டுத் த யங்கினார்வாதிபாரே. (௭௱௫)

வாதிக்குமூக்குக்குச்சி வங்கமும்நாகமப்பா, வாதிக்குமூக் கைப்போக்கும் மகத்தானரசந்தானப்பாரு, வாதிக்குமுனையைப் போக்கு மருவியதுருசுராசன், வாதிர்குவாளுட்போக்கும் வழங் கியசாரந்தானே. (௭௱௬)

திரிவங்கக் கட்டுச்சுன்னம்.

தானென்றசுன்னந்தாலே சகலமுங்கட்டக்கேளு, வானெ ன்றசுன்னத்தாலே வைக்கிறமுறையைக்கேளு, கோனென்றுகா ரசாரங் கொடுஞ்சுன்னமாகுதற்குப், பானென்றுகூட்டிக்கூட்டிப் பதறுமனூதலூதே. (௭௱௭)

ஊதிடமாட்டாயானு லுருவாகக்கனமுங்காணு, மூதிடவல் லாயானு லுயர்ந்ததோர்தூளுமாகும், ஊதிடக்காரமேறு மொளி

தருஞ்சுண்ணமாகும், ஊதிடவினத்தைக்கண்டே புருசுண்ணமாக ஆகே.

சுண்ணந்தான்சுருக்காயூது துறையெல்லாங்கட்டுகேளு, சுண்ணந்தான்சுண்ணமொன்று சோதிலச்சாரமொன்று, பண்ணந்தான்கூட்டித்தேய்க்கப் பளிச்சென்றுதண்ணீராகும், கண்ணந்தானிடுவதற்குக் கன்னக்கோல்சாரநீரே. (௭௦௯)

சாரந்தானீராச்சென்பார் தனியண்டச்சுண்ணம்போட்டுச், சாரந்தானீராச்சென்பார் தனிச்சிப்பிச்சுண்ணம்போட்டுச், சாரந்தானீராச்சென்பார் தனிச்சுக்கான்சுண்ணம்போட்டுச், சாரந்தானிவோநீர்தான் சரக்கூதிச்சுண்ணம்போடே. (௭௧௦)

போடுமோர்சுண்ணமென்ன போடாதசுண்ணமென்ன, கூடுமோரினங்களென்ன கூடாதவினங்களென்ன, வாடுமோர்வேதையென்ன வாடாதவேதையென்ன, நீடுமோர்வரிசையெல்லாம் நிலைசொல்வேனினிவாய்க்கேள். (௭௧௧)

கேளுநீசாரத்தோடு கெடிலாகச்சுண்ணங்கூட்டு, தாளுநீதேய்க்கச்சூதந் தம்பினபோலேயாகும், ஆளுநீசெயநீரோடிமப்பமேனூகமொக்க, வாளுநீகரண்டிக்குள்ளே வார்த்தெண்ணெய்கொதிப்பித்தாட்டே. (௭௧௨)

ஆட்டிபருகந்தனை யப்பமேலகுவாய்நீயும், நீட்டியேபுடத்தைப்போடு நிலைத்திடுஞ்சூதம்பாரு, காட்டியேயுருக்கிடப்பாகண்விட்டேயோடுமோடிப், தீட்டியவேல்போற்கண்ணாள் சிறுபிள்ளை சொன்னவாறே. (௭௧௩)

வாறுபோற்பாஷாணங்கள் வகையெல்லாஞ்சாரநீரிற், கூறுபோற்புரட்டிவாட்டக் குறைபாமற்கட்டுங்கட்டும், தாறுபோல்வேதையோடுஞ் சகலமுஞ்சுண்ணமாகும், நீறும்பொனிறத்தான சொல்ல நிச்சயங்கண்டாள்தாயே. (௭௧௪)

தாய்சொல்லயானுங்கண்டேன் சகலமுஞ்சுண்ணமாகத், தாய்சொல்லயானுங்கண்டேன் சகலமுங்கட்டியாடத், தாய்சொல்லயானுங்கண்டேன் சகலமுமீயமாகத், தாய்சொல்லயானுங்கண்டேன் சதகோடிமெழுகுதானே. (௭௧௫)

அம்மைவடிவு

தானென்றவுதயகாலந் தனிச்சிறுபெண்ணேயாளுள், காலென்றவுச்சிநேரங் கூடியதோர்பிரவிடையாளுள், வானென்றசாயங்கால மகத்தானகிழவியாளுள், வேனென்றேபொன்றிப்பார்க்க வேதாந்தியாளுள்பாரே. (எகசு)

பாருநீசிவகாமித்தாய் பதத்தையேயிகழாதோர்க்குக், சோருநீசமாதிஞானங் கொள்ளையாய்க்ராமமீவாள், தாருநீவாசியோடு சகலமுஞ்சித்தியாகும், வேருநீயிவளையல்லால் வேறொன்றுங் கண்டிலேனே. (எகஎ)

கண்டிலேனவளைவிட்டாற் கடுஞ்சித்திபுத்திமுத்தி, தண்டிலேன்வாசிதானுந் தனிமணியொக்கக்காணேன், எண்டிலேன்மனதுதானு முறவிலேன்பூரணத்தி, லண்டிலேன்சிவனைக்காண வறிகிலேனறிகிலேனே. (எகஅ)

அறிகிலேன்சிவகாமித்தா யாத்தாளாற்சிவனைக்கண்டே, னறிகிலேன்போகமூர்த்தி யருளாலேயெல்லாங்கண்டே, னறிகிலேன்குளிகையாலே யகண்டத்திற்புக்கிக்கண்டே, னறிகிலேன்முன்னேயானு மாத்தாளாற்கைகண்டேனே. (எகசு)

சுன்னவிவரம்

கைகண்டமார்க்கமெல்லாங் களக்கறச்சொல்வேன்கேளு, கைகண்டசிங்கியாலே கட்டியசூதநேர்ளு, கைகண்டகறுப்பப யாகுவ கடுந்தூரமோடும்பாரு. கைகண்டேன்சரக்குச்சுன்னங் கணகுருநாமந்தானே. (எஉ0)

தானென்றசுன்னந்தன்னைத் தவளம்போலூதுவூது, வானென்றமேலசாச்சென்று மபங்காதேமைந்தாகேளு, கோனென்றதங்கச்சுன்னங் கொடுமூச்சுக்காற்றுக்கோடும், பானென்றமதியதென்றும் பதுங்கொதக்குஞ்சுன்னம்பாரே. (எஉக)

பாருநீபாஷாணங்கள் பலவிதசுன்னஞ்செய்யத், தாருநீயமைக்கவேண்டாந் தனியேமேலசுன்னம்பூசிக், கோருநீவாட்டிவாட்டிக் குமுறுமல்மெள்ளவூது, ஆருநீபாஷாணங்க ளப்படிச்சுன்னமாமே. (எஉஉ)

ஆமப்பாசாரகார மடங்கலுமுறைத்தேயூது, போமப்பாமேலோகமெல்லாம் பொடியாகவறுத்தேயூது, தாமப்பாபாஷாணங்கள்

தனித்தனியினமாயூது, வேமப்பாவுபரசங்கள் வேர்விட்டூது ஊதே. (௭௨௩)

உருக்கு தப்பில்.

ஊதுதல்தப்பிப்போனா லொடுங்கிடும்பிடியாதப்பா, ஊதுதல்குறைந்துபோனா லாருவாகக்கனத்துநிற்கும், ஊதிடுங்குணத்தைப்பார்த்தே யூதுநீசுன்னமாகும். ஊதிடுமுறைமைதப்பி லுபாயத்தைக்கேளுகேளே. (௭௨௪)

கேளுநீகாரசாரங் கெடியாகத்தவறிற்றென்றால். வாளுநீசரக்கைப்போட்டு வளம்பெறவரைத்தேயூது, தோளுநீபாஷாணங்கள் துறைமுறைதவறிற்றென்று, லாளுநீயினதின்மேலே யப்பியேயூதிடாயே. (௭௨௫)

ஊதிடுலோகச்சுன்ன மொடுங்கியமுறைதப்பானால். வாதிடுலோகக்கூட்டி மாட்டியேயூதிப்போடு. பேதிடவினமேதென்றே யெங்கேயயிலையாதப்பா, வாதிடவினத்தைக்கண்டே யந்தந்தவினத்தைக்கூட்டே. (௭௨௬)

கூட்டியேயுபரசத்திற் கூடியவினத்தைக்கண்டு, மாட்டிநீயூதலூத மகத்தானசுன்னமாகும், ஆட்டியமுறைகளெல்லா மப்பனேயடைவாய்ச்சொன்னேன், னீட்டியவிரலைப்போக்கு நேரானசுன்னந்தானே. (௭௨௭)

சுன்னந்தானென்றுகண்டாற் றொடர்ந்ததைவெல்லாஞ்சுன்னங், கன்னந்தானீட்டவாசற் கரிப்பானையாச்சவூது, இன்னுந்தானென்னசொல்வே னிலையாதேபிலத்தேயூது, பன்னிந்தநூலைக்கண்டு பதனமாய்ப்பார்த்திட்டுதே. (௭௨௮)

ஊதிடுமுறைகளெல்லா மொவ்வொன்றாய்விரித்துச்சொன்னேன். னூதிடுமுறைகட்குள்ளே யுயர்த்தியுங்குறைத்துஞ்சொன்னேன். னூதிடுமுறையைக்கண்டே யூகிநீதொழிலைப்பாரா, யூகிடமாட்டாயானா லூமைபோலிருந்திடாயே. (௭௨௯)

இருந்துநீசுன்னம்வீர மிளைத்திடிச்சிவப்புக்குள்ளே, யருந்துநீயொன்றுதானு மப்பனேயொளித்துவந்தேன், பருந்துநீலிங்கம்போடு பவளம்போற்சிவப்பேயாகும், சொரிந்துநீதொலையாமாசி சொர்னமாய்ப்பொழியும்பாரே. (௭௩௰)

பாருநீலிங்கந்தன்னைப் பரிவாகப்பழத்தின்சாற்றில், வாருநீசுருக்குதானு மகத்தானவூறல்போகும், ஆருநீயறியாதப்பா வா

த்தாளுமப்பன்சேர்ந்து; காருநீயொன்றாய்க்கூடிக் கபலித்தலிங்க ந்தானே. (௭௱௧)

தானென்றலிங்கக்கட்டு தனிச்சூதக்கட்டுக்கொக்கும், தானென்றவீரக்கட்டு தனிச்சூதக்கட்டுக்கொக்கும், தானென்றவங்கக்கட்டு தனிச்சூதக்கட்டுக்கொக்கும், தானென்றநாகக்கட்டு தனிச்சூதக்கட்டொப்பாமே. (௭௱௨)

ஆமிந்தமனதின்மாயைக் களவில்லைகரையுமில்லை, தாமிந்தச் சுன்னப்போக்குந் தனியொக்குங்கரையுமில்லை, வாமிந்தமனதுக் கேது மகத்கானபொறிதானைந்து, காந்தசுன்னத்துக்கேது கடுங் காரசாரங்கானே. (௭௱௩)

காணிந்தசாரகாரங் கடியதோருப்புக்குள்ளே, பூணிந்தவுப் பைவிட்டாற் போகாதுவேதைகேளு, தோணிந்தவுப்போடொக் குஞ் சுகமானசூதங்கேளு, வாணிந்திசொன்னேண்மாயா மயக்கத் தின்மார்க்கந்தானே. (௭௱௪)

தானென்றபொருள்தானென்று தன்னையுநினைப்பதில்லை, வானென்றமனதாலெண்ணி வந்ததுமாயைதானுங், கானென்ற பொருளைமேலாசை கடந்திட்டேனென்பதென்ன, ஆனென்றம னதைக்கட்ட வொழிந்துபோமாசைதானே. (௭௱௫)

ஆசையையடிக்கவேறோ ராண்பிள்ளையுண்டோவப்பா, நே சையாமறிவாய்நின்ற நெருப்பினாலகன்றுபோகும், பாசையைவி ட்டேயாசைப் பருவத்தைவிட்டேனென்பார், பூசையையறியாமா ந்தர் பொருள்கண்டேனென்றவாறே. (௭௱௬)

வாறகேள்விவேகத்தோர்க்கு வளமானகல்லுப்பப்பா, தா றுகேள்போதத்தோர்க்குந் தனியானசூதத்தொக்கும், பேறுகே ளுப்பாற்சூதம் பிலமாகக்கட்டும்கட்டும், கூறுகேளுப்பேயாதி கூ டிநீபாருபாரே. (௭௱௭)

பாருநீயுப்பேதென்னிற் பரவியவேலைக்குள்ளே, கோருநீ யாத்தாளுதங் கொடுமைலைபோலேநிற்கும், தாருநீயிதுதானுப்பு தயங்காதேமைந்தாகேளு, வாருநீயிறைத்தவுப்பு வாழ்சோற்று க்காகுங்காணே. (௭௱௮)

உப்பின்மகிமை விவரம்.

காணுநீசோற்றினுப்பைக் கட்டினேனென்பார்மாந்தர், தோ ணுநீயுருக்கும்போது சுகமாகக்கரியேயுண்ணும், பூணுநீயந்தவுப்

பு பொன்போலேயாடிநிற்கும், ஊனுநீயந்தவுப்பை யுருப்படக் கட்டுகட்டே. (௭௩௯)

கட்டிற்றுகல்லுப்பானாற் கபளிக்குமெல்லாந்தாமுங், கொட்டிற்றுமேதள்போறசூதங் குமுறவேவெண்ணெயாகும், எட்டிற்றுவாதவீந்தி யேறியேயாடலாகும், தட்டிற்றுவுப்புபோனாற் சகலமுந்தளர்ந்துபோமே. (௭௪௦)

போமினிவெடியுப்பான புகழெலாஞ்சொல்லக்கேளு, தாயினிபூமிதேவித் தாயுடனுதமப்பா, காயினிகரைத்துக்காய்ச்சக் கடியதோரிணங்களுச்சு, ஆயினியைந்தாங்காய்ச்ச லளவுற்றகம்பிநன்றே. (௭௪௧)

கம்பியின்குணத்தைக்கேளு கருவுபோவதிரெண்டும், நம்பியயட்டைப்போல நலம்பெறவொளியேயோடுந், தும்பியில்சுருக்காய்த்தீய்க்குஞ் சுழன்றெரியெரிந்துபோகும், அம்பிநீயிந்தவுப்பை யறிந்துமேகட்டிப்பாரே. (௭௪௨)

வெடியுப்பு காரசார இனம் சரக்குவிவரம்.

பாருநீகாரந்தன்னைப் பலபலகரட்டைத்தள்ளு, கோருநீபளிங்குபோலக் குறிப்பானகாரம்பாரு, தாருநீவெண்ணெய்போக்கு சத்துருக்கொண்டேகட்டு, ஏருநீயிதனின்வேதை எலையிலேகாணுகாணே. (௭௪௩)

காணுநீசீனந்தன்னிற் கடியதோருப்பைத்தள்ளு, வேணுநீபசுமைகள்ளு விரவியகரடுதள்ளு, தோணுநீபளிங்குபோலச் சுத்தமாஞ்சீனம்வாங்கு, ஆணுநீகட்டுகெட்டு அறுபதுங்கட்டுங்காணே. (௭௪௪)

கட்டுங்காண்பகையைச்சாற்றக் கடிதானசீனக்காரம், ஒட்டுங்காண்தண்ணீரெல்லா முறப்போகிலவெளுத்துப்போகும், பட்டுங்காணடாதுமுன்னே பகையாமவெல்லாஞ்சாகுங், கெட்டுங்காண்சீனந்தானுஞ் சீர்பார்த்துக்கொல்லுகொல்லே. (௭௪௫)

கொல்லவேசாரந்தானுங் குறிப்பெல்லாஞ்சொல்லக்கேளு, அல்லவேதட்டுகெட்டா யமுங்கியேசாரவேண்டாம், செல்லவேயிருசின்மேலே தேரைப்போனிற்குமப்பா, மல்லவேகறுப்புவேண்டாம் மகத்தானவெண்மைவாங்கே. (௭௪௬)

வாங்கியசாரமெல்லா மதத்தானைப்பூசிக்கொல்லு, ஓங்கியபாஷாணங்க ளொருபோட்டாலுருகிபாடுந், தேங்கியேசூதஞ்சாகுந் திசையெல்லாம்பொன்னையாகும், சாங்கியவீசன்சொல்லத் தாய்கேட்டுச்சொன்னவாறே. (எசஎ)

சொன்னதோரைந்துதானுஞ் சூதத்தின்பொறியாச்சப்பா, தன்னதோர்ரசமேசூதங் கட்டாமனிற்குமட்டும், பன்னதோர்பிராணனை பரிமேலேமனதுமேயறித், தன்னதாயலைந்தாற்போலத் துனிச்சூதமலையும்பாரே. (எசஅ)

அலையாமல்மனநின்று லண்டிற்றேயகண்டத்தோடே, நிலையாகச்சூதங்கட்ட நிஷ்களவெளியைக்காட்டும், மலையாடுமனதின்மாயை மாயையைப்போக்கக்கேளு, கலையாகுங்குளிகைபோடு கைகண்டஞானந்தானே. (எசகூ)

தானென்றமண்ணின்பாண்டந் தனக்குள்ளேயடிட்டுப்பின்பு, காணென்றுபோட்டுப்பின்பு கடிகியேபெரிக்குப்போது, தேனென்றேயுருகும்போது சேர்ந்ததில்விஷங்கள்கூடி, யானென்றகாளான்போலே யப்பனேயெழும்பும்பாரே. (எரு௦)

பாரிந்தமண்ணுக்குள்ளே பருவியவிஷந்தானப்பா, காரிந்தவுவர்மண்ணிற்றான் கலந்துடனிருக்கும்போது, கோரிந்தவளையத்துக்குள்ளே கொடியதோர்விஷமென்பார்கள், தாரித்துவாயிற்போட்டுத் தனியெட்டிக்காய்போலாமே. (எருக)

விளையல் கொழுப்பு விவரம்.

காய்போலக்கசக்கும்வாயைக் கடிகியசுத்திபண்ணு, நாய்போலவிழுங்கிவிட்டாளுமினுக்குநீயுளாவாய், பேய்போலக்காரசாரப் பிள்ளையையறைந்துகொல்லும், தாய்போலத்துருசுக்குள்ளே தாக்குமுனவெளுத்துப்போமே. (எருஉ)

வெள்ளைதானிதனைப்போலே வேறொன்றும்பண்ணாதப்பா, தள்ளைதான்சாரகாரஞ் சகலமும்வெளுத்துப்போகும், கொள்ளைதான்துருசுக்குள்ளே கொடிதானசூதஞ்சாகும், பிள்ளைதான்பிறந்ததென்றுற் பிரமம்போற்சூதம்பாரே. (எருங)

சூதமுங்கட்டிப்போகுந் துடியானநஞ்சுபட்டால், பேதமும்விட்டுப்போகும் பேரண்டந்தானேயாகும், காதமுமோடிப்போகக்கவனமாங்காயசித்தி, வாதமுங்கிட்டுங்கிட்டும் வளையலுமீறும்பாரே. (எருச)

நீறுமோசும்மாவென்றால் நீற்றுமோர்விதத்தைக்கேளு, காறுமோகாரம்வீரம் கடியதோர்நஞ்சுமூன்றும், தாறுமோசமனுய்த்தூக்கு தனக்குள்ளேவானீர்வாரு, தேறுமோகாசிக்குப்பி சேர்த்ததையப்பிப்போடே. (௭௫௫)

அப்பியேயுலர்ந்தபின்ன ரப்பனேயோட்டிலிட்டுத், தப்பியேபுடத்தைப்போடு தனிக்குப்பிச்சுன்னமாகும், ஒப்பியகுப்பிச்சுன்ன மொன்புதுலோகச்சுன்னங், கப்பியபாஷாணங்கள் காட்டுமுன்விறைக்கும்பாரே. (௭௫௬)

பாருநீவளையற்சுன்னம்பிட்டிடவெல்லாஞ்சாகும், தாருநீமூத்தானுப்பிற் றனிவிஷம்போட்டாயானால், கோருநீயண்டரண்டங் குமுறிடுமெல்லாம்பாரு, காருநீசீலைகட்டக் கடுஞ்சீலைமென்றுபோமே. (௭௫௭)

மென்றிடுஞ்சீலைதன்னை வெளியிலேபோடவேண்டாம், பன்றிடவேறேசீலை பரிவாகமேலேகட்டு, தின்றிட்டுப்போகப்போகச் சிறந்துநீசீலைகட்டு, ஒன்றிட்டுக்குருவின்வேதை யுரைத்திட்டேன்முன்னேகாணே. (௭௫௮)

கெந்தகச்செம்பு.

காணினிக்கெந்திதானுங் கடியதோர்செம்பேயாகப், பூணினிச்சொல்வேன்கேளு புகழ்பெற்றதேவிசொன்னாள், வாணினிக்கட்டுவெகாரம் வளமாகக்கட்டுமுப்பு, ஆணினிக்கட்டுஞ்சார மப்பனேபலமுமூன்றே. (௭௫௯)

மூன்றெடுகெந்திதானு மூட்டுநீபத்துத்தூக்கித், தான்றெடுபலமேயப்பா தனிப்பதின்மூன்றுமாச்சு, ஆன்றெடுபழத்தின்சாற்றி லழுத்தித்தாசாணப்பூவை, கான்றெடுபிழிந்துகொண்டு கடுகவேயாட்டுஆட்டே. (௭௬௰)

ஆட்டியேயரைப்பாயப்பா வடைவாகத்தினந்தான்மூன்று, நீட்டிப்பூசம்பூச்சாற்றில் நிலைத்தரைமூன்றுநாள்தான், கூட்டியேகுமரிச்சாற்றிற் கொளவரைமூன்றுநாள்தான், காட்டியேயரைக்கக்கண்டங் கத்திரிப்பழச்சாறுமூன்றே. (௭௬௧)

மூன்றுநாள்கடந்தபின்பு மோகனக்குறட்டையான, கான்றுயப்பழத்தின்சாறு கலந்தரைமூன்றுநாள்தான், பூன்றுநற்பூநாகந்தான் போடதிற்பலமேயைந்தா, ஈன்றநல்வெண்காரந்தா னிதற்குள்முப்பலமும்போடே. (௭௬௨)

போடவோரிதழாய்நின்று பொருந்துதாமரையைவாங்கி, நீடவோர்குடங்கைக்குள்ளே நீயிடத்துருசுச்சுன்னம், ஆடவோர்பலந்தானேகளா யரைப்பமெழுத்துப்போடு, கூடவேபிசைந்துவைத்துக் குமுறவேபிழிந்துகொள்ளே. (௭௬௩)

பிசைந்தநேர்சாற்றைவார்த்துப் பேராகவரைநீயப்பா, வசைந்தநேர்கொதிகட்டு மடைவாகவில்லைபண்ணு, நசைந்தநேரரவியிடபோட்டுக் குமுறவேயுலர்ந்தபின்பு, திசைந்தநேர்வங்களாளுஞ் சேர்த்திடவேயூதுவாயே. (௭௬௪)

ஊதவேகெந்திதானு முருகியேசத்துவீழும், ஆதிடச்சத்தையெல்லா மடைவாகவாங்குவாய்க்கு, மாதிடச்சத்தின்வர்ண மருவுவெண்கலம்போற்காணும், காதிடவிதற்குள்வேதை கரையில்லைகண்காணே. (௭௬௫)

காணுகசத்துக்குள்ள காரணஞ்சொல்லக்கேளு, தோணுதசெய்பேயீசன சுகச்சத்தியீயமாச்சு, பூணுகரெண்டுங்கூடிப் புறப்பட்டுச்சத்தேபாச்சு, ஆணுதரெண்டுஞ்சேர்ந்த வாண்மையைச்சொல்லக்கேளே. (௭௬௬)

கேளிந்தச்சத்தையூட்டக் கெடியானநாகங்கட்டும், கேளிந்தச்சத்தையூட்டக் கெடியானசங்கங்கட்டும், கேளிந்தச்சத்தையூட்டக் கெடியானவங்கங்கட்டும், கேளிந்தச்சத்தையூட்டக் கெடிலோகங்கட்டும்பாரே. (௭௬௭)

பாருநீகட்டிநின்றபருகிடலோகமைந்தில், கோருநீரசத்தைக்கூட்டிக் குமுறவேயரைக்கக்கட்டும், தேருநீபுடத்தைப்போடு செயப்பட்டேயுருகும்பாரு, காருநீசெந்தூரங்கள் களங்குமேபண்ணியூடே. (௭௬௮)

ஆடவேலோகத்துள்ளே யணைக்கச்சத்தெடையைக்கேளு, நீடவேமூன்றுக்கொன்று நீட்டிவாகட்டும்கட்டும், தாடவேகட்டும்லோகத் தனிரெண்டில்ரசந்தானென்று, வூடவேகட்டுஞ்சூதமோடிடும்வேதைபாரே. (௭௬௯)

பாரந்தத்தங்கத்தூடே பாய்ச்சிடச்சத்துஞ்சூதம், வாரந்தச்செந்தூரத்தை வளமாகக்குன்றிதின்னு, காரந்தப்பத்தியந்தான் கனகம்போல்தேகமாகும், தாரந்தமண்டலத்தில் தனிச்சட்டைபொன்றாம்பாடே. (௭௭௦)

போமொருசட்டையானாற் பொன்போலேதேகமாகும், ஆமொருமயிர்கடாமு மப்பனேகருவண்டொக்கும், தாமொருதேகத்துள்ளே சஞ்சலவியாதிபோகும், சாமொருவார்த்தைபொய்யாஞ் சதகோடிவாழ்வன் தானே. (எஎக)

தானொருகெந்திசத்தைச் சமமாகத்தங்கத்தாட்டி, வானொருசூகம்பாதி வார்த்திதைநொறுக்கிச்சேர்த்துக், கானொருவுப்புச்சுன்னங் கலந்தெடைசமனாய்ப்போட்டுத், தேனொருவில்லைபண்ணுச் சிறக்கவேயூதிப்போடே. (எஎஉ)

ஊதவேசுன்னமாகு முற்றிதைதிருத்துக்கொண்டு, பாதவேபூரமுக்கால் பாய்ச்சிநீயரைத்துக்கொண்டு, நேதவேகாரச்சுன்னம் நேர்ந்ததோரெடைக்குக்கால்தான், ஆதவேயொன்றுய்க்கூட்டி யண்டவெண்கருவாலாட்டே. (எஎ௩)

ஆட்டியேயரைத்துநீயு மப்பனேவில்லைகட்டிப், பூட்டியேயூதுவூது புகழ்பெற்றசுன்னமாகும், காட்டியேபெயடைக்கமுக்காற் கலந்திதில்வீரந்தானும், ஊட்டியேவில்லைதட்டி யூதிடச்சுன்னமாமே. (எஎ௪)

ஆமிந்தச்சுன்னப்போட்டாலண்டமும்மெழுகேயாகும், போமிந்தச்சுன்னந்தொட்டுப் போட்டதுவேதையாகும், காமிந்தச்சுன்னப்பட்டால் தளிங்கூதக்கட்டிப்போகும், காமிந்தச்சுன்னத்தாண்மை கரையில்லைகாட்டுதேனே. (எஎ௫)

காட்டுறேனிந்தச்சுன்னங் கடியதோர்தருசுமேலே, காட்டுறேனுக்கொன்று நலம்பெறப்பூசிப்போட, நீட்டுறேன்ரவிக்குள்ளே தான் நேர்படவெளுக்குமேது, ஆட்டுறேன் தருசுசுன்னந் தண்டமுமசைக்கிறேனே. (எஎ௬)

அசைக்கிறேனண்டமென்னி ரசைக்கச்சிற்றண்டமல்ல, இசைக்கிறேனின்றுமேரு சிறந்தபேரண்டமப்பா. பசைக்கிறசுழியினின்று பறந்திடுஞ்செத்தைபோல, நிசைக்கிறவசைக்கவண்ட நேர்படுங்குளிகைகேளே. (எஎஎ)

கேளுநீதருசுச்சுன்னங் கெடிமுத்தவங்கச்சுன்னம், வாளுநீவீரச்சுன்னம் வகைக்கொருகழஞ்சிதூக்கித், தாளுநீசவாதுமூன்று தனிப்புனுகதுதான்மூன்று, வேளுநீயிதற்குள்மூன்று வெருஞ்சுக்கிலத்தைவாரே. (எஎஅ)

வாருநீயைங்கோலத்தின் வளமானதைலமூன்று, கோருநீ தொர்கையாபெல்லாங் கொளப்பதினைந்துமாச்சு; தேருநீயொன் றுய்க்கூட்டிச் சேர்ங்கவேரவியில்வைத்துத், தாருநீகாந்திகாட்டு தைலமாந்தைலமாமே. (௭௭௯)

தைலத்திற்றேப்க்கவின்னுஞ் சாற்றியமருந்துகேளா, தை வித்தகாரசார மரிசாரங்கெந்திதொட்டி, மைலீத்தகாபிதுத்தம் வகைக்கரைப்பணமேதேய்த்துப், பைலித்தேயொன்றுய்க்கூட்டிப் பாய்ச்சிடினுமக்கேளே. (௭௮௦)

கேளிதனுமந்தானுங் கெடியானசூதசிங்கி; தாளிதன்சூதத் துள்ளே தனியொருதுள்ளிவிட்டு, வேளிதினென்றுய்க்கூட்டி வெ ருவியேகிழிபோற்கட்டித், தாளிதன்றாபத்துள்ளே சாங்கமாய் வாட்டுவாட்டே. (௭௮௧)

வாட்டியேகரண்டிக்குள்ளே வைத்ததிலெண்ணெய்வார்த் து, நீட்டியேயுருக்கிடப்பா நிலைத்ககேதார்வில்லைபாரும், கூட்டியே குகையிற்காட்டிக் குமட்டியேயுரிகியாகும், திட்டியேயுபரசங்கள் சேரநீவிடுவித்தேறே. (௭௮௨)

ஏறுநீயுபரசங்க ளிசைந்தநூற்றிருபத்தொன்று, ஏறுநீலோ கமான வேற்றியபதினெண்றப்பா, ஏறுநீபாஷாணத்தி னெடுத்த தோர்சத்தையெல்லாம், ஏறுநீரத்னமெல்லா மீதொருவிபரமாச் சே. (௭௮௩)

ஆச்சிங்கப்படியேநீயு மைந்திரம்விடுவித்தேறு, யேச்சிந்த ச்சித்தர்வந்தே பெங்களைப்பார்ப்போமென்பார், காய்ச்சிந்தச்சித் தர்மாயை கண்டுகொள்கொடுக்காதப்பா, வோச்சிந்தமூலமூர்த் தி யோடினார்வாங்கினாரே. (௭௮௪)

வாங்கினார்வாரமட்டு மற்றவர்கையாலாகா, தேங்கியேகொடு த்துநீயு மேனவாயாகாதப்பா, தாங்கியேசித்தர்க்குள்ளே தருது ம்பர்மெத்தவுண்டு, பாங்கியேதாளைநீயும் பஜனித்துச்செபங்கள் செய்யே. (௭௮௫)

செய்கையிலாத்தாள்வந்து சித்தாநீபோடாவென்பாள், கை யினிற்குளிகைவாங்கக் கணக்குண்டோமகனேயென்பார், சை கையிற்சொல்லிப்போவாள் சாய்த்துக்கொண்டவனும்போவான், ஐயையிலில்லையப்பா வாத்தாளைப்பூசைபண்ணே. (௭௮௬)

பண்ணியபூசைநீயும் பாணித்துமதனைவையுண்டே, யொண்ணி
யேவாசியோடு மொக்கவேகலந்துகொண்டு, நண்ணியேகுளிகை
தன்னைச் சாத்தியேவாயிற்றுள்ளே, தெண்ணியேயண்டவோட்டி
ற் சிக்கெனவேறிநில்லே; (௭௮௭)

நிற்கையில்நிர்வாணித்து நின்மலனங்கே நிற்பார்; நிற்கையி
ல்சூலத்தோடு சாய்ந்துநீயசைந்தாயாகில், கற்கையில்கலத்தைச்
சுற்றுங் காரணபோலேயண்டம்; பற்கையிலசைந்தேயாடும்ப
ரயரைமெச்சுவாளே. (௭௮௮)

மெச்சவேபண்டந்தானும் விளங்கியவசைவுமுண்டோ, அச்
சவோர்வண்ணந்தன்னாலாதாளைப்பூசைபண்ணி, யெச்சவேலகி
ரிக்குள்ளே யெடுத்தானேமேருவப்போ, தொச்சவேயண்டந்தா
னு முழன்றதுபாருபாரே. (௭௮௯)

பாரொருவரக்கனண்டம் பந்தைபோலசைந்தானாகில், தா
ரொருகுளிகைதானுச் தனியண்டமசைக்காதோசொல், காரொ
ருகுழல்தாய்மெச்சக் கயிலையோன்சித்தரென்றார்; தேரொரு
வென்னூலிற்றான் செப்பினேனுண்மைதானே. (௭௯௦)

ஆண்மைபார்மிந்தச்சத்தை யப்பனேசெம்புபண்ண, வாண்
மையாய்ச்சோதித்தேற வகைசொல்வேன்கேளுகேளு; கேண்
மையாங்காரமைந்து கிளர்கருவளையனாலு, தேண்மையாய்ச்செ
யித்துநின்ற சிறந்தகல்லுப்புமூன்றே. (௭௯௧)

மூன்றுடுவீரம்ரெண்டு முழங்கியகாரியொன்று; சேன்று
டுமொன்றுய்க்கூட்டிற் சிறக்கவேபொடியாய்ப்பண்ணி, ஆன்று
டுபெண்ணும்சத்து மப்பனைசரியாய்க்கூட்டித்; தான்றுடுபொ
டியைப்போட்டுச் சாதித்தேயுருக்கிப்போடே; (௭௯௨)

போட்டுவாபொடியைநீயும் புகழ்பெறவுருகும்போது, சூட்
டுவாய்ச்சத்துப்போனால் துலங்கியேரவியுங்காணும்; காட்டுவாய்ர
விதான்கண்டாற் கடும்பொடி தூவவேண்டாம்; ஆட்டுவாய்சுகம
ப்பா வாட்டிடுங்கெந்திசெயமே. (௭௯௩)

கெந்திசெம்புவேதை.

கெந்திதான்செம்பேயானாற் கேளப்பாவேதைமார்க்கம், அ
ந்தியேநூற்றுக்கொன்று மப்பனேபரியிற்போடு, பந்தியபரிசெம
பாகும் பாய்நூறுபரியின்மேலே, தொங்கியாய்நூறுமட்டுந் தொ
டர்ந்தெல்லாஞ்செம்புதானே. (௭௯௪

தாவென்றதங்கமெல்லாந் தனிச்செப்பாய்ப்போச்சுபோச்சு, வாவென்றிக்கணக்குச்சொல்ல வாதியாருண்டோவப்பா, தேனென்றமொழியாள்காணாள் சிவன்முகன்மயங்கிப்போனார், கானென்றசெம்பின்வேதை கரையில்லைகணக்கைப்பாரே. (௭௯௫)

பாருநீயீசன்தொட்டுப் பகருறேன்கணக்குமார்க்கம், வாருநீகோடிதொட்டு வழங்குமற்புதமேபாச்சு, தாருநீகணக்குமோசந் தாம்மறந்துரைத்தாளப்பா, காருநீமூலமூர்த்திகாட்டினமுறைமைகேளே. (௭௯௬)

கேளுநீதுலாமோர்நூற்று கெடிதங்கமுருகும்போது, வேளுநூறிந்தச்செம்பை விளங்கவேகாணிபோட்டார், தோளுநூறுநடராசம்போற் சூட்டினார்செம்பேயாச்சு, கோளுநீசோழன்வந்து கோபித்தான்கோபித்தானே. (௭௯௭)

மூலமூர்த்தி சோழனுக்கு வாதங்காட்டியது.

கோபித்தசோழன்முன்னே கொள்ளெனமூலமூர்த்தி, யாபித்ததங்கமல்லா லடியென்னவசைவுமென்ன, தாபித்ததங்கம்வேண்டிற் றனிவெள்ளிகொணர்வாய்நீயும், நேமித்தவெள்ளிவைத்து நிமிரநீயுருக்கென்றாரே. (௭௯௮)

உருக்கியவெள்ளிக்குள்ளே யுத்தமமூலநாயன், சொருக்கினார்வீசந்தானுந் துலங்கிற்றுதசபாற்றுகப், பருக்கியவேதையோடும் பாவித்துப்பார்த்துக்கொள்ளு, தருக்கியவிந்தச்செம்பு தாழ்த்திறேன்பாருபாரே. (௭௯௯)

பாருநீமூன்றுங்கட்டோ பரியுடனைந்தாங்கட்டோ, தாருநீயெட்டாங்கட்டோ தனிப்பத்துப்பத்தாங்கட்டோ, கோருநீநவலோகத்தைக் குமுறவேசெய்பாங்கட்டோ, காருநீசோழாவுன்றன் கனகத்தைபெடுபோவென்றார். (௮௱)

என்றவன்முகத்தைப்பார்த்தே யென்னுடமூலநாயன், பன்றதோராசையான பருமலைக்குள்ளேவாழ்ந்தாய், வின்றவேவாராசைபோனால் வெளியெல்லாங்காணுங்காணும், ஒன்றல்லோபொருள்தானப்பா வூன்றிநீயுரைத்துப்பாரே. (௮௱௧)

பாரென்றுசொன்னீரீசர் பார்ப்பதுமும்மைத்தானோ, பாரென்றுசொன்னீர்நீர்தாம் பார்ப்பதற்குள்ளேநீர்தாம், பாரென்றவார்த்தைவேறோ பார்க்கின்றோமென்பார்வேறோ, பாரென்றவார்த்தைக்குள்ளே பளிச்சென்றுதோன்றினீரே. (௮௱௨)

தோன்றியவெளியுநீர்தான் சுருதியானந்தநீர்தான், கான்றி யபோதநீர்தான் கரையில்லாவருளுநீர்தான், ஊன்றியமனமுநீர் தா னுண்மைவேறெங்குங்காணேன், வேன்றியபொருளுநீராய் விரவினீர்வெளியானீரே. (௮௱௩)

வெளியாச்சே பொருசொல்லாலே வேதாந்தமுடியுமட்டு, மொளியாச்சேயண்டரண்ட மூடேறிப்புருவிப்போச்சு, தெளியாச் சேயதிகமாச்சு சீர்பாதங்கண்டபோதே, களியாச்சேநிற்குணத் தின் கரைகாணேன்கரைகாணேனே. (௮௦௪)

காணாதெவெங்குமானீர் கரையற்றரூபமானீர், தோணாதே தோணிநின்று சொரூபந்தின்முடிவாய்நின்று, பூணாதேபூணியெ ங்கும் பூரணக்கடந்தமூர்த்தி, ஆணதபாசம்போக்கி யடிமைக்கி ன்றருடந்தீரே. (௮௱௫)

தந்ததோர்ரூபம்போலத் தனிச்சுகம்வேறேயில்லை, வந்த தோர்வாசியான மற்றெட்டும்போகவிட்டே, யந்தவோர்நாலைப்பா ர்க்கே னதனாலுநீரேயாச்சு, கந்ததோரெட்டாற்சிவன் கடுஞ்சட மெடுக்கும்பாரே. (௮௱௬)

எடுக்குமேசடந்தான்கோடி யிசைக்குமுன் னென்னசொல் வேன், அடுக்குமோவையாவுன்ற னருடானேயென்னசொல்லா ய், இடுக்குமோதாய்தான்பிள்ளை யியலொத்தபாசம்போலத், த டுக்குமோவெட்டுநாலுஞ் சகலத்தினின்றவாறே. (௮௱௭)

வாறனமாயப்பிள்ளை வாசனையென்றேவிட்டால், நீறுகவெவங் தனையா நிமிஷத்திற்செகஜாலந்தான், தாறனபேரைவந்து தடுத் துநீயடிமைகொள்வாய், ஆறனகண்ணீர்மாற்றி யடிபேணியாட் கொண்டீரே. (௮௱௮)

ஆட்கொண்டீரடியேன்றானு மனேகநாள்செய்தபூசை, காட் கொண்டகுருவங்கேது தனிபுத்திசீஷனேது, வேட்கொண்டவீச னேது வெளிக்குளேவெளியாய்ப்போச்சு, நாட்கொண்டபூரணத் தி னுட்டியங்கண்டபின்னே. (௮௱௯)

பின்னேதுமுன்னங்கேது பேச்சுடனுரையுமற்று, பன்னேது நூல்களேது பலபலசமையமேது, வன்னேதுசாதியேது மா[illegible] துபிறந்ததேது, தன்னேதுசீவனேது சகலமுநீர்தானாச்சே.

ஆச்சேதுவெல்லாமேது வாகிறபொருளங்கேது, மூச்சேதுகாற்றங்கேது மூவுலகமெங்கேது, பேச்சேதுவார்த்தையேது பேரின்பப்பொருடானேது, நீச்சேதுமில்லதானேது நின்மலக்குருவே சொல்வாம். (அகக)

சொல்லுவதென்னயான்றன் சொல்லெல்லாங்கண்டுபோனால், வெல்லுவதாச்சேவுன்னை வேதாந்தரூபமானாய், மல்லுவதேது லோக மாயையும்போக்கிவிட்டாய், செல்லுவதகண்டம்புக்கிச் சிவன்போலேயிருந்துவாழே. (அகஉ)

வாழென்றுமூலமூர்த்தி மத்தகமுகர்ந்துகொண்டு, வேழன்றனுரியன்பூசை விரைந்தின்றுலபித்ததப்பா, தாழென்றுமாயிபாதஞ் சதாநித்தங்கருத்தில்வைத்துக், கோழன்றிமணித்தாயோடு கூடிக்குலாவியாடே (அகங)

ஆடென்றுமூலநாய னப்புறங்கடந்தபின்பு, வீடின்றிச்சேனையின்றி விளக்கியபொருள்களின்றி, நாடின்றிப்பெண்டிரின்றி நல்லதோர்பசுவுமின்றித், தேடின்றிப்பதுமைபோன்றும் சித்திரம்போன்றுநின்றான். (அகச)

நின்றவன்கோடிகால நிமிஷம்போற்றோன்றுமாபோல், அன்றையகெந்திச்செம்பை யடக்கிறேன்வகைபாரு, தன்றையகெந்திச்செம்பைத் தாக்கொன்றுபத்துநாக, மன்றியநவலோகத்தில் மாட்டுநீதசமாற்றுமே. (அகரு)

ஆமிந்தச்செம்புதன்னை யாடியவிரும்புக்குள்ளே, வாமிந்துவைந்துக்கொன்று மாட்டிடச்செம்பேயாகும், போமிந்தவெள்ளிமேலே போடுநீமுப்பத்தொன்று, தாமிந்தமாற்றெட்டாகுந் தனிக்காவிச்சேளுகானே. (அகசா)

காணிந்தக்கெந்திச்செம்பைக் கருநாகம்ரெண்டிலூட்டி, பூணிந்தவெள்ளிமேலே போடுநீபத்துக்கொன்று, ஆணிந்தமாற்றுமூன்று மறிந்துகொள்வாதிகாணீர், தோணிந்தமார்க்கச்சூட்சஞ் சொன்முறைகைகண்டேனே. (அகஎ)

கண்டதோர்தாயாள்நாதங் கடைசியாய்ப்போனாற்போல், வண்டர்க்குஞானஞ்சொன்ன வழக்குப்போலாச்சுதப்பா, பண்டல்லோபழுத்ததாகு பருவப்போய்மாறினாற்போல், கொண்டல்லோகரத்திற்பூசை குவித்தவராச்சுதென்னே, (அகஅ)

ஆச்சுதேகெந்திசெம்பு ளடங்கியவாறுபோலே, போச்சுதே மாயையானாற் புரியட்டந்தாண்டிக்காணும், ஏச்சுதேலோகவாழ்க்கை யிடிகரையாக்கிப்போட்டு, வாச்சுதேகுளிகையானால் வயதுண்டுஞானமுண்டே. (௮௧௯)

உண்டென்பார்ஞானந்தானு முலகத்திலுழன்றமாந்தர், கண்டல்லோசொல்லவேண்டுங் கடுஞ்சாங்கநூலைப்பார்ப்பார், பண்டல்லோபெரியோர்சொன்ன பழங்கங்கள்தமக்குமுண்டோ, விண்டல்லோதவசியாவான் வேதாந்தரூபிதானே. (௮௨0)

தானென்றசுன்னப்போக்கைத் தனித்தனிமுறையேசொன்னேன், கானென்றசுன்னந்தானுங் கறுப்பேறிநின்றதென்றால், வேனென்றகல்லுச்சுன்னம் விளங்கியதேங்காய்மட்டு, மோனென்றகல்லுப்பேதா னொருபலம்போடுபோடே. (௮௨௧)

போட்டுநீயொன்றாய்ச்சேர்த்துப்புகழ்படவரைத்துக்கொண்டு, நீட்டுநீசிமிள்போல்ரெண்டு நினைவாகப்பண்ணுபண்ணு, ஆட்டுநீசுன்னமெல்லா மந்தந்தவிதங்கள்வேறே, பூட்டுநீபணம்போல்வில்லை புள்ளுக்குள்வைத்திடாயே. (௮௨௨)

வைத்திடுகுகைக்குள்வில்லைவளம்பெறமூக்கான்மட்டும், தைத்திடவூதவூது தவளமாய்நீறமட்டும், எத்திடுங்கறுப்புப்போகுமெளிதிலேபஞ்சுபோலாம், கைத்திடுஞ்சுருக்கஞ்சுன்னங் காரமாங்கொல்லும்பாரே. (௮௨௩)

பாருநீசுன்னமெல்லாம் பறந்திடுங்களமுமில்லை, கோருநீயண்டநீராற் குமட்டியேவில்லைதட்டு, தாருநீயண்டம்விட்டாற் றனிச்சுன்னஞ்சுருக்குப்போச்சு, வாருநீயண்டநீரை மகத்தானவிந்துதானே, (௮௨௪)

விந்தென்றுசொன்னவார்த்தை வெறும்வார்த்தையென்றிராதே, அந்தென்றமூளைக்குள்ளே யப்பனேயுயிருமாச்சு, கந்தென்றமஞ்சள்தானே கடுகியசடமுமாச்சு, பந்தென்றமுட்டைவிம்மிப் பளிச்சென்றுகூவிற்றென்னே. (௮௨௫)

என்னதோர்மஞ்சளாலே யிறகாச்சுசிறகுமாச்சு, பன்னதோர்விந்துவாலே பருகினபுசிப்புமாச்சு, அன்னதொரிரண்டினாலே யடங்கிற்றுசீவராசி, கன்னதோர்கருவைக்கண்டோர் கைவிட்டசித்தராமே. (௮௨௬)

சித்தரேயானாராகிற் செயரசம்பண்ணவேண்டும், சித்தரே யானாராகிற் றெளிந்துள்ளேகாணவேண்டும், சித்தரேயானாராகிற் செகமெல்லாம்புகழவேண்டும், சுத்தத்தையறியானாகிற் கண்டி யாஞ்சித்தன்றானே, (அ௨எ)

தானென்றவாசையூன்றிச் சமனெக்தநூலைப்பார்ப்பார், தே னென்றவதரபானந் தித்திக்குதென்றபோவார், வானென்றவா சிக்குள்ளே மறைத்திட்டவாறுபோல, மானென்றபெண்ணாற்கெ ட்டு மாளுவார்மாளுவாரே. (அ௨அ)

மாளாதகற்பஞ் சொன்னேன் வாசியாம்யோகஞ்சொன்னே ன், கேளாதபேர்கெட்டார்கள்கேள்வியோருண்டிட்டார்கள்; வா ளானமாயையோகம் மகத்தானகுளிகைசொன்னேன், தாளான தேவிதாளைச் சதாநித்தம்பிடிக்கநன்றே. (அ௨௯)

நன்றெனவென்றுகேட்க நன்றெல்லாமீவாள்தாயும், பன்றெ னச்சொன்னயோகம் பலித்திடும்பாழேபோகா, கன்றெனக்கேட் டுவென்ன கசடரேகற்பமுண்பீர், வின்றுநீபார்த்தாயானால் வே தையில்வெறிகொள்வாயே. (அ௩0)

வெறிகொள்வார்கசடர்தானும் வேதையுமோடாதையா, பறிகொள்வார்வல்லோர்கையிற்பார்க்கிலுங்காணேனென்பார், நெறிகொள்ளப்பண்ணாதாலே நிலைத்திட்ட தொழிலும்பொய்யாம், குறிகொள்ளப்பூசிக்காத குறையதுகாணுங்காணே. (அ௩௧)

காணவேசெயநீரொன்று காட்டுரேன்கனகமாரி, பூணவேதுருசுச்சுன்னம் புகழ்பெற்றசாரச்சுன்னம், ஆணவேகாரம்ரெண்டு மாகியசுன்னத்தோடே, பூணடியஉப்புரெண்டு முறைப்பானசுன் னங்கூட்டே. (அ௩௨)

கூட்டியசுன்னமாறங் குலாவியபலமேயாறு, நீட்டியவீரச்சு ன்ன நிறைந்தமால்தேவிச்சுன்னஞ், சாட்டியகெந்திச்சுன்னஞ் ச வுக்காரம்பூரத்தோடே, யாட்டியவைந்துசுன்ன மப்பனேபலங்கா ல்கூட்டே, (அ௩௩)

பலமானவேழேகாலும் பரவிடவொன்றாய்க்கூட்டி, நிலவா னசாரங்கேளு நீபலம்பத்துப்போடு, வலமாகவொன்றாய்ச்சேர்த் து மத்திக்கசெயநீராகும், தலமானமணித்தாய்ப்பாதஞ் சாமக மாய்ப்பூசைபண்ணே, (அ௩௪)

பண்ணியசெயநீர்க்குள்ளே பரவியவித்தைகேளு, யெண்ணியபூரத்துக்கே யிந்தநீர்வார்த்தரைத்துத், தண்ணியவில்லைபண்ணித் தணலிலேயூதச்சுன்னம், அண்ணியபூரத்துக்கே யந்தெடைவீரம்போடே. (௮௱௫)

போட்டுநீவீரந்தானும் புகழாகவரைத்துக்கட்டி, யாட்டிநீயூதலூது வப்பனேவீரச்சுன்னம், கோட்டிந்தச்சுன்னம்பாதி குழைத்தூட்டுமால்தேவிக்கு, நீட்டுநீமால்தேவிக்கு நிறையொன்றுபூசிப்போடே. (௮௱௬)

போட்டதைக்குகையினுள்ளே புகழ்பெறவூதலூது, காட்டதைச்சுனமான கடுங்குகைக்குள்ளேபோடு, நாட்டதையூதிட்டப்பா நலம்பெறச்சுன்னமாகுங், கூட்டதைமுக்குப்போனாற் கொடுஞ்சுன்னமானாற்பாரே. (௮௱௭)

பாரிந்தமாலின்றேவி பறைப்பறச்சுன்னமாகில், காரிந்தவங்கத்துக்குக் காட்டுநீசூதம்பாதி, வாரிந்தவங்கத்துக்கு மாட்டுநீசுன்னம்பாதி, தாரிந்தவண்டநீராற் சாற்றிநீயரைத்துக்கட்டே. (௮௱௮)

கட்டியவங்கவில்லை கனலிலேபோட்டூதப்பா, வொட்டியசுன்னமாகு முயர்ந்திடுங்குருவுமாகும். தெட்டியவாதமெல்லாந்திகைத்துன்றன்கையிற்சிக்கும், அட்டியசூதயானை யகப்பட்டவழிசொல்வேனே. (௮௱௯)

சொல்லுவேன்சூதந்தானுந் துலங்கியபலமதொன்று, மல்லுவேனென்றுநின்ற மகத்தானசெயநீர்வாரு, கொல்லுவேனென்றுநின்ற குருக்காலாம்வராகன்போடு, வெல்லுவேன்ரசத்தையென்று விரலாலேகுழப்பியாட்டே. (௮௱௰)

ஆட்டையிற்சூதந்தானு மப்பனேவெண்ணெயாகும், காட்டையிற்சூதங்கண்ணைக் கபளித்துக்குகையில்வைத்து, நீட்டையிற்சாரங்குத்தி நிலைபெறவுருக்கவாடும், சூட்டையில்வேதையோடுஞ்சுகத்தைநீயறிந்துபாரே. (௮௱௰௧)

பாருநீயாஷாணங்கள் பலபலவெல்லாங்கட்டத், தாருநீசெயநீரோடு சற்றந்தக்குருவைப்போடு, காருநீதுவைத்துவாட்டு கரிக்குள்ளேமணிபோலாடும், கோருநீவேதையோடுங் கொள்கையைக்கண்டுபோடே. (௮௱௰௨)

போடவேவேவதைமார்க்கம் புகழ்பெற்ற செய்நீர்க்குள்ளே; நீடவேவேவதைமார்க்கம் நிலையில்லைகரையுமில்லை, பாடவேயாத்தா ள்சொன்ன ளப்படியாடிப்பார்த்தேன், தேடவேயரிதாரமிந்தசெ யநீரைபோக்குந்தானே. (௮சஙு)

தாமென்றசவுக்காரத்தின் செளரியஞ்சொல்லக்கேளு, கா மென்றவுவரின்மண்ணைக் கலக்கியேவடித்துக்கொண்டு, வேமெ ன்றசுன்னமபோட்டு வேண்டியவுப்புப்போட்டுப், பாமென்றுக லக்கிநல்ல பதலைக்குள்வார்த்துவையே. (௮சச)

வைத்ததிலெண்ணெய்வார்த்து வளமாகவரைத்துப்போட்டு த், தைத்திடக்கடந்தாயானால் தவளம்போனுபேகட்டும், கை த்திதைவாங்கிவாஙகிக் கடுகவேயுண்டைபண்ணு, மைத்திதைத் தீயில்வைக்க மாயம்போற்பறந்துபோமே. (௮சரு)

போகவேயதற்குனின்ற பொருளேதுபறப்பதேது, வேக வேதிக்கேயெண்ணெய் விளைந்ததுவிண்ணைப்பார்க்கும், ஆகவேயு ப்புக்கூட வமலியாயுருகியேகுந், தாகவேயிதனைக்கட்டத் தனியு ப்புச்சுன்னமாமே. (௮சசு)

ஆமிந்தச்சுன்னம்விட்டா லாகாதுவாகநகேளு, ஆமிந்தச்சு ன்னந்தேசி யதுமேலாவுற்றுச்சூகம், ஆமிந்தச்சுன்னமேது ம டியானவுப்பிதப்பா, ஆமிந்தச்சுன்னப்போனு லடங்கலுஞ்சுன்ன ம்போச்சே. (௮சஎ)

போச்சென்றுசொல்வதேது புகழ்பெற்றசுன்னமெல்லாம், காச்சென்றலூதலூதக் கறுப்பேறும்வெளுப்பேறாது, தாச்சென் றுசுன்னந்தோறும் தனியிந்தச்சுன்னப்போட்டுப், பாச்சென்றக ருவாலாட்டிப் பணம்போலவில்லைபண்ணே. (௮ச௮)

பண்ணியவில்லைதன்னைப் பாஙகாகவுலர்த்திக்கொண்டு, அ ண்ணியசுன்னம்பத்து அப்பனையுப்பதொன்று, நண்ணியநீரை வார்த்து நலம்பெறவரைத்துக்கொண்டு, கண்ணியதகைக்குள்பூ சு கடுமெனச்சில்லும்பூசே. (௮சகூ)

பூசியேயுலர்ந்தபின்பு பொடித்ததற்குள்ளேவில்லை, வாசியே யாவுந்தாக்கி வளமாகவூதவூது, காசியேமயிலைச்சிலைக் கடுவெள் ளையானாற்போலத், தேசியேசவுக்காரத்தின் செயலிதுகண்டுகொ ள்ளே. (௮ரு0)

கண்டவாரசவாதத்தைக் கரைகண்டசித்தமூர்த்தி, பண்டவரியாராலும் பலியாதுசுன்னமார்க்கம், தொண்டவர்செய்தகாலம் சொல்லிந்தச்சுன்னப்போக்கைத், தண்டவைகோடிதண்டம் சரக்கெல்லாஞ்சுன்னமாமே. (அடுக)

ஆமிந்தச்சரக்கங்கேது வாகவேதொகையங்கேது, ஓமந்தவு பரசங்க ளொருநூற்றுடன்பத்தொன்று, வாமிந்தப்பாஷாணங்கள் வகையெல்லாமறுபத்தைந்து, தாமந்தச்சாரகாரந் தனிமுப் பத்தொன்றேசொல்லே. (அடுஉ

சொல்லவேலோகங்கேளு சுகமாகப்பதினொன்றப்பா, வல்லவேகூதத்தோடு மைந்தினத்தொகையைக்கேளு, வொல்லவேயிருநூற்றோடு முயரைம்பத்தொன்பதாச்சு, பல்லவேபரப்பாமெல்லாம் பலபலசுன்னமாமே. (அடுங)

ஆமிந்தச்சுன்னமான வடங்கலும்சுருக்குக்காண, ஆமிந்தச்சுன்னமான வடங்கலுங்கறுப்புபோக, ஆமிந்தச்சுன்னத்துள்ளே யதிலதில்வேதையாட, ஆமிந்தச்சவுக்காரத்து ளடங்கியசூட்சந்தானே. (அடுச)

சவுக்காரம் அறியச்சுன்னம்.

தானென்றசவுக்காரந்தான் றலையாச்சுவடியுமாச்சு, தானென்றசவுக்காரந்தான் சகலத்தினுயிருமாச்சு, தானென்றசவுக்காரந்தான் சச்சிதானந்தச்சுன்னம், தானென்றசவுக்காரத்தைச் சமுசயமறவேபாரே. (அடுடு

பாருநீகுருவைக்கேட்டுப் பணிவிடைசெய்துசெய்து, காருநீகுருவின்பின்னே கைவந்துகூடுமட்டும், தாருநீபின்னேசுன்னஞ் சகலமும்பண்ணிப்பாரு, வேருநீயிதுதான்சுன்னம் விளைகிறவேரதாச்சே, (அடுசு)

ஆச்சிந்தச்சவுக்காரத்தை யப்பனேசுன்னம்பண்ணப், போச்சிந்தமெத்தமார்க்கம் பொல்லாதுநல்லதுண்டு, காச்சிந்தப்புடமுமாகா கடுகியவறுப்புமாகா, வாச்சிந்தரவியிலெண்ணெய் வாங்கிடின்னமையெண்ணே. (அடுஎ)

எண்ணவேதீயில்லாம லெழுகிறநீத்தானன்மை, பண்ணவே சவுக்காரத்தைப் பருவமாயெண்ணெய்போகத், தண்ணவேமுன்னேசொன்னேன் சவுக்காரக்குருவின்மார்க்கம், கண்ணவேமுத்தாலுப்பிற் காட்டிடவெகுநன்றாச்சே. (அடுஅ)

ஆச்சிந்தச்சவுக்காரத்தை யரைத்திடுபத்துக்கொன்று, தாச்சிந்தவீரந்தானுந் தாக்கிடுபத்துக்கொன்று, மாச்சிந்தப்பூரந்தானு மாட்டிடுபத்துக்கொன்று, காச்சிந்தவரிதாரந்தான் காட்டிடுபத்துக்கொன்றே. (௮௮௯)

ஒன்றானசூதந்தானு மூட்டிடுபத்துக்கொன்று, வன்றானமூத்தானும்ம் வந்திடுந்துறைகேடாறும், கன்றானசீஷனுக்குக் காட்டுநீயிந்தமார்க்கம், பின்றானமூத்தான்ரெண்டின பலமிதுபகிர்ந்துகொள்ளே. (௮௯0)

பகுந்துதான்பாஷாணங்கள் பலபலகாரசாரம், வகுந்துநான்பொடியாய்ச்சொல்வேன் மகத்தானசித்தர்சூர்ண, மகிழ்ந்திடுங்கெந்தியோடு மனோசிலைமாலின்றேவி, தகுந்ததாந்துருசுலிங்கந் தனித்தபூநாகங்கூட்டே. (௮௯௧)

பஞ்சபீசம்.

கூட்டுநீநிமிளையோடு கொடியகற்பூரச்சத்து, ஆட்டுநீயன்னபேதி யப்ரேகம்ராசாவர்த்தம், காட்டுநீவைக்கிராந்தங் கற்காவிகாந்தத்தோடு, நீட்டுநீசத்திச்சார நிலையெவாட்சாரந்தானே. ()

தானானசாரமொன்று தளிக்கடல்நுரையுங்கூட்டிக், கானானசதுரக்கள்ளி கடுகியவுப்புங்கூட்டி, வேனானதொகையைக்கேளு விளங்கப்பத்தொன்பதாச்சு, சேனானசமனாய்க்கூட்டிச் சிறக்கநீபொடியாய்ச்செய்யே. (௮௯௩)

செய்திடும்பொடியின்பேருஞ் சித்தர்கள்பொடியென்பார்கள், கைதிடுமிதுதானப்பா கடியதோர்பீடமென்பார், தைதிடுமிதற்குட்சூதஞ் சாரணைவிடுவிப்பார்கள், வைதிடும்பொடிக்குள்ளாக மளவில்லையப்பாகேளே. (௮௯௪)

கேளிந்தப்பொடியாலப்பா கெடியஞ்சு பீசஞ்சொல்வேன், வாளிந்தத்தங்கமொன்று வன்மானசெம்பதொன்று, கோளிந்தியுருகும்போது கொடியதோர்பொடியைத்தூவு, ஆளிந்தப்பொடியைத்தூவ வற்றதுசெம்புபோமே. (௮௯௫)

போமதுசெம்புசேரப் பொன்னைநீயெடுத்துப்பாரு, ஆமதுவருணன்போலா மப்பனேதங்கச்செம்பு, சேமதுதங்கபீசஞ் செய்திடும்வேதைக்கெல்லாம், ஓமதுரசத்திலூட்ட வுத்தமம்பாருபாரே. (௮௯௬)

இரண்டுவிந்து பஞ்சபீசக் கிரமம்.

பாரிந்தத்தங்கப்போலே பார்த்திடவெள்ளிசெம்பு, கோரிந் தவிரண்டேவித்து கொள்ளையோகொள்ளைவாதம், சேரிந்தவிரண் டுதானும் செயித்திடுஞ்சூதத்துள்ளே,தாரிந்தவிரண்டால்வேதை தனிவெள்ளிபொன்னுமாமே. (அசூஎ)

ஆமினிப்பீசமாக்க மறைகிறேனெவ்வேறுகத், தாமினிய ப்பிரகத்தில் தனித்திருவங்கங்கூட்டிப், போமினிச்செம்புவைந் து போடுநீயதற்துள்ளொக்கச், சேமினியுருகும்போது சித்தநற் பொடியையப்போடே. (அசூஅ)

போடவேயுருகியெல்லாம் போக்செல்லாந்தள்ளிப்போடும், ஆடவேயதற்குளப்பா வப்பிரகச்சுத்துநிற்கு, நீடவேசத்தியாக நின்றதுயிதுதான்பீசம், கூடவேயப்பிரேகத்தின் குலாவியபீசங் கேளே. (அசூகூ)

கேளுநீவெள்ளியோடு கெடியானகருநாகந்தான், வாளுநீநி மிளைபோடு வைக்கிராந்தச்செம்புசேரு, தாளுநீயுருகும்போது த ணிச்சித்தர்பொடியைப்போடு, வேளுநீவிடுவித்தேறு வெள்ளியு ஞ்செம்பதாமே. (அஎ0)

ஆமிந்தக்காந்தத்தோடே யப்பனேயபமுங்கூட்டி. போமிந் தச்செம்போரைந்து போடுகொர்முகிதாவென்று, சேமிந்தக்குட வனொன்று சேரவேயுருக்கியாட்டி, யோமந்தச்சித்தர்சூர்ண முற ப்போடுசோதித்தேறே. (அஎக)

ஏறவேகாந்தச்செம்பா மேழுலகெல்லாமெச்சத், தேறவே யிரும்பைச்செம்பாய்ச் செய்கிறமார்க்கங்கேளு, கூறவேயிரும்பு வங்கங் கொண்டுசெம்புபோட்டுப், போறவேதிராயுந்தொட்டி போட்டுநீயுருக்கியாட்டே. (அஎஉ)

ஆட்டியேசித்தர்தூளை யதற்குள்ளேபோட்டுபோட்டு, நீட் டியேவிடுவித்தாக்கா னின்மலவிரும்புசெம்பு, ஆட்டியேயைந்து பீசமொவ்வொன்றின்வகையான்சொன்னேன், ஓட்டியேசித்தர் சூர்ணமொன்றுக்குப்பத்துபோடே. (அஎங)

போடுநீதிரைடாமஞ்சில் போக்கெல்லாம்போகுமட்டும், நீ டுநீபொடியைத்தூவு நின்மலமாகுமட்டும், தேடிநீதிரிந்தாலிந்தச் செம்புபோற்கிடையாதப்பா, ஆடுநீயிதற்குள்வேதை யளவில்லை காணுகாணே. (அஎச

காணிந்தப்பிசமைந்து கடியதோர்சித்திலூட்டி, பூணிந்தச்சித்தர்சூர்ணப் பொடியதிற்போடுபோல,தோணிந்தராகம்வாங்கிச் சோம்பாகச்சூதம்பிற்கும்,ஆணிந்தப்பொடியாற்சூத மணைத்துச்சாரணையைச்செய்யே. (எரு)

செய்ததோர்சித்தர் தூளைச் செப்பாதேசிஷனுக்குக், கைததோர்சித்தர்க்கப்பா கைகண்டபொடிதான்பாரு, மைததோர்தேவிசொல்ல மகத்துவம்பண்ணிப்பார்த்தே, ஊததோர்செம்புபண்ண வல்லவார்கள்வாதிகாணே. (எசு)

வாதிகள் வழக்கம்.

வாதிகளலையும்வேறு வைத்ததைத்தைலம்வாங்கி, வேதியவிரும்பிலூட்டி வெருவாரவிளங்கச்செய்வார், ஓதியவகாரங்குத்தியுருக்குவார்செம்பாமென்பார், போதியகிட்டம்போலப் போய்விடும்பாருபாரே. (எஎ)

பாருநான்சொன்னசெம்பு பராபரைக்கையன்சொன்னூர்,தாருநான்சொன்னதைந்துந் தனித்தனிப்பிசமப்பா, கோருநான்ரசத்துக்குள்ளே குளிகைக்குள்பிலங்கள்மெத்த, ஆருநான்பிசப்பண்ண வடைவிதேயறிந்துகொள்ளே. (எஅ)

உலோக திராவகம்.

அறியவேதிராவகத்தி னுண்மையைச் சொல்லக்கேளாய், பெரியவேதருசுதன்னைப் புகழ்படவறுநீயப்பா, நெறியவேயிதுதான்பத்து நீட்டியவிணங்கன்பத்து, சரியவேசவுட்டினுப்புத்தனியிருபத்துகூட்டே. (எகூ)

கூட்டுநீசீனம்பத்து குலாவியசாரமஞ்சு, நீட்டுநீபலந்தான்கேளு நிறையவேயைம்பத்தஞ்சு, ஆட்டுநீபொடியாய்ப்பண்ணியுகக்தொருகுப்பிக்குள்ளே, காட்டுநீயரைவாசிக்குக் கழுத்தின்மேற்குப்பிவையே. (அ௦)

வைக்கின்றகுப்பிகேளு விலாவிலேதமரைப்போட்டுத், தைக்கின்றகுப்பினுளஞ் சமகொக்கச்சீலெசெய்து, கைக்கின்றதமரின்சந்து காணுதேமண்ணைப்பூசு, நைக்கின்றவப்பிலேற்றி நாயகிபதத்தைப்போற்றே. (அக)

போற்றியபாண்டத்துள்ளே போடுநீமணலையப்பா, மாற்றியகுப்பிதன்னை வாகாகவதற்குள்வைத்துத், தோற்றியபடிக்குமூடிச் சுகமாகக்குப்பிமூக்கி, லாற்றியபீங்கான்கிண்ணி யதன்கிட்டவைத்திடாயே. (அஉ)

வைத்திட்டுருப்பினுளம் வந்திடும்புகைதான்பாரு, கைத்தி ட்டபுகைபோடொக்கக் கட்டியேசலமும்வீழும், தைத்திட்டபு கைநின்றுக்கால் திராவகநின்றுபோச்சு, வுய்த்திட்டவிதற்குநாம முலோகநீரென்றுகாணே. (௮௯௩)

காணுநீமுன்போலந்தக் கடியஞ்சுசரக்கும்வாங்கிப், பூணுநீ யிந்தநீரைப் புகட்டியேவுலர்த்துலர்த்து, ஆணுநீமுன்போல்குப் பி யடைத்துத்தானிவைவாங்கு, வாணுநீமறுசரக்கில் வார்த்துமே யுலர்த்திப்போடே. (௮௯௪)

போடுநீவந்தநீரைப் புகழ்பெறுசரக்கிலூட்டு, ஆடுநீயிந்த வண்ண மைம்முறையேந்திவாங்கு, வேடுநீயிந்தநீரில் வேண்டிய வுலோகம்போடத், தாடுநீசலமேயாகுந் தனிமலைநீருமாமே. ()

ஆமிந்தத்திராவகத்தா லறுபத்துநான்குந்தண்ணீர், போமி ந்தவுபரசங்கள் பூட்டையிற்சலமேயாகும், வேமிந்தச்சாரகாரம் விடுபட்டுத்தண்ணீராகும், ஓமிந்தலோகநீரி னுண்மையைக்கண்டு கொள்ளே. (௮௯௬

கொள்ளவேயிந்தநீரிற் குழுமினசரக்கதெல்லாம்,உள்ளவே சத்தாய்நிற்கு முருகிநிந்தீசுகேகாது, தள்ளவேவேதைக்காகும் சாரணைவழிக்குமாகும், தெள்ளவேயூகார்சித்தர் க்ஷணத்திலே யெடுப்பார்காணே. (௮௯௭)

காணிந்தச்சத்தைச்சூதங் கபளித்துவிடுவித்தாக்கால்,பூணி ந்தக்கவளமார்க்கம் புரிபஷ்ட்டந்தலைகாட்டாது, தோணிந்நா ன்குந்தானுஞ் சுகமாகவெளியாய்க்காணும், ஆணிந்தநான்குக்கு ள்ளே யாடலாம்பாடலாமே. (௮௯௮)

ஞானவழுக்கம்.

பாடலாமாவதென்ன பரமபோதத்தைக்கண்டு, ஆடலாமா வதென்ன வானந்தவெளியைப்பார்த்து, நாடெலாம்வெளியாய்நி ற்க கண்பற்றமாண்பர்காணூர், கோடெலாமாயைக்குள்ளே குள றுவாருளறுவாரே. (௮௯௯)

உளறுதேயொளியாய்க்காண வுத்தமசீஷாகேளு, தளறுதே மாயையான தனிவிஷநாபிக்காட்டைக், கிளறுதேமனமுன்றுதே கேள்வியில்செலுத்திடாதே, பளறுதேமனவிவேகம் பார்குருசேஷ ஞச்சே. (௯௦௦)

குருவதுவேறையில்லை குருசீஷன்வேறையில்லை, வருவதுவேறையில்லை வாராதுவேறையில்லை, தருவதுவேறையில்லை தருபவன்வேறையில்லை, அருவதுமற்றுநின்ற வானந்தத்தாண்மைதானே. (அகூக)

தானென்றுநானதென்று தனித்தனிவேறையில்லை, வானென்றுவாசியென்று வந்ததுவேறையில்லை, கானென்றமாயைவந்து கலந்ததினெல்லாமாச்சு, பானன்றவுண்டாள்சொன்னாள் பார்த்துநான்கடந்திட்டேனே. (அகூஉ

கடந்திட்டமனமேகேளு காசினிமன்னர்கோடி, யிடந்திட்டவிந்த்ரர்கோடி யெண்ணவுமுடியாதப்பா, படர்ந்திட்டவண்டங்கோடி படைத்திட்டபிரமர்கோடி, தடந்திட்டமணுவொவ்வா சாகரமழிந்ததையா. (அகூங)

அப்பனேபோதமான வருளான்குருவேகேளு; ததையெனவிவேகம்பாரார் சமுசயத்தாலேமாண்டார், கையெனக்கண்டிருந்தும் காணொட்டாதாசைபூர்ம்பூ, மையெனக்கண்ணியென்றும் மாயத்தைநீக்கினாளே. (அகூச)

நீக்கினாள்மாயைதன்னை நிலைபானகுளிகையாலே, போக்கினாள்கருவியோடு போக்கெல்லாந்தானாய்நின்றாள், தாக்கினாணுக்குள்ளே தயங்காதவொளியைக்காட்டித், தேக்கினாள்ராசாவீதி சேரவும்வெளியதாச்சே. (அகூரு)

வெளியிற்குள்வெளியிற்புக்கி வேதாந்தமுடிவுந்தாண்டித், தெளிவுக்குள்தெளிவுகண்டு சேரநிர்மலமாய்நோக்கி, யொளிவுக்குளொளிவுதாண்டி யொப்பொன்றுமில்லாதாமே, சுளிவுக்குள் பழகிச்சையா சூதத்தின்குளிகைதானே. (அகூசு)

குளிகையின்பெருமைதன்னைக் கூறவும்முடியாதையா, குளிகையின்பெருமையன்றோ கோடானுகோடிசித்தர், குளிகையின்பெருமைசொல்லக் கூடாதேதீசனென்றார், குளிகையின்பெருமைபிரமக் கூறதுகண்டுகொள்ளே. (அகூஎ)

மகாதிராவகம்.

கண்டுகொள்மகத்தாராமம் கடியதிராவகமுஞ்சொல்வேன், வண்டுகொளுலோகநீரால் வறுத்திடுதுருசுதன்னைப், பண்டுகொள்துருசுதன்னைப் பதினான்குபலமேதூக்கு, ஒண்டுகொளிணங்கன்றானு முற்பனமிருபத்தெட்டே. (அகூஅ)

எட்டாதசவுட்டுப்பப்பா வெண்புத்துநான்குபேர்டு, மட்டா தவீரங்கேளு மாட்டிடுபலந்தானுன்கு, பட்டானகாரந்தானும் பலமஃதெட்டுபோடு, கொட்டானவுருவியுப்பு கூட்டிருபலந்தானீயே. (௮௯௯)

நீயென்னபடிகிதானு நீட்டதிற்புலந்தானெட்டு, மாயென்ன பொடியாய்ப்பண்ணி வாரதிலுலோகநீரை, தாயென்னமுக்தாவ் வாரு தடுகியேகுப்பிக்கூட்டு, தாயென்ன தாயைப்போற்றித் தனி முன்போலடுப்பிலேற்றே. (௯00)

ஏற்றியவிதத்தைக்கேளா யியனூற்றுநாற்பத்தெட்டு, தோற்றியகுப்பிக்குள்ளே சொரிந்துவைபாதிமட்டும், ஆற்றியகுப்பியேலே யடைவர்கமுன்போற்கட்டு, மாற்றியகுப்பிவாயில் வள்மாகப்பீங்கான்வையே. (௯0௧)

வைத்தபின்னெரிக்கமார்க்கம் வகைசொல்வேன்கேளுகேளு, கைத்தபின்ரெண்டுசாமங் கலந்தெரிதீபம்போல, மைத்தபின்குப்பிமூக்கில் வருகிறவேர்வையைப்பார், ஐதத்தபின்கமலம்போலத் தனியஞ்சுகடிகைபோடே. (௯0௨)

போடையில்குப்பிமூக்கில் புறப்படும்வெள்ளைத்தூபம், நாடையில்கடுந்தீப்போடு தலம்பெறச்சிவக்குதூபம், ஆடையில்பீங்கானுக்கு ளப்பனேவிழும்நீர்தான், தேடையில்மகத்தாநாமம் திராவகமிதுதான்காணே. (௯0௩)

காணிந்தத்திராவகத்தைக் காட்டிடிற்பொன்னும்லோகம், ஆணிந்தரவியில்வைக்க வப்பனேவெண்ணெயாகும், பூணிந்தத்திராவகத்தைப் பூட்டுமுன்சரக்கில்முன்போல், தோணிந்தப்படிக்குவைத்துச சோம்பாகநீரைவாங்கே. (௯0௪)

வாங்குநீநீரைத்தானு மறுமறுசரக்கிலூட்டிப், பாங்குநீயஞ்சிரண்டு பரிவேழமேற்றினுக்காற், றூங்குநீநீரைவைக்கத் தனியொத்தபாண்டமில்லை, தேங்கிநீவரக்கால்நல்ல சிதையாதகுப்பி பண்ணே. (௯0௫)

பண்ணியகுப்பிக்குள்ளே பாய்ச்சிடாயிந்தநீரைக், கண்ணியமயிரில்தோயத்துக் கமரிபோல்விசிறினுக்கால், அண்ணியபளிச்சரந்தா னப்பனேவிரிந்துபோகும், தண்ணியகாயசித்தி தனித்தேகம்பிளக்கும்பாரே. (௯0௬)

பிளக்குமேதகமானாற் பின்னொன்றுமேகா துண்டோ, வளர்க்குமே வாதவித்தை வர்ணிக்குமடங்கா நூலாய், அளக்குமே வீசைசூத மதற்குள்ளேயொன்றேதுள்ளி, விளக்குமே வெந்துநீறாய் விரியிதுபாருபாரே. (௯௦௭)

பாரிந்தச்சூதநீரைப் பருகியகரணிவாங்கி, வாரிந்தநவலோகத்தில் மாட்டிடவெந்துநீறாம், தாரிந்தநீரைத்தாது தனியாறுபத்தைவாட்டக், கோரிந்தமணியாய்நிற்குங் குறிகண்டுவேதைதானே. (௯௦௮)

வேதைக்காமினத்தைக்கண்டு விடுநூறகோடிமட்டும், பாதைக்குப்பிரித்துச்சொல்லப் பக்குவமெனக்குப்போதா, கோதைக்கவ்விசன்சொன்னார் குமட்டலாங்கோடிக்கொன்று, தாதைக்குநவலோகத்தில் தாக்கஞ்சுநூறுமாற்றே. (௯௦௯)

மாற்றதைஞ்ஞூறுபோக மற்றதோர்சூதத்தூளை, யேற்றியேயெடுநீயப்பா விதைநூறுசூதத்தூட்டிற், காற்றியவெண்ணெபாகுங் கரண்டிக்குளுநகும்பாரு, போற்றியேயுருக்கவாடும் போக்கிதில்மெத்தப்போமே. (௯௧௦)

போமிந்தச்சூதந்தானும் பூட்டச்சாரணைக்குநன்று, காமிந்தவேதைபோடக் கடுந்தூரமோடுமோடும், வேமிந்தத்திராவகத்தில் வேண்டியதெல்லாம்பாரு, ஆமிந்தநீரின்வேதை யாத்தாளுக்கரன்சொன்னாரே. (௯௧௧)

கெந்தகத்திராவகம்

அரன்சொன்னார்கெந்திதானு மகண்டமாந்திநீராக, வரஞ்சொன்னகெந்தியப்பா வாழ்பலம்ரெண்டுபத்து, தரஞ்சொன்னதுருசுதானுந் தனிப்பலம்பத்துப்போடு, கரஞ்சொன்னசாரமஞ்சு கடுஞ்சீனம்பதினஞ்சூட்டே. (௯௧௨)

ஊட்டுநீசவுட்டினுப்பை யுயர்பலமிருபத்தஞ்சு, காட்டுநீயிணங்கன்றன்னைக் கடுகியேரெண்டுபத்து, பூட்டுநீவீரய்நாலு புகழுநாயுருவிநாலு, யேட்டுநீயெள்ளுநாலு யேகநூற்றேழிதூக்கே.

தூக்கியசரக்கதெல்லாந் தூளைப்போற்பொடியாய்ப்பண்ணி, யாக்கியலோகநீரை யப்பனேவார்த்துக்கிண்டு, தாக்கியமுக்காலப்பா தனிப்பட ஊற்றிப்போடு, பாக்கியமாகக்குப்பி பாவிடுபாதிக்கென்னே. (௯௧௪)

என்னவேதூற்றேடேழு மெப்படிகுப்பிகொள்ளும், பன்ன வேமபங்கவேண்டாம் பாய்ச்சினால்மூன்றுக்குள்ளே, தின்னவே வெவ்வேறாகத் திராவகம்வாங்கிவாங்கி, மன்னவேயொன்றாய்வா ர்த்து வளம்படவடைத்துக்கொள்ளே. (௬௧௫)

அடைத்திட்டநீரைமுற்று மளவானசரக்கிலூட்டிக், கடை த்திட்டஞ்சொன்னாற்போலக் கலங்காதேதீரவாங்கு, உடைத்திட் டேயூட்டிவூட்டி வுயரவேகுப்பிவைத்துப், படைத்திட்டமுறைய ஞ்சாகப் பருவமாய்வாங்குவாங்கே. (௬௧௬)

வாங்கியைந்தரமுந்திர்ந்தால் மகத்தானகெந்தித்தீர், ஓங்கி யலோகமேது வுறவானதாதுவேது, பாங்கியசிலைமண்ணேது படு முன்னேதண்ணீராகும், தாங்கியேவைக்குமுன்னே சாற்றினேன ரைக்குக்காணே. (௬௧௭)

காணுநீதுலாமாஞ்சூதங்கடுகியவொன்றில்வார்த்துப், பூணு நீமூன்றுதுள்ளி பொட்டெனவிழுந்தபோதே, தாணுநீசோறு போலத் தளபுளவென்றேபொங்கி, யாணுநீவெண்ணெய்போலே யப்பனேயாகுங்காணே. (௬௧௮)

காணிந்தவெண்ணெய்தன்னைக் கடுகியகுகையிலூட்டிப், பூணிந்த காரம்போட்டுப் புகழ்படவுருக்கவாடிந், தோணிந்தத்தொழிலைப் போலச் சூட்சமாந்தொழில்வேறில்லை, வாணிந்தநாதநீரை வல்ல மைகண்டுகொள்ளே. (௬௧௯)

கண்டுகொளிந்தநீராற் கட்டினசூதவேதை, யெண்டுகொள் ளோடுமென்பே னெம்மட்டுமோடுமென்பேன், பண்டுகொள்ளு மரசங்கள் பருகிடுகோடிக்கொன்று, தண்டுகொள்நலலோகத்தி ற்றனியஞ்சுகோடிக்கொன்றே. (௬௨0)

ஒன்றியேகொடுத்தலோக முடலதுகறுத்ததானால், பன்றி யேபத்துலோகம் பாய்ச்சிடப்பளிச்சென்றேதும், அன்றியேமாற் றுநூறு ஆத்தாளேதீராலே, கன்றியேபாகவென்னக் கடுவே தைசொற்பமாச்சே. (௬௨௧)

சவ்வீரத் திராவகம்.

ஆச்சிதுசொற்பமென்று அசையாதேமனமேகேளு, வாச்சி துவீரந்தானும் வாழ்பலம்ரெண்டுபத்து, தாச்சிதுசவுட்டுவுப்பு தீ ளிப்பலம்ரெண்டுபத்து, ஓச்சிதுவெடியுப்பையா வுயர்பலம்பதினை ந்தூட்டே, (௬௨௨)

ஊட்டுநீசினம்பத்து வுறவானதுருசுபந்து, காட்டுநீசாரமஞ்சு கதலியினுப்புகஞ்சு, கூட்டுநீதொகையொன்றுக்கிக் குறையர்தேயெண்பத்தஞ்சு, ஆட்டிநீ பொடியதாக்கி யதில்வாருகெந்திநீரே. (௯௨௩)

நீரொருகாமேவார்த்து நிலைக்கவேயுலர்த்திப்பின்பு, வாரொருகுப்பிக்குள்ளே வளமாகவரையின்மட்டும், தாரொருகுப்பிமேலே தனியொருகுப்பிபூட்டி, நேரொருபாண்டத்துள்ளே நிறுத்துநீமணலைப்போடே. (௯௨௪)

போடவேகுப்பிமேலே பூட்டுறகுப்பிகேளு, ஆடவேயெனிபோலே யப்பனேகாய்ச்சிக்கட்டு, தேடவேநானுநீயுஞ் செய்கிறமுறைப்பாடப்பா, கூடவேகுப்பிமூக்கிற் கொள்ளவேபீங்கான்வையே. (௯௨௫)

வைத்துநீபீங்கான்றனும் வளமாகவடுப்பிலேற்றிக், கைத்துநீதீயைமூட்டிக் கட்டாகவித்தைநகட்டித், தைத்துநீதூமமேலே தட்டாமற்றப்பிரின்றே, பைத்துநீகாற்றுவாட்டத் தப்புறம்நின்றுதள்ளே. (௯௨௬)

தள்ளிடிற்குப்பிமூக்கில் தனிவருந்தூபம்பாரு; அள்ளிடித்புகையேபட்டா லப்பனேகண்ணுயபோகும், தெள்ளிடும்புகைமேல்பட்டால் தேகமும்விரிந்துபோகும், பள்ளிடில்தப்பிநீயும் பருவமாயெரித்துக்கொள்ளே. (௯௨௭)

கொண்டதோர்வீரக்திநீர் கொட்டுமுன்சரக்கைத்தூக்கிப், பண்டதோரடையைப்போலப் பாய்ச்சினியுலர்த்திப்போடு, அண்டதோர்குப்பிக்குள்ளே யரைவாசிமுன்போற்போட்டு, மண்டதோர்முன்போல்வைத்து மார்க்கமாயெரித்திடாயே. (௯௨௮)

எரித்திடுமுக்காலப்பா வேமூலகெல்லாம்சாப்பல், அரித்திடுமுக்கணீச னன்றுமன்மதனைப்பார்த்தான், பரித்திடுமனுசூதத்திற் பணவெடைதள்ளிவாருந், தரித்திடுசாம்பலாகுஞ் சதகோடிக்கோடும்பாரே. (௯௨௯)

பாருநீயிந்தச்சூதம் பாய்ச்சாதேமறந்துபோனேன், தாருநீதங்கம்றாவில் தாக்கொன்றுயிந்தச்சூதப், கொருநீசதேசாய்க்குக் கொடாயிதைக்கொடுத்தாயானால், வாருநீமாறநேறதென்னில் வழங்கிற்றுயிரத்தினெட்டே. (௯௩௰)

எட்டாதவிரத்தீர்க் கேளுதான்சொல்லப்போறேன், கட்டாதபுலனுங்கெட்டுக் கனங்கெட்டுநீறுங்கெட்டு, வெட்டாதவெளியுங்கெட்டு வெறுவியவெளியுங்கெட்டுத், தட்டாதமனமுங்கெட்டுத் தனிப்புத்திகெட்டவாறே. (௯௩௧)

வேதாந்தத்துரியம்.

வாறுகேள்சித்தங்கெட்டு வார்த்தையும்முறையுங்கெட்டுத், தாறுகேளிரண்டொன்றென்ற தனிச்சொல்லின்முடிவுங்கெட்டுக், கூறுகேள்போகமார்க்கக் குறிப்பெல்லாங்கூடக்கெட்டு, ஆறுகேளென்றுசொன்ன ஆதாரங்கெட்டுப்போச்சே. (௯௩௨)

போச்சிதுசித்தங்கெட்டுப் புகுந்திடும்வழியுங்கெட்டு, ஆச்சிதுகுளிகைகெட்டு அடக்கினநினைவுங்கெட்டு, மாச்சிதுநோக்கிப் பார்த்த மார்க்கமும்வகையுங்கெட்டு, பேச்சிதுமுப்பாழுங்கெட்டெழுகின்றஒளியுங்கெட்டே. (௯௩௩)

கெட்டதுவெல்லாந்தானுங் கேள்வியுமுறையுமில்லை, பட்டதுமௌனமப்பா பராபரைசொல்லும்போச்சு, நெட்டிதுவென்ற வார்த்தை நிர்மூலமாகப்போச்சு, ஒட்டிதுவென்றசொல்லு மொக்கநிர்மூலமாச்சே. (௯௩௪)

மூலமாம்பரமும்போச்சு மூதண்டபோதம்போச்சு, காலமாம்வேதாந்தத்தின் காட்சியுங்கடந்துபோச்சு, நேரலமாம்நிற்குணத்தின் குணமதுகடந்துபோச்சு, வலமாய்நின்றநேர்மையேதொன்றேறுவறிந்திலேனே. (௯௩௫)

அறியாதநேர்மைக்கொக்கும் அப்பனைவிடத்தீநீர், பிறியாகப்பின்னையொன்று பேசவுமிடத்தைக்காணேன், நெறியாகப்பண்ணவல்லோர் நேர்மையாஞ்சித்தவாதி, பொறியாகும்வாதமென்ன புலையருக்கெய்தாதெனனே. (௯௩௬)

எய்தாதமேதன்னவேண்டா மெய்திடுஞானமெய்தில், எய்தாதுவாதமானு லெய்தாதுஞானந்தானும், எய்தாதேதெய்துமாசை யெழும்பாமலடித்தபேர்கட், கெய்தாததேதொன்றுண்டோ யானென்றவாண்மைபோக்கே. (௯௩௭)

போக்கெல்லாம்போகாதெல்லாம் பொருப்பையுமணியாக்கல்லாம், தாக்கெல்லாம்வழியைக்கட்டிச் சமுத்திரங்கரத்தேந்தல்லாம், நீக்கலாமாகாசத்தை நிமிஷத்திற்கிழித்தேயேறிப், பார்க்கலாமெல்லாந்தானும் பராபரந்தன்கீமேற. (௯௩௮)

ஏறவுமெளிதேயல்ல விசைந்துநீமெள்ளவேது, ஆறவுமித்தைப்போல வப்பனேவாதம்பாரு, தேறவுமனதுஒன்றாய்ச் சித்தெனப்பிடித்துப்பாரு, கூறவும்வாதத்தொக்குங் குலாவியஞானந்தானே. (கூஙகூ)

ஞானந்தான்வந்ததென்பார் நன்னூலுங்குருவுங்காணார், காணந்தான்வந்ததென்ற கண்கெட்டவூமைக்கொக்கும், தானந்தான் வந்ததென்பார் சகலமுங்சொல்வேனென்பார், ஊனந்தானுலோகத்துள்ள வுலுத்தருக்கடுத்தவாறே. (கூச0)

வாறேதுஞானத்துக்கும் வளமானவாதத்துக்கும், கூறேது சொல்வேனப்பா குறிப்பாகநன்றாய்க்கேளு, பேறேதுவரைப்பில்தப்பில் பெருத்திடுமுத்தில்தப்பில், தாறேதுவாட்டுத்தப்பில்தனிப்புடந்தப்பிற்றானே. (கூசக)

தப்பதேயிடையதானாற் றனிக்காய்ச்சல்முதிர்ந்துபோனால், நிற்பதுநிலைவிட்டேகும் நின்மலக்குருக்காணாது. ஒப்பதுசொன்னநூலி னுணர்ந்துநீயுரைத்துப்பாரு, தப்பாதுயென்னாலெல்லாஞ்சாதிப்போன்தப்புத்தானே. (கூசஉ)

தானிதுதப்பிற்றென்று தயங்கியேயேங்கவேண்டாம். வானிதுவாசிபோலே மயக்கத்தால்மறதியப்பா, ஆனிதுவிந்தநூலையளவிட்டேயூன்றிப்பார்த்துத், தேனிதுமாயிக்கிந்து சிறக்கநீபூசைபண்ணே. (கூசங)

பண்ணிடவல்லாயானாற் பலித்திடும்வாதசித்தி, பண்ணிடவல்லாயானாற் பகலிரவொன்றாய்ப்போகும், பண்ணிடவல்லாயானாற் பாருநீமுடிதாண்டும், பண்ணிடவல்லாயானாற் பராபரைபேசுவாளே. (கூசச)

வச்சிரகுரு

பேசியவீரநீரிற் பேதித்தசூதந்தன்னை, வாசியவச்சிரத்தில் மாட்டிநீயுலர்த்திப்பின்பு, காசியபுடமேபோட்டுக் கைகண்டகுருவாம்வச்ரம், ஆசியகுருவின்வேதை யனந்தங்காண்சொல்லக்கேளே. (கூசரு)

சொல்லவேகெந்திநீறுஞ் சூதத்தில்வயிரஞ்சாகும், சொல்லவேமகத்துநீறுஞ் சூதத்தில்வயிரஞ்சாகும், சொல்லவேலோகநீறுஞ் சூதத்தில்வயிரஞ்சாகும், சொல்லவேநாலுநீரிற் சூதமும்வயிரநீரே. (கூசசு)

நீருனவயிரமப்பா ரின்மலகுருவுமாச்சு, தாருனசூதங்கட்டச் சாற்றுமோர்முறையைக்கேளு, கூறுனகுருவிதொன்று கூட்டிதில்சூதமொன்று, ஆருனமுலைப்பாலாலே யப்பனேயரைத்துக்கட்டே. (கூசஎ)

கட்டியேலகுவாய்மெள்ளக் கனலுக்குட் புடத்தைப்போடு, ஒட்டியேசூதநீறு மொத்தெடைசூதஞ்சேரு, அட்டியேமுலைப்பாலாலே யப்படியரைத்துக்கட்டு, கெட்டியேலகுவாய்மெள்ளக் கெடிபடப்புடத்தைப்போடே. (கூசஅ)

போடுநீயெடைக்கெடைக்குப் பூட்டியேரசத்தையூட்டி, நாடுநீமுலைப்பாலாலே நலமுறவரைத்தரைத்து, ஆடுநீபத்துத்தொந்த முத்பனமாகவேறு, தேடுமிச்சூதம்போலச் செகத்தினிலில்லைகாணே. (கூசகூ)

காணிந்தச்சூதபற்பங் காட்டொன்றுதங்கதூதில், வாணிந்தரவிபோல்தங்கம் வளம்பெறச்சிவப்பேயாகும், தோணிந்தரவிதங்கத்தைத் துலைதுத்தநவலோகத்தில், பூணிந்திதந்தேய்க்கலோகம் பொளிச்சென்றுபொன்னுமாமே. (கூருய)

ஆமிந்தத்தங்கத்துக்கு மளவற்றசிவப்பேனுச்சு, காமிந்தரவிதான்காலைக் கடுஞ்சிவப்பாகும்போல. வோமிந்தரவிதான்வச்சமொடுங்கியராகப்பாலை, தாமிந்தநீரைத்தாயுந் தங்கத்திலூட்டினுளே. (கூருக)

ஊட்டினவாறதேது வொடுங்கினராகமேது, காட்டினசூதந்தானுங் கன்னியைக்கூடிராகம், சூட்டினகணையைவாங்கித் துலங்கினதங்கத்துள்ளே, நீட்டியமுறைப்பாடப்பா நிலைசொல்வேன் கேளுகேளே. (கூருஉ)

கேளுநீயுலகத்துள்ளே கெடியானபொன்னிறுண்மை, யாளுநீகரியுந்தீயு மணுகிடிலடர்ந்துபற்றும், வாளுநீகடைக்கண்பார்வை மாதராமாயத்தியில், தாளுநீயிளைஞொரென்ற தனிக்காடுவேகும்பாரே. (கூருங)

பாருநீயாசைக்குள்ளே பரவியபலத்தவாசை, யாருநீபலமேதென்று லளவில்லைபெண்ணினாசை, கோருநீயிவள்போனுக்காற் குடியோடேயெல்லாம்போச்சு, காருநீமனமேசொன்னேன் கன்னியின்மாயைதானே. (கூருச)

தானென்றபெண்ணைவிட்டாற் றனியாசைபோச்சுதென்பார் கானென்றகாமப்பெண்தான் கனவிலேயணைவாளென்று, வானென் றுமனத்திலுசை மாய்த்திடாயெல்லாமாயுந், தேனென்றதங்க ச்செம்பின் சேர்வையான்சொல்லக்கேளே. (௬௫௫)

கேளுநீசிவந்தபெண்ணைக் கெடிபடலிங்கம்வாரு, வாளுநீ தாயைவாரு மகத்தானகணேசன்வாரு, தோளுநீசொர்னக்காவ ல் துலங்கநிர்வாணிவாரு, தாளுநீபூசைபண்ணச் சகலமுஞ்சித்தி யாமே. (௬௫௬)

சித்தியேயாகக்காயஞ் செப்புறேன்கேளுகேளு, அத்தியபி ம்பத்துக்கு அபிஷேகம்பாலைப்பண்ணி, ஒத்தியேகொண்டிடப்பா வோரஞ்சுபத்துநாள்தான், பத்தியேமேனிதானும் பானுவைப் போலவாமே. (௬௫௭)

ஆமிந்தக்குருசூதத்தி லப்பனேசூதமெத்தப், போமந்தக் கோடிமட்டும் புணைந்தேறுங்கொந்தம்பாரு, வாமந்தவச்ரமொன் று வன்கோடிசூதங்கட்டுந், தாமந்தக் குருவினுண்மை சதாசிவர றிவார்தானே. (௬௫௮)

தானென்ற சூதநீரைச் சாதிக்கவல்லாயானால், பானென்ற மேனியாகும் ப ர்மலை யுகைத்தால் தூளாம், கானென்ற வித்ர ன்வாளைக் கைக்கொண்டே பொடிக்கலாகும், வானென்றிப்பாரு பாரு வாய்க்கு நீர்க்குணமுந்தானே. (௬௫௯)

வீர வைப்பு.

குணமென்ற வேதைக்கெல்லாம் கொள்கிறேன் வீரம்வைக் கத், தணமென்ற விணங்கன்றனுந் தனிப்பலமிருபதப்பா, வணமென்ற சவுட்டுப் பேதான் வாழ்பல மிருபதப்பா, விணமென்ற சாரமஞ்சுமியல் சீனமஞ்சு கூட்டே. (௬௬0)

கூட்டியேகல்லுப்பஞ்சு குறையாமற் பொடியாய்ப்பண்ணி, நீட்டியேகலையத்தூட்டி நேர்மேலேகுப்பிகட்டி,யாட்டியேயெரிப் பாயானு லப்பனேதீநீராகும. வட்டிபதிநீர் தன்னை யெண்பதுவரா கன் தூக்கே. (௬௬௧)

தூக்கியநீருக்குள்ளே சூட்டெட்டுப்பலமேசூதந், தாக்கிய குப்பிக்குள்ளே தனிப்பாண்டமணலில்வைத்து, ஆக்கியேயெரிக் கவற்று மடுத்தந்தப்பதத்திற்கொட்டி, நோக்கியேயரைக்கச்சூத ம நண்மணல்தவளமாமே. (௬௬௨)

தவளமாஞ்சூதத்துக்குச் சாற்றவேமருந்துகேளு, நிவளமாய்வறுத்துக்கொண்ட நின்மலத்துருசுரெண்டு, கவளமாய்வறுத்துக்கொண்ட கல்லுப்புப்பலமும்ரெண்டு, அவளமாமிணங்கன்ரெண்டு மாகியசீனம்ரெண்டே, (௯௬௩)

ரெண்டொடுமன்னபேதிநேரசம்பலமோமூன்று, தண்டொடுசாரந்தானுந் தாக்கதிற்பலந்தானாலு, கண்டொடுமெல்லாங்கூட்டிக் கலந்ததுபொடியாய்ப்பண்ணிப், பண்டொடுமேருவுக்குட்பாய்ச்சரைவாசிதானே. (௯௬௪)

அரைவாச்போட்டமேரை யப்பனேபாண்டத்துள்ளே, தரைவாசிமேருவைத்துச் சாரவேமணலைக்கொட்டி, யிரைவாசியிருவிரன்மே லியல்பாகமேருவைத்துக், கரைவாசிகண்டகீழே கண்டுநீமணலைப்போடே. (௯௬௫)

போட்டுநீயடுப்பிலேற்றிப் பூசித்தேயீசானத்தில், மாட்டுநீநாலுசாமம் வளம்பெறத்தீபம்போலக், கூட்டுநீநாலுசாமங் குலாவியகமலத்தீயை, யாட்டுநீபத்துசாம மப்பனேகடுந்தீப்போடே. (௯௬௬)

கடுந்தீயையடுப்போடொக்கக் கைப்படச்குளிருமட்டு, மடுந்தியகுப்பிவாங்கி வளமாகவுடைத்துப்பாரு, அடுந்தியவீரந்தானு மப்பனேதேங்காய்போல, விடுந்தியவிறுகிநல்ல வியல்பாக வெளுக்குப்பாரே. (௯௬௭)

வெளுக்குமேவீரந்தானும் வேதாந்தசாரம்போலத், தளுக்குமேயிதுதானெட்டுத் தனிப்பலந்தூக்கிக்கொண்டு, அளுக்குமேதுரிசிரெண்டு அடவானயிணங்கன்நாலு, பளுக்குமேசீனம்நாலு பறிந்தகல்லுப்புநாலே. (௯௬௮)

நாலேதான்சாரம்போடு நலமானவன்னபேதி, கோலேதான்ரெண்டுபோடு குறையாமல்பொடியாய்ப்பண்ணு, பாலேதான்மேருவுக்குப் பாய்ச்சிடாயரைதானீயும், வாலேதான்வாலுகைக்குள் வைத்துநீதீயைமூட்டே. (௯௬௯)

தீயிட்டேயெரியும்போது சிறந்திடுகுப்பிவாய்க்கு, மாயிட்டுச்சில்லுவைப்பாய் வளமாகப்பதங்கமட்டும், காயிட்டுப்பற்பம்போட்டுக் கடுஞ்சீலைசுற்றிப்போடு, பாயிட்டமூன்றுசாமம் பருகியேர்தீவத்தியே. (௯௭௰)

தீவந்தான்கடந்தபின்பு சிறந்திடுங்கமலமூன்று, ஆலந்தானெட்டுச்சாம மப்பனைகடிந்தீப்போடு, மேகோவந்தான்பதங்கமேறுங் குளிர்ந்தபின்குப்பிதானும், பாவந்தான்போக்கவென்று பலகைபோற்கொச்சியாச்சே. (௯௭௧)

கொச்சிச்சவ்வீர வைப்பு.

கொச்சியையடக்கிப்பின்னுங் கூட்டியுமேயவைத்தால், மெச்சியகோடாசூரி விளங்கிற்றுவேதத்தோர்க்கு, அச்சியேபறங்கிக்கன்று ஆந்தாளுமருளாற்சொன்னாள், எச்சியேயிளைத்ததென்று லேதுவாதம்போச்சே. (௯௭௨)

போச்சுதுவாதம்பொய்யாய்ப் புகழானவீரத்தாலே, வாச்சுதுவீரமானால் மகத்தானபரிசுகேளு, கோச்சுதுவிரும்புமேலே கொடியதண்ணீரைக்குத்த, ஆச்சுதுமெண்ணுகிழே யப்பனேதமருமாமே. (௯௭௩)

தமராகவிரும்பைமென்றால் சகலமும்தண்ணீராகும், கமராகுஞ்சாரணைக்குக் காட்டுமுன்மென்றுதாண்டும், சமராகும்லோகத்தோடே சகலமுங்கண்ணீராகும், அமராகும்வாதச்சொல்லி லாம்வீரந்தளவாயாமே. (௯௭௪)

தளவாய்க்கேபலம்போனாக்கால் சமரெங்கே சண்டையெங்கே, தளவாய்க்கேசந்துபோனால் தனிமாவிலேற்றமெங்கே, தளவாய்க்குக்கையில்லாட்டால் தனிவெட்டுங்குத்துமெங்கே, தளவாய்க்கேவெகுமானந்தான் சமச்சேறுகுப்பிமூன்றே. (௯௭௫)

மூன்றுக்குஞ்சரக்குச்சூத மூட்டவேகெதியில்லாட்டால், சாண்டுக்குப்பாதிபோகஞ் சமைத்துநீயெடுத்துக்கொள்ளு, காண்டுக்குக்கைக்கில்லாட்டால் கால்வாசிபோகம்வைநீ, வேண்டுக்குவீரமானால் வேண்டியதனமுமாச்சே. (௯௭௬)

தனமாமோவீரமானால் சார்வேதிங்கென்றாயானால், கனமானகுருவின்மார்க்கங் காட்டுறேன்கேளுகேளு, அனமானதுருசுதானு மரைப்பலம்வாங்குநீயும், வனமானவீரமப்பா வாழ்பணமஞ்சுதூக்கே. (௯௭௭)

தூக்குநீபூரமூன்று சுகமானவுறமும்ரெண்டு, வாக்குநீசூதம்நாலு வாழ்தருவண்டுநூறு, தாக்குநீநாபிபொன்று தனியொக்கக்கோழிப்பிச்சால், தேங்கிபேரைத்தேயொன்றாய்ச் சிவண்மேலேயப்பிப்பூசே. (௯௭௮

பூசவேதுரிசியீசன் போறேனுன்கைலைக்கென்பார்,தேசவே யுப்புமாயி செல்வதுமெங்கேயென்பாள், பாசவென்கபலுக்குள் ளே படுகையால்ரவியின் தீயால், மாசவேயூறலற்று மகத்தானகு ருவுமாமே. (௩௭௯)

குருவாஞல்வேதையெங்கே கூட்டுவதென்னுதப்பா, அரு வானகுருவின்மேலே யணுகிடிற்பொன்னேயாகும்; மருவானவெ ள்ளிசெம்பு மாட்டிது நூற்றுக்கொன்று,தருவானபொன்னுக்கொ க்கத் தங்கத்தைச்சேர்த்துப்போடே. (௩௮0)

போடிந்தத்துருசுதன்னைப் பூவுக்குமிலைக்குமுள்ளே, யாடி ந்தப்பாஷாணங்க ளறுபதுந்துவைத்தேயாட்டு, ஈாடிந்தப்பாஷா ணங்க ணலம்பெறத்தங்கஞ்சேரு, வோடிந்தவேதைதூப மோடி டுபிணங்கண்டோடே. (௩௮௧)

ஓட்டியகுருதான்மீகளு வொருபணந்தூக்குதூக்கு, ஆட்டி யபலமேசூத மதற்குள்ளேயிதனைப்போடு,நீட்டிய ரசத்தைவார்த் துநேர்வேதேய்க்கவெண்ணெய், கூட்டியகாரங்குத்திக் குறையா மலுருக்கிப்போடே. (௩௮௨)

உருக்கியரசத்தைநூற்றுக் கொன்றிடப்பத்துமாற்று, பருக் கியேதின்னஆஆ பனுவேகந்துருசுதானும், நெருக்கியசாரணைக்கு நேரானநல்லசூதம், தருக்கியதுருசுக்கொக்கச் சகலமுமொவ்வா தென்னே. (௩௮௩)

ஒவ்வாததுருசுரெண்டு வுத்தமவீரமொன்று, கவ்வாததாழா யத்தைக் கடுஞ்சூட்டசாம்பலொன்று, செவ்வாகக்கூட்டியொன்று ய்ச் சிறக்கவேயுமிநீர்குத்தித், தவ்வாதவண்டமேலே தனியொரு போட்டுப்போடே. (௩௮௪

துருசுப்போக்குக்கு வேதை.

போட்டிடாயதனுற்செம்பு புகழானகன்னிகோழி, ஆட்டிமு முதனுண்முட்டை யடுத்திடுமிருநாண்முட்டை, தேட்டிடுமுன்று ண்முட்டை சிறக்கவேபாட்டைக்கேளு, கூட்டுறவொன்றுரெண்டு குறைமுறைமூன்றுபோடே. (௩௮௫)

போடவேமுதனுண்முட்டை போட்டோடேரவியில்வைத்து ஆடவேயுச்சிநேர மப்பனேகாந்திகாட்டு, தேடவேகழஞ்சிமூன்று சிறந்ததுமேலேமுட்டை, கூடவேபத்தும்பாரு கொழுந்தொடுஞ் சூடனென்னே. (௩௮௬)

சூடன்போல்வெந்தேயண்டஞ் சுழன்றுதிவெளுப்பேயேறி, ஆட்டன்போல்மஞ்சள்வெள்ளை யுடன்சேர்ந்துவெளுப்பேயாச்சு,நா ட்டன்போலண்டநாகம் நலங்கியரசமுங்கெந்தி, வேட்டன்போல்வார்த்ததற்கு விரவிற்றுப்பாருபாரே. (௯௮௭)

பாரிந்தக்குருவுக்கொவ்வாப் பழுகியவச்ரந்தானும், பாரிந்தக்குருவுக்கொவ்வாப் பறக்கிறமுத்தான்றானும், பாரிந்தக்குருவுக்கொவ்வாப் பரியானகுருவுந்தானும், பாரிந்தக்குருவுக்கொக்கப் பாரதநில்லாதென்னே. (௯௮௮)

நில்லாதுநாலுமானால் நிலையாகநிற்பதேது, வல்லானைபதங்கொண்டாக்கால் மற்றொன்றுநில்லாதப்பா, கல்லானைகரும்பைத்தின்னக் காட்டிடசொக்கன்காண்பான், வல்லானகயற்கண்ணாளை மார்க்கத்தையறிவாள்காணே. (௯௮௯)

காணிந்தவண்டநீரைக் காட்டுமுன்சூதஞ்சாகும், பூணிந்தச்சூதங்கட்டப் போக்கெல்லாஞ்சொல்லக்கேளு, ஆணிந்தச்சூதமேலே யந்தெடைசூதம்வாரு, தோணிந்நரவியில்வைத்துச் சூதத்தைச்சூட்டிவாரே. (990)

வார்க்கிறபடியேதென்னில் வரிசையாய்ரெட்டித்தேறு, தாக்கிறபடியேதென்னிற் றனிச்சமன்சூதம்வாரு, ஆக்கிறதொந்தம்பத்து மடைவாகரவியிலேற்று, போக்கிறபோக்கேதென்னிற் புரிசடைச்சிவன்காண்பாரே. (991)

காண்பாயேசூதக்கட்டு கைகண்டவாறுபோலே,பூண்பாயே பாஷாணங்கள் போக்கெல்லாங்கட்டிப்போகும், நீண்பாயேதொந்தமேறும் நிலைநிலைவேதையாகும், ஆண்பாயேயிந்தச்சூத மணிக்ச்சாரணைக்குநன்றே. (992)

நன்றானரெண்டாமுட்டை நல்லாண்மையிதற்குப்பாதி, கன்றானமூன்றுமுட்டை கண்டுகொளிதற்குப்பாதி, வண்டானகூட்டஞ்சென்று மலருக்குண்மாண்டாப்போலே, பண்டானசூதத்தோடு பலபலசரக்குச்சாமே. (993)

சாகவேசரக்குக்குள்ளே சாரவேவீரராசன், ஆகவேவீரராசனணைத்திடத்துருசியோடே, வேகவேவீயும்வேண்டாம் வெருவிவேரவியில்போடு, பாகவேயெல்லாம்வெந்து பலபலகுருவுமாமே. (௯௯௪)

ஆமிதுவேதாமென்று ஆள்விட்டுவூன்றிப்பாரு, தாமிதுது ருசுசத்தி தயங்கியவீரமீசன், ஓமிதுரெண்டுங்கூடி பொருங்காம லோடிற்றையா, நாமிதுவென றுபார்க்க நலக்கறக்கண்டவாறே.

வாறேதுமனந்தான்சத்தி வழங்கியபுத்தியீசன், தாறேதுச த்திக்கோபந் தயங்காதசித்தமீசன், கூறேதுரெவ்வெண்டாகக் கொள்கிற்றேறுலகமெல்லாம், வேறேதுநாலுமல்ல விரைந்துநிற் குணத்தினேர்ப்பே. (996)

நேர்ப்பென்றுநகோபத்தாலே நிலையாதபிறப்பங்கேது, ஆர் ப்பென்றகோபச்சத்தி யாண்பிள்ளைச்சித்தம்பெற்றாள், வார்ப்பெ ன்றகோபம்வந்தால் மைந்தன்வந்தணைப்பான்சாந்தம், கார்ப்பெ ன்றபொருளைக்கண்டோர் கடும்பிறப்பறுப்பார்காணே. (997)

ஞானதுரியம்.

காணுமுன்மனந்தானப்பா கடியநின்மலமாய்நிற்கும், தோ ணுமுன்னலைச்சலாலே சுழன்றதுமனந்தான்நின்று, பூணுமுன்பு த்தியூன்றிப் புக்கிடில்ரெண்டுமில்லை, ஆணுமிவ்விரண்டுக்குள்ளே யாங்காரிசெனித்தவாறே. (998)

வாறேதிங்காங்காரிக்கு மைந்தனேநல்லபிள்ளை, கூறேதுநா லுமந்தக் கொடியதோர்சித்தில்தோற்றம், பேறேதுவென்றுபாரு பிறப்பில்லையிறப்புமில்லை, தாறேதுவேதாந்தத்தைச் சதனித்தம ளந்துபாரே. (999)

பாருநீவேதாந்தத்தைப் பலகாலுப்போதம்பாரு, பாருநீ போதமுன்னிப் பலநினைவெல்லாய்போக்கிப், பாருநீகுளிகைகை யிற் பலித்திடப்பரிசித்தப்பா, பாருநீபார்த்தால்முத்தி பார்க்கா ட்டால்சித்திதானே. (௧000)

சித்தியாய்க்காயம்பண்ணித் தேசத்தேதிரிந்துசித்தா, மத் தியாய்வேதைபோட்டு மணிகொண்டேயாடுவார்க, ளத்தியாம் பூரணத்தி னகண்டத்தைநோக்கானுகி, லெத்தியாஞ்சித்தையாடி யெவனும்பின்னிறப்பான்தானே. (௧00௧)

இறக்காதபடியான்சொல்வே னெளிதாகக்கேளுமப்பா, ம றக்காதேமனதைநீயு மாட்டிடுபோதத்துள்ளே, திறக்காதகபாட வாசல் திறந்துபோங்குளிகையாலே, கறக்காதபாலையுண்டு களி த்துநீயொன்றாய்க்கூடே, (௧00௨)

கூடாதேபோனுபாகிற் குளிகையுஞ்சித்திபொய்யாம், கூடாதேபஞ்சகர்த்தர் கூட்டோடேயிறந்துபோனூர், கூடாதேபுவனமண்டங் கோலாட்டுந்துருவன்போனுன், கூடாதேயிருந்தபேர்கள் கோடானுகோடிபேரே, (க௦௦௫)

கோடிதான் துருவனென்று கூறினேனிலக்கமில்லை, நாடிதானெருப்பாறப்பா நலம்பெறுமயிரேபாலந், தாடிதானிட்டேயேறித் தாயையுங்கடந்துபோனு, லாடிதான்கண்டசோதி யதுகண்டாற்பிறப்புப்போச்சே. (க௰௪)

போச்சுதுபிறப்புமென்று புகழ்கண்டார்மூலமூர்த்தி, வாச்சுதுயென்றுயானும் வழியோடேயேறிப்போனேன், வச்சுதுமாயைக்குள்ளே யெழுமோசவாதிசெத்தார், ஆச்சுதுயென்னவாழ்க்கை யகண்டத்தின்வாழ்வுநன்றே. (க௦௦௬)

நன்றென்றமணியும்வாதம் ஞானிக்கேயீசனென்றூர், தண்டென்றவாதங்கண்டு தனிப்பெண்ணூல்மாளவேண்டாம், கண்டென்றஞானத்துக்குக் கண்மணிக்குளிகையப்பா, வண்டென்றதெல்லாந்தள்ளி யகண்டத்திற்புக்குபுக்கே. (க௰௬)

புக்குமுன்னுயிரத்திற் புகழ்தாதுபிறப்பைச்சொன்னேன், தக்குமிவ்வாயிரத்திற் சகலமுமடக்கிவிட்டேன், மக்கும்பின்னுயிரத்தில் வழங்கியவழக்கஞ்சொல்வேன், அக்குமிந்நடுவைப்பாரு ஆனந்திபணிசெய்வாளே. (க௰௭)

பணிசெய்யுமாவதேது பார்க்கின்றேன்பார்த்தோனென்று, அணிசெய்துநடுவேநின்று ஆடியபொருள்தானப்பா, தணிசெய்தத்ரிபுடிக்குள்ளே சகலமுந்தோற்றிமாளு, மணிசெய்தசெயலேதென்னின் மகத்துவங்காணுகாணே. (க௦௦௮)

காணிதுதூரமல்ல காதத்தின்பொருளதல்ல, காணிதுவண்டாண்டங் கடந்துமுன்னுடுதப்பா, சாணிதுமனத்தையுன்னிக் கலந்துகூட்டினுக்கால், காணிதுவேறேயில்லை கரையில்லைகவிதான்முற்றே. (க௦௦௯)

வாதகாவியம் மூவாயிரம்

இரண்டாங்காண்டம்

முற்றிற்று.

கடவுள்துணை.

கொங்கணநாயனுர்

திருவாய்மலர்ந்தருளிய

வாதகாவியம் மூவாயிரம்.

கடைக்காண்டம்.

முன்னுனஆயிரத்தைவகுத்துச்சொல்லேன் முறைகோடிதுறைகோடிவழலைகோடி, மன்னுனகுருகோடிகளங்கங்கோடி மருவியதோர்மெழுகுமுதல்குளிகைகோடி, தன்னுனவுதாரணச்சொல்லிதிகோடி தயங்காதசத்துவகைத்தொழிலோகோடி, அன்னுனமுற்காண்டம்பாதமென்றே னதுவிட்டானடப்பேதோ வசடாபாரே. (க)

பாரினித்தான்முற்காண்டமேற்கொண்டாடப் பரிவாகக்கல்லுப்புக்கட்டுச்சொல்லே, ஞரினித்தானீடென்பே னுப்புக்கப்பாவாச்சரியமுன்மனேக்குமிதுவேயாடு, தேரினித்தானுடுதற்கு வண்டில்போனுல் தெருவேதுசிங்காரவடமுமேது, வேரினித்தானுப்புவுப்புவாதத்துக்கு வேரற்றுல்வாதமென்றமரமும்போச்சே(உ)

போச்சப்பாவென்னுதேயுப்பைக்கட்டப் போடுகிறேன்கெடியாரம்பொன்னுக்குப்பு, வாச்சப்பாவுப்பென்னவென்றுனுகி லவன்கையில்வாதமில்லையறிந்துகொள்ளு, நீச்சப்பாவுப்புவிட்டால் வாதவேலை நிலைக்கரிதுநிலைக்கரிதுநினைக்கவென்றுல், ஓச்சப்பாகுருசொன்னுலுப்புக்கட்டு முத்தமனேகுருபோனுலுப்புப்போச்சே.()

வெடியுப்பு செயநீர்.

உப்பானகல்லுப்பைமணிபோல்வாங்கி யுத்தமனேயைம்முறைதான்பழச்சாறாட்டிக், கொப்பானவெடியுப்பு பலந்தான்பத்தில் கூட்டி திலேரெண்டுபலச்சீனங்கூட, வொப்பாகப்பழச்சாற்றைவிட்டேயாட்டி யுறவாகச்சாமமொன் றுவுலரப்போடு, செப்பாகவிப்படிதானெழுநாளாட்டிச் சேர்த்தெடுத்துக்கரண்டியிலே சினக்கவூதே (ச)

ஊதினதோர்வெடியுப்புச்சுண்ணும்பாகு முத்தமனேபனியில்வைக்கச்செயநீராகும், வாதினதோர்பலமொன்று காரமப்பா

வாகாகர்சீனமொருபலந்தான்கூட்டிக், கோதினதோர்செயநீரிற் றேய்க்கத்தோய்க்கக் கொடியகெட்டாம்கெட்டாங்க மட்டுமாட்டு ஆதினதோர்சவுக்காரச்சுன்னம்வெள்ளை யப்பனேயொவ்வொன் றுகாசுபோடே. (௫)

போட்டரைத்துச்சூதமொருகாசுவாரு புகழானசூதஞ்சாம் வெள்ளைசாகும், நீட்டரைத்துச்செயநீரைவிட்டேயாட்டி நிலையான கல்லுப்புழுப்பலத்திற்பூசு. காட்டரைத்துரவியிலேகாயப்போட் டு கனமாகநாயுருவிச்சாம்பலுக்குள், ஆட்டரைத்திட்டடுப்பேற் றியெரிப்பாய்சாமமத்தோடேவாங்கிமெள்ளப்புடத்தைப்போடே

புடமெடுத்தவுப்புமணி பார்த்தான்மக்காள் புகழானதந்தம போல்வெளுக்குக்காணும், குடமெடுத்தகொங்கையொத்தமாவி ன்தேவி குதிகொள்வாளவன்முகத்திற்குறையொன்றில்லை, தட மெடுத்ததலையாரியுப்புமக்காள் சரக்கானகள்ளரைத்தான்சண்ணு ஞ்சண்ணும், விடமெடுத்தவிசனுடவிந்துவானால் வெள்ளாட்டுக் கெதிர்ப்பட்டவேங்கையாச்சே. (௭)

வேங்கையென்றவுப்புக்குப் பேருமக்கான் வெறித்தசிங்கம் பேரண்டம்வெள்ளைச்சாரை, தாங்கையென்றசிவனுகம் படிகிராச ன் சரக்கென்றஜெந்துகட்குக்காலன்காலன், ஓங்கையென்றவுப் படங்கவொடுங்குமெல்லா முப்பைமக்காளுருப்படவே கட்டிப் போடப், பாங்கையன்றுகண்டவனேவாதஞானி பரிசானவுப்ப றியான்பிசாசுதானே. (௮)

பிசாசென்றால்தலைசுற்றிப்பூசைவாங்குப்பேய்வாதியதற்கொ வ்வான்பிழையாமாண்பன், திசாகண்டங்கிழிந்தோடி வேதையா டச் செகமெல்லாமெச்சுதற்குச்சுன்னஞ்செய்ய, வுசாசென்றபேர ண்டம்பதமும்பார்க்கவுத்தமனேயுப்பைவிட்டாலொன்றுமில்லை, நி சாசென்றபயிரவியாணிருத்தஞ்செய்ய நின்மலமாய்ச்சிவன்போல விருந்தவுப்பே. (௯)

இருந்துமுன்னேகட்டினதோருப்புக்கப்பாவேத்தேத்துவெ ண்கருவிற்கடுங்காரத்தை, யருந்துமதுவெண்கருவின் சலத்திற் றேய்த்தே யப்பனேபேழுநாளுலரப்போடு, பொருந்துமுப்பிற்க டுங்காரம்புக்கியேறும் புகழானசுண்ணம்புக்குகையிலூது, திருந் துமதுகடுஞ்சுன்னமுப்புமக்காள் செகமெல்லாமோர்மணிக்குவிலை காணாதே. (௧0)

காணாதசுன்னமொன்றுபூரமொன்று கலந்தரைத்துவெண்கருவால்வில்லைகட்டிப், பூணாதசிப்பிநீர்க்குள்ளேவைத்துப் புகழாகக்கடிகையைந்துநீயைமூட்டு, ஆணாதகர்ப்பூர்ச்சுன்னமாகு மப்பனையெடைக்கெடைக்குப்பூரமேற்று, கோணாதவைந்துதொந்தம்பூரமேறுங் கொடும்பூரங்குன்றுபோற்சுன்னமாச்சே. (௧௧)

குன்றதுபோலாகவென்றால்தொங்கித்தேறு சோடிமட்டுங் குறையாமல்தொங்கமேறும், வின்றதுபோற்கர்ப்பூரம் பூமியுப்பு வேர்கீழும்பணர்மே வாய்விளங்கிற்றப்பா, புன்றதுபோலடித்துடையிற்பெண்ணுக்காணாற் புகழானகடைத்தெருவிற் காட்டுவாளோ, கன்றதுபோளுப்புமாமிசங்காண்மக்காள் கைவிட்டாற்சீடனுக்குத்தாழ்த்திநீயே. (௧௨)

தாழ்த்தியென்றதெதனாலேமக்காள்கேளுஞ் சண்டாளசீடனுக்கேயுபதேசித்தால், வாழ்த்தியென்றமனம்புண்ணாங்கீர்த்திபோகும் வருமப்போவெகுபாவம்மனப்பேயாகும், ஆழ்த்தியென்றகோபத்திற்செயிக்கானாகி லடியோடேதவமெல்லாமழிந்துபோகுஞ், சூழ்த்தியென்றநித்திரைபோல்வானையூடு துன்பமொன்றுமெய்தாதுசுகந்தான்காணே. (௧௩)

சுகமானசீடன்வந்தேயடுத்தானானால் சோதியப்பாபனிரெண்டுவருடமட்டும், அகமானதொழில்செய்தாலெல்லாமபோதியழும்புசற்றேநடந்தாக்காலக்கலத்தள்ளாறு, தகமானவுப்பேதுபாருபாரு சாதகமாய்மதியேதுபூரம்பூரம்; உகமானமென்னசொல்வேன்பூரணமேயையோ வுயிர்பூரமுடனுப்பாமுறைத்துக்காணே. ()

தாளகவெள்ளை.

காணப்பாபூரமென்றசுன்னத்தோடே கையொக்கவீரமிட்டுக்கலக்கரெட்டி, பூணப்பார்விதில்ரெட்டிதாள்கத்தைக்கூட்டிப் புகழானவெண்கருவாலரைத்துக்கட்டி, பூணப்பாகிளிஞ்சிநீர்க்குள்ளேவைத்து வுத்தமனேயொருசாமந்தீயைமூட்டு, ஆணப்பாதாளகந்தான்சலவையாகு மப்பனையிந்தெடைக்குத் தாளகத்தையேற்றே. (௧௫)

ஏற்றேற்றுநூறுமுதல்கோடிமட்டு மேறுவதையென்னசொல்வேனென்னசொல்வே, னூற்றூற்றுபூரணத்தினின்றுநின்றே யப்பனையுபரசங்களாமேலேற்று, காற்றூற்றுபூரேபூப்போலேயாகு

ங்கைகடந்தவங்கத்தை நமேலேபூசு, நீற்றூற்றுவடிசுன்ன மாகவூதி நேரானநிமிளையைத்தானீற்றுவாயே. (௧௬)

நீற்றியன்றே நிமிளையிலேவீரங்கூட்டி நேரானசாரயங்கேநீறிப்போகும், ஆற்றியன்றேசாரத்தில்வீரங்கூட்டி யப்பிடவேதுரிசியங்கேசுக்காணுதும், போற்றியன்றேகுகையிலிட்டே யூதிப்போடப் பொறியிமேடாதுரிசியென்றசுன்னத்துக்கு, வாற்றியன்றேவித்துருசிவாதத்துக்கு மக்களேயிதினுடைய மகிமைகேளே.

மகிமையென்னவித்துருசுவராகனென்று மருவியதோர்சீனத்தின்சுன்னமொன்று, மகிமையென்னவீரமொன்று கூடப்போட்டு மக்களேமத்தித்தாற்சிவப்பேயாகும், மகிமையென்னதிசாண்டத்திற்போட்டொன்றாக வரிசையுடனிட்டிட்டு ரவியில்வைப்பாய், மகிமையென்னவண்டமெல்லாமெழுகேயாகு மாட்டிறதோர் வரிசைகண்டுமாட்டிபாடே. (௧௮)

ஆடையிலேமாற்றேறும்லக்கமேறுமத்தனைபுமுன்னேநான் சொல்லிவிட்டேன், நீடையிலேயோரண்டம் லட்சம்பொன்னும் நேரானபரிசசுன்னங்கூடப்போடு வூடையிலேபத்தண்ட மெழுகாமக்கா ளொன்றுக்குளொன்றமெத்தவுயர்த்தவேதை, கூடையிலேநவலோகங்கல்லுமண்ணுங் கொண்டங்கேபரிசிக்க நூறுமாற்றே. (௧௯)

நூறுகவர்விரிந்தோமண்டமொன்றில் நூற்றுப்பத்தாயிரந்தான்திசாண்டத்திற்கு, வேறுகவர் நூற்றுப்பத்தாயிரமாயோடும் வெவ்வேறாய்ப்பத்துக்கும்ஆயிரந்தான்பத்து, ஆறுகவராதாரமேலேகஞ்ச மாயிரத்தெட்டிகழுக்குமுயரப்போகுங், கூறுகவாதத்துள்ளேபிறந்தாற்போலக் கோடானுகோடிதொழிலண்டந்தானே. (௨0)

அண்டவித்தையாரெடுப்பாரென்றாற்கேளு ஆத்தாளைப்பூசிப்போராடுவார்கள், பிண்டவித்தையாரெடுப்பா ரென்றாற்கேளு பேரானபூரணத்தையடுத்தோர்செய்வார், வண்டவித்தையிதுரெண்டுஞ்சமுசாரிக்கு மருவியவன்குலமெல்லாமாண்டுபோகும், கண்டவித்தைதகைமுறையாய்ச் சொன்னேன்மக்காள் காட்டுறேன் வேறொன்றையாட்டுறேனே. (௨௧)

ஆட்டுறேன்பரியோடேதுருசுசீன மப்பனேமூன்றுசுன்னத் தொடைக்குவீரங், கூட்டுறேனென்றுகச்சிவந்துபோகுங் குறை

யாத்தங்கத்தில்பத்துக்கொன்று, வூட்டுறேன்ரவியில்வைத்துப்புடத்தைப்போட வுத்தமனேபரிச்சுன்னமுயர்வுமெத்த, மூட்டுறேன்பரியோடே வீரமப்பா முத்துப்போலிருந்ததுதான் பவளமாச்சே. (உஉ)

பவளமென்றுமுத்தென்றுநீலமென்றும் பாடினதோர் நூலெல்லாமிதற்கேபேரு, தவளமென்றுதருசுகண்டால் மூன்றுமாச்சு சாதகமாய்த்தரிசிவிட்டால்மூன்றுப்போச்சு, கவளமென்றால்வாய்திறக்கும்புரவியப்பா கடிவாளமென்றுக்கால்வாயைமூடுஞ், சவளமென்றால்தடிகாரன்சீறினுப்போல் சண்ணுற்றதரிசியுப்புரெண்டும்பாரே. (உ௩)

இரண்டினமாமுப்புவுப்புமக்காள்பாரு நேர்பானவெடியுப்புபூமிநாதம், ஒண்டினமாங்கல்லுப்புவாரிதிக்குநாதமொடுங்கிற்றுவப்பிலொன்றுபிரிதிவிலொன்று, கண்டினமாம்ரெண்டறிந்தாலவனேவாதி கைமுறையாயதைக்கட்டவிதைத்தான்கட்டு, மண்டினமாமொன்றுமில்லையுண்மையாக மக்களேயுப்பாலேவுப்பைக்கட்டே.

ஒரு உப்பு மற்றொருஉப்பைக் கட்டுமென்பது.

கட்டினதோர்வெடியுப்புகல்லுப்பைக்கட்டுங் கலந்துநின்றகல்லுப்புவெடியுப்பைக்கட்டும், ஒட்டினதோர்துருசியது சாரத்தைக்கட்டு மோங்கினதோர்சாரமதுதுரிசியைத்தான்கட்டுந், தட்டினதோர்வரட்டியைப்போற்றிருப்பிப்போட்டு சண்ணியப்பாசரக்கெல்லாந்தனித்தனியேகொல்லும், மட்டினதோரென்றுசொல்லிமுடியாதப்பா மகத்தானசாரவித்தைவளப்பந்தானே. (உ௪)

தானென்றசாரத்தைவிரித்துச்சொல்லச் சமுத்திரத்துநீரெல்லாமதற்குப்பற்று, வானென்றவெடியுப்புகல்லுப்புச்சூடன் மருவியதோராறுவகைமூத்திரமுங்கூட்டிக், கானென்றபறங்கியவன்சமைத்தான்மக்காள் கல்லுப்போலிறுகியதுசாரமாச்சு, தேனென்றமொழியுடையசிவகாமித்தாய் செப்பினுன்கருவெல்லாஞ்செப்பினுளே. (உ௫)

செப்பினதோர்சாரத்தாலெல்லாங்கட்டுந் திராவகச்சரக்கெல்லாஞ்சுன்னமாகும், ஒப்பினதோர்சாரத்தாலுருகுமெல்லா முத்தமனேசெயநீர்திராவகமுமாகும், அப்பினதோர்மெழுகாகும்வெ

ண்ணெயாகும் ஆஆஆகளங்காகுஞ்சிவப்புமாகும், கப்பினதோர சமாகுமநவலோகங்கள் கடுஞ்சுருக்காஞ்சாரத்தைக்கரைகாணே ணே. (உஎ)

சாரக்கட்டு.

நரைகாணுச்சாரத்தைக் கட்டவென்றாற் கசடரேயிரண்டுப் பாற்கட்டவேண்டும், உரைகாணுச்சாரத்தாற்கல்லுப்புகட்டு மு த்தமனேவெடியுப்புமுச்சடங்கிச்சாகு, நிரைகாணுவாதியடிமறை ந்துபோகு நேராச்சுமேன்மேலேகோடாகோடி, துரைகாணுஞ் சூதமொடுதங்கம்ரெண்டுஞ் சுண்ணும்பாய்நின்றுக்கா லிந்தடியும் போச்சே. (உஅ)

அடியிரண்டுங்கடந்துநின்றதங்கச்சுன்னம் ஆஆஆவுருக்கின மாநீறுமாகும், கடியிரண்டுகெட்டாகுமெழுகுமாகும் கையிட்ட செந்தூரஞ்செயநீராகு, முடியிரண்டுகுளிகையுமாமூலங்காணு மூ வுலகுந்திரியவுமாமெதிரோவில்லை, கெடிகண்டுயிதைக்கொண்டு சவ்வீரங்கட்டிக் கேள்மக்காள்குருவாலைந்தடியும்போச்சே. ()

போச்சப்பாசவ்வீரச்சுன்னத்தாலே புகழானநவலோகமுப ரசமுநீறும்; ஆச்சப்பாதாதுவெல்லாமெழுகுமுதல்செயநீ ரப்ப னேவுருக்கினமுஞ்சத்துமாகும், வீச்சப்பாசெந்தூரஞ்சுன்னமாகு ம் விட்டவிடந்தொட்டவிடமெல்லாம்வேதை, கூச்சப்பாதாம்பர மோபரிசமாகுங் கூறரிதுகூறரிதுவீரப்போக்கே. (௩0)

வீரத்தாற்சூதத்தைக்கட்டிமக்காள் விரவியிதில்தங்கமிட்டு மூன்றுஞ்சேர்த்து, ஆரத்தாலஞ்சுவகைக்குகையிலிட்டே யப்ப னேயூதிடவேபொருமிநீறும், நேரத்தாலிதனுமேலையந்தடியும்போ ச்சு நிலையில்லைசுண்ணும்புமெழுகுங்கோடி, கூரத்தாற்செந்தூரஞ் செயநீர்கோடி கொண்டிடவேயுருக்கினமுஞ்சத்துமாமே. (௩க)

ஆமப்பாகட்டினங்கள்கோடாகோடி அரகராநவலோகமுப ரசமுங்கோடி, வேமப்பாவண்டபகிரண்டமெல்லாம் விட்டிடமுந் தொட்டிடமுங்கவரோகோடி, யோமப்பாவிச்சுன்னஞ்சாரத்தூட் டி யுறவறைக்கச்செயநீராமுணர்வுகேளு, வாமப்பாசெயநீருஞ்ச வ்வீரங்கூட்டு மருவியதோர்நவலோகஞ்சூதமாமே. (௩உ)

சூதமுமாமுபரசங்கள்சுட்டியாட்டச் சுகமானசரக்கெல்லா ஞ்சூகமாகும். வாதமுமாமிந்நீரிற்பூரவுப்பு மருவியதில்துவைத்த வுடன்மாண்டுபோகும். பேதமாய்த்தனித்தனியேயூநச்சுன்னம்

பிறந்ததப்பாகடுங்காரம்பேசவேண்டாம், நீதமாமீரண்டோடே வீரங்கூட்ட நேரானவந்தடியும்நின்றுபோச்சே. (௩௩)

நின்றுதப்பாசந்திரனுஞ்சூரியனுங்கூடி நேரானவீரமதுவுள்ளேபுக்க; வுன்றுதப்பாமட்டற்றவீரந்தன்னை யுத்தமனைகரியாச்சூதங்கரேக்கு, கொன்றுதப்பாகோணமட்டுங்கூட்டியூதக் கூகூகூ பூரணமேமகொடிபசுன்னம், ஒன்றுதப்பாவிதிலாட்டுதீபதூப மோகோமீகோபரிசமுதலெட்டுமாமே. (௩௪)

எட்டுமட்டோமுன்சொன்னவெல்லாமாகு மென்னசொல்லேவணுயிர்க்கேர்டெட்டுமாற்று, கட்டுமட்டோசுன்னமட்டோவேதை மட்டோ வகைகடந்தமெழுகுமட்டோசெயநீர்மட்டோ, நெட்டுமட்டோசூதமட்டோகளங்கமட்டோ நேரானசெந்தூரச்சத்துமட்டோ, கொட்டுமட்டோகொள்ளித்தேளான்சுன்னங் கூடவிதிற்சாரமிட்டுக்கூட்டியாட்டே. (௩௫)

ஆட்டையிலேதெளிவாகும்புஷ்டியில்லை அரகராசிவசிவா அம்மா அம்மா, கூட்டையிலேவீரமிடவிரத்தமர்கும் கொண்டதிலே வெண்காரங்தோய்த்துப்போட, நீட்டையிலேபட்டுருகிச் சுன்னமாகும் நிலைபானமுன்சரகாரங்கூட்டி, யூட்டையிலேவீரமொடுதெங்கமுட்டி யுத்தபனேகடுஞ்சுன்னமாகவூதே. (௩௬)

ஊதுறதுமஞ்சுவகைக்குகையினுள்ளே யோகோகோகொள்ளையோகொள்ளைவாதம், கோதுறதுமுன்சொன்னவடியும்பேர்ச்சு கூசாதேகடுங்காரவடிமேலாச்சு. மோதுறதுமரமேதுமலைதானேது மூச்சேதுபேச்சேதுமுன்பின்னேது, வோதுறதுநூலேது வாதமேது வுப்புக்கோராயிரமேலோடுந்தானே. (௩௭)

ஓடுகிறகாரமாஞ்சுன்னத்தோடே யுத்தமனைரெட்டிப்புசாரஞ்சேர்த்து, நீடுகிறகுழவியிதில்நாட்டுமுன்னே நிமிஷத்திற்கங்கைபோல்நிற்குநிற்கும், ஆடுகிறவடிக்கெல்லாஞ்சுன்னஞ்சேர்க்க வடைவுசொல்வேனன்றாகவறிந்துகொள்ளு, வூடுகிறசுன்னத்திலமுரிவார்த்தே யுறவாகநீற்றினத்திற்சாரஞ்சேரே. (௩௮)

சுன்னத்தில் அமுரிவார்த்து நீற்றுகிறதற்கு

சேர்த்தவுடன்செயநீராம் புஷ்டியில்லை செயநீரப்பாதியிதிற்கருவைபோட்டால், கோர்த்துடனேகுழம்பாகும்புஷ்டி நிற்கும் குலமரைத்தானலக்கழிக்கும்வெகுநாள்செல்லும், "போர்த்துடனேசரக்கினுள்ளே புகுதமாட்டார் பொய்யர்ச்சுதுறையெல்லாம்

பொட்டென்பார்கள், காற்றுடனே திக்கூடில்வீடும்வேகும் காற்றில்லாத்தீப்போலே நீற்றுய்நீரே. (௫௯)

நீற்றினதோர்காரத்தில்சாரங்கூட்டி நின்றதொருசெயநீரில் வீரம்போட்டு, ஆற்றினதோர்சீனத்தைத்தோய்த்துப்போட வப்பனைபடிகம்போற்சுண்ணம்பாகும், மாற்றினதோர்சுண்ணம்பில்வீரத்தங்க மாட்டியிதைவில்லைதட்டிக்குகையிலூது, காற்றினதோர்சீனமதுகடிபசுன்னங் காரவடிகீழாச்சுவிதுமேலாச்சே (௬௦)

மேலானசீனத்தைத்தொட்டேபாட்டு மேருவுக்குமரைவாசியதிகமாற்று, கோலானகவரெல்லாமதிகமாகக் கோடானுகோடி துறைவிரிந்தேயாடுஞ், சேலானகண்ணுடைய சிவகாமித்தாய் செப்பினுள்சீனத்தின்திறத்தையெல்லாம், ஆலானதுண்டசிவன் சீனவர்ண மவருக்குப்புரியட்டவங்கமாச்சே. (௬௧)

ஆச்சப்பாசீனத்தின்சுன்னத்தோடே அப்பனேயரிதாரம்வீரங்கூட்டி, போச்சப்பாவங்கத்திற்பூசிக்காய்ச்சி யுத்தமனைபுடம்போடவுயர்ந்தசுன்னம், வாச்சப்பாவாசனைக்குச்சூதஞ்சாகும் மற்றதெல்லாங்காற்றடித்தால்மாண்டுபோகும், வீச்சப்பாகவர்சகஞ்சொல்லமாட்டேன் மேன்மேலும்மென்மேலும் விசையுண்டாச்சே. (௬௨)

விசையானவங்கவடிமேலேயாச்சு விளங்கியதோர்சீனவடிகீழேயாச்சு; கசையானவங்கத்தில்சாரங்கூட்டக் கைவிட்டசலமாகுங்காரமெத்த, இசையானசரக்கெல்லாமிதிலேதோய்க்கச் செத்துதப்பாவுபரசமுஞ்சேரவெல்லாம், பசையானவினந்தோறுஞ் சுன்னமாகும் பார்க்கையிலேசத்தாகும்ரசமுமாமே. (௬௩)

ரசமாகுமெழுகாகுங்களங்கமாகும் நலம்பெரியசெந்தூரமீயமாகும், நிசமாகுந்தாபமுதற்பதினறுவேதை நிமிஷத்திற்பூரணத்தைநேரப்பண்ணுங், கசமாகும்புரியட்டங்கண்ணிற்காணுங் கண்டேனோநாலோகொலாலாகும், வசமாகும்சவுசஷ்டிவித்தையெல்லாம் வங்கந்தான்கடுஞ்சுன்னம்வாய்கொள்ளாதே. (௬௪)

நிமிளைச்சுன்ன அடி

வாய்கொள்ளாவங்கத்தில்வீரம்போட்டு மத்தித்துக்கருவாலேநிமிளைகட்டி, தோய்கொள்ளாவஞ்சுசுன்னக்குகையிலூது துடியானசுண்ணம்புநிமிளைமக்காள், பாய்கொள்ளாவங்கவடி கீழேயாச்சு பரையுடையநாதவடிமேலையாச்சு. தாய்கொள்ளாக்குற்

றமுண்டோவென்றாற்போலச் சவுரியமாநிமிளையுட சார்வைக்கே
ளே. (௪௫)

சார்வான நிமிளையின்மேலசவாதுபோட்டுச் சந்தானம்பண்ணிய
தைவைத்துக்கொண்டு, கோர்வானமலைமேலேபோட்டிட்டாட்ட
க் குறுகியொருமணியாகவு நகிநிற்கு, மார்வானசரக்கேதுவுபரச
ங்களேது அரசுராசிவசிவாஆத்தாள்முன்னே, தேர்வாணிலோட்
டயிலாஞசேடம்வேண்டாஞ் சித்தரெல்லாம்போற்றிசெய்யத்திரி
யலாமே. (௪௬)

திரியலாமகண்டத்திமேலறிபாடித் தேசமென்னவண்டமென்
ணகைக்குள்ளாச்சு, திரியலாங்கூடுவிட்டுக்கூடுபாய்ந்து சிவசிவா
வென்றெழுத்தைமூலத்தூன்றித், திரியலாங்கண்டிப்போவில்லை
தேகஞ் செகச்சாலமத்தனையுமிதற்குள்ளாச்சு, திரியலாமலைதோ
றுமெதிரேசித்தர் சிவனேவாவென்பார்கள்சிறந்துபாரே. (௪௭)

செயநீருக்கு வழலைச்சுன்னம் போட

பாரிந்தநிமிளையின்மேல புனுகுகூட்டிப் பருவமுடன் மத்தித்து
வைத்துக்கொண்டு, நேரிந்தமலைமேலேபோட்டுப்போட்டு நேர்ந்
துமக்காளுநதையின்மேலசுன்னமாகும், காரிந்தச்சரக்கேதுவுபரசங்க
ளேது கைபட்டாற்சுண்ணாம்பாங்கடுநீராகும், வாரிந்தச்சுண்ணா
ம்புக்கவரைச்சொல்ல வாயுமில்லைகையுமில்லைமௌனந்தானே, ()

தானென்றநிமிளையின்மேலசாரங்கூட்டித் தாக்கையிலேசலமாகு
ம்புஷ்டியற்றுக், கானென்றசரக்குமுத லுபரசத்தைத்தேய்க்க
க் கண்கெட்டவிபதிமேலவிழுந்ததொக்கும், வானென்றசெயநீரிற்
சவ்வீரப்போட்டு வழலையிட்டுக்கலக்கியிதை வைத்துக்கொண்டு,
தேனென்றகெந்தகத்தைத்தேய்த்துப்போடச் சிணத்திமேலமஞ்ச
ளது அண்டமாமே. (௪௯)

ஆமப்பாமுன்சொன்னசெயநீர்க்கெல்லா மடிக்கடிக்குவழலை
யுடன்வீரம்போட்டுப், போமப்பாவண்டபிண்டம் புகைந்துவெந்
து போக்கிதிலேயற்புதந்தான்புகழமாட்டேன், ஓமப்பாகவறொ
டுக்கஞ்சதாசிவனுங்காணார் ஓகோகோநாலுப்பு முன்னிப்பார்த்
தே, நாமப்பாநம்மாலேமுடியாதென்று நழுகவிட்டுமறுகவரை
நாடினேனே, (௫௦)

நாடினதோர்சலவைவயொத்தகெந்திவாங்கு நலவானவஞ்சுவ
கைக்குகையிலூது, ஆடினதோர்கடுஞ்சுன்னமாகுங்கெந்தி யுத்த

மனையிதிலூட்டுவீரந்தங்கள், கூடினதோர்வெண்கருவா லரைத்துக்கட்டிக் கூறுனவனுஞ்சுவகைக்குகையிலூது, நீடினதோர்கெந்தியப்பாகடுஞ்சுன்னமாச்சு நிலைசொல்லச்சிவன்பதறிநின்றிட்டாரே

நின்றதொருகெந்தியிலேசவாதுகூட்ட நேரானமலைமுதலாயுபரசமுனுசாகு, நின்றதொருநவலோகமாத்தோடொக்க நிலையாதசுன்னமுமாசேர்ந்தேயூது, நின்றதொருசுண்ணும்பின்கவரிலாட நேரானமகாசக்கம்பற்பவரையாகும், நின்றதொருநிமிளையடிகீழேயாச்சு நேரானகெந்தியடிமேலுமாச்சே. (௫௨)

ஆச்சந்தக்கெந்தியிலேபுனுகுகூட்ட ஆஆஆவாசனைக்கேயுபரசமுங்குன்றும், மூச்சந்தவிடம்போலேசுன்னமாகும் மூவுலகுங்கொள்ளாதுவிரிக்கவென்றால், கூச்சந்தச்சுன்னத்தில்வீரங்கூட்டக்கொடுஞ்சிவப்பாமிதில்கூட்டுஞ்சாரம்லிங்கம், பேச்சந்தகுருக்கிடையாமடிகள்தோறும் பேசாதேவைதக்குப்பெலனிதாமே. ( )

பெலமானகெந்தியிலேசவாதுகூட்டப் பேரண்டஞ்சிற்றண்டமிரண்டுமாடுஞ், குலமானவுபரசங்கள்சத்தாய்நிற்குங் கொண்டதொருசத்தாலேகோடிமார்க்கம், தலமானவாசனைக்குமலைதண்ணீராஞ் சற்றரிதுசாற்றரிதுவுருக்கினத்தின்சுறுக்கை, நிலமானகெந்திசந்திற்காரங்கூட்ட நிமிஷத்திற்சலமாடுங்கேர்ந்துகாணே. ( )

காணப்பாதொகையுடனேயந்நீர்க்குள்ளே கனாயில்லாத்தொழிலுண்டுகெவர்சொன்னாலும், ஆணப்பாவேலைநீர்மைக்குப்பற்று அரகராசிவசிவாசிகண்டமேகே, பூணம்பாசெயநீரில்தேய்த்ததெல்லாய்போக்காகநூறுதொந்தம்புனைந்தேயேறும், ஊணப்பாசெந்தூரமெழுகிஞ்ஞோடயுத்தமனைகுளிகைமுதலனந்தப்போக்கே. (௫௫)

போக்கானசெயநீரில்வழலைவீரம் பூட்டியிதில்தாளகத்தைத்தோய்த்துப்போட, வாக்கானதாளகந்தான்விளைத்துப்போகும் வைத்தாதாயஞ்சுவகைக்குகையினுள்ளே, தாக்கானசுண்ணும்பாமெத்தவேகஞ்சடையவிழுமத்தித்துச்சிவனையன்று, நோக்கானகெந்தியுடனோக்கைக்காணநுட்பத்தில்நுட்பமுற்று துகரென்றுமே. (௫௬)

நுணுக்கானகெந்தியுடவடிகீழாச்சு நுகர்த்துநின்றமச்சினியாரடிமேலாச்சு, அணுக்கானதாளகத்தில்வீரங்கூட்டியணைத்துவையுபசரமுமிரும்பில்தோய்க்க, இணுக்கானவீயமுமாமீதெண்

ஞுதேயியமொன்றிங்கவர்கோடியியம்பமாட்டேன், துணுக்கான புனுகிட்டாற்சுன்னங்கோடி துலையானவுருக்கிமைமாஞ்சவாதுகூட்டே. (௫௭)

கூட்டப்பாதாளகத்தில்தங்கம்வீரங் கொண்டவிதையஞ்சுவகைக்குகையிலூத, வாட்டப்பாசொல்லுதற்குமுடிவுகாணேனாட்டெல்லாமுன்னாட்டுக்கதிகமாகும், பூட்டப்பாதுருசியின்மேல்வீரங்கூட்டிப்புகழானவஞ்சுவகைக்குகையிலூதி. மூட்டப்பாமால்தேவிகீழேயாச்சுமூதண்டத்துரிசியடி மேனுமாச்சே. (௫௮)

ஆச்சப்பாதுரிசியுடபோக்கைச்சொல்ல வரியரர்க்குமுடியாதுவடியேன்காணேன், போச்சப்பாவித்துருசுபறியில்வீழ்ந்தாற்பொற்சுன்னப்போக்கையந்தப்போதங்காணும், வீச்சப்பாபிற்கண்டந்தள்ளிகடையிட்டுவிளங்கியதோரடியெல்லாம் வெளியாய்ச்சொன்னேன், மூச்சப்பாஅந்திடத்திற்கொக்குமொக்கும்மூட்டியதோர்கம்வேகந்துருசுதானே. (௫௯)

தானென்றசவுக்காரச்சுன்னங்கேளு சாரமெல்லாங்கூட்டியொன்றாய்ப்பிற்கண்டத்துள், கானென்றசண்டிசுன்னம்படிக்கச்சுன்னங்கடுரவிக்குநோடுகிறபூரச்சுன்னம், வேனென்றதிதுமூன்றும்பலங்தான்மூன்று விளங்கியதில்ரெட்டிப்புச்சாரம்போட்டு, பானென்றேயனைக்கையிலேசெயநீராகும் பருவமுடன்செயநீரைப்பாங்காய்வாங்கே. (௬௰)

வாங்கியதோர்செயநீரில்வழலைதோய்த்து வாகாகக்கிழிகட்டிரவியிற்றாக்கு; ஓங்கியதோரெண்ணையெல்லாம்வடியும்பாராயுத்தமனேவடிந்தபின்புகட்டைவாங்கிப், பாங்கியதோர்கடற்குருவியிணங்கன்சீனம்பாங்கானபூநீருநகுதிரைபல்லுங், தாங்கியதோரதன்சாரம்பாங்கிபேழுனு சாதகமாய்ச்சுண்ணம்பாயூதிக்கொள்ளே. (௬௧)

ஊதியதோர்சுண்ணம்புவகையொன்றுக்கொன்றுத்தமனே பலமொன்றுயொன்றாய்க்கூட்டி, மாதியதோர்மலைக்குருவிவார்த்தேயாட்டிமகத்தானவழலையின்மேலப்பிப்போடு, ஆதியதோரவிபட்டேவேகடுங்காரமேறு மப்பனையிதன்மேலகமிங்காரமேற்று, ஓதியதோர்வழலைமுறைமறைப்பாய்ச்சொன்னே னுற்றறிந்தவழலைத்தேரோட்டுமேவாட்டே. (௬௨)

ஒட்டப்பாவழலையொக்கச்சாரம்போட்டே யொன்றாகமத்தித்துவீரஞுசேர்ந்து, மூட்டப்பாகல்லுப்புமேலேபூசிமுசியாமற்பு

டம்போடுவூசரத்தில்வைத்துக், காட்டப்பாமுழுக்கட்டாமிதைச் சுன்னமூதுகைமுறையாயிந்தெடைக்குப்பூரங்கூட்டி, யூட்டப்பா வெண்கருவாலரைத்துக்கட்டி யுத்தமனைகிளிஞ்சினீர்க்குள்வைத் தாட்டே. (௬௩)

வைத்தெரிக்கசுன்னமுமாம்பூரச்சுன்னம் வாங்கியிதைமால் தேவிமேலேபூசிக், கைத்தெரிக்கச்சுண்ணாம்பாமாலின்றேவிகை முறையாயிதைவாங்கிவங்கத்தப்பு, நைந்தெரிக்கப்புடம்போடுவெ ங்கச்சுன்னநாட்டியிதைநிமிளையின்மேலப்பியூது, மைத்தெரிக்க நிமிளைசுன்னம்வீரமிட்டாட்டி மகத்தானசாரத்திலப்பியூதே.

ஊதியதோர்சாரத்தில்வீரங்கூட்டி யுகந்துநின்றகண்டருக்கு ப்பூச்சுக்காணக், கோதியதோரிதையூதக்கண்டர்சுன்னங்கொள் கவிதைச்சூதமதுமணிபோலாகும், பேதியதோர்தங்கத்தைச்சு ண்ணாம்பாக்கும்பேச்சேதுவாதமெல்லாமுடிந்துபோச்சு, வாதிய தோராரென்றாலிம்மார்க்கங்கண்டோன மற்றவர்க்குவாதியென்ற நாமந்தள்ளே. (௬௫)

தன்ளியதோர்சவுக்காரச்சுன்னத்துக்குச் சாதகமாய்மறைத் துறைத்தசரக்குக்கெல்லா, மள்ளியதோர்கனிபோலக்காணவெ ன்றாலப்பனேசட்டைமுனிநிகண்டைப்பாரு, தெள்ளியதோரென் னாலினதுவொன்றேசிக்குச்செப்பினேன் மூல்குருசெப்பச்சொ ன்னார்; கள்ளியதோரொடித்துடனேபால்கண்டாற்போற்காப்பே டுங்காணும்பாரே. (௬௬)

பாரப்பாயெதனாலேவாதவாட்டு பராபரமாமுப்பாலேசூதத் தாலே, பாரப்பாவெதனாலேதங்கத்தாலேபறக்கிறதோர்குளிகை யென்னசாணையினாலே, பாரப்பாசத்தெல்லாங்கார்த்தாலேபருகிய தோர்செயநீரோசாரத்தாலே, பாரப்பாசுன்னமெல்லாம்வீரத்தா லேபருகிநின்றகுருவேது துருசுதானே. (௬௭)

துருசுவிட்டாற்சூதமென்றாற்கட்டாதப்பா துலங்கியதோர ருபத்துநாலுதாதும், உரிசையுருஞ்சாரம்விட்டாலொன்றுஞ்சா காவொழுக்கமுறுந்தசாண்டத்திலுண்மைகேளு, வெரிசியெனும் வீரம்விட்டாலொன்றும்நீறு விளங்கியதோர்காரம்விட்டாற்சத் தொன்றாகா. தரிசியதோர்தங்கம்விட்டால்வேதையாகா சாதன ங்காண்கண்டுகண்டுசோதிப்பீரே. (௬௮)

சாதிக்கிலிதுநாலும்நாலுவேதம் தப்பாதுதப்பாதுதாய்தான்சொன்னாள், வாதிக்குக்கருவிதுதான்மர்மமப்பா மகத்தானதுறைநாலும்வளமாய்ப்பாரு, வேதிக்கும்சவலோகங்கள்லுஞ்சொகல் விளங்கியதோர்மான்மதமும்வெருவப்பொன்னும், ஆதிக்குமனுதிக்குமிதுதான்மூல மம்மப்மாவென்னசொல்வேனறிந்துபாரே. (௬௯)

அறிந்துநான்முசம்பாருவாதசித்தி யறியாமற்சுடவேண்டாந்தீதாவமெத்த, மறிந்துநின்றுவாய்வாதங்கேட்டுச்சுட்டால் மாண்டபின்புநாய்ப்பிறப்பாய்மனிதன்போவான், நெறிந்துநின்றமாயிபதம்நித்தம்பூசி நினைவாலேயாதாரம்தேட்டிப்பாரு, தெறிந்துநின்றுல்வாதய்வந்துசித்தியாகும் தேசிகனுநன்னூலுந்தேடிக்காணே. (௭௰)

காணுநீமூலிகையினுனுசாதி கடுக்குண்ணவேரவையிற்கலங்குதப்பா, வாணுநீசதிர்க்கள்ளியெருக்குமூலம் வகையானநாயுருவிலவளமாம்நாலுந், தோணுநீயிவைநாலின் பெருமைசொல்லத்தொலையாதேகயென்னுலேதோற்றங்கேளு, ஆணுநீநாயுருவிச்சுட்டசாம்ப லபப்பனேயடித்தேயளவாய்வாங்கே. (௭௧)

நாயுருவிச்சாம்பலில் லிங்கங்கட்ட.

வாங்கியதோர்சாம்பலுக்குள்நீர்வார்க்க வழங்கியதோர்நாலுபத்துபடியேவாரு, தேங்கியதைக்கரைத்துவைத்துமூன்றும்நாளில் தெளிவிறுத்தேபகலவைத்துத்திறமாய்க்கேளு, ஓங்கியதோர்லிங்கமதுவராகன்பத்து ஒருகட்டியாயெடுத்துக்கயிற்றிற்கட்டி, பாங்கியிலைதப்பாண்டத்தில்டோலைவிட்டுப் பருகியந்தநீர்வார்த்துப்பாய்ச்சுதீயே. (௭௨)

தீயிட்டேயெரிக்கையிலேவற்றவற்றத் திறமாகவார்த்துவாயந்தநீரை, யாயிட்டநீரெல்லாம்வற்றிற்று லப்பனேகுழம்புபோலப்பால்வாங்கு, மாயிட்டபீங்கானில்வழித்துவைத்து மாட்டுபலங்காரமொன்றுசாரமொன்று, காயிட்டரவிபடவேகாயக்காயக் கனத்ததொருவுப்பாகுங்கருதிப்பாரே. (௭௩)

கருதியந்தடோலையிலேவெந்தலிங்கம் கைமுறையாய்க்காட்டுகிறவிபரங்கேளு, வருதியந்தவுசத்தோடேவீரம்பூரம் வலமானபுழுகுடனேரூறும்பினைந்தும், அருதியஞ்சவராகனைந்தேயப்பா

கேளு அதற்குள்ளே வெண்கண்டரெண்டுபோடு, பருகியந்தவா
றையுமேமத்தித்தொன்றாய்ப் பாய்ச்சிலிஙகமேற்பூட்டிப்பரிவாய்
வாட்டே. (௭௪)

வாட்டியபின்மேற்போடமருந்துகேளு வளமானநாறும்பூ
மாலின்றேவி, ஒட்டியபின்கண்டருடன்காரிநாலு மொவ்வொன்
றுவராகனென்றேயுணர்வாயப்பா, மூட்டியபினமூரிகொண்டுமே
லேபூசி முழங்கரவிப்படவுலர்த்திமுகிந்தபின்பு, நீட்டியபின்மேற்
பூசமருந்துகேளு நிலைபானகாரிசுத்தஞ்சாரந்தானே. (௭௫)

தானென்றமூன்றுமப்பாவமூரியாலே தானரைத்திட்டதன்
மேலேகவசம்போடு, வானென்றவுருவியுப்பில்வைத்துமூடி வகை
யாகவடுப்பேற்றிமாட்டுதீயைக், கானென்றகடிகையினாற்கடுந்தீக்
குள்ளே கைமுறையாய்நாலுபக்கங்கவசத்தோடே, தேனென்ற
நாற்புறமுந்தீத்தான்றுவத் திருப்பிவைத்துத்திருப்பிவைத்தே
யெரித்திடாயே. (௭௬)

எரித்தபின்புலிங்கத்தைவாங்கிப்பார்த்தாலேதுசொல்வேன
ம்மம்மாவிதுவேகட்டு, கரித்தவிந்த லிங்கத்தின்வேதைகேளுங்
காட்டுமுன்னேநவலோகங்கறுப்பாய்ப்போகும், பரித்தவிந்தலிங்
கத்தின்வேதைமார்க்கம் பாணிசொன்னாள்பரிமேலேபாச்சுபாச்
சு, அரித்தவிந்தப்பரிநொறுங்கும்வேதைமார்க்கம் ஆஆஆஆச்ச
ரியமறைகிறேனே. (௭௭)

அறைகிறேன்பரிரெண்டுலிங்கமொன்று அப்பனேயுருக்கவி
துபகண்டவேதை, துறைகிறேன்சுத்தித்தசெம்புசத்தில் சூட்டி
தொன்றுதொக்காகவேதைகேளு; குறைகிறேன்யிச்செம்புவெள்
ளீயத்திற் கொடுவொன்றுமாற்றேறூகொண்டுநிற்கு, மறைகிறே
நவலோகங்கறுத்ததானால் மாற்றேறுமென்றறியார்மாண்பர்தா
னே. (௭௮)

மாண்பரேகறுத்தெல்லாய்பொன்னேயாகு மகத்தானகுரு
பதத்தைவாங்கிக்கேளு, மாண்பரேவாதமென்றலெளிதோசொல்
லீர் வாய்வாதங்கேளாதேமயங்கிடாதே, மாண்பரேகுருபதத்தை
வணங்கிநாலு வகைவகையாய்க்குறைகேட்டுமனத்திற்கொள்ளு,
மாணபரேகுருவெடுநாள்மனத்தைக்காண்பார் மயக்கமற்றுப்பத
மேபாற்றிவணக்கஞ்செய்யே. (௭௯)

செய்தவிந்தமுறைமேபோலேவெள்ளைக்கட்டுரு சேர்ந்தபின்
கெவுரிகட்டுஞ்சேரக்கட்டும், கொய்தவிந்தக்கள்ளிக்குக்கிளைபோ
லப்பா கோடாணுகோடிதொழில்கூறமாட்டேன்; பைதவிந்தவி
ணங்கண்டுகெட்டையெல்லாம் பற்பங்கள்செந்தூரங்களங்கம்பாரு,
ஐதவிந்தனவமார்க்கமாடுப்வேதை அரகராவாச்சரியமறிந்திடா
யே. (௮௰)

அறிந்திட்டசித்திபமாமூலஞ்சுட்டே யப்பனேபடிபத்தைப
டைவாய்வாங்கி, மறிந்திட்டவழுரிபடிநாற்பதப்பா வளமாகவார்
த்துநன்றாய்வைத்தேதநீயும், பிறிந்திட்டமூன்றுநாள்வடித்துக்கொ
ண்டு பேரானபாண்டத்திலதெளிவைவார்த்து, நறிந்திட்டலிங்க
மொட்டிகவுரிவெள்ளை நடுங்காதநாகமொடுகெந்தியஞ்சே. (௮௧)

அஞ்சையுமேமேடோரைபோற்கட்டிவிட்டு அடவாகநீர்வார்த்
தேபடுப்பிலேலேற்றிக், கஞ்சையுமேநியெரித்துவார்த்துவாநீ கந்தி
யெல்லாங்குழப்பானகணிசம்பார்த்து, மிஞ்சையுமேசாரமொடுகா
ரம்ரெண்டும்வெவ்வேறுபலமொன்றுவிரவிப்போடு, பஞ்சையுமே
பண்ணையொருபலமும்போட்டுப் பாங்காகக்கிண்டிப்பீங்கானில்
வாரே. (௮௨)

வார்த்துநீரவிபடவேவைத்தாயானால் மகத்தானஅமுரியுப்பு
வாப்பேசாதே, போர்த்துநீயிந்தவுப்பைநாதத்துள்ளே போட்டு
வைத்தாற்சலமாகும்போக்கோமெத்த, கோர்த்துநீயிந்நீரைத்து
ருசிமேலே குமட்டுகெற்குமருந்துசொல்லேன்குறிப்பாய்க்கேளு,
சூர்த்துநீபற்றெனதுவுந்துருசிபூர லறுக்காதுபாருபாரப்பாநீயே.

அப்பாகேள்குருவண்டுவீரம்பூர மடவாம்பூரத்தோடுருதம்
நாபி, ஒப்பாகவகையொன்றுவராகனொன்று ஒருகட்டிதுருசிய
துவராகனஞ்சு, செப்பாதேயொருவருடன்விரைந்துகட்டி சிவகா
மிக்குாய்பதத்தைச்சிறந்துபூசி, கொப்பாகத்துருசியின்மேற்பூசிப்
பூசிக்கொடுரவியிற்போட்டுநித்தங்கொள்ளுவாயே. (௮௪)

சிலாசத்துப் பற்பம்.

கொள்ளுவதோர் துருசியதுமூன்றுநாளிற் கொடுஞ்சீலைசுற்று
தற்குக்குறிப்பைக்கேளு, நள்ளுவதோர்சிலாசத்துச்சுண்ணம்பண்
ணநாடறிந்தவெண்காரமூன்றுங்கூட்டித், தெள்ளுவகாரரைத்
துநன்றாய்ச்சீலைக்கப்பிச் சிறக்கவந்தத்துருசியின்மேற்சீராய்க்கட்

டி, வள்ளுவமேதோர்வங்கம்நின்றேயுருக்கும்போது வாகாகத்து வைத்துவரும்வரிசைகேளே. (௮௫)

வரிசைதான்பதினொன்றுதுவைப்பதப்பா மகத்தானதுருசுக்குச்சுறுக்கேயேறுங், கரிசைதானீயத்திற்றுவைக்காவிட்டாற் களிம்பாறுவிரும்பிவிட்டுத்தண்ணீர்வாரு, பரிசைதான்செய்போடிப்படரும்பாரு பாஷாணசெம்பாலேவாதிகெட்டார், உரிசைதான் செம்பறுக்கவீயம்ராசா வொடுங்குமூவாயிரத்திலுண்மைதானே.

உண்மையப்பாவீயமதுசெம்பைக்கொல்ல வேகோகோகாவுரையாதேயுண்மையுண்மை, வண்மையப்பாதுருசினைநீகையிலிட்டு வாருசலங்கொப்பளிக்குமகத்தாம்வேகந், தண்மையப்பாவிச்சுன்னஞ்சாதிப்போர்க்குத் தப்பாதுசூதமென்றவாணைசாகும்; அண்மையப்பாபாஷாணந்தொட்டாற்கட்டு மாடலாம்வெகுவேகை யாடிப்பாரே. (௮௭)

பாருநீஅமுரியுடமார்க்கமெல்லாம் பராபரமாம்நந்திசொல்லமூலநாயன், சேருயிந்தவுடற்கூறிற்றெண்ணூற்றாறுஞ் செப்பினாதிமுதல்திநவைக்கேட்டு, ஒருயிந்தமந்திரத்தாலிருண்டகாடு வோகோகோவென்றுலுங்கூவல்கேளா, யாருயிந்தக்கட்டாயக்கட்டினார்களாண்மையென்னநூலின்மறையாகாதென்னே. (௮௮)

மறைப்பாமோஅகண்டத்திற்போதமூர்த்தி மருவியதோருலகத்தோர்வைவாரையோ, வுறைப்பாகவொருசொல்லிலோங்கினாற்போ லுலகமெல்லாம்பிழைப்பதற்குளுங்காமேதனே, நிறைப்பாகமுடிவைத்தீர்நீக்கப்போகா நீக்கவென்றசட்டைமுனிநிலையுங்காணார், கறைப்பாமோகாட்டில்வைத்ததனம்போலாச்சு சலந்திந்தநூலுடையகாப்புத்தானே. (௮௯)

தானென்றியான்சொல்லக்கோபம்வேண்டாஞ் சச்சிதானந்தத்திற்சார்ந்தபாட்டா, வானென்றுபார்த்தாலுமாயையில்லை மகத்தானபுத்தியிலேகளங்கேணையா, ஏனென்றமேவமூலட்சமொன்றாய்ச்சொன்னீ ரென்னசொல்வேனிசைந்தமுறைநன்றாச்சையா, பானென்றேயுண்டமத்தால்வெளியாய்ச்சொன்னீர் பார்ப்பவர்க்குநல்லதொன்றுபாடினீரே. (௯௦)

பாடினதோராயிரத்தாற்சித்தர்தோற்றார் பலநூலைபார்பார்ப்பார்பார்த்துங்கிட்டார். கூடினதோர்நந்திசொன்னகுழிநன்றாச்சு குறைபாதபூரணமேநிர்க்குணமேமையா, ஆடினதோரகண்ட

த்திற்கபடேயானு லாகாகாவாச்சரியமொன்றுகேளுங், தேடின தோரிந்நூலிற்சிதலேயானாற் சிமெயன்பார்சித்தரென்றுசெப்பி னேனே. (௯௧)

செப்பினதோர்சிகாரமதுநெருப்பாறப்பா சேர்ந்துநின்றவு காரமதுமயிர்ப்பாலந்தான், ஒப்பினதோரிரண்டும்விட்டாலொன் றுமொன்று மோகோகோசிகாரத்தையொழிக்கநல்லு, தப்பின தோரோகாரம்வந்தால்வசரமுந்துஞ் சாருனைக்குபிதுரெண்டுந் ள்ளநன்று, அப்பினதோரிரண்டொழிந்தாற்சா தியாவா ருக் குமாகாதீதறிந்துகாணே. (௯௨)

காணென்றசிகாரத்தாற்கோபமெய்துங் கைவிட்டவாணவத் தாலொகாரந்தாக்கும், பேணென்றயிதுரெண்டும்பெரியோர்க்கை யா பிறப்பதற்குமிறப்பதற்கும்பெரியவித்து' வேணென்றவொ காரமதேயுடலேயாச்சு விளங்கியதோர்சிகாரமதுவிரைந்துபுக்கி ல், தோணென்றபிறப்பிறப்பிரண்டுமாச்சு சோத்தியங்காணுச்சு ரியஞ்சூட்டிப்பாரே. (௯௩)

பாரென்றுரெனையாண்டபோகநாதர் பக்குவத்திலெனைபழை த்துப்பரிந்துசொன்னார், காரென்றார்வாசனையைப்பூரணத்திற்சே ரக் கண்ணிமைக்குள்வாயில்வந்துகவரும்ரெண்டும்; வேரென்றார் பிறந்திறந்தவித்திதென்றார் வேதாந்தமௌனத்தை விடாதேயெ ன்றார். ஆரென்றாரிதுரெண்டாற்பிறப்பாய்போல ஆஆஆதுருசுக ண்டாற்பொன்னுமாமே. (௯௪)

பொன்னாகலோகங்கள்பிறக்கவென்றால் போக்கோடேதுரு சுக்குள்செம்பைக்கேல்லு, மன்னாகச்செம்புள்ளே மாளாவிட்டா ல் வாதமொன்றுங்காணாதுமார்க்கம்பொய்யாம், பன்னாகநூல்பா ருவங்கம்பாரு பருகவதில்தோய்த்தெடுக்கப்பதத்தைப்பாரு, தெ ன்னனரவிபடவேவெளுப்பாச்சென்று சேர்ந்துமெச்சியுணராதே தெளிந்துபாரே. (௯௫)

பாரப்பாசெம்பினுடவூறல்போகப் பருங்கழுதைமூத்திரந் தான்படியேநாலு, வாரப்பாபாண்டத்துக்குள்ளேவிட்டு மாட் டிப்படிபிரண்டதனையுவர்மண்ணைத்தான், தாரப்பாவரைத்திறுத்து க்கொண்டுவைத்துத் தாளிக்குள்சுண்ணாம்புகரைத்துக்கொண்டு, கோரப்பாசாரமதுபலமும்ரெண்டு குழப்பியேசுண்ணாம்பு ரெண்டு போடே. (௯௬)

போட்டொன்றாய்க்குழப்பாகவைத்துக்கொண்டு புகழான
செம்புபலம்காலுவாங்கி, ஆட்டொன்றாயுருக்கியதிற் சாய்த்துவா
று அப்பனைபதினைந்துமதிகம்வேண்டாம். நீட்டொன்றாய்செம்பி
னுடவூறல்போடு நிலைத்தபின்புயிச்செம்பைக்குகையில்வைத்துப்
பூட்டொன்றாயண்டமொன்றுசாரமொன்று புகழாகப்பாகம்ரெண்
டுபொரிகாரங்காலே. (௯௭)

காலேலாடுசெவ்விரப்பலமுநீதான் கலந்தரைத்தேயொன்றாகக்
கடுகித்தூவு; மேயாலேலாடுசெம்புருகியா நிம்போது இருமாகக்கொ
டுத்தேறுமிம்முறையேயமுக்கால், மாலேலாடுசெம்பினுடவூறல்போ
கும் வர்ணங்கள்வெளுப்பாகும்வாதிகாணே, சேலேலாடுமிச்செம்
பைவெள்ளிபத்தில் சேர்த்திடவேமாற்றஞ்சுதிரமுமாமே. (௯௮)

திரமானசெம்பொன்றுவெள்ளிபத்திற் சேர்த்துருக்கிச்செய
லிங்கங்குன்றிபோடு. அரமானதங்கமொருபணமேபோடு அப்ப
னேதசமாற்றுமறிந்துகொள்ளு, நிரமானசெம்பினுடவூறல்போக்
க நின்றிலைவார்வாதிகள்தான் நினைவுகெட்டுத், துரைமானமாவதெ
ல்லாந்தெரியச்சொன்னேன் சூட்சமிதுகண்டுதொண்டு துறையை
ப்பாரே. (௯௯)

துறையாகவேதையிடுதுறைகள்தோறும் சுத்தித்தசெம்பை
யிடுசுழல வேண்டாம், கறையாகப்படுசெம்பைப்போட்டாயானாற்
காரியம்போட்டேதக்கமுன்றுபோகும், நிறையாகச்சுத்தித்தசெம்
பேயானால் நிலைநிற்குமுப்புக்குநினைவாய்ப்பாரு, மறையானஅந்த
த்தின்மாயிசொல்ல மார்க்கமெல்லாம் பார்த்தறிந்து மகிழ்ந்திட்
டேனே. (௧00)

மகிழ்ந்திட்டமூலத்தினமுரிக்குள்ளே வைத்தெரித்தபஞ்சன
த்தின்வளமைகேளு, மகிழ்ந்திட்டலிங்கமதுபலத்தின்மேலே மா
ட்டிதற்குமருந்துசொல்வேன்வர்மங்கேளு, மகிழ்ந்திட்டசெந்தி
யொடுமாலின்தேவி மகத்தானதுருசுவெள்ளைவீரம்பூரம், மகிழ்ந்
திட்டகுரும்பியொடுகோரசாரம் வகையொன்றுவராகனரை வளமா
ய்க்கூட்டே. (௧0௧)

கூட்டியிதையிதற்குள்ளேபுனுகுஒன்று குறையாமலரைத்து
நன்றாய்க்குழப்பிக்கொண்டு, மாட்டியிதைலிங்கத்தின்மேலேபூசி
வளமாகவாட்டிவிடவைக்காய்காய, ஓட்டியிதையுறுஞ்சியெல்லா
முண்டபின்பு வுக்கமனேசமூரியுப்பைக்கீழ்மேலிட்டு, நாட்டியி

தைக்கடிகையினாலடுப்பிலேற்றி நலம்பெறவேயெரித்தபின்புநன்மைபாரே. (௧0௨)

நன்மையொத்துலிங்கமதுகட்டிற்றென்று னாட்டோர்களறியார்கணான்றான்சொல்வேன், வன்மையொத்து வரிசையெல்லாமொன்றாய்க்கூடி மணிபோலச்சுருங்கிநிற்குமுருக்குப்போல, யுன்மையொத்துயான்சொன்னேனுரைத்துப்பாரீ ரூரிலுள்ளவாதிகளேயோகோகேளீர், சென்மையொத்துச்சுரிக்கமில்லைசிவப்புப்போகா திரண்டுருண்டுசுருங்காதுதிரமாய்க்காணே. (௧0௩)

காணிந்தவமுரியுப்புலிங்கத்தாலே கலங்காதேவெள்ளைகட்டும்நாகங்கட்டும், பூணிந்தகெவுரிகட்டுங்கெந்திகட்டும் போக்கோடேதிதைப்போலேயெல்லாங்கட்டுந், தோணிங்கப்பாஷாணமறுபத்துநாலுந் துலக்குமுறவெல்லாம்சாம் சொன்னேன்சொன்னேன், வாணிந்திசொன்னமுறையாலும்பார்த்து வகையெல்லாமொளிக்காமற்பாடினேனே. (௧0௪)

பாடினேன்மூலகுருபதமேபோற்றி பாடறியாப்பிள்ளையொன்றுபாட்டர்சொன்னார், ஆடினேன்பூரணத்தில்ஆஆஆஆ்அண்டமெல்லாம்வெட்டவெளியம்மாவம்மா, தேடினேன்கரைகாணேன்கிந்தைகூர்ந்தேன் சேருமுன்னேதோன்றுதையோ செகத்தோர்காணார், கூடினேனெட்டைவிட்டுநாவினுள்ளே கொள்ளையோகொள்ளையிதுஞானந்தானே. (௧0௫)

கொள்ளையென்றுஞானத்திற்கூடிகூடு கூகூகூதூரமல்லகுறிப்பாம்நாலும், சள்ளையென்றேயென்னாளும்வாழ்வாயப்பா தப்பாதுநாலைப்பார்சரமொட்டாது, விள்ளையென்றகண்டத்தில் மனத்தைவைத்து வெளியிலேயோடுறதைவிரைந்துபாரு, அள்ளையென்றகைக்கனிபோனாலுந்தோன்று மதற்கடுக்கமணித்தாயுமழைப்பாள்பாரே. (௧0௬)

அழைத்துமைந்தாவாழ்ந்தாயோவென்பாள்தாயு மதுகடந்தாலகண்டவெளிபாருமில்லை, பிழைக்குலகில்வாழ்ந்ததெல்லாம்பேணிப்பாரு பேய்க்கூத்தமாமணக்கும்பெரியமாயைக், கழைத்துவந்தபசியாலேசமாதியோடாக் கைவந்தலட்சியமுங்கழன்றுபோகும், இழைத்திகற்குள்மாளாதேதாருசுபாரு யேறலுமாமாடலுமாமிதுதானன்றே. (௧0௭)

துருசு வங்கத்தில்சுத்தி.

நன்றான துருசினைநீவாங்குமுன்னே நலம்பெறவேவங்கத்தி லழுத்தியஞ்சு, ஒன்றானபிறகிதுமேல்மித்திரத்தைப்பூசி ஓகோ கோவுள்புகுந்துமிறுகுப்பாரு, கன்றானதுருசியிதுவெல்லாங்கட்டு ங் கைமுறைதானேதப்பாகண்டுபாரு, வன்றானதும்பைபார்தாய்க் குச்சொன்னார்வகைபோடேயான்பார்த்தவழக்கந்தேளே.(க0அ)

கேளுநீகட்டுண்ணுக்குதிரைக்கத்தங் கெடியாகப்படியொ ன்றேயளந்துவாங்கு, காளுநீதுருசிபொருபலந்தான்றாக்கு தனி ச்சூடன்பலங்கால்தானதன்மேலப்பு, ஆளுநீயரைப்படிவூஷறங்கி ழிட்டு அதன்மேலேதுருசினைத்தேயப்பால்கேளு, வாளுநீயரை ப்படிவூஷரமேற்போட்டு வளமாகஅழுத்திமுனதத்தம்வாரே. ()

வார்த்தந்தக்கலசத்தைவாலுகையில்வைத்து வகையாகவ றுசாமத்தியைமூட்டு; போர்த்தந்தக்குழம்புவற்றிப்புட்டுகொண் டாற் புகழானதுருசிகட்டியூறல்போச்சு, யோத்தெந்தத்துருசி வெள்ளையிரும்புபோலா மென்னசொல்வேனிதுவிட்டாலேதுவா தம், சார்த்தந்தப்பூனையைப்போலெல்லாம்போகும் கைமுறை யாய்த்துருசிவெள்ளைகடுகிப்பாரே. (கக0)

பாரிந்தத்துருசியின்மேன்மருந்துபூசப் பதறுதேசொல்லுகி றேன்பாங்காய்க்கேளு, வாரிந்தச்சூதபொடிவீரம்பூரம் வளமான புனுகோடேயுரமுங்கூட்டு, சேரிந்தகுருவண்நிரைபியோடேசிறக் க வொவ்வொன்றணுசுபணந்திறமாய்த்தூக்கு, காரிந்தவெண்கரு வாலரைத்துப்பூசிக் கலங்காதேரவியில்வைத்துக்கருத்தைப்பா ரே. (ககக)

கருத்தைகபொன்றிவாசியிலேபூட்டிபூட்டிக் கலங்காதேநின் றுநின்றுகருதிப்பாரு, வருத்தைதயிலேவாதப்வந்துவாயைப்போத் வந்தேனுன்வேலையுண்டோவென்றுகேட்டும், யிருத்தைதயிலேவா தம்வந்தாவிருநீயென்றே பெளிதாகப்புசிப்பதற்கே யெடுத்துக் கொண்டு, பொருத்தைதயிலேலசூதத்சுதக்கட்டித்தாண்டு பொல் லாதார்லோகத்தார்பொல்லார்தானே. (ககஉ)

பொல்லாதலோகத்தார்புலையரென்று பேய்க்கோடேநித்தரு டபோக்கிற்செல்லு, பல்லாதகாயசித்திமணியில்லாட்டால் மாள வொட்டார்வேலைகொள்வார் மார்க்கஞ்சொல்வார், வல்லாதவே தாந்தமார்க்கம்பாரு வந்துசிக்கும்வாதமப்பா வாய்க்குஞ்சொன்

னேன், கல்லாதமூடரென்றுலென்னூலைப்பாரு கடுகிநுழைந்தார
ந்திங்கடந்துபாரே. (ககந)

கடந்துநின்றபெருக்கம்பால் படியேவாங்கிக் கைவிட்டவெ
ண்கண்டாவராகன்போடு. வுடந்துநின்றகாரமொன்றுசாரமொன்
று ஒவ்வொருகாசெடைதானு முகந்துபோடு, படர்ந்துநின்றபா
லெல்லாம்சலமேயாகும படுமுன்னேசூதத்தைப்பதைக்கக்கொல்
லும், அடர்ந்துநின்றபாஷாணந்துவைத்துவாட்டு மாணுகும்பெ
ண்ணுகுமனைத்துமாமே. (ககச)

ஆமிந்தத்துருசியொன்றுசொல்லக்கேளு ஆஆஆஇதன்சுறுக்
கையானுங்காணுர், வாமிந்தவங்கத்தைத்தகடுபோட்டு வளமாக
க்கத்திரித்துப்பலமேயொன்று, வேமிந்தவீரங்காற் பலமேபூசு
வேறல்லவுமுரியால்விரவிப்பூசு, காமிந்தவரசுடைய பட்டைவாங்
கிக் கலக்கியினைதப்பரப்பிக்கீழ்மேலுமூட்டை. (ககரு)

மூட்டியந்தாராமேல சுற்றிக்கட்டி முழுங்கவொருசீலைமண்
தான் முனையப்பண்ணிக், காட்டியந்தக்கனபுடந்தான் போட்டா
யானுற் கண்காணநெற்பொரிபோறகாணும்பாரு, வூட்டியந்தவங்
கந்தான்சுன்னமாச்சு ஒருவருக்குஞ்சொல்லாதேபூறல்போக்கும்,
ஆட்டியற்றுயேங்கிநின்ற வாதிகாளே யறிந்துகொள்ளுந்துருசு
கொல்லுமம்பிதாமே. (ககசு)

அம்பென்றவங்கத்தி னுண்மைகேளு அடவானதுருசுபல
மொன்றுவாங்கிச், சொம்பென்றவஙகநீர்வராகனென்று சுகமான
வீரமொருவராகன்கூட்டி; கம்பென்றயண்டமுன்னீர் வார்த்தரை
த்துக் கடுகியந்தத்துருசெல்லாங்கலரப்பூசிக், கொம்பென்றாவியி
ல்வைப்பாய்தினந்தான்மூன்று கொடியவெண்மையாவதற்குக் கூ
றக்கேளே. (ககஎ)

கேளுநீவூஷாந்தான்படியதொன்று கெடியானகலயத்திற்பா
திவைத்து, ஆளுநீயதன்மேலேதுரிசிவைத்தே யதன்மேலேபா)
திவைத்தேயமுக்திநன்றாய், வேளுநீகட்டண்ணுத்தேசிசத்தம் வி
ரைந்துவார்படியொன்றுவேறொன்றில்லை தாளுநீயடுப்பேற்றித்
தீபம்போலச் சமத்துவாயுதிருமட்டுஞ்சமத்துவாயே. (ககஅ)

சமைத்தபதம்பொடிபோலேவுஷாமுமாளுல் தன்பதத்திலிற
க்கிவைத்துர்சாங்கமாக, அமைத்தகண்டெடுத்துப்பாராஆவெ

ள்ளை யதன்மேலேபூசுதற்குமருந்துகேளாய், உமைத்துவரங்குரு வண்டுவீரம்பூரமூரவானசூதமொடுநாபிகேளு, இமைத்தெடுத்த குக்குடவெண்மலரும்போடு யிதுவெல்லாமொன்றஞ்சு பணமுந் தூக்கே. (கககூ)

தூக்கியெல்லாம்பொடியாக்கிவைத்துக்கொண்டு தூசானபு மூகரைதான்கூடப்போட்டுக், தாக்கியெல்லாங்குக்குடத்திற் பிச் சைவார்த்துச் சமரசமாயரைத்தெடுத்துத்தனியேவைத்து; தேக் கியதோர்நாதத்தைமூறித்துநீராய்ச் சிறந்தவிந்தநீர்வாருமருந்தி லப்பா, பாக்கியமாந்துருசியின்மேலிதனைப்பூசிப் பதருதேரவியி ல்வைத்துப்பாருபாரே. (கஉ0)

பாருநீதினமேழுந்தீர்ந்தபின்பு பரவியொருசுண்ணம்பு சீலை செய்து, காருநீசிலாசத்துச்சுன்னமேலே காணவொருசீல்சுற்றி க்கனக்கக்கட்டு, தாருநீவங்கமதுவுருகும்போது தனிமுக்கால்து வைத்தெடுத்துத்தானேபாரு, வேருநீயுட்புகுந்த செம்புசாகும் வேறில்லையிதன்மேலேவிளம்பினேனே. (கஉக)

விளம்பினதோர்மார்க்கத்தைவிட்டாயானால் வேருச்சுசெம் பப்பாவேதையோடே, அளம்பினதோர்வங்கமதுபோச்சேயானா லாகாகாவாதமெல்லாமண்ணாய்ப்போச்சு, யுளம்பினதோர்வாதிக ளேயுற்றுப்பாரு முத்தமமாம்வாதத்தில்வங்கம்ராசா, தளம்புற தேன்தவிக்கிறதே னென்னூல்பாருஞ் சாங்கமாய்ப்பாடிவிட்டே ன்தவறிடாதே. (கஉஉ)

தவறுதநூலறியார்குருவுங்காணார் தனித்தனியேவெவ்வே றாய்த்துருசுதன்னை, விவருதேயொன்றுக்கொன்று சாவிக்கொண் டே யொருவன்பேச்சொருவனங்கேயுற்றுக்கேட்டுக், கவறுதநா ய்தேங்காய்கவ்விறைபோற் கடுந்துருசுவெளுத்ததென்பார் கண் டேனென்பார். அவருதேதள்ளிவிடப்பசத்தாலே யையையோ வென்றியான்மறந்திட்டேனே. (கஉ௩

மறந்திட்டோமின்னொருக்கால் வைப்போமென்பார் வகை யாகப்பின்னொருக்கால்வைத்துப்பார்ப்பார், திறந்திட்டந்தப்பிப் போச்சாகுதென்பார் செகத்திலேவாதமுண்டோ காணேனென் பார். அறந்திட்டமவர்போட்டார்வேதையென்பா ராமாமாநான் கண்டேனென்பார்பாரு, பிறந்திட்டதொழின்முறையைக் காணு மென்பர் பேருனதுருசியுடயோர்காணுரே. (கஉச)

காணுந்துரிசியென்னகருதிப்பாரு கயிலையுள்ளோன்செம்ப ச்சுகடிநதவுப்பு, தோணுதசத்தியப்பாதயிரோபால்தான் தொலை ப்பானகத்தமதுபிரமணுச்சு, வேணுதம்பழச்சாறுமயேசனுச்சு வி ரைந்தகுழிச்சதாசிவன்றன்விரைந்துபாரு, ஆணுகவாறுமொன் றுய்ச்சேர்ந்துநின்றே யகண்டம்போல்மனோன்மணிதானுனுள்பா ரே. (கஉரு)

பாரிந்தச்செம்பற்றுவெள்ளையானுற் பணபேதிசினபேதிசத் தபேதி, வாரிந்தத்தீபமொடுதூமபேதி வகையானதரிசனத்திற பரிசபேதி, சேரிந்துலேபனத்திற்சந்தானபேதி தெவிட்டாதரு ளிகையுமாந்திரமாய்ப்பாரு, ஆரிந்தத்துரிசியுட ஆறல்காணபா ராகாகாவென்னூலையறிந்துபாரே. (கஉசு)

அறிந்துநீவாதத்தைப்பார்க்கவென்று லப்பாகேளுண்மையு னக்கறிவிப்பேனுன், பிறிந்துயொன்றையெடுத்தெடுத்துப் பார்க் கவேண்டாம் பேரானதுரிசியிலேநுழைந்துபாரு, மறிந்துயிங்கத் துருசுவிட்டால்வாதம்போச்சு மகத்தானமனதுவிட்டால் ஞானம் போச்சு; கறிந்துநின்றுசூதம்விட்டால்வர்னம்போச்சு கைமுறை யாய்த்தங்கம்விட்டாற்புடமும்போச்சே. (கஉஎ)

போச்சென்றதேதெனவுந்தாயைக்கேட்கப் புகழானதுருசிய ப்பாவேலைப்பாரு; ஆச்சென்றநிதிகளெல்லாமதிலேகூடு மப்படி தான்மனந்தீயும்பிரமத்தேறும், ஓச்சென்றதுருசிவிட்டால்வாதம் போச்சு ஓகோகோமனதுவிட்டால்ஞானம்போச்சு, வாச்சென்ற பிதுரெண்டுஞ்சமானஞ்சொன்னேன் வாதிகளேபிறப்பில்லைமணி யைப்பாரே. (கஉஅ)

மணியானதாயைப்பார்வாவாவென்பான் வரிசையுடனுதார ந்துருசியாச்சு, கணியானவகண்டத்தேயேறுயேறு கண்டுகண்டு யாதாரங்கடந்தபின்பு, பணியானபூசையங்கேமந்திரமங்கே ப ரமல்லால்தெய்வமினிவேறேயில்லை, தணியானவாதத்தில்பரன்று னப்பா சாற்றினேன்துருசுகண்டுசாற்றினேனே. (கஉகூ)

லிங்கமெழுக்கு

சாற்றினேன்கள்ளிப்பால்படியொன்றப்பா தனைவாங்கித்து ருசியொருவராகன்போடு, மாற்றினேன்கடிகையொருநாளுக்குள் ளே மகத்தானஜலமாகு மாயிசொன்னுள், ஆற்றினேனதெளி வைவடித்துக்கொண்டே யதற்குள்ளேநாலுபலலிகப்போட்டுப்

போற்றினேன்சாரியொன்றுகாரியொன்று போட்டிலேதான்பலம் ரெண்டுபொடித்துப்போடே. (௧௬௦)

பொடித்துப்போடிலிங்கத்தைச்சும்மாவல்ல போக்கோடே கிண்டியதையடுப்பிலேற்றித், தடுத்துத்தீயெரியாதே மெள்ளமாட்டு தண்ணியெல்லாஃவற்றியதுமெழுகுமாகும், பிடித்துப்பார் மெழுகானபதத்திலப்பா பேருகவெடுத்துவைத்துப் பிறகுநீயும், மடித்துநிறைதங்கத்தைநாலுக்கொன்று மாட்டியதைப்பிசைந்து வைத்துமார்க்கங்கேளே. (௧௬௧)

கேளுநீகுடவனிலே நூற்றுக்கொன்று கெடியானசெம்பதிலேமுப்பதுக்கொன்று, நாளுநீவெள்ளியிலே நாற்பதுக்கொன்று நவலோகங்கண்டுகண்டுநவட்டிப்பாரு, வாளுநீதிசைமாற்றுவளமாய்க்காணு மகத்தானலிங்கத்தின்மார்க்கமப்பா, ஆளுநீபராபரையைபூசைபண்ணவனைத்துமாமவளைவிட்டாலனைத்தும்போமே. (௧௬௩)

போகாதுமாயிபதம்பூசைபண்ணு போக்கோடேயிப்படியே வீரம்பண்ணு, போகாதுபாஷாணமெல்லாந்தானும் புகழ்பாவில் மெழுகாகும்போக்கோமெத்த, போகாதுயிர்தப்பால்சூதங்கட்டும் பொலிவானசாரணைக்குமெத்தநன்று, போகாதுறைக்கெல்லாம்பொன்னைகக்கூட்டுபொன்போட்டிற்பொன்னையும்புகுந்துபாரே. (௧௬௪)

பாருநீபொன்னதுவும்புடத்துக்கேறும் பாச்சியதோர்சூதத்தால்வர்ணமேறும், தாருநீகெந்தகத்தால்ரசத்தைக்கட்டும் சாரகாரப்பெருமைசகலங்கட்டும், கோருநீயுபரசங்கள் தூரவோடும் கொண்டதோரஞ்சினுடகுறிப்பைப்பாரு, ஆறுநீயெனைப்போலே சொல்லப்போறு ரஞ்சாதேவாதத்தின்பூதமஞ்சே, (௧௬௪)

அஞ்சாவதேதென்றேயழுத்திப்பாருமதற்கதற்காமினச்சேர்வையறிந்துபாரு, அஞ்சானபூதத்தையணைந்துநோக்கு அதற்குள்ளவுற்பனத்தையறிந்துகொள்ளு, அஞ்சாலேயண்டபிண்டமீசனப்பா வதற்குள்ளேரெண்டெழுத்துவாசியாச்சு, அஞ்சானபொருளறிந்தால்வாதியாவா னறியாட்டாற்கழுதையவனறிந்துகொள்ளே. (௧௬௫)

அறிந்துகொள்ளுபொன்னதுவும்பூமியாச்சு அப்பனேபுனலதுதான்காரசாரம், பிறிந்துநின்றவுபரசங்கள்வாயுவாச்சு பேருனகெந்தகமோபெருந்தியாச்சு, யெறிந்துநின்றவாகாசஞ்சூதமாச்

சு யிதுவஞ்சுமைம்பூதமியம்பினேனுன், செறிந்தறிந்தாலவன்வா திசித்தனுவான் செப்பினேனுண்மையிதுதெரிந்துகொள்ளே. ()

பலசித்தர் பாடிய நூல்கள்·

தெரிந்துசொன்னேனிந் நூலில்தெரியாதார்க்குத் தெரியா தேமூலகுருதிரமாய்ச்சொன்னுர், பரிந்துநன்றுய்கோரக்கர்வெ ண்பாகசொன்னுர் பார்த்தறியும்பொருளார்க்கும்பயன்படாது, அ ரிந்துநின்றமச்சமுனிகலிப்பாச்சொன்னு ராகாகாவெகுகரடுஅறிந் தாற்சுகதி, பிரிந்துநின்றஅகத்தியமுனிவிருத்தஞ்சொன்னுர் பெ ருங்கரடுபெருங்கரடுபேசொணுதே. (கருஎ)

பேசாதசட்டைமுனிதாழிசைப்பாச்சொன்னுர் பிறந்தபிள் ளையுரைகாணும்பெருமைநன்று, வாசாதவேமனார்தான் வடுகிற் சொன்னுர் வார்த்தைக்குவுரைகாண்வருத்தமப்பா, தாசாத்சங்க ரமாமுனியேகிரந்தந் தலைகெட்டநூலதுதான்தானேபாரு, ஓசாத சித்தர்கள்தான்மெத்தச்சொன்னுர் ஒருநாளுந்தெளிவில்லை காடு காடே. (கருஅ)

காடாகப்போகாமற்பதஞ்சலிமாமூர்த்தி கைமுறையாய்க்க லித்துறையைவிரித்துச்சொன்னுர், தேடாமற்காசிபர்தான் வண் ணஞ்சொன்னுர் சிவயோகமாமுனிவர்குறட்பாச்சொன்னுர், நா டாதகொவைமர்தான்சந்தப்பாச்சொன்னுர் நலமானசிவவாக்கியர் நெட்டுப்பாச்சொன்னா, ஓடாதநந்திகள்தான்சந்தஞ்சொன்னு ரு த்தமனேகடிதமெத்தகாடுகாடே. (கருகூ)

வேறு.

காடான நூல்களெல்லாங் கண்ணாடிபோலேகாணத், தேடா னமூலத்தூன்றிச் சிக்கெனவுரைத்துபாரு, தாடானநந்திவந்து த ன்னுக்குளுரையைச்சொல்வார், ஆடானமூலந்தொட்டே யாதார லேறிப்பாரே. (கசo)

ஏறியேபார்க்கிலப்பா வின்னுமோர்துருசுசொல்வேன், தே றியேவூஷரத்தைச் சிறக்கவேலரைத்துக்கொண்டு, மாறியேதெ ளிவைவாங்கி மருவிடுகல்லுச்சுன்னம், ஆறியேமறுநாளப்பா வதி னுடதெளிவைவாங்கே. (கசக)

வாங்கியேதெளிவுக்குள்ளே மாட்டுறசுன்னங்கேளு, ஓங்கி யேமுட்டைநண்டு வூமச்சிகிளிஞசில்சங்கு, தாங்கிநாகரமாம்வண்

ழி தனிமலஞ்சுட்டசாம்பல், பாங்கியேமனுஷனஸ்தி பாவெல்லாஞ் சுன்னமாக்கே. (கசஉ)

ஆக்கியசுன்னமெட்டு மதிவதுபலந்தான்பத்து, போக்கிய தெர்கைதானப்பா புகழ்பலமெண்பதாச்சு. வாக்கியவிந்தநீரில் வளம்பெறக்கரைத்துவைத்துப், பாக்கியமூன்றுநாளிற பருவமாய்த்தெளிவைவாங்கே. (கசங)

வாங்கியதெளிவுதன்னை வார்த்துநீகாச்சுகாச்சு, பாங்கியேயுப்பேயாகும் பருவத்திலெடுத்துக்கொள்வா, யோங்கியசுன்னக்கூர்மை யோகோகோவொன்றுக்கஞ்சா, தாங்கியவிந்தவுப்பைத் தனியொருவராகன்றாக்கே, (கசச)

தூக்கிடுகாரந்தானுந் தொகையாகவராகனொன்று, ஆக்கிடுரெண்டுங்கூட்டி யமுரியாலரைத்துக்கொண்டு, தாக்கிடுவங்கச்சுன்னந் தனியொருவராகனிட்டு, போக்கிடுபலமொன்றான புகசுகண்டாமேலேபூசே. (கசரு)

பூசியேயுலரப்போடு புகழாகத்தினந்தானொன்று, மாசியேயறுக்கவென்றால் மாட்டுநீசவுட்டுமண்ணைத், தேசியேவிட்டகத்தஞ் சிறக்கொருபடியேவாரு. ஆசியேசவுட்டுமண்தான் அதுவொருபடிதான்போடே. (கசசு)

போட்டுநீயமுத்திநன்றாய்ப் பொலிவானகத்தம்விட்டே, யாட்டுநீகலயத்துக்கு ளப்பனேவைப்பதெல்லாம், நீட்டுநீவாலுகைக்கு ளிலேத்தெரியைந்துசாமம், கூட்டுநீபொடிபோலான குவிந்திட்டபதத்தைப்பாரே. (கசஎ)

குவிந்திட்டதுருசியப்பா கொடியாயல்காமமாகும், குவிந்திட்டதுருசுமேலே காத்திடமருந்துகேளு, அவிந்திட்டநாபிசூத மடவானவீரம்பூரம், நவிந்திட்டவுரத்தோடொக்க நலமானபுழுகுசேரே. (கசஅ)

சேருநீவகையொன்றுக்குச் சிறந்தைந்துபணமேதூக்கு, தாருநீகுருவண்டப்பா தனிநூற்றுப்பத்துபோடு, கோருநீயெல்லாங்கூட்டிக் கொடுங்கோழிப்பிச்சைவார்த்துக், காருநீதுருசுமேலே கைமுறையாகப்பூசே. (கசகூ)

பூசியேயுலரப்போடு புகழானதினந்தான்பத்து, மாசியேயற்றுப்போகும் வழங்கியசெம்புசாகும். தேசியேயறிக்கொண்டு தெருவெல்லாம்வேதைபோடு, வாசியேகண்டாயானால் மகத்தானசித்துபாரே. (கருo)

பாரிந்தச்சூதங்கட்டப் பருகியமணிமேயயாகு, மாரிந்தத்துரு சுப்போக்கை மடியேன்போல்சொல்லப்போரூர். சேரிந்தப்பாவி னூலே செயப்படும்தாதிலெல்லாங், கோரிந்தநவலோகத்திற் கொடுத்திடக்கனகமாமே. (க௱க)

கனகத்தைக்கண்டபோதே கன்னியைத்தொடரவேண்டாம், கனகத்தைக்கண்டபோதே கடுகியேகற்பமுண்ணு, கனகத்தைக்கண்டபோதே கைவிட்டுச்சமாதிபுக்கு, கனகத்தைக்கண்டு போகக் கடுவலைப்புக்காகாதே. (க௱உ)

புக்கவேமனத்தைவிட்டாற் போச்சுதுஞானங்கேளு. மக்கவேபாசைவந்து வளர்ந்திடுமலைபோலப்பா, சிக்கவேகையிற்பட்டுச் சிறகதுபோனூற்போல; வொக்கவேபிறப்புக்குள்ளே யுழலுவாயுழலுவாயே. (க௱௩)

உழலுவாயோனிகோடி யுற்பனமாவாயப்பா, நழலுவாய்நரசன்மத்தை நலம்பெறவெடுக்கமாட்டாய், பழலுவாய்முன்னே செய்த பலத்தினூலெடுத்ததென்றால். நிழலுவாய்வேதாந்தத்தை நிலைத்துநீபாருபாரே. (க௱௪)

நிலைத்துநீயாதாரத்தை நினைப்பண்ணிப்பாருபாரு, அலைத்துநீவிடவேவேண்டா மகப்படும்வாசிநாலுங், குலைத்துநீவிட்டிட்டாக்காற் கோடானுகோடிசென்மம், மலைத்துநீபார்ப்பாயல்லால் மனிதன்போற்பிறவாய்க்காணே. (க௱௫)

காணென்றுபெரியோர் சொல்லக் காதுதான்கேளாப்போலே, கோணென்றகருவிவந்து கும்மெனவடைத்துப் போடும், தோணென்றகுருவேவந்து சொல்லுறேனப்பாவென்ன, ஆணென்றவந்தகன்று னூரோதாணென்றவாறே. (க௱௬)

வாறுனமூடர்க்கப்பா வாகநூல்கொடுக்கவேண்டாங், தேறுஞ்சிந்தைக்குள்ளே தெளிவுற்றோர்க்கீவாய்நூலை, அறுனகண்ணீரோடே ஆர்த்தியாய்ஞானிபார்த்துக், கூறுனநூலையீந்து குறிப்பெல்லாஞ்சொல்லுசொல்லே. (க௱௭)

சொல்லிடிற்சித்தியானூற் சுகமாகவுண்டுகொண்டு, செல்லிடுமனத்தையெங்குஞ் செல்லொட்டார்போதம்பார்ப்பார், மல்லிடும்வாதஞ்சொன்னேன் மருவுநூற்கிளைகளெல்லாம், அல்லிடும்பூரணத்திலடைந்திடுமையாகேளே. (க௱௮)

கேளுநீதுன்மார்க்கக்குக் கெடியானநூலையீந்தால், தாளுநீ
கிளைகள்தானுந் தனிநரகெய்துமெய்தும், வாளுநீவிழிபோலொ
த்த மாயிதான்சொன்னவார்த்தை, வேளுநீசிவனான்வந்தான் விதங்
கண்டுதொழிலைச்சொல்லேல. (௧௫௯)

தொழிலானதுருசுதொட்டுச்சுழற்றுறேனடனம்பாரு, தொ
ழிலானதுருசுதொட்டுச் சுற்றுறேனபுவனம்பாரு, தொழிலானது
ருசுதொட்டுச் சூட்டுறேன்சுன்னம்பாரு, தொழிலானதுருசியா
லே தொடுமுன்னேசரக்குச்சாமே. (௧௬0)

சாகவேதைலமொன்று சாற்றுறேன்கேளுகேளு, ஆகவே
யழிஞ்சிகுன்றி யப்பனேதேவதாளி, பாகவேவகைக்குக்காலாம்
படியதுநன்றாய்க்கூட்டி, நேகவேயிடித்துநன்றாய் நிரம்பவுமமுரி
வாரே. (௧௬௧)

வார்த்ததில்வற்றிப்போனால் வாரதில்மாணிச்சாறு, சேர்த்
தனையரைக்கும்போது சேர்க்கவேமருந்துகேளு, கோர்த்ததில்
சாரஞ்சீனம் குலாவியவிணங்கனுப்பும், போர்த்ததில்துருசுகார
ம் புகழானவராகனைந்தே. (௧௬௨)

ஐந்தாகஆறுந்தூக்க வப்பனேபலமூன்றாச்சு, மஞ்சாகக்கெ
ந்தகந்தான் மாட்டதிற்பலந்தானென்று, பஞ்சாகவரிதாரத்தை
ப் பாய்ச்சரைப்பலந்தானீயுந், தஞ்சாகவொன்றாய்க்கூட்டித் தனி
யொக்கவரைத்துப்போடே. (௧௬௩)

அரைத்தெல்லாம்வில்லைதானா மப்பனேலேசாய்த்தட்டித், த
ரைத்தெல்லாமுலர்ந்தபின்பு தனியொக்கப்பொடியேயாக்கு, உ
ரைத்தெல்லாமடுப்புக்குள்ளே வொத்தொருசட்டிவைத்துக், க
ரைத்தெல்லாந்தணல்போற்சட்டி காயவுமெரித்திடாயே. (௧௬௪)

எரித்திட்டசட்டிக்குள்ளே யிதமாகப்பொடியைப்போட்டு,
அரித்திட்டவட்டில்வைத்தே யதன்மேலேதண்ணீர்வார்த்து, நெ
ரித்திட்டவட்டில்தானும் நிரைநிரைவாங்கிவாங்கிப், பரித்திட்ட
தைலமெல்லாம் பாங்காகவழித்துக்கொள்ளே. (௧௬௫)

வழிக்கொருபீங்கானுள்ளே வார்த்திடுபடியோர்கால்தான்,
அழுகதியேயிதற்குள்போட வப்பனேமருந்துகேளு, கழித்துமு
ன் துருசுசுன்னங் கானொருவராகன்போடு, வழுத்தியேவீரமொ
ன்று வராகந்தான்போடே, (௧௬௬)

கால்போடுவீரமப்பா கடுகியபணக்கானுபி, யேல்போடுபுழுகுதானு மெடுத்தொருவராகன்போடு, மேல்போடுவெங்கச்சுன்னம் விளங்கியபணந்தானைந்து, கோல்போடுதைலந்தானுங் கொளுசிங்கிகானுங்காணே. (கசுஎ)

காணவேபீங்கான்றனுங் கடியதோர்பலத்தைவாங்கிப், பூணவேகழுதைக்கந்தம் புகட்டியேடோளைக்கட்டி; பூணவேவன்னிக்கெற்பம் ஆஞ்சலாய்மூன்றுசாமந், தோணவேயெரித்தாயானுற் சுகமானஆறல்போமே. (கசுஅ)

லிங்கச்சுத்தி கொங்கைஞானம்.

ஊறல்போம்லிங்கத்துக்கு ஆட்டவேயின்னங்கேளாய்; மாறவேபழச்சாறப்பா வளமாகப்படிகானூட்டித், தேறவேமுலைப்பாலப்பா சேரைதான்பின்புஆட்டு. ஆறவேலிங்கந்தன்னை யப்பனேவாங்கிக்கொள்ளே. (கசுகூ)

வாங்கியேலிஙகத்துக்கு மாட்டுமுன்தைலச்சிஙகி, தாஙகியேதோய்த்துத்தோய்த்துச் சமத்தாகவாட்டுவாட்டு, பாங்கியேகறுப்பேயோடிற் பாருநீயுருக்குப்போலாம், ஓங்கியேலிஙகசூகமுறுதிபாய்ச்சாகும்பாரே. (எ0)

பாருநீபெண்ணைப்பார்த்துப் பலபலவிணுரெல்லாம், வாருபொற்குடமோகோடோ மல்லிகைச்செண்டோவென்பார், தாருநீயிளநீரென்பார் தனிமதன்மகுடமென்பார், ஊருநற்கொங்கைரெண்டு முறைப்பாகப்பார்ப்பார்காணே. (எக)

காணிந்தப்பார்வைரெண்டுங் கடுங்கொங்கைக்குள்ளேசிக்கி, பூணிந்தப்பார்வைபுக்கி புழலுவார்பிடுஙகமாட்டார், தோணிந்தவிதம்போலிஙகஞ் சூதமுங்கட்டிப்போகும். பூணிந்தமனத்தைநீயும் போதத்திற்பாருபாரே. (எஉ)

போதமேகொங்கையென்பார் புகழானஞானியப்பா. வாதமேகொஙகையேது வளமானசிஙகியாச்சு, நீதமேமனதுக்கப்பா நெடுகியமாயைகொஙகை, காதமேக்ஷணத்திலோடக் கடுஙகொஙகைசூதமாச்சே. (எங)

ஆச்சிந்தகொஙகைமீதி லாசைபோற்போதம்பாரு, ஆச்சிந்தகொஙகைமீதி லாசைபோல்மனத்தைத்தேற்று, ஆச்சிந்தகொஙக

கைமீதி லாசைசெபாற்பொருளைத்தேடு, ஆச்சிந்தகொங்கைமீதி லாசைபோனாலைப்பாரே, (௧௭௪)

பாருநீ நூலையெல்லாம் பலகல்லாயுணர்ந்துகொண்டு, பாருநீமனதுக்கேற்ற பக்குவமெல்லாஞ்சொல்லிப், பாருநீபோதந்தன்னைப் பளிச்சென்றேயேறவோடும், பாருநீபாருபாரு பார்த்துறைமுத்திதானே. (௧௭௫)

முக்தியேகொடுக்குமப்பா முன்னென்றவாதசித்தி. சித்தியேகொடுக்கும்பாரு தெளிந்துநீகற்பமுண்டால், அக்கியேமணித்தாயோடு மாடலாமாறும்பாரு, மத்தியேமனத்தைத்தேற்றி மருமமாய்க்காணுகாணே. (௧௭௬)

காணிந்தமுறையைவிட்டுக் கடந்திடான்வாதியானல்; பூணிந்தலோகத்தோர்கள் பொன்னுக்காய்ச்சொல்லுவார்கள், வேணிந்தபோகமாயை விட்டவர்ஞானியானல், வாணிந்தித்தாயார்மேலே வச்சிரத்தோடாய்வாழ்வார், (௧௭௭)

வச்சிரத்தோட்டைப்போட்டால் வாசனைவாளெய்யாது, வச்சிரத்தோட்டைப்போட்டால் மாயமாம்சரப்படாது, வச்சிரத்தோட்டைப்போட்டால்வாராதுபிறப்புத்தானும், வச்சிரத்தோட்டைப்போட்டு வாதிகாள்போதம்பாரே. (௧௭௮)

பாரிந்தலிங்கம்போலே பருவமாய்வீரம்வாட்டு, பாரிந்தலிங்கப்போலே பருவமாய்க்கெந்திவாட்டு, பாரிந்தலிங்கம்போலே பாஷாணமெல்லாம்வாட்டி, பாரிந்தந்தைலச்சிங்கி படுமுன்னேசூதஞ்சாமே. (௧௭௯)

லிங்கவேதை பாஷாணக்கட்டு.

சாகிறசரக்கையெல்லாந் தனித்தனியினமேகண்டு, போகிறபொன்னிறகூட்டிப் போக்கோடேவேதைபாரு, ஆகிறவினமேதென்று லறையிறேன்லிங்கத்துக்குப், பாகிறதங்கம்ரெண்டிற் பாய்ச்சொன்றுலிங்கந்தானே. (௧௮௦)

தாளென்றரெண்டுஞ்சேர்த்துத் தனிப்படவுருகும்போது, வேனென்றலிங்கமார்க்கம் வெருவிடுநாகமப்பா, காளென்றமுன்றுஞ்சேரிற களங்காச்சு குருவுமாச்க, ஆனென்றவேதைபோட வறையுறேனறையுறேனே (௧௮௧)

அறையுறேன்களிம்புபோன யடைவானசெம்புபத்தில், மறையுறேன்களங்கொன்றேதான் மாட்டதில்குருவேயாச்சு, கறை

புறேன்வெள்ளிநூறிற் காட்டொன்றுயிர்தச்செம்பைத். துறையு
றேனமாற்றேதென்னிற் சுநமாகவிருபதாமே. (கஅஉ)

இருபதுமாற்றுய்போச்சு இதுமூன்றிறுண்மையென்ன, மரு
பதுபொன்னேபூமி மகத்தானநாகம்வித்து, தருபதுசூதம்வர்ண
ம் தளிக்கெந்திராகமாச்சு, கருபதுமூன்றுங்கூட்டிக் கடுமாற்று
யேறுதென்னே. (கஅங)

எருதசேதோவென்றே பியல்புடனுரைத்துப்பார்க்க, மா
றுதசூதத்துக்கு மாட்டிச்சாரணையோயில்லை. தேறுதசூதத்துள்
ளே சேர்ந்திட்டகஞ்சத்தாலே, தாறுதமாற்றுக்கொஞ்சந் தாறு
ச்சுயப்பாகேளே. (கஅச)

கேளுநீபாஷாணங்கள் கெடியாகக்கட்டிற்றென்பார். வாளு
நீகட்டுக்குள்ள வரிசையைக்காணமாட்டார், வேளுநீமூக்கட்டப்
பா விரவிடுமூசித்தூமம், ஆளுநீமுக்காற்கட்டு அதில்ரெட்டிப்பு
கையுமாமே. (கஅரு)

ஆமினியரைக்கட்டாறு லப்பனேபுகைதான்சுற்றும், போ
மினிமேலாகத்துள்ளே பூட்டையிற்புகையும்பாரு, தாமினிப்புகை
ந்ததென்று தடுமாறிப்பபப்படாதே, காமினிப்புகையுங்கட்டும்
கருந்தங்கத்தூட்டுவூட்டே. (கஅசா)

ஊட்டிடலப்பாஷாணங்கள் ஓமோகோபுகையுநன்று, மூட்டிடி
லுபாசங்கள் முத்துப்போலுருகநன்று, மாட்டிடிற்காரசார மற்
றொன்றும்புகையலாகா, ஆட்டிடிற்சூதந்தானு மாட்டிடிற்பொ
ன்னேயானன்றே. (கஅஎ)

நன்றிதுபாருபாரு நலமாகமுறைகள்சொன்னேன். கன்றி
துபாஷாணங்கள் கடும்புகைகட்டினாற்போல், ஒன்றிதுவேதை
தாக்க புத்தமங்கற்பத்துக்கும், பன்றிதுயான்முன்பார்த்துப் பரு
கிமேயநின்றவாறே. (கஅஅ)

வாறுகேள்துருசுகொண்டு மகத்தானவேதையாடத், தாறு
கேள்திரிவங்கந்தான் தனிமூன்றுவராகன்மூன்று, வாறுகேள்கர
ண்டிக்குள்ளே வாரிதில்ரெண்டுசூதம், பேறுகேள்வெள்ளைகண்
டால் பிலவானரெண்டுபோடே. (கஅகூ)

போட்டிதிற்கிண்டிப்போடு பொடியாகுமெல்லாமப்பா, மா
ட்டிதிற்பூரங்கால்தான் வழலையாஞ்சுன்னங்கால்தான், நீட்டிதில்

விரமொன்று நேரரைகருவைவிட்டுப், பூட்டிதில்வில்லைதல்ட்டிப்
புகழாகப்புடத்தைப்போடே. (௧௯௰)

புடந்தீர்ந்தபின்புகேளு போடிதிற்பாதிரூகம், அடந்தீர்ந்த
ரூகம்போல அப்பனேகெந்திபோடு, கடந்தீர்ந்தமென்றவாதங்க
ழுந்துக்கேவளையம்போடு, தடந்தீர்ந்தகருவாட்டித் தனிப்படவி
ல்லைகட்டே. (௧௯௧)

கட்டியேவில்லைதன்னைக் களங்கறக்குகையில்வைத்து, ஒட்
டியேபுடத்திற்போடு ஓகோகோசிவப்பேயாகும், அட்டியேதித
ற்குப்பெரு மானக்கக்குருக்காணுயம், எட்டியேநிமிளைநாலி விது
வொன்றுபூசுபூசே. (௧௯௨)

பூசியேவாட்டிமெள்ளப் புகழாகப்புடத்தைப்போடு, வாசி
யேநிமிளைதானு மப்பனேவெந்துபோகும், காசியநிமிளையொன்று
கடுந்துங்காலிற்பூசித், தேசியேபுடத்திற்போடச் சிவந்திடுந்தங்
கம்பரரே. (௧௯௩)

பாரிந்தத்தங்காலிற் பகராதலிங்கமொன்று சேரிந்தப்பொ
டியேபண்ணு செகச்சாலக்குருவாநாமம், வேரிந்தக்குருவைத்
தொட்டு வேண்டியசரக்கைவாட்டு, கோரிந்தச்சரக்கொன்றொன்
று கொடுஞ்சிவப்பாகும்பாரே. (௧௯௪)

பாருநீசெந்தூரங்கள் பண்ணுவோமென்பார்மாண்பர், வா
ருநீவங்கமுன்றின்வகைகாணார்வழியுங்காணார், ஒருநீவங்கம்போ
னால் ஓகோகோவாதம்போச்சு, தாருநீசெம்பில்வங்கந் தனிசேர்
ந்தாலூறல்போச்சே. (௧௯௫)

போச்சிதுலோகத்தோர்கள் புகழாகத்தாலமுண்டு, வாச்சி
துசெம்பைக்கொல்ல வழிகண்டோமென்பாரில்லை, யாச்சிதுவெ
ன்னசொல்வே னப்பனேவங்கமுன்றில், காச்சிதுபொன்றான்கொ
ட்டிக் கரையில்லைகாணுகாணே. (௧௯௬)

காணவேவங்கமான கடும்ரசவாதக்கம்பம்; பூணவேரூதங்
கட்டும் புகழானதாதுகட்டும், காணவேசாரசாரம் கையதாம்பா
ருபாரு; பூணவேகவளங்கெந்தி போடுநீசிவந்துபோமே. (௧௯௭)

சிவந்தபின்னேதுவேதை சிறுபிள்ளையாடுமப்பா, சிவந்தபி
ன்திரிவங்கத்தாற் செகமெல்லாஞ்சிவந்துபோகும், சிவந்தபின்
செந்தூரத்தைச் சேர்சகத்திரமேகோடி, சிவந்தபின்னினைத்ததக்
கண்டு சேர்ந்ததில்வேதைபோடே. (௧௯௮)

போடென்றநூலைப்பார்த்துப் புளகித்தானந்தமாவார், நீடென்றபொன்னைப்பார்த்து நித்தமானந்தமாவார், ஆடென்றபெண்ணைக்கட்டு அதிகவானந்தமாவார், தேடென்றவன்னமுண்டு செகத்திலானந்தமாவார். (௧௯௯)

மாதை பூசை.

ஆனந்தம்நாலுக்குள்ளே யருந்திறைரையோவையோ, வானந்தங்காண்டிப்போன மறையந்தக்காணார்காணார், கோனந்தக்கடந்துபோன கொடிவெளிந்துரியம்புக்க, மானந்தமாயிபாத மனத்துள்ளேபூசைபண்ணே. (௨௱)

பண்ணவேபிரமத்துக்குப் பழமைதுஜலமுமேது, பண்ணவேபிரமத்துக்குப் பன்னுடப்பானுமேது, பண்ணவேபிரமத்துக்குப் பரப்பிடத்தூபமேது, பண்ணவேபிரமமுண்ணப் பார்த்தாபோமுடாபோடா. (௨௱௧)

போடாநீமனதேபூசை புகழுற்றவன்பேக்ஷீரம், வாடாதபுத்திபுட்ப மகத்தானவிவேகமன்னந், தேடாதசாந்திநீர்தான் தெளிவானவருளேதூபங், கோடானுகோடிசித்துக் கொடுத்திடுமுன்னைபாரே. (௨௱௨)

உள்ளேதானிருந்தசித்தை யோமென்றுவெளியேநோக்கித், தள்ளேதான்றூபதீபஞ் சாற்றினசமர்த்தனன்று, கள்ளேதான்பூசையப்பா கல்லதுபேசுமோதான், அள்ளேதானண்டரண்ட மடங்கலுநிறைந்தார்காணே; (௨௱௩)

காணாதவண்டரண்டங் கடந்தநிற்குணமேயென்பார், கோணவேதாந்தரெண்டிஞ் சுடர்க்கொடிபானுவென்பார், பூணவேநிராகாரத்திற் புக்கிடில்வெளியேயென்பார், ஆணவேயெல்லாமுன்னே யாடுதிவாதிபாரே. (௨௱௪)

ஆதியுமந்தமில்லை யளவில்லைகரையுமில்லை, நேதியுநிலையுமில்லை நின்மலநிராகாரத்திற், சாதியும்வரவுமில்லாச் சச்சிதானந்தமென்றார், வாதிதானென்னவாதி மயங்கியமாடுதானே. (௨௱௫)

மாடுபோல்தின்பார்சோற்றை வார்த்தைகளாடுவார்கள், வீடுதானென்னதென்று வேண்டியப்பெண்ணைச்சேர்வார், கேடுதான்பிரகிதென்று கினுவிலுமெண்ணமாட்டார்; நாடுதானுருந்தவாதிநன்பாகக்கெட்டவாறே. (௨௱௬)

பெண்சரீர தூஷணை.

கெட்டதுபெண்ணுலப்பா கேளவன்கைநிதானம், மட்டமர் குழலையென்பார் மருவிப்பார்சிக்குநாறுங், கட்டுறுந்தேனையெ ன்பார் கலந்துபாரவாயேநாறும், ஒட்டுறுங்கண்ணைப்பாரா யொ ழுகியபீளைதானே. (௨௱௭)

பீளைதான்பீயேநாறு பெருத்துடல்குமரிநாற்றம், கோளை தானெஞ்சிற்கட்டிக் கொழுஞ்சபம்கொடிதாநாற்றம், ஊளைதானு ற்றுப்பாரு ஓகாரயோனியப்பா, காளைதான்மதன்றேறென் பார கருநாகப்படமென்பாரே. (௨௱௮)

படமானயோனியப்பா பலபலபிறப்புக்குட்டங், தடமானவ ழும்புஞ்சீயுஞ் சந்தித்தமூத்ரவாசல், கடமானநரககூபங் கண்டுபோ ரழலேநாறுங், திடமானமாயச்சீலை சிறப்பாகச்சுற்றினாளே. ()

சுற்றினசீலைபோனாற் சுகமாகவெளியாய்ப்போச்சு, வற்றிய துருசுகண்டால் வாகாகாவாதமாச்சு, பற்றியபோதங்கண்டாற் பகலிரவொன்றுப்போச்சு, வொற்றியசூதங்கட்ட வோடிற்றுக் கவனம்பாரே. (௨௧௦)

ரசக்கட்டுக் குளிகை.

கவனமேமையாடவப்பா கட்டவேகுளிகைகேளு, தவனமும் பசியும்போக்கிச் சார்ந்திடக்குளிகைகேளு, யவனமாம்ஞானங்கி ட்ட வாய்க்கவுங்குளிகைகேளு; புவனமும்பதமுந்தாண்டிப்போ கவேகுளிகைகளே. (௨௧௧)

கேளுநீதுருசியாலே கெடியானகுருத்தானென்று. வாளுநீ சவுக்காரத்தால் வழங்கியகுருத்தானென்று, தேளுநீதிரிவங்கத் தால் செய்திடச்சுன்னமொன்று, வேளுநீவீரமொன்று விதிநனு ம்வரரகனலே. (௨௧௨)

காலையும்கருவைவார்த்துநலம்பெறவரைத்துநன்றாய்க், கோ லியதங்கரேக்குக் கொடியவன்றெண்டிற்பூசிச். சீலையுஞ்சுற்றி யொன்றித் தெளிவாகப்புடத்தைப்போடு, வாலையும்கரும்புபோ ல வளமான தங்கநீரே. (௨௧௩)

நீரிலேயொன்றுபோடு நிலைபத்துசூதத்துள்ளே, தாரிலே தைலசிங்கி தானொருதுள்ளிகுத்து, தேரிலேகையால்தேய்த்துச்

சிறக்கவோர்கிழிபோல்கட்டி, வாரிமேலதீபக்கோட்டில் வளமாக வாட்டுவாட்டே. (௧௪௨)

வாட்டியேயெடுத்தபின்பு வளமாகக்காரந்துத்தி, நீட்டியே யுருக்கிடப்பா நிலைத்ததுகண்விட்டாடும், பூட்டியேயுபரசங்கள் போக்குநூற்றிருபத்தெட்டு; மாட்டியேசத்தைவாங்கி மளைத்து ச்சாரணையேசெய்யே. (௨௧௫)

செய்தபின்பாஷாணங்கள் சேர்ந்தறுபத்துநாலும், கைதபி ன்சத்தைவாங்கிக் கட்டிச்சாரணையையேறு; கொய்தபின்லோக மூட்டு குறிப்பானரத்தினமூட்டு, பைதபின்தங்கச்செம்பைப் பா ய்ச்சிநீவிடுவித்தேறே. (௨௧௬)

குளிகைசாரணை தங்கநீர்

ஏறிநீமுதிர்ந்தபின்ன ரிதுவொருலிடிவிப்பாச்சு, மாறுநீவா யிலிட்டால் வாங்கிடும்கவனமப்பா, தேறிவைதிறமேயிந்தச் செ யல்போலவிடுவித்தாக்கா, லாறியேகுளிகைபேரு மட்டமாசித்தி யாமே. (௨௧௭)

சித்தியாயிருபத்தொன்று சேர்த்துநீவிடுவித்தாக்கால், அத் தியகாமநமேகளு வகண்டத்தோர்கமலியாகும், பத்தியவைம்பத் தொன்று பாப்ச்சிநீவிடுவித்தாக்கால், முத்தியபோதத்துள்ளே மூட்டியசொரூபியாமே, (௨௧௮)

ஆமிந்தச்சொரூபியாலு மஷ்ட்டமாசித்தியாலுக், காமிந்தக் கமலியாலுங கைமுறையாகநாயன், வாமிந்தப்பதங்கன்தாண்டி வாகாகத்திரிந்துவந்தார், ஓமெந்தனுயன்முன்னே யொருவருமெ திர்காணேனே. (௨௧௯)

காணேனேசொரூபம்போலே கைக்குள்ளேஞானம்கட்டி, யாணேனேசித்தாகூட்ட மறுபத்துநாலுபீடங், தோணேனேம றைவுக்கெல்லாஞ் சொரூபமாம்குளிகையில்லை, நாணேனுகார்ச்சு னர்க்கு நாலொருவர்ணமுண்டே. (௨௨0)

உண்டதுகுளிகைதானு மோகோகோகொடிதுவோட்டம், ப ண்டதுவோடுமெல்லாற் பராபரங்காட்டமாட்டார்; கண்டதுமுனி வர்கையிற் கலந்தொருலகிமாவுண்டு, கொண்டதுமச்சர்கையிற் கொடும்பேதியொன்றுகாணே. (௨௨௧)

காணுங்கோரக்கர்கையிற் கடிபதோர்போகியொன்று, ஆணுநல்ரிஷபயோகி யவர்கையில்சாய்கைவேறி, பூணுநல்மடங்கள்தோறும் புகழானதொன்றென்றப்பா, வாணுநன்மூலநாயன் மரபுக்குளஞ்சுகேளே. (௨௨௨)

அஞ்சேதோவென்றுகேட்க வறைகிறேன்கேளுமப்பா, மிஞ்சேதுபூரணத்தில் விரவிடுசொரூபமொன்று, கஞ்சேதுகமலியொன்று கடுமஷ்டசித்தியொன்று, பஞ்சேதுலோகத்துள்ளே பரசிவதெரிசியொன்றே. (௨௨௩)

தெரிசிக்கமலையுமண்ணும் செகத்திலேயுள்ளதெல்லாம், பரிசிக்கவேண்டாமப்பா பார்க்குமுன்னேமமாகும், புரிசித்துப்பாலிற்போடடுப் போக்கோடேகுடித்தாயானால், கரிசித்தகாயசித்தி கண்ணிமைக்காகும்பாரே. (௪௨௪)

ஆகுமேமூலநாய னஞ்சல்லோகண்டாரென்று, வாகுமேநாயன்பாதம் வளமாகச்சிரசில்வைத்துப், போகுமேபோகிகாமி புகழ்சீவதிவிமூன்றும், பாகமேயெட்டாய்ச்செய்தேன் பரயரையருள்தான்காணே. (௨௨௫)

அருளானமூலநாய னடியேனையழைத்துவந்து, பொருளான வாதந்தானும் போக்கோடேநன்றாய்ச்சொன்னாய், மருளாதே லோகத்தோர்கள் மறைப்பையேன்வாங்கிவிட்டாய், யிருளான நூல்வையாத வேழைமையென்னென்றாரே. (௨௨௬)

என்னென்றபோதமூர்த்தி யியல்பாகச்சொல்லாவிட்டால், பன்னென்றநூலுக்குள்ளே பலனேவாங்கியயேது, தன்னென்றபெரியோர்பார்த்துத் தனைக்கண்டுசமாதியுற்றால், கன்னென்றசகிர்தத்துக்குக் கரையுண்டோகாணீர்சொல்லே. (௨௨௭)

சொல்லியமந்திரத்தைச் சோதித்துப்பார்ப்பார்பார்ப்பார், மல்லியமூலநாயன் மகத்தான நூலிதென்பார், பல்லையுந்திறந்துகொண்டு பட்டினியின்றைக்கென்பார், அல்லவேவயடியே நூலை யறிந்தவன்குபேரன்றானே. (௨௨௮)

நூல்கற்றோர்க்குப்பெயர்.

குபேரனுமீடோவையா குழந்தைநூல்கற்கிறார்முன்னே, யுபேரன்றானுனக்குநானு மோடினேன்போதமெல்லாம், கபேரந்தானண்டரண்டங் கடந்திட்டபொருளைக்கண்டே, னபேரந்தானெங்குநீரா யையமேனிறைந்திட்டாயே. (௨௨௯)

நிறைந்திட்டீர்நீர்தானல்லோநிலமெல்லாம்வெளியாய்ச்சொன்னீர், நிறைந்திட்டநீர்தான்முன்னே நிறையவேமூடிவிட்டீர், நிறைந்திட்டவுன்றன்பாத நினைவிலேயுன்னியுன்னி, நிறைந்திட்டமூட்டமெல்லா நிமிஷத்தில்வெளியாய்ப்போச்சே. (௨௩௰)

போச்சிதுவென்றுசொன்ன புகழ்மெத்தநன்றுநன்று. வாச்சுதேசிவன்முன்சொன்ன வரத்தாலேமூடிவைத்தால், வாச்சுதேபேழுலட்சம் வகைமூட்டையெண்ணிப்பாரு, ஒச்சுதேலோகத்தோர்கட் குற்பனமூடினுளே. (௨௩௧)

மூடினமூட்டேதென்று முறைமுறையுன்னிப்பாரு, கூடினசித்தர்க்கப்பா கொடுமூட்டுவெளியாய்காணு, மூடினஞானிக்கல்லோ வுற்பனவாதசித்தி, தேடினலோகத்தோர்க்குத் தெரியாதேமூடினுரே. (௨௩௨)

தெரியாதேமூடாவிட்டாற் செகத்துள்ளோர்விந்தைகேளு, பரியானபெண்ணைக்கண்டு பலபலசிந்தையாயின், மரியானகற்பைச்சேர்வார் மகத்தானபாவஞ்செய்வார்க், குரியானநூலுஞ்சொல்லாரோகோகோரநரகந்தானே. (௨௩௩)

தானுந்தன்னூலேசித்தர் தனிப்பட்டலோகத்தெய்தில், தேனுந்தக்கமலம்போலச் செய்தொழிலொன்றுந்தப்பா. கானுந்தும்பொன்னைக்கண்டு காமுகப்பாவியானா, வானுந்துதவத்திற்கெல்லாம் வந்ததுவானிதானே. (௨௩௪)

ஆனிதான்வராதேயுன்ன லடக்கவும்போமோசொல்லு, ஆனிதான்கருவூரார்க்கு முனக்குமேன்சண்டைதீரா, வானிதான்சொன்னுளானல் வருகிறகர்மதர்பங், தோனிதானசொல்லாவிட்டால் சொல்வதுவென்னபோவே. (௨௩௫)

போவென்றுசொன்னவார்த்தை புத்தியில்புத்திபுத்தி, தேவென்றுவுன்பதத்தைச் சிந்தையில்வைத்துச்சொன்னேன, காவென்றபாலிக்கென்னூல் கண்டாலுஞ்சித்தியாகா, கோவென்றமச்சான்றங்கை கொடுஞ்சாபங்கொடுத்திட்டாளே. (௨௩௬)

சாபந்தான்றுயும்போட்டாள் தனிப்பின்புயானும்போட்டேன், சோபந்தான்கொண்டுபாவி தொழில்காணார்மயங்கிப்போவார். தாபந்தான்பாவிக்கல்லால் தனியொன்றுஞ்சித்தியில்லை, கோபந்தான்வந்துலோகக் கொடியோர்க்குச்சபித்தேன்யானே. ( )

சபித்தாய்நீகொக்கையொன்று தனிக்கோபம் பெண்ணின்
மேலே, யெபித்தாய்நீயேருதேனு விதமென்னவூணிப்பாரு. வ
பித்தாய்நீகற்பினோடு வாடாதேன்சித்தாசொல்லாய். நபித்தாய்
நீகற்பதென்னிற் கடுவொன்றிலொன்றினாளே. (௨௩௮)

ஒன்றினாள்பத்தர்மேலே யோஙகியமதவேதத்தை. பன்றி
னாள்மனத்திலுள்ள பலநினைவெல்லாம்விட்டாள், சன்றினாலெது
ம்பாராள் கற்புக்குவருத்தவாறு, வன்றினமற்றைமாதி ராகாத
வேசிதானே. (௨௩௯)

தானென்றவவளைப்போலே தனித்ததோர்மனதேயொன்று
ய். வானென்றுகடந்துபாரு மகத்தாகஞானசித்தி, பானென்று
முண்டாளோடே பரைக்கற்பாம்பெண்ணுநேராந், தேனென்று
வுன்னூற்கப்பா சேவித்துவாராள்சொல்லே. (௨௪0)

சொல்லுறேன்வேதாந்தத்தின் சொரூபத்தைக்கடந்தமூர்த்
தி, பல்லுறேன்யோகஞானம் பரவியவாசியோர்க்கு, மல்லுறக்
கோபபாபம் வாராதுபெரியோர்க்கையா, கல்லுநவெட்டுப்போ
லக் கைகாணுஞ்சித்திதானே. (௨௪௧)

சித்திக்குநன்றாய்ச்சொன்னாய் திருடர்க்குச்சாபஞ்சொன்
னாய், மத்திக்கு மறையாய்ப்பாவம் வந்தது வவர்க்குந்தோஷம்,
எத்திக்குங்கொடிக்கவேண்டா மிந்தநூல்சித்தர்க்கீநீ, பத்திகொ
ண்டேழினோர்க்குப் பலித்திடும்பாருபாரே. (௨௪௨)

திருட்டு வாதிகளறிய.

பாருநீமுன்னேசொன்னேன் பறிக்குருவாம்வேதை, தா
ருநீகுளிகையிட்டுஞ் சார்றினேனதற்குள்ளப்பா, கோருநீதரு
வைத்தொட்டுக் கொடுஞ்சரக்கதனைத்தொட்டு, வாருநீவாட்டுவா
ட்டு வகையெல்லரஞ்சாகுந்தானே. (௨௪௩)

சாகிறசரக்கையெல்லாஞ் சாத்திரவிதத்தைக்கண்டு, போகி
றலோகத்துள்ளே போக்கோடேகொடுத்துப்பாரு, வாகிறவன்
ணங்காணூ மாற்றதுவெழும்பக்காணும், வேகிறபிணத்தைக்கிண்
டி விறகொக்கப்போட்டவாறே. (௨௪௪)

வாறுகேள்புத்திகெட்ட மாடுகள்சிலபேருண்டு, தாறுகேள்
குருசொல்லாமுன் தசக்கரஞ்செய்வாரையோ, நீறுகள்கரியதா

மோ நிலையாது திருட்டுவாதங், கூறுகேளிவர்கட்கென்றும் கொடும்வாதமபலியாதென்னே. (௨௪௫)

பலியாதுகுருச்சொல்லின்றிப் பரவிலேதிருடினுக்கால், கலியானலோகத்துள்ளே கசடருக்கடுத்தவாறு, மலியானகர்ப்பமுள்ளா ளாண்பிள்ளைபெறுவாளோசொல், கெலியானதிருட்டுவாதி கெடுகுவான்கெடுகுவானே. (௨௪௬)

கெடுகிறதிருட்டுவாதி கெடுநிசவேஷதைபோட்டால், மடுகிறமாற்றென்றில்லை வைத்திட்டவெள்ளிநீயும், படுகிறபாடுபிள்ளைப் பாவத்துக்காளுமாவான், வடுகிறதிருடனுக்கு வாராதுவாதந்தானே. (௨௪௭)

தானென்றலோகத்துள்ளோர் தனித்தனி நூலைப்பார்த்து, வானென்றஞானமெல்லாம் வந்ததுவெனக்கேயென்பார், கோனென்றகுருவுங்காணார் கூறுறவழியுங்காணார், கானென்றராகமுமை கருதினகதைதானச்சே. (௨௪௮)

ஆச்சிந்தக்கள்ளஞான மறைந்தோரைமுகம்பாராதே, வாச்சிந்தக்குருவில்லாமல் வாதநூல்திருடினனேல், மாச்சிந்தமுகம்பாராதே மகத்தானதோஷந்தோஷம், தாச்சிந்தவிடத்தைவிட்டுத் தனிமலையேறுயேறே. (௨௪௯)

ஏறியேலோகத்துள்ளோ ரியல்பதுகேளுகேளு. மாறியேதெண்டஞ்செய்வார் மகத்தானகுருவேயென்பார், கூறியேயடியேன்வீட்டிற் கொஞ்சோற்றுக்கில்லையென்பார், தேறியுன்பதமில்லாமற் றிக்கில்லையென்பார்காணே. (௨௫0)

திக்கில்லையென்றுசொல்லுந் திருடனைமுகம்பாராதே, வொக்கியவாதந்தானே வுலகத்தோர்பிழைப்பதெல்லா, மக்கியவிசனன்றே யவரவர்க்களித்தாரன்னம், மக்கியரசதூமத்தால் மயங்கினார்பாருபாரே. (௨௫௧)

மயங்கியபேரைப்பாரு மயங்காதபேரைப்பாரு, தயங்கியபேரைப்பாரு தயங்காதபேரைப்பாரு, வியங்கியபேரைப்பாரு வேகமாமனத்தைப்பாரு, வயங்கியலோகத்துள்ளோர் வழக்கத்தைப்பாருபாரே. (௨௫௨)

வழக்கந்தானின்னுமெத்த வரவரச்சொல்லுறேனன், பழக்கந்தானசிடனோடு பருவத்தைநன்றாய்ப்பாரு, யிழக்கந்தான்மன

கென்னாதே யிவனாலேயென்னென்னாதே, பிழக்கந்தான்செம்பு பாண்டம் பெருத்திடக்குசவன்போமே. (உடுங)

குசவன்றானாரேதென்னிற் கொண்டிடுசித்தவாதி, குசவன்றானாரேதென்னிற் கொடியநான்முகத்தோனப்பா, குசவன்றானாரேதென்னிற் கொடியதார்மணித்தாயப்பா, குசவன்றானாகும் போதக் கூறதுகண்டுகொள்ளே. (உடுச)

கண்டுகொள்போதமப்பா கடியதாய்க்குசவனாச்சு, வண்டுகொள்மணித்தாயேயு மப்படிபடைநீயென்றார், தண்டுகொள்மணித்தாய்தானுஞ் சதுமுகன்படைநீயென்றாள், பண்டுகொள்நிசமான்சொன்ன பரிசத்தாற்படைத்தார்காணே. (உடுடு)

காணவேவாதத்துக்குக் கடும்போதமாசானாச்சு, வூணவேயாசான்சொல்ல வுறுதியாய்க்கைக்கொள்ளாமல், தேணவேசொல்லும்போது சொற்களைத் திருடிப்பார்த்துப், பூணவேவாதம் பொய்யாய்ப் போச்சுதென்பார்காணே. (உடுசு)

போச்சுதென்றுசொல்லும்புலையர்தான்மெத்தவுண்டு, வாச்சுதுகுருவேயென்று வணங்குவார்கிடையாதப்பா, வேச்சிதுவாதமென்ற விடும்பர்கள்மெத்தமெத்த, வாச்சுதுவிவர்களோடே யறைந்திடத்தோஷந்தானே. (உடுஎ)

தோஷந்தான்சிவனாலே சுழன்றிடுமென்றார்மூலர், தோஷந்தான்றன்மார்க்கர்க்குச் சூட்டினால்நரகமென்றார், தோஷந்தான்வாதநூலைச்சேரார்க்குச்சொல்லாதென்றார், தோஷந்தானென்றுநாயன் சொன்னபின்னேங்கினேனே. (உடுஅ)

ஏங்கினபின்புநூலை யெப்படிமறைப்போனென்று, வோங்கினஞானிக்காகு மொழுங்கிலாமாண்பர்க்கெல்லாம், பாங்கினவாதமெல்லாம் பலியாதுபலியாதென்றே, யாங்கிப்படியேமூல ரப்படி போவென்றாரே. (உடுகூ)

போவென்றுநாயன்சொல்லப் புகழ்தேவியாமாமென்றாள், ஓமென்றமூலம்பார்த்த வுத்தமர்க்கேற்குமென்றார், தாமென்ற வென்னைநம்பிச் சார்ந்தவர்க்காகுமென்றார், ஆமென்றவாதிமார்க்க மறிந்தவர்தாகிதானே. (உசா0)

வாதந்தான்வருகுமென்று வாமத்திற்புக்கிநின்று, வாதந்தான்வராமற்போனால் வாமத்தைவிடுவார்மாண்பர், வாதந்தான்

வரவுந்தேவி மகத்தானபரிட்சைபார்ப்பார், வாதந்தான்வருதுமீச
ன் மலரடிபணிந்துநில்லே, (௨௬௧)

பணிந்திட்டுவுள்ளேநீயும் பரவியவஞ்செழுக்தை, யணிந்தி
டடேயைபந்தாக வப்பனைமாறுமாறு, கணிந்திட்டமவுனமாக
க கண்டுள்ளேசெபித்தாயானால், றணிந்திட்டவாதம்வந்து சரண
த்தில்வீழும்பாரே. (௨௬௨)

சரணத்தில்வீழவஞ்சிற் சாற்றிடுமாயாபீசர், கரணத்திலு
ன்னியுன்னிக் கைமுறையாகவாடு, மரணத்தில்வார்த்தைபொய்
யாம் வாதமுமேவல்கேட்டுந், தருணத்தினடனங்காணுந் தப்பா
தேநோக்கினோர்க்கே, (௨௬௩)

நோக்கிடில்வாதஞ்சற்றே நுணுக்கங்கள்தப்பினாலு, மாக்கி
டிலீசனங்கே யப்படியல்லவென்பார், தேக்கிடும்வாதமென்னதெ
ருவெல்லாங்கிடக்குதோசொல், மாக்கிடுசோறுசற்றே மறந்திட்
டாற்குழந்தைபோச்சே. (௨௬௪)

குழந்ததுசோறேயென்று குழறுதேகேளுகேளு, யழைந்
துவார்பச்சைநீரை யப்பனேவிரைத்துப்போடும், இழைந்துபார்
வாதந்தப்பி யெண்ணியேநினைத்துப்பாரு, விழைந்ததுவருளிற்கா
ணுற விரவிப்பின்தொழிலைப்பாரே. (௨௬௫)

தொழிலைநீபார்க்கும்போது சூட்சங்கள்தப்புந்தப்பும், தொ
ழிலைநீபார்க்கும்போது சூட்டியேகனலேறியறும், தொழிலைநீபா
ர்க்கும்போது சொன்முறைமறதியாகும், தொழிலைநீபார்க்கும்
போது சூட்சமாய்நூலைப்பாரே. (௨௬௬)

லிங்கக்கட்டு.

பாரொருலிங்கக்கட்டு பருவமாய்ச்சொல்லுறேனுன், தா
ரொருசுருக்காற்சுத்தித் தனியெல்லாந்தீர்ந்தபின்பு, தேரொருவீ
ரத்தோடு சேர்சமன்வழலைச்சுன்னம், ஓரொருசமனுப்சேர்க்கவு
த்தமச்சிவப்புமாமே. (௨௬௭)

சிவந்திட்டவீரமொன்று சேர்ப்பதுலிங்கமேலே, கவந்திட்
டசாரம்நாலுங கவுரியும்நாலுபோடு, வுவந்திட்டதுருசுச்சுன்ன
மொனறதுகூடப்போடு, வவந்திட்டகருவைவார்த்து வப்பனேய
ரைத்துப்பூசே. (௨௬௮)

பூசியேபூசிப்பூசிப் பொலிவாகவாட்டுவாட்டு, மாசியேயற்று லிங்கம் மழுங்கிப்போந்தாரையெல்லாம், காசிமீயன்போகவேண டாங் கனகத்தைக்கண்டால்முத்தி, வாசியேயேறியாடு வாதந்தா ன்சவுக்குமாச்சே. (௨௬௯)

ஆச்சிந்தவாட்டுக்கீந்தா லப்பனேமணலில்வைத்துக், காய்ச் சிந்தமீவர்வைமேலே கனக்கவேபுடத்தைப்போடு, வாச்சிந்தவு ள்ளேலிங்க மணிபோலத்திரண்டுகெட்டும். போச்சந்தக்சாவுபொ ய்யாய்ப் பூட்டிடமலைதான்பொன்னே. (௨௭0)

மலைதனையெடுக்கலாகும் வாரிதிகடையலாகும், நிலைதனையா காசத்தை நீக்கியேயகலாகும், கொலைதனைலிங்கக்கட்டே கொ டுஞ்சூதக்கட்டாமப்பா, வலைதனைலிங்கங்கட்ட வாகாகாவெளி தோசொல்லே, (௨௭௧)

சொல்லியலிங்கந்தன்னைச் சூட்சத்திற்கட்டிற்றென்பார்,மல் லியவாட்டாற்கட்டு மணலுக்குள்புடத்தாற்கட்டு, மெல்லியநீரா ற்கட்டு மென்பார்கள்போட்டுமோண்பர், பல்லியலிங்கங்கட்டப் ப தினுன்குங்கட்டும்பாரே. (௨௭௨)

கட்டியவுப்புரலிற் காட்டொன்றுவமூலைச்சுன்னம், ஒட்டிய கருவாற்பூசி யுலர்ந்தபின்னூதிப்போடு, மட்டினகோடிமாறு ம ற்றவைசுன்னமாகும், அட்டினவுப்புக்கொக்கு மப்பனேதுத்தஞ் சேரே. (௨௭௩)

சேர்த்துநீகருவாவாட்டிச் சிக்கெனவூதவூது, மாத்துநீதுத் தச்சுன்ன மகத்துவங்கேளுகேளு. வாத்துநீவங்கம்ரெண்டு மதி லொன்றுரூதம்விட்டுப், போத்துநீதுத்தச்சுன்னம் போடதில்ரெ ண்டுதானே. (௨௭௪)

தானென்றுப்க்கரண்டிக்குள்ளே தயிரைப்போற் கடைநீரு ண்டாற், தேனென்றவஙகமப்பா சிதைந்ததுதவளமாகுங், கா னென்றதவளத்துக்குக் காட்டுநாற்கொன்றேவீரம், கோனென் றவண்டநீரைக் குத்திநீயரைத்துக்கட்டே. (௨௭௫)

கட்டியவில்லைதன்னைக் கடுகவேயுலரப்போடு; வொட்டியே யூதிப்போடு வுகந்திட்டவங்கச்சுன்னம், மட்டியாள்சுன்னம்விட் டால் வாய்வாதமெய்யாதையா, வட்டியநிமிளைமூள்றி லப்பனே யொன்றுபூசே. (௨௭௬)

பூசியேயூதிப்போடு புகழானநிமிளைச்சுன்னம், மாசியேநிமிளைச்சுன்ன மத்திடைவீரம்போட்டுக், காசியேசிவப்பாமப்பா கலந்தப்புச்சாரமேமேல, வாசியேகசிவாஞ்சாரம் வைத்துநீகுகையில்மூடே. (உஎஎ)

குகைபேதோவென்னவேண்டாங் கொடுஞ்சுன்னங்குகையில்வைத்து. வகைபோடேமணலுக்குள்ளே வைத்தந்தக்குகையோடேநீ; தகைபோடேமணலைமூடித் தாக்குநீபுடத்தைமேலே பகைபோடேசாரநீரைப் பாற்றிடுஞ்சுன்னம்பாரே. (உஎஅ)

பாருநீசாரமுன்னே பாங்காகவிறுகக்கேணீ, தாருநீனச்சுன்னம் தனிப்படுமிணங்கன்சுன்னம், வாருநீகருவிறம்போடு வளமாகச்சலமேயாகும், கோருநீசாரந்தோய்த்துக் கொடுவேறும்ரவியிற்போடே. (உஎகூ)

போட்டிடவுலர்ந்துசாரம் புகழாகவெலும்புபோலாம். ஆட்டியபாஷாணங்க ளறுபதுந்துவைத்துப்போடு; காட்டியேதுவைக்காவிட்டாற் களிம்பறுப்புகையுநசட்டா, மூட்டியேசாரப்பின்பு மூளையைப்பறிக்கும்பாரே. (உஅம)

பறித்திட்டுநீறுபோலாம் பற்பம்போனடுவேநிற்கு, மறித்திட்டசாரநீரை வளமாகக்கொட்டிக்கொண்டு, பொறித்திட்டவழலைச்சுன்னம் போடிதிலெட்டுக்கொன்று, குறித்திட்டவில்லைகட்டிக் குகையிலிட்டூதுவூதே. (உஅக)

ஊதிடக்காரந்தானு முகந்திடக்கடதாஞ்சுன்னம். வாதிடச்சுன்னத்தோடே வளமானவீரஞ்சேரு, மாதிடமாசசுரெண்டும்வழங்கியசிவப்போமெத்த, காதிடத்துருசுமேலே கலந்திதைப்பூசுபூசே. (உஅஉ)

துருசுக்குரு.

பூசியேபார்க்கப்பார்க்கப் புகழானசுக்கானுகு, மாசியேயற்றுப்போகும் வளமாகவூதிப்போடு, காசியேநவகண்டங்கள் கடுவெள்ளைதனக்குமொவ்வா, வேசியேயிந்தச்சுன்னம் விரவியசிங்கிகூட்டே. (உஅங)

கூட்டிந்தத்துருசிச்சுன்னங் குறைவானதுருசிமேலே, பூட்டந்தவீரங்கூட்டிப் புகழாகவாட்டுவாட்டுக், காட்டிந்தகொங்கம்நூறு கைமுறைசுன்னமாகு, மோட்டிந்தத்துருசுக்கொப்பு மொன்றில்லைமணித்தாயொப்பே. (உஅச)

ஒப்பானசாரச்சுன்ன முறவானசாரமேபலே, யப்பாமேபப்பா கேளு மனதுக்குள்ளறவாட்டிக், கொப்பானசாரங்கட்டிக் கொடியமேதாரெலுப்பேபாருஞ், செப்பானமுன்மேபாலூது சிறந்திடுஞ் சுன்னம்பாரே. (௨௮௫)

பாருநீதங்கநீரில் பார்க்கிறவிதத்தைச்சொல்வேன், தாருநீ கண்டாசாரஞ்சமனாகவரைத்துக்கொண்டு, கோருநீவீரன்மேலே கொண்டிடவாட்டிவாட்டு, தாருநீசத்தாய்வீரந் தனிப்படக்கட்டுங்காணே. (௨௮௬)

கட்டியவீரமொன்று கடுந்தங்கம்நாலிலூட்டி, யொட்டியே குகையில்வைக்க வோகோகோபொருமிச்சிந்து, மட்டிகாள்வாதம்பாரு வாய்வாதம்போடும்போடும், கொட்டியேதங்கநீரைக் கூவென்றுற்பறக்குங்காணே. (௨௮௭)

பறக்கிறதங்கச்சுன்னம் படுமுன்னேயெல்லாஞ்சாகு, மிறக்கிறசரக்கில்வேதை யெத்தனைகோடாகோடி, துறக்கிறகொழிலேயல்லசொல்லாதேசொல்லிப்போட்டேன், கறக்கிறபால்போலென்னால் கடுகவேஞானிபாரே. (௨௮௮)

பாருநீதுருசுச்சுன்னம் பாங்குடன்சவாதுகூட்டிக், கோருநீயுபரசங்கள் கொள்ளவேவுருக்கவப்பா, தாருநீமுத்துப்போலே சகலமுமாமேபாரு, வாருநீகாரசார வகையெல்லாமுருக்குங்காணே. (௨௮௯)

உருக்கவேயின்னமொன்று வுற்பனஞ்சொல்லக்கேளு, பருக்கவேசாரச்சுன்னம் பாய்நிசதிற்சவாதுகூட்டிச், சொருக்கவேயுபரசங்கள் சுகமாகவருகுமப்பா, வருக்கவேசாரகார மறுபதுமுருகுந்தானே. (௨௯௦)

தானென்றதுருசுச்சுன்னஞ் சமன்போடுசாரத்துள்ளே, வானென்றவெளுப்புப்போலே வைக்குமுன்சலமுமாகும், கோனென்றவீரப்போடு கொடுஞ்சிவப்பாகும்நீர்தான், கானென்றநீருக்குள்ளே கடுந்தங்கமேரக்கையூட்டே. (௨௯௧)

ஊட்டிக்கைவாங்குமுன்னே யோகோகோசலமேயாச்சு, மாட்டிப்பின்வீரத்தோய்த்து வாகாகவாட்டுவாட்டு, நாட்டிப்பின்தங்கநீரால் நலவீரமெழுக்குமாச்சு, பூட்டிப்பின்பரிசீனந்தான்பொன்மாற்றுமிருபதாமே. (௨௯௨)

ஆமிந்தவீரம்போலே யறுபதும்வாட்டுவோட்டு; காமிந்தமெழுகேயாகுங் கரையில்லைவேதைசொல்லப். போமிந்தப்போதைமார்க்கம்பொற்கொன்றைச்சடையோர்கண்டார், தாமிந்தத்தொழிலையென்றுப் சாற்றினுன்கண்டிட்டேனே. (௨௯௩)

கண்டிடத்தங்கச்சுன்னங் கடியதோர்வராகனஞ்சு, வுண்டிடுமுன்னேசுத்தி யுறைந்திட்டசாரமஞ்சு, பண்டிடுகாரச்சுத்தி பாய்ச்சஞ்சுவராகனப்பா, வண்டிடுமூன்றுங்கூட்டி யரைத்துநீயழுத்திவையே. (௨௯௪)

வைத்தபினிதற்குளஞ்சு மாட்டுநீவெள்ளைகண்டா, கைத்தபின்வீரமஞ்சு கலந்திடாயப்பாநீயு, மொய்த்தபின்னண்டநீரைமுட்டிநீயரைத்துக்கொண்டு, தைத்தபின்பணம்போல்வில்லை தான்தட்டியுலரப்போடே. (௨௯௫)

ஓட்டபின்வழலைச்சுன்னம் பொலிவாகக்குகையிற்பூசி,யாட்டபின்னுலர்ந்தவில்லை யதற்குள்ளேபோடுபோடு, காட்டபின்சில்லுப்போட்டுக் கடுரவியுலரப்போட்டு, நீட்டபினகல்லுச்சுன்னம் நிலைநாலுபடிதான்வாங்கே. (௨௯௬)

வாங்கியசுன்னத்தோடு வளமாகவுப்புரெண்டு. பாங்கியேயரைத்திடப்பா பரிவாகக்குகைக்குமப்பு, தேங்கியபுடந்தானப்பா தெளிவாகக்கெசந்தான்போடு, வோங்கியசுன்னக்கார முள்ளேறிச்சுறுக்காம்பாரே. (௨௯௭)

பாருநீயின்னமொன்று பருவத்தைச் சொல்வேன்யானும், தாருநீயிருபத்தஞ்சில் தனிமூன்றுவழலைச்சன்னங், கோருநீகருவாலாட்டிக் கொள்கியவடைபோல்தட்டிக், காருநீரவியில்வைத்துக் கடுகெனவுலரப்போடே. (௨௯௮)

உலர்ந்தபின்வாட்டிவாட்டி லுள்வைத்துவோடுமூடி, யலர்ந்தபின்சந்துதோறு மப்பனேசீலைசெய்து, கலந்தபின்முழங்கால்மட்டுங் கடியதோரெருவைப்போட்டு, வலந்துமுன்னுப்புச்சுன்ன மப்படியெடுத்துக்கொள்ளே. (௨௯௯)

எடுத்திட்டவுப்புச்சுன்ன மியல்பாகக்கீழேபாதி. மடுத்திட்டவோடுவைத்து மறுபாதிமேலேபோட்டுக், கடுத்திட்டவெருவையப்பா கலந்தப்புமார்புமட்டுந்; தொடுத்திட்டதீயைப்போட்டுச் சுகமாகப்பூசைபண்ணே. (௩௱)

பண்ணியேபுடந்தானப்பா பதறுசீதகுளிருமட்டு, மண்ணி யேகுருவுக்கொப்பு யாரைநான்சொல்லப்போறேன். தண்ணியநி ராதாரத்தின் சைதன்யமொப்புவொப்பு, புண்ணியவானராலுற் போட்டிந்தக்குருவைப்பாரே. (௩௱௧)

குருக்கொண்டேவண்டரண்டங் கூட்டோடேயசைக்கலாகு ந், தருக்கொண்டவண்டமேலே தனியொருபோட்டுப்போடத், திருக்கொண்டவீரங்கூட்டிச் சேர்ந்திழையப்புதப்பு, கருக்கொ ண்டவண்டர்தானுங் கடுமெழுக்காகும்பாரே. (௩௱௨)

மெழுகையேகவலோகத்தில் விரவியேலேபம்பண்ணித், த ழுகையேகாய்ச்சிப்போடு தனிமாற்றுப்பதினைந்தொன்று, அழு கையேன்வாதிகாளே யணைந்திந்தக்குருவைப்பாரு, விழுகையே சுட்டுச்சுட்டு வெங்காதேகுருவைக்கேளே. (௩௱௩)

கேளுநீகுருவைக்கொண்டு கெடியாகவாடவேதை. யாளுநீ வீரத்தோடு மாமிந்தச்சுன்னம்போடு, வாளுநீசிவப்பேயாகு மா ட்டதில்சினஞ்சற்றே, தோளுநீகறுத்துப்போகுஞ் சொற்சேகளு வேதையாமே. (௩௱௪)

சொல்லக்கேள்கறுப்பைவாங்கிச் சூட்டிடுவீரன்மேலே, மல் லக்கேள்சீலைசுற்றி மாட்டியேயுப்புப்பூசி, தல்லக்கேள்தணலிலூ து தனிக்கொடியசையாதப்பா, வல்லக்கேள்வீரக்கட்டு வாகாகா வீரம்நீறே. (௩௱௫)

நீறியவீரத்தோடு நேராக வீரம்போட்டுக், கூறியநாலுக் கொன்று கூட்டிடுலிங்கமப்பா, தேறியசிவப்பைப்பாரு செக மெல்லாமயங்கியாட, வூறியகேணிபோலே வோடிடும வேதை பாரே. (௩௱௬)

வேதைதானேடுதற்குவிபரமாய்ச்சொல்லக்கேளு. போதை தானவலோகத்திற் போட்டொன்றிற்றங்கமாகும், நேதைதான் சீலைசுற்றி நெருப்பிலேதிணித்துப்போடு, பாதைதானுபரசத்திற் பருகியேயுருக்கப்பொன்னே. (௩௱௭)

பொன்னுகவெளிதோமாண்பர் போக்கோடே பாருபொன் னும், பண்ணுனநூலுக்குள்ளே பருவத்தையுரைக்கப்பாரு, மன் னுனகுருவைப்பாரு வழியோடேவரிசைகேளு, கன்னுனமுறைக ள்தப்பில் கருக்கண்டுவூதுவூதே. (௩௱௮)

ஊதிடச்சுன்னமெல்லா முயர்ந்தேறுமெத்தக்கார, மூதிடச் சோம்பினுக்கா லோகோகோசுருக்குப்போச்சு, லூதிடமாசிபோடு முட்டிடுவெழலைச்சுன்ன. மூதிடவல்லாயானு லொருகோடிசுன்னமாமே. (கூ0க)

ஆமினிரசிதச்சுன்ன மறையுறேன்கேளுகேளு, வாமினிவெள்ளிநாலு வாட்டொன்றுசெயசூதத்தைத், தேமினியுருகும்போது செயவீரமொன்றுபோடு, வோமினிக்குகையில்வைக்க வோகோகோநீறும்பாரே. (கூ0௰)

பாருநீவிண்ணீர்பத்து பருஞ்சுத்திச்சாரமஞ்சு, தாருமுன்காரமஞ்சு தனிவெள்ளைக்கண்டரஞ்சு, வாருமுன்வீரமூன்று வழலையின்சுன்னமரெண்டு, சோருமுன்முப்பதம்மா கொடும்வெள்ளைக் கருவாலாட்டே. (கூகக)

ஆட்டியேசில்லுப்போலே யனேத்தொருவில்லைகட்டி, நீட்டியேயோட்டில்வைத்து நிரையொருவோடுமூடிப், பூட்டியேசீலைசெய்து புகழானயெருவுக்குள்ளே, காட்டியேசுன்னமுப்புக் கடுங்கீழுமேலும்போடே, (கூகஉ)

போடுநீயெருவைமேலே புகழானகெசபுடந்தான், ஊடுநீயாறுமட்டு மூற்றெடுசுருக்குச்சுன்னங், தேடுநீயெந்தச்சுன்னந் திறமிந்தச்சுன்னமொவ்வா, வாடுநீரசிதவித்தை யாகாகாவறையுறேனே. (கூகங)

அறையுறேன்காரிரெண்டு மப்பனேசாரியொன்று, பறையுறேனிணக்கென்று பருமாலின்தேவியொன்று, நிறையுறேனஞ்சுமஞ்சு நேரானவராகன்தூக்கித், துறையுறேன்குருவைப்போட்டுக் சுழலவெண்கருவாலாட்டே. (கூகச)

ஆட்டியேவெள்ளைமேலே யப்பனேயிதைத்தான்பூசிப், பூட்டியேவாட்டிச்சீலை புகழாகவொன்றுசுற்றி, நீட்டியேயுப்பைப்பூசி நிலைபெறவூதிப்போடு, காட்டியவெள்ளையுள்ளே கலங்காதேசுன்னமாமே. (கூகரு)

ஆமிந்தவெள்ளைச்சுன்ன மப்பனேசெம்புநூறில், வோமிந்தப்பூட்டியாட்ட வுயர்ந்திட்டரசிதமாகும், வேமிந்தவலோகத்தில் வெருவிடவூறல்போகும், தாமிந்தப்போக்கைவிட்டுத் தனியொருபோக்குக்கேளே, (கூகசு)

கேளுநீரசிதச்சுன்னக் கெடியானவீரங்கூட்டி, வேளுநீதேய்த்தாயானால் விளங்கியசிவப்பேயாகும், காளுநீசீனம்போடக் கடுகியகறுப்புமாகும், வாளுநீ வீரன்மேலே வளமாகப்பூசிப்போடே. (௫௧௭)

போட்டபின்சீலைசுற்றிப் புகழாகவுப்புக்கட்டி; யாட்டபின் னூதிப்போடு மப்பனைகட்டிப்போகும், நீட்டபின்னிரும்புயியம் நிலைநிலைபூசியூதக், தாட்டபின்ரசிதமாகுந் தனிமாற்றுப்பதினாறுமே. (௫௧௮)

பதினாறுமாற்றுச்செய்த பாங்கானரசிதச்சுன்னம், கெதினாசைசூதத்துள்ளே கெடிநூறுக்கொன்றுபோடு, நிதினாரக்கட்டிப்போடும் நிமிஷத்திலுருகியாடும், மதினாறுமீசன்சொல்ல மாயிதான்கேட்டவாறே. (௫௧௯)

வாறுகேளேமச்சுன்னம் வகைபொருபணமேதூக்கித், தாறுகேள்நூறதொன்று தனிப்பட்டரசத்திற்போட்டுக், கூறுகேள்கிண்டிப்பார்க்கக் கொத்துப்போல்வெள்ளையாகும், மாறுகேளுருக்கிப்பாரு மகத்தானசூதக்கட்டே. (௫௨௰)

கட்டுண்ணுஞ்சூதம்போலே கலந்திட்டபாஷாணங்கள், கட்டுண்ணுஞ்சூதம்போலே கடிபதோர்காரசாரங், கட்டுண்ணுஞ்சூதம்போலே கண்டுகொள்ளப்பாகீயும, கட்டுண்ணுஞ்சரக்கையெல்லாங் கண்டினயவேதைபோடே. (௫௨௧)

வேதையின்முறையுங்காணார் விதங்காணார்துறையுங்காணார், தாதையாம்வாதிகிட்டச் சாதித்தேவார்த்தைசொல்வார், பாதையாங்கண்டோமென்பார் பாருங்காண் சொல்வேனென்பார், கோதையச்சுன்னப்போக்கின் குணங்களைச்சொல்வார்காணே. ()

காணவேசுன்னமார்க்கங் கடுகியேபண்ணும்போது, தோணவேதவறிப்போனாற் சூட்சத்தைமறந்தோமென்பார், பூணவேபின்புசெய்வார் போடுறவரிசைகாணார், மாணவா வாதிக்குள்ளே வாகாகவழிம்பன்றானே. (௫௨௩)

அழும்பானவாதிப்பேச்சு மாகாதகசடன்பேச்சுங், கழிம்பானமதன்சொல்பேச்சுங் காணாததிருடன்பேச்சும், விழிம்பானகாபிபேச்சும் வேதாந்தம்பாரான்பேச்சும், தழிம்பானமூடர்பேச்சுந் தான்கேட்டார்கெட்டவாறே. (௫௨௪)

கெட்டார்கள்லோகத்தோர்கள் கேள்வியாம்வாதங்கேட்டுப், பட்டார்கள்பெண்ணைக்கூடிப் பறிபட்டுவாசிபோக, விட்டார்கள்வேதாந்தத்தை வெளிமயக்கேதோவென்று, ரொட்டானகழுதைபோல வோகோகோவலைகிறுரே. (௩௨௫)

அலைகிறசத்திபெது வகைளோடேசிவன்றுனேது, குலைகிறமனந்தானேது குறிப்பானபாதையேது, நிலைகிறபொருளநேகது நேராகவழிதானேது, தலைகிறநோக்கிலுன்னிச் சண்டாளர்பாருபாரே. (௩௨௬)

பாருநீயுரைக்துநன்றுய்ப்பளிச்சென்றுபோதங்காணும், பாருநீயுரைத்துநன்றுய்ப் பார்த்திடில்வாதநகாணும், பாருநீயுரைத்துநன்றுய்ப் பலபலபிறப்புங்காணும், பாருநீயுரைத்துநன்றுய்ப் பலபலசித்துமாமே. (௩௨௭)

சித்தேதுவசித்தநேகது சீவன்றுனுடலிலேது, உத்தேநீபாருபாரு வொக்கவேவெளியாய்ப்போகும், மத்தேநீசீவலிங்க மதத்தானவாயில்வாய்த்தால், பத்தேநீசடந்தான்கோயில் பருந்தீபம்புலனறுனஞ்சே. (௩௨௮)

அஞ்சானவிளக்கைத்தூண்டி யாதாரமேறிப்பாரு, பஞ்சானசத்தியீசன் பருஞ்சிவன்சத்தியாச்சு, வஞ்சானவகாரஞ்சத்தி வழங்கியசிகாரமீசன், தஞ்சானரெண்டுங்கூடித் தனிச்சுழிவீதியோடே, (௩௨௯)

ஓடையிலிடைபின்ரெண்டு மோகோகோயெநகேயென்னில் வாடையிலிடைவகாரம் வழங்கியசிகாரம்பின்றுள், தேடையிலிரண்டுஞ்சேர்க்கில் தேசியாஞ்சுழியிலோடு, மாடையிலானந்தத்தை யவைநாலுமறியுங்காணே. (௩௩0)

காணந்தநாலைக்கண்டாற் கைகண்டான்ஞானமெல்லாங், காணந்தநாலைக்கண்டார் கைவிட்டபதுறைமபாணர், காணந்தநாலுக்கொக்கும் கடிபமுன்குருவாம்ரெண்டுங், காணந்தநாலும்பாரு கடுவாதசித்திதானே. (௩௩௧

சித்தியாத்தைலமொன்று செப்புறேன்கேளுகேளு, வத்தியவழிஞ்சிகுன்றி யடங்காததேவதாளி, பத்தியாக்கஞ்சாமத்தை பரிபவாலுளுவையோடு, மத்தியாப்புரசுவேறு வகைக்கொருபலந்தான்பத்தே. (௩௩௨)

பத்ததுவெவ்வேருகப் பருவமாய்நறுக்கியப்பா, முத்ததுமாணிச்சாறு முழுகவேவார்த்துவைத்து, வொத்ததுபின்னேபோடவுறவானமருந்துகேளு, கொத்ததுபலந்தான்மூன்று கொய்யதோர்கெந்திபோடே. (௩௩௩)

போட்டபின்னரிதாரந்தான் போடதிற்பலந்தானொன்று, நீட்டபின்சாரமொன்று நேரதில்வெடியுப்பொன்று, வோட்டபின்படிகையொன்று வுரவாகக்கல்லுப்பொன்று, காட்டபின்பண்ணையொன்று கடுகியகாரமொன்றே. (௩௩௪)

ஒன்ருகத்துரிசியொன்று வுயர்ந்தகுக்கிலியமொன்று, தன்ருனசாம்பிராணி தானொருபலந்தானப்பா, தொன்ருனபூநாகந்தான் தொட்டஞ்சுபலமூநீயுங, கன்ருனகார்த்திகைக்குக் கடுங்கிழங்கையாபத்தே. (௩௩௫)

பத்திடுவமுரியுப்பு பாங்காகவொன்ருய்க்கூட்டு, வொத்திடுவிதையோடொக்க வொக்கவேயரைத்துப்போடு. மத்திடுகாசுபோல வளமாகவில்லைகட்டு, முத்திடுபுடத்திலப்பாமூட்டியேயதைலம்வாங்கே. (௩௩௬)

வாங்கியதைலப்பேரு மகத்தாநவுற்றசிஙகி. பாங்கியவமுரிச்சிங்கி பருகியபீசச்சிங்கி, தாங்கியகெந்திச்சிங்கி சாரமாங்காரச்சிங்கி; யோஙகியநாபிச்சிங்சி யொப்பொன்றுமில்லைகாணே. (௩௩௭)

காணிந்தத்தைலத்துள்ளே கலக்கவேமருந்துகேளு, பூணிந்தப்புனுகுநாபி புகழூரப்பூரம்போடு, வாணிந்தவீரத்தோடு வளமானதுருசுச்சுன்னந், தோணிந்தவங்கச்சுன்னஞ் சொல்லேழும்வராகனேமே. (௩௩௮)

ஏழையுந்தைலங்குத்தி யிதமாகவரைத்துக்கொண்டு, ஏழையுந்தைலத்தோடே யிணங்கவேகலந்துபோட்டுத், தாழையுமாயிதாளச்சஙகமர்ப்பூசைபண்ணிக், கோழையுஙகடக்கவேதைகொள்ளுறேன்கேளுங்களே. (௩௩௯)

கேளுநீசூதம்பத்திற்கெடிமூன்றுதுள்ளிகுத்து. வாளுநீதேய்த்துவொனருய வளமாகக்கிலைபோற்கட்டித், தோளுநீசூடன்றீயிற் சுகமாகவாட்டிப்பின்பு, யாளுநீயெண்ணெய்குத்தி யளவியகரண்டியூதே. (௩௪௰)

ஊதிடவியம்போல!வுருகிநின்ஞ்சூதமப்பா, மாதிடவாஙகிப்பின்பு மாட்டியேகுகையில்வைத்து, வேதிடமென்னவேண்டா மியல்பானகாரங்குத்திப் போதிடவுருக்கிப்போடு புகழானசூதஙகட்டே. (௩௪௧)

கட்டியசூதந்தன்னைக் களஙகுசெந்தூரம்பண்ணு, வொட்டியேதருவேபண்ணு வோகோகோசாரவோடுந், தட்டியசத்தைக் கூட்டிச் சாரணைவிவித்தேற, வட்டியகவனமார்க்க மாடலாமாடலாமே. (௩௪௨)

ஆடலாந்தைலத்துள்ளே யப்பனேலிஙகந்தோய்த்து, வூடலாந்தைலமெல்லா முண்டிடுமளவுமாட்டு, நீடலாய்த்தோய்த்து தோய்த்து நிலையதுவிருபத்தொன்று, காடலாம்பொன்னேயாகக் கலஙகாமல்வாட்டுவாட்டே. (௩௪௩)

வாட்டியலிங்கமப்பா வச்சிரம்போலேகட்டும், நீட்டிடுதஙகம்ரெண்டில்நேரானலிங்கமொன்று, வூட்டிடக்குருவேயாச்சுவுடைத்ததைப்பாருபாரு; தாட்டிடுசுத்திச்செம்பு தனிநாலுக்கொன்றுபோடே. (௩௪௪)

போடவேசெம்புமப்பா புகழானகளங்கமாச்சு, வாடவேவெள்ளிபத்தி லணையிந்தச்செம்புவொன்று, தேடவேவேண்டாம்வாதந் தெருவெல்லாம்பொன்னுப்போகும், கூடவேயெங்கேயென்னிற் குறிநாலிற்கூடுகூடே. (௩௪௫)

குறியானலிஙகம்போலே குமட்டியேவீரம்வாட்டு, குறியானலிஙகம்போல கொள்ளுமொன்பதுமேவாட்டு, குறியானலிங்கபபோலே கொடுஞ்சாரகாரமாட்டு, குறியானலிஙகம்போலே கூப்பிட்டதெல்லாஞ்சாமே. (௩௪௬)

எல்லாந்தான்செத்ததாஞ லினங்கண்டுவேதைபோடு, வல்லாதகடினம்பாரு வழஙகியமெதுவைப்பாரு, சொல்லாதமுறையைப்பாரு சூட்டிடுவெரிசைபாரு, கல்லாதமணலைமட்டுங் கடந்தோடும்வேதைபாரே. (௩௪௭)

பாருநீராசதந்தான் பண்ணுறவிதத்தைக்கேளு, தாருநீவாடைபூசத் தனித்ததோர்தூசுகட்டக், கோருநீபெண்ணைக்கூடக் கோடானுகோடிதேட, வாருநீசந்தோஷித்து மகத்தாகக்கொச்சிப்பாயே, (௩௪௮)

வேறு.

கெர்ச்சிக்குமொருமதந்தான்வந்துகூடிற் கேடியமாமர்ங்காரங்கிளைகடோறும், வர்ச்சிக்கப்போகாது கோபமிஞ்சும் மாளுறதையெண்ணுது மசகமாக்கும், நிர்ச்சிக்கவிதுரெண்டுந்தீர்க்கமாட்டார் நிலையோகம்சேரகமென்னநேர்ப்பாமென்ன, வர்ச்சிக்கவாதாரமெத்தவென்ன வாகாகாதன்னறியாரழும்பர்தானே. (௩௪௯)

வேறு,

தானென்றரெண்டினுண்மை சாற்றுறேன்கேளுகேளு, வானென்றலோபத்துக்கு வச்சிரதந்தம்ரெண்டு, கோனென்றசித்தனன்று கொடுந்தந்தம்பிடுங்கினாற்போல், வேனென்றவிவேகசித்தன் விழுரெண்டுமெடித்தார்காணே. (௩௫௦)

அடித்தபின்னவசரத்து ளப்பனேவந்துசேர்வாள், பிடித்தவள்குணத்திற்சேர்ந்து பேர்ர்கவாரும்பாரு, மடித்தவர்போகாவிட்டால் வாதமும்ஞானம்பொய்போ, யிடித்தபின்பல்லைக்காட்டி யேங்காதேநன்றாய்ப்பாரே. (௩௫௧)

நன்றாவதேதுவப்பா நாலதேமெத்தநன்று, குன்றாவதேதுவப்பா குவிந்திட்டஞானக்குன்று. வன்றாவதேதுவப்பா வாகாதமாயவாதை, வன்றாயேண்மெத்தநன்று வள்ளாட்டாற்கேடுதானே. (௩௫௨)

கேடெல்லாந்தள்ளிப்போகுங் கெடியானவொன்றைநோக்கு, வீடெல்லாம்வாதமாக விரைந்திந்தச்சிங்கிநோக்கு. கூடெல்லாநாலுக்குள்ளே குறிப்பாகவுற்றுப்பாரு, வோடெல்லா ஞானவாத மொக்கவுஞ்சமனாங்காணே. (௩௫௩)

காணுநீவங்கந்தானுங் கலங்காதேசுன்னமாக்க, வேணுநீயோமத்தோடும் வெள்ளாட்டிணெருவுங்கூட்டு, தோணுநீபொடியாய்ப்பண்ணிச் சுகமாகவைத்துக்கொண்டு, வாணுநீவங்கந்தன்னை வளமாகத்தகடுபோடே. (௩௫௪)

தகடதுலேசுவேண்டாந் தளமாகத்தகடுபோடு, நிகடதுதாளகத்தை நீற்றிவாசுன்னத்துள்ளே, வகடதுவீரங்கூட்டி வார்த்தரையண்டநீரால், பகடதுவங்கத்துக்குப் பரிவாகப்பூசுபூசே. ()

பூசியேயேயத்தூசும் புகழாகக்கோணிக்குள்ளே, யாசியேலங்கரேக்கை யப்பமேனபரப்பிவைத்து, வாசியேமேலேபோமம்

வளமாகப்போட்டுநன்றாய்க், காசியேபாயைப்போலக் கடுகவே சுருட்டிக்கட்டே. (௩௫௬)

காட்டியேபந்தமாகக் கட்டிடுயெருவைப்போடு, வாட்டியே திரைமூட்டு வாகாகநீறிப்போகு, மொட்டியேவீங்கச்சுன்ன மொடுக்கத்துக்கெல்லமாகும்; மட்டிகாள்வாதமென்ற வாருதிக்கோடமாமே. (௩௫௭)

ஓடமேபாச்சுதப்பா வொடக்கோலச்சொல்லக்கேளு. சாடவேதுநுசிச்சுன்னந் தனியோடக்கனையுமாச்சு, நீடவேகரைதான்வீரம் நேரோடங்கட்டுதற்குக், கூடவேகயிறுமாச்சு கொடுங்காரஞ்சாரந்தானே. (௩௫௮)

தானென்றகுத்தத்துள்ளே தனிராசன்சூதராசன், கானென்றராணிகெந்தி கடுமேவலாள்தான்லோகம், வேனென்றகண்டையாலே வேதாந்தம்வெளியாய்ப்போகும், வானென்றவோட்லாகு மகத்தானசித்துமாமே. (௩௫௯)

ஆமினிச்சித்தன்வாதி யருளுள்ளஞானிமூவர்; போமினியுலகத்துள்ளே பிறப்பேதுபொய்யிற்பொய்யே, காமினியாகச்சென்று கருக்குள்ளேநோக்கினுக்கால், வாமினிச்சின்னமுண்டு வந்தாலும்ராசாவாமே. (௩௬௰)

ஆமினிபிரும்பையாட்டி யப்பனையுருக்கக்கேளு, காமினிக்கட்டிக்கொண்ட கல்லுப்புநாலுதூக்கு, வாமினிகாரமஞ்சு வழங்கிபசாரம்ரெண்டு, வோமினிமூன்றுங்கூட்டி யுறவதிலமுரிவாரே.

வாரதில்ரைத்துவொன்றாய் வளமாகமெழுகேயாக்கி, வேரதுகேளாயப்பா வெள்ளைச்சாரணையின்வேரு. கோரதுமுக்காவேளைகொடியதோர்வேருங்கூட்டிச், சேரதுவொன்றாய்நீயுஞ் சேர்த்ததுநீவைத்துக்கொள்ளே. (௩௬௨)

வைத்ததிலயமேபப்பா வாமாகப்பலமேமூன்று, கைத்ததிற்பிசறிக்கொண்டு தனிக்கநேதோர்குகையில்வைத்து, மொய்த்ததிற்கரியைப்போட்டு மூட்டியேயூகமுத்தாங, கைத்ததிலுருக்கணத்திற் கனமானவுருக்குக்கேளே. (௩௬௩)

உருக்கியலோகந்தன்னையுடைத்திந்தப்படியேமுக்கால்,பொ ருக்கிமேபாநுக்கினுக்கால் சொர்ன பேரற்கண்விட்டாடும், வருக்

கியவிரும்மைப்போக்க மாட்டாதுவுப்புக்காவி, யருக்கியவரும்பெ
தென்று வறிந்துபாரறிந்துபாரே. (௩௬௪)

பாருமோயிநாதம் பரவியவிரும்பேயப்பா, காருநீதின்றுயா
ளுற் கடுகியகாயசித்தி, கோருநீசெம்பாலூட்டக் கேர்கோகோ
வாதசித்தி, யாருநீரறியப்போரூ ரறிந்துநீயிரும்மைப்பாரே. ()

இரும்பென்றுலெளிதுவாய்க்கு மெவராலுமுருக்கப்போகா
த், துரும்பெல்லாம்பொன்னேயாகும் சூட்சத்தைச்சொல்லக்கே
ளு, அரும்பென்றேசாரக்கட்டு மப்பனேதுருசுக்கட்டு, விரும்பெ
ன்றவீரக்கட்டு வெண்காரக்கட்டுமாமே. (௩௬௬)

ஆமிந்தநாலுக்குள்ளே யதுவதுவெவ்வேறாகப், போமிந்தவி
ரும்மைக்கூட்டிப் புகமூாகவுருக்கிப்பாரு. காமிந்தமாற்றுக்கொக்
கக் கடியமேகார்பதினறப்பா, வோமிந்தமார்க்கங்காண வுளறுரர்
மாண்பர்தானே. (௩௬௭)

தானென்றவிரும்புக்குள்ளே தாக்குநீலிங்கமப்பா. தானெ
ன்றவிரும்புக்குள்ளே தாக்குநீதங்கமப்பா, தானென்றவிரும்புக்
குள்ளே தாக்குநீவீரமப்பா, தானென்றவிரும்புக்குள்ளே தாக்கி
டாய்சூதந்தானே. (௩௬௮)

தானென்றநாலின்வேதை சதசகத்திரமேயோடும், பானெ
ன்றவிரும்மையப்பா பலமொருகாசாவிற்பார், வானென்றவேதை
யோடு மாற்றிதிலறுபதாகும், கோனென்றமூலநாயன் கொள்கி
ஞர்கொள்கிறாரே. (௩௬௯)

கொள்கினநூலைப்பார்ப்பார் கூடவும்வகையுங்காணார், கொ
ள்கினநூலுக்குள்ளே குறிப்பானபொருளைக்காணார். கொள்கின
நூலைப்பாரத்தென் குருவேண்டுமென்பாரமாண்பர், கொள்கின
நூலைக்கண்டார் குறிநாலுங்கண்டார்பாரே. (௩௭0)

நாலுடவிபரத்தொக்க நாட்டுறேன்வாதங்கேளு, வேலுட
வெளிப்பாளொக்கும் விளம்பியவிரும்பேயப்பா, காலுடவெளிப்
பானைக்குங் கடுகியநாகமப்பா, தாலுடவெளியொளிக்குச் சமனு
கும்பிமிலைதானே. (௩௭௧)

தானென்றநிர்க்குணத்தின் சமனுகுஞ்சூதங்கேளு, பானெ
ன்றநாலுக்குள்ளே படர்ந்தநீக்காய்த்தாற்போலே, கானென்ற
விந்தநூலிற் சுரையில்லைகணக்குமில்லை, வானென்றநாலுக்குள்
ளே வளர்ந்தறைவாதம்பாரே. (௩௭௨)

பாரந்தராலாய்நின்ற பரிவெல்லாங்கேளுகேளு, சேரந்தச் சரிதைஞானஞ் சிறந்திட்டகிரியைஞான. மோரந்தயோகஞான மொருமூன்றுங்கடந்தானானால், வேரந்தநிராதாரத்தில் வெளிக்குள்ளேவெளியுமாச்சே. (௩௭௩)

ஆச்சந்தவிரும்பில்மாற்றேறு வருபதுசொன்னேனப்பா, வாச்சந்தநாதத்துள்ளே வழங்கிற்றுநூறுமாற்று, போச்சந்தநிமிளையாமேல புகழுமைந்நூறுமாற்று, வோச்சந்தச்சூதத்துக்கு வுயர்ந்தவாயிரங்காண்மாற்றே. (௩௭௪)

மாற்றுமாயிரமேயானால் மகத்துவஞ்சூதமென்னப், போற்றுவாமதிக்குணத்தின் புகழானகரையுங்காணும், தோற்றுவாம்சூதத்துள்ளே துலங்கியகஞ்சம்போனால், காற்றுவாம்விரவண்டங்கரையற்றமாற்றுமாமே. (௩௭௫)

ஆமந்தச்சூதத்துக்கு மடங்கியகஞ்சம்போனாற், போமந்தமனதுக்கப்பா புகுந்திற வாசைவாம்பு, வோமந்தவாசைபோனாலோகோகோவென்றேபாச்சு, தாமந்தச்சூதஞ்சற்றே தனியுண்டுகேற்கநேரே. (௩௭௬)

நேராகுஞ்சூதத்தோடே நிலைபாணவந்தவப்பா, போராகுமலைபுமண்ணும் பொன்னுகும்விண்ணும்பாரு, வேராகும்போதத்துள்ளே விளக்கிற்றுசிவசெந்து, வாராயுஞ்சித்தர்காளே யருள்பொருளிலாவைவொன்றே. (௩௭௭)

ஒன்றானபோதத்துள்ளே யொருசகத்தோற்றமானார், கன்றானபிறவிவந்து கலந்திட்டவாறேதென்ன, வுன்றானமண்ணுநீருமுருண்டத்தின்றீயில்வீழ்ந்து, பன்றானவாயுசேரிற் பலபலநினைவுமாமே. (௩௭௮)

நினைவதுகர்மகர்மம் நிலைத்திட்டபடியேகாணும், கனவதுகண்டாற்போலே கண்முன்னேதோன்றுந்தோன்று, மனமதுதோற்றிநின்ற மயக்கத்தேசிவஞ்சென்று, வனமதுகோடிசன்மமாகாதாவெடுக்கும்பாரே. (௩௭௯)

எடுக்கவேதுணிந்ததானு லெந்திரம்போலேசுற்று, மடுக்கவேவிவேகம்பாரா வசட்டையர்களுமப்பா, தொடுக்கவேதொடுக்கத்தைத்துச் சுகமானமாயப்பாம்பு, வடிக்கவேபிடித்ததானாலாருக்கும்விடபடாதே. (௩௮௰)

விடுபடாப்பலத்தினாலே விளங்கிற்றுச்சின்னங்கோடி, தடுப
டாமனந்தான்சென்று தாமரைச்சலம்போலாச்சு, கெடுபடாவிவே
கத்துக்குச் கேடாச்சுமாயையையா, வடுபடவுரைத்துப்பாரு வா
வாவாபிறவிபோச்சே. (௩௮௧)

போச்சுதுவென்றுசொன்னாற் போகுமேபிறவிப்பாம்பு, வா
ச்சுதுவிவேகத்தோடு வருந்துநீயேயறிப்பாரு, காச்சுதுவண்டரண்
டங் கடுமத்திமேலேயாயி, வாச்சுதுவவரைத்தொட்டு வளமாக
வேறிப்பாரே. (௩௮௨)

பார்க்கையிலகண்டந்தோன்றும் பாவற்றவெளியேயாகும்,
நேர்க்கையில்நிலையுமில்லை நிறைந்தெங்கும்நின்றசோதி, சேர்க்
கையிலடுக்கக்காணுந் தெளிந்தபின்பிறப்புப்போச்சு, கார்க்கை
யில்கருத்தைவிட்டாற் கைப்பலன்பிறவிதானே. (௩௮௩)

பலனாகவேதாந்தத்தைப் பார்த்தவனேரங்காட்டிக், குலனா
கவிறந்துபோனாற் கொடுக்காதோஞானமப்பா, தலனாகரசன்ம
த்திற் றானவன்சனனமாகிப், புலனாகஞானத்துள்ளே புக்குவான்
புக்குவானே. (௩௮௪)

புக்குவதெவ்வாறென்னிற் பொலிவானவுவமைகேளு, தக்கு
வதாங்கஞ்சூதந் தனிக்கண்டாநவலோகங்க; ளொக்குவதென்ன
போலே யொடுங்கிப்போமனந்தானப்பா, மக்குதாய்விவேகம்
போனால் மாடோதான்மனிதன்றானே. (௩௮௫)

தானென்றமனிதன்சென்மந் தனிக்கோசுகிறத்ததாலே, கா
னென்று பிறப்பார்கோடி களங்கராய்ப் பிறப்பார்கோடி, வே
னென்றவங்கயினப் விளங்கியேபிறப்பார்கோடி, வூனென்றகாம
க்காமி யொருகோடிபிறப்பார்காணே. (௩௮௬)

காணலாமாமோகோடி கருத்துள்ளேநினைப்பார்கோடி, பூ
ணலாமோதத்துள்ளே புணர்ச்சியாய்க்கிடப்பார்கோடி, தோண
லானூலைப்பார்த்துச் சுற்றியேயலைவார்கோடி, யாணலாகோடிக்
கோடி யதற்குள்ளேயொருவர்காணே. (௩௮௭)

ஒருவரைப்பத்தியேறி யோகோகோநாலிற்செல்வான், பரு
வந்தான்மற்றோரெல்லாம் பார்க்காதகர்மமேதோ, வுருவந்தா
னெடுத்தாலென்ன வுற்றுப்பார்கர்மியானால், திருவந்தான்பார்க்
கவொட்டார் சுழன்றவன்செந்துவாமே. (௩௮௮)

செந்துவாய்ச்செனிப்பதெல்லாஞ்சேர்ந்தந்தநாலுக்குள்ளே பந்துவாம்விவேகம்வந்தாற் பலபலயோனியார்காண், கந்துவாம் விவேகம்போனாற் கரையில்லாப்பிறப்புக்கப்பா, இந்துவாம்பல கைமேலே யிருக்கின்றாள்தாயைப்பாரே. (௩அகூ)

பாரந்தமணித்தாய்கையிற் பகடைகாணிந்திரசாலங், கோர ந்தச்செக்கட்டான்போற் கோடானுகோடிசென்மம், வாரந்தம ணிந்தாய்கண்டால் வளர்ந்திட்டபிறப்புப்போச்சு. ஆரிந்தமுறை யைப்பார்ப்பா ரறிந்தவர்பிறந்திடாரே. (௩கூ0)

பிறந்திட்டவிந்திரசாலம் பேரானசின்னம்போலே, அறந்தி ட்டவமுரிசிங்கி ஆகாசாஆந்தையா, திறந்திட்டந்தப்பினாலுஞ் சேற்றுக்குளெறிந்தகல்போ, லிறந்திட்டபாஷாணங்க ளேக்கமு நகண்டிலேனே. (௩கூக)

கண்டிலேன்வாதமொன்றுங் காணொணுவொன்றேன்வாயி ல், பண்டிலேன்மண்ணைவாரிப் பளிச்சென்றுவாயில்போட, வொ ண்டிலேன்வீரக்கட்டு வுறுதியாயொன்றுகேளு. தண்டிலேன்கார சாரச் சமையலையொன்றுமேகேளே. (௩கூஉ)

கேளுநீவெள்ளைபொன்று கெடிமாலின்தேவியொன்று, தா ளுநீசூதமொன்று தங்கமிருகாரேயொன்று, வாளுநீகாரச்சுன்ன ம் வழங்கியபூரச்சுன்னம், ஆளுநீரெண்டும்ரெண்டு மாகாசகழஞ் சிதூக்கே. (௩கூ௩)

தூக்கியேயண்டநீரிற் சுகமாகவரைத்துச்சாமம், தாக்கியே பழச்சாறுகுத்தித் தனிபரைவாலையாகும், வாக்கியேவாலையோ டே மாட்டியேகாரசாரந், தேக்கியேசமனுய்மூன்று சிறக்கவெ ண்கருவாலாட்டே. (௩கூ௪)

ஆட்டியேநாகம்பத்தி லப்பிடாமப்பாமூன்று, பூட்டியேபுட த்தைப்போடு புகழாகவுருக்கிப்பாரு, நீட்டியேகண்விட்டாடி நி லைத்ததுநாகக்கட்டு. கூட்டியேசமனுய்ச்சூதங் குறையாமற்சேர்த் துக்கொள்ளே. (௩கூரு)

கொண்டதிற்சமனுய்வீரங் கூட்டியேயரைப்பாயானல், த ண்டதில்விடுபட்டாடுந் தனிச்சூதமகத்தாம்வாலை. அண்டுமுன்ச வ்லோகத்தி லாணிதான்பத்துபத்து, வண்டுதின்வீராவேசம் வ சையெல்லாஞ்சொல்லக்கேளே. (௩கூசு)

சொல்லியவாலைக்குள்ளே சூட்டிடுதங்கரேக்கை. மல்லியக
ரும்பையானை மத்தித்துமென்றுறபோல, அல்லியேதின்னும்பா
ராயம்மட்டுங்குத்துவாவா, நல்லியதின்றபின்பு நாட்டிடுவேதை
யாடே, (௯௯௭)

ஆடவேவேதைதானு மடைவெல்லாஞ்சொல்லக்கேளு. நீ
டவேபாஷாணங்கள் நிலைக்குமெல்லாம்வாலைப்பூசி, பூடலேவாட்டி
வாட்டி யுருக்கிடவுருகுமெல்லாம், கூடவேபாஷாணங்கள் குலங்
கண்டுவேதைபோடே. (௯௯௮)

போடவேவாலைபத்து புகழ்சூதஞ்சுத்திபத்து, நீடவேயொ
ன்றாய்க்கூட்டி நேராகசுவுப்புரசன்னம், தாடவேசாரமபத்து த
ணியொக்கவரைக்கநீராம், ஊடவேபூரம்போட்டேயுறவாகக்கொ
திப்பித்தேறே. (௯௯௯)

ஏறையிற்பத்துபத்து யிழைந்தொன்றிவாலையாகும், தே
றையில்மார்க்கமாகச் சேர்க்கேறுதூறுதொந்தம், வேறைபின்
னொன்றுமில்லை வெகுகோடிவாலையாச்சு, ஊறையிலுதகம்போல
வொருகோடிவேதையாமே. (௲)

ஆமிந்தவாலைரெண்டு மடர்ந்தமுன்னாகம்ரெண்டு, காமிந்த
வீரம்ரெண்டு கடியதோர்பூரம்ரெண்டு, வோமிந்தவுரந்தான்ரெண்
டு வொக்கவெண்கருவாற்கட்டி, யாமிந்தத்தங்கப்பத்தி லப்பிநீ
ரவியிற்போடே. (௲௧)

போட்டுநீமூன்றுநாளிற் புகழாகக்காந்திகாட்டு, ஆட்டுநீத
ங்கமெல்லா மப்பனைமெழுகுமாகும், ஓட்டுநீமெழுகில்வேதை
யொடுங்காதுகோடாகோடி, நீட்டுநீலிங்கமேலே நிலைத்தரைவா
சிபூசே. (௲௨)

பூசியேயுருக்குத்தொட்டிப்பொடியிலேபிறட்டிடப்பா, மாசி
யேசுன்னச்சீலை வளமாகச்செய்துநீயும், ஆசியேபுடத்தைப்போ
டா யம்மம்மாவுருகிநிற்கு, மோசியேநவலோகத்தி லொருநூறு
க்கொன்றுபோடே. (௲௩)

போடவேபத்துமாற்றும் புகழானலிங்கமப்பா, வாடவிப்ப
டியேசேர்ந்தா லறுபத்துநாலுங்கட்டும், நீடவேயினத்தைக்கட்
டு நீட்டிவாசர்க்கையெல்லாம், ஓடவேவேதைபோட வுயர்த்தி
யைப்பாருபாரே. (௲௪)

பாருநீகவசமான பரிமெழுகெல்லாம்வாங்கிச், சாருநீசாரநீ ரைச் சத்தத்திற்குத்தியாட்டிக், கோருநீபதமேபண்ணு கோடா னுகோடிசாகும், ஆருநீவென்னைப்போலே யறிவிப்பார்வாதங் காணே. (௩௭௫)

காணிந்தமெழுகைப்போலே காணுமோநவலோகங்கள், பூ ணிந்தவொன்பதாலே போக்கென்றற்சொல்லக்கூடா, வாணிந் தவுபரசங்கள் வகையெல்லாம்மெழுகேயாகும், ஊணிந்தமெழுகி ன்லேதை யுத்தமியறிவாள்காணே. (௩௭௬)

அறிவானவநவலோகங்க ளாகியமெழுகில்வேதை, பிறிவான றுறதொட்டுப் பேர்சகத்திரமே போடும், செறிவானவுபரசங்க ள் கிலேத்திட்டுமெழுகின்வேதை, குறிவானகோடிக்கோடுங் கொ ள்ளயான்பார்த்தவாறே. (௩௭௭)

பார்த்திட்டபடியேசொன்னேன் பாராதேவிட்டுவிட்டேன், வேர்த்திட்டவென்றாற்குள்ளே வெளுத்தொன்றுந்தப்பாதப்பா, மார்த்திட்டமாகச்சொன்னேன் மனதூன்றிநூலேப்பாரு, கோர்த் திட்டவண்டமெல்லாங் கொடுமைக்குளடங்கும்பாரே. (௩௭௮)

அடங்கிடுமண்டரண்ட மறுதியாம்புவனமெல்லா, மடங்கிடு ம்பதமேகொட்டே பறுபத்துநாலுசித்தி, படங்கிடுஞ்சிவாசிவை ரெண்டுதோற்றமெல்லா, மடங்கிடுமுன்னுக்குள்ளே யப்பனேநா லேப்பாரே. (௩௭௯)

நாலேபேபார்க்கவென்று னன்பாகச்சொல்லக்கேளு, காலே யேமாலேவேண்டாங் கடிபதோர்கூட்டவேண்டாம், மாலேயேநடு ச்சாமத்தில் வைத்துநீயிருந்துபாரு, கோலேயேயானும்பார்த்துக் குமிழியாந்தலத்தில்நில்லே. (௩௮0)

நின்றிடலகண்டத்துள்ளே நிலேத்தெழுக்கீரெட்டப்பா,வொ ன்றிடுவுயிரேயாகு முள்ளாறில்வகாரம்நிற்கும், கன்றிடிற்சாவு பொய்யாவ கைக்கெட்டநாலுங்காணும், மன்றிடில்வாசியேறி மா ர்க்கம்நால்வீதிபோடே. (௩௮௧)

போடையில்மூன்றும்வீதி புகழானதாயுங்காண்பாள், ஆடை யில்மூப்பாழெல்லா மப்பனேவெளியாய்ப்போகும், நீடையிற்கு திரையேற்ற நேராச்சுமகனேயென்பாள், ஊடையில்நாவிற்புக்கி யொன்றுசுவிருவென்றுளே. (௩௮௨)

இருவென்றசொல்லைக்கேட்டே னின்புடன்குதிரைகாணே ன், கருவென்றவாறுதாரக் கனமெல்லாஙகாணேன்காணேன்,குருவென்றமொழியுங்காணேன் குறித்திட்டபொறியுங்காணேன், மருவென்றதாயுங்காணேன் மட்டற்றபோதமாச்சே. (௪௧௩)

போதத்தில்நின்றேயுன்னிப் போதாந்தமேறிப்பார்த்தேன் கோதற்றசுழியாம்நீரிற் குமிழிபோலொடுங்கிப்போனேன். ஏ தைத்தான்சொல்லவின்ன மியானென்றநாமம்போச்சு, காதந் தையல்லமுன்னே காணுதுபாருபாரே. (௪௧௪)

பாரந்தப்போதத்தொக்கும் பரிவானவாலைச்சூதம, காரந்த த்தாயோடொக்குங கடியதோர்தங்கவெள்ளை, சேரந்தவெளிப் பானுக்குஞ் சேர்ந்திட்டவுபரசங்கள், வாரந்தவொளிப்பாளொக் கு மன்னியலோகந்தானே. (௪௧௫)

தானென்றசரிதைஞானந் தனிவெளிப்பாழுமாச்சு. வானெ ன்றகிரியைஞானம் வளமானவொளிப்பாழாச்சு, கோனென்ற யோகஞானம் குலவெளியொளிப்பாழாச்சு, கானென்றபதத்தின் மேலே கன்னிதாளிருந்தாள்பாரே. (௪௧௬)

இருந்துநீநாலுக்குள்ளே யேகவுநகூடாவிட்டால், அருந்து நீமாயிபாத மன்பாகப்பூசைபண்ணு, சொரிந்துநீமனதையொன் றிச் சூட்டிநீபூசைபண்ணு, அரிந்தநல்வாதம்வந்து அடிமைநா னென்னுநகாணே. (௪௧௭)

காணவேமனதிற்பூசை கபடறச்செய்தாயானற், பூணவே ஞானத்துள்ளே புக்கலாம்புகலாமப்பா, தோணவேயென்னவெ ன்று சோம்பிநீவிட்டாயானல், ஆணவேவாதஞான மடியோடே தகர்ந்துபோமே. (௪௧௮)

போகுமேவாதம்விட்டாப் பொலிவான வாதம்பொய்யாம், வாகுமேவாட்டுதப்பில் மலர்ந்தங்கேயுதிர்ந்துபோகும், வேகு வேபுடங்கள்தப்பில் விரைந்தங்கேசுண்டச்சேரும், பாகுமேவுரு க்குத்தப்பிற் பண்பானகிட்டமாமே. (௪௧௯)

கிட்டம்போனுதிப்போட்டுக் கெடிநூலைப்பொய்யெண்ணு தே, கிட்டம்போற்செய்தாயானுற் சேரவும்பலிக்குமப்பா, மட் டம்போலாச்சுதென்பார் வளமானகாவிக்கோடும், அட்டமபோ ற்கண்டமாற்றுக் களவுநான்சொல்லக்கேளே. (௪௨௦)

கேளுநீநான்குமூன்று கெடியானவர்னங்கண்டாற், ருளுநீ யீபம்போட்டுத் தாக்காதேயெல்லாம்போகும், வேளுநீதங்கங்கூட்டி விரைந்தங்கேபுடத்தைப்போடு, யாளுநீதங்கத்தோடே யதன்கிளையிறங்கும்பாரே. (சஉக)

இறங்காமற்கடித்துக்கொண்டே யிருந்திடுஞ்சிலதுபாரு; வுறங்காதேமனதைநீயு முட்டியேதங்கஞ்சேரு, திறங்காணவிறங்கும்பாரு திருட்டெல்லாம்வெளியாய்ப்போகும், அறங்காணமட்டுமெல்லா மாமிந்தப்படியேபாரே. (சஉஉ)

ஆமிந்தப்படியேவிட்டு ஆகாதானுதிப்போட்டுப், போமிந்தநூலிற்போட்டுப் பொய்ப்பாட்டேயென்பார்மாண்பர், காமிந்தவாதிக்கப்பா கைகண்டபொன்னுஞ்செம்பாம், ஓமிந்தக்குணத்தைப்பார்த்தே யுத்தமத்தொழிலைச்சொல்லே. (சஉரு)

சொல்லையிற்கேட்டுநல்லோர் சுகமாகமனதில்வைப்பார், வல்லையிற்கசடரய்யா வாய்ப்போக்காபெங்குஞ்சொல்வார், எல்லையிலிரண்டுப்பாரு யேற்றவர்க்கிதனைச்சொல்லு, வல்லையில்வாய்வினார்க்கும் வாதமும்பலியாதென்னே. (சஉச)

என்னவுட்சமபமாறி யிருந்தவர்குணத்தைப்பாரு, பன்னவேபிரமர்மாறிற் பாஷாண்டிபேசவேண்டாம், கன்னவேவாமந்துள்ளே கலந்தாக்காற்பேசுபேசு; அன்னவேதூஷித்தாக்கா லாரென்காண்மவுனமாமே. (சஉரு)

மவுனத்திலிருக்கும்போது வாசியிலேறியாடு, மவுனத்திலிருக்கும்போது வாதத்தையுரைத்துப்பாரு, மவுனத்திலிருக்கும்போது மகத்தானநாலைப்பாரு, மவுனத்திலிருக்கும்போது மணியிட்டுஅண்டம்பாரே. (சஉசா)

அண்டங்கள்புவனந்தாண்டி யளவைத்தபதமும்பார்த்துக், கண்டந்தவாரையெல்லாங் கைமுறையாகத்தீர்த்துப், பிண்டங்களுள்ளதெல்லாம் பேருகநோக்கிப்பார்த்துத், தண்டங்கோலிற் கூடித் தம்பம்போலிருந்துபாரே. (சஉஎ)

தம்பம்போலிருக்கவல்லோர் சாற்றினுரீசன்வாதங், கம்பம்போற்காமியத்தைக் காட்டவோவிடவேசொன்னுர், கும்பம்போன்முலையைப்பார்த்துக் குலைப்போரின்வேறுசொன்னுர், விம்பம்போலிருக்கச்சொன்னுர் வேதாந்தமூர்த்திதானே. (சஉஅ)

தாளென்றவுப்பேயாதி தனைவிட்டால்வாதம்போச்சு, வே
ளென்றவுப்பைநீற்றி விரியவேசொல்லக்கேளு மானென்றகட்டு
முப்பை மணிபோலவாங்கிக்கொண்டு, வேளென்றவழலைச்சுன்
னம் வீரமுங்கூட்டித்தேயே. (௪௨௯)

தேய்த்ததையுலரப்போட்டுத் திறமாகவூதுவூது, மாய்த்த
துகோடியோடே மல்லிகைப்பூப்போலாகு, மோய்த்ததுவாகம்
வந்தே மொடுங்கிற்றுவுப்புக்குள்ளே, யாயத்திதையறியாமாண்
பரலையுருரலையுருரே. (௪௩0)

அலையாதேசொல்லக்கேளு வப்பனைவுப்பின்வித்தை, மலை
யானமேருப்பொன்னாய் மாட்டினரீசனன்று, தலையானவாதத்து
க்குச் சார்வடியுப்பேயாச்சு; நிலையானவுப்பின்வேதை நீட்டுமேற
ன்கேளுநீகேளே. (௪௩௧)

கேளென்றவுப்புச்சுன்னம் கெடியானசாரம்ரெண்டு, தா
ளொன்றியரைக்கநீராங் கனிக்குள்ளேபோடக்கேளு, வாளொன்
றுவீரம்பூரம் வழலையின்சுன்னத்தோடு, வேளொன்றுமழுதும்
போடு வெறும்ரெத்தமாகும்பாரே. (௪௩௨)

பாரிந்தநீருக்குள்ளே பலகையாங்காரந்தோய்த்து, வாரிந்
தரவியிற்போடு மகந்தானமுழுக்கட்டப்பா, காரிந்தநீருக்குள்
ளே கடியதோர்சாரந்தோய்த்து, வேரிந்தவாட்டவாட்ட விரவிய
மெழுதுமாமே. (௪௩௩)

மெழுகிலேவீரஞ்சற்றே முயற்சியாய்ப்பிசைந்துகொண்டு,
செழுகியேதங்கரேக்கை நீட்டையில்தின்னுந்தீயில், அழுகிலேப
ரிசைவேதை யாடிநிமப்பாகேளு, வொழுகிலேவீரன்மேலே யுயர்
த்தியாய்ப்பிடித்துவாட்டே. (௪௩௪)

வாட்டையில்வீரன்முன்னே மணிபோலேயுருகிநிற்கும்; நீ
ட்டையில்முறையேவாட்டு நிலையாறும்பத்துஞ்சாகும், ஊட்டவும்
முறையேகண்டு ஆட்டிடப்பொன்னுமாகும், ஆட்டவிச்சாரவே
தை யளவில்லைகாணுங்காணே. (௪௩௫)

காணுமுன்னுலர்ந்தகாரங் கள்ங்கறவூதுசுன்னம், பூணவிச்சு
ன்னத்தோடு புகழ்ரெண்டுகாரம்போடு, வூணந்தச்சாரங்காரமு
றவாகப்போட்டேயாட்டு, தோணந்தசலமேயாகுஞ் சொருசான
காரநீரே. (௪௩௬)

நீர்மேலைவீரம்போடு நிலையானபூரம்போடு, காரிமேலபுனுகினோடு கடியதோர்வழலைச்சுன்னந், தாரிமேலம்பாட்டுநீரைத் தனிபொக்கந்கலக்கிக்கொண்டு, வாரிமேலதங்கரேக்கை மாட்டிவாமெல்லுங்காணே. (௪௩௭)

காணவேநீரில்வீரங் கட்கிமேயதோய்த்துத்தோய்த்துப், பூணவேவிளக்கில்வாட்டு பொரிபோலெமெழுகாய்விழும், ஆணவேபொன்பதுக்கு மப்பனேபரிசவேதை, தோணவேமெழுகுலிங்கஞ் சூட்சமாய்க்கூட்டிக்கொள்ளே. (௪௩௮)

கொள்ளவேசாரச்சுன்னங் குறையாமற்பலமொன்றப்பா, தள்ளவேசாரம்ரெண்டு தனிரெண்டுமொன்றுயாட்டு, வுள்ளவேமுன்னோனாலு முடனாகக்கலந்துகொண்டு, தன்னையேவெள்ளிரேக்கைத் தாக்கிமெல்லுப்பாரே. (௪௩௯)

மெல்லிட்டநீருக்குள்ளே விதமாகச்சீனந்தோய்த்து, வல்லிட்டரவியிற்போடா யப்பனேமுழுக்கட்டாகு, மல்லிட்டவெள்ளையோடு மகத்தான்வீரயபோடு, சொல்லிட்டரெண்டும்ரெண்டு சீனந்தானாலுபோடே, (௪௪0)

போட்டதைக்கருவாலாட்டிப் புகழ்வெள்ளிரேக்குரெண்டு, நீட்டதில்நின்றுபோகும் நிலையாகவில்லைதட்டு, ஆட்டதில்சுன்னத் தூளை புபாவுங்கீழும்வைத்து, மூட்டதில்தீயைமெத்த மூதண்டச்சுன்னமாமே. (௪௪௧)

சுன்னந்தான்வங்கநாலிற் கூட்டிடாசிதமாதும், பன்னந்தான்வெள்ளிமாற்று பதினாறுதப்பாதப்பா, கன்னந்தானிரும்புசெம்பிற் காட்டிடப்பத்துங்காணு, மின்னந்தானென்னசொல்வேன் வயினேன்பாருபாரே. (௪௪௨)

பாருமுன்காரஞ்சீனம் பகருதேயூதுசன்னம், வாருநீபலமோடப்பா வான்சாரம்பலமும்ரெண்டு, காருநீபனைக்கநீராம் சரக்குமுன்னாலும்போடு, கோருநீபறியைக்காட்டு கொடுக்கென்னமூறுங்காணே. (௪௪௩)

முறுங்கியநீறுக்குள்ளே மூதண்டலிணங்கன்தோய்த்து, அருங்கிபரவியிற்போடு அமமம்மாசருகககட்டும், தருங்கியநாகஞ்சூதந் தனிவீடுமொன்றுய்க்கூட்டப், பருங்கியநாகம்போலே பாருநீசலமுமாமே. (௪௪௪)

சலத்திலேதங்கரேகைச் சேரையிலுண்ணு மூண்ணும், பல த்திலேபிணக்கன்தோய்த்துப் பதருமேதவலுத்துப்போடு, அலத் திலேதங்கச்சுன்ன மதனோடுவீரம்லிஙகல், குலத்திலேசிவக்கு ம ப்பா கொடியதோருப்பிற்பூசே. (௪௪௫)

பூசியேரவியிற்போடு புகழானபவளமாகு, மாசியேயில்லையி ல்லை மகத்தானவேதையோடுல், கோசியேகாரியத்திற் கொடுக்தி டுமைந்நூற்றென்று, மாசியேமாற்றேறதென்னில் வளமாகயிரு பத்தஞ்சே. (௪௪௬)

இருபத்துவரிசையாச்சு தெளிசானயீயத்துள்ளே, கருபத்து வெட்டுலோகங் காட்டையிற்பதினைந்தாகும், திருவொத்துச்சிவ காமித்தாய் செப்பினுள்யானும்பார்த்தேன், உருவொத்துக்காய் ந்தவுப்பை பூதுநீசுன்னமாமே. (௪௪௭)

ஆமிந்தவிணங்கன்சுன்ன மப்பனேபலந்தானென்று, வாமி ந்தகாரம்ரெண்டு மாட்டியேயரைக்கநீராங், தாமிந்தக்கருமுன்ன னு சாற்றியேகலந்துகொண்டு, வோமிந்தத்தங்கரேக்கை யூட்டி யேயுறத்துப்பேடே. (௪௪௮)

உரத்தோடேகுநவண்டொக்க வோகோகோகலந்துகொண் டு, காத்தோடேநாபிகூட்டிக் கலந்தங்கேவைத்துக்கொண்டு, ச ரத்தோடேதஞ்சுதோய்த்துத் தனிப்படரவியிற்போடு, நிறத் தோடேவாதக்கோனுர் நிச்சயஞ்செத்தார்காணே. (௪௪௯)

செத்திட்டதுருசுதன்னைச் சிறக்கவேதனியேபோட்டுப், பத் திட்டவூகிப்போடு பளிச்சென்றுசுன்னமாகும், மத்திட்டசுன்ன மொன்றுவழங்கியசாரம்ரெண்டு, மொத்திட்டேயரைக்கநீராமொ டுங்கியவாதவிடே. (௪௫௦)

வீடானசெயநீர்வார்த்து வெருவிடும்பலகைபூரம், நாடான குகையிலிட்டு நலம்பெறவூதுசுன்னங், கோடானுகோடிசாகுங் கோகோகோவாதங்கொள்ளை, தேடானவீரங்கட்டச் செப்புறே ன்செப்புறேனே. (௪௫௧)

செப்பியசெயநீர்க்குள்ளே சிறக்கவேவீரந்தோய்த்து, வப் பியபூரச்சுன்னத் ததற்குள்ளேபுரட்டிக்கொண்டு, வொப்பியதீயி ல்வாட்டு வொடுங்கிபேமணியாய்நிற்குங், கொப்பியவீரக்கட்டை க் குமட்டியேசிமிளைக்கப்பே. (௪௫௨)

நிமிளையையாட்டியூது நிலத்தங்கேவிரியுஞ்சுன்னம், அமளை
யதங்கமேலே யப்பிடுநிமிளைச்சுன்னம், கமளையதங்கம்வாட்டிக்
கடுந்தணலூதுசுன்னந், தமளையதங்கச்சுன்னஞ் சாற்றுறவகை
யைக்கேளே. (௪௰௩)

கேளுநீதுருசுநீரில் கெடுவேறேதுருசுதோய்த்து, வாளுநீ
வெயிலிற்போடு வளமாகத்தினந்தானஞ்சு. நாளுநீதங்கச்சுன்ன
ம் நாலுக்குவொன்றாயப்பித், தாளுநீகருவாற்பூசித் தனிச்சுன்ன
க்குகையில்வையே. (௪௰௪)

வைத்துநீயூதிப்போடு வச்சிரம்போலாஞ்சுன்னம். கைத்து
நீயிந்தச்சுன்னங் காட்டுமுன்சூதஞ்சாகும், பத்துநீயுருக்கிச்சூத
ம் பச்சையாம்சூதமூட்டு, வைத்துநீயொன்றுநூறு வாயென்னக்
குடிக்கும்பாரே. (௪௰௫)

குடிக்குமேசூதமப்பா கோடானுகோடிமட்டு, மடிக்குமே
யிந்தச்சூத மாட்டிச்சாரணையேசெய்ய, வடிக்குமேகெவுனமார்க்
க மண்டமும்பதமுங்காட்டும், பிடிக்குமேநாலுந்தாண்டிப் பே
ரொளிகாட்டுங்காணே. (௪௰௬)

காணவேதுருசுநீரில் கலந்திடும்பூரச்சுன்னம், காணவேது
ருசுநீரில் கலந்திடுபுழுதுவீரம்; காணவேதுருசுநீரில் கலந்திடுவ
ழலைச்சுன்னம், காணவேதுருசுநீரில் கலாமாட்சிசுன்னந்தானே.

தானென்றநீருக்குள்ளே சரக்காறுபத்துந்தோய்ப்பாய், தா
னென்றநீருக்குள்ளே சாரகாரலவணந்தோய்ப்பாய், தானென்ற
நீருக்குள்ளே சகலமாமுபரசங்கள், தானென்றநீரில்தோய்த்துத்
தனியூதச்சுன்னமாமே. (௪௰௮)

சுன்னமாம்பாஷாணங்கள் துணையானகாரசாரம், சுன்னமா
முபரசங்கள்தொட்டதுவிட்டதெல்லாஞ், சுன்னமாமலையுமண்ணு
ஞ் சுழன்றிடமரமுங்கூடச், சுன்னமாம்வெவ்வேறப்பா தொலையா
துவேதைகேளே. (௪௰௯)

வேதையையாடுதற்கு விரிக்கவுமோலையில்லை, பாதையாம்
வோலைநீறும்பதறுதுனமக்குவப்பா, வேதையான்சொல்லப்போ
றேனென்றாலுமுடிவைக்காணேன், காதையாமீசனன்று கரை
காணென்றிட்டாரே. (௪௫0)

என்றிட்டவாதநூலை யேவரேன்காண்பாரானால்; தன்றிட்ட
மூலம்பாரு துனியாறுதனமும்பாரு, பன்றிட்டநாலும்பாரு பத
ருத்தமனதைத்தேற்று; வொன்றிட்டவொன்றுப்கூடு வொரு
சொல்லும்பொய்போகாதே. (௪௬௧)

போகாதமுதற்பாழத்திப் புகழ்ந்தங்கே முனைந்துதாண்டி,
வாகாகரெண்டுபொழு மண்ணியேபடர்ந்துநின்று, தாகாகந்தாய்த்
துக்காபாற் றனிவிதையண்டமாச்சு, பாகாகாயிரந்தான்விந்து
பாரெட்டுக்காயொன்றாச்சே. (௪௬௨)

ஒன்றானகாயைக்கேளு வொடுங்கிப்பேரண்டமாச்சு, கன்றா
னவிந்தக்காய்போற் கணக்கில்லைவழக்குமில்லை, தன்றானவத்தீக்
காய்ச்சச் சாதகந்தாயுங்காணாள், வின்றானவத்தீக்கொக்கும் வெ
ருவியவுப்புத்தானே. (௪௬௩)

உப்பாலேயண்டமாச்சு வோகோகோசடலமாச்சு, வப்பா
கேளுப்புப்போனா லறுசுவைபாழாய்ப்போச்சு, கொப்பாலவுப்
பைத்தொட்டால் கொள்ளையோகொள்ளலாதந், தப்பாதுவுப்புச்
சூதஞ் சமனாகுஞ்சாதிப்பார்க்கே. (௪௬௪)

சாதிக்கவுப்பைத்தொட்டுச் சாங்கமாய்வேதைபார்த்த, வா
திக்கிங்கொன்னவேலை வரிசையாய்நாலைப்பாரு, நீதிக்குநடக்கு
மார்க்கம் நிஷித்தமாய்விட்டானாகில், பேதிக்கயோனிகோடி பிற
ப்பதுதப்பாதென்னே. (௪௬௫)

தப்பாது பிறவிப்பாசாதிக்கமாட்டாராகில், கொப்பானவா
தமென்ன கொடுக்குமோமுத்திசொல்லு, வொப்பானநாலைப்பா
ர்த்தோர்க்குபர்ந்தவன்சித்தவாதி, யப்பாகேளும்புத்தி யா
காதுபோடிபோடே. (௪௬௬)

போடார்கள்வாதம்வந்தாற் பொங்கியேமதத்தாற்சென்று,
வாடாதீவாதிக்கென்றும் வருகாதுபிறவியென்பார், கோடானு
கோடிபாவங் கூசாமற்செய்வார்பாவி, நீடானசனனந்தோறும் நீ
சராய்ச்சனிப்பார்காணே. (௪௬௭)

சனிக்கின்றசனனந்தோறும் சார்ந்திட்டசுகிர்தத்தாலே, க
னிக்கின்றமனிதசன்மங் கலந்திடுமப்பாகேளு, பனிக்கின்றமனி
தனாகிப் பரபரம்பார்த்தானாகிற், றுனிக்கின்றவாதசித்தி சூட்டுவா
ன்றாய்தான் கேளே. (௪௬௮)

கேளுநீயிந்தப்பாட்டாற் கெடியாகும்வாதசித்தி, வேளுநீ பெண்ணுற்பாதி விளங்கிபவகந்தபாதி, தோளுநீபெண்ணைக்கண்டு துணிவாகப்பாவஞ்செய்தால், தாளுநீசிவனாற்றள்ளச் சமர்த்துண்டோவில்லைதானே. (௪௬௯)

இல்லையேயாபாவிக்கப்பா வீன்றிட்டதந்தைதாயும், பல்லையேயிகத்திற்பாவி பரத்துக்குமாமோசொல்லு, கல்லையேபகிச்சிக்கொட்டக் கசகாதுபோலேமாண்பர், பல்லையேகாட்டிக்காட்டிப் பாவத்தைச்செய்வார்பாரே. (௪௭௦)

பாரந்தலோகத்தோர்க்குப் பருவமாய்ப்புத்திசொன்னேன், நேரிந்தப்புத்திவிட்டால் நிலைத்திட்டவாதம்பொய்யாம், வாரிந்த மனதைப்பாரு வாழ்கிறவுலகைப்பாரு. சாரிந்ததேகந்தன்னைக் கடுகியேவாசியேறே. (௪௭௧)

ஏறியேவாசிமேலே யிருந்திட்டுக்காலைபாட்ட, மாறியேமூன்றுவீதி வரிசையாய்ப்போடலாகுந், தேறியேநாலுங்கிட்டுஞ் செகமெல்லாம்நீயேயாகும், மாறியேபார்த்துப்பார்த்து மறுபடிவாதம்பாரே. (௪௭௨)

வாதத்தைமுன்னேபார்த்தால் மபக்கத்திலழுந்திப்போவார் பேதத்தாலாசைப்பாம்பு, பிடரியிலேறிக்கொள்ளுங், காதற்றமூளிநாய்போற் கலைந்தெங்குமெச்சுற்றினும், ஆதற்றவுலகத்தோர்கை யடியுண்பான் சன்னுண்பானே. (௪௭௩)

சன்னுண்டபோதுசற்றே சாந்தியினிலைப்பான்பாவி, யண்ணுண்டக்ஷணந்தான்போனா லாங்காரப்பேயேயாவான், கண்ணுண்டமாயைபாரு கலந்துள்ளேயுன்னைப்பாரு, பண்ணுண்டவாதிகாளே பருவமாய்ப்பாருபாரே. (௪௭௪)

பருவமாய்க்கன்னிதானும் பாங்காகப்பூத்தாளானால், நிருவமாயஞ்சாநாளில் நேராகமன்னன்சேரில், தருமமாய்ப்புலமேமிஞ்சத் தனியூமையாகும்பிள்ளை, யருவமாய்ச்சலமேமிஞ்ச வந்தகனாவான்காணே. (௪௭௫)

காணவளுநிரத்துள்ளே கடும்வன்னிமிஞ்சினாக்கால், பேணவன்கர்ப்பமெல்லாம் பெருப்பாடாய்ச்சாய்த்துப்போடும், தோணவேவாயுவேறிற் சுக்கிலமுறிந்துகொள்ளும், பூணவம்பரமேவிஞ்சப் புகழானமலடியாமே. (௪௭௬)

ஆமிந்தவரிசைபோலேயப்பனேயெகர்மம், போமிந்தப்பிரிதிவியேறிற் புடத்துக்குக்கடித்துக்கொள்ளும், தாமிந்தச்சலமேயேறிற் றளுக்கென்றுவூறமேலேறுங், காமிந்தவன்னியேறிற் கண்டபொன்புடத்திற்போமே. (சஎஎ)

போகுமேவாயுவேறிற் புற்றுப்போற்கறுத்ததப்பா, வாகுமேவானேமிஞ்சில் வர்னங்களொன்றுமில்லை, பாகுமேயிந்தமார்க்கம் பண்பாகப்பாருபாரு, வாகுமேவயதுமாறு மன்வைத்தான் கேளுங்களே. (சஎஅ)

கேளுநீயிடையில்மண்ணிற் கெடியாகப்பூரித்தோடில், வாளுநீபெண்ணேயாவாள் வயதங்கேநூறுமாகும், தோளுநீசலத்திலோடிற் சுகமானவெண்தப்பா, காளுநீதீயிலோடிற் கன்னிக்குமறுபதாமே. (சஎகூ)

ஆமிந்தவாய்விலோடில் அமர்ந்ததுநாற்பதப்பா, தாமிந்தவிண்ணேயானாற் சமைந்ததுவிருபதாக, வோமிந்தப்பஞ்சபூத வொடுக்கத்திற்கொப்பமானால், கோமிந்தகுழந்தைச்சாவு கோடானுகோடிதானே. (சஅய)

தானென்றபூதமொன்றில் தனியஞ்சுமாடுங்காலம், வேனென்றகடிகைதன்னை விளங்கியேயறித்துப்பாரு, வானென்றகடிகைக்குள்ளே வயதெல்லாம்வெளியாய்ப்போகும், ஆனென்றவங்தமைய மாதியிற்பிறித்துச்சொல்லே. (சஅக)

பிரிக்கையில்வயதுவர்னம் பேராகவெளியாய்ப்போகும், மரிக்கப்பின்கலைக்குமானால் மார்க்கந்தான்முன்போலப்பா, தரிக்கத்தான்கண்டுகூடுஞ் சாதகமிதுதானப்பா, செரிக்கத்தான்பிறந்தநாளை நேரென்பார்மூடர்தாமே. (சஅஉ)

நேரானகெர்ப்பமெல்லாம் நிலையாகச் சொன்னேன்சொன்னேன், காரானவேமகெர்ப்பம் கண்டிந்தப்படியேசொன்னேன், சாரானரெண்டும்பாரு சாதகவாதியானால், வேரானபஞ்சபூதம் விரைந்திட்டசரக்கைப்பாரே. (சஅங)

சரக்கிலேபஞ்சபூதஞ் சாற்றினேன்முன்னேயானு, மரக்கிலேசாயம்போல வப்பனேயுரைத்துப்பாரு, பரக்கிலேவிட்டாயானாற் பலனில்லைவாதமில்லை, யுரக்கிலேவாசிகொண்டு வுரைத்தேறியாறும்பாரே. (சஅச)

ஆறிலேயேறும்போது அவதியாயச்செத்தானாகில், தேறி லேன்மவுனனாகிச் சிவிகையிலேறுவானப்பா, கூறிலேசுமக்கும்பா வங்கொள்கியேபார்ப்பார்பாவி, தாறிலேலோகத்துள்ளே சமுசயந்தீரப்பாரே,　(௪அ௫)

சமுசயந்தீர்ந்தாறபோலே சாதிக்கும்வாதத்துள்ளே; சமுசயந்தீரச்செம்பைச் சாற்றியேகளிம்பைப்போக்கச், சமுசயந்தீரலோகந் தன்னுள்ளேவாட்டுவாட்டு, சமுசயந்தீர்ந்துவேதை சதகோடிக்கோடும்பாரே.　(௪அ௬)

ஓடுறதேதோவென்று ஆற்பனஞ்சொல்லக்கேளு, நாடுறவாசையாமே நலமாகப்பெண்ணைச்சேரில், நீடுறநினைத்துபுத்தி நிலைத்திடும்பிள்ளைக்கப்பா, வூடுறகர்மதர்ம முறைத்தங்கேதோணுங்காணே.　(௪அ௭)

தோணுறபோதுஞானந் தோணினால்ஞானியாவான், தோணுறபோதுயோகந் தோணினால்யோகியாவான், தோணுறபோதுகர்மந் தோணினால்கர்மியாவான், தோணுறபோதுவாதந் தோணினால்வாதியாமே.　(௪அ௮)

வாதியேயானாலென்ன மட்டற்றகர்மியானால், வேதியேவகாரசித்து விழலாகப்போடும்போடும், ஓதியேயடித்தேன்பாவி யொடுங்கியேநாலுங்காணார், நீதியேவாதமவந்த நேர்மைக்குமடுக்கவாறே.　(௪அ௯)

வாறினியித்தைக்காட்டிவகையென்னசொல்லப்போறே, னீறினிமேலேபூசி நிலைக்கவேவேடமபூண்டு, கூறினிநினைப்பதெல்லாங் குமந்திரஞானமானால், தேறினிவார்த்தைஞானத் திருடரைப்பாருபாரே.　(௪௯0)

பாருநீயில்லைவாழ்ந்தேன் பலபலதொழிலைச்செய்தேன், ஓருநீயுள்ளன்பாக வுறைத்தோரைப்பாருபாரு, சேருநீயவர்களோடு ஜெகஜாலம்வெளியாய்ப்போகும, காருநீவாசிநாலைக் கலந்தெல்லாஞ்சித்தியாமே.　(௪௯௧)

சித்தியாய்வங்கத்தாலே சேருறவாலைகேளு, மத்தியாய்விங்கத்துள்ளே வாங்கியேரசத்தையப்பா, வொத்தியவங்கம்ரெண்டு மோமிந்தாசமேயொன்று, பத்தியேபொன்றுப்சேர்த்துப் பருவமாய்க்கொறுக்கிக்கொள்ளே.　(௪௯௨)

கொறுக்கியபொடியில்வீரம் நூகரரெண்டேடையேபோட்டு
மறுக்கியமூன்றுநாளில் வகைச்சேரச்சமூசயமாகும், கறுக்கியரச
த்துக்கொக்கத் தனியிடைநாகங்கூட்டிக், குறுக்கியகல்வத்திட்டு
க் கூட்டவுமருந்துகேளே. (௪௯௩)

கேளிந்தவிடைக்குச்சாரங் கெடியண்டச்சுண்ணமப்பா, வா
ளிந்தவிடையேயோடு மத்திப்பாய்நாலுசாமம், வேளிந்தச்சாரத்
துக்கு வீரந்தான்பாதிபோடு, கோளிந்தநாகமூன்று குமட்டிடுஞ்
சூதம்பாரே. (௪௯௪)

சூதமாக்கரைந்தபோர்குஞ் சூழ்வீரம்படவேநாகம், வாதமா
மூள்ளேவந்து வாய்பொத்தியடியேயினன்று, நீதமாய்நாகசூதம்
நேருக்குவியம்சேர்த்து, வாதமாய்முன்போற்சார மண்டநீர்கூட்
டியாட்டே. (௪௯௫)

ஆட்டியேநாலுசாம மண்டநீர்பாதிவீர, மூட்டியேயரைத்து
லர்த்தி மொருநாள்போய்மற்றுநாளிற், கூட்டியேயபியம்சேர்த்து
க் குழுளிக்குஞ்சூதமப்பா, நீட்டியசூதத்துக்கு நேர்மையாய்ப்
பொடியுஞ்சேரே. (௪௯௬)

சேர்த்திதை யரைத்துநன்றாய்ச் செருமல் விடையேவீரய,
கோர்த்திதைக் குழப்பிக்கொண்டு கொட்டிவைபீங்கானுக்குள்,
மாற்றிதைமூன்றும்நாளில் வளமாக்கியிரும்பையுண்டு, பேர்த்தி
தைச்சூதராசன் பிறப்பட்டான்பாருபாரே. (௪௯௭)

பிறப்பிட்டசூதத்துக்குப் பேரிடைகவுரிகூட்டி, நிறப்பிட்
டேயரைத்துச்சாமம் நேர்வீரங்கவுரிக்கொக்கத், தறப்பிட்டுத்தி
னந்தான்மூன்று சுழன்றந்தக்கவுரிமெல்லும், அறப்பிட்டசூதமா
க வப்பனேயறிதுபாரே. (௪௯௮)

பாரிந்தச்சூதநேராய் பரவுமப்பிரேகச்சத்தை, வாரிந்தவ
ரைந்துச்சாமம் மாட்டந்தவிடையேவீர, மோரிந்தப்பீங்கானுக்கு
ளேனைந்துதினமேமவைக்கத், தெரிந்தச்சத்தியோடு சேர்ந்தவர்
வாரார்பாரே. (௪௯௯)

வாரதோர்சூதத்துக்கு மாட்டுநாலொன்றேதங்கம், போ
தோர்வாதசித்தி பெற்றுனேசெயமேதாரப்பா, கூரமேதாவென்ன
வேண்டாங் கொள்ளோமேயாகொள்ளோவேதை, தாரமேதாவேறுந்தி
ன்னச் சமர்த்தாகவிடுவித்தேதேறே. (௫௱)

கிழிவித்துச்சூதமப்பா விடுபட்டதீயோடொக்கும், அடியட்டதுருசச்சுன்ன மப்பனைபூரச்சுன்னங், குடிவைத்தரெண்டுரெண்டுங் கூட்டிதில்மூன்றுசாமம், நெடுவித்தேயரைக்கநீராம் நீட்டநற்சூதம்வாரே. (௫௭௧)

வார்த்துநீசெயநீரோடு வளமாகக்கொதிக்கும்போது, யேற்றுநீதங்கரேக்கை யிழுத்தங்கீகயுண்ணுமுன்னும், பார்த்துநீவாங்கிவைத்தாற் பாலைதானிதற்குப்பேரு, கோர்த்துநீவகைதபோடக் கொள்கிறேன்கேளுகேளே. (௫௭௨)

கேளுநீபலமாம்நூறு கெடியானலோகப்பாண்டம், வேளுநீபோட்டொன்றுலே விளைந்தேறும்விடம்போற்பாரு, தாளுநீபுடத்தைப்போடு தனிப்பாண்டம்பத்துபத்து, வாளுநீயுண்டுகொண்டு மகத்தானபோதம்பாரே. (௫௭௩)

பாரிந்தவாலைதன்னைப் பரிவாகக்கட்டிக்கொண்டு, சேரிந்தப்புடத்தைப்போடு நீட்டிச்சாரணையேசெய்ய, ஓரிந்தக்கவனமார்க்க மோக்ஷமதியைத்தொட்டு, வாரிந்தக்குளிகைவைத்த வாயினாலோகத்துதே. (௫௭௪)

ஊதையிலோகத்தெல்லா முபரசநூற்றுப்பத்தும், கோதையில்மரமுமன்னுங் கொள்கையில்பாத்தேயூது, யேதையில்மாற்றேதென்னி லிசைந்தநூற்றிருபத்தெட்டு, பாதையிலின்னம்போகப் பகருவேன்கேளுகேளே. (௫௭௫)

கேளிந்தக்குளிகைதன்னைக் கெடியாகவொடுக்கிக்கொண்டு, வாளிந்தவாலையாக மகத்துவஞ்சொல்லக்கேளு, வேளிந்தநாதத்தோடு விளங்கியமுலைப்பாலிஞ்சி, தாளிந்தவமுரிபூரந் தனிவீரமாருந்துக்கே. (௫௭௬)

தூக்கியேசமனுப்பக்கொண்டுதுடிபடக்குழிகைபோடே, வாக்கியேயரைத்துமென்ன வளமாகமேடோலைகட்டி, போக்கியசிறந்தகாடி புகட்டியேயாண்டத்துள்ளே, தேக்கியேயெரிப்பாயானல் செனித்ததுவாலையாமே. (௫௭௭)

வேறு.

வாலையிலேசாரணையைத்தீர்த்துக்கொண்டு மலையிலேயோட்டிடவேமாற்றுநூறுங், கோலையிலேவிளைதக்கட்டிச் சாரணையைத்தீர்த்துக் கொடியமுன்போதுடைத்திதுவேவாலையாக்கிச், சேலை

யிலேமேருவுக்குப்போட்டுப்போட்டார் சிவனன்றுமாற்றோராயி
ரமுமாசக, மாலையிலையிதைக்கட்டிச்சாரணையைத்தீர்த்து வள
மாகவுடைத்திதையேவாலைபண்ணே. (௫௱௮)

பண்ணியதோர்வாலைதன்னை யண்டத்துக்குப் படுமுன்னே
யேமலண்டமாகும்பாரு, கண்ணியதோர்கட்டியிந்த வடைவாய்
வாலை கமலித்துப்பத்துவிசைகலந்தேயேற, மண்ணியதோர்வா
சனைக்குளண்டத்துளாம் மலையெல்லாம்பொன்னாகும்வாய்பேசா
தே, யண்ணியதோரிதனுடையவேதைமார்க்க மாத்தானுமறியே
னென்றருளினாளே. (௫௱௯)

அருளினதோர்வாலைபதினொன்று தூக்கா யப்பனைகழஞ்சது
வுமடைவாய்க்கொண்டு, மருளினதோர்மண்கூடுகொண்டுமூடி ம
கத்தானமூச்சோடாவாசல்விட்டுத், தருளினதோர்காலுக்குசெகி
டிபோட்டுத் தயங்காதேபிடித்தொருவனெதிராநிற்க, வெருளின
தோர்விறகிட்டுத்தீயைமூட்டு விதமாகப்பிறக்கும்விதம் விளம்பு
றேனே. (௫௱௰)

விளம்புறதோருதிரத்தில் நின்றவாலை வெருவியதுமல்லவங்
தமாகவேறு, மளம்பியதுகபாலத்திலேறுமானு லாகாகாசலத்தீ
யடைந்துமற்றுந், தளம்பியந்தச்சங்கிலியையாட்டுவோட்டு தப்பிர
தத்தெதிர்வாங்கியகன்றுநின்று. சளம்பியந்தத்தாகத்திற்பாலையு
ண்ணுஞ் சாலையொன்றுபிரமவரைசாகான்காணே. (௫௧௧)

காணிந்தலோகத்தில்வாதியப்பா கைமுறையாற்சுன்னத்தி
ல்வாலைபண்ணிப், பூணிந்தக்குடித்துமெள்ளச்சாலைசார்வார் புக
ழவயசோறீருமப்பாலில்லைத், தோணிந்தப்பாலைக்குச்சாரணையே
செய்யார் தொழிலாகக்கட்டியிதைவாலையாக்கார், ஆணிந்தப்படி
தப்பில்வயதுகொஞ்ச மறியாதலோகத்தோரழிந்தார்பாரே. ()

பாரிந்தப்படிகொண்டாரென்னையாண்டார் பராபரமாமூலகு
ருப்படியேயானும், கோரிந்தப்படிகொண்டேன்ஞானவீதி கூடி
னேனதற்குள்ளேகுழைந்துபோனே, னூரிந்தப்படிகொண்டாரக
ண்டமாவா ரதற்குமொருசாதகத்தையறிவிப்பேனுன், தோரிந்த
க்கற்பமுறையுண்டேயேறிச் சுகமாகவாறுபதந்துழாவியாடே. ()

ஆட்டியதோர்துறைக்கெல்லாம்வாசியூட்டு யாத்தாளைவிடுக்
காதேயடர்ந்துபூசி, நீட்டியதோர்காலாணகுளத்துக்குள்ளேநிரை
நிரையாய்க்குதித்தங்கேநீந்தியாடு, தாட்டியங்கேமூன்றுதனிற்று

யுங்காண்பாள் சச்சிதானந்தமூலைப்பாலையீவாள், கூட்டியங்கேபுதைத்தாண்டியுள்ளேபுக்கக் கூகூகூவொன்றுமில்லைகுறியொன்றுச்சே. (௫௧௪)

ஒன்றாச்சுவொன்றுசொல்லரெண்டுமாச்சு வுட்புகுந்துகலந்தபின்புவொன்றேயாச்சு, நன்றாச்சுவுப்புமப்புமரெண்டுங்கூடி நலம்பெறவேயம்பானநட்புபோலக், கொன்றாச்சுவப்புவென்னபோதமாச்சு கொள்ளுமங்கநீருறைந்துமணித்தாயாச்சு, வின்றாச்சுவவனிலைக்கக்கோடாகோடி விழையுமண்டபுவனமெல்லாம் விளங்கிற்றென்னே. (௫௧௫)

விளங்கியந்தச்செம்புடனேயுப்புக்கூட்டி வேதாந்தப்பச்சைநிறம்விரிவாய்ப்போச்சு, தளங்கியந்தக்கல்லுப்புத்தாயுமாச்சு சார்ந்திருந்தசெம்பதுவுந்தகப்பனாச்சு, வளங்கியந்தவுப்புடையவர்மங்கண்டால் மாற்றுமுதல்காயசித்திமசகமாச்சு, அளங்கியந்தமிப்படியேதொட்டுவாயே யகண்டமொடுவாலைரெண்டு மளவாங்காணே. (௫௧௬)

காணிந்தவுப்பைவிட்டால்துருசுமில்லை கைமுறையாய்லோகத்தில்வர்ணமில்லை, காணிந்தவுப்பைவிட்டால்சாரமில்லை கடியதொருகாரமில்லைகனகமில்லை, காணிந்தவுப்பைவிட்டாற் பாஷாணங்கள் களிம்பற்றுவேதையொன்றுங்கலங்கோடாது, காணிந்தவுப்பைவிட்டாலோகவூறற் கசடற்றேயுருகாதுகாணுங்காணே. ()

உருகாதவுபரசங்களுப்பைவிட்டா லோடாதுவேதையொட்டியுபரத்தாலும், பருகாதவுப்பைவிட்டால்விந்துவில்லை பலருசிக்குஞ்சீவனில்லைபருகொணாது, வருகாதுபெருகாதுவாத்தாளுப்புவவணிலைந்கசிவளைப்போலனேகவேதை, குருவானநாமமென்னவுப்பேயாச்சு கோடானுகோடியிதிற்கொள்கிறேனே. (௫௧௮)

கொள்கிடவோரவியில்லாவுப்பைமாண்பர் கொட்டியேகட்டுகிறேனென்பாரையோ, நள்கியேதீயிலிடத்தெறித்துப்போகும் நலக்கரைத்துவுருட்டியதைக் கட்டிற்றென்பார்; அள்கியேவயிரம்போற்கொடிநிறக்க வணுவுக்குள்தங்கம்போலசைந்தேயாட, வள்கியேயிதுகாணுமுருவாங்கட்டு மற்றதெல்லாம்வாறுகோற்கட்டுத்தானே. (௫௧௯)

வாறுகோலாவதென்னமூத்தாளன்றோ மாயிக்குவிளையவள்தான்மலத்தாயன்றோ, சீறுகோலவளணைந்தான்மூடனுவான் சிறி

யவேளைபணிந்திருக்கச்செகத்திஸ்வாதி. பாறுகோல்செகத்திலுன்னோர்தன்னைறியும் பணிமாறுமலங்காரிபாய்த்தாளானால், வேறுகோல்வாதமெல்லாம்விமலாய்ப்போகும் விரைத்தசொல்லும்பவியாதுவிளம்பிப்பாரே. (ருஉ0)

பாருநீயெவரெனத்தான்சீஷனென்று பணிந்துடனேயவனவாதங்குப்பையாகும். தாருநீயுறக்கமற்றுத்தூக்கலாகச் சற்றுமுகக்களையற்றுச்சண்டியானால், கோருநீயவன்முகத்தில்மூதேவிள்நிற்பாள் கொள்கியதோர்வாதமெல்லாங்குப்பைபண்ணும், போருநீயிளையாளேபூண்டாளானால் பொற்குசுமமபோலமுகம் பொருந்தும்பாரே. (ருஉக)

பொருதுறைக்குலவணமொரு கட்டுசொல்வேன் போக்கோடேபார்ப்பவர்க்குப்புகழேயாகும், கருதுறைக்குழப்பைவிட்டால்வாதம்போச்சு கைமுறையாய்ச்சொன்னபடிகருதிப்பாரு, விருதுறைக்குப்போமுன்னேயண்டம்பத்து விதமாகவுடைத்துவெள்ளைக்கருவைவாரு. மருதுறைக்குக்கற்சுண்ணத் தெளிவைவாங்கி மாட்டுவோர்னச்சுண்ணமதுபலந்தானென்றே, (ருஉஉ)

ஒன்றாகக்கரைந்தபின்புதெளிவைவாங்கி யுற்பனமாய்ப்போகிறமருந்துகேளு, வின்றாகச்சூதமொடு காவிவீரம் விளங்கியதோர்காரமொடுவீரமும்பூரம், பன்றானபடிகியொடுபுனுகுங்கேளு பருவமுடன்குருவண்டுவிணங்கன்சுண்ணங், கன்றாணகோழியுடவெள்ளைக்காரங் கலந்தவிந்தப்பதினொன்றுமிடையைக்கேளே. ()

கேளுநீவகையொன்றுவராகன்கால்தான் கெடியாகமுன்னிறுத்தநீராலாட்டி, யாளுநீமுன்கருவிலூற்றுலூற்று வதினேடுசுண்ணநீர்கூடவூற்று, வேளுநீமத்தித்துவைக்கவண்டம் வெண்கருவேஜலமாகும்விரைந்துபாரு. வாளுநீயித்தெளிவிலுப்பைத்தோய்த்து வளமாகவிபடவேவைத்துப்பாரே. (ருஉச)

பாரிக்கப்படிதோய்த்துக்காரம்போடு பதறுதேசாரமிந்தப்படியேபோடு, காரிந்தவற்றவற்றத்தோய்த்துப்போடு கடுகியிச்சமூன்றுக்குள்காரமேறும், ஓரிந்தக்கல்லுப்பின்கீழேநின்ற வுயர்குழம்பிற்புரட்டிகன்றாயுலரப்போடு, வேரிந்தவுப்பைமெள்ளஆவிச்சாற்றில்வைத்து வெருவிமேல்மண்ணிட்டு அடுப்பிலேற்றே. ()

எற்றியப்பாதீமூட்டுகடிகைநாலு யிதமாகவிறக்கியிதைப்பிறக்கிக்கொண்டு, போற்றியப்பாபாஷாணச்சுண்ணமேலே புகழா

கப்பூசியதையுலரப்போட்டு, மாற்றியப்பாகற்சுன்னம்பத்துக்கு ள்ளே மாட்டுரெண்டுசேரத்தைவளமாய்ப்பண்ணு, வாற்றியப்பா வுப்புக்குக்கிழ்மேலிட்டே யடைவாகமூடியொருபுடத்தைப்போ டே. (௫௨௬)

போட்டபுடமொன்றிலேவயிரம்போலே புகழானவுப்புக்கு ம்பிறக்கும்பாரு, மாட்டவிடமிதற்குசாவென்னசொல்வேன் வ யிரம்போல் நாகத்தைக்கட்டும்பாரு, ஆட்டவொருமூசைசொல் வேன்கேளுகேளு யுரந்தவசமச்சியத்தியத்திப்பாலும். நீட்டம ணித்தக்காளிச்சாறுவார்த்து நிலையாகயிலையிட்டுமிரவாட்டே. ()

ஆட்டியதைமூசைபண்ணியுலரவைத்தே யதற்குள்ளேநாக ம்வைக்கவடைவுகேளு, பூட்டியந்தநாகத்திலுப்பைப்பூசிப் புக ழாகக்துகையிலிட்டுச்சில்லுப்போட்டு, மூட்டியொருபுடம்போடு முழுக்கட்டாகும் மூதண்டவேதையிதில்முழங்குங்கேளு, கூட்டி யதிற்பழிபாதிவிரம்பாதி குமட்டியொருமூசைவைத்துக் குளிரவூ தே. (௫௨௮)

ஊதிடவேயுறவாகமூன்றுஞ்சேரு வுற்றுப்பாருற்பணத்தை யென்னசொல்வேன், வாதிடவேசெம்பினுள்ளே நூற்றுக்கொன் று மாட்டிடவேவார்போலேதங்கமாகும், ஏதிடவேயெனக்கேட் டாலிரும்பினூட்டு விசைந்துபத்துமாற்றுகுமெடுத்துப்பாரு, கோ திடவேவிண்ணுகஞ்செந்தூரித்தால் கொள்ளவொருவயிரத்திற் கொடுத்துப்பாரே. (௫௨௯)

பாருமிந்தக்கட்டியதோருப்பைபயப்பா பருகியதன்மேல்வழ லைச்சுன்னம்பூசி, கோருமுறவனலைவைத்தூதிப்போடு கொடுஞ் சுன்னமாகுமிந்தக்கல்லுப்பப்பா, வாருமிந்தச்சன்னத்தின்போக் கைக்காண்பார் மர்மமாவாதமிதிலடங்கிப்போச்சு, தேருயாந்தம திச்சடையார்மெச்சுமுப்பு தேவிமெச்சுஞ்சித்தர்மெச்சுந் தெளிந் துகாணே. (௫௩௰)

காணிந்தவுப்புமுதற்சொர்ணமார்க்கம்களங்கவகையைஞூ ஞேடைம்பத்தொன்று, தோணிந்தச்செந்தூரமாயிரத்துப்பத்து சொன்முறையாய்க்குருபற்பமெழுநூற்றைந்து, பூணிந்தமெழு குவகைமுந்நூற்றேழு புகழ்பெரியசெயநீரு மொருநூற்றைந்து, வாணிந்ததிராவகமுமைம்பத்தாறுவடங்காவலோகநீரைம்பத்தொ ன்றே. (௫௩௧)

ஒன்றானசிங்கியோரேழுசொன்னே னுற்பனமாய்நிலைதலவ கையேழுசொன்னேன், மன்றானகுளிசைவகை யாயிரத்தோடெ ட்டு வாகாகச்சுன்னவகையளவுமில்லை, பன்றானகட்டுவகைகோ டாகோடி பதிப்பினமுங்கெடுப்பினமும்பகரமாட்டேன், கன்று ணசத்துருவுமித்துருவும்பாரு கரையில்லைகணக்கில்லை கலந்துபா ரே- (ருகூஉ)

கலந்துவருநீற்றினமுமுருக் கினமும்பாரு கைவிட்டவாசி வைத்துக்கருத்தைப்பாரு, வலந்துநின்றேயலையாதேஞானத்தை ப்பாரு வாத்தாளையப்பனேபூசித்துப்பார், நிலைந்தனையும்விட்டக ன்றசிலம்பமுண்டோ நிலத்துறைத்தேன்வகைகளெல்லா நினைவை யுன்னி, மலைந்துநின்றுமயக்கத்திற்புக்கவேண்டாம் மகத்தானநீ ற்றினத்தைமருவிக்கேளே, (ருகூ௩)

கேளுநீபுனுகினொடுவீரம்பூரம் கெடியானகுருவண்டுசூடன் சூதம், வாளுநீகார்முகியும்சவுக்காரச்சுன்னம் வளம்பெறவேயுர தமேதாடுவகைதான்கேளு, வேளுநீயொன்பதுவுநீற்றினங்காணப் பா வேறுமெந்தசரக்கினிலும்விரைந்துநீறும், மாளுநீயிம்முறை யையறிந்துகொண்டு வடுக்கடுக்காய்குருமுறைகள்சுன்னம்பாரே.

பாருநீயுருக்கினத்தைச்சொல்வேன்கேளு பருவமுடன்சவா துசவ்வீரமுப்பு, கோருநீயிணங்கனொடுகாரங்கண்டா கொள்கிய தோர்மால்தேவிவெள்ளைரெண்டு, தாருநீவெள்ளைகுன்றியாமணக் குந்தேனுந் தனிப்புறுவெச்சமுடன்வெல்லந்தானும், ஊருநீபதி னைந்துமுருக்கினத்துக்காகு முற்றுப்பாருபரசங்கள்சத்துமாமே.

சத்துமுதல்நவலோகஞ்சூதத்தோடு தளும்பாதேசெந்தூர ஞ்சாற்றக்கேளு, வுத்துமுதல்மால்தேவிசிலைதாளகந்த மூவான வப்பிரேகங்கெவுரிதுத்த, முத்துமுதல்வெடியுப்புமுறவாங்கேளு மொருகோடிசெந்தூரமோகோவாகும், பத்துமுதல்செந்தூரப் போக்கையானும் பாடினேன்பார்த்தவர்க்குப்பலிக்குங்காணே ()

காணவேவர்ணவினஞ்சொல்லக்கேளு கடியதங்கமுப்போடு நாகமப்பா, பூணவேயுபரசங்கள்நிமிளைசூதம புகழ்பெரியபிச்சுவ கைபெல்லாம்வர்ணம், தோணவேயிவையேழும்விட்டானானாற சு மூல்மலைவான்வர்ணமில்லைசொல்லும்பொய்யாம், கோணமேவமன க்குறாங்கைநிமிர்த்துப்பாரு கோடானுகோடிக்குங் குறிப்பாம்பா ரே. (ருகூஎ)

குறிப்பாகக்கட்டினத்தைக்கூர்ந்துகேளு கொடுஞ்சுன்னங்கு
ருவாலேகோடிகட்டும், நெறிப்பாகச்செயநீருந்தைலமுமேகட்டு
ம் நிலையானதிராவகமெழுகுவகைகட்டும், தெறிப்பாகவின்னுமெ
த்தசொல்லமாட்டேன் சேர்ந்திந்தமுறைபார்க்கச்சிந்தைகூர்ந்தா
ல், பொறிப்பாகவாசியுள்ளே வைத்துப்பாரு பொங்கியொன்று
ம்போகாதுபூட்டக்கேளே. (௫௩௮)

பூட்டுறதுவங்கென்றுவாங்கியுள்ளே பொலிவாகச்சிங்கென்
றுமூலம்பாரு, வாட்டுறதுநாலையுமேயெர்க்கவாங்கு வடவிட்டே
யசையாதுவப்பாபாரு, மூட்டுறதையிந்தமுறைமுன்னேசொன்னே
ன் முசியாதேமெள்ளமெள்ளவூதியேறு, நீட்டுறதுமாறுதலம்நி
னைவாய்ப்பேசு நிலைத்தபின்புவாதரசம்நிலைக்கும்பாரே. (௫௩௯)

நிலைத்துடனேநாலுமுன்னே நிலைத்துப்போடும் நினைவாலே
பார்ப்பதம்மாநினைவையூனு, மலைத்தங்கேவிடுக்காதேமாயைமூ
டும் வகாரமென்றமனோன்மணித்தாய்மனதுங்கோணும், கலைத்த
ங்கேகருவிவந்துமூடிப்போகும் கைமுறையாயுலகமெல்லாங்கரு
திப்பாரு, வுலைத்துமனமலையாதேயூனுவூனு யோகோகோவாதசி
த்தியொக்கவாமே. (௫௪௦)

ஒக்கவொன்றேஞானசித்தியுடனேயாகு முடலழியாக்காய
மென்றுமுறுதியாகும், நிக்கவென்றலாறுதலம்வெளியாய்ப்போ
கும் நின்மலத்தில்நினமலமாய்நிலைக்கப்பண்ணும், மக்கவங்கேவா
சனையைத்தடுத்துப்போகும் வருவதில்லைபோவதில்லைமாட்டுவொ
ன்றில், சொக்கவங்கேசமாதிக்கீழிருந்துங்கற்பஞ் சுகமிதைப்
போலெவ்விடத்துந்தோன்றுவாரே. (௫௪௧)

வாறேதுசித்தாந்தவேதாந்தமென்பார் வளங்கியதோர்சமா
சந்தான்வளமேயென்பார், பேறேதுநாதாந்தவேதாந்தமென்பார்
பெருமையுற்ற காலாந்தம்பேசுவார்கள், கூறேதுவாறுதலமாறு
மாச்சு கொள்கையிதனுட்புகுத்துக்குறிப்பைக்காணார், நீறேதுவே
டமங்கேபூண்டதேது நிலையறியாமாண்பர்களேநீங்கநன்றே. ()

நன்றானசாக்கிரஞ்சொற்பனமுமாகும் நலம்பெரியசுழுத்தி
யொடுதுரியமாகும், கன்றானதுரியாந்தங்கடந்துநோக்கக் கைவி
ட்டபூரணந்தான்கவர்ந்துகொள்ளும், வின்றானமூலத்தேயூன்றியூ
து வெளிமயக்கெல்லாம்வெளியாம்வேறொன்றில்லை, வன்றார்ந்த
அம்பையர்ன்மாயீகூட வாவென்றசொற்கேட்டுமருவிப்போமே.()

போமென்றுசொல்லுதற்குப்பரிட்சைகேளு போக்கோடே சிகாரத்தைவெளிவிடாத, வாமென்றவண்டமெல்லாம்நீருய்வேகும் வளர்ந்திருந்தவரன்விலகிவருவானுள்ளே, வோமென்றகாதமை அபத்துமோங்கு மொளியாகப்பிறவியறுமொன்றுமொன்றில்,தாமென்றவானுவமுஞ்சமயம்போகும், தயங்காதேகுளிகையிட்டுத்தாண்டியாடே. (௨௪௪)

ஆடுதற்குவாசிவென்றகுதிரைபோனு லாகாகாவாதமில்லையறிவுமில்லை, தேடுதற்குஞானமில்லைசித்துமில்லைதிருடரையோகுருவெனவுஞ்சிலபேருண்டு, ஊடுதற்குமிடமறியாருண்மைகாணு ருரித்தானவாதமெனக்குண்டோவென்பார், நாடுதற்குப்பெண்கள்பின்னேநாய்போற்செல்வார் நலமாகக்குடிகெடுக்கவாவோரே, ()

நாடுவார்வாதம்வந்துசித்தியானு னலம்பெறவேமதத்தோடிக்கண்ணேமூடும், கூடுவார்பலபெண்ணைக்குலாவிச்சேர்வார் கொடும்பாவக்குமடானகுகையிற்சேர்வார்,நீடுவாரடுத்தோரைப்பொருளைவாங்கி நிலைநிலையாய்ச்சுடுவிப்பார்நீசரையா, ஊடுவார்பாவமென்றுமுன்பின்பாரா ரோகோகோவாசிஜன்மமுடிற்றுனே. ()

தானென்றவுலகோர்க்குவாதமாயை தளைவழிந்தபெரியோர்க்குவாதமுத்தி, பானென்றுமுண்டென்னைப்பெற்றாள்சொன்னுள் பலபலவாமானிடர்க்குப்பேதமேதோ, தேனென்றுவைத்தென்னைப்பூசைபண்ணச் சிதைத்தோர்க்குமாயைவந்துமூடிப்போகும். கோனென்றேயுன்பதத்தைப்பூசிப்போர்க்குக் கொழுந்துவிட்டுவிவேகமதுகூடுந்தானே. (௨௪௭)

தானென்றசத்தமொடுபரிசங்கெந்தி தனைபறிந்தரசத்தோடுரூபஞ்சில, வானென்றமனக்குரங்குதாண்டியாடும் வழியோடேவிடுக்காதேபாவமெத்த, வேனென்றவைந்துகொம்பும் வெட்டக்கேளு வெடுத்தெடுத்தவிவேகமென்றவாளால்வீசு, பானென்றமுன்றுனேநித்தம்பாரு பலநினைவுமறுத்தமுதம்பாலிப்பாளே. ()

வேறு.

பாலிக்குமாயியோடு பரிவானவுப்புமொக்குஞ், சேலிக்குந்தண்ணீர்சத்தி திறமானவன்னியீசன், கோலிக்கும்ரெண்டாற்சிவன்கோடானுகோடியர்ச்சு, மேலிக்கும்ரெண்டும்பார்த்து விளங்கினோர்சித்தர்காணே. (௨௪௯)

துரிசு சுத்தி துரிசி ரூரு.

காணவேதுரிசியொன்று கடிதானகுருவேசொல்வேன், பூ
ணவேதேனிற்போடு புகழுதின்முப்பதப்பா, வாணவேலூறல்போ
கு மதன்பின்புதொடைத்துப்போடு, தோணவேவங்கச்சுன்னந்
துடிவீரங்கூட்டித்தேயே. (௫௫௰)

தேய்த்திதையுலரப்போட்டுச் சிறந்ததோர்பூநீறுக்குள். வா
ய்த்ததைவைத்துமூடி வாருநீகழுதைக்கத்த, மாய்த்திதைவாலு
கைக்குள் வைத்தெரிகாலுசாமம், மேப்த்திதையென்றசெம்பு வி
றந்ததுபாருபாரே. (௫௫௧)

பாருநீதந்தம்போலே பலகையாய்க்கட்டிப்போகும், கோ
ருநீயதன்மேற்பூசக் கொள்கிறமருந்துகேளு, தாருநீவீரம்பூரம்
தனியுரஞ்சூதத்தோடு, காருநீகுருவண்டொக்கக் கலந்தரைத்த
ப்புவப்பே, (௫௫௨)

அப்பியேரவியிற்போடா யப்பனேதந்தம்போலே; யொப்பி
யேயிருக்கும்பாரு வுருசுறுக்காகச்சொல்வேன்; செப்பியவழலைச்
சுன்னஞ் சேர்ந்ததுமேலேபூசிக், கொப்பியதணலில்வைத்துக் கு
முற்கொண்டூதுவூதே. (௫௫௩)

ஊதிடநாமம்போலா முதிராதுகட்டிதானும், வாதிடும்வாதி
கண்டால் மாட்டியேகொத்துக்காதி, லேதொடுத்தாட்டவென்று
மிடுப்பிலேயிழுத்துக்கேளு, கோதிடப்பாஷாணத்தை கூட்டியே
சொட்டுப்போடே, (௫௫௪)

போட்டதோர்சொட்டினாலேபுகழ்பெற்றபாஷாணங்கணிட்
டதோர்நிமிர்ந்துசாகு நிலையறுபத்துநாலும், கூட்டவோவுருக்கி
யாடக் குமுறவேகுருவாக்கட்டோ, வாட்டவோவண்டஞ்சுற்றி
யசைக்கவோவென்றுகேளே. (௫௫௫)

கேட்கையில்விழித்தானுற் கெடியானகுருவொங்கு, வாட்
கையிலூறுமினுக்கால் வாய்மேலேபோடுபோடு, தோட்கையில்வி
ருதுபோட்டுச் சுகமாகவேதைபோடு, தாட்கையிற்றுரிசியாடு ஊ
மர்த்தெல்லாங்காணுகாணே. (௫௫௬)

காணிந்தத்துரிசிகண்டாற் கடிரசாஜாவாகும், பூணிந்தச்
சூதம்பற்றிப் போடிந்தக்குருத்தானென்று, தோணிந்தத்தயிர்
போலாகுஞ் சுகமாகவுருகியாடு, மாணிந்தமறுகாலாத வப்பனே
யேமமாமே, (௫௫௭)

எமப்போற்சூதமாக விழைந்தபூத்தொட்டுதொட்டிக், காம
ம்போற்சத்தேகூட்டிக் கடுகவேரசத்திற்போடு, சேமம்போற்ற
ங்கம்போடு திறமாகப்பொன்னும்பாரு, வாமம்போன்மாயிபாத
ம் வளமாகப்பூசைபண்ணே. (௫௫௮)

பூசிக்கமறந்தாயானாற் போட்டதோர்களங்குபொய்யாங், தா
சிக்கத்தங்கம்போனாற் றனியுப்புசாம்பலாகுங், நேசிக்கவாணில்
லாட்டால் நினைவிலேவருமோபிள்ளை, மாசிக்குட்சிக்குமாண்பர்
வாதத்திற்பொன்னைக்கூட்டே. (௫௫௯)

கூட்டவேபொன்னென்றேங்கிக் கூவாமற்கூட்டாராகி, லாட்
டவேசூரங்கைச்சித்த ஞட்டினூற்போலேகேளு, ஆட்டவேவாதி
தன்னை யுப்பதுவாட்டும்பாரு, நீட்டவேவிரலைப்போட நிலைக்குமு
ளுப்புத்தானே. (௫௬௰)

உப்புடவாண்மைபோலே யொன்றுக்குமில்லையப்பா, ஒப்பு
ட்வாண்மைபோலே யோடாதுஆரம்பாரு, வுப்புடவர்ணங்கண்
டேயுரைத்தவன்வாதியாவா, னுப்புடசுறுக்கைச்சொல்ல வுரைய
ருதுரையருதே. (௫௬௧)

அறுகாதுதுரிசிதொட்டே யாடுமேன்லிங்கம்பாரு, வறுகா
தவீரமொன்று வளமானகாரமொன்று, தறுகாதகுருவேயொன்
று தனிமூன்றும்வராகன்மூன்று, மொறுகாதவண்டநீரா லொக்க
வேயரைத்துக்கொள்ளே. (௫௬௨)

அரைத்திட்டமருந்தையப்பா வப்பொருபலலிங்கத்தில், வி
ரைத்திட்டசாரம்ரெண்டு விளங்கியதுக்கம்ரெண்டு, நிரைத்திட்
டேயரைத்துவுப்பு நிலையாகவுலர்ந்தபின்பு, கரைத்திட்டகபால
வோடு கடுகவேபொடியாய்ப்பண்ணே. (௫௬௩)

பொடியிலேபத்துக்கொன்று போட்டிடுவீரமப்பா, பொடி
யிலேபத்துக்கொன்று போட்டிடுமாலின்றேவி, பொடியிலேகரு
வாமஞ்சட் பொடியதைப்புகட்டியாட்டிப், பொடியெல்லாமரைத்
துமேலே புகழாகக்கவசம்பண்ணே. (௫௬௪)

பண்ணியசீலைசுற்றிப் பரிவாகமணலில்வைத்துத். தெண்ணி
யேபுடத்தைப்போடு சிக்கெனவுரைக்கநீயு, மண்ணியேலிங்சங்க
ட்டி யப்பனேவயிரமாகு, மொண்ணியேலிங்கத்துக்கா முற்பன
மின்னுங்கேளே. (௫௬௫)

கேளுநீகபாலத்துள்தான் கெடிபலமைம்பதுக்குள், வாளுமும்பலந்தான்விரன் வண்வ்குமால்தேவியஞ்சு, கோளுநீகெந்திமூன்று கொழுஞ்சாரமைந்துபோடு, தோளுநீயுப்புரெண்டு சுகக்காரம்ரெண்டுகூட்டே. (௫௬௬)

கூட்டியேநாலுமப்பா கொள்கியவிடையைக்கேளு, நீட்டியேமும்மூன்றாக நிலைக்கவேபனிரண்டேட்சி, வாட்டியவழுரியுப்பு வப்பனேபலந்தானஞ்சு, மாட்டியேயண்டத்துள்ள மஞ்சணீராலேயாட்டே. (௫௬௭)

ஆட்டியேகபாலத்துளி லப்பனேவிரவிக்கொண்டு, காட்டியேகாய்ந்தபின்பு கலயத்திற்போடுபோடு, ஆட்டியேசில்லுப்போட்டு வொருதமர்கலயத்தூரில், நீட்டியேபூப்புடத்தில் நிலையாகத்தைலம்வாங்கே. (௫௬௮)

வாங்கியதைலந்தன்னை வளமாகலிங்கத்துக்கு. ஓங்கியேசுருக்குப்போடு வொடுங்கியேமயனமாகும், தாங்கியேமயனத்துள்ளே தனித்தங்கரேக்கையூட்டு, பாங்கியேயெட்டுக்கொன்று பாய்ச்சிடுமுறைதான்கேளே. (௫௬௯)

முறையாகப்போட்டுரேக்கைமுயற்சியாய்ப்பிசைந்துகொண்டு, வறையாகவுருட்டிவைத்தே யாத்தாளைப்பூசைபண்ணு, நிறையாகவெள்ளிசெம்பி னீட்டிநீயைம்பத்தொன்று, குறையாதேபத்துக்காணுங் கூழினேன்பாருபாரே. (௫௭௦)

பாரிந்தப்படியேநீயும் பரிவாகவண்டத்தோலைக், கோரிந்தக்கவசம்போட்டுக் கொள்கியேகட்டுலிங்கம், நேரிந்தப்படியேகூட்டி நிலையாகத்தைலம்வாங்கிச், சேரிந்தப்படியாய்லிங்கம் சேர்க்கவேமெழுகுமாமே. (௫௭௧)

மெழுகானலிங்கமப்பா மூடிடவெள்ளிசெம்பி, லழுகாதேயெட்டுக்கொன்று யப்பனேதங்கங்கூட்டு, வொழுகாதேவாய்விணாக வொருவர்க்குமுறைசொல்லாதே, விழுகாதேகாமத்தீயில் வேதாந்தமுடிவைப்பாரே. (௫௭௨)

முடிவைநீயாக்காவிட்டான் முந்தியகபாலவித்தை, யடிவைநீசமுசாரத்தை யடியோடேயடித்துப்போடு, தடிவைநீவாதமென்று சாற்றினார்கபாலமாலை, வடிவைநீயீசன்பூண்டார் வல்லபமுள்ளோர்பாரே. (௫௭௩)

பார்க்கிறமுறையைச்சொல்வேன் பதிறுதேகேளுகேளு, சே
ர்க்கிறமுறைதான்மூந்தி நீட்டிடுபிராணாயாமஞ், சேர்க்கிறமுறை
தானாறு தெளிவாகச்சொல்லக்கேளு, கார்க்கிறமூலத்துள்ளே க
ருத்தூன்றியுற்றுப்பாரே. (௫௭௪)

உற்றுப்பார்கருத்தையூன்றி யோடாமற்புலன்களோடு,மொ
ற்றுப்பார்கணேசன்காண்பா ரொருகோணஞ்சத்திகாண்பா, ரொ
ற்றுப்பார்கடுவேகந்தி யிசைந்தங்கேமூன்றில்மூவர்க், கொற்றுப்
பார்குட்டிக்கொண்டு கொள்கவேபூசைபண்ணே. (௫௭௫)

பண்ணியேசிக்கும்வைத்துப் பரிவாகக்காலாலூது, வொண்
ணியேநந்திகோடி யுயர்கதிர்போலேயாவா, யண்ணியேவாசலைக்
கு ளகப்பட்டுநோக்கநோக்கத், தண்ணியேமபக்கத்தாலே தனி
ச்சுழியொளிகாணாதே, (௫௭௬)

காணாதேபோச்சுதென்று கசடரேவிடுக்கவேண்டார், தோ
ணாதசத்தவகந்தந் துலங்கியபரிசம்ரூப, மாணாதரசத்திரூலு மடு
த்தங்கேமனந்தானோடும், பூணாதேவிவேகங்கொண்டு புகழாகமீ
ளுமீளே. (௫௭௭)

மீளுறவகையைக்கேளு விளங்கவேபரிட்சைசொல்வேன்,
றேளுறகாதைப்பொத்தச் சொல்லிலன்றுகேட்டதோசொல், நா
ளுறக்கண்ணைப்பொத்த நலங்கியரூபங்காணார், வாளுறமூக்கைப்
பொத்த வளமானவாசம்போச்சே. (௫௭௮)

போச்சுதேவாயாலுப்பைப் போட்டாலேயுப்புக்காணா, மா
ச்சுதேவேறும்பூர வறிவாலேபரிசங்காணா, மேச்சுதேமனம்வேறா
னால் வெறுத்தஞ்சிலொன்றுமில்லை, வாச்சுதேமனமானக்கால் ம
ந்திரிவிவேகமாச்சே. (௫௭௯)

ஆச்சிந்தப்படியேநித்த மனைத்தானும்பிராணாயாமங், கோச்
சிந்தவிடத்தேபூரி கொள்ளவேமூலங்கும்பி, நாச்சிந்தவலத்தே
ரேசி நலம்பெறத்தவிடோடாம, லோச்சிந்தப்படியேயேறு முத்
தமரொருவாகாணே. (௫௮௦)

காணவேயொன்றினின்று கரைகண்டேயேறினாக்காற், பூ
ணவேயாறுமேறப்புகழாகச்சுளுவேயாகு, மாணவேயடிமரத்தை
வளைத்தங்கேகத்தியேறத், தோணவேயாறுமேறித் துவாதசங்
காணலாமே. (௫௮௧)

காணவுமார்க்கம்விட்டுக் கசடர்கள்சைவைக்கேளு, தோண
வேரிறைப்பூசிச் சுற்றியேதெண்டம்பண்ணி, பூணவேவிரலையெ
ண்ணி யுற்றவேசுற்றினீரை, யாணவேபூசைசெய்வா ராதாரங்கா
ளூர்காணே. (௫௮௨)

காணுதவாறுக்குள்ளே கருத்துன்னிவிவேகமுற்றுப், பூணு
ர்கள்பூசையப்பா புறம்பிலேபூசையென்ன, தோணுதவாறுளேயா
சுழுன்றதுசமயமாறு, பூணுதேபுள்ளில்மூச்சை யுத்தியாய்வரச்செ
ய்வாரே. (௫௮௩)

செய்வதுமுள்ளேநின்று சிகாரத்தையீழுத்துமெள்ள, வை
வதுவெளியில்வார வரகன்மஞ்செய்வாரையோ, கொய்வதுவெ
ளியுமுள்ளுங் கொள்ளாதபோதந்தன்னைச், செய்வதுசமயத்தோ
ரே சேர்ந்துள்ளேபூசைபண்ணே. (௫௮௪)

பூசையேயந்தரத்திற் பொலிவாகச்செய்வார்பின்பு, வாசை
யேபின்புதானு மதைக்கொண்டுவெளியேசெய்வா, ரோசையேத
சநாதங்க ளுணர்பரவெளியேயப்பா, தேசையேயுன்னைப்பாரு தி
சைநாதங்கிளம்பும்பாரே. (௫௮௫)

கிளம்புறதெங்கேயென்னிற் கெடியானதுவாதசத்தி, லளம்
பிறவெளியில்மேன வடைவாகச்சநகங்கேட்டு, முளம்பெறுசித்
திமுத்தி யொக்கவேகூடுங்கூடிந், தளம்புறமனதோவென்னிற்சா
ர்ந்துபோம்பாருபாரே. (௫௮௬)

சார்ந்துமோமொன்றையானுற் சச்சிதானந்தமாவார், வார்ந்
துபாரென்னைபாச்சு வாகாகவெளியாய்ப்போச்சு, கார்ந்துபாரி
தற்கேயொக்குங்கடுகியதுருசுச்சுன்ன, மோர்ந்துபார்வேதையெ
ன்று லோயாததுருசுதானே. (௫௮௭)

துருசுதானென்றுநின்ற சூட்சியாமணித்தாய்மேலே, பருசு
தான்தாண்டிப்பாருபகலிரவொன்றாய்ப்போகும், வருசுதானினை
வுகெட்டு மதிகெட்டுப்புராணுங்கெட்டு, வுருசுதானென்றிப்போன
வுற்பணங்கண்டிலேனே. (௫௮௮)

கண்டிலேன்வயிரமொன்று கடுஞ்சுன்னமாகக்கேளு, முண்
டிலேனிதற்குளீச ருற்பனம்வழலைச்சுன்னம், தண்டிலேன்வட்டா
காது தனிப்புடம்வறுப்பாகாது, வொண்டிலோரவியிற்கட்டியொ
ழுகிடவெண்ணெம்வாங்கே. (௫௮௯)

வாங்கியேயெண்ணெய்போனுன் மகத்தானவழலைச்சுன்னங், தாங்கியேவயிரநீறுஞ் சாற்றுறேன்கேளுகேளு, மே ங்கியபூநா கந்தா ஹுறவானசத்துநாலு, பாங்கியேயுருகும்போது பாய் று ல்வயிரந்தானே. (௫௯௰)

தானங்கேயுருகும்போது தலைமண்ணைடப்பொடியைப்போடு, கோனங்கேவாங்கியொன்றுங் கொடுத்துவாகுடோரியப்பா, வே ணங்கேயொன்றியொன்றுய்விரைந்ததுபார்த்துவாங்கி, யூனங்கே கவசம்போட வுணர்த்துறேனுணர்த்துறேனே. (௫௯௧)

உணர்த்துறேனென்றுவீண ருயர்கன்னின்மலத்தைவாங்கிப் பணர்த்துறேனிதற்குட்போடப் பரிவானமருந்தைக்கேளு, கண ர்த்துறவழலைச்சுன்னங் கடிதானவீரச்சுன்னந், தணர்த்துறேன் துருசுச்சுன்னந் தனிமூன்றுவராகன்மூன்றே. (௫௯௨)

மூன்றையு மலத்திலேடு முயல்வாகப் பிசைந்துகொண்டு. தோன்றையுமதன்மேலப்பிச் சுகவண்டமேற்றூற்கட்டி, யூன் றையேசீலைசுற்றி யுலர்த்தியேபுடத்தைப்போடு, ஞான்றையேகவ சத்தோடு கடுங்குகைவைத்துவூதே, (௫௯௩)

ஊதிடுவூன்றிநன்று யுள்ளூற்றவயிரநீறும், வாதிடவிதனிஞ ண்மை வாய்கொண்டுசொல்லப்போகா, மாதிடாவிலேயநீரில் மக த்கானமலைகணீறு, மேதிடுமிதனில்விர மென்னாயாரிருந்தவீ டே. (௫௯௪)

வீடென்றுசொன்னதுண்டால் விளக்கத்தையறியார்லோகர் ஆடென்றரவியிற்குள்ளே யடங்கினுள்வாலைபாரு, கூடென்றரவிக் குவிந்து கொண்டிடவயிரமாச்சு, தோடென்றுகரித்தாள்மானுசூ ழ்மதிரெண்டும்பாரே, (௫௯௫)

பாரிந்தவயிரச்சுன்னம் பாடுதுவாடுதையா, நேரிந்தச்சூதங் கூட்டி நிலைத்தரைமுலைப்பால்விட்டு, வோரிந்தவில்லைபண்ணி யுல ர்த்தியாப்புடத்தைப்போடு, கோரிந்தச்சூதந்தானுங் கொடுஞ்சுன் னமாகுந்தானே. (௫௯௬)

சுன்னமாஞ்சூதத்துள்ளே சூட்டுநீசமனுய்ச்சூதங், கனமா யரைத்துப்போட்டுக் கவர்சமன்சூதத்தொங்கம், பன்னமாய்ப்ப த்துமேறிப் பருக்கிறசுகத்தைப்பாரு; பொன்னமாஞ்சுன்னமொ ன்று வொருநூறுதங்கத்தூட்டே, (௫௯௭)

ஊட்டியதங்கம்பாரு வோகோகோசிவப்புமெத்த, நீட்டியத ங்கந்தன்னில் நேரானலோகந்தேய்த்து, வோட்டியேகாய்ச்சிப் போடு வொன்பதும்பரிசவேதை, யாட்டியபதத்தைவிட்டே யப் புறந்தொந்தமேநே. (௫௯௯)

எழிடத்தொந்தந்தானு மெத்தனையென் றுகேட்கக், கூழிடக் கோடாகோடி கொண்டிடினுஞ்சொல்லமாட்டேன், சேழிடவிதனி ன்வேதை செகச்சாலம்போலேயாகு, மாறிடுங்குளங்கள்வைக்கி லதுதோன் றச்சலம்போலாமே. (௬௧௧)

ஆமிந்தப்பாறைக்குள்ளே யடங்கியேசலமேவற்றிப், பேய மிந்தவெட்டுவெட்டப் பொசியாதுசலமேபோலப், பாமிந்தப்பல குருக்கள் பாறைநீர்க்கொக்குமொக்குச், சேமிந்தவாறதற்குள் செலம்போலவயிரமாமே. (௬௦௦)

வயிரத்தின்சுன்னத்தாலே மாள்கிறசரக்கைக்கேளு, பயிருற் றபாஷாணங்கள் பலபலவுபரசங்கள், கயிருற்றநவலோகங்கள்கா ணுமுன்மாண்டுபோறு, நயிருற்றசதாசிவத்தி னடனமுங்காணலா மே, (௬௦௧)

காணவேகாயசித்தி கப்ளிக்சமுறையைக்கேளு, வாணவே வீசமுண்ணு யப்பனேதினந்தான்மூன்று, பூணவேசட்டைநீங்கி ப்போலபொன்தேகமாகுந், தோணவேயிதற்குள்மாற்று சுழன்ற நூற்றிருபத்தெட்டே. (௬௦௨)

எட்டாதகுருவுக்கப்பா விசைமுக்கால்வங்கமாகும், பட்டா னவங்கமுக்காற் பாதிக்குநிமிளையப்பா, தொட்டானநிமிளைமுக் காற் சுகமானதுருசியப்பா, விட்டானதுரிசிமுக்கால் விளங்கியசா ரமென்னே. (௬௦௩)

சாரத்தின்முக்காலாகுந் தனியானகாரமப்பா, காரத்தின்முக் காலாகுங் கடியதோர்சூடனப்பா, நேரொத்தவேழுஞ்சொன்னே னேராகவின்னுங்கேளு, போரொத்தவிணங்கன்வேதை புகைக ண்டாற்பழுக்கும்பாரே. (௬௦௪)

பழுக்குமேபரிசத்தாலே பரிவானபூரமப்பா, கழுக்குமேமு ன்னேரெண்டு மப்பனேயுப்பைக்கண்டால், வழுக்குமேவழலைச்சு ன்ன மகத்துவமுப்பாலாச்சு, வொழுக்குமேவேதையெட்டு மிப் படிதொட்டுப்பாரே. (௬௦௫)

அடியானவழலைதொட்டா லாடுமேயண்டரண்ட, முடியானா
பூரந்தொட்டால்மூதண்டங்கிழிந்துபோகும், பிடியானவங்கந்தொ
ட்டால் பேரண்டந்துளைந்துவாடும். கொடியானநீமிளைதொட்டா
ல் கொள்ளையோவாதந்தானே. (௬௯௬)

தானென்றநாலுக்குள்ளே சகலமுமடங்கிப்போச்சு, சோ
னென்றவீரசாரங் கொடியதோர்காரங்கூட்டு, வானன்றியாடலா
கு மாட்டிதில்துரிசியப்பா, வேனென்றுமின்னுஞ்சொல்வே ணிது
விட்டால்வாதம்போச்சே. (௬௯௭)

போச்சென்றுவிடக்கவேண்டாம் போக்கோடேயிதற்குள்
பாரு, வாச்சென்றுசொல்வாளாத்தாள் வளைந்துநீபூசைபண்ணு,
நீச்சென்றுநிலையாதென்று நேரிதைச்சொல்வார்வாசி, வோச்செ
ன்றவாசிவைத்து வுரைக்கநீசிங்கென்றாதே. (௬௯௮)

சிங்கென்றுவூதும்போது திருநடச்சிலம்புகேட்கும், வங்கெ
ன்றுவாங்கும்போது வரிசையாயாறுங்காணு. நங்கென்றுநாட்டி
யேற நாதாந்தவெளியாய்ப்போகும், பங்கென்றநாலுக்குள்ளே ப
ருவமாயூதுவூதே. (௬௯௯)

ஊதையின்முதற்பாழ்கண்டா லுயர்வானவாதியாவா, ரா
தையில்ரெண்டாம்பாழையடுத்திடிற்சித்தராவார், பேதையில்மூ
ன்றாம்பாழிற் பிறந்திடும்வாசியப்பா, கோதையில்நாலுக்குள்ளே
கொள்கிடாய்கொள்கிடாயே. (௭௦௦)

கொள்கியநிராகாரத்திற் நுழைந்துள்ளேபுகுந்தாயாணு; ன
ள்கிட்டதெல்லாம்போச்சு நாமென்றநாமம்போச்சு, வள்கிட்டநி
னைவுபோச்சு வாரைந்துபொருளும்போச்சு, தொள்கிட்டவெல்லா
மொன்றாய்ச் சுழுத்திபோலுறக்கமாமே. (௭௦௧)

சுழுக்தியிலொன்றுங்காணார் தூங்குவார்மாடுபோலே, யழு
க்தியேயிதற்குட்சேர்ந்தா லனேகநாள்சடம்போகாது, செழுத்தி
யேயொன்றாய் நின்றசிவன்போலவாழ்வாய்நீயுங். கொழுக்தியே
மூலத்தீயைக் கொடியோடேசென்றேயேறே. (௭௦௨)

ஏறவேமனதுண்டாணு லிசைந்ததுமவுனமாகுந், தேறவேம
ண்டலத்திற் சிவன்வந்துவரிசைசொல்வார், கூறவேயவற்றைக்
கேளு கூடுவார்நாலுக்குள்ளே, யாறவேவீசன்காட்ட வந்தமாநா
விற்கூடே. (௭௦௩)

கூடியமனதோடொக்குங் குலாவியவயிரச்சுன்ன, மாடியமு
டிவுக்கொக்கு மப்பனேசூதச்சுன்ன, நீடியமணித்தாயொக்கு நே
ரானவுப்புச்சுன்னந், தாடியசுன்னமெல்லாந் தனியத்திக்கொக்
குப்பாரே. (௩௱௧௪)

அத்திக்குமொக்குமென்றே னளவற்றசுன்னமெல்லா, ம
த்திக்குள்காயையென்ன வாராலுமுடிவிலப்போ, லத்திக்குளண்
டமெல்லா மடங்கிறாற்போலேகேளு, வத்திக்குண்மகிமைபோ
லே யாடிடுஞ்சுன்னம்பாரே. (௩௱௧௫)

சுன்னந்தான்விரித்தேன்யானுஞ் சூட்சந்தானறிந்தமட்டும,
பன்னந்தான்பார்க்கப்பார்க்கப் பாவுக்குளடங்காதப்பா, சின்னந்
தான்பூத்தாப்போலே செகமெல்லாஞ்சுன்னமாகு, மின்னந்தான்
சொல்லவென்று னெனக்குள்ளேயடங்காவாறே, (௩௱௧௬

அடங்காதமனதைக்கட்ட வறியாமற்கெட்டார்லோக, ரட
ங்காதசுன்னப்போக்கை யறியாமற்கெட்டார்வாதி, யடங்காதவா
சைக்குள்ளே யத்தியேமாண்டார்கோடி, யடங்காதநிர்க்குணத்
தை வடித்தவர்பிழைத்தவாறே. (௩௱௧௭)

வாறுகேள்கலப்பாலுண்ட மகத்தானபுகழைக்கேளு, தேறு
கேளுக்குப்பால்தான் சேர்க்கையாய்க்கரைக்குமாசொல், தா
றுகேளுள்ளமட்டுந் தனிப்பாவஞ்செய்தபாவி, வேறுகேள்முடிவு
காலம் வேதாந்தம்பார்த்தவாறே. (௩௱௧௮)

பார்க்கவேதெண்டுமென்றாற் பருவத்தைத்தொட்டுப்பாரு,
வேர்க்கவேவருவதல்ல விசைந்தமுன்குறையாலெய்துஞ், சேர்க்
கையேயாதாரத்தைச் சிறக்கவேபேறுதற்குக், கார்க்கவேவாசி
கொண்டு கைமுறையாகவேறே. (௩௱௧௯)

கைமுறையாகாவிட்டாற் காணுதுவாதமென்றுங், கைமு
றைபார்க்காவிட்டாற் கவராதுநாலுக்குள்ளே, கைமுறைபார்க்
காவிட்டாற் கசடற்றுமனமில்லாது, கைமுறைவிவேகங்கண்டு க
ருத்தூன்றியேறிப்பாரே. (௩௱௨௰)

ஏறியேபாருமென்றே யெனையாண்டபோகமூர்த்தி, கூறிய
சொல்லைத்தொட்டுக் குருபதந்தாண்டிப்பார்த்தேன், தேறியேம
னமொன்றுமென் றேகமுங்கார்த்தேன்கார்த்தே, ஞறியேயனு
போகத்தை யப்பனேபாடினேனே. (௩௱௨௧)

பாடினபாட்டைப்பார்த்துப் பலந்தப்பிற்றென்னவேண்டா, மூடினவாறும்பார்த்தே யுரைத்தபின்றுழிலைப்பாரு, தேடின தெல்லாஞ்சித்தி செகச்சாலம்வெளியாய்ப்போகும், கூடினதாலே ப்பாரு கூப்பிடுமடுக்கப்போமே. (சுஉஉ)

அடுக்கவேகொஞ்சித்தும்பிக் கையுண்டுவாளையாமோ, மடு க்கவேகோழிகூவில் மகத்துவக்குயிலதாமோ, விடுக்கவேபசுவி னோடு மெருமைதான்சரியதாமோ, தொடுக்கவேபூனைதானுஞ் சொற்புலியாமோசொல்லே, (சுஉங)

சொல்லியகழுதைதானுஞ் சுகப்பட்டகுதிரையாமோ, வல்லி யகோலமாத்தா னப்பனேதோசைக்காமோ, வொல்லியதேங்கா யெனன லூமத்தைதிருவலாமோ, மல்லியமூடனுக்கு மகத்தோர் கள்சரியோசொல்லே. (சுஉச)

சொல்லியவழக்கமெல்லாஞ் சூட்டொடாக்குமுப்புக்கப்பா, ம ல்லியவுப்பேதென்று மயங்காதேசொல்லக்கேளு, வல்லியவழலை ச்சுன்ன மதுகண்டாலுப்புக்கூர்மை, யெல்லியகல்லுப்பல்ல வே கங்காண்வழலைதானே. (சுஉரு)

உழலைபைச்சுன்னஞ்செய்தால் வாதங்கைக்கட்டிநிற்கும், வ ழலையைசுன்னஞ்செய்தால் வபத்தப்பமுன்னேயாகும், வழலை யைச்சுன்னஞ்செய்தால் மார்க்கத்திற்குளிகையாகும், வழலையின் சுன்னஞ்சொல்ல வாய்மூடும்வாதந்தானே. (சுஉசு)

வாதிகளென்னப்பார்த்தேன்வகைவகைநூலைக்கற்றே, ஞே தியேநுழைந்தேன்சுட்டேனேகோகோவழலைப்போனு, லாதியே துப்புக்கப்பா வழைத்திடும்வழலைச்சுன்னங், கோதியவுப்புநீறுங் கொள்ளாட்டால்வெடிக்கும்பாரே. (சுஉஎ)

வெடித்ததுவொன்றுவாங்கி வேதணப்படுகுமாண்பர், கடி த்ததுபாம்பேயானுறகைமருந்தென்கொண்டாலு. மடித்ததோ மனதுனக்கு மறந்தாயோவழலையாட்டப், பிடித்ததோபேய்தான் வாதப் பிறப்பெல்லாம்வழலையாட்டே. (சுஉஅ)

வழலைதானென்னவென்று மயங்காதேயுப்புயுப்பு, வழலைதா ன்சுன்னமானால் மாட்டிதிற்சரியாஞ்சாரம். வழலைதான்சாரங் கொல்லு மகத்தானஜலமுமாகும், வழலையாய்நீறுக்குள்ளளே வ ழங்கியவீரந்தேயே. (சுஉகூ)

தேய்த்திடச்சிவப்பேயாகும் செலமெல்லாம்பாருபாரு, மாய்த்திடப்பூரம்போட்டு வாரியேயுலர்த்திமுக்கா, லெய்த்திடச்சுன்னமூசை யெடுத்துநீயூதுவூது, காய்த்திடப்பூப்போலாரங் கடுஞ்சுன்னமாகும்பாரே. (௬௩௰)

பாரிந்தவழலைச்சுன்னம் பரிவானபூரச்சுன்னம், நேரிந்தவுப்புச்சுன்ன நிரைமூன்றுமுன்னேனதிரு, கோரிந்தமூன்றுந்தொட்டுக்கொள்கியேவாதமாடுங், காரிந்தவங்கந்தானுங் கடுஞ்சுன்னமாக்கக்கேளே. (௬௩௧)

கேளுநீவங்கந்தன்னைக் கெடியாகவில்லைவார்த்துத், தாளுநீநாலுக்கொன்று தாக்கியேரசத்தைப்பூசி, வேளுநீமூன்றுசுன்னம் வெருவியேமேலேபூசி, யாளுநீசூதமூன்றிலணைத்துநீசூதமப்பே·

அப்பியேயுலர்ந்தபின்ன ரண்டத்தைத்தால்கீழ்மேலிட்டு· ஒப்பியேபுடத்தைப்போடா யொருமட்டாய்ச்சுன்னமாகுங், கப்பியமற்றச்சுன்னங் காணிதற்கொவ்வாதொவ்வா, செப்பியவிந்தச்சுன்னஞ் செய்கிறமுறையைக்கேளே. (௬௩௩)

கேளுநீவங்கச்சுன்னங் கெடியானவீரம்போட்டுத், தாளுநீதேய்க்கத்தந்தந் தனிமெயாவ்வாச்சிவப்புமெத்த, தாளுநீபரிமேற்பூசித் தனியண்டங்கீழ்மேலிட்டு, வேளுநீபுடத்தைப்போடு விரிந்ததுபூப்போலாமே. (௬௩௪)

ஆமிந்தத்தங்கச்சுன்ன மணைநூறுசூதத்துள்ளே, வேமிந்தச்சூதம்பாருவிரைந்தெடுவெண்ணையாகுங், காமிந்தக்காமிப்பெண்ணைக்கண்டுடன் தொடந்தாற்போல, வோமிந்தச்சுன்னம்பண்ணி யொருகோடிதொடர்ந்துசாமே. (௬௩௫)

சாகுமேசூதந்தொந்தி சதகோடிமட்டுங்கட்டும், வேகுமேபாஷாணங்கள் விட்டதுதொட்டதெல்லாம், வாகுமேயிதன்முன்வேதை வகைசுண்டுவாடுவாடு, ஆடுமேவங்கச்சுன்னத் தாண்மையான்கண்டிலேனே. (௬௩௬)

கண்டிலேனீசனுக்குக் கண்வைத்துத்தானமூன்று, மொண்டியபூரஞ்சோம ஞெடுங்கியவுபபேபானு, கொண்டியவழலைதீக்கண் கொள்கிலேன்மூன்றுமூன்றுந், தண்டிபுமேகாலம்வங்கந் தகப்பனரணைந்தார்பாரே. (௬௩௭)

அணைந்திட்டதகப்பன்பாத மனுதினம்போற்றுபோற்று, பி
ணைந்திட்டசரத்தைக்கூட்டிப் பேதித்துப்பார்க்கப்பார்க்க, வினை
ந்திட்டவிரேசகத்தை யெதிர்த்திருக்கும்பகத்திற, கணைந்திட்டநட
னமூர்த்தி கண்காணவாடுவாரே. (௯௩௮)

ஆடியகூத்தைப்பார்த்தே யப்பனைவாதம்பாரு, மாடியகூ
த்துங்காணு மாதுமேனோக்கியேறும், வாடியகூத்தைக்கண்
டா லன்றுபோமசாவுபொய்யாய், வாடியகூத்தைப்பார்த்தே
யாத்தாளுமிருந்தாள்பாரே. (௯௩௯)

ஆத்தாளையறியாவிட்டா லப்பனையறிவாரோசொல், லாத்தா
னவழலைவிட்டா லுலகத்தில்வாதமாமோ. சேத்தானநீரைவிட்
டாற் செழுங்கஞ்சமாமோசொல்லாய், கூத்தானைக்காணுவாதி
கொடிதானசெனனமென்னே. (௯௪௰)

செனனத்தைவேண்டுமென்றாற் சேராதேதவத்தைநீயுஞ்,
செனனத்தைப்போக்கவென்றாற் சேர்ந்தேறுதவத்தைப்புக்கி
ச், செனனத்தைப்போக்காதப்பா சேர்ந்திட்டவாதந்தானுஞ், செ
னனத்தையழிக்கவாதஞ் சித்தித்தாலைப்பாரே. (௯௪௧)

நாலேதுமெட்டதென்று நலமுற்றுப்பாருபாரு, கோலேது
வீதியோடுங் குதிரையுமுற்றுப்பாரு, காலேதுதீயாமேது கசடற்
றுவுற்றுப்பாரு, மேலேதுவெளிதானேது வேருண்டியுரைத்தபி
ன்பே. (௯௪௨)

பின்பேதுமுன்பக்கேது பேசாமலுரைத்தபின்ப, வன்பேது
வாசையேது வாகாகுதிரையேது, வின்பேதுசித்தியேது வேக
த்திற்புகுந்தபின்பே, வன்பேதுபரியாளுசுன்ன மகத்துவமிதற்கு
நேரே. (௯௪௩)

நேரவேவாதசித்தி நிலைக்கவேவழக்கஞ்சொல்வே, ஞானவே
வழலைச்சுன்ன மப்பனைமுன்னேபண்ணு, தாரவேயுப்புச்சுன்னந்
தனிப்பின்புசுருக்காய்பண்ணு, வோரவேபூரச்சுன்ன மொடுக்கத்
தில்தீருதிரே. (௯௪௪)

தீர்ந்தபின்குருசுபண்ணு திறமானசூதம்பண்ணு, வார்ந்த
பின்தங்கமபண்ணு யப்பனைமாறுக்கேளே, சார்ந்தகல்வாதத்து
க்குத் தனியாறுமாறுதார. மேர்ந்தவிந்தாறும்பார்த்தா லெவரே
னும்வாதியாமே. (௯௪௫)

ஆமென்றவாதசித்தி யாகவேகணேசன்பூசை, யோமென்ற நந்தியோடு மொக்கவேபூசைபண்ணு, தாமென்றவேதைதானுஞ் சதகோடிக்கொன்றேயோடும், வாமென்றமூலாதாரம் வாசியேபூட்டிவாங்கே. (௯௪௬)

வாங்கையில்பளிச்சென்றாக்கால் வாதமும்பளிச்சென்றேறும், வாங்கையில்மயக்கமானால் வாதமுமயங்கிப்போகும், வாங்கையிலிருளாய்நின்றால் வாதமுமிருண்டகாடு, வாங்கையில்நந்திதேயன்றில் வாதமுந்தோன்றும்பாரே. (௯௪௭)

தோன்றியேலோகத்தோர்க்கும் சுகவாதசித்தியென்று, வூன்றியேகேட்டாயானா லுற்பனஞ்சொல்லக்கேளு, பூன்றியேயாயிபாதம் பொற்பூவாற்பூசைபண்ணு. வான்றியேபத்துங்காணு மவனுக்குஞானமாமே. (௯௪௮)

ஆமிந்தச்சித்தியென்றே யகந்தையாய்ப்பெண்ணைக்கூடி; யோமிந்தவொழுக்கத்தோடே யோடினானரகில்வீழ்வான், காமிந்தப்பாவியென்று கண்ணுக்குள்தேவிகாணாள், வேமிந்தத்தீக்குள்வானீர் வீழ்ந்திட்டவாறுகாணே. (௯௪௯)

வாறுகேளாடிக்காற்றும் வாயூற்றுஞ்சரியோசொல்லு, தாறுகேண்மூலத்தீயுந் தணிக்தியுஞ்சரியேசொல்லு, வாறுகேண்ஞானத்துக்கு மடயோகஞ்சரியோசொல்லு, வேறுகேள்வாய்க்காலுக்கும் வேலைக்குஞ்சரியேசொல்லே. (௯௫௰)

சொல்லெல்லாமொக்குமொக்குஞ் சொல்லதுகுருவும்போனால், சொல்லெல்லாமொக்குமொக்குஞ் சுழியாறுப்பாராவிட்டால் சொல்லெல்லாமொக்குமொக்குஞ் சுந்தரிபூசைபோனால், சொல்லெல்லாமொக்குமொக்குந் துடிவங்கங்காணாதார்க்கே. (௯௫௧)

காணாதபொருளையெல்லாங் காணவேபாடிப்போட்டேன், தோணாதுகோணுமப்பா சொல்லூன்றிவழக்கம்பாரு, கோணாது வாதஞானங் குறியாறுமேறலாமே, பூணாதேயூணுநன்றா யுற்பனவழக்கந்தானே. (௯௫௨)

வழக்கந்தானேதோவென்று வாய்வீணர்பாராவிட்டாற், பிழக்கந்தான்கண்டம்ரெண்டும் பேசாதுமவுனமாகு, மிழக்கந்தான் வழக்கம்பார்த்தால் வேறில்லைசநூல்போலாம், அழக்கந்தான் வந்தமீனை யடிக்கயிறுகொண்டுசுண்டே. (௯௫௩)

சுண்டினகயத்துக்கொக்குந் துடியானதுருசுச்சுன்னஞ், சுண்டியகயிறுபூரஞ் சொக்கியவுற்பனந்தான், சுண்டியவழலையென்ன சொல்லவேயற்பமோதான், சுண்டியவிதுதானன்றோ சொல்லொக்கும்பாருபாரே. (கூ௫௪)

பாரிந்தநாளுபயோறற் படிப்படியேற்றம்போச்சு. பாரிந்தநாலேக்கொண்டு பரியோடுவுப்புச்சூதம, பாரிந்தநாளுமூன்று பதையாமற்சுன்னமானுற், பாரிந்தபூவமுதாதுபார்ப்பையே பூண்டார்க்கென்னே. (கூ௫௫)

பூண்டவன்வாதியல்லாற் புவிக்குள்ளேவாதியுண்டோ, வாண்டவன்சும்மாசொல்வா ஞத்தாளைக்கொண்டுகேளு, காண்டகவனம்போல்வேகங் கடியதோர்மூலம்பாரு, நீண்டசுற்சடையோன்வந்து நிமிஷத்திற்சொல்லுவானே. (கூ௫௬)

சொல்லுவான்மூலம்பாரு சுகமாகத்தாயைப்பூசி, மல்லுவாய்வாதங்கெட்டு வகைகெட்டேயலையவேண்டாம், வில்லுவான்கோணிற்றுல் விரைந்தங்கேயெடுக்கப்போகும், வல்லுவான்வில்லுநேரே மப்பனேகுருவைக்கேளே. (கூ௫௭)

கேளாதேசுட்டாயானுற் கொடியொருமாற்றுங்காணுய், வாளாய்நீயொருநாளுந்தான் மனமெல்லாம் புண்ணுய்ப்போகுங், கூளாகுங்கஞ்சிக்கேங்கிக் கொடும்ரசப்புகையாற்சிக்கித், தேளானவிஷப்போலேறிச் செத்தநாய்போலாவாயே. (கூ௫அ)

நாய்போலேயலையவேண்டாம் நான்சொன்னமுறையைப்பாரு பேய்போலேயலைந்தால்வாதம் பேய்ப்பிள்ளாய்வருமோசொல்லுதாய்போலேபரிந்துஞட்டுஞ்சார்ந்தவென் னூலைப்பாரு, காய்போலவிலவுகாத்தாற் கடும்பழமாமோசொல்லே. (கூ௫௯)

சொல்லுறவிணங்கன்சுன்னந் துறையானசெயநீர்கொட்டு, மல்லுறநெகிளம்போலே மாட்டுறேன்வாதம்பாரு, நில்லுறசாரம் ரெண்டு நேர்காரமரையேபோடு, வொல்லுறவிணங்கனீரை யூட்டிநீயரைத்திடாயே. (கூகூ0)

அரைத்திடநெட்டேயேறு மம்மம்மாசாரஞ்சாகுந், தரைத்திடச்சாகுமட்டுக் தண்ணீரால்ரைப்பாயப்பா, வுரைத்திடவுருட்டிமூசைக் குள்வைத்துப்புடத்தைப்போடு, கரைத்திடக்கல்வத்தாட்டு கடியதோர்செயநீராமே. (கூகூக)

செயநீரைத்தொட்டேயேறச் சேதியைநன்றாய்க்கேளு, பய
நீராமாலின்தேவி பலமதுரெண்டுபோடு, கயநீராந்துருசியொன்
று காட்டரையமுரியுப்பு, வயநீராஞ்சாரநீரை யூட்டியேயரைத்தி
டாயே. (௬௬௨)

வட்டியேபுடத்தைப்போட்டு வுறவாகப்பனியில்வைக்க, நீ
ட்டியசெயநீராகு நிலையின்றுஞ்சொல்லக்கேளு. காட்டியசாரம்ரெ
ண்டு கடுவங்கச்சுன்னமொன்று, பூட்டியகெந்திநாலு புகழாகச்
செயநீர்வாரே. (௬௬௩)

வார்த்தையரைத்துநன்றாய் வளமானமூசைகட்டு, யேர்த்
தைப்புடத்தைப்போட்டே யியல்படப்பனியில்வைப்பாய், கோ
ர்த்ததைக்கெந்திநீர்தான் கொள்கியேயெடுத்துவைப்பாய், சேர்
த்ததைநிமிளைநாலு திறமாகக்கல்வம்போடே. (௬௬௪)

போட்டிதிற்சாரம்ரெண்டு புகழ்மூலத்துப்புவொன்று, ஆட்
டிதிற்கெந்திநீரை யுறவார்த்தேயரைப்பாயப்பா, கோட்டிதிற்பு
டத்தைப்போட்டுக் கொடும்பனிவைக்கநீராந், தேட்டிதினிமிளை
நீர்தான் செகமெல்லாம்விளையுமாமே. (௬௬௫)

விலையில்லாநிமிளைநீரில் வீரம்நாற்பலமேபோட்டுக், குலையி
ல்லாவங்கச்சுன்னம் கொட்டதிற்பலந்தானென்று, புலையில்லாப்
பூரம்பாதி புகழ்மூலத்துப்புப்பாதி, பலையில்லாப்பலந்தானென்று
பருவமாயரைத்துவாங்கே. (௬௬௬)

வாங்கையிலிதற்குட்சார மாட்டிபலந்தான்ரெண்டு, தேங்
கையில்புடத்தைப்போட்டுச் செயநீராம்பனியில்வைக்க, வோங
கையில்செயநீராகு மொப்பென்னசொல்லப்போறேன், தாங்கை
யிற்பாஷாணங்கள் சகலமுந்தோய்க்கச்சாமே. (௬௬௭)

சாகிறசரக்கில்வேதை சாற்றவேகணக்குக்காணேன், வசகி
றதங்கங்காய்ச்சி வாழ்வீரநீரில்தோய்ப்பாய், போகிறதங்கமேலே
புகழ்வீரசெயநீரப்பு, வாகிறபுடத்தைப்போடா யப்பனேதங்கநி
றே. (௬௬௮)

நீறல்லசுன்னஞ்சுன்ன நிலவரம்பாருபாரு, கூறல்லவாதத்து
க்குக் கொடுஞ்சிவன்றங்கச்சுன்னம், தேறல்லசுன்னஞ்செத்தாற்
செணத்திலேலோகத்தேறநும், பேறல்லலோகங்கல்லும் பேரா
னபொன்னுமாமே. (௬௬௯)

பொன்னுமாந்தேகந்தானும் புகழாகத்தின்னுதின்னு, வுன்னுமாஞசிவனுஞசத்தி யொருவிதிகாணலாகும், கன்னுமாந்தங்கச்சுன்னங் கண்டியபற்கூதனுசாகும், பன்னுமாந்தங்கச்சுன்னம் படுமுன்னேயெல்லாஞசாமே. (௬௭௦)

சாவிதுநொஞசங்கொஞசங் சாகிறமுறையைக்கேளு, மாவிதுதங்கச்சுன்னம் வாழ்வீரஞசமனுப்க்கூட்டு, கோவிதுசிவப்பாமெத்தக் கொள்கியசெயநீர்கேளு, வாலீதுவழலைச்சுன்ன மதற்கெடைசாரம்போடே, (௬௭௧)

போட்டதுரெண்டுமொக்கப் புகழ்ந்தரைசெயநீராகு, மீட்டதுதுரிசிதானு மீரஞசுகழஞசிஙாக்கு, மூட்டதுசெயநீர்தோய்த்து முதண்டரவியிற்போட்டு, வாட்டிதுசிவந்தவீர மப்பனேமேலே பூசே. (௬௭௨)

பூசியேயுலர்ந்தபின்பு புகழ்வங்கச்சுன்னத்தோடே, யாசியேவீரம்போடா யப்பனேசிவப்பாம்பாரு, கோசியேயதன்மேற்பூசு கொள்ளையோகொள்ளைவாதங், தாசியேநிமிளைச்சுன்னங் தனிவீரங்கூட்டிப்பூசே. (௬௭௩)

கூட்டினல்முறையுந்தீர்ந்து குலாவியேயுலர்ந்தபின்பு, நீட்டியசுன்னமூசை நிலைக்குள்ளேவைத்தூது, வோட்டியதுருசுச்சுன்ன மொருசுன்னமிதற்குமொவ்வா, யாட்டியகங்கைசூடி யவரோடுவேதைபோடே. (௬௭௪)

போடவேசிவனைவிட்டாற் புகழானதாயோடாடு, வாடவேதாயுமெச்சி யணைத்தங்கேயமுதமீவாள், நீடவேயிருவர்விட்டாணிலையொக்குமூலமூர்த்தி, யூடவேமுனிதான்பின்பு வொருத்தருங்கண்டிலேனே. (௬௭௫)

கண்டிலேன்துரிசிக்கிந்த கடுங்காரம்வந்ததென்ன, வண்டிலேன்வழலைச்சுன்ன முட்பூக்துப்பெருமையாச்சு, தண்டிலேன்லோகவாதி தனிக்கொசுவாகக்கண்டேன், அண்டிலேன்மலையுமண்ணு மறையுநீறன்பொன்னும்பாரே. (௬௭௬)

பாரீந்தகுருவைத்தொட்டுப் படிக்ககல்மேலேபூசி, வாரீந்தவாட்டூது மகத்தானசுன்னமாகுங், கோரீந்தச்சுன்னத்தோடு கொள்கிடுவயிரமேலே, நேரீந்தவயிரந்தொட்டு நேர்ந்திட்டாய்நியீளக்கெண்ணே. (௬௭௭)

நிமிளையேயூதிப்போடு நிகரில்லாச்சுன்னமாகு, யமளையாம் சூதம்விசை யதற்குள்ளேசாணிபோடு, கமளையதயாராச்சூதங் கழுகியேகல்லுப்போலாந், தமளையவிந்தச்சூதனு சதத்திரதொன் றபோடே. (௬௭௮)

போடவேமணலுங்கல்லும் புகழ்மேலாகநாறுமாற்று, வாடவேயிதுதான்மட்டு மப்பனேபொன்னைக்கேளு, நீடவேவீரத்தோடு நிமிளையானாசுன்னங்கூட்டி, யூடவேசேர்ந்தாயானா லோகோகோபானுவாமே. (௬௭௯)

பானுவுத்தோற்றுப்போகும் பரிவாளநிமிளைமார்க்கம், கானுவானாசெயசூதத்திற் கலந்தப்புபத்துக்கொன்று, கோனுவாயூதுவூது கொடுஞ்சுன்னமாகுஞ்சூதங், தானுவானாசூதச்சுன்னஞ் சமனாகவீரனாசேரே. (௬௮௦)

சேர்த்திடிற்சிவத்துக்கொப்பு செப்பிடவிடத்தைக்காணே, ணார்த்திடவிந்தராக மப்பிடுதுரிசிக்காகிற், போர்த்திடச்சற்றேயூது பொலிந்தததுதானேயேகு, மார்த்திடத்தூளோடொக்க மாட்டிடாய்வீரந்தானே, (௬௮௧)

வீரந்தான்சிவத்துக்கொக்கும் வேதாந்தவெளியைப்பாரு. வாரந்தானிந்தராக மப்பிடுதுரிசிமேலே, காரந்தான்வங்கச்சுன்னக் கடுங்குகைக்குள்ளேயூது, பாரந்தான்பொறுத்துத்தின்னப் பாராபரத்தொக்கும்பாரே. (௬௮௨)

பாரிந்தத்துரிசிச்சுன்னம் பணவெடையொன்றுதாக்கு, கோரிந்தவெடைக்கேயொக்கக் கொட்டிடுகெவுரியப்பா, சேரிந்தவெடைக்குவீரந் திரிக்குள்ளேபொடித்துச்சுற்று, வாரிந்தமலையான்கீழே வைத்துநீகொளுத்தியாற்றே. (௬௮௩)

ஆற்றியேமலையைப்பாரா யப்பனேகருத்துப்போகும், போற்றியேரவியைக்கண்டாற் பொழிச்சென்றுபொன்னுமாகும், மாற்றியேமாற்றேதென்னின் வழங்கிற்றுபரந்தான்கேளு, வேற்றியேநாகபாணி யிப்படிசெய்தார்மேரே. (௬௮௪)

மேருவின்கீழேநின்று விளங்கியபொன்னைக்கேளு, காருவின்சம்புநீழற் கனியாலேபத்துமாச்சு, கோறுவினிணங்கன்றொட்டுக் கொள்ளியதொழிலைப்போலப், பாருவின்ஞானமார்க்கம பகருவேன்கேளுகேளே. (௬௮௫)

கேளுநீமூலாதாரங் கெடியண்டம்போலேநிற்கும், வேளுநீயதன்மேலுனு விளங்கியவிதழுமுண்டு, வாளுநீயவ்வைத்தொட்டு வழங்கியகாரமட்டுந், தோளுநீரடுவேமூன்று துலங்கியகோணம் பாரே. (௬௮௬)

பாரந்தமூன்றுக்குள்ளே பருவத்தைச்சொல்வேன்யானு, மாரந்தவகாரமொன்றி லதன்மேலேகணேசநிற்பார், வாரந்தவொகாரமொன்றில் வல்லபைபதன்மேனிற்பாள், கூரந்தவொன்றிற்கேளு குண்டலிகதலிப்பூவே. (௬௮௭)

பூப்போலமுகங்கிழாகப் பொன்பாம்புபோலேகிறித். தூப்போலேசுருட்டிக்கொண்டு சுழிமுனைமுட்டிநிற்பாள், காப்போலேயவள்வாய்க்குள்ளே காளப்பாகந்திநிற்பார், கோப்போலே கோடிபானு கொள்கிடுஞ்சுகாரத்தீயே. (௬௮௮)

தீயையேமூடிக்கொள்வான் சிறந்தபூவிதழாய்ச்சேர்த்தி, வாயையேதூர்க்காளபாவி வழங்கியசத்தியெட்டு, மோயையேசத்தியெட்டு மோவ்விற்றுவிதழெட்டாகத். தாயையேபூசைபண்ணு தனிச்சத்திதிற பான்பரே. (௬௮௯)

திறப்பதுமேகோவென்னிற் றிறமானலகிரியாலே, விறப்பதுவருஷம்பத்து விருந்தாலும்சும்மாகாட்டாள், மறப்பதுபாணமற்றால் வாசலைத்திறந்துபோட்டு, வுறப்பதுவெட்டுப்பேருமூலாவு வாளுற்றுப்பாரே. (௬௯௰)

உற்றுப்பார்நிமிரக்கொட்டு வோகோகோவெட்டுசாம, மெற்றுப்பசர்நந்திகண்டா லெவருமெபயேவல்கேட்பா, ரொற்றுப்பாரிதுவேமூல முயர்ந்திட்ட துரியாதீதங், கொற்றுப்பாரிதற்குள்வாசி குமட்டிமோட்டுமோட்டே, (௬௯௧)

மாட்டுறவரிசைகேளு வளமாகச்சொல்வேன்யானும், வாட்டுறவிடத்தேபோடில் வங்கென்றுவுள்ளேவாங்கு, தீட்டுறநந்திக்குள்ளே சிங்கென்றுகும்பித்தோங்கு, வாத்திறகோடிபானு மங்கென்றுலகண்டமாமே. (௬௯௨)

அங்கென்றமூலசத்தி யவள்வாயிலோங்காரந்தான், பங்கென்றசுழியோடாறும் பரிந்தேறிமணிக்குள்நிற்கும், சிங்கென்றவுற்றுப்பார்க்கத் தெருவாறும்வெளியாய்க்காணும், வங்கென்றவங்கிக்கும்பி மாணிக்கவெளிபோலாமே. (௬௯௩)

ஒளியாலேயுற்றுப்பாரு வேரோகோக்கோகநிகாண்பார், தனியாலேகண்டாயானுற்றனிவா தஞ்சித்தியாரும்,வெளியிலேபூசைபண்ணி வேதாந்திமதுவையுண்டு, வெளியிலேபாருபாரு கண்கொள்ளாச்சோதிதானே. (சுகூச)

தானென்றபூமியெல்லாந் தனியொருதகழியாச்சு, வானென்றும்வேலையெல்லாம் வார்த்திடநெய்யுமாச்சு, காலென்றுவொளியேபானு கலங்கெங் குங்கொத்திறைப்போல், வேனென்றுமூலநந்திவிடுபட்டாற்கண்கொள்ளாதே. (சுகூரு)

கண்கொள்ளாச்சோதிகாணக் கசடரவெளிதோசொல்லும் வண்கொள்ளாப்பரமேமூல மதன்மேமேலநிர்த்தக்கர்த்தர், விண்கொள்ளாப்பதமுங்கொள்ளா வேதாந்தமுடிவுங்கொள்ளாத், தண்கொள்ளாப்பதத்தைநீயுஞ் சதமித்தஞ்சாதிதேறே. (சுகூசு)

ஏறினுலெட்டுஞ்சித்தி யெடுத்திடுங்கவனமார்க்கம், தேறினுல்வாதிசித்தன் தேருட்டால்மனுவமாடு, வேறினுற்பார்த்தேனென்பார் வெளிச்சத்தைக்கண்டேனென்பார், கூறினுல்மதுவைக்கொள்ளாக் குலாமர்கள்சொல்லும்பேச்சே. (சுகூஎ)

சொல்லியபூசைபண்ணித் துட்டரேபெண்ணைச்சேர்வார், வல்லிபான்தேவிபார்த்து மயக்கத்காலழிவாயென்பார், எல்லியதினிற்செல்வா ரெழுந்திருந்தாடல்செய்வார், ரல்லியவிதனைவிட்டேயப்பனேமூலம்பாரே. (சுகூஅ)

மூலமேபழக்கமாக மூட்டிநீமதுவையுண்ணு, கோலமேவெளியாய்ப்போகுங் குமட்டிக்பிராணுபாமங், காலமேவங்கென்றாது கடுமூலஞ்சிங்கென்றாது, வாலமேயுண்டானுட்டை யம்மம்மா காணலாமே. (சுகூகூ)

காணலாமென்றநாலைக் கண்டுசெந்தோஷிக்காதே, பூணலாயதிலேநின்றே யுரைத்தாக்கால்மெத்தநன்று, தோணலாம்பொருளுந்தோணுஞ் சுருதியினந்தாண்டு, மாணலாய்ப்பூணுபூணுவகண்டந்தான்மூலம்பாரே. (எ00)

மூலத்தின்மேலேநாலு மேற்சியங்குலமேதாண்டக், கோலத்தின்காரவீடு கொள்கியபிறந்தான்பொன்மை. சேலொத்தவிதம்தானுறு சேரலாம்பங்காறிட்டு, வேலொத்தசடத்தைப்பண்ணும் வேளர்தாமிருந்தவாறே. (எ0க)

இருக்கிறவேழார்கெந்த மெடுக்கிறதெல்லாங்காண்பார், தருக்கிறதுசவன்சாறு சாற்றுமேறநன்றாயக்கேளு, மருக்கிறபயிரோலும்பு வழங்கியவிறைச்சிதோலுஞ், செருக்கிறகாம்பேபாடளுசு சேர்ந்திவர்கூறுதானே. (எ0உ)

கூறானபிரமன்பக்கங் கூட்டியோவாணிநிற்பாள், வேறான தொன்றுமில்லை விரைந்துநீவாசியூட்டு, தேரானகூவாதிஷ்டானந் துலங்கியபடியேபாரு, வாறானவிரலின்மேலே யப்பனேமாலேபாரே. (எ0ங)

மாலுக்குப்பிறையாங்கோட்டை மகாரங்காணதற்குட்பாரு, மேலுக்குளிதழ்தான்பத்து விரிந்திட்டவெழுத்தைக்கேளு, சேலுக்குள்பங்கைத்தொட்டுச் சிறந்திட்டவ்வாம்பத்து, வாலுக்குணிற்கும்பாரா யதனிறம்படிகந்தானே. (எ0௪)

படிகமாம்வீட்டுக்குள்ளே பார்மேகவர்ணமால்தா, னடிகமாம்வாமபாக மலேந்தங்கேலட்சுமியும்நிற்பாள், மடிகமாசத்தோடாறு மகத்துவங்காண்பார்காண்பா, ரெடியமாம்வாதங்கூறு மேத்துறேன்காணுகாணே, (எ0ரு)

காணுநீர்மச்சமூலா கடுகிபவுதிரம்விந்து, தோணுநீரஞூமாவார் துலக்கியபொருள்தான்காணும். வேணுநீயிதறகுளளப்பா விரைந்துநீவாசியூட்டு, வாணுநீயதுவைக்கொண்டே யம்மம்மா வெளியாய்ப்போமே. (எ0சு)

போமிந்தவிடத்தின்பேரும் பூரகவீடென்பார்க ளாமிந்தவிதன்மேலெட்டு வங்குலங்கடந்தாயானாற், சேமிந்ததிரிகோணந்தான் சிறந்திகழ்பன்னிரண்டாம். வாமீந்தட்வ்வைத்தொட்டு வழங்கியசவ்வுமட்டே. (எ0எ)

மட்டானாடுவேகேளு வழங்கியசிகாரநிற்கு, மொட்டானநிறந்தான்செம்மை யொளிகோடிபானுவாகும், திட்டானருபங்காட்டுஞ் சிவனேடுசத்திநிற்பா, ளட்டானபேரசிம்பு னடவானபயமூர்த்துங்கே. (எ0அ)

தூங்கவேயெழுப்பிமெள்ளச் சுகமாகபெண்ணைச்சேர்க்கு, மாங்கவேயஞுசுமீசன் மத்தினமொழிறுனப்பா, வாங்கவேசிகாரவீடு வாசிகொண்டுதுலுது, வோங்கவேபன்னிரண்டோ வுறபனங்கேளுகேளே. (எ0௯)

சேணுநீவிசுத்தியான கெடியானதலத்திலப்பா, வாணுநீகோ ணமாறு வகாரங்கனடுவேநிற்கும், வேணுநீயிதழ்தானப்பா விள ங்கிற்றேயூரெட்டாக, வாணுநீயகாரந்தொட்டே யாகாகாவரைக் குணமே. (௭௧0

வைத்திட்டுநிறந்தான்கேளு வழங்கிற்றுகறுப்பேயாகக், கை த்திட்டபகேசனோடு கன்னியுமங்கேநிற்பா, ளொய்த்திட்டபரிச ணுசொல்வா ருதககமாந்தொழிலைக்கேளு, மைத்திட்டகடத்தலோ டல் மயங்கியதிடத்திற்காணே. (௭௧௧)

காணுநிறத்தமேலாடு கலங்காமலிருத்தலுஞ்சுர், தோணு தொழிலாய்ச்செய்வார் சூட்சத்தையின்னுங்கேளு, பூணதுபொசி க்கலாகா பொங்கியகோபனுசண்டை, யூணதுசுமையைத்தாங்க வோங்காரவொகாரங்கேளே. (௭௧௨

கேளுநீபொசிப்பைக்கண்டாற் கெடியாகத்திறக்கும்வாயை வாளுநீருசிகளாறும் வாசலுக்கப்பாலில்லை, தாளுநீபரந்தானின்ற தனித்ததோர்பீடமென்பார், வேளுநீயடிதாளென்று விளம்புவார் பெரியோர்கேளே. (௭௧௩)

பெரியோர்கள்சொல்லைக்கேட்டேன் பேரேட்டின்கலையை வாங்கி, யரியோர்களுலைவிற்றள்ளி யழைக்கிறார்பாருபாரு, தெரி யோர்களாலங்கே சிக்கெனவங்கென்றாலும், பரியோர்கள்த ள்ளிச்சென்று பளிச்சென்றுதோணும்பாரே. (௭௧௪)

தோணியதவத்தின்மேலே சூழ்விரல்பதினொன்றேற, வா ணியவண்டம்போலா யகாரங்காணடுவேநிற்கும், வேணியவட்ட விடு விளக்கியவிதழ்தான்ரெண்டு, போணியவுஞ்சாவென்ற பொ ருள்ரெண்டுமிருந்தவாறே, (௭௧௫)

வாறிதினிறத்தைக்கேளு மகத்தானபடிகவானங், கூறிதில் சதாசிவன்தான் கொள்கியமணிக்தாயோடு, தேறிதிற்சத்தங்கா ணச் செய்கிறதொழிலைக்கேளு, வேறிதிற்காமக்குரோதம் விள ங்கியலோபமாமே. (௭௧௬)

ஆமினிமோகத்தோடு மணங்கியமதத்தோடஞ்சு, வோமி னியஞ்சுஞ்செய்வா ருத்தமர்திக்கிற்கேளு, காமினிபிரமன்மாலு ங் கடுஞ்சிவன்மயேசனோடு, தாமினிக்காப்பார்திங்கைச் சதாசிவ ன்றளவாய்க்காணே. (௭௧௭)

தளவரையைக்கண்டாயானாற் சச்சிதானந்தங்காண்பாய், தளவாரையைக்கண்டாயானாற் றூயோடுசேர்ப்பார்பாரு, தளவாரையைக்கண்டாற்கேளு சமுசயந்தீருந்தீருக், தளவாயாட்டெடுத்தகன்னன சாஙகமாயுரைத்துப்பாரே. (௭௧௮)

உரைத்துநீவாசிவைத்து ஊதிட்டுவிந்தைபாரு, நிரைத்துநீ வர்ணமஞ்சு நிலையாகத்தோன்றுந்தோன்று, மிரைத்துநீபோகா வாசி யிழுத்தங்கோணலைக்கூட்டு, மரைத்துநீவைத்தாயானால் மறையாதுமனித்தாய்காணே. (௭௧௯)

தாய்காணுமட்டுமேப்பா சமுசயமரணையெல்லா, மோய்காளத் தொனிகளஞ்சு மும்மென்றாற்செணத்திலாகும், காய்காணும்பிஞ்சுமாகுங் கவனமும்விண்ணைத்தாண்டும், தோய்காணுந்தமரிற் புக்குஞ் சூட்சத்தையுரைககக்கேளே. (௭௨0)

கேளுநீமணித்தாய்தாண்டுக் கெடிவிரலெட்டுமேலே, யாளுநீகுருபதந்தா னம்மம்மாவெளியாய்த்தோன்றும், வேளுநீயகற்குணின்று வீசிடுவாசிகொண்டு, வாளுநீகீழேநின்ற வரிசையுந் தோன்றும்பாரே. (௭௨௧)

தோன்றிடுமேலேயப்பா சுகமானபதினொன்றேதா, னான்றிடுங்கேளுகேளு வாழியுண்மனையோட்டும், வேன்றிடும்பரைய தொன்று விளங்கியபரமதொன்று, கான்றிடுஞ்சினமேநின்ற காரணங்கண்டிலேனே. (௭௨௨)

கண்டிலாமார்க்கமெல்லாங் கண்டுடோசிகேரே, பொண்டிலாப்பிடரிக்குள்ளே யுற்றுப்பார்காணுங்காணும், மண்டிலாவனாகதத்தில் வைத்துப்பார்காணுங்காணும், தண்டிலாமூலம்பாரு தனிற்பதினொன்றுங்காணே. (௭௨௩)

காணவேமதிக்குமேலே கலந்துகாரனாகதத்தைப், பூணவே நெஞ்சிற்பாரு புகழாவிபனிரண்டப்பா, தோணவேமூலம்பாரு சுடர்க்கோடிதீயுங்காணு, மாணவேமூன்றும்பார்த்து வந்தந்தவிடத்தைக்கேளே. (௭௨௪)

கேளுநீமூலம்கீழே கெடியானநிராதாரந்தான், வாளுநீமூலமப்பா வழங்கியதுரியாதீதம், வேளுநீசுவாதிஷ்டானம் விளங்கியதுரியமாகுஞ், சூளுநீபூரகத்தைச் சுழியெனவறிந்துகொள்ளே. ()

அறிந்துகொள்நாகதத்தை யம்மம்பாசுழுக்திவிடு, தறிந்துகொள்விசுத்திவீடு கனவெல்லாங்காணுங்காணுந், தறிந்துகொள்மணித்தாப்வீட்டிற்சாக்கிரமெத்தவாகும், பிறிந்துகொள்துரியாதிதப் பேர்குருபதந்தான்பாரே. (௭௨௬)

பதத்தின்மேனிராகாரந்தான் பார்க்கிறவல்லோர்க்கப்பா, விதத்தின்மேலமுக்குப்பின்பு விருதயமிதுவேபேரு, மதத்தின்மேற்பார்த்தாயானால் வழியெல்லாந்தெரிந்துபோகும், குதத்தின்பேற்குப்பயங்கண்டு குழையாதேசுணங்காகேளே. (௭௨௭)

சுணங்கரேவாகிபோனாற் சூட்டிபவேணைதபொய்பொய், சுணங்கரேபூசைபோனாற் சூட்டினதுறைதான்பொய்பொய். சுணங்கரேஞானம்போனாற் றாக்காதுகுளிகைபொய்பொய். சுணங்கரேமயிர்தோல்விட்டுச் சூட்சமாய்மூலம்பாரே. (௭௨௮)

மூலத்தைத்தொட்டுச்சுன்ன முடிவோர்க்குவெடியுப்பையா, கோலத்தைக்கண்டோன்வாதி குறிகாணான்வாதியல்ல, கூலத்தைக்கடப்பான்வாதிகுறிகாணுகழுதையப்பா, பாலத்தின்மேலேநின்ற பராபரைசொன்னாள்காணே. (௭௨௯)

அப்பிரகச்சத்துச் சுன்னம்.

சொன்னாளேயென்னைப்பெற்றாள் துடியானசுன்னமொன்று, மன்னுமப்பிரேகச்சத்து மைந்தனேபலமதொன்று, பன்னுனருகம்பாஷி பறியாதிபொன்றாய்ச்சேர்த்துக், கன்னனவீரச்சுன்னங் கடுங்கண்டர்சுன்னங்கூட்டே. (௭௩௦)

கூட்டிடுவங்கச்சுன்னங் கொடுமோலின்தேவிச்சுன்னம், காட்டிடுநாலும்நாலு கழஞ்சதுதூக்கிக்கொண்டு, ஆட்டியகுருவாலாட்டி யுற்பனமாகப்பூசி, நீட்டியவோட்டிற்சுன்ன நீறைந்ததைமேலேவையே. (௭௩௧)

வைத்ததுமேலேசுன்னம் வளமாகப்போட்டுமூடிக், கைத்ததுவேர்வைகூட்டிக் கனக்கவேபுடந்தைப்போடு, வைதக்கதுவெந்தேயாகிற் றவளம்போற்பிறக்கும்வாயை, வைத்ததுவுண்டைவாங்கி யப்பமேனகல்வத்தூட்டே. (௭௩௨)

ஊட்டிடுவழலேசுன்ன மோமெட்டிக்கொன்றநீயு, நீட்டிடுவீரந்தானு நிறைமேகளுக்குக்காரம்போல், கூட்டிடுவண்டநீரைக

குலாவியேயரைத்திடப்பா, காட்டிடுவில்லைபோலே கடுஞ்சுன்னக் குகைக்குள்ளுநேதே. (எகூங)

ஊதிடலேசுபோலே யோகோகோவாரும்பாரு, மாதிடச்சூதஞ்சாகு மாட்டுநீ நூற்றுக்கொன்று, காதிடப்பாஷாணங்கள் கைப்பட்டாற்பொன்போலாடு, மேதிடலோகத்தூட்டா யேமமாம் பாருபாரே, (எகூச)

ஏமம்போல்தேகமாகு மெட்டுநாளுண்ணுவுண்ணு, காமம்போலிருகிச்சென்று கணுவெல்லாமுறைத்துப்போகும், சோமன்போல்முகமுமாடும் துரியத்தைக்காட்டுங்காட்டும், வாமம்போல் ஞானத்துக்கு மற்றென்றுங்கண்டிலேனே, (எகூரு)

கண்டில்லாவஞ்சத்திக்குங் கடந்திட்டசத்திகேளு, மண்டில்லாச்சத்தியோடு வளர்ந்தவாசனையாஞ்சமனை, யுண்டில்லாமனோன்மணியே யொடுங்கியவனுதையோடு, வண்டில்லாச்சரிதைகேளுவதன்மேலுமனுர்த்தியாமே. (எகூசு)

உன்மனையென்றநாம மோகோகோபணித்தாயப்பா, வன்மானசதாசிவத்தின் வளர்க்கலைநின்றதப்பா, அன்மனைதாண்டிப்போனுலதற்கொருநாமமில்லை, தன்மனையாகவெங்கும் சகலத்தும் நின்றாள்காணே. (எகூஎ)

நின்றதோர்தத்துவத்தி னிலையெல்லாஞ்சொல்லக்கேளு, கன்றதோர்பூதமஞ்சு கடியதோர்பொரிகளஞ்சு, வொன்றதோர்கள்மமஞ்சு வோகோகோபிராணனஞ்சு, வன்றதோர்நினவோடுமந்தமாங்கரணம்நாலே. (எகூஅ)

கரணத்திலறிவுவொன்று காணப்பாவிருபத்தஞ்சு, நிரனைத்தவிருபத்தாறு நினமலமானதப்பா, பொரனைத்தபோதாந்தத்திற் புகழானதத்வமப்பா, வரனைத்தசித்தாந்தங்கேளுவர்மமாருப்பைக்கேளே. (எகூகூ)

கேளுநீயிதனோடேதான் கெடிசிலதத்வமஞ்சு, வாளுநீவித்யாதத்துவம் வகையேழுமொன்றாய்க்கூட்ட, வேளுநீமுப்பத்தாறு விளங்குசித்தாந்தமாச்சு, வாளுமுன்கருவியப்பா வாகானபிறப்பைக்கேளே. (எசய)

கேளுநீயாதாரந்தான் கெடியாறுராகமெட்டு, வேளுநீவாயுவஞ்சு விளங்குமண்டலமேமூன்று, தோளுநீகுணங்கள்மூன்று

சொல்லஞ்சுகருவியஞ்சு, வாளுநீவசனமஞ்சு வம்மம்மாவினைரெ
ண்டாச்சே. (எ௪௧)

வேறு

ரெண்டோடோடாடிபத்துத்தாதோரேழு நிலைபாணமலமூன்று
வியாதிமூன்று, ரெவொண்டோடேவருவதப்பாகேளுகேளு வொ
கோகோமுன்சொன்னேன்முப்பத்தாறு, பண்டோடேதத்துவங்
கள்குப்பைகுப்பை பரவியெல்லாம்பார்த்துமனம்பரிந்துதேறு, வ
ண்டோடேபாஷாணவர்க்கமெல்லா மறிந்தணர்ந்துபார்த்தவன்கா
ண்வாதிதானே. (எ௪உ)

தானென்றதத்துவத்தையறிந்தானாகில் தவசியவனறியாட்
டால்சக்கமாண்டி, வானென்றவத்துவிதமறிந்தனுசான் வகைய
றியான்குருவல்லமாடுமேய்க்கி, கானென்றசரக்கு முறையறிந்
தோன்வாதி காணுட்டால்வாதியல்லகழுதைபோக்கி, யூனென்
றுபெண்ணாசைவிட்டோன்யோகி போகோகோவிடாவிட்டாலுலு
த்தகாயே. (எ௪௩)

உலுத்தரவர்மாயிபதம்பண்ணுரோகோ வோகோகோவாத
மென்றுவோடிக்கேட்டு, வனுத்தினைத்துச்சுடுவாரொன்றுங்காணு
ராதாரமென்றறியாரகந்தைநாய்கள், செலுத்துகிறமுறையறியார்
சிவனைக்காணுர் சேர்ந்துணர்ந்துசரக்கறியார்செவிட்டுமாடு, மலி
த்துநின்றுமயக்கியதோர்பெண்ணைச்சொல்வார் வாதமென்னவெ
ளிதோசொல்மனிதமாடே. (எ௪௪)

மாடானல்விறகெடுக்குமுழுகுமப்பா வாதியென்றுலதற்கா
கான்மாயக்கூடு, வீடானுற்காத்திருக்குநாயேயானல் வேட்டைக்
குப்பலன்கொடுக்கும்விரவிக்கொள்வான், நாடானகழுதையென்
றுலழுக்கைத்தூக்கு நலம்பெறவேயிதற்குமொவ்வானுட்டுவாதி,
யூடானதலமாறுமுற்றுப்பாரா ருலுத்தருக்குச்சொன்னமுறையு
ண்மைகேளே. (எ௪௫)

உண்மையொத்தவப்பிரகச்சத்துக்கொக்கவோகோகோவெ
ன்னசொல்வேன்சூதநேர்தான், வண்மையொத்தவாத்தாண்டமு
தனுத மறுநாளிற்பிறந்ததனல்கிமிளையாச்சு, தண்மையொத்த
மூன்றும்நாள்கெந்தியாச்சு தனிமூன்றுற்சிவனடக்கித்தயங்கிச்சே
ர்ந்தார், நுண்மையொத்தவாதியென்றுலறிந்துகொள்ளு நுழைந்
தலைந்தவாதியென்றுனுழைந்துபாரே. (எ௪௬)

நுழைந்துபார்துரிசியினுற்பனத்தைச்சொல்வே னெக்கிப் பார்நடுக்காண்டநுண்மையெல்லா. மழைந்துபார்கருவெல்லாம்மி ன்னேசொன்னேனுகாபிற்காண்டந்தவறிற்றானல், விழைந்து பார்க்குமட்டுமெடுத்துத்தப்பு. மென்னாலைப்பொய்பென்றுமெ றுக்கவேண்டாம், குழைந்துமார்பிற்கண்டந்தானேசீவன் கொள் கியதோர்நடுக்காண்டங்கூடுமோச்சே. (௭௬௭)

ஆச்சினிக்கேள்துருசுக்குமருந்துசொல்வே னம்மம்மாவாச் சரியமறிந்தோன்வாதி, காச்சியதோர்வங்கமஞ்சுநாகமஞ்சுகலந்து குகையிட்டிரண்டுமுருகும்போது; பாச்சினியவெடியுப்புவஞ்சு தூக்கு பாஷாணமிரண்டரைதான்பக்கம்வைத்து, வோச்சினிய வொன்றுவிட்டுவொன்றுமாறி யோகோகோநாகவங்கமுருக்கிப் போடே. (௭௬௮)

போர்டையிலேசுண்ணம்பாய்க்காளான்போலப் பொருமிவரு ம்வழித்தெடுத்துப்போடுவேறே, யூடையிலேமாறியிடப்பொரு மிப்பொங்கு முற்பனமாய்வழித்தெடுத்தேயொன்றாய்ப்போடு, கூ டையிலேவங்கதெல்லாம்வாங்கிக்கொண்டு கொடியதொருவீரமதி ற்சமனாய்ப்போட்டு, நாடையிலேவெண்கருவால்வரரகன்ரெண்டு நலக்கரைதத்துருசுபத்தினலமாய்ப்பூசே. (௭௬௯)

பூசியேபுலரவைத்துத்தினந்தானென்று புகழானவுழமண ணைக்கலயத்திட்டு, வாசியதைநடுவில்வைத்துமேல்மண்போட்டு மதனமேலைகழுதையுடவமுரிவார்த்து, நேசியதைப்பிட்டுப்போ னினைவால்வாரு நேரானவாலுகையிற்கலயம்வைத்து, வோசிய தையடுப்பேபறறியாறுசாம மொடுங்காமற்றீப்போட்டே யுற்றுப் பாரே. (௭௭௦)

உற்றுப்பார்துரிசியதுதங்கம்போல வோகோகோவெளுப்பா கிவுருவாய்நிற்கு, மெற்றுப்பார்பூசுதற்குமருந்துசொல்வே னித மானநாவியொடுகோரச்சுன்னனங், கொற்றுப்பாரவிப்பண்ணன்காரி பூரங் கொள்கியதோரந்தனுடனூரமுங்கூட்டி, விற்றுப்பார்கோழி யுடபிச்சைவார்த்து விளங்கரைத்தேயதன்மேலேபூசிப்போடே ()

போட்டுவைக்கத்தினமேழிற்பூப்போலாகும் பொற்சிமிளில டைத்துவைத்துப்பூசைபண்ணு, காட்டில்வைத்ததனம்போலே போமென்றெண்ணிக் கைமுறையைத்தப்பாமறகலந்துசொன் னேன், வீட்டில்வைத்ததனம்போலேவேதைகோடி வேதாந்தம்

விடுக்காதே விழலாய்ப்போகும், ஓட்டில்வைத்துத்துருசுக்குளப் பாசொல்வேனோ காகோ நிர்க்குணந்தானெப்புக்காணே. ( )

ஒப்பானதுரிசியிலேயெல்லாங்கட்டு மோகோகோகுளிகை யுமாமுட்டித்திரு, மப்பாகேளிதற்குமேற்றுரிசியில்லை யாண்மை யென்னவிதற்குள்ளேவங்கம்நாகஞ், செப்பாதேயொருவருக்கும னதிற்கொள்ளு சேர்ந்தெதிர்த்தவாதிகளைமூன்றிலாடு, கொப்பா னவத்திக்காய்போலாமிந்தக் குருவுடையமகத்துவத்தைக்கூறக் கேளே. (௭௫௩)

கேளுநீயொன்றுபோட்டாலண்டநீறுங் கெடியானரெண்டு போட்டாற்சூதஞ்சாகும், வாளுநீமூன்றுபோட்டாலோகம்நீறுமக த்தானதங்கமுதல்வழங்குஞ்சுன்னம்; வேளுநீதொடுமுன்னேதாது சாகும் விளங்கியதோர்வரிசைகண்டுவேதைபோடு, ஆளுநீதுருசு விட்டால்வாதம்போச்சு வம்மம்மாநடுக்காண்டமறைந்தேன்கே ளே. (௭௫௪)

அறையுறேன் துரிசியொன்றுசாரமென்று வாகாகாவரைத்த வுடன்சலமுமாகும், பறையுறேன்வீரமிகுசிவப்பாய்நீறும் படு முன்னேசூதமுதருதுவெல்லாம், நிறையிலேநிற்குமதிற்சிலதுக ட்டும் நிலைக்காதவேதையெல்லாநிலைத்தேயாடு, முறையுறேனே ன்றசிவன்மூலம்பாரு வொருசொல்லுந்தப்பாதுவொக்கவாமே.

ஆமென்னூற்பறந்ததப்பாவண்டகோடியல்லவென்றுவழிந்த தப்பாவனந்தங்கோடி, வாமென்றபாணத்தால்மணித்தாய்செய் தாள் மகத்துவந்தான்சிறுபிள்ளைவீடுமாச்சு, காமென்றவாண்மை விட்டாலவனைக்காண்பார் சாதகத்தாலேயறிவந்தாலவளைக்காண் பார், போமென்றசாவுபொய்யாமேறினோர்க்குப் பொற்குடைய்போ ற்ப்டிருபதத்தைப்புகழ்ந்துவாழே. (௭௫௬)

வாழ்வோர்க்குக்குருபதமேகுகையுமாச்சு மகத்துவத்தினி ன்றோர்க்குவீடுமாச்சு, கேழ்வோர்க்குநாதமங்கேகேள்வியாச்சு கெடியாகப்பேசுதற்குள்மணியுமாச்சு, தாழ்வோர்க்குவீதிவிடக் குதிரைவாசி யன்னமங்கேமதிக்குள்ளவமுதமாச்சு, தாழ்வோர்க் குராக்காலமணையைவென்றால் சச்கிதானந்தப்பெண்ணைச்சார்ந்து பாரே. (௭௫௭)

சார்ந்திந்தப்பெண்ணோடேகூடினக்காற் சதாநித்தமவளைவி ட்டுத்தவறப்போகா, வேந்துகொங்கையவளுக்குவிவேகமாச்சு

வேழில்லைகண்ணிரண்டுமொழியேயாச்சு, ஈவாய்ந்துநின்றவவளதர முண்டாயானா லாகாகாலகிரிக்குளவளாய்ப்போவாள், போந்து பாரவள்புருஷனானேபெண்தான் போச்சுரெண்டுமொன்றாகப்பேணிப்பாரே. (௭௫௮)

பாரப்பாசொரூபமணிவாயில்வைத்துப் பரிவானகமலினியை யுந்தியிலேதட்டி, நேரப்பாவஷ்டமாசித்திகாட்டி நிலையாகச்சமாதியிலேபுதைத்தபின்பு, வேரப்பாவண்டமெல்லாந் தாண்டித்தாண்டி வெற்றுநின்றபேரண்டப்புவனந்தாண்டிச், சேரப்பாபதந் தாண்டிமனோன்மணியைக்கண்டு தெண்டனிட்டேயப்பாலேசெல்கின்றேனே, (௭௫௯)

செல்கின்றேன்மனவெளியிலாறுதளம்தாண்டி சிறந்துநின்ற வரிக்குள்ளேயாறுதலந்தாண்டிச், செல்கின்றேன்ஞானதீபத்தைப்போற்றித் திரும்பாமற்றமருக்குள்ளுள்ளேபுக்குச், செல்கின்றேனகண்டத்திற்சென்றுதாண்டித் திரும்பியொருசோடிட்டேன் குளிகைமூன்றுஞ். செல்கின்றேன்வெட்டவெளிக் குள்ளேதானுந் திரும்பியொருசோடிட்டுவொளிகண்டேனே. (௭௬௦)

வேறு.

ஒளிகண்டேனொளியிற்குள்ளே யோடினேன்டாருபாரு, வெளிகண்டேனொளியுங்கண்டேன் விரைந்திட்டேன்கற்பமொன்று, தெளிகண்டேன்கோடிபானு திறந்திட்டதெளிவுந்தாண்டி, யளிகண்டேனளிவுந்தாண்டி யப்புறமுருவினேனே. (௭௬௧)

உருவியேயோடும்போதி லோகோகோமணியைக்கண்டேன் பருகியேபின்னுஞ்சென்றேன் பரவியமுரசுகேட்டேன், தருகியேபின்னுஞ்சென்றேன் றனிச்சங்கநாதங்கேட்டேன், அருகியேபின்னுஞ்சென்றே னறைந்தபேரிகைபோலாச்சே. (௭௬௨)

ஆச்சென்றபின்னுஞ்சென்றே னப்பனேமேகநாதம். வாச்சென்றுபின்னுஞ்சென்றேன் மகத்தானயிடிபோனாதம், ஓச்சென்றவதற்குட்செல்ல வோகோகோசிலம்பினோசை, மாச்சென்றசெவிடுமாச்சு மயங்கிற்றுவொளியிற்கண்ணே, (௭௬௩)

கண்கெட்டேன் செவியுங்கெட்டேன் கருதியநினைவுங்கெட்டேன், பண்கெட்டேன்குளிகைகெட்டேன் பறக்கிறவிறகுகெட்டேன், விண்கெட்டேனறிவுங்கெட்டேன் மேவுறபொருளுங்காணேன், எண்கெட்டேன்சிலம்பினோசையிழுக்குதுவயரக்காணே

காணப்பாவென்னசொல்வேன் கைவிடவேர்கூடாது, வூணப்பாவெந்நீர்சூத முணூதேயேகுணதையோ, பூணப்பாவரைகளஞ்சம் புக்கினேன்பின்னொன்றேதோ, தோணப்பாகீழேனுக்கச் சூதமுநோக்கிற்றென்னே. (௭௬௫)

என்னவேகற்பமொன்று மெழும்பிநான்றிரும்பிவந்தேன், பன்னவேகுளிகைகட்டிப் பறந்திட்டுப்பிழைத்துவந்தேன், மன்னவேயகண்டவீதி வரையொன்றுகாணேனையோ, முன்னவேகுளிகைசித்தி முறைபார்த்தாலொக்கும்பாரே. (௭௬௬)

வேறு

பார்த்ததொக்குந்துரிசியுடசுன்னமப்பாபராபரமாமணித்தாயும்பச்சைவர்ண, மேத்ததொக்குமருள்பொருளும்ரெண்டுநேராயெடுத்துரைத்தமுறைப்பாடுமியம்பக்கேளாய், கோத்ததொக்குநிஷ்களத்தைக்காணவென்றால் குளிகையிட்டாற்காணாது கூடிடாது, மாத்ததொக்கும்லோகத்தோர்பூரணத்தைப்பார்க்கில் மகத்தானபசியாலேவாய்த்திடாயே. (௭௬௭)

வாய்த்திட்டவாதம்வந்தால்ஞானசித்தி வாயாமற்போச்சுதென்றால்மனம்நில்லாது, வைத்திட்டுப்பொறியோடேயிழுத்துக்கொல்லுமெத்தனைதான்பிடித்தாலுமெடுத்துப்போடும், காய்த்திட்டமரமல்லோகல்லைக்கொள்ளும் காயாதமரமென்றுக்கல்லுண்ணாதுவோய்த்திட்டவாதாரமேறிப்பார்த்தே யுறைந்தபின்புவாதத்தையூன்றிப்பாரே. (௭௬௮)

ஊன்றூதுமாதாரமூலமுன்னே வோகோகோபளிச்சென்றவாறுங்காணும், கான்றுறதுசுடர்கோடிவன்னிவன்னி கண்டுகொள்ளவண்டாண்டங்கைக்குட்காணும், பூன்றுறதுமஞ்சுதிக்கிலெங்கென்றுலென் போக்கேடேபார்த்தோர்க்குப்புகழாய்க்காணும் ஆன்றுறதுமங்சுங்கேநின்றுநின்று மளவிட்டுப்பார்த்துரைத்தேயகண்டஞ்சேரே. (௭௬௯)

சேர்ந்தவயமுருகுயிடத்தைக்கேளு திறமாகப்பலநாலுகிழிபோற்கட்டி, வாரந்துணர்ந்தவாழையுடகிழங்கில்வைத்து மறுகிழங்குமண்போட்டுமூடிவைத்துப், பார்ந்துணர்ந்துபட்சமொன்றுநின்றபின்பு பருவமுடனெடுத்துவந்துபாங்காய்க்கேளு, வேர்ந்துணர்ந்தேயெறியாலமெண்ணெய்வார்த்து விதம்பெறவேபட்சமொன்றிருத்திப்பாரே. (௭௭௦)

இருத்தியதோர்பொடியிலேயோட்டக்கேளு யிதமானவெண்கண்டர்சாரங்காரம், பொருத்தியதோர்புற்போலாமணக்கின்வித்து புகழ்பெரியசவ்வீரமெழுகுங்கூட, வருத்தியதோர்தாளகமும்லிங்கங்கூட்டி யாகவெட்டிவராகனெட்டுமெயத்திற்கூட்டி, மருத்தியதைக்குகையிலிட்டுமோட்டியூது மணிபோலேநிற்குமதுவளமாய்ப்பாரே. (௭௭௧)

வளமாகவிப்படிதான்மூக்காலாட்டு மணியெடுத்தேயடித்துப்பார்வாய்விட்டாக்கால். தளமானதாளகத்தைத் தள்ளிப்போட்டுத் தனியேமூங்கூட்டிப்பின்னிருகாலாட்டு, கனமானவோட்டிலிட்டுநாளத்தூது கசடற்றுவெள்ளிபொன்போற்கண்விட்டாடு, முளமானவயநாகமிதுவேபேரு வோகோகோகொடுத்ததெல்லாமுண்ணுந்தானே. (௭௭௨)

உண்ணுறதுமட்டோதான்சொல்லக்கேளு வோகோகோவுப்பையெட்டுச்சுட்டுப்போடுங், கண்ணுறவேபத்துமுதலறுபதாகுங்கைமுறையாலேற்றெறிந்தாற்காணுங்காணும், மண்ணுறதோராயியுடநாதமம்மா மவுனம்போலிருந்தாக்கால்வாயிலேறும், பண்ணுறதோர்மூலகுருதின்றுகண்டார் பருவமுடனிப்படியான்பருகினேனே. (௭௭௨)

பருகியதோரிரும்பையந்தவுலகத்தோர்கள் பலபலவாய்மருந்திட்டேயுருககிப்பார்த்து, மருகியதோர்மணியாச்சென்றடிப்பார்தூளா மாறுலென்றுருகையிலேகண்விடாது, சொருகியதோர்சரக்கையெல்லாந்தள்ளிப்போடு சுருக்காகவுருகாதுதுருத்தியாலும், பெருகியதோர்வேதையிதுகாணார்மாண்பர் பேய்மட்டம்பண்ணியவர்பிழைப்பார்காணே. (௭௭௩)

காணிந்தமகத்தானவிரும்பைத்தொட்டுக் கரையேறமாட்டாமல்மட்டஞ்செய்வார், பூணிந்தவிரும்பினுற் பனத்தைக்காணார்போக்கறியான்கழுதையவன்வாதியல்ல, தோணிந்தவிரும்புதொட்டாற்சுருக்காம்வேதை சொற்பேச்சைக்கேளாதேகுருவைக்கேளு, வாணிந்தவிரும்புசென்றுற்செம்பைக்கட்டு மஞ்சுபுகைசேராத்தையழுத்தும்பாரே. (௭௭௫)

பாரப்பாவங்கத்தைப்பதையாமற்கொல்லும் படிமுன்னேகாரீயம்படுத்துக்கொள்ளும், சேரப்பாதங்கத்திலுப்பைத்தள்ளுசே

ர்ந்தநவ்பாஷாணந்தீனியாகும், போரப்பாபொன்மலையாய்க்குவியும்லோகம் பொன்னென்றால்தசமாற்றுவிரும்புமாறு, மாரப்பாவிதனுடையபெருமைசொல்வா ரறிந்தபொருள்சிவன்தாயு மறிந்தவாறே. (எஎசு)

வாறுகேளிரும்புக்கஞ்சகுணங்களுண்டு வகையாகச்சொல்லுகிறேனென்றாய்க்கேளு, தாறுகேள்திரைசவுடுவுடைத்தாலூறல்சரசமாயுருகாதகுணந்தானஞ்சும், பேறுகேளிதைநீக்கவறிந்தோன்வாதி பிறித்திதனைநீக்காதான்பிணந்தான்பாரு, வாறுகேள்குளம்வெட்டவூறும்போல வம்மம்மாவிரும்பூறலருகாதென்னே. ()

அருகாதவிரும்பூறலறுக்கக்கேளு வடவானசாறுவிட்டாலறுகுமூறல், தருகாதசவுடறுக்கச்சாற்றக்கேளு தயங்காதகல்லுப்பால்சவுடுபோகு, மருகாததிரைபோகவரிசைகேளு வளமானவீரமிட்டான்மணிபோலாடு, முருகாதகூரணிப்புப் போகவென்றுலோகோகோருதமிட்டேபுருக்கிப்பாரே, (எஎஅ)

பாரப்பாவுடைந்துதென்றான்ஞானத்தாது பருவமுடனஞ்சுக்கும்பபனுஞ்சொன்னேன், சேரப்பாவிதையெடுத்துச் செம்பிற்பொன்னிற் சிறியதோர்சோரத்தைச்செணத்திற்கொல்லு, நேரப்பாவிதனோடுகெவுரிச்சத்தைநேரெடைக்குவீரத்தைநீட்டிப்பாரு, வோப்பாரவிமதியி லூற்றுக்கொன்று விட்டுரைக்கவெழுபதரைமாற்றுக்தானே. (எஎகூ)

தாடுனென்றவினங்கள்டேயினமுறுசேர்க்கச் சதம்வரைக்குமாற்றேகுஞ்சம்சிக்காதே, கோடுனென்றவெளையாண்டபோகமூர்த்தி கொள்கியதோரொருசொல்லாற்கோடிபாரத்தேன், பாடுனென்றதகிரிக்குள்தாயுஞ்சொன்னாள் பராபரமாய்மூலத்தினந்திசொன்னார், வாடுனென்றவடிவானமூலநாயன் வரமகனேயென்றுசொன்னவரிசைதானே. (எஅ0)

வரிசையொத்துப்பார்க்கவென்றால்வாதிகாளே வகையாகச்சொல்லுகிறேன்வாதங்காண, வரிசியொத்தேயுண்கையிலேயுப்புப்போனு லோகோகோசப்பென்றவுரைப்புப்பாகும், கரிசையொத்தேயுப்பையேழுந்திக்கட்டு கைக்குள்ளாயானபின்புவிரும்பையாட்டு, பரிசையொத்துத்தாமமுதல்வேதையாகும் பார்க்கிறதுக்கேதுவிதுபண்பாய்ப்பாரே. (எஅக)

பண்பாகவிப்படிதானுப்பைத்தொட்டு பலித்தபின்புவிருப் பாட்டிப்பரியைக்கூட்டி, நண்பாகச்சோரமிட்டுச்சூதம்போட்டு நலம்பெரியலிங்கமிட்டுவேதையாடித், தண்பாகப்பின்புபின்புசுன்னம்பண்ணிச் சகலசிங்கிசெந்தூரஞ்சத்துபண்ணி, யெண்பாகக்குளிகைகட்டியெட்டுந்தீர்ந்து யேகினேன்கவனமெல்லாமேகினேனே. (எஅஉ)

ஏகியங்கேதிரிகையிலேசித்தர்கோடி யென்னத்தைக்கேட்டாலுமெளிதாய்ச்சொல்வார், பாகியங்கேமனோன்மணிதான்பந்தமாவாள் பலபலவாங்கற்பமுண்டுபறிந்துகொள்வாள், தாகியங்கேபூரணத்தின்மேலேயாசை தவறுதேசமாதியுள்ளேசார்ந்துபாரு, போகியங்கேமவுனமுற்றேயூணிப்பாரு பொற்குடம்போல்தேகமுமாம்பொருளும்பாரே, (எஅஙு)

பொருள்கண்டாற்புரியட்டம்போகாதென்றும் போக்கோடேமூலத்தைத்தொட்டேயேறு, மருள்கண்டாலவன்வாதியல்லாவிட்டாலம்மம்மாவாதத்தேயலைந்துசாவான், மருள்கண்டால்வாதமென்றபேய்தான்சுத்தி மாயத்தேசுழன்றலைந்து மாள்வான்பாவி, யிருள்கண்டாற்காமியமாமென்றபேய்தா னென்றெடுத்தேசித்தரெலாமேசுவாரே, [எஅச]

ஏசுவதற்குடம்பெடுத்தாலென்னவாதி யெடுத்தவுடற்கடுத்தபொறியென்னவேண்டாம், பேசுவதுமென்னவினியுள்ளதெய்தும் போராசைகொண்டாலும்வாராவாரா, ஆசுவதேதன்பணியாரந்தின்பாரற்றே யுலகத்தோரொளித்துவைப்பார்நாளைக்கென்று, மாசுறுதியில்லாதவெளியைப்பாரார் மாண்பர்கட்கேயுரைத்தபடிமகிழ்ந்துபாரே. (எஅரு)

பாரப்பாவுபரசத்தின்பெருமைசொல்வேன் பழமுன்னேநவலோகம்பரிந்துசாகும், நேரப்பாவுலகத்தில்வாதியாரு நேரானவுபரசத்தினேரைக்காண்பார், ஆரப்பாவண்டத்தில் வாதியென்பா ராகாதவழும்பனவனுறும்பாரான், சேரப்பாவங்கமதிலுபரசத்தைச்சொல்வேன் சேர்க்கறிக்தால்வாதமடைதிறந்துபோமே.

திறப்பதென்னவங்கமென்றதிறவுகோலால் திறக்கறியார்நாகலிங்கந்துடியாஞ்சூதங், கறப்பதென்னவுதைக்கின்றபசுவானாலுங் கைமுறையாய்ச்சொரிந்துணர்ந்துகறக்கவேண்டும், முறப்பதென்னவங்கமதுகட்டிற்றுனு சோகோகோமாற்றுமெத்தவுரைக்கப்

போகா, வறப்பமென்னவங்கமதுசும்மாச்சாகா வம்மமமாவுபரசுங்களனுகச்சாமே. 115 (௭௮௭)

சாகின்றமுறையிதென்றேயஷியார்வாதி றழைவேறும்விரையாலேசாகுதென்பார், ஆகின்றதுருசுவிட்டுக்கட்டிற்றென்பா ரசகாகாசாரயிட்டேயடங்கிற்றென்பார், பாகின்றவிதற்குள்ளேசூதஞ்சேர்ப்பார் பதனமாய்மணலுக்குட்பாய்ச்சுத்தியை, வேகின்றபதமறிந்தேயெடுத்துத்தூக்கி விடப்பட்டுச்சிவன்போகவெருளுவாரே. (௭௮௮)

வெருளுகின்றகழுதைகளேசொல்லக்கேளு வேதனையாமவிரைகளிலேயொன்றுமில்லை, மருளுகின்றவுலகத்தோரமயங்கச்சித்தர் மகத்தானகுருவைபந்தத்தழையிலூட்டி, யிருளுகின்றமனத்தோரேயேய்த்துப்போவா ரித்தனையாற்கட்டாச்சுவென்பார்மாண்பா, அருளுகின்றகுருச்சொல்லவாதங்கேளு மஞ்சுதொழிலுண்டதிலேயறிந்துபாரே. (௭௮௯)

அறிந்தறியாதிருந்தோர்க்குமறியச்சொல்வே னுகாகாவென்னூல்போலன்னூல்சொல்வாள், பிறிந்தவினங்கட்டினமுனு செந்தூரம்பாரு பேறுனவைரவினம்பிடமும்பாரு, மறிந்தவஞ்சுங்காணுட்டால்வாதியல்ல வாய்க்காதுதொழிலொனறு மயங்கிடாதே, வெறிந்தகல்லுமாகாசநிற்கப்போல வேதேதுபார்த்தாலுமிறங்காதெனனே. (௭௯0)

இறங்கிறதுமொருமரத்திலிறங்கினலு மேறலாமிதைத்தொட்டேறுறுமட்டும், பிறங்கையிலேவர்ணமெத்தக் கண்டாலென்ன பேபரேநிலையாதுபெருகலூற, மறங்கையிலேசிவன்பேருமவாதியென்று மவளிருக்குமிடங்கண்டோனவன்றான்வாதி, நிறங்கருதியாறுதலநிலைவாய்ப்பாரு நிலைத்துதென்றாற்சரஞ்சுழிமேனைராய்க்காணே. (௭௯௧)

காணுநீயிடைபின்னுய்ரெண்டுங்கூடிற் கலந்துகொள்ளுஞ்சுழிமுனையிற்கவரும்பாரு, தோணுநீயொன்றுகச் சுழியிலோடும் சோதனைதான்மூலத்திற்கண்டோர்க்கப்பா, வேணுநீயென்றதெல்லாம்பண்ணிப்பாரு வேதாந்தமென்றசொல்லும்விரவித்தாண்டிம், பூணுநீயிதுமுறையேயாறுங்காணும் புகழ்பெரியவுபரசத்தின்போக்கைக்கேளே, (௭௯௨)

கேளுநீமுதற்றரந்தான்கெந்தியப்பா கெடியாகமறுதரந்தானிமிளையப்பா, வாளுநீமூன்றுந்தரந்தான்மயூரமம்பா வார்பெரியபூநாகம்நாலுமப்பா, காளுநீயஞ்சனத்திறகாந்தமப்பா கலந்தஞ்சாறுகவங்கங்கடுகிச்சாகும், வேளுநீயிதற்குள்ளேசூதங்கூட்ட விறகொடித்தாறபோறகழுதைவிரையுப்பாரே. (௭௱௩)

விரைந்திந்தநாகவங்கங்குருவாற்பண்ணு விளங்கியிதைக்களங்காக்குவேதைபாக்கு, விரைந்திதனைப்பாஷாணத்தின்னகக்கட்டும் வெகுதூரந்தொடர்ந்தோடும்வேதைபாரு, விரைந்திதனிவிடுவதஞ்சுசத்துச்சத்து வெவ்வேறாயுஞ்சுமுகம்வேதையாகும், விரைந்திந்தத்தொழிலறியார்வீணரையோ வேர்தழையென்றேயுளறிவிளக்குவாரே. (௭௱௪)

விளங்குகின்றநாகரசகெந்தகத்தைக்கேளு வேதைபடவிதுவெகுவாய்வெளியாய்ச்சொல்வேன், தளங்குகின்றலிங்கரசம்பலமொன்றப்பா தனக்கொக்கச்சுத்திசெய்தநாகங்கூட்டு, பிளங்கிநின்றவிதுரெண்டுங்கோக்கக்கெந்தி பேசாதேவராகனென்றுதுருசுச்சுன்ன, மளங்குகின்றநாகமொடுசாச்சுன்ன மதுவதுவும்வராகனென்றுமதற்றுள்மாட்டே. (௭௱௫)

மாட்டுநீசவ்வீரம்வராகனஞ்சு வளமாகக்கலவத்தில்வளைந்துவாட்டி, யூட்டுநீவயல்வேளைச்சாற்றைவார்த்தே பொருபாலுமுழுதரைத்தேயுலர்த்தபின்பு, காட்டுநீசரக்கொன்றைப்பழத்தைப்பாண்டங் கடுகடைத்துப்பூப்புடத்திற்சயிலம்வாங்கி, நீட்டுநீவிட்டரைப்பாயெட்டுச்சாமம் நிலையாகவுருட்டியதைவைக்கக்கேளே.

கேளுநீபொன்னுமேலசிமிளைப்போற்பண்ணிக் கெடியாகவரைத்தவுண்டைநடுவேவைத்துத், தாளுநீமேன்மூடிச்சீலைசெய்து தனியானவாலுகையின்மேலேவைத்து, வேளுநீதீயெரிப்பாயெட்டுநாலும் விளங்கியிக்கப்பன்னிரண்டுசாமந்திர, வாளுநீபரயுரையுங்கணைசனேடு மஷ்டதிக்குவயிரவரையர்ச்சித்தோதே. ()

ஓதியங்கேமதுவையுண்டுசிமிளைவாங்கி யொருசிமிளிலடைத்ததனைவைத்துக்கொண்டு, நீதியங்கேயொன்பதிலும்பூட்டுக்கேளு நெடுந்தூரஞ்சகத்திரமுந்தாண்டியோடு, மாதியங்கேநாகரசகெந்தவித்தை யன்பானபதத்தொன்றுலாத்தாள்சொல்வாள், பாதியங்கேமற்றதெல்லாமிதற்குட்பாரு பசுவானசனங்களுக்குப்பலித்திடாதே. (௭௱௮)

பலித்திடாப்பசுவென்றுன்மாடோவல்ல பாணமென்றல்தூ
ஷிக்கும்பறையின்மாடு, வொலித்திடாத்தசநாதங்கேட்போமெ
ன்று யோகத்தேயுவமாகளூண்ணோர்பாண, மலித்திடாப்பசுவென்
றல்போகியல்லமாடு மகத்தானவாசிகொண்டுநாலைக்கூட்டு, கெலி
த்திடாயென்மகனேமதுவைக்கொண்டு கிட்டாதுவிண்ணோர்க்கு
ங்கேளுநேசனே. (௭௯௯)

கேளுநீவிண்ணோகள்மதுவையுண்டு கெடியானரம்பையுட
ன்கிரீடிப்பார்கள், வாளுநீயதனாலேஞானமெய்யா மகத்தானபூமி
யினுமருளருண்டு, தோளுநீதொள்ளைவார்பூசிப்போது துட்டன
வன்குருவல்லதுப்புமேலே, யாளுநீபராபரைக்குப்பூசையெங்கே
யந்திரைக்குள்மதுவையுண்டேயவளைப்பாரே. (௮00)

அவளிருந்தாற்பன்னிரண்டிற்கீழுமேலு மாகாகாவாச்சரிய
மவளேயல்ல, அவளிருந்தவிடங்காணுன்யோகியல்ல வவள்கரு
ணையில்லாட்டான்ஞானமில்லை, யவளடியைப்பணியாதான்வாதிய
ல்ல வாகாகாசித்தனல்லவாருமல்ல, வவளடிக்குளணைவருந்தான்
பீடமாறு ராகாகாவுன்மனித்தாய்நீத்ததாயே. (௮0௧)

தாயாகச்சுமந்தெடுத்துப்பெற்றபின்பு சங்கற்பமானதெல்
லாந்தள்ளிப்போட்டு, மாயாதபஞ்சசத்திமாயந்தீர்த்து மனதொ
டுக்கிக்குதிரையென்றவாசியேற்றி, யோயாதவெளியடங்குமோடி
யாடி யோகேசோவதுகடந்துவொளியுந்தாண்டி, வாயாதபாதநி
ற்குணத்தின்முடிவிற்சேர வழிதிறந்தனுண்மனந்தமாதாத்தாளே.

மாதாவின்கருணையொக்குமநாகரசகெந்தத் வழுங்கியினைதய
றிந்தோன்காண்பிரமயோகி, வேதாவினெழுத்தென்பார்கபாலத்
துள்ளே விரைந்துபார்முட்டல்லால்வேறொன்றில்லை, யோதாவின்
மூடர்கட்கேயெழுத்துமாகு மோதியுள்ளேயுரைத்தோர்கட்கொ
ன்றுமில்லை, பாதாவின்றனமப்யாவெச்சரிக்கை பலதிக்கும்பாரா
தேபசாசர்களே. (௮0௩)

கேளுநீகட்டியதைக்காதடுக்கக்கேட்கிற் கெடியானமுன்பூ
சைதவமென்றெண்ணி, யாளுநீகுளூரத்தின்மனதைப்பூட்டி யதை
கடந்துநாலையுமேபாருபாரு. சூளுநீமத்தளமும்பெண்களையும்பா
ர்த்துச் சுழன்றலைந்தோர்பிறவியென்றேசுழலேசுற்றிக், கீளுநீவி
ழுந்தன்றோயலேபோயுங் கெடுகொதேபாழ்மனமேமகிமைழப்பாரே.

பாரென்றுசொன்னதனால்வருமோகேளு பலவடிவாமனந்தசென்மம்பலனுமெய்துமு, சேரென்றுசொல்லின்மனனுஞ்சேருமோ தான் செகச்சாலமொழிந்துணர்ந்துதெளிந்தாற்சேரும், காவென்றுசொன்னதனுன்மூலங்காக்கா கைமுறையாய்வாசிகொண்டுகலந்தாற்காக்கும், வாவென்றுவாதமென்றுசும்மாவாமோ வகையாகக்குருபதத்தைவணங்கிக்கேளே. (௮0௫)

வணக்கமென்னகேட்பதென்னவென்றாயானால் வாராதுவெருதொழிலும்வாசிபொய்யா, யிணக்கமென்னவொருவருடன்யேச்சதென்ன விழுத்தலைக்கும்பொறிகளைஞ்சுமேமறப்போகா, தணக்கநின்றதவலையல்லோநீனுசலாடுந் தனிப்பெருத்தவயிரமுண்டோநீச்சுக்காகும், குணக்கெடுத்தேயிழுக்தாலுங்காய்வாவில்லாக் கூறுக்கும்புல்லருக்குக்குறித்தசொல்லே. (௮0௬)

சொல்லுணர்ந்தவொருசொல்லைகாண்பான்சிவன்றலையாமற்சொன்னாலுஞ்சுணங்கல்காணுன், கல்லுணர்ந்தகற்களிலேரத்தினங்கள்போலக் கசடற்றசீஷனுண்டுகண்டுசொல்லு: வில்லுணர்ந்தவனைந்ததென்றால்தோற்றுப்போச்சோ வெறித்தகடாபின்வாங்கவெருண்டதோசொல், வல்லுணர்ந்தநிற்குணத்தைக்கண்டோர்சாந்த மவரிளப்பமெண்ணுதேயழும்பர்போற்றே. ()

போற்றிநின்றுபெரியோரேபணிந்துபேசு போயென்றுஞ்சொல்லாதேபோரபெண்ணைக், காற்றுநின்றுதொடராதேகாமப்பேபாற் கண்டதெல்லாங்கொல்லாதேகர்மமெத்த, தோற்றுநின்றுதிருடாதேதூஷிக்காதே துஷ்டருடன்சேராதேசொல்லக்கேளு ஆற்றிநின்றவேதாந்தக்கூட்டத்தோடு மப்பனையணைந்திருந்துவேதைபாரே. (௮0௮)

வேதையுடையண்டோடுசத்துமாக வெகுகடினம்வெகுகடினம்லகுவாய்ச்சொல்வேன், பேதையெனுந்துரிசியினற்சுன்னமொன்று பேரானவீரமொன்றுபேணிக்கூட்டிப், பாதையெனும்வெண்காரநாலும்போட்டுப் பகுந்திருக்குஞ்சாரமிதிற்கால்தான்போடு, வாதையிதுவெல்லாந்தானரைத்துக்கூட்டி யதற்குள்ளேகாசெடைதான்சவாதுபோட்டே. (௮0௯)

போட்டெல்லாங்குழப்பியொருசிமிளில்வைத்துப் பொருத்தெடுத்தவண்டத்தோல்தகட்டிற்பூசி. நீட்டெல்லாங்குகைநிறையவைத்துவூது நிலையாகவுருகியதிற்சத்தாய்நிற்கும், ஆட்டெல்லா

மண்டரண்டசுண்டைக்காய்போ லாகாகாநவலோகங்குருவேயாகு, மூட்டெல்லாமுப்சரங்கள்குருவேயாகு முறைமுறையாமவேதையிடமூக்கோடிபோமே. (௮௧௦)

கோடியென்றுசொன்னதொருவார்த்தைகொஞ்சங் கோடானுகோடிமட்டுக்குறையாதோடு, நீடியெங்குந்தெருத்தெருவே போட்டார்பாவி நிலையானவாதிகண்டால்தெண்டஞ்செய்வார், ஊடியங்கேயிதனுடையவுரிசைகண்டா லோட்டுவான் ரசமுதலாயேமமாக, வாடியங்கேசொன்னமுறையாத்தாள்கேட்க வடிமையென்றேயெனக்களித்தாளாத்தாள்தானே. (௮௧௧)

தானென்றவண்டத்தோல்போலேயப்பா தனித்தனியேநண்டுரத்தைதவளைசங்கு, கானென்றகிளிஞ்சிலொடுகோட்டுரத்தை கபாலமொடுமஸ்திமுதற்கலந்தவெட்டும், வானென்றமுன்போலேபூசியூது வகைவகையாய்ச்சத்துவரும்நாகம்போலே, தேனென்றமதுவையுண்டதேவிசொன்னாள் திறமாகப்பார்த்தபடிசெப்பினேனே. (௮௧௨)

செப்பினேனெவ்வொன்றைவிரித்துச்சொல்லச் செகமெல்லாம்போதாதுசிவனுங்காணு, மொப்புநேர்சொல்லவென்றுமொன்றுங்காணேனேடிப்போருபாசத்திலுயர்ந்தசெட்டு, மப்புநேர்சடையானுங்கண்டுங்காணு ராகாகாவாச்சரியமறிந்தோன்வாதிக்கொப்புநேராறுதலமுரைத்துப்பாரு கொள்ளுமுன்னேவாதசித்திகூடுங்காணே. (௮௧௩)

காணவினிவங்கமொருகட்டைச்சொல்வேன் கைவிட்டகுந்திரந்தான்கருதிப்பாரு, தோணவொருகுகைக்குள்ளேவங்கம்வைத்துச் சுழனதுருகிற்போதிறமருந்தைக்கேளு, பேணவரும்பூநாகங்கொண்டுவந்து பிரம்பாகக்காய்ந்தபின்புமிசறக்கேளு, வாணவரும்வெண்காரம்நாலுனுக்கு மதுக்குளரைசாமம்விடுவீரானாலே. (௮௧௪)

காலானவீரமொடுமூன்றுங்கூட்டிக் கருவாலேயரைத்துமேற்பூசிக்காய்ச்சிக், கோலானபூநாகம்பொடித்துக்கொண்டு கொடுத்துவரவங்கம்நின்றேயுருகும்போது, சேலானசத்தையுண்டுவங்கங்கட்டுந் திறமெனவுமொவ்வொன்றாய்ச்செலுத்தநன்று, மேலானதொழிலிதுதானப்பாபாரு வேதைக்குமெத்தநன்றுவிரைந்துபாரே. (௮௧௫)

விரைந்துவங்கங்கட்டினதுகுணத்தைக்கேளு வெருவியதை
யுடைத்துடனேநொருங்கவேண்டுங், கரைந்துகன்றாய்ப்பொன்
போலேயுருகவேண்டுங் காட்டினதோர்சரக்கெல்லாங்கொள்ள
வேண்டும், நிறைந்துநின்றசூதத்தையுருட்டவேண்டும் நிமிஷத்
தில்நாகத்தைக்கொல்லவேண்டும், பரைந்துநின்றவுபரசத்தைமெ
ல்லவேண்டும் பாச்சினாற்சதகோடிக்கோடும்பாரே. (௮௧௬)

ஓடுறதுவங்கமென்றால்தூரவோடு மோகோகோமெல்லுறது
வாலைக்கொக்கும், ஓடுறதுசரக்கறிந்துகொடுத்தாயானா லொன்ப
தினாம்நவகோடிக்கொன்றோடும்வேதை, தேடுறதேன்வாதமென்
றுமாண்பர்கேளு செயப்படுத்துவங்கத்தைச் செயமில்லாட்டால்,
ஆடுறதேநவலோகந்தூளாய்ப்போகு மம்மம்மாவங்கத்தினாண்
மைதானே. (௮௧௭)

ஆண்மையொத்தவங்கமொன்றுதங்கமொன்று மதற்குள்
ளேசூதமொன்றுவிட்டுவாங்கி, வாண்மையொத்தசவுக்காரச்சுன்
னத்தோடு மாட்டியரைவீரமப்பாசிவந்துகாணு, மேண்மையொ
த்தமணிமேலேரெண்டும்பூசி யிசையவைத்துச்சுன்னமென்றகு
கையிலூது, தாண்மையொத்துமூன்றுமதுசுன்னமாகுஞ் சரக்கை
யெல்லாந்தொடுமுன்னேசாகும்பாரே. (௮௧௮)

சாகுமப்பாவிக்குருவைச்சூதம்பத்திற் றாக்கியரையுருண்டி
ருக்குஞ்சமத்தாய்க்கேளு, வாகுமப்பாவஷ்டகர்மக்குளிகைகட்டு
மகத்தானதம்பனமாம்வசியமாகும், போகுமப்பாகேசரத்தேசா
ரணையைத்தீர்த்தால் புகழானதெரிசனத்தில்வேதையாகும், வே
குமப்பாதீவினையைநிமிஷத்துள்ளே விடுபட்டாலாறுதலம்வெளி
யாய்ப்போமே. (௮௧௯)

வெளியாகச்சங்கத்தையிப்படியேபண்ணு விரைந்தண்டஞ்ச
த்தானான்மெத்தவோடுங், களியானநண்டுநத்தைமெதுவாயோடு
ங் காட்டுநத்தைரெட்டிப்புக்கலந்தேயோடும், மளியாதகிளிஞ்சி
யென்றாற்றாரவோடு மம்மம்மாகபாலமென்றால்தூமவேதை,யொ
ளியாதேபாடுகிறேன்சத்திவேதை யுற்பனமாய்ச்சிவனணைந்தாரு
ரைத்துப்பாரே. (௮௨0)

உரைத்துப்பாரெண்டுமெத்தப்பூநாகமொக்கு முற்பனமாய்
ப்பூநாகமமிர்தசஞ்சீவி, நிரைத்துப்பார்பூநாகச்சத்தையுண்டால்
நிலைநிற்கும்வெகுகோடிநீங்காக்காயம், மிரைத்துப்பாழ்போக்கா
தேவாசிகட்டு மிசைந்தகற்பமுண்டுடம்புவெழும்புந்தீப, மரைத்
துப்பாராக்காலஞ்சோதியோடு மத்தியத்திற்பொன்போலேவழங்
குங்காணே. (௮௨௧)

காணவொருபூநாகம்ராக்காலத்தே காற்படவேதுண்டானாற் கனல்போற்காணும், பூணவந்ததுண்டெல்லாஞ்சிவனாகும் பொடியாகப்போட்டாலுமெத்தவாகும், தோணவிதில்ரெட்டிப்புயிந்திரகோபம் துலங்குமிதன்முறைகேளுதாமேவோடும், மாணவிதிற்சதுண்டுசெம்புமுண்டு வாகாகாதிர்ப்திபுண்டிஅடவாய்க்கேளே. ()

கேளப்பாவிளநீரேரர்பாண்டத்தேவார்த்துக் கெடியானசவுக்காரச்சுன்னம்போட்டு, வேளப்பாதுரிசியென்றசுன்னம்போட்டு விரலாலேகுழப்பியதைச்சலத்தைவார்த்து, ஏளப்பாயிந்திரமாங் கோபப்பூச்சி யிதில்விட்டேயுலர்ந்தவிடம்ரத்தமாகும், கோளப் பாசொன்னேனான்வாதவர்மங் கூகூகூசவுக்காரங்கொள்ளைபோச்சே. (௮௨௩)

கொள்ளையோகொள்ளையென்றுயிந்திரகோபங் கூப்பிட்டு மேடேறிவெளுத்துப்போச்சு. வள்ளையோவழலையென்றவண்ணாண்மை யம்மம்மாவென்னசொல்வேனறியார்வாதி, பிள்ளையே பிறந்ததென்றுலெல்லாந்தானே பெற்றெடுத்தமணித்தாயைப் பேணிப்பாரு, தள்ளையாயென்றுசொல்லியென்னைப்பெற்றாள் சாற்றினாள்சவுக்காரச்சுன்னந்தானே. (௮௨௪)

தானென்றகோபமாந்திரத்தினுள்ளே சரக்கெல்லாந்தோய்த்துலர்த்தச்சாகும்சாகும், வானென்றசூதத்தில்விட்டால்கூட்டு மகத்தானதங்கத்தைச்சாய்க்கச்செம்பாம், வேனென்றவுபரசங்களிரும்புமுதற்செம்பாம் 'வெகுராகம்வெகுராகம்வேதைமெத்த, வூனென்றகெந்தகத்தோடொன்பதுமேமெழுகா மோகோகோ வேதைகண்டுவொட்டுவொட்டே. (௮௨௫)

ஒட்டுறதோர்கோபத்திற்சத்தேயானா லோகோகோபூநாம்ரெட்டிப்போடும், தெட்டுறதோர்கோபத்திற்செம்பேயானால் செகமெல்லாம்செம்பாகும்செப்பப்போகா, அட்டினதோர்வேதையெல்லாமெட்டும்ரெண்டு மம்மம்மாசெகமெல்லாமடங்கிப் போச்சு, கட்டினதுமினிமேற்கேள்நாலேநாலு நாலென்றுவெளிதல்லமூலம்பாரே. (௮...)

மூலத்தேயுரைத்தபின்பேயாறுந்தாண்டி மூழ்கியங்கே... முந்திருந்துதாகந்தீர்ந்து, மூலத்தேநந்தியென்றசொல்லு... ச்சு முடிந்தபொருணந்தியென்றசொல்லுந்தானாய், மூலகுரு...

ன்றதொருநாமத்தாலே முப்பாட்டர்பேரடைந்தார்காணுமானேன், மூலத்தேசத்தியெட்டுமேவல்கேட்கும் முப்பாழுங்கடந்தங்கேமுளைத்திட்டேனே. (௮௨௭

முளைத்திட்டகொழுந்தேறிமுட்டிப்போச்சு முன்னுன்குந்தாண்டிபங்கேமுடிவிற்கூடி, விளைத்திட்டமனம்போச்சுபுத்திபோச்சு வெழுந்தசைந்தவாசியெல்லாமிடிந்துபோச்சு, பிளைத்திட்டவேதையெல்லாம்பொய்யாய்ப்போச்சு பெரியதொருகாயசித்திபிரிந்துபோச்சு, குளைத்திட்டதிருநீறுமந்த்ரம்போச்சு கூடியந்தநால் தாண்டிக்குவிந்தபின்பே. (௮௨௮

குவிந்ததென்றுசொல்வதென்னவெளிதோசொல்லுகூடுறது வெகுகடினங்கூடப்போகா. வவிந்ததென்றூல்விளக்கேற்றநெருப்புவேண்டு மாகாகாவாச்சரியமொன்றுகேளு, வொவிந்துநின்றவிளக்கிற்கெந்தகத்தைச்சுண்ட வோடிமுன்போலொளியாகும்வாறு போலத், தவிந்துநின்றவாசியைக்கொண்டங்கேயூது தப்பாதே தீபவொளிசார்ந்துபாரே, (௮௨௯)

பாரப்பாவிதுசித்திமூலங்கண்டாற் பரப்பியதோரண்டமெல்லாம்படுதிப்பற்றுஞ், சேரப்பாவாசிகொண்டுமூலத்தூன்றிச் செய்வினையுந்தீவினையுஞ்சிதறிப்போகும், கோரப்பாசுழிமுனையாறுலாலாறுங் கொள்ளையிட்டாற்சிவயோகக்கூத்தையெல்லா, மாரப்பாவெனைப்போலேதிறந்துசொல்வா ரறிந்தவர்க்குஞானசித்தியறியார்நாமே. (௮௩௦)

அறியாதவாசிகொண்டேயேறுயேறு வம்மமமாமவுனமொத்தேயிருந்துபாரு, பிறியாதேயொருநாளும்பொய்யாய்ப்போகும்பிரமநிஷ்டையெதுவென்னிலிதுதானப்பா, மறியாதேமனத்தையெங்கும்வாசனையிற்கட்டி மகத்தானகற்பமுண்டுமருவிப்பாரு. சிறியாதானுமித்தியசிற்றுடைபோலச் செகச்சாலத்தேநுழைந்தால் தேறுப்தானே. (௮௩௧)

தானென்றபூரணத்தைநோக்கிநோக்கிச் சதநித்தம்பதிகொண்டுதைலம்போலே, தானென்றகண்சிவந்துநீர்களோடக் கருதியுள்ளமொன்றாகிக் கனிவாய்க்கூர்ந்து, வானென்றபூரணத்திற்பொருளேயென்று மன்பதைக்குணிறைந்துநின்றவடிவேயென்று தானென்றுமந்தமென்றுமில்லாயென்றுஞ் சச்சிதானந்தமுடிவானெயன்னே. (௮௩௨)

வானாகிவெளியாகித்தீயுமாகி மருவிநின்றசலமாகிப்பூமியாகிக், தானாகிச்சராசரமுஞ்சீவனாகிச் சகலமுமாயல்லவுமாய்த்தானேயாகிக், கோனாகிக்குருவாகிகுறியுமாகிக் குணமாகிக்குணங்கடந்தகொள்கையாகி, யூனாகியுடலாகியுணர்வுமாகி யோர்ந்துநின்றவறிவாகியுணர்ந்தாயென்னை. (௮௰௩)

உணர்வாகியறிவாகியறிவுந்தாண்டி யுயர்ந்துநின்றபூரணமாயதுவுந்தாண்டி, துணர்வாகிச்சுருதியந்தச்சுருதியாகித் தோற்றுதலிர்க்குணத்திற்றேய்ந்துதாண்டும், பணர்வாகிப்பராபரமுந்தாண்டிச்சென்ற பரமேழும்பதமுடிவு பார்த்துமேமேல, யிணர்வாகியிணையொன்றுமில்லையாகி யேகமாய்நின்றதுவேயென்றுதேடே.()

தேடுறதுமிப்போதென்பின்னென்றே செனித்தவுடல்நூறுமட்டோயிப்போதானோ, நாடுறதுமிப்போதென்பிற்கென்றே நாளைக்காமென்றவன்னம்நாய்தின்றக்கால், வூடுறதுவெகுகடினமூடமாட்டா போகோகோபெண்ணாசைபொன்னினாசை, யாடுறதுபூமியென்றவாசைபூண்டே யலைந்திடுவீர்பிழைக்கறியாவசடர்கேளே. (௮௰௫)

கேளப்பாவினைமுறைக்குமொக்குமொக்குங் கெடியானவுபாசத்தையண்டவங்கம், வாளப்பாவண்டமெல்லாம்பொன்னேயாகும் வையகத்தில்விடுவித்துமார்க்கந்தொட்டுத், தாளப்பாவொன்றுமில்லைவாதத்துக்குத் தனித்தாளாய்நின்றதப்பாவங்கம்பாரு, யாளப்பாவென்னையாண்டபோகமூர்த்தி யப்பனேவழலைவங்கமறியென்றாரே. (௮௰௬)

